

வெளியீடு—12—8—1971]
Issued—12—8—1971]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

புதன்கிழமை 1970 நவம்பர் 25

Wednesday, 25th November 1970

தொகுதி XXXV—எண் 1

Volume XXXV—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

3877

V2 11.31 N70
31N71.35

61497

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

NINTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

25TH TO 28TH AND 30TH NOVEMBER AND 2ND DECEMBER 1970.

**VOLUME XXXV** (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

*Wednesday, 25th November* 1970.


| | PAGES. |
|---|---|
| Tamil Nadu Governor and Council of Ministers | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies (in alphabetical order) ... ... ... ... ... ... | vi-xii |
| 1. Obituary Reference— | |
| Thiru Gamel Abdul Nasser, General De Gaulle, Dr. C. V. Raman and Thiru Yusuf Bin Ishack ... | 1-2 |
| 2. Condolence Resolution— | |
| Demise of Thiru Ere. Elamvazhuthi, sitting Member ... ... ... ... ... ... | 2-14 |
| 3. Papers laid on the Table ... ... ... ... | 15-31 |


*Thursday, 26th November* 1970.


| | |
|---|---|
| 1. Point of Order— | |
| Statement of ex-Ministers to the House ... | 33-34 |
| 2. Questions and Answers ... ... ... ... | 34-62 |
| 3. Adjournment Motions— | |
| (*a*) Failure to maintain law and order and consequent injury to Thiru Mathi Gowder by pelting of stones ... ... ... ... | 62 |

*Thursday, 26th November 1970—cont.*


| | PAGES. |
|---|---|
| 3. Adjournment Motions—*cont.* | |
| (*b*) Need to provide protection to National leaders ... ... ... ... ... | 62–69 |
| (*c*) Removal of Sri Vinayakar idol from the open ground near the Police Station at Mambalam ... ... ... ... ... | 70–80 |
| (*d*) Closure of Somasundara Mills, Coimbatore and the plight of workers ... ... ... | 80 |
| 4. Announcements— | |
| (*a*) Nomination to Business Advisory Committee | 80 |
| (*b*) Panel of Chairmen ... ... ... ... | 81 |
| (*c*) The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... | 82 |
| (*d*) The Tamil Nadu Town and Country Planning Bill, 1970 ... ... ... ... | 83–107 |
| 5. Statement of Minister for Agriculture correcting an answer given by the former Finance Minister ... ... ... ... ... ... | 81 |
| 6. Presentation of the Report of the Committee on Public Accounts on the excesses over Voted Grants and Charged Appropriations for the year 1967–68 ... ... ... ... ... ... | 81 |
| 7. Government Motion— | |
| Suspension of Rule 23 (1) ... ... ... | 82 |
| 8. Government Bills— | |
| (*a*) The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 ... ... ... ... ... | 82 |
| (*b*) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1970 ... ... ... ... ... ... | 82 |
| (*c*) The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... | 82 |
| (*d*) The Tamil Nadu Town and Country Planning Bill, 1970 (L.A. Bill No. 23 of 1970) ... | 83 |
| (*e*) The Tamil Nadu Panchayats Courts (Validation of Proceedings) Bill, 1970 (L.A. Bill No. 31 of 1970) ... ... ... ... | 108–111 |
| (*f*) The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1970 ... ... ... | 111–137 |
| 9. Papers laid on the Table ... ... ... ... | 137–138 |




*Friday, 27th November 1970.*


| | PAGES. |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... ... | 143–157 |
| 2. Adjournment Motions— | |
| (*a*) Strike by the students of the Annamalai University ... ... ... ... ... | 157–162 |
| (*b*) Agitation and picketing by handloom weavers of Madurai ... ... ... ... ... | 162 |
| (*c*) Proposed strike of village officers ... ... | 162–163 |
| (*d*) Fall in prices of foodgrains and the consequent hardships of farmers ... ... ... | 163 |
| (*e*) Cauvery water dispute between Mysore, Kerala and Tamil Nadu and its impact ... ... | 163–164 |
| 3. Calling Attention— | |
| Failure of talks on sharing of Cauvery River waters between Tamil Nadu and Mysore State ... ... ... ... | 164–167 |
| 4. Presentation of the Report of the Committee on Public Accounts on the Audit Report on the Accounts of the Tamil Nadu State Housing Board for the year 1963–64 ... ... ... | 168 |
| 5. Government Resolutions — | |
| (*a*) Constitution of the Avadi Township ... ... | 168 |
| (*b*) Constitution of the Ambattur Township ... | 168 |
| (c) Constitution of the Kathiawakkam Township | 168 |
| (d) Constitution of the Madhavaram Township ... | 168–176 |
| 6. Objection to the introduction of the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970... | 176–180 |
| 7. Government Bill— | |
| The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970) ... | 180–234 |
| 8. Papers laid on the Table ... ... ... ... | 234–235 |


*Saturday, 28th November 1970.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 237–264 |
| 2. Adjournment Motions— | |
| (*a*) Havoc caused by rain and cyclone ... ... | 265–277 |
| (*b*) Closure of the Pudukkottai Textiles, Namanasamudram and the plight of workers ... ... | 277 |

*Saturday*, 28th *November* 1970—cont.


| | PAGES. |
|---|---|
| 3. Calling Attention— | |
| Government Press, alleged misappropriation ... | 277–279 |
| 4. Government Bills— | |
| (*a*) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... .... | 279–280 |
| (*b*) The Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1970 ... ... | 280 |
| (*c*) The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 38 of 1970) ... ... ... ... ... | 281–317 |
| (*d*) The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970) ... ... ... — ... | 318–325 |
| 5. Announcements— | |
| (*a*) The Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1970 ... ... | 280 |
| (*b*) The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... | 280 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 325–327 |


*Monday*, 30*th* *November* 1970.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 329–362 |
| 2. Privilege Matter— | |
| Alleged misrepresentation of facts by Minister for Co-operation ... ... ... ... ... | 362 |
| 3. Adjournment Motion— | |
| Damage to Cooum Development Scheme works due to heavy rains and consequent loss to Government ... ... ... ... ... | 362–365 |
| 4. Calling Attention— | |
| Increase in price of cotton and fibre silk thread and its consequences ... ... ... | 365–368 |
| 5. Statement by Minister— | |
| Statement of the Minister for Agriculture correcting an answer given by the former Finance Minister ... ... ... ... ... | 368–369 |
| 6. Government Motion— | |
| Change in the order of business of the House ... | 369 |




*Monday*, 30*th* *November* 1970—cont.


| | PAGES. |
|---|---|
| 7. Government Bill— | |
| The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... | 369 |
| 8. Non-official Business— | |
| Resolution— | |
| Expeditious steps to make Tamil as sole medium of instruction and language of administration ... ... ... ... | 369–430 |
| 9. Papers laid on the Table ... ... ... ... | 430–431 |


*Wednesday*, 2*nd* *December* 1970.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 435–462 |
| 2. Privilege Matter— | |
| Alleged misrepresentation of facts by Minister of Co-operation ... ... ... ... | 463–467 |
| 3. Adjournment Motions— | |
| (*a*) Cancellation of student concession ticket from Tirunelveli to Kanyakumari and consequences thereof ... ... ... ... | 467–468 |
| (*b*) Attack on students waiting at Nagoor bus-stand ... ... ... ... ... | 469 |
| (*c*) Murder of Paramasivam at Tuticorin and the consequent unrest ... ... ... ... | 469 |
| 4. Government Bills— | |
| (*a*) The Tamil Nadu City Civil Court (Amendment) Bill, 1970 ... ... ... ... | 469 |
| (*b*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970) ... ... | 469–488 |
| (*c*) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970) ... | 488.494 |
| (*d*) The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) ... | 494–515 |

*Wednesday, 2nd December* 1970—cont.


| | PAGES. |
|---|---|
| 4. Government Bills—*cont.* | |
| (*e*) The Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 (L.A. Bill No. 47 of 1970). | 515-531 |
| 5. Annoucement— | |
| The Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 ... ... ... ... | 515 |
| 6. Government Motions— | |
| (*a*) Change in the order of business of the House ... ... ... ... ... | 531 |
| (*b*) Nomination of Revenue Minister as Member-Chairman of the Advisory Committee on Exemptions under Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, in place of Thiru K. A. Mathialagan. | 532 |
| 7. Papers laid on the Table ... ... ... ... | 532-534 |


## தமிழ் நாடு அரசின் ஆளுநரும். அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### சர்தார் உஜ்ஜல் சிங்

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்) கீழ்க்கண்ட** துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுக்கள், பத்திரிகை, காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள் வழங்கல் குறித்த சட்டம், வடிகால், நீர் வாரியம்.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம், வீட்டுவசதி, இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

3. **மாண்புமிகு டாக்டர்** [redacted](திருமதி) **சத்தியவாணிமுத்து (வேளாண்மைத் துறை, அரிசன நல அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், சுற்றுலா, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

4. **மாண்புமிகு திரு. என் வி. நடராசன் (தொழிலாளர் பின்னிலை வகுப்பினர் துறை நல அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின் தங்கிய வகுப்பினர், தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசாங்க அச்சகம், சீரணி, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு. வணிக வரிகள், உணவு உற்பத்தி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) கீழ்க்கண்ட** துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு, உருக்கு கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணிகள், சிறு பாசன சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள் (Waqfs) போக்குவரத்து, நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதிக்கழகம், கதர், கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

9. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், கால்நடை வளர்ப்பு, பத்திரம் பதிவு, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், முன்னாள் இராணுவ வீரர்கள்.

10. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், பால்வழங்கு துறை, மீன்வளம், கடன் கொடுத்தல் (கிராம வாசிகள் கடன்பட்டிருத்தல் பற்றி சட்டமியற்றுதல்), சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

...

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU.

SARDAR UJJAL SINGH.

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister-in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections Prohibitions, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act and Tamil Nadu Drainage and Water Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health) : Minister-in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine, Legislature, Housing, Beggers' House and Orphanage.

3. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : (Minister for Agricuture and Harijan Welfare) : Minister in-charge of Agriculture, Harijan Welafre, Women's and Children's Welfare, Tourism, Indians Overseas, Refugees and Evacuees.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) : Minister in-charge of Backward Classes, Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures and Statistics.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Food and Local Administrations) : Minister in-charge of Food, Commercial Taxes, Food Production, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training Companies, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Law, Courts and Prisons, Deputy Collectors.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways, Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Co-operation) : Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Khadi and Village Industries and Rural Industries Project.

9. THE HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Animal Husbandry, Registration, Accommodation Control, Approved Schools and Vigilance Services and Ex-servicemen.

10. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Milk, Fisheries, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்:

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் எம் ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்:

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட், பி.ஏ., பி.எல்;

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. நா. வீராசாமி

திரு. கே. ஆர். கோவிந்தன்

திரு. எஸ். இராமலிங்கம்

திரு. எஸ். சிவ சுப்ரமணியம்

திரு. எஸ். முத்துலிங்கம்

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. அ. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. கு. புஜங்க ராவ். பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. ஜி. இராகவன்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண். (1) | உறுப்பினர்கள் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனர், சி.பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.பா. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ. |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ.வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், ஏ. | திண்டுக்கல். |
| 23 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 24 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 25 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 26 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 27 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 28 | சென்னியப்பன், எஸ், ஆர். | பெருந்துறை. |
| 29 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 32 | சித்தன், என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ.வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ. |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ். பி. | சங்கரன்கோவில் (செ.வ.) |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம். (செ. வ.). |
| 42 | கணேசன். எல். | ஒரத்தநாடு. |
| 43 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 44 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 45 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 46 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 47 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 48 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 49 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு. |
| 50 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 51 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 52 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 53 | கோவிந்தராசலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 54 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 55 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 56 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க்டவுன் (சென்னை மாநகரம்). |
| 57 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை. |
| 58 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 59 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 60 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை—கிழக்கு. |
| 61 | ஜயராஜ், பி. | நன்னிலம்(செ. வ.). |
| 62 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 63 | ஜெயராமன், பி. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 64 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 65 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 66 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 67 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 68 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 69 | கண்ணன், எம். ஆர். | பேசின்பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 70 | கண்ணப்பன், எம். | கிணத்துக்கடவு. |
| 71 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 72 | கருணைநாதன், சோ. | கூனூர். |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 75 | கருப்பையா, ஆர். .. .. .. | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. .. .. .. | கும்பகோணம். |
| 78 | கதிரவன் க. மு. .. .. .. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. .. .. .. | கள்ளக்குறிச்சி |
| 80 | இட்டப்பா, என். .. .. .. | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் .. .. | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கெ. .. .. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமையா, கே. எஸ். .. | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. .. .. . | பழனி (செ. வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, (கொடவாசல்) சி. .. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. .. .. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். .. .. | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. .. .. .. | காஞ்சீபுரம். |
| 90 | குமாரசாமி, கே. என். .. .. | பல்லடம். |
| 91 | குப்பம்மாள், திருமதி சு. .. .. | போளூர். |
| 92 | மாதவன், செ. (அமைச்சர்) .. | திருப்பத்தூர். |
| 93 | மகாதேவன், ப. .. .. .. | கன்யாகுமரி. |
| 94 | மலைச்சாமி, பெ. .. .. .. | மேலூர். |
| 95 | மலைக்கண்ணன், வீ. .. ... .. | இளையாங்குடி. |
| 96 | மணி, கே. பி. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 97 | மணி, எம். எஸ். .. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 98 | மாணிக்கவாசகம், இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 99 | மணியன், பி. எஸ். .. .. .. | சோழவந்தான். |
| 100 | மாரிமுத்து, அ. .. .. .. | ஆடுதுறை. |
| 101 | மாரிமுத்து, எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 102 | மாரிமுத்து, மு. .. .. .. | தலைவாசல். (செ. வ.) |
| 103 | மார்டின், டி. .. .. .. | சாத்தான்குளம். |
| 104 | மருதாசலம், என். .. .. .. | பேரூர். (செ.வ.) |
| 105 | மதியழகன், கே. ஏ. .. .. | ஆயிரம் விளக்கு (சென்னை மாநகரம்). |
| 106 | மெய்யப்பன், சா. .. .. .. | காரைக்குடி. |
| 107 | மேத்தா, எம். .. .. .. | பெரியகுளம். |
| 108 | மூக்கையா தேவர், பி. கே. .. .. | உசிலம்பபடி. |
| 119 | முனுசாமி கௌண்டர், பி. எம். .. | கிருஷ்ணகிரி. |
| 110 | முனுசாமி, ரா. ரா. .. .. .. | மேலமலையனூர். |
| 111 | முனியாண்டி, ஏ. .. .. .. | நிலக்கோட்டை. (செ.வ.). |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 112 | முனு, ஆதி. .. .. .. | திருப்போரூர், |
| 113 | முருகையன், புலவர் க. .. .. | திருவையாறு. |
| 114 | முருகையன், எஸ். .. .. .. | கலசபாக்கம் |
| 115 | முருகேசன், க. .. .. .. | பாலக்கோடு |
| 116 | செஞ்சி முனுசாமி, வெ. .. .. | செஞ்சி |
| 117 | முத்தையா, கே. கே. .. .. .. | கடலூர் |
| 118 | முத்தையா, மு. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 119 | முத்துலிங்கம், எஸ். .. .. .. | வந்தவாசி (செ. வ.) |
| 120 | முத்துசாமி, பா. க. சி. .. .. | பெண்ணகரம் |
| 121 | முத்துசாமி, மா. .. .. .. | நாமக்கல் |
| 122 | முத்துச்செல்வன், பு. செ. .. .. | முசிறி |
| 123 | நாச்சிமுத்து, நா. .. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 124 | நாகலிங்கம், பா. .. .. .. | பொன்னேரி (செ. வ.) |
| 125 | நாகசுந்தரம், ஆர். .. .. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 126 | நல்லசிவன், க. ர. .. .. .. | மொடக்குறிச்சி |
| 127 | நல்லசாமி, தோ. மு. .. .. .. | கரூர் |
| 128 | நஞ்சன், சி. .. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 129 | நரசிம்மன், ஏ. சி. .. .. .. | ஆரணி |
| 130 | நாராயணன், இரா. .. .. .. | வரகூர் |
| 131 | நடராசன், மு. க. து. .. .. .. | லால்குடி |
| 132 | நடராஜன், ஜி. .. .. .. | காட்பாடி |
| 133 | நடராசன், ஈ. எம். .. .. .. | அந்தியூர் |
| 134 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) .. | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்) |
| 135 | பச்சையப்பன், எஸ். பி. .. .. | சங்கராபுரம் |
| 136 | பத்மாவதி, திருமதி, கோ. .. .. | முகையூர் |
| 137 | பழனி, சி. .. .. .. | ஓமலூர் (செ. வ.) |
| 138 | பாலையா, ஏ. .. .. .. .. | கொளச்சல். |
| 139 | பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம் (செ. வ.) |
| 140 | பழனிவேல் ராஜன் .. .. .. | தேனி |
| 141 | பன்னீர்செல்வம், எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 142 | பரமசிவம், பி. என். .. .. .. | பொங்களூர் |
| 143 | பரமசிவம், எஸ். .. .. .. | ஆண்டிப்பட்டி |
| 144 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். .. | தஞ்சாவூர் |
| 145 | பட்டாபி நாயுடு, எ. .. .. .. | காவேரிப்பட்டணம் |
| 146 | பீர் முஹம்மது, ஹாஜி, ம. மு. .. | மேலப்பாளையம் |
| 147 | பெரியசாமி, பெ. .. .. .. | ராசிபுரம் |
| 148 | பெருமாள், ஏ. ஆர். .. .. .. | கரியாப்பட்டி |
| 149 | பொன்னம்பலம், புலவர் பொ. .. | திருமயம் |
| 150 | பொன்னப்ப நாடார், ஆர். .. .. | விளவங்கோடு |
| 151 | பொன்னுமலை, தி. .. .. .. | பனமரத்துப்பட்டி |
| 152 | இராஜா, ஏ. எம். .. .. .. | பவானி |
| 153 | ராசகோபால், க. மு. .. .. .. | உத்திரமேரூர் |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 154 | ராஜமன்னார், எஸ். எ. | வாணியம்பாடி |
| 155 | இராசாங்கம், மா. | கம்பம் |
| 156 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ. வ.) |
| 157 | ராஜவேலு, டி. எ, | திருச்செங்கோடு |
| 158 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை |
| 159 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம் |
| 160 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை |
| 161 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி |
| 162 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 163 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம் |
| 164 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ. வ) |
| 165 | ராமன், ஓ. பி. (அமைச்சர்) | மேலூர்–தெற்கு (செ. வ.) |
| 166 | இராமராசன், வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 167 | இராமசாமி, இ. | வால்பாறை (செ. வ.) |
| 168 | ராமசாமி, எஸ். ஜே. | அரக்கோணம் |
| 169 | இராசு, ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 170 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம் |
| 171 | ரெத்தின தேவர், ரா. | முதுகுளத்தூர் |
| 172 | சாதிக்பாட்சா. எஸ். ஜே. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை |
| 173 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு |
| 174 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில |
| 175 | சங்கரய்யா, என். | மதுரை–மேற்கு |
| 176 | சந்தானம், பி. எஸ். | செங்கம் (செ. வ.) |
| 177 | சாரதி, மா. பா. | வேலூர் |
| 178 | சத்தியவாணிமுத்து, டாக்டர், (திருமதி) (அமைச்சர்) | பெரம்பூர் (செ. வ.) (சென்னை மாநகரம்) |
| 179 | சீனிவாசக நாயக்கர், ஆர். | சாத்தூர் |
| 180 | சீனிவாசன், பெ. | விருதுநகர் |
| 181 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 182 | சேனுபதி, அ. | காங்கேயம் |
| 183 | சேதுராமன், சி. | சிவகங்கை |
| 184 | சண்முகம், எம். | விழுப்புரம் |
| 185 | சண்முகசுந்தரம், அ. ப. | பொள்ளாச்சி |
| 186 | சிறைமீட்டான் தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 187 | சிவஞானம, ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்) |
| 188 | சிவபெருமாள், க. ந. | ஆத்தூர் |
| 189 | சிவசாமி, மு. ச. | தூத்துக்குடி |
| 190 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ. வ.) |
| 191 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 192 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம் |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 193 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 194 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம் |
| 195 | சுந்தரபாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை |
| 196 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர் |
| 197 | சுவாரெஸ், திருமதி எ. | நியமன உறுப்பினர் |
| 198 | சுப்பராஜா, எ. அ. | இராஜபாளையம் |
| 199 | சுப்பையா, ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 200 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | ஆலங்குடி |
| 201 | சுப்பையா முதலியார், வ. ஆர். | கடையநல்லூர் |
| 202 | சுப்பிரமணியம், அ. லெ. | திருநெல்வேலி |
| 203 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி |
| 204 | சுப்பிரமணியம், இ. எம். | திருக்கோவிலூர் |
| 205 | சுரேந்திரன், எம். | மேட்டூர் |
| 206 | சுவாமிநாத ஒடையார். த. சி. | மன்னார்குடி |
| 207 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர் |
| 208 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை |
| 209 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம் |
| 210 | தவமணிதேவர், வி. | சேடப்பட்டி |
| 211 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ. வ.) |
| 212 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை |
| 213 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி |
| 214 | திப்பையா, டி. டி. எஸ். | மேட்டுப்பாளையம் |
| 215 | வடிவேலு, எஸ். கே. | தொட்டியம் |
| 216 | வரதராஜன், என். | வேடசந்தூர் |
| 217 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்) |
| 218 | வீரமணி, சி. | சங்கரி (செ. வ.) |
| 219 | வீராசாமி, நா. | ஆர்க்காடு |
| 220 | வேலப்பன், சி. வே. | கபிலமலை |
| 221 | வெள்ளத்துரை, எ. | வாசுதேவநல்லூர் |
| 222 | வேலுசாமி, பி. | சிங்கநல்லூர் |
| 223 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம் |
| 224 | வெங்கடசாமி, பி. | ஹோசூர் |
| 225 | வேழவேந்தன், கா. | கும்மிடிபூண்டி |
| 226 | விஜயரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை |
| 227 | விஜயராஜ், தா. | திருவண்ணமலை |
| 228 | விநயகம், கே. | திருத்தணி |
| 229 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு |
| 230 | வில்லியம், எம். | இள்ளியூர் |
| 231 | வெற்றிடம் | அவனுசி. |
| 232 | வெற்றிடம் | சேரன்மகாதேவி. |

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 233 | வெற்றிடம் .. .. .. .. | ஆத்தூர். |
| 234 | வெற்றிடம் .. .. .. .. | கடலூர். |
| 235 | வெற்றிடம் .. .. .. .. | கோபிச்செட்டிப்பாளையம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. என். வி. நடராசன் | .. | அமைச்சர் |
| 2 | திரு. ப. உ. சண்முகம் | .. | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன் | .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, நவம்பர் 25, 1970.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

திரு. கமல் அப்துல் நாசர், ஜெனரல் டிகால், டாக்டர் சி. வி. ராமன், திரு. யூசுப் பின்இஷாக் ஆகியோரின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியாவின் சிறந்த நண்பரும் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவருமான திரு. கமல் அப்துல் நாசர் அவர்கள் 29—9—1970-ம் நாளன்று மறைந்து விட்டார் என்ற செய்தியை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய நாசர் அவர்கள், மத்திய கிழக்குப் பகுதியில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டவர்; நம்முடைய இந்தியப் பெருநிலப்பரப்போடு நல்ல நட்புறவு கொண்டு, உலகத்தில் போர் ஓய்ந்து அமைதி நிலவ அரும்பாடு பட்டவர். அவர்களுடைய மறைவுக்கு இந்த மன்றம் வருந்துகிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஃப்ரெஞ்சு நாட்டின் முன்னாள் தலைவர் ஜெனரல் டி கால் அவர்கள் 9—11—1970-ம் நாளன்று மறைந்துவிட்டார் என்ற செய்தியையும் வருத்தத்தோடு இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உலகத் தலைவர்களில் குறிப்பிடத்தக்க புகழ்மிக்க தலைவர்களில் சிறந்தவராக விளங்கியவர் ஜெனரல் டி கால் அவர்கள் ஆவார்கள். குழப்பமாக இருந்த அரசியல் சூழ்நிலையில் அமைதியானதொரு ஆட்சி ஃப்ரெஞ்சு நாட்டில் நடைபெற தம்முடைய அருமுயற்சி காரணமாக அரும்பாடுபட்ட அவர்கள் மறைந்துவிட்டது உலகத்திற்குப் பேரிழப்பாகும் என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கீர்த்திபெற்ற விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் சி. வி. ராமன் அவர்கள் 21—11—1970-ம் நாளன்று மறைந்துவிட்ட செய்தியையும் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தவர்—நோபல் பரிசு பெறத்தக்க மேதையாக இருந்து, விஞ்ஞானத் துறையில் "ராமன் எஃபெக்ட்" என்னும் ஓர் அரிய உண்மையை உலகத்திற்கு எடுத்துக்காட்டி, உலக

விஞ்ஞானிகளால் போற்றப்படக் கூடிய ஒரு பெரும் நிலையைப் பெற்றவர் நம்முடைய மறைந்துவிட்ட டாக்டர் சி. வி. ராமன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில்—அவர்களுடைய புகழ் தமிழ்நாட்டுக்குப் புகழ் என்ற நிலையில்—அவர்களுடைய மறைவு தமிழகத்திற்கு பேரிழப்பாகும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தூரக் கிழக்கு பகுதியில் சிங்கப்பூர் நாட்டுக் குடியரசுத் தலைவராக இருந்த திரு. யூசுப் பின் இஷாக் அவர்கள் 23—11—70-ம் நாளன்று மறைந்துவிட்ட செய்தியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அன்னாருடைய மறைவு, உலக நாடுகளில் அமைதி காண விரும்புகிற மக்களுக்கெல்லாம் வருத்தம் தருகின்ற செய்தியாகும்.

ஆக, இந்த நான்கு பெரியவர்களுடைய மறைவுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

## 2. இரங்கல் தீர்மானம்.

### உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

கடலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப் பேரவையின் உறுப்பினர், வழக்கறிஞர், திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் 22—10—1970-ம் நாளன்று திடீரென்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது."

என்ற இரங்கல் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1967-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இந்தப் பேரவையில் இருந்து அரும்பணியாற்றிய அருமை நண்பர் திரு. இரெ. இளம்வழுதி அவர்கள் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியது எல்லோருக்கும் துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கக் கூடிய ஒரு செய்தியாகும்.

திரு. இளம்வழுதி அவர்கள் இளம் வயதிலேயே எதிர்பாராத இந்த மறைவை அடைந்தது எல்லோருக்கும் கலக்கத்தை அளித்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அந்த அளவுக்கு





எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் பண்பும் நல்ல சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் கொண்ட ஓரிளைஞர் ஆவார்கள். அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்றபோது நானும் அண்ணாமலைப் பலகலைக்கழகத்தில் இருந்தேன். நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கத் தொடங்கிய இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்களும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சேர்ந்த முதல் ஆண்டிலேயே பல்கலைக்கழக மாணவர்களுடைய உள்ளங்களைக் கவரத்தக்க அளவுக்கு சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கி, அங்குள்ள பேரவை, மன்றங்கள் ஆகியவற்றில் பங்குகொண்டு, தம்முடைய பற்று உள்ளத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தியவர்கள் ஆவார்கள். திரு. இளம்வழுதி அவர்கள் நல்ல தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் உடையவராக விளங்கினார். தமிழ்மொழியின் சிறப்புக்கும் உயர்வுக்கும், தமிழகத்தின் சிறந்த தன்மைக்கும் பல்வேறு வகைகளில், பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு தன்னுடைய அறிவு, ஆற்றல், திறமை அனைத்தையும் பயன்படுத்திய சிறந்த பண்பாளராக விளங்கினார். மொழிப் பற்று, நாட்டுப் பற்று இரண்டிலும் சிறந்து விளங்கிய சீரிய தொண்டராக விளங்கினார்.

ஆரம்ப காலத்தில், அவர் மாணவராக இருந்த காலத்தில் திராவிடர் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவராக மிக நெருங்கிய நண்பராக விளங்கி, இயக்கத்திற்கு மிகச் சிறந்த பணிகளை ஆற்றி வந்தார். எந்தச் செயலை எடுத்துக் கொண்டாலும் மிகச் சிறந்த முறையில் செய்து முடிக்கின்ற பாங்கினைப் பெற்றவராக விளங்கினார்.

இயக்கத்தின் பல்வேறு பொறுப்புகளை ஏற்று மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார். பல மாநாடுகளுக்குத் தலைமை தாங்குகிற அளவில் அவர் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். அரசியலில் ஈடுபடுகின்ற வழக்கறிஞர்கள் தம்முடைய தொழிலைச் சிறப்பாக நடத்துவது என்பது அரிதினும் அரிது.

நண்பர் இளம்வழுதி அவர்கள் அரசியலிலும், தம்முடைய தொழிலிலும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். சிலர் தம்முடைய தொழிலில் சிறப்பான இடத்தைப் பெற்று, அதன் பின்னர் அரசியலில் புகுந்து பெயரும் புகழும் பெறுகின்றனர். ஆனால், நண்பர் இளம்வழுதி அவர்கள் இளமைப் பருவத்திலே வழக்கறிஞராக இருந்துகொண்டு, அரசியலிலும் பங்கு கொண்டு தொழில், அரசியல் இரண்டிலும் சிறந்து விளங்கினார். நண்பர் இளம்வழுதி அவர்கள் வழக்கறிஞராக இருந்து, கடலூரிலே வழக்கறிஞர் தொழில் நடத்தி, மிகக் குறுகிய காலத்திலே எல்லோருடைய நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்று, சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவர் என்ற பெயரைப் பெற்றார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏற்பட்டபோது, அதில் ஈடுபட்டு, மூன்று முறை சிறைவாழ்வை ஏற்று, தன்னுடைய கொள்கையை நிலைநாட்டுவதில் தளராத நம்பிக்கையும் உறுதியும் கொண்டவராக விளங்கினார். நண்பர் அவர்கள் எல்லோருடனும் இனிமையாகப்

பழகும் பண்பைப் பெற்றவர். அவர் எல்லோருடனும் இனிமையாகப் பழகி, எல்லோருடைய உள்ளத்தையும் தன்பால் ஈர்க்கும் சிறந்த பண்பாளர். அப்படிப்பட்டவர் மறைந்தது இந்தப் பேரவைக்கு ஒரு பேரிழப்பாகும். அவருடைய மறைவுக்காக இந்தப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. மறைந்தவருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பேரவையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின்முன் மதிப்பிற்குரிய கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும்படியான இரங்கல் தீர்மானத்தை ஆமோதிக்கும் வகையில், நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நண்பர் இளம்வழுதி அவர்கள் வழக்கறிஞர், மிகவும் சுறுசுறுப்பானவர். சட்டமன்றத்தில் அவர் வாதாடுவதிலே மிகச் சிறந்தவராக இருந்து, தான் எடுத்துக்கொண்ட கருத்துக்களை நல்ல முறையில் எடுத்துச் சொல்லி, திறம்பட வாதாடுபவர். அப்படிப்பட்ட திறமையுள்ளவரை, கட்சியில் உயர்ந்த இடத்தில் இருந்த நண்பர் ஒருவரை இன்றைக்கு நாம் இழந்துவிட்டதற்காக மிகவும் அனுதாபப்படுகிறேன். அவர் எடுத்துக்கொண்ட கருத்தை யொட்டி ஆணித்தரமாகப் பேசுவார். அவர் தனிப்பட்ட முறையில் நேரில் சந்தித்துக்கொள்ளும்போது, "நீங்கள் ஒன்றும் தவருக நினைத்துக்கொள்ளக்கூடாது, என்னுடைய பணியை நான் ஆற்றுகிறேன்" என்று சொல்வார். அப்படிப்பட்ட நண்பர் மறைந்தது "திடீர்" என்று இருக்கிறது. நம்முடைய சக நண்பர்கள் திடீர், திடீர் என்று மறைந்துவிடுகிருர்கள். 1967-க்குப் பின்னுலே நம்மிடையே இருந்தவர்கள் திடீர், திடீர் என்று மறைந்துவிடுவது துரதிர்ஷ்டமானது என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன்.

நண்பர் இளம்வழுதி அவர்கள் வழக்கறிஞராக இருந்தார். அவர் தம் தொழிலிலே சிறப்பாகப் பணியாற்றி வந்தார். அதே சமயத்தில் அரசியலிலும் சிறப்பாகப் பணியாற்றினுர். வரலாற்றை எடுத்துப் பார்த்தால் அரசியல் வாழ்வும் வழக்கறிஞர் வாழ்வும் ஒன்றுக்கொன்று தொடர்பாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இருந்து வருகிறது. சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறந்த வழக்கறிஞர்கள்தான் அரசியல் வாழ்வில் புகுந்து, சுதந்திரப் போராட்டத்திற்கான விளக்கங்களைச் சொல்லி, கட்சியை வளர்ப்பதிலும், கொள்கையை வெளிப்படுத்துவதிலும் சிறந்து விளங்கினுர்கள். அதுபோன்றே நண்பர் அவர்கள் வழக்கறிஞர் தொழிலிலும், அரசியல் வாழ்விலும் பங்குகொண்டு தன்னுடைய கடமையைத் திறமையோடு ஆற்றிவந்தார். நண்பர் அவர்கள் கட்சியின் சிறந்த ஊழியராக விளங்கி வந்தார். அப்படிப்பட்ட நண்பர் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். இளம் வயதில் மறைந்துவிட்ட அன்னுருடைய குடும்பத்தையும் குழந்தைகளையும் பார்க்கும் போது மிகக் கஷ்டமாக இருக்கிறது. எதிர்கால வாழ்வுக்காக செப்பனிட்டுக் கொண்டிருந்த குடும்பத் தலைவனை இழந்து நிற்கும்





அந்தக் குடும்பத்தாருக்கும் மறைந்துவிட்ட நண்பரின் மனைவிக்கும் சட்டமன்றத்தில் உள்ள என்னுடைய கட்சி ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

Dr. H. V. HANDE: Hon. Speaker Sir, it is with great sorrow that I rise to-day to associate myself with the sentiments expressed by the Hon. Leader of the House in his resolution condoling the demise of one of our distinguished Members Mr. Elamvazhuthi, and also with the sentiments expressed by the Hon. Leader of the Opposition.

As a member of this House he had been doing his work extremely sincerely, honestly, fearlessly and very frankly. On the first occasion I heard his speech in this Assembly, I was surprised. I have never heard much about Elamvazhuthi immediately after 1967. When I heard his first speech, I was much wonder struck as to how ably he marshalled the facts and how beautifully he presented them without hurting anybody's feelings. He brought forward a privilege issue, if I remember right. The members of the opposition as well as the Ruling Party were struck by the amazing manner in which he marshalled the facts and placed them before the House I distinctly remember that he was applauded by Anna for the speech he made on that occasion.

Recently, I heard him during the discussion on the no-confidence motion brought forward by the Opposition. Then also he marshalled his facts ably and well. As the Leader of the Opposition said, he never meant to hurt anybody's feelings. He could express himself freely. I have seen some distinguished lawyers, in the law courts they are very distinguished lawyers, but in the House they are not able to acquit themselves very well. It is gratifying to note that there were excellent reports about him from his own clients. Even though he was a politician, he devoted himself to his work as a lawyer.

It was a shock that he died suddenly. I was not in the City on the day of his demise and it was my misfortune that I could not pay him my last homage. It was such a sudden demise, that even now I could not reconcile myself to believe that he is no more and I could not think of his seat without Elamvazhuthi sitting there.

I had moved with him and he was an excellent friend and very sincere in his approach. With regard to honesty and integrity, he was one of those persons who was said to have been absolutely honest by persons in his own constituency. In these days it is very difficult to get a good name one's own constituency, however much of hard work the member have pu tn because there wll be some one or other who will be dissatisfied. Mr. Elamvazhuthi was not like that.

He was a distinguished Legislator, an excellent friend, and a very able man. His demise is a great tragedy. He has joined the galaxy of brilliant men who joined us in 1967 and left us since then. I hope his family will bear the loss and sorrow with great fortitude.

[Dr. H. V. Hande] [1970 நவம்பர் 25

On behalf of the Swatantra Party I express my feelings and my party's feelings associate myself with the sentiments expressed by the Hon. Leader of the House and join in conveying to the members of the bereaved family our sincere condolences.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளம்வழுதி அவர்கள் திடீரென்று இயற்கை எய்தியது மிகப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எதிர்பாராதவிதமாக இவ்வளவு இளம் வயதில் அவர்கள் சென்றுவிட்டார்கள். மாணவர் பருவத்தில் இருந்தே நீண்ட நெடுங்காலமாக திராவிடக் கழகத்திலும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் சிறப்பாகப் பணிபுரிந்து வந்திருக்கிறார்கள். அவரது மறைவு இந்த அவைக்குப் பேரிழப்பு என்பது மட்டுமல்ல, அந்த இயக்கத்தை சேர்ந்தவர்களுக்கும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும். சிறந்த வழக்கறிஞராக கடலூரில் இருந்து பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவரது இதர சேவைகளைப் பற்றி கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரது மறைவு குறித்த ஆழ்ந்த அனுதாபத் தீர்மானத்தை நானும் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரித்து, எங்களது வருத்தத்தையும் அன்னாரது குடும்பத்தார் அனைவருக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : தலைவரவர்களே, சென்ற முறை சட்டமன்றம் நடந்தபோது இந்தச் சட்டமன்றத்தில் நம்முடன் இருந்து நல்ல கருத்துகளை எல்லாம் வழங்கி வந்த இளம்வழுதி அவர்கள் இப்போது சட்டமன்றம் நடக்கும்போது நம்மிடையே இல்லை. திடீரென்று மறைந்துவிட்டார்கள். இந்த மறைவு எல்லோருக்கும் ஓர் அதிர்ச்சியை அளித்திருக்கிறது. இளம்வழுதி அவர்கள் சிறந்த இளைஞர். நல்ல வழக்கறிஞர் என்ற பெயரை நிலைநாட்டிக் கொண்டார். பொதுச் சேவையிலும் தம்முடைய ஆரம்ப காலத்தில் இருந்தே ஈடுபட்டுவந்தார்கள். எல்லோருடனும் நல்ல முறையில் பழகினார்கள். மற்ற இளைஞர்களுக்கு எல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள்.

அவர்களுடைய இழப்பினால் நமக்கும், நம்முடைய அவைக்கும், அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் அவர்களை இழந்த குடும்பத்ினருக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய குடும்பக் கஷ்டத்தை நாம் ஓரளவு நீக்கியாக வேண்டும். நமது முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளப்போவதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அதைச் செய்யவேண்டும்.

மேலும், அவர்கள் இந்த மன்றத்தில் நாட்டு மக்களுடைய குறைகளை எல்லாம் நல்ல முறையில் எடுத்துச் சொல்லிவந்தார்கள். அவர்களை இழந்த அவர்களது குடும்பத்தார்களுக்கும், நாட்டு மக்களுக்கும் நான் எங்கள் கட்சியின சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதிரிக்கிறேன்.



1970 நவம்பர் 25] [திரு. கோ. பூவராகன்]

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் இளம்வழுதி அவர்களுடைய மறைவு தமிழ்நாட்டுக்குப் பெரிய நஷ்டமாகும். முற்போக்கு இயக்கத்திற்தே நஷ்டம் என்று சொல்லலாம். முற்போக்குக் கருத்து மட்டுமின்றி அவற்றைச் செயலாக்கும் திறன்படைத்த சிறந்த அரசியல்வாதி ஒருவரை நாம் இழந்து விட்டோம். அவர்கள் மற்ற எல்லா மக்களுடன் பழகும்போது மிகச் சிறந்த முறையில் பழகிவந்தார்கள். அவர்களை எனக்கு நன்கு தெரியும். அந்தமாதிரியான சிறந்த ஊழியர் ஒருவர் மறைந்தது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே பெரிய நஷ்டம் என்று சொல்லலாம்.

எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் கூட மிக அருமையாகப் பேசுகின்ற தன்மை வாய்ந்தவர். இந்த அவையில் ஒரு உரிமைத் தீர்மானம் வந்தபோது அவர்கள் எவ்வளவு சிறந்த முறையில் வாதிட்டார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அவர்களுடைய மறைவு இந்தப் பேரவைக்கு மட்டுமல்ல—தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய இழப்பாகும் என்று சொல்ல முடியும். அவர்களது குடும்பத்தார்களுக்கு இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தை ஆதிரித்து முடித்துக்கொள்கிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அரசியல் பொதுவாழ்வுக்காகப் பெற்றெடுத்துத்தந்த நாடறிந்த—நாட்டை அறிந்த நல்லதொரு சிறந்த அரசியல்வாதி நம் அனைவருடைய அன்புக்கும் உரித்தானவர் இரெ. இளம்வழுதி ஆவார்கள். அவர்கள் சென்ற கூட்டத்தொடரில் நம்மோடு கலந்துகொண்டார்கள். இந்தக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள முடியாதவாறு காலமாகிவிட்டார்கள் என்பது உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல— அரசியல் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள அனைவருக்குமே ஈடுசெய்ய முடியாத நட்டமாகும். நல்ல நாகரிக அரசியலை உருவாக்கி, நல்ல பண்பாட்டை விளக்கி பொதுமக்களை நல்லவழியில் ஈடுபடுத்திய சிறந்த நாட்டுப் பணியாளர்களில் ஒருவராக இருந்த இரெ. இளம் வழுதியின் மறைவு நாலரைக் கோடி தமிழ்மக்களுக்குக் ஏற்பட்ட மிகப் பெரிய நஷ்டமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய இளம் வயது காலத்தில் இருந்தே நான் இளம்வழுதி அவர்களை அறிவேன். நம் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளுக்குத் தலைமை வகித்து மிகச் சிறப்பான அரசியல் உரைகளை ஆற்றியிருக்கிறார்கள். தம் மாணவப் பருவத்தில் இருந்தே திராவிட முன்னேற்றக் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அரசியல் பொதுவாழ்வில் அவர் சிறப்புடன் ஈடுபட்டு வந்ததுபோலவே வழக்கறிஞர் துறையிலும் சிறப்பாக பணியாற்றினார்கள்.

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1970 நவம்பர் 25

தென்பாண்டி நாட்டில் தூத்துக்குடி நகரில் நடத்தப்பட்ட மும்முனை போராட்டத்தை நடத்தியவர்கள் மீது அரசாங்கம் சதிக் குற்றம் சாட்டி மிகக் கடுமையான தண்டனைக்கு ஆளாக்க இருந்த நேரத்தில் இவர் அவர்களுக்கு எல்லாம் வழக்கறிஞராக இருந்து சிறப்பான முறையில் வாதிட்டு வெற்றி வாங்கித்தந்த சிறந்த வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி ஆவார்கள்.

சட்டமன்றத்தில் மிகச் சிக்கலான பிரச்சினைகளை எல்லாம் மிக நுணுக்கமாக அவர்கள் எடுத்து வாதிடும்போது அவருடைய சட்ட ஞானம் நமக்கெல்லாம் புலப்படும். அதுமாத்திரம் அல்ல. பல சந்தர்ப்பங்களில் கேள்வி கேட்பார்கள். அப்படி கேள்வி கேட்கும் போது துணைக் கேள்வி போடுவதேயில்லை. தனது கேள்விக்குத் துணைக் கேள்வி போடுவார்களே தவிர மற்றவர்கள் கேள்விக்குத் துணைக் கேள்வி போடுவதை நான் பார்த்ததில்லை.

மற்றவர்களுடன் பழகும்போது மிக அன்பாகப் பழகுவார்கள். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நகரத்தில் கண்டு விட்டால் அவர்களைக் கட்டிப் பிடித்து, நலம் விசாரித்து வந்துள்ள காரியத்தில் தம் துணை தேவையா என்று கேட்டு, தேவையென்று இருக்குமானால் பிரதிப் பிரயோசனம் எதுவும் எதிர்பாராமல் அந்தக் காரியத்தை முடித்துத்தரும் பெருமையை கடலூரில் வைத்தே கண்டிருக்கிறேன்.

அத்தகைய பண்பாளர்—சிறந்த இளைஞர்—நமது சட்டமன்றப் பேரவையின் சிறந்த உறுப்பினர் சேவை நமக்கெல்லாம் மிகத் தேவையாக இருக்கிற நேரத்தில் அவர் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்.

"ஒவ்வொருவரையும் ஒரு காலவரைக்கு உட்படுத்தியே நாம் அவர்களை உலகத்திற்கு அனுப்பிவைக்கிறோம். அது முடிந்ததும் மீண்டும் நாமே அழைத்துக் கொள்கிறோம்—யாரும் எதுவும் தடை செய்ய முடியாது" என்று வேதம் கூறுகிறதே அந்த வேதக்கூற்றை நினைந்து ஆறுதல் பெறவேண்டும். இளம்வழுதி அவர்களது மறைவு குறித்து அவரது கட்சியினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நாட்டு மக்கள் அனைவருக்குமே இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி யின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து—"இறைவனிடம் இருந்தே வருகிறோம். இறைவனிடமே மீள்வோம்" என்பதுடன் எனது உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இரெ. இளம்வழுதி அவர்கள் இளைஞர். சிறந்த வழக்கறிஞர். உண்மையில் அவர் மறையாதிருந்தால் இன்னும் பெரு வாழ்வு பெற்றிருக்க முடியும். அதற்குக் காரணம் அரசியலில் நல்ல உறுதிப்பாடு, துணிவு உடையவர். எதற்கும் அஞ்சாது எந்தப் பிரச்சினையையும் எடுத்து வெற்றிபெறுகின்ற துணிவையும் அவரிடம் பார்த்தோம். துணிவு மட்டும் அல்ல, சிறந்த உள்ளம் உடையவர். எல்லோருடனும் அன்பாகப் பழகக்கூடியவர்.



1970 நவம்பர் 25] [திரு. க. ர. நல்லசிவன்]

ஆக, அவருடைய துணிவு அவருடைய சிறந்த மனப்பாங்கு இவை எல்லாம் நமக்கு வழி காட்டுவதற்குப் பயன்படுமேயானால் அவர் களுடைய முறையிலே இருந்து நாமும் பல பாடங்களைக் கற்றவர்கள் ஆவோம்.

எப்படி இருந்தபோதிலும் அவர்கள் காலமானதன் விளைவாக அவர் குடும்பம் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என்று நம்பு கிறேன். நாம் அனுதாபம் தெரிவிப்பது மாத்திரம் அல்லாமல் அதற்கு உரிய வகையிலும், நண்பர் அவர்கள் சொன்னதைப்போல உதவி செய்தால் அது பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும். ஆகவே திரு. இளம்வழுதி அவர்களின் குடும்பத்தாருக்கு என்னுடைய கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவை முன்னவர் முன்மொழிந்த அனுதாபத் தீர்மானத்தை மிகவும் வருத்தத்தோடு கடமை உணர்ச்சி காரணமாக, தமிழரசுக் கழகத்தின் சார்பாக ஆதரிக்கிறேன். அகால மரணம் என்ற சொல்லுக்கு பொருள் உண்டு என்றால் அது இளம்வழுதி அவர்களின் மரணத்தைத்தான் குறிக்கும். திருவள்ளுவர் "யாக்கை நிலையாமை" என்ற அதிகாரத்தில் கூறிய "யாக்கை நிலையாமை" என்பதைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இளம்வழுதி அவர்களின் அகால மரணம் நமக்கு நன்றாக உணர்த்தக் கூடியதாக இருக்கிறது.

எல்லோரும் குறிப்பிட்டது போல, வழக்கறிஞராக இருந்து இயற்கையில் இருந்து அறிவு, ஆற்றல் இவைகளைத் திறம்படப் பயன் படுத்தி முன்னுக்கு வந்து கொண்டிருந்த பொழுதே இடை நடுவிலே வாழ்க்கை முடிந்து போய்விட்டது. அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் அல்ல, தமிழ் நாட்டிலே இருக்கிற மக்கள் அனை வருக்கும் ஏற்படுகிற பெரிய இழப்பாகத்தான் நாம் ஒவ்வொருவரும் கருதுகின்றோம். அவருடைய மனைவி மக்களுடைய துயரத்திற்கு ஈடு இணை சொல்லமுடியாத நிலைமை. மக்கள் மதிப்பு பெற்ற இந்த மாமன்றம் துயரத்தை அடைந்திருக்கிறது. அரசியல் ஆசாபங்கங்கள் ஏற்படுகின்றபோது நிலை குலைந்து போகிற நிலை இல்லாமல் கட்சிக்கு விசுவாசம் உள்ளவராக, கட்சிக்குக் கட்டுப்பட்டவராக திரு. இளம்வழுதி அவர்கள் அந்தமாதிரி சந்தர்ப்பங்களில் உழைத்து வந்தார்கள். அவர்களுடைய பண்பாட்டையும் கட்டுப்பாட்டு உணர்ச்சியையும், அவர் என்னைப் பார்த்த போதெல்லாம் நான் பாராட்டியிருக்கிறேன்.

இந்த மன்றத்திலே நாவன்மை மிக்க பேச்சாளர்களுள் அவரும் ஒருவராக விளங்கினார்கள். உரிமைப் பிரச்சினையைப் பிரேரேபித்து பேசிய பேச்சுக்கள் நம்முடைய சட்டசபை நடவடிக்கை குறிப்புகளில் பதியத் தக்கதாக, மதிப்புள்ள பகுதியாக என்றும் இருந்து வரும். அத்தகைய சிறந்த பேச்சாளரை இழந்துள்ள உங்கள் எல்லோ ரோடும் சேர்ந்து நானும் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறேன். மன்றம் கூடுகின்ற போதெல்லாம் இதைப்போன்ற துக்ககரமான

மரணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய தீர்மானம் இன்னும் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உயரிய நண்பர் இளம்வழுதி அவர்கள் மறைந்த செய்தி கேள்விப்பட்டு உடனே ஒரு நிமிஷம் கண் கலங்கி இருந்தேன். காரணம், அவர் மாணவராக இருந்த காலத்தில், தட்சிணப் பிரதேசம் வேண்டுமா, வேண்டாமா? என்ற பிரச்சினை எழுந்த நேரத்திலே மதுரையில் அவரோடு முதன் முறையாக மேடையில் பேசினேன். அதற்குப் பின்னாலே, சென்ற ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவின்போது கடலூரில் நானும் அவரும் பேசினோம். சட்டமன்ற விடுதியிலே எனக்குப் பக்கத்து அறையிலேதான் அவரும் தங்கி இருப்பார். அப்போதெல்லாம் அவருடைய நெஞ்சோட்டங்களைத் தெளிவாக உணர்ந்தேன். அவர் நேர்மையான அரசியல்வாதியாக வாழ விரும்பினார். நல்ல கருத்துக்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் துணிவுடன் சொல்வார். தனக்குப் பாதகம் ஏற்படும் என்றாலும் கூட அதைப் பொருட்படுத்தாது நாட்டுக்கு நல்லது செய்யும் என்றால் அதைத் துணிவுடன் பேசுவார்.

எனது அரும் பெரும் தலைவர் தேவர் அவர்கள் கூறியதைப்போல, அரசியலில் உண்மையைப் பேசவேண்டும். உண்மையைப் பேச வேண்டும் என்றால் அதை உறுதியாகப் பேசவேண்டும். அதை இறுதி வரைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று சொல்வார். அந்தத் தேவரின் திருவாக்கினை அப்படியே பின்பற்றி, சிறந்த அரசியல்வாதியாக நண்பர் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவருடைய மரணம் தி.மு.க.-வுக்கு மட்டும் அல்ல, தமிழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும், சிறந்த எண்ணம் உள்ள நேர்மையான நியாயமான அரசியல்வாதிகள் அத்தனை பேருக்கும் பெரும் நஷ்டம் ஆகும். அப்பேர்ப்பட்ட ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினரை இழந்து தவிக்கின்ற தொகுதி மக்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும், என் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. பி. எஸ். மணி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். சகோதரர் இளம்வழுதி அவர்களின் மறைவினால் உண்மையிலேயே ஒரு நல்ல அரசியல் விற்பன்னரை இந்தச் சபை இழந்துவிட்டது என்று கூறினார்கள்; கட்சி வெறி இன்றி கொள்கைப் பற்றுடைய ஒரு சகோதரரை இச்சபை இழந்து விட்டது. கடலூர் தொகுதியில், கட்சிக்காக மட்டுமின்றி தன் தொழிலிலும் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல அவர் இரண்டையும் சிறப்பாகச் செய்து வந்தார்கள். அவர்களுடைய அறிவின் திறனாலும் கடுமையான உழைப்பினாலும் அவர் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அவர்கள் செய்த காரியங்





களிலே சிறப்பாகச் சொல்லவேண்டுமானால், தான் நஷ்டப் பட்டாலும் தன் கட்சிக்காக உழைத்தார் என்பதே. பல குறிப்பு களைப் பார்த்தால் இதை நாம் சொல்ல முடியும்.

உதாரணமாக, கடந்த ஆண்டு பட்ஜெட் சமயத்தில் ஒரு சிறிது நேரம் அவருடன் பேசிக்கொண்டு இருந்தபோது நான் கேட்டேன். இங்கு வந்து ஒரு மாதம் தங்கிவிட்டீர்களே, உங்கள் வழக்குகள் எல்லாம் என்ன ஆவது என்று கேட்டேன். அதற்கு அவர், "என்ன செய்வது, இருந்துதான் தீரவேண்டிய நிலையில் இருக்கிறேன். என்னுடைய கட்சிக்காரர்கள் எல்லாம் வேறு வழக்கறிஞர்களைப் பார்க்கும்படி சொல்லி எனக்கு வருகிற தொகையையெல்லாம் அவரிடத்திலே கொடுக்கும்படி சொல்லியிருக்கிறேன். இதனால் குறைந்த பட்சம் மாதம் ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை நஷ்டம் ஆகும்"; என்று சொன்னார். உண்மையிலேயே இப்படித் தன்னுடைய உழைப்பினால் வருகின்ற வருமானத்தைக் கட்சிக்காக விட்டுத் கொடுத்து கட்சி வேலை செய்யக்கூடிய தொண்டர் கிடைப் பது மிகவும் கஷ்டம். அப்படி, தன்னலம் இல்லாத, தனக்கு நஷ்டம் வந்தாலும் கொள்கை மாறாமல் உழைத்த ஒரு தியாகியை இந்த மன்றம் இழந்து இருக்கிறது; இந்த மன்றம் மட்டுமல்லாமல், தமிழக மக்களும், தொகுதி மக்களும் இழந்து விட்டார்கள். இதயக் கோட்டையிலே எப்படி எப்படிப் படிக்கவேண்டுமென்று, வாழ வேண்டுமென்று மனக் கோட்டை கட்டிய சின்னஞ்சிறு குஞ்சுகள் கட்டிய மனக்கோட்டை என்ன ஆகுமோ என்ற நிலையில் விட்டுச் சென்று விட்டார்கள். அதைப்போலவேதான் அரசியல் துறையில் நல்ல விற்பன்னரை இழந்துவிட்டோம். அப்படிப்பட்ட அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய கட்சிக்காரருக்கும், தொகுதி மக்களுக்கும், என் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, காலத்திற்கு முன்னதாகவே காலம் ஆகிவிட்ட நண்பர் இளம்வழுதி அவர்களை நினைக்கின்றபோது மிகவும் வேதனை அடைகிறேன். எனக்குப் பின்பெஞ்சியிலே இருக்கின்ற காரணத்தாலே ஒவ்வொரு நிகழ்ச்சி யிலும் கருத்துக்களை பல நேரங்களில் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவருடைய பேச்சுக்களில் உள்ள நல்ல கருத்துக்களை எடுத் துக் கூறிக்கொண்டே இருப்பார்கள். இந்த சபையிலும் தன்னுடைய கருத்துக்களை முன் வைக்கின்றபோது நியாயமாக எடுத்து சொல்லிக் கொண்டு வந்துள்ளார். அப்படி வாதத் திறமையை நியாயமாக எடுத்துச் சொல்லுகின்ற ஒரு நண்பர் இன்னும் உயர்ந்த பணியிலே இருந்து மறைந்திருந்தால் நல்லது என்று பலரும் எண்ணினார்கள். அப்படியெல்லாம் ஏற்படாமல், காலத்திற்கு முன்னதாகவே மறைந்து விட்டார்கள் என்பதைப் பற்றி இந்தச் சபையிலே உள்ள ஒவ்வொரு வரும் வருந்துகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை: அப்படிப்பட்ட வருடைய மறைவு குறித்த அனுதாபத் தீர்மானத்தை நானும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி சார்பாக ஆதரித்து, அவருடைய குடும்பத் தாருக்கு எங்களுடைய அனுதாபத்தையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, காலஞ்சென்ற திரு. இளம்வழுதி அவர்கள்—என்னைப் பொறுத்தமட்டில் என் கட்சியைச் சார்ந்தமட்டில்—சுயேச்சை—பக்கத்திலே இருந்தவர்கள் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற எண்ணமில்லாத நிலைமைதான் இருந்துகொண்டு இருக்கிறது. அவர்கள் குடும்பம் இன்றைய நிலையிலே இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபொழுது அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் அவர்கள் பால் நல்லெண்ணங் கொண்ட அத்தனை கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அவர்கள் குடும்பம் நல்வாழ்வு வாழ்வதற்காக என்றென்றும் உதவியாக இருக்கவேண்டுமென்ற ஒரே ஒரு உறுதியை மட்டும் மனத்தில் கொள்ளவேண்டுமென்பதைச் சொல்லிக்க கொள்ள விரும்புகிறேன். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களைப்பற்றி நன்றாகத் தெரியும். இன்றல்ல, தி. மு. க. ஸ்தாபனம் தோன்றிய ஆரம்பத்திலிருந்தே அவர்கள் அதில் ஒருவராக இருந்திருப்பதை மறுக்கமுடியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நல்ல எண்ணம் உள்ள எல்லோரும் அவர்களுடைய குடும்பத்தாருக்குக் கஷ்டமில்லாமல் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களுடைய குடும்பத்தாருக்கு அனுதாபத்தைப் பேரவையின் மூலமாகச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, என்னுடைய ஆருயிர் நண்பரும், இந்த மாமன்றத்தில் தன்னுடைய கம்பீரமான பேச்சின் மூலம் மன்றத்திலேயிருக்கிற அனைவருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டவரும், இளமைக் காலந்தொட்டே பொது வாழ்விலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டவரும் கடலூரிலே மாத்திரமல்லாமல் தமிழகத்திலேயே சிறப்புவாய்ந்த வழக்கறிஞர் என்ற பெயர் பெற்றவருமான மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்கள் இன்று இல்லை. அவர்கள், இந்த மன்றத்திலே கடந்த முறை கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய நேரத்திலே, எவ்வளவு அழுத்தந்திருத்தமாகத் தம்முடைய வாதங்களை எடுத்துரைத்தார்கள் என்பதையும் அபரிமிதமான குறுக்கீடுகளுக்கிடையிலும் எவ்வளவு திறம்படத் தன்னுடைய உரையினை ஆற்றினார்கள் என்பதையும் நாம் நன்றாக உணர்வோம்.

ஏறத்தாழ 1940-ம் ஆண்டு முதல் 30 ஆண்டு காலம் அவரோடு நான் நெருங்கிப் பழகி உற்ற நண்பராக இருக்கிற சூழ்நிலையைப் பெற்றவனாவேன். திரு. இளம்வழுதி அவர்களுடைய குடும்பமும் என்னுடைய குடும்பமும் இன்றைக்கு ஆளுங்கட்சியிலிருக்கின்ற பல தலைவர்களுடைய குடும்பங்களும் ஒன்று என்ற அளவுக்கு நீண்ட நெடுங்காலமாகப் பழகியவர்களாவோம். அந்த இளம் நண்பரை நாங்கள் இழந்து தவிக்கிறோம். இந்த மன்றம் ஒரு நல்ல வல்லுநரை இழந்து தவிக்கிறது. அவர்கள் தம்முடைய இளமைக் காலத்தில் மாணவப் பருவத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பயின்றுகொண்டிருந்த அந்த நேரத்திலே அரசியலிலே அடியெடுத்துவைத்து, பேரறிஞர் அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமாகி எங்களைப் போன்றவர்களுடைய தோழமையுணர்ச்சியோடு பல அரும் பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள்.



அவர்களுக்குச் சென்ற ஆண்டு உடல் நலிவு ஏற்பட்ட நேரத்திலே என்ன ஆகுமோ என்று நாங்களெல்லாம் திகில் அடைந்த நேரத்திலே அவர்கள் தப்பிப் பிழைத்தார்கள். அதற்குப் பிறகு நல்ல வலுவோடு பொதுப்பணிகளை ஆற்றிவந்தார்கள். அவர் மறைவிற்கு ஒரு கிழமைக்கு முன்பு மீண்டும் நோய்வாய்ப்பட்டு, ஏதோ சாதாரணமாக வந்து விலகிவிடக் கூடிய நோய் என்று எண்ணி நாலைந்து நாட்கள் கடலூரில் தம் இல்லத்திலேயே ஓய்வு எடுத்துக்கொண்டார்கள். பின்பு, கடமையாற்ற வேண்டுமென்று எண்ணத்துடன் நண்பருடைய திருமண விழாவிலே பங்கெடுத்துக் கொள்வதற்காக சென்னைக்கு வந்து தங்கியவர்கள், எங்களுடன் எல்லாம் அளவளாவிக் கொண்டு இருந்தார்கள். திடீரென்று மாலையிலே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். மருத்துவ மனையிலே நாங்கள் சென்று பார்த்த நேரத்திலே குதூகலத்துடனும் மகிழ்ச்சியுடனும் பேசிக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் சந்தித்த நான்கைந்து மணி நேரத்திற்கெல்லாம், திடீரென்று ஏற்பட்ட நெஞ்சுவலியின் காரணமாக அவர் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற அதிர்ச்சியான செய்தியை, திருச்சிக்கு ரயிலிலே நான் சென்று கொண்டிருந்தபொழுது, விருத்தாசலத்திலே கேட்டு நம்பவில்லை, விருத்தாசத்திலே இறங்கி சென்னைக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வந்த தகவல் உண்மைதானா என்று கேட்கிற நிலைக்கு, நம்பக்கூடாத செய்தியாக எங்களுக்கெல்லாம் தோன்றியது.

அந்த நண்பரைப் பாராட்டி எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் தங்களுடைய பாராட்டுரைகளைத் தந்திருக்கிறார்கள். தம்முடைய தொகுதியில் எல்லாக் கட்சிக்காரர்களுடனும் எப்படி அவர்கள் நடந்து கொண்டார்கள், இவ்வளவு நல்ல பெயர் எடுத்தார்கள் என்பதையெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் மறைவதற்கு ஒரு திங்களுக்கு முன்பு என்று கருதுகிறேன், கடலூரிலே நம்முடைய மேலவை உறுப்பினராக இருந்த திரு. எத்திராஜுலு அவர்கள் மறைந்துவிட்ட நேரத்திலே, திரு. இளம்வழுதி அவர்கள் தன்னுடைய உடல்நிலையைப் பொருட்படுத்தாமல் திரு. எத்திராஜுலு அவர்களுடைய சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டு நடந்தே சென்று தன்னுடைய கடமையைச் செய்தார் என்று அவர் மறைந்த நேரத்திலே துக்கம் விசாரிக்க வந்தவர்கள் எல்லாம் கண்களில் நீர்பெருக்கிச் சொல்லியதை மறந்துவிட முடியாது.

அந்த நண்பர் இந்த அவையிலே ஆற்றிய பெரும் பணிகள் எவ்வளவு சிறப்புக்குரியவை, இந்த நாட்டுக்கு ஆற்றிய தொண்டு அவை என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட நண்பரை இழந்து தவிக்கின்ற எல்லோருக்கும், பிஞ்சுக் குழந்தைகளுக்கும் வீட்டாருக்கும், அவர் சார்ந்துள்ள இயக்கத்தின் சார்பிலே கடமைகள் ஆற்றப்படவேண்டுமென்று பேசினார்கள். அதை உணர்ந்து அந்தக் கடமைகளை ஆற்றுவதற்காக ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் சிறந்த வழக்கறிஞராக இருந்து கடலூர் மக்களுக்கும் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது தென்னாற்காடு மாவட்டத்து மக்களுக்கெல்லாம் பணியாற்றிப் பாராட்டுப்

[திரு. மு. கருணாநிதி] [1970 நவம்பர் 25

பெற்றவர். ஒரு நண்பர் இங்கே கூறியதைப்போல வழக்கறிஞர் தொழிலில் ஒரு நல்ல வருமானம் ஈட்டுகிற அளவுக்கு நிலைமையைப் பெற்றிருந்தார்கள். ஏறத்தாழ தன்னுடைய வீட்டின்மீது எவ்வளவு கடன், தான் வைத்திருந்த காரின்மீது எவ்வளவு கடன், தன்னுடைய மகள் திருமணத்திற்காக வாங்கிய கடன் எல்லாம் ஏறத்தாழ 70 ஆயிரம் ரூபாய் கடன் வைத்துவிட்டுக் காலமானார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது.

இந்த இயக்கத்தைப் பொறுத்தவரையிலும், திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னதைப்போன்று பொதுப்பணிகளிலே ஈடுபடுகின்றவர்கள் காலமானால் அவர்கள் குடும்பத்தைக் கைவிடுவதில்லை என்ற மரபுக்கு ஏற்ப, திரு. இளம்வழுதி அவர்கள் குடும்பத்திற்கும் ஆவன செய்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்னதான் நிதியைத் திரட்டிக் கொடுத்தாலும், என்னதான் குடும்பத்தை வாழவைத்தாலும் இது எல்லாம் நாம் அவர்களுக்குச் செய்கின்ற நன்றிக் கடன் என்றாலும்கூட உள்ளத்திலே சோகத்தை மூட்டிவிட்டு நம்மைவிட்டுப் பிரிந்துவிட்ட காரணத்தினால் ஏற்பட்டுவிட்ட இடைவெளியை எப்படி நிறைவுசெய்வது என்பது தெரியாமல் அவர்களுடைய குடும்பத்தாருக்கு அனைவருடைய சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நண்பர் திரு. இளம்வழுதி அவர்களுடைய மறைவு குறித்து அவை முன்னவரவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவர, அதைக் கட்சித் தலைவர்களெல்லாம் ஆதரித்துப் பேசக்கூடிய ஒரு பேரவையில் தலைமை வகிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே என்று நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இனிய நண்பர், நல்ல வழக்கறிஞர், சிறந்த அரசியல்வாதி, எதிர்காலத்திலே வளர வேண்டிய ஒரு நிலையிலேயிருந்தவர் இறந்துவிட்டது எவ்வளவு பெரிய இழப்பு என்பதை இங்கே கட்சித் தலைவர்களெல்லாம் கூறிய கூற்றிலேயிருந்து நாடு அறியும். அப்படிப்பட்டவருடைய மறைவு குறித்து என்னுடைய இரங்கலையும் நான் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தருகின்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு அவை முன்னவரவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.*

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மறைந்துவிட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவோடு நிறுத்திப் பேரவையை ஒற்றிவைக்கிறேன். பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*



1970 நவம்பர் 25]

### 3. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*1. Notification issued with G.O. Ms. No. 1291, Home, dated the 2nd June 1970, in regard to revision of rates of motor vehicles tax, in respect of quarterly licences for motor vehicles plying for hire on inter-State routes. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 2. Notification issued with G.O. Ms. No. 1529, Home, dated the 1st July 1970, in regard to reduction in rate of tax for lorries with effect from the quarter commencing on the 1st July 1970. [Laid on the Table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 3. Notification issued with G.O. Ms. No. 1183, Home, dated the 23rd May 1970, in regard to exemption from payment of tax leviable, in respect of the vehicle bearing registration number MSM 6941 belonging to the Guild of Service (Central), Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 4. Notification issued with G.O. Ms. No. 1423, Public (Election-IV), dated the 20th June 1970, in regard to certain amendments to certain rules issued under the Tamil Nadu payment of salaries Act, 1951, *viz.*, the rules for use and maintenance of Government cars allotted to Ministers, Speaker and Chairman 1952, the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955, The Tamil Nadu Legislature (Medical Attendance and Treatment) Rules, 1964, The Tamil Nadu Legislative Assembly Travelling Allowance (Elections) Rules, 1952. The Tamil Nadu Legislative Relinquishment of Salaries and Allowance Rules, 1952. Travelling Allowance Rules for Assumption and Relinquishing of Office by Ministers, 1951 and Tamil Nadu Ministers Travelling Allowances Rules, 1951. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

* 5. Notification issued with G.O. Ms. No. 21, Legislative Assembly, dated the 13th March 1970, in regard to an amendment to rule 6 of the Tamil Nadu Legislative Travelling Allowance Rules, 1955, published at pages 131–138 of the Rules Supplement to Part II of the *Tamil Nadu Government Gazette*, dated the 27th July 1955 as subsequently amended. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

* 6. Notification issued with Roc. No. 155733/69-E3, dated the 19th December 1969, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 to the

area for the time being within the jurisdiction of the Uttramerur Town Panchayat of Chingleput district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 7. Notification issued with G.O. Ms. No. 701, Rural Development and Local Administration, dated the 20th April 1970, making the Madras Corporation General Service Rules. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

* 8. Notification issued with Roc. No. 55295/69-E3, dated the 26th November 1969, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Highways Township, Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 9. Notification issued with G.O. Ms. No. 541, Rural Development and Local Administration, dated the 26th March 1970 in regard to coming into force of the Tamil Nadu Panchayats (Amendment) Act 1969 and Rules relating to taxatton and Finance and Assessment and collection and levy of House taxes by Panchayats and certain amendments to the rules relating to house tax, published with Rural Development and Local Administration Notification at pages 41-44 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated 10th May 1961 as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 10. Notification issued with G.O. Ms. No. 1160, Agriculture, dated the 16th April 1970, in regard to an amendment to rule 185 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 11. Notification issued with G.O. Ms. No. 1380, Home, dated the 17th June 1970, in regard to exemption from payment of tax leviable in respect of nine vehicles belonging to the Trade Representation of the U.S.S.R. in India at Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 12. Notification issued with G.O. Ms. No. 590, Home, dated the 18th March 1970, in regard to cancellation of Home Department Notification II No. 3896 of 1969 published at page 1216 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 20th August 1969, so far as it relates to the exemption



granted to the goods vehicle MSM 1283 belonging to Christian Agency for Social Action, Relief and Development, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 13. Notification issued with G.O. Ms. No. 1640, Home, dated the 10th July 1970, in regard to reduction in rates of motor vehicles tax for certain goods vehicles. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 14. Notification issued with G.O. No. 2428, Revenue, dated the 31st July 1970 in regard to an amendment to the Revenue Department Notification, dated the 18th March 1963, published at page 656 of Part III of the *Fort St. George Gazette*, dated the 10th April 1963. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 15. Notification issued with G.O. Ms. No. 804, Home, dated the 13th April 1970, in regard to exemption from payment of tax leviable in respect of vehicle bearing registration number MSM 8165, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Dean, Stanley Medical College, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

* 16. Notification issued with G.O. R. No. 1471, Revenue, dated the 19th August 1970, in regard to exemption from liability to entertainments tax, the cinematograph film shows organised by the S.S.R.M. and Rehabilitation Works, Bangalore and Mysore to raise funds in aid of its Madras Branch. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

* 17. Notification issued with G.O. R. No. 1497, Revenue, dated the 25th August 1970, in regard to exemption from liability to entertainments tax the cinematograph film show to be conducted in aid of the Bala Mandir (Foundling Hospital), Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 18. Notification issued with G.O. Ms. No. 941, Home, dated the 29th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, published at pages 116-161 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 18th March 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).

* 19. Notification issued with G.O. Ms. No. 940, Home, dated the 29th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Distillery Rules, 1960, published at pages 220–229 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 18th May 1960 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act [ of 1937).]

* 20. Notification issued with G.O. Ms. No. 945, Home, dated the 29th April 1970, in regard to an amendment to the Tamil Nadu Molesses Control and Regulation Rules, 1958, published at pages 450–456 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 15th October 1958 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 21. Notification issued with G.O. Ms. No. 939, Home, dated the 29th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Spirituous Essences Rules, 1959, published at pages 188–218 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 25th March 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

* 22. Notification issued with G.O. Ms. No. 947, Home, dated the 29th April 1970, in regard to an amendment to the Tamil Nadu Neera or Padani Rules, 1959, published at pages 255–256 of Part I of the *Fort St. George Gazette*, dated the 28th February 1939. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

*23. Notification issued with G.O. No. 2463, Revenue, dated the 3rd August 1970, in regard to amendment to Revenue Department notification published at pages 276 of Part III of the *Fort St. George Gazette*, dated the 1st March 1967 relating to exemption from liability to tax the sales of all products coming within the purview of the Khadi and Village Industries Commission Act, 1956. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 24. Notification issued with G.O. Ms. No. 1464, Agriculture, dated the 16th May 1970, in regard to establishment of a Market Committee at Dharmapuri in respect of the area within the limits of the Dharmapuri district for regulation of trade in respect of groundnut, tamarind, cane jaggery in all forms and gingelly and appointment of members of the said Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



* 25. Notification issued with G.O. Ms. No. 804, Public (Services-A), dated the 9th April 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission's purview the post of Tutors and Demonstrators in Goversment Arts and Training Colleges, published at pages 759–768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (b) of the Constitution of India).]

* 26. Notification issued with G.O. Ms. No. 1006, Public (Services-A), dated the 2nd May 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission regulations, 1954, for inclusion within the Commission's purview the post of Epigraphists in the Department of Archaelogy, published at pages 759–768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

* 27. Notification issued with the G.O. Ms. No. 937, Public (Services-A), dated the 23rd April 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion within the Commission's purview the post of Senior Mechanic in Ice Plants and Ice-cum-cold storage in Fisheries Department, published at pages 757–768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 28. Notification issued with G.O. Ms. No. 1819, Revenue, dated the 12th June 1970, in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966, published at pages 1–24 of Part V of the *Fort St. George Gazette*, Extraordinary, dated the 25th August 1966, as subsequently amended. [Laid on the Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

* 29. Notification issued with G.O. Ms. No. 1694, Agriculture, dated the 3rd June 1970, in regard to an amendment to Annexure III of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

**@ 30. Notification issued with G.O. Ms. No. 1844, Home, dated the 28th July 1970, in regard to exemption from payment of tax leviable in respect of passengers, luggage and goods carried in all stage carriages registered in Pondicherry State and plying on inter-state routes between Tamil Nadu and Pondicherry State. [Laid on the Table of the House under section 16 (5) of the Tamil Nadu Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Tamil Nadu Act XVI of 1952).]**

@ 31. Notification issued with G.O. Ms. No. 30, Home, dated the 6th January 1970, in regard to an amendment to the Home Department Notification No. 517, published at page 574 of Part I of the Fort St. George Gazette, dated the 30th April 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 32. Notification issued with G.O. No. 2500, Revenue, dated the 6th August 1970, in regard to exemption from liability to tax by any dealer on the sales of Nirodh advertisement and publicity materials. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 33. Notification issued with G.O. R. No. 1477, Revenue, dated the 21st August 1970, in regard to exemption from liability to entertainments tax, the exhibition of the cinematograph, film "Everest" a colour documentary produced by the Films Division of the Government of India. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 34. Notification issued with G.O. Ms. No. 795, Food, dated the 13th July 1970, in regard to inclusion of BHC Lindane in the schedule to the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951). [Laid on the Table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

@ 35. Notification issued with G.O. Ms. No. 761, Labour, dated the 5th June 1970, in regard to inclusion of Heavy Chemical Industry in the First Schedule to the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947). [Laid on the Table of the House under section 38 (4) of the Industrial Disputes Act, 1947 (Central Act XIVof 1947).]

@ 36. Notification issued with G.O. Ms. No. 1636, Public (Elections IV), dated 16th July 1970, in regard to an amendment to Rule 6 of the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955 published at pages 131 to 138 of the Rules Supplement to Part II of the *Fort St. George Gazette*, dated the 27th July 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 14(3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

@ 37. Notification issued with G.O. Ms. No. 516, Rural Development and Local Administration, dated the 24th March 1970, in regard to amendment to the rules relating to personal conduct of officers and servants of municipal councils, published at pages 366–370 of the Part 1-A of the *Fort St. George Gazette*, dated the 20th May 1941, as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



@ 38. Notification issued with G.O. Ms. No. 978, Public (Service-A), dated the 28th April 1970, in regard to the exrlusion of the posts of the Demonstrators, Institute of Leather Technology, Madras, from the Tamil Nadu Public Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 39. Notification issued with G.O. Ms. No. 936, Public (Services-A), dated the 23rd April 1970, in regard to exclusion of posts of Gazetted Personal Assistants to Ministers from the Tamil Nadu Public Service Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 40. Notification issued with G.O. Ms. No. 3588, Agriculture, dated the 3rd December 1969, specifying the market area of the Monday Market in Kanyakumari district for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 41. Notification issued with G.O. Ms. No. 1520, Home, dated the 1st July 1970, in regard to exemption from payment of motor vehicles tax to the vehicle bearing registration number MSCOT 37 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Superintendent, Nurses Training School, Caritas Hospital, Kottayam, Kerala. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 42. Notification issued with G.O. P. No. 1008, Revenue, dated the 2nd April 1970, in regard to certain amendments to Rules 3 (1) and 26 (11) of the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 43. Orders issued with G.O. R. No. 1571, Revenue, dated the 7th September 1970, in regard to exemption from the liability to entertainments tax, the cinematograph film show organised on the 11th October 1970 at Kamadhenu Theatre, Luz, Mylapore, for the benefit of Andhra Mahila Sabha Medical Centre, Madras-28. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 44. Notification issued with G.O. Ms. No. 1601, Public (Elections-IV), dated the 10th July 1970, in regard to certain amendments to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955, published at pages 131–138 of the Rules Supplement to Part II of the *Fort St. George Gazette*, dated the 27th [illegible]

July 1955 as subsequently amended. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

@ 45. Notification issued with G.O. P. No. 2478, Revenue, dated the 5th August 1970, in regard to an amendment to the sub-rule (i) under Rules 21 of the Tamil Nadu Entertainments Rules, 1939, as subsequently amended. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 46. Notification issued with G.O. Ms. No. 1577, Home, dated the 4th July 1970, in regard to certain amendments to Rule 296-C of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act 1939 (Central Act IV of 1939).]

@ 47. Orders issued with G.O. R. No. 1511, Revenue, dated the 26th August 1970, in regard to exemption from liability to entertainments tax, cinematograph film shows on the 4th September 1970 at G.P. Theatre, Coimbatore, and at Nallappa Theatre, Pollachi, in aid of funds for the magazine " Minezhuthar ". [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 48. Notification issued with G.O. Ms. No. 2112, Agriculture, dated the 16th July 1970, in regard to certain amendments to the Annexure 1 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 49. Notification issued with G.O. Ms. No. 2471, Revenue, dated the 4th August 1970, in regard to the amendment to the First Schedule of the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 50. Notification issued with G.O. Ms. No. 1265, Rural Development and Local Administration, dated the 3rd July 1970, in regard to preliminary notification for the constitution of municipalities in Avadi and Ambattur Panchayat Townships and Kathiwakkam and Madhavaram Town Panchayats in Chingleput district. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 51. Notification issued with G.O. Ms. No. 817, Home, dated the 16th April 1970, in regard to amendment to rule 1 of the Tamil Nadu Dramatic Performances Rules, 1955, published at pages 556–557 of the Rules Supplement to Part I of the *Fort St.*



*George Gazette*, dated the 23rd November 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 13 (2) of the Tamil Nadu Dramatic Performances Act, 1954 (Tamil Nadu Act XXXIII of 1954).]

@ 52. Notification issued with G.O. Ms. No. 351, Rural Development and Local Administration, dated the 6th March 1970, in regard to withdrawal of certain roads specified in the schedule of the notification from the control of municipal councils. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

@ 53. Notification issued with G.O. Ms. No. 944, Home, dated the 29th April 1970, in regard to amendment to rule 6 of the Tamil Nadu Chloral Hydrate (Chloral) Rules, 1959, published at pages 136–145 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 13th May 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

@ 54. Notification issued with G.O. Ms. No. 1637, Public (Elections-IV), dated the 16th July 1970, in regard to amendment to sub-rule (1) of rule 1 of the Tamil Nadu Legislature Relinquishment of Salaries and Allowances Rules, 1952, published at page 95 of the Rules Supplement to Part II of the *Fort St. George Gazette*, dated the 9th July 1952. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

@ 55. Notification issued with G.O. Ms. No. 1638, Public (Elections-IV), dated the 16th July 1970, in regard to amendment to sub-rule (1) of rule 1 of the Tamil Nadu Legislative Assembly Travelling Allowance (Elections) Rules, 1952, published at page 1 of Part II of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 22nd March 1952. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

@ 56. Notification issued with G.O. Ms. No. 1106, Public (Services-A), dated the 16th April 1970, in regard to inclusion of posts of Dairy Assistants and Dairy Supervisors in Dairy Development Department within the Tamil Nadu Public Service Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 57. Notification issued with G.O. Ms. No. 853, Public (Services-A), dated the 16th April 1970, in regard to inclusion of posts of Statistician, Geologist, Electronics Engineer in Highways Research Station, Madras, Highways Engineering Subordinate Service within the Tamil Nadu Public Service Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

[1970 நவம்பர் 25

@ 58. Notification issued with G.O. Ms. No. 1115, Agriculture, dated the 10th April 1970, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 59. Notification issued with G.O. Ms. No. 1475, Rural Development and Local Administration, dated the 1st August 1970, in regard to fixation of maximum rate of the local cess surcharge levied under the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958). [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 60. Notification issued with G.O. No. 1961, Revenue, dated the 23rd June 1970, in regard to exemption from payment of sales tax by any dealer on the sales of water. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959.).]

@ 61. Notification issued with G.O. Ms. No. 815, Rural Development and Local Administration, dated the 11th May 1970 in regard to issue of the Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Village Panchayat) Rules, 1970. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 62. Notification issued with G.O. No. 2776, Revenue, dated the 31st August 1970, in regard to exemption from liability to sales tax payable by the Sathya Bakery Unit (Guild of Service), Thanjavur, relating to sales of its products. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 63. Notification issued with G.O. R. No. 1714, Revenue, dated the 26th September 1970, in regard to exemption from liability to entertainments tax, for the benefit cinematograph film show to be held in aid of Sree Ramakrishna Poor Widows' Industrial Society, Perambur, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 64. Notification issued with G.O. Ms. No. 1849, Agriculture, dated the 19th June 1970, in regard to certain amendments to the Food and Agriculture Department's Notification II-1 Nos. 2303 and 2304 of 1961 relating to market area for Rajapalayam and Virudhunagar, published at pages 925 and 926 respectively of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated the 27th May 1961. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



1970 நவம்பர் 25]

& 65. Notification issued with G. O. P. No. 2727, Revenue, dated the 25th August 1970 in regard to an amendment to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 66. Notification issued with G. O. Ms. No. 794, Food, dated the 13th July 1970, in regard to inclusion of certain items in the Schedule to the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951). [Laid on the Table of the House under section 27 (4) of the Tamil Nadu Warehouses Act, 1951 (Tamil Nadu Act XV of 1951).]

& 67. Notification issued with G. O. R. No. 1719, Revenue, dated the 26th September 1970 in regard to exemption from liability to entertainments tax, the cinematograph film show on the morning of 27th September 1970 at Ram Theatre, Kodambakkam, Madras organised by the Hindustan Teleprinters Recreation Club, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 68. Notification issued with G.O. Ms. No. 1390, Agriculture, dated the 8th May 1970, making the Collection and Disposal of Drift Timber Rules, 1970. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forests Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

& 69. Notification issued with G.O. Ms. No. 2357, Revenue, dated the 24th July 1970 in regard to an amendment to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966, published at pages 1–24 of Part V of the *Fort St. Gesrge Gazette* Extraordinary, dated the 25th August 1966. [Laid on the Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966.)]

& 70. Notification issued with G.O. Ms. No. 1564, Home, dated the 4th July 1970, in regard to exemption from payment of tax leviable in respect of six vehicles bearing registration Nos. MSCOT 40, 41, 42, 43, 44 and 45 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Director of Health Services, Orissa, Bhubaneswar. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 71. Notification issued with G.O. Ms. No. 1331, Home, dated the 9th June 1970, in regard to exemption from liability to tax leviable, in respect of the lorry bearing registration number MSM 8129 belonging to " Beatitudes " Social Welfare Centre, Madras. [Laid on the Table of the House under Section II (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 72. Notification issued with G.O. Ms. No. 1316, Home, dated the 6th June 1970, in regard to exemption from payment of tax in respect of vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the various departments of the Government of Tamil Nadu. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 73. Notification issued with G.O. Ms. No. 1689, Home, dated the 16th July 1970, in regard to certain amendments to the Tamil Nadu Motor Accidents Claims Tribunal Rules, 1961, published at pages 750–753 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 12th July 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

‡ 74. Notification issued with G.O. Ms. No. 1519, Home, dated the 1st July 1970, in regard to exemption from payment of tax in respect of vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Development Commissioner, Government of Mysore, Bangalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 75. Notification issued with G.O. Ms. No. 763, Home, dated the 6th April 1970, in regard to exemption from payment of tax in respect of the vehicle MSM 8195 belsnging to the United Nations Development Programme (Special Fund) and assigned to the Project for Mineral Development, Industrial Estate, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 76. Notification issued with G.O. Ms. No. 1984, Home, dated the 11th August 1970, in regard to concessional rate of tax payable in respect of the lorry MDJ 5023 belonging to the Diocese of Vellore Society, Vellore, North Arcot district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 77. Notification issued with G.O. Ms. Ns. 490, Education, dated the 24th April 1970 in regard to approval of the list of all the parks and play-fields in the area within the jurisdiction of the Singanallur Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Reguation Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

‡ 78. Notification issued with G.O. Ms. No. 81, Education, dated the 25th January 1960 in regard to approval of the list of all the parks and play-fields in the area within the jurisdiction of the Alandur Municipal Council. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]



‡ 79. Notification issued with G.O. Ms. No. 1127, Education, dated the 28th July 1969 in regard to approval of the list of all the parks and play-fields in the area within the jurisdiction of the Attur Municipaltty. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

& 80. Notification issued with G.O. No. 2123, Revenue, dated the 6th July 1970, in regard to exemption from liability to sales tax on the sales of the products manufactured by the inmates of the Lucy Perry Noble Institute, Rachanyapuram, Madurai. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

‡ 81. Notification issued with G.O. Ms. No. 1642, Revenue, dated the 19th August 1970, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income Tax Rules, 1955, published at pages 649–665 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 21st December 1955. [Laid on the Table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-Tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

‡ 82. Notification issued with G.O. Ms. No. 1422, Home, dated the 22nd June 1970, in regard to exemption from payment of tax in respect of vehicle bearing registration number MSCOT 25 beloning to the United Nations International Children's Emergency Fund and assigned to the Director of Health and Family Planning Service, Bangalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

‡ 83. Notification issued iwth G.O. Ms. No. 1660, Home, dated the 23rd May 1970, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

‡ 84. Notification issued with G.O. Ms. No. 1196, Home, dated the 23rd May 1970, in regard to an amendment to the Tamil Nadu Home Guard Rules, 1963, published at pages 433–438 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th April 1963, as subsequently amended. [Laid on the Table of the House under section 15 (4) of the Tamil Nadu Home Guard Act, 1963 (Tamil Nadu Act III of 1963).]

‡ 85. Notification issued with G.O. Ms. No. 1548, Home, dated the 2nd July 1970, in regard to exemption from liability to pay tax in respect of vehicles bearing registration Nos. MSCOT 7, 8, 9 and 10 belonging to the United Natons Internatonal Children's Emergency Fund and assigned to the Director of

Health and Family Planning Service in Mysore, Bangalore. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 86. Notification issued with G.O. Ms. No. 1372, Public (Services-A), dated the 15th June 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954, as subsequently amended, for inclusion the post of District Women's Welfare Officers and Sub-Editor "Bagyalakshmi" within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

‡ 87. Notification issued with G.O. Ms. No. 148, Home, dated the 27th January 1970, in regard to an amendment to the Home Department Notification II-1 No. 3378 of 1961, relating to extension of Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act 1960, to Katpadi Township in North Arcot district, published at page 1155 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th August 1961, as amended. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 19 of 1960).]

‡ 88. Notification issued with G.O. Ns. 2918, Revenue, dated the 17th September 1970, in regard to an amendment to Revenue Department Notification III No. 86 of 1970 relating to sales of Agricultural implements, published in the *Tamil Nadu Government Gazetted*, Extraordinary, dated the 18 March 1970. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

‡ 89. Notification issued with G.O. Ms. No. 2475, Revenue, dated the 4th August 1970, in regard to an amendment to the rules published with Revenue Department Notification No. 313 at pages 2402–2405 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 22nd December 1925, as subsequently amended. [Laid on the Table of the House under section 26 (3) of the Tamil Nadu Survey and Boundaries Act, 1923 (Tamil Nadu Act VIII of 1923).]

‡ 90. Notification issued with G.O. Ms. No. 1322, Education, dated the 3rd September 1969, in regard to approval of the list of all the parks, play-fields and open spaces in the areae within the jurisdiction of the Coimbatore Municipality. [Laid on the Table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-Fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

‡ 91. Notification issued with G.O. Ms. No. 1090, Revenue, dated the 3rd April 1970, in regard to an amendment to the rules published with the Revenue Department Notification No. 313, at pages 2402–2405 of Part I of the *Tamil Nadu Government Gazette*,



dated the 22nd December 1925, as subsequently amended. [Laid on the Table of the House under section 26 (3) of the Tamil Nadu Survey and Boundaries Act, 1923 (Tamil Nadu Act VIII of 1923).]

‡ 92. Notification issued with G.O. Ms. No. 846, Rural Development and Local Administration, dated the 11th May 1970, making the Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Town Panchayat) Rules, 1970. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

‡ 93. Notification issued with G.O. Ms. No. 150, Agriculture, dated the 27th January 1970, in regard to certain amendments to the rules to prohibit the hunting, shooting, fishing, poisoning of water and setting up of traps or shares within the limits of the Point Calimere Wild Life Sanctuary published at pages 132 to 134 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th March 1968. [Laid on the Table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

‡ 94. Notification issued with G.O. Ms. No. 2445, Agriculture, dated the 27th August 1970 in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962, published at pages 1 to 88 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th October 1962, as subsequently amended. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

‡ 95. Notification issued with G.O. Ms. Ns. 465, Labour, dated the 30th March 1970, in regard to certain amendments to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [Laid on the Table of the House under section 43 (4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

‡ 96. Notification issued with Memo. No. 54723 J–2–69–9, Revenue, dated the 4th December 1969, in regard to amendment to Revenue Department Notifications II-1 No. 1431 of 1965 and 5343 of 1966 published at pages 588–593 and 2184–2185 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st March 1965, and 21st December 1966, respectively. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

## B. Reports notifications and other papers.

• 1. Notification issued with G.O. Ms. No. 918, Revenue, dated the 24th March 1970 in regard to certain amendments to the Central Sales Tax (Madras) Rules, 1957, published at pages 1—10 of the Part I of the *Tamil Nadu Government Gazette Extra-ordinary*, dated the 28th February 1957, as subsequently amended.

* 2. Notification issued with G.O. Ms. No. 1837, Revenue, dated the 12th June 1970, in regard to exemption from payment of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of sale deed to be executed in favour of the Life Insurance Corporation Employees Co-operative House Building Society, Limited, Coimbatore.

* 3. Notification issued with G.O. No. 2128, Revenue, dated the 7th July 1970, in regard to cancellation of Revenue Department Notifications III Nos. 481 and 482 of 1968 published in Part III of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 1st June 1968.

‡ 4. Notification issued with G.O. Ms. No. 2050, Revenue, dated the 29th June 1970, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of security bonds to be executed by the Tamil Nadu Government scholarship holders, for undergoing flying training in the flying clubs at Madras and Coimbatore.

‡ 5. Notification issued with G.O. Ms. No. 2618, Revenue, dated the 17th August 1970, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the gift deed to be executed in favour of Government Girl's High School, Valavanur, Villupuram taluk of South Arcot district.

† 6. Notification issued with G.O. Ms. No. 2577, Revenue, dated the 13th August 1970, in regard to exemption from payment of stamp duty in respect of endowment deed to be executed in favour of Pasumpon Muthuramalinga Thevar College Board, Usilampatti.

† 7. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 4 of 1970).

† 8. The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 5 of 1970).

† 9. The Tamil Nadu District Municipalities (Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 6 of 1970).

‡ 10. Notification issued with G.O. Ms. No. 841, Labour, dated the 22nd June 1970, in regard to amendment to the Tamil Nadu Shops and Establishments Rules, 1948.

‡ 11. Notification issued with G.O. Ms. No. 2126, Agriculture dated the 17th July 1970, in regard to certain amendments to the Nilgiris Fishing Rules, 1966, published at pages 391 to 402 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th May 1966, as subsequently amended under the Nilgiris Games and Fish Preservation Act, 1879 (Tamil Nadu Act II of 1879), the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) and Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897),



‡ 12. Notification issued with G.O. Ms. No. 994, Labour, dated the 11th July 1970, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

13. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 24th August to 9th September 1970.

‡ 14. Notification issued with G.O. Ms. No. 2297, Agriculture, dated the 6th August 1970, in regard to amendment to the Nilgiris Fishing Rules, 1966 published with the Agriculture Department Notification, pages 391 to 402 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th May 1966, read with notification published at page 7 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated 10th January 1968 under the Nilgiris Games and Fish Preservation Act, 1879 (Tamil Nadu Act II of 1879), Tamil Nadu Forests Act, 1882 (Tamil Nadu Act V of 1882) and the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897).

‡ 15. Notification issued with G.O. Ms. No. 1123, Agriculture, dated the 10th April 1970, in regard to confirmation of the Kodaikanal Hills Fishing Rules, 1969.

‡ 16. Notification issued with G.O. No. 2889, Revenue, dated the 16th September 1970, in regard to exemption from liability to pay central sales tax by the Swedish Red Cross Rehabilitation Industries, Katpadi, North Arcot district, in respect of sales of its products in the coure of inter-State or commerce.

‡ 17. Notification issued with G.O. Ms. No. 2794, Revenue, dated the 2nd September 1970, in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deed to the executed by Thiru S. Chandrasekaran of Indian Police Service in connection with the house building advance from the Government of Kerala.

‡ 18. Notification issued with G.O. Ms. No. 2405, Revenue, dated the 21st October 1969 in regard to remission of duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), relating to exchange of lands between Aruppukkottai Municipality and Sri Amirthalingeswarar Devasthanam, Aruppukkottai.

‡ 19. Notification issued with G.O. Ms. No. 1268, Revenue, dated the 27th April 1970, in regard to remission of duty chargeable under the Indian, Stamp Act, 1899 (Central Act II of 1899), relating to gift deed to be executed by private parties relating to giff of lands in favour of the Corporation of Madras.

---

* Despatched to Members on 30th September 1970.
† Despatched to Members on 26th October 1970.
‡ Despatched to Members on 16th November 1970.

# *தமிழ் நாடு சட்டப் பேரவை.*

*வியாழக்கிழமை, 1970 நவம்பர் 26.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## *1. நடைமுறைக் கேள்வி.*

### *பதவி விலகிய அமைச்சர்கள் அவைக்கு அறிக்கை அளிப்பது குறித்து.*

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. We met last here, in this House, in the month of September. We were then discussing the 'No-Confidence Motion' against the Ministry. Of course that had to be defeated since we are least in number. Naturally, we were defeated. On that day I found 14 Ministers (interruption) I am sorry, 13 Ministers, sitting in the front. But, today, I am surprised to see that three notable Ministers are missing. They do not find a seat in the front row except Mr. Mathialagan who is relegated to the background. What happened to them?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

THIRU K. VINAYAKAM : This is a point of Order of paramount importance to the Country. It is not an easy matter. Please let me say. When the House is reconstituted it must be constituted in the way in which it was constituted early. Now I find three people missing. Either the Hon. Chief Minister owes a duty to the House by giving a statement how these things happened, whether he removed them or whether they submitted their resignations or whether he compelled them to go out of the Cabinet. This is a pertinent matter. Or, they must come forward to give a statement. I find them here in flesh and blood just before me. Mr. Vezhavendan is sitting in the second row. What happened to him? He is not in the front row. He is just now a Member instead of being a Minister. This is democracy and they should place a statement before the House regarding their resignations. It is not just a matter between themselves. their General Council or their Working Committee. They are responsible to us. They must also explain their position to the country. I wanted to raise this issue even yesterday morning but since it was a day of mourning I did not want to raise it then. I am raising it now when we are assembled here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது, . . .

**திரு. கே. விநாயகம் :** ' How it is not a point of order ' என்பதற்கு எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக வகுத்திருக்கும் விதிமுறைகள் மீறப்பட்டிருக்குமானால் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும், நாம் கடைப்பிடித்து வருகின்ற மரபுகளிலிருந்து வழுவுகின்ற நேரத்தில் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கும்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பப்படவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருப்பது, அமைச்சரவையில் நடந்திருக்கின்ற நிகழ்ச்சியைப்பற்றியது. அமைச்சரவையில் நடக்கின்ற நிகழ்ச்சிக்கும் இந்த மன்றத்திற்கும் தொடர்பு இல்லை.

THIRU K. VINAYAKAM : We can convert it into point of information.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேறு பிரச்சினை. அமைச்சர் பதவியிலிருந்து விலகியவர்கள் அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்த முடியாது. அவர்கள் விரும்பினால் அறிக்கை கொடுக்கலாம். அதைப்போலவே முதலமைச்சர் விரும்பினால், அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகியதைப் பற்றியும், அமைச்சரவையை மாற்றியமைத்ததைப் பற்றியும் அறிக்கை கொடுக்கலாம். ஆனால், அவர்களை வற்புறுத்த முடியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பியிருப்பதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

## 2. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Port Police Station, Cuddalore.*

* 1 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Port Police Station, Cuddalore was attacked about 26th April 1970; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 25—4—1970-ம் நாள் இரவு, சுமார் 300 பேர் கடப்பாரை, தடி, கற்களுடன் வந்து கடலூர்த் துறைமுகக் காவல் நிலையத்தையும் காவல் துறை அலுவலர்களையும் தாக்கினர். சிங்காரத் தோப்பு, சோணக்குப்பம் கிராமங்களில் காவல் துறையினர் மதுவிலக்குத் திடீர்ச் சோதனை நடத்தியதற்காக இவர்கள் இவ்வாறு



தாக்குதல் நடத்தினார்கள். தாக்குதல் நடத்திய கூட்டத்தினரைக் கலைப்பதற்காக தடியடிப் பிரயோகம் செய்தது பலனளிக்காமையால் காவல் துறையினர் தக்க எச்சரிக்கைக்குப் பிறகு மூன்று சுழல்கள் சுட்டனர். இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்தில் கைதிகளை வைத்திருந்து விசாரணை செய்யும் நேரத்தில், அவர்களைக் காவலர்கள் சில வேளைகளில் பலமாகத் தாக்குவதன் காரணமாகக் கைதிகளுக்கு மரணம் நேரிடும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது பொதுமக்கள் காவல் நிலையத்தைச் சூழ்ந்துகொள்வது, காவலர்களைத் தாக்குவது போன்ற நெருக்கடி ஏற்படுகிறது. காவல் நிலையங்கள் "தண்டனை நிலையங்களாக" இல்லாமல் "சேவை நிலையங்களாக" விளங்க வேண்டும் என்ற கருத்துக்கிணங்க, காவல் நிலையத்தில் உள்ள கைதிகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் காவல் நிலையத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்ற எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை ; யாரும் தாக்கப்படவில்லை. ஆகவே, அவர்கள் கேட்ட அந்தப் பொதுவான கேள்வியைப் பொறுத்தவரையில், காவல் நிலையங்களில் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்ற அசம்பாவிதங்கள் இன்றல்ல, இருபது இருபத்திரண்டு ஆண்டுக்காலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட அசம்பாவிதம் நடைபெறக்கூடாது என்பதில் இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது. அதுபற்றி காவல் துறைப் பெரிய அதிகாரிகளுக்கெல்லாம் ஏற்கனவே தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மதுவிலக்கின் காரணமாக இதுபோன்று 300 பேர்கள் ஒன்றுசேர்ந்துகொண்டு தாக்கியதாகக் கூறினார்கள். ஆகவே, மதுவிலக்குத் திட்டம் எந்த அளவிற்குப் படுதோல்வி அடைந்திருக்கிறது என்பதை கனம் முதலமைச்சரவர்கள் உணருகிறார்களா ? அதனால் மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த 300 பேர் கடப்பாரை, தடிகள் கொண்டு தாக்கியதற்கும் மதுவிலக்குப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. இது, அந்தத் தாக்கியவர்களுடைய பிரச்சினை.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையிலும் போலீசைக் கண்டாலே ஓடி ஒளிகின்றவர்கள், மாமூல் முதலியவற்றைக் கொடுத்தவர்கள், தங்களிடமிருந்து பணத்தையும் வாங்கிக்கொண்டு போலீசார் தம்மைப் பிடிக்க வருகின்றார்களே என்று அவர்களை எதிர்க்கின்ற

நிலையும், போலீசார் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குச் சுட வேண்டிய நிலையும் ஏற்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதுபோன்ற நிலையை இனியாவது தடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட ஒரு காட்சி நண்பர் இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அதைக் கூறினால், அதுபற்றி விசாரிக்கலாம்.

### நெல்லிக்குப்பத்தில் தமிழர் படை ஊர்வலம்

*** 2 வினா.—திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

15—5—1970-ல் நெல்லிக்குப்பத்தில் தமிழர் படை என்ற பெயரால் ஓர் ஊர்வலம் நடத்தப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 15—5—1970 அன்று நெல்லிக்குப்பத்தில் 'தமிழர் படை' என்ற பெயரால் ஊர்வலம் எதுவும் நடைபெறவில்லை.

**திரு. சி. கோவிந்தராஜன் :** 15—5—1970 அன்று நோட்டீஸ் போடப்பட்டது. 16-ம் தேதி ஊர்வலம் நடந்தது. தமிழர் படை என்ற பெயரால் ஊர்வலம் நடத்தப்பட்டபோது 'சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜனை கைது செய்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்' என்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மே மாதம் 16-ம் தேதி நடைபெற்ற ஊர்வலம் தமிழர் படையால் நடத்தப்பட்டது அல்ல. நெல்லிக்குப்பத்தில் நக்சல்பாரி வாசகங்கள் ஒட்டப்பட்டதன் காரணமாக மார்க்சிஸ்ட் போக்கைக் கண்டிக்கும் வகையில் தி.மு.க.வைச் சேர்ந்த 400 பேர் ஊர்வலம் நடத்தினார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** நெல்லிக்குப்பத்தில் நக்சல்பாரியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் யாரும் கிடையாது. அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கவேண்டும் அல்லது அவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த ஊர்வலம் தமிழர் படையால் நடத்தப்பட்டது. இப்படிப்பட்ட தமிழர் படையை ஊக்குவிக்க அரசாங்கம் இன்னும் தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நக்சல்பாரிகளைச் சிலர் ஊக்குவிக்கலாம். தமிழர் படையை ஊக்குவிக்கும் எண்ணம் இந்த அரசுக்கோ, இந்த அரசை நடத்தும் கட்சிக்கோ இல்லை. தமிழர் படை என்ற ஒன்று தேவையில்லை என்று கூறி அந்தப் படை இப்போது கலைக்கப்பட்டு விட்டது.





**திரு. எஸ். இராமச்சந்திரன் :** செஞ்சேனை என்ற படை வைத்து அதன் மூலமாகவும் இத்தகைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் நக்சல்பாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து ஆங்காங்குள்ள பொதுமக்கள், தமிழ்ப் பெருமக்கள் அதைக் கண்டிக்கும் வகையில் இத்தகைய ஊர்வலங்களை நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட தகவல்களும் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

### உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தையல் தொழில் பயிற்சி

*** 3 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில்-பாடப் பிரிவில் (Craft) ஆண்களுக்கும் தையல் தொழில் கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தற்பொழுதுள்ள பாட முறையின்படியே 8, 9 வகுப்புகளில் படித்து வரும் மாணவ மாணவியருக்கு துணைத் தொழிற்பாடமாகத் தையல் தொழில் கற்றுக்கொடுக்க இடமுண்டு. போதுமான எண்ணிக்கையில் மாணவ மாணவியர் தையல் தொழில் கற்றுக்கொள்ள முன்வரும் பள்ளிகளிலெல்லாம் தையல் தொழில் கற்றுக்கொடுக்கலாம்.

**திரு. இல. பலராமன் :** இந்த மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்கள் என்னென்ன? அது இந்த மாணவர்களின் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கிறது என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கைத்தொழில்கள் என்ற முறையில்— Drawing, Painting, gardening spinning and weaving, paper work, clay modelling, wood work, needle work, metal work
ஆகியனவும், பிறகு சப்சிடியரி தொழில்கள் என்ற வகையில் எட்டாவது, ஒன்பதாவது படித்தவர்களுக்கு— Tailoring, electric wiring, leather work, book-binding, clay modelling
ஆகியனவும் கற்றுத்தரப்படுகின்றன.

### திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகப் பிரிவு

*** 4 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியில் பல்கலைக்கழகப் பிரிவு (University Centre) ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் துவக்க உத்தேசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) சென்னைப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியில் கோட்டுப்பட்டு கிராமத்திலிருக்கும் குதிரைப் பந்தய மைதானத்தில் மேற்படிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

**திரு. ஆர். கருப்பையா:** அந்தப் பிரிவானது எப்போது தொடங்கப்படும்? எந்த ஆண்டு செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னைப் பல்கலைக் கழகம் இதிலே முடிவு எடுத்திருக்கிறது. அதற்கு பல்கலைக் கழகத்தின் மானியக் குழுவிடமிருந்து நிதி உதவி பெற வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு இந்தப் பல்கலைக்கழகப் பிரிவை அமைக்க மானியக் குழு நிதி உதவி செய்யும். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா என்று அரசின் கருத்தைக் கேட்டார்கள். இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறது. மானியக் குழுவுக்கு எழுதி பதில் வந்த பிறகு இந்தப் பிரிவு தொடங்கப் பெறும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** மெட்ராஸ் யூனிவர்சிடி திருச்சிராப்பள்ளியில் செண்டர் அமைப்பது போல் மதுரை யூனிவர்சிடியின் செண்டர் ஒன்றைப் பாளையங்கோட்டையில் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா? திருநெல்வேலி டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலும் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது. இதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கேள்வி சென்னைப் பல்கலைக்கழகத்தின் பகுதியைப் பொருத்தது. திருநெல்வேலியில் அப்படிப்பட்ட பிரிவு அமைப்பதைப்பற்றி மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு எடுக்க வேண்டும். தனிக் கேள்வி போட்டால் அப்படிப்பட்ட முடிவை மதுரைப் பல்கலைக்கழகம் எடுத்திருக்கிறதா இல்லையா என்ற விவரத்தைப் பெற்று அளிக்க முடியும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether he will be kind enough to grant a University Centre at Dharmapuri ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எல்லா இடங்களிலும் பல்கலைக்கழகப் பிரிவை ஏற்படுத்தமாட்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகப் பிரிவை திருச்சியிலும், கோவையிலும் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஒரு பகுதியில் பல்கலைக் கழகப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றால் அங்கு ஏராளமான கல்லூரிகள் அமைந்திருக்க வேண்டும். அந்த வகையில் திருச்சியிலும், கோவையிலும் பல்வேறு கல்லூரிகள் அமைந்திருப்பதால் அங்கே பல்கலைக்கழகப் பிரிவை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.





### *Harijans of Sundivakkam*

* 5 Q.—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Hon. the Minister has received a complaint, dated 19th March 1970 from the Harijans of No. 309, Sundivakkam village of Madhurantakam taluk against the alleged atrocities committed on them by the Caste Hindus of the village; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) சுண்டிவாக்கம் கிராம அரிசனங்கள் ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களது குடிசைகள் நாசமாக்கப்பட்டன என்றும் அரிசனங்கள் முறையிட்டுள்ளனர். சட்ட ஒழுங்கை நிலைநிறுத்த காவல் துறையினர் உடனடியான நடவடிக்கை எடுத்து இருதரப்பிலும் உள்ள குற்றவாளிகளின் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன.

**திரு. கே. விநாயகம் :** இந்த ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்ட அரிஜனங்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டது? அந்த நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் எடுத்துக் கொண்ட பணி என்ன? அந்தச் சண்டை எந்த அடிப்படையில் வளர்ந்தது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பொருள் வகையில் எந்தவித நஷ்டமும் ஏற்படவில்லை. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். ஏற்கனவே அரிசனங்கள் இருந்த பகுதியில் 17 குடிசைகளில் 34, 36 குடும்பத்தினர் வசித்து வந்தார்கள். அந்த இடம் போதாத நிலையில் பக்கத்தில் இருக்கும் நிலத்தில் குடிசை போட்டார்கள். அதை ஜாதி இந்துக்கள் தடுத்திருக்கிறார்கள். அதை மீறி யாரோ ஒருவர் குடிசை போட்டார். அதனால் இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டது. மாவட்ட கலெக்டர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எல்லப்பன் அவர்களையும் அழைத்துச் சென்று அங்கு விசாரித்தார்கள். அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தம் இல்லை, அரசாங்க நிலந்தான் என்று தெரிய வந்தது. டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. இது தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

### பயிர்க் காப்புறுதித் திட்டம்.

*6 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயிர் இன்ஸ்யூரன்ஸ் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்திய அரசால் மாநில அரசுகளுக்குச் சுற்றி அனுப்பப்பட்ட பயிர்க் காப்புறுதி குறித்த வரைவு மாதிரி மசோதாவும் மாதிரித் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. என். கிட்டப்பா :** அடிக்கடி வெள்ளச் சேதத்தால் பயிர்கள் நாசமாகின்றன. விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை. அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைக் கண்ணுற்ற நமது அரசாங்கம இனிமேலாவது பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை விரைவில் செயல்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப் பட்ட ஒரு திட்டம் தேவையென்று நினைத்துத்தான் மத்திய அரசாங்கம் ஒரு வரைவுத் திட்டத்தை மாநிலங்களுக்கு அனுப்பியிருக்கிறது. ஒவ்வொரு மாநில அரசும் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது அதற்கு முன்னோடியாக கோவைப் பகுதியில் வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் முன்னோடித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருந்தார். 38,591 ரூபாய் செலவில் ஆய்வுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. கோவையில் இருந்து உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கேயம், கோபி பகுதிகளில் சோளம், கம்பு பயிர்களை இந்தத் திட்டத்திற்காக எடுத்துக்கொண்டிருக்கிறது. இதில் முடிவு தெரிந்த பிறகுதான் எந்தவகையில் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிசீலித்து அதற்குப் பிறகு நமது ஒப்புதலை மத்திய அரசிற்குத் தெரியப்படுத்த முடியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த க்ராப் இன்ஷூரன்ஸ் என்பது பயிர் அழிவதற்கு மட்டுமல்ல, ஒரு பயிரின் விலை குறையும்போது அதற்கும், அதன் விலை குறையும்போதும் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு நஷ்டயீடு கொடுப்பதற்கும் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அழிவு ஏற்படும்போது அப்போது அந்த விவசாயிகளுக்கு எந்த வகையில் உதவி செய்வது என்ற வகையில் அவர்களுக்கு துணையாக இருப்பதற்கு இந்த காப்புறுதித் திட்டத்தை பரிசீலனை செய்கிறோமே தவிர விலையைப்பற்றியோ அல்லது உதவி பற்றியோ வேறு எந்த வகையிலும் இதில் குறிப்புகள் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இல்லை என்பதினால்தான் சர்க்கார் இதைப்பற்றி ஆலோசனை சொல்லுமா என்று கேட்கிறேன். கட்டுப்படியான விலை கிடைக்காமல் இருக்கும்போது அதையும் சேர்த்து செய்வதற்கு சர்க்கார் ஆலோசனை கூறுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்போது விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் கூறுவதாகத் தெரியவில்லை. இன்று சர்க்காரே நல்ல விலைக்கு விவசாயிகளிடம்



இருந்து நெல்லை கொள்முதல் செய்வதன் காரணமாக விலைக்குறைவு என்ற எண்ணமே இப்போது ஏற்படவில்லை, ஆகவே அதைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கத் தேவையில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் கேட்பது, விலை ஏறுவது அல்லது இறங்குவது என்பதல்ல. அப்படி இறங்கினால் இதையும் பற்றி சர்க்கார் ஆலோசனை கூறுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை குறைய விடமாட்டோம். அப்படி ஒரு கஷ்டம் விவசாயிகளுக்கு வருவதை சர்க்கார் பொறுக்காது. அதை சர்க்கார் நிச்சயம் பார்த்துக்கொள்ளும்.

**திரு. கே. என். குமாரசாமி :** பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட சில பயிர்களை மட்டுமே எடுத்துக் கொண்டு அரசாங்கம் பரிசீலனை செய்வது என்பதால் அந்தப் பயிர்களுக்கு மட்டும் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் பயனை அளிப்பதன்மூலம் மற்ற விவசாயிகளை அது பாதிக்காதா ? பருத்தி, சோளம், கம்பு போன்ற குறிப்பிட்ட பயிர்களை மட்டும் எடுக்கும்போது புன்செய் என்றால் அப்படி ஒரு சில பயிர்களை மட்டும் எடுப்பதை விட மற்றப் பயிர்களைப் பற்றியும் பரிசீலனை செய்து அவற்றையும் இதன் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தோட்டம், மலைப் பகுதித் தோட்டப் பயிர்கள் இவைகளைத் தவிர வேறு எல்லாப் பயிர்களும் இத்திட்டத்தில் அடங்குகின்றன. இன்று முன்னோடித் திட்டமாக கோவைப் பகுதியில் கம்பு, சோளம் போன்ற புன்செய் பயிர்களுக்கும் திட்டப் பணிப் பகுதிகள், மற்றும் திட்டப் பணிப் பகுதிகளல்லா பிற பகுதிகளின் கீழுள்ள நெற்பயிர்கள் குறித்தும் ஒரு பைலட் ஸ்கீமாக நடத்தி வருகிறோம். பரீட்சார்த்தமாக நடத்தப்படுகிற இதிலிருந்து எடுக்கப்படுகிற முடிவுகளை வைத்துக்கொண்டு மேலும் என்ன செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

### *Strike by Beedi workers in Madras*

* 7 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether the Beedi workers at Madras City went on a strike about the 25th June 1970 ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் தொழிற்சாலைத் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 4—7—1970 அன்று இதற்கு உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்பாட்டின்படி சுமார் 10,000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட வேலைநிறுத்தம் நின்று 5–7–1970 முதல் அவர்கள் வேலைக்குத் திரும்பினர்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தப் பீடித் தொழிலாளர்கள் என்ன காரணங்களுக்காக வேலைநிறுத்தம் செய்தார்கள் ? என்ன கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்திருந்தார்கள் ? அவைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகள் என்னென்ன என்பதைப் பற்றிய விவரங்களை அறிவிக்க முடியுமா ? பீடித் தொழிலாளர்கள் பாது காப்புச் சட்டம் எப்போது அமல் நடத்தப்படும் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஆறு கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தார்கள். அந்த ஆறு கோரிக்கைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிறைவேற் றப்பட்டிருப்பவை, ஒன்று, பீடி சுற்றுபவர்களுக்கு நூல் இலவச மாகக் கொடுப்பதற்கு, அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 1947-ம் ஆண்டு தொழிற்சாலைகள் தகராறு சட்டத்தின் 12 (3) பிரி வின் கீழ் 18—5—1969 அன்று செய்து கொண்ட உடன்பாட்டுக்கு ஏற்றவாறு ஊதியம் அளிக்க பீடித் தயாரிப்பாளர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்ற உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பீடி சுற்று வதற்குத் தேவையான பீடி இலைகளை கணிசமான அளவிற்கு வழங்குவதற்கு தயாரிப்பாளர்களிடம் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. பீடி சுற்றுபவர்களுக்கு வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை அளிப்பது குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில சிக்கல்களை பரிசீலனை செய்ய தனியே எடுத்துக்கொள்வது என்ற உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** நீண்ட காலப் போராட்டத் திற்குப் பிறகு முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை மீறி, சர்க்கார் எழுத்து மூலம் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதியை, லீவ் வசதி, போனஸ் வசதி, வேலையில்லாத நாட்களுக்கு நஷ்டயீடு கொடுப்பது போன்ற பிரச்சனைகள் குறித்து கெஸெட்டில் நோட்டிபிகேஷன் விடுக்கிறோம் அல்லது அட்ஜுடிகேஷனுக்கு விடுகிறோம் என்று கொடுத்திருக்கக் கூடிய வாக்குறுதிகள் இதுவரையில் நடைமுறைக்கு வராத காரணத்தினால் மேலும் இப்போது அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு அதிருப்திகரமான, குழப்பமான நிலைமை ஏற்பட்டிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இதுவிஷயமாக அந்த உடன்பாட்டின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவற்றை அமுல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் அவர் கள் தெரிவித்துள்ள விவரங்கள் இப்போதுதான் அரசின் கவனத் திற்கு வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசிலனை செய்து கனம் அங்கத்தினர் அவர்கள் கூறும்படியான குறைகள் இருக்குமாயின் அவற்றைப் போக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. மா. பா. சாரதி :** வட ஆர்க்காடு மாவட்டம் பீடித் தொழி லாளர்கள் சங்கத்திலிருந்து தேசிய விடுமுறை நாட்களுக்கு கூலி யுடன் விடுமுறை விடவேண்டுமென்றும், முக்கியமான பண்டிகை களுக்கு கூலியுடன் விடுமுறை விடவேண்டும் என்றுமுள்ள கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதையும் சேர்த்து அரசாங்கம் எப்போது கெஸட்டில் வெளியிடுவதாக இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசிலனை செய்யப்பட்டு நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. கே. விநயகம் :** இந்தப் பீடித் தொழிலாளர்கள் ஆக்ட் நிறைவேற்றப்பட்டு சட்டப் புத்தகத்தில் வந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. அப்படி அது சட்டமாக்கப்பட்ட பிறகும் அதை அமல் படுத்தாமல் இருப்பது விந்தையிலும் விந்தை. அதை நிறைவேற்று வதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன ? அப்படி அதை நிறை வேற்றுவதற்கு இல்லை என்றால், அந்த ஆக்ட் அமுலுக்கு வரக் கூடாது என்றால், ஒரு மசோதாவை திரும்பவும் கொண்டு வந்து அந்த ஆக்டை கான்ஸல் செய்துவிட்டால் இதுபற்றிய கேள்விக்கே இடம் இல்லாமல் போகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. கே. விநயகம் :** அதை நிறைவேற்றுவதில் அரசாங்கத் திற்கு என்ன சிக்கல்கள் இருக்கின்றன ? அதை நிறைவேற்றுவதற் இல்லை என்றால், அதை நிறைவேற்றாமல் இருப்பதற்காகத் தனி ஒரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து, பத்து ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். அதிலிருந்து அதிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பது தெரிகிறது. அதோடு உயர்நீதி மன்றத்தில் இருப்பதன் காரணமாக அதுபற்றி எந்தவிதமான ஒரு முடிவு எடுப்பதாயிருந் தாலும், அவர்கள் தீர்ப்புக்கு ஏற்றபடி அது குறித்துப் பொறுத் திருந்து பார்த்துப் பிறகு பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE :** Sir, with regard to the dispute between the employers and the beedi workers, may I know whether it went to a Tribunal and if so, what was the award given by the Tribunal, whether any increase in wages for the workers who prepare 1,000 beedies has been recommended by it and whether that has been accepted by the 'Muthalalees'? Also may I know whether it is not a fact that the problem has to be analysed on an All India basis and whether this Government have got in touch with other State Governments so that there may be uni- form tariff throughout the country and we are not forced to imple- ment it in our State alone ? What is the exact position and will Government clarify the whole thing?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த பீடித் தொழிலாளர்கள் சட்டத்தைப் பொறுத்தளவிற்கு தமிழ் நாட்டில் ஏற்கனவே ஒரு சட்டம் இருந்தது. அதை, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒரு முயற்சி எடுத்தார்கள். நம் தென் மாநிலங்கள் எல்லாம் கூடிப் பேசினோம். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் சட்டம் போட்டுவிட்டோம். திரு. விநாயகம் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனால் அதை நிறைவேற்றும்போது நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள். இதிலுள்ள கஷ்டம், பார்டர் ஏரியாக்களில்—இந்தப் பக்கத்தில் கர்நாடக மாநிலம் இருக்கிறது, அந்தப் பக்கத்தில் ஆந்திர மாநிலம் இருக்கிறது—தொழில் புரியும் நம் தொழில் அதிபர்கள் அவர்களுக்குள்ள கஷ்டங்களைச் சொல்கிறார்கள். இந்த மாநிலங்கள் இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். மத்திய அரசை வற்புறுத்தி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும். அந்தச் சட்டம் கூட நம் தமிழ்நாடு சட்டத்தை ஒத்திருப்பதால் அப்படி அதை ஒரே மாதிரியான சட்டமாக அமல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். மற்ற மாநில அமைச்சர்களைச் சந்திக்கும்போது கூட அதுபற்றி வற்புறுத்துகிறோம், எப்படியாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று.

கூலிப் பிரச்சினைதான் வேறுபாடாக இருக்கிறது. பக்கத்திலுள்ள சிற்றூரில் வேறுவிதமாக இருந்தால் வேலூரில் உள்ள தொழில் அதிபர்கள் அங்கு செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். சில சமயங்களில் இங்குள்ள அதிபர்கள் அங்கேயும் வைத்திருக்கிறார்கள். இங்கே தொழிலாளர்களைப் பட்டினி போட்டுவிட்டு அங்கே தொழில் செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆக, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் அச்சட்டத்தை அமல் நடத்த வேண்டாம் என்ற எண்ணமோ அல்லது தொழிலாளர்களுக்குப் பாதகம் செய்யவேண்டும் என்ற எண்ணமோ—திரு. விநயகம் அவர்களுக்கு இருந்தாலும்—எங்களுக்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru K. VINAYAKAM : It is an insinuation against me. He should withdraw that word.

*Supply of boiled rice in Chingleput district*

*8 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the people of Kanagam, Tharamani and other neighbouring villages in Chingleput district are put to a lot of inconvenience due to non-supply of boiled rice ; and

(*b*) if so, the reasons thereof and the action taken thereon?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 18-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி முடிய கானகம், தரமணி மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் புழுங்கல் அரிசி வினியோகிக்கப்படவில்லை என்றாலும், அங்கிருந்த குடும்பக் கார்டு கடைகளுக்குப் பச்சரிசி வழங்கப்பட்டது. அதனால் புழுங்கல் அரிசி வழங்காததால் ஏற்பட்ட கஷ்டம் குறைக்கப்பட்டது.

(இ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புழுங்கல் அரிசி இருப்பு போதுமானதாக இல்லை. செங்கை மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் குறுவை நெல்லிலிருந்து புழுங்கலரிசி தயாரிக்கவும், சார்புப் பகுதிகளில் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்தார்.

Dr. H. V. HANDE : Is it not a fact that in these areas, boiled rice which has become spoiled due to wrong method of storage, was supplied? If so, will this Government tell us what is the quantity of boiled rice that was spoiled during one year because of such storage?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்தப் பகுதிகளில் நாம் ஏதோ கெட்டுவிட்ட அரிசியைத் தந்து விட்டதாக சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுத்ததாகத் தகவல் இல்லை. எவ்வளவு அரிசி கெட்டு விட்டது என்று கேட்கிறார்கள். அரிசி கெடுகிற தருவாயில் இருந்ததை எல்லாம் ஏலம் போட்டு விற்றாகி விட்டது. கையில் கெட்டு விட்ட அரிசி எதுவும் இல்லை. மொத்தம் எவ்வளவு அரிசி கெட்டு விடும் தருவாயில் இருந்தது, எவ்வளவு ஏலம் போட்டோம் என்ற விவரம் கைவசம் இல்லை. கெட்டு விட்ட அரிசியை எங்கும் போடவில்லை. கெடுகிற தருவாயில் இருந்ததை எல்லாம் ஏலம் போட்டு விற்று விட்டோம். மு.ப. 9-30

*Chingleput Municipality*

*9. *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(*a*) whether the Chingleput Municipal Council has requested the Government in 1970 to upgrade it; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு நகராட்சித் தலைவர் அந்நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக மறுவகைப்பாடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை நகராட்சி மன்றத்திற்கு அளித்தார். 31—3—1970 நாளிட்ட தனது 496-ஆம் எண் தீர்மானத்தில் அந்நகராட்சி மன்றம் இக்கருத்துரையை ஏற்று அது குறித்து அரசுக்கு எழுதுவதெனவும், தீர்மானத்தின் படிகளை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவதெனவும் அது தீர்மானித்தது. நகராட்சியின் நிதிநிலை குறித்து விவரங்களை

[1970 நவம்பர் 26

அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்கப்பட்டுள்ளார். அந்த விவரங்கள் கிடைத்தவுடன் இச்செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, தமிழகத்திலே நகராட்சிகளாக உயர்த்தப்படவேண்டிய அளவிற்குப் பல பேரூராட்சிகள் இருக்கின்றன. அவற்றை உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** காலம் வரும்போது உயர்த்தப்படும். நகராட்சிகளை எல்லாம் உயர்த்துவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

### விசைத்தறிகள்

* 10 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசைத்தறி வாங்க நெசவாளர்களுக்குத் தற்போது என்ன என்ன உதவிகள் எந்த நிறுவனங்கள் மூலமாகத் தரப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டம் மூலமாகவும், வாணிக வங்கிகளின் மூலமாகவும், விசைத்தறிகளை வாங்க, தனிப்பட்ட நெசவாளர்களுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு விசைத்தறிகள் வாங்குவதற்கு அரசு கடனுதவி செய்கின்றது.

### கைத்தறி நெசவாளர்கள்

* 11 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி புகுத்தப்படுவதால் வேலை இழக்கும் கைத்தறித் தொழிலாளர்கள் நிவாரணத்திற்கெனத் திட்டம் ஏதும் வகுக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா ?

(இ) நெசவு ஆலைகள் மற்றும் நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெசவாளர் குடும்பத்தினருக்கு முதற் சலுகை காட்டி வேலையளிக்க உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம். விசைத்தறிகள் புகுத்தப்படுவதால் துயருறும் தொழிலாளர்களின் துயர் தணிப்புக்காகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) கைத்தறித் துணிகளில் பலவகைகளை உருவாக்குவதில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்களை அமைத்தல் ;



1970 நவம்பர் 26]

(2) அரிசனங்களுக்கு அளிக்கப்படுவது போல நெசவாளர்கள் அவர்களது தொழில்களைப் பெருக்க வட்டியில்லாக் கடன்களை அளித்தல் ;

(3) வேலையிழந்த கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு நூற்பு ஆலை மீண்டும் திறக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் ஆலைகளில் வேலைக்கு அமர்த்துவதில் அவர்களுக்கு முதலிடம் அளித்தல் ; வேலையிழக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை அளிக்குமாறு பெரிய தொழில் நிறுவனங்கள் வேண்டப்படுதல் ;

(4) அரிசனங்களுக்கு அளிக்கப்படுவதுபோல பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் நெசவாளர்களுக்கு அளித்தல்; கிணறு வெட்டவும், பால் பண்ணை நடத்தவும் நெசவாளர்களுக்கு உதவி அளித்தல்;

(5) அரிசனங்களுக்கு அளிக்கப்படுவதுபோல, வேலையிழந்த நெசவாளர்களின் பிள்ளைகளுக்குப் படிப்பு உதவித் தொகை, உணவு வசதி, உறையுள் வசதி போன்ற கல்விச் சலுகைகள் அளித்தல்.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள், வங்கிகளின் மூலமாக உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அப்படி வங்கிகளின் மூலமாக உதவி அளிக்க சொத்து மதிப்பு ஏதாகிலும் கேட்கப்படுகிறதா ? விசைத்தறி வாங்குவதற்கு அரசாங்கமே கைத்தறி இலாகா மூலமாகக் கடன் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வங்கிகள் மூலம், எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்று விவரம் இல்லை. நம்முடைய கைத்தறிச் சங்கங்கள் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் கொடுத்து பண உதவி செய்கிறோம். அதன்படி, வங்கிகள் மூலமும் நம்முடைய அரசாங்கம் " ஸ்டேட் எய்ட் டு இண்டஸ்டிரீஸ் ஆக்ட் "படி கொடுக்கும் கடன்களுக்குத்தான் உரிமை உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இப்போது எத்தனை நெசவாளர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது ? விசைத்தறிகளுக்கு அவர்கள் ஏதாவது பணம் செலுத்த வேண்டுமா ? அல்லது கடன் மூலமாகவே, வேலை இழந்த நெசவாளர்களுக்கு விசைத்தறி தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விசைத்தறிகளுக்குக் கடன் தருகிறோம் என்று சொன்னோம். நெசவாளர்களுக்கு 500 விசைத்தறிகள் புகுத்துவதற்கு ரூ. 8½ லட்சம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கொடுக்க உத்தேசித்துள்ளோம். ஒரு விசைத்தறிக்கு ரூ. 1,700 என்று போட்டு இருக்கிறோம். ரூ. 10 லட்சம் ரூபாயை அரிசனங்களுக்குக் கொடுப்பது போன்று கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், விசைத்தறிகளால் பாதிக்கப்படுகிற நெசவுத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு விதமான சலுகைகள் பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்போது நம்முடைய ராஜ்யத்திலே எவ்வளவு விசைத்தறிகள் அனுமதிக்கப்பட

[1970 நவம்பர் 26

இருக்கின்றன, அதனால் பாதிக்கப்பட இருப்பவர்கள் எவ்வளவு பேர் என்று சர்வே செய்யப்பட்டு இருக்கிறதா ? அப்படி சர்வே செய்யப்பட்டு இருந்தால், விவரம் தேவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1964-ம் ஆண்டிலேயே 12,500 விசைத்தறிகள் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டன. வினியோகிக்கப்படாமல் இருந்த அவற்றை அண்மையில்தான் கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுப்பது என்றும், உண்மையான தறி நெசவாளர்களுக்குத் தான், விசைத்தறி கொடுப்பது என்றும் முடிவு செய்து இருக்கிறோம். அதன்படி கொடுக்கப்பட்டு வருகின்றன. 500 விசைத் தறிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், 500 விசைத்தறிகள் தனியாருக்கும் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப் படையில் வினியோகிப்பதில் எந்தவிதமான பிரச்சனையும் இருக்காது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, விசைத்தறி புகுத்தப் படுவதால் வேலை இழக்கும் ' கைத்தறி நெசவாளர்களுக்குப் பல திட்டங்கள் மூலம் நம்முடைய அரசு உதவி செய்து வருவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பல்வேறு துறைகளில், ஆசிரியர்களுக்கு, இன்ஜினீயர்களுக்கு, வேலை கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் ' டிரெயினிங் ஸ்கீம் ' மூலம் உதவி செய்து வருகிறது. இப்படி வேலை இல்லாதவர்களுக்காக செலவழிக்கப் படும் தொகைக்காக, மத்திய அரசாங்கத்திலிருந்து நம்மு டைய அரசாங்கம் ஏதாவது ஈட்டுத்தொகை கோரி இருக்கிறதா ? அப்படி என்றால் அதனுடைய விவரம் என்ன என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பொதுவான கேள்வி. கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறி விசைத்தறியாளர்களுக்கு என்று ஆண்டுதோறும் ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கி மாவட்டம் தோறும் பயிற்சி நிலையம் ஆரம்பித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் இது போன்ற வேலை களுக்கு உதவி செய்ய வேண்டும். அண்மையில் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதம அமைச்சரைச் சந்தித்தபோது சொன்னார் கள், அவர்களுடைய அரசாங்கமே, மத்திய அரசாங்கமே, வேலை இல்லாதவர்களுக்கு, வேலை வாய்ப்பு அளிக்கப் போதிய முயற்சி எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டது என்று சொல்வதற்கில்லை. பல துறைகளில் வேலை வாய்ப்பு பெருகுவதற்குத் திட்டங்களிலே பணம் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. மத்திய அரசாங்கமும் பணம் தரும் என்று நம்பிக்கை இருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, வேலை இன்றி இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குக் கடனாக, ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதுபோல் கடன் அளிப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கடனாகக் கொடுக்கும் தொகையில் 4-ல் ஒரு பங்கை அரசாங்கம் மான்யமாகக் கொடுக்க முன்வருமா ?



1970 நவம்பர் 26]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கடனாகக் கொடுப்பதே நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வட்டி இல்லாத கடன் தரப்படும் என்று சொன்னார்கள். வட்டி இல்லாத கடன் எந்த அடிப்படையில், என்னென்ன தொழிலுக்கு என்பதைக் கூறமுடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுதான் சொன்னேன், அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஹரிஜனங்களுக்கு எப்படி தொழில்கள் செய்வதற்கு கடன் கொடுக்கப்படுகிறதோ, அதே முறையைக் கடைப்பிடிக்க அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. எந்தெந்த தொழில்களுக்கு என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** விசைத்தறி புகுத்தப்படு வதால் மதுரை, இராமநாதபுரம், சேலம் போன்ற இதர மாவட்டங் களில் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு, நூற்பு ஆலைகள், நெசவு ஆலைகள் ஆரம்பிக்க அரசாங்கத்தினிடம் ஏதேனும் உத்தேசம் உண்டா ? பணம் இல்லாதபோதிலும், மத்திய அரசாங்கத்தி லிருந்து நிதி கோரி அமுல் செய்ய அரசு முன் வருமா ? அது பற்றிய அபிப்பிராயம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நூற்பு ஆலைகள் பற்றிய சிக்கல்கள் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். நூற்பு ஆலைகள் ஆரம்பிப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நெசவு ஆலைகளைப் பொறுத்தவரையில் ஏதோ விசைத்தறி புகுத்துவது என்ற வார்த்தையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம். அவர் களாகவே விரும்பிக் கேட்டால் கொடுக்கலாம். இப்போதுள்ள சூழ்நிலை அப்படி இல்லை. இப்போது 1,000 விசைத்தறிகள் புகுத்துவது என்று எடுத்துக்கொண்டு இருக்கிறோம். 12,500 விசைத்தறிகளுக்கு அனுமதி இருந்தபோதிலும், 1,000தான் இப்போது எடுத்துக்கொண்டு இருக்கிறோம். கொஞ்சம் கொஞ்ச மாகக் கைத்தறித் தொழிலாளர்கள் பாதிக்கப்படாத வகையில் அரசாங்கம் இந்தப் பிரச்னையைக் கவனித்து வருகிறது. திடீரென்று விசைத்தறி கொண்டு வருவதால் கைத்தறி நெசவாளர் கள் பாதிக்கப்படக் கூடாது என்ற கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். அவர்களுக்கு மாற்று வேலை கொடுத்து, வேலை வாய்ப்பு வசதி தந்தால் நிச்சயமாகப் பொருளாதாரத்துறை யில் நெசவாளர்களுக்குப் பாதகம் இல்லாமல் செய்துவிட முடியும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளை நம்முடைய கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வாங்கி நெசவாளர்களுக்குத் தருகிறோம், விசைத்தறிகள் வெளி மாநிலங் களிலிருந்து நம்முடைய கைத்தறி இலாகாவின் மூலம் வாங்கப் பட்டு, அவிநாசி, கோவை பகுதியிலுள்ள விசைத்தறிகளில் தயாரிக்கின்றவர்களுக்கு முதல் இடம் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : பம்பாயிலிருந்து இது போன்று விசைத்தறிகளை வாங்குகின்ற முயற்சி இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள சிறு தொழில் வாரியமே இதைச் செய்து கொடுக்கலாம் என்று ஒரு முயற்சியை இப்பொழுது பரிசீலித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். இந்தக் கஷ்டம் இல்லாமல் போய்விடும்.

கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலை.

* 12 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில், மாப்படுகை பகுதியிலுள்ள கல்லணை-காவிரிப்பூம்பட்டினம் சாலையை அரசின் நெடுஞ்சாலைப் பிரிவு எப்போது மேற்கொண்டது ?

(இ) மேற்கண்ட சாலை வேலை எப்போது முடிவுறும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) மாயூரம் நகராட்சிப் பகுதிக்குள் அமைந்துள்ள கல்லணை-காவிரிப்பூம் பட்டினச் சாலையில் 61/2 மைல் முதல் 62/5 மைல் வரையுள்ள சாலையையும் அத்துடன் 590 அடி நீளமுள்ள சாலையையும் அரசு 1968–69-ல் மேற்கொண்டது.

(இ) மேற்குறிப்பிட்ட சாலைக்குச் சிவப்புச் சரளைக்கல் பரப்பித் தனிப்பட்ட முறையில் செப்பனிடும் பணி ஏற்கெனவே முடிவடைந்துள்ளது.

**திரு. என். கிட்டப்பா** : தலைவர் அவர்களே, மேற்கண்ட சாலைக்கு அரசு ஒதுக்கியுள்ள தொகையை அறிவிக்க இயலுமா ? அது போலவே, கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலையில் இன்னும் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படாத பகுதிகள் விரைவில் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட ஆவன செய்ய அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இப்பொழுது மேற்படி சாலைக்கு ரூ. 24,500 செலவிடப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள சாலைகள் கொள்கை அடிப்படையில் ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்பாரை கிராமத்துக்கு வடிகால் திட்டம்.

* 13 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா தென்பரை கிராமத்திற்கு வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதா ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?



(உ) அந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெறும் நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ) ஆம்.

(இ) மதிப்பீட்டின் தொகை ரூபாய் 5.11 லட்சம்.

(உ) இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் 3,024.74 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : ஐயா, நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கையை விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது ? அதற்கு எப்பொழுது அரசாங்கம் அனுமதி வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது என்பதற்கு விவரம் இல்லை. 30—9—1970-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1979-ல் இந்தத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கொண்டு வேலைகள் ஆரம்பிக்கப் படும்.

*Articulated buses in Madras.*

* 14 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether articulated buses are operated in Madras City; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) இணைக்கப்பட்ட இரட்டை மாடிப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை சென்னை மாநகரில் ஓட விட்டுள்ளது.

(இ) இப் பேருந்து 100 இருக்கைகளைக் கொண்டுள்ளது. இது பாரிமுனை-கிண்டி தொழிற்பேட்டை வழித்தடத்தில் ஓடு கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இணைப்புப் பேருந்துகளின் மூலம் சர்க்காருக்கு லாபம் கிடைக்குமா ? அப்படி கிடைக்கும் என்றால், இதை இன்னும் விஸ்தரிப்பு செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ? இந்த இணைப்புப் பேருந்துகளின் மூலம் இப்பொழுது ஏற்பட்டுள்ள சௌகரியங்கள் என்ன, நன்மைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : சர்க்காருக்கு ஆதாயம் ஏற்படவேண்டுமென்றுதான் விரும்புகிறோம். நாள் ஒன்றுக்கு ரூ. 250 முதல் ரூ. 400 வரையில் இந்த வழித்தடத்தில் வசூல் ஆகிறது. இந்த வழித் தடத்தை ஓட்டுகின்ற காரணத்தினால் ஜன நெரிசல் தவிர்க்கப்படுகிறது.

[1970 நவம்பர் 26

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, முன்னிருந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், முதல் அமைச்சர் அவர்கள் அனுமதித்தால் ரூ. 2 கோடி லாபம் சம்பாதிக்க முடியும் என்று கூறினார்கள். அதைத் தொடர்ந்து இந்த இணைப்பு பஸ்களை விடுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதல் அமைச்சர் அனுமதித்தால் என்று சொன்னால், அனுமதிக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியென்றால், அவர் சொன்ன ஆலோசனை மிகவும் தவறான ஆலோசனை தானா ? அதற்கு என்ன நடவடிக்கையை முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** யோசனைகளுக்கெல்லாம் நடவடிக்கை எடுப்பது முறையல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உங்களுடைய மந்திரிசபைக்குத் தான் பெருமையும் சிறுமையும். உங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள யோசனையின் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டீர்களா ?

(பதில் இல்லை).

DR. H. V. HANDE : What are the steps taken by this Government to mitigate the hardships experienced by the countless number of persons who are using the State Transport buses day in and day out? Have any concrete steps been taken by this Government to see that the deteriorating service is improved and to solve problems like the name boards not being visible in the night because there is no proper lighting, absence of proper protection against rain water, breakdown and the deteriorating nature of the service? The Hon. Minister promised to take some steps some time ago, but nothing has been done. May I know what concrete steps have been taken by the Government to solve the problems?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு சில பதில்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அரசாங்கப் போக்குவரத்தை நான்கு பகுதிகளாக ரீஜனலைசேஷன் செய்திருக்கிறோம். அதற்குப் பிறகு 'ஸ்ட்ரெங்தெனிங் ஆப் தி வொர்க்ஷாப் ஃபெஸிலிடிஸ்' செய்திருக்கிறோம். இப்பொழுது அதிகப்படியான பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஜன நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஏற்கனவே ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இப்பொழுது மொத்தமாக சுமார் ரூ. 6 கோடி தேவையாக இருக்கிறது. ரூ. 3 கோடி ரிப்ளேஸ்மென்டு செய்வதற்கும், ரூ. 3½ கோடி புதிய பஸ்கள் வாங்குவதற்கும், மொத்தம் ரூ. 6½ கோடி தேவைப்படுகிறது. இதைப்பற்றி தீர்க்கமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



1970 நவம்பர் 26]

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது ஆட்சிக்கு வந்திருக்கிறவர்கள் இந்தத் துறையிலே என்னென்ன மாறுதல் செய்து பொது மக்களுக்கு எந்த விதமான நன்மைகளைச் செய்து தந்திருக்கிறார்கள்? முன்னமே இருந்ததைவிட பீக் ஹவர் டிராபிக் பற்றி ஏதாவது சரி செய்திருக்கிறார்களா ? அல்லது ஜன நெருக்கடி இருக்கிறதே சாதாரணமாக, அதைச் சரி செய்திருக்கிறார்களா ? அல்லது பிரயாணிகளாக இருப்பவர்கள் ஏதாவது குறள்களைப் படித்து விட்டு, பிறகு ஒழுங்காக நடப்பதற்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி இணைப்புப் பேருந்தைப்பற்றியது. டிரான்ஸ்போர்ட்டைப்பற்றி பொதுவாகக் கேள்வி கேட்கக் கூடாது.

THIRU K. VINAYAKAM : You have allowed a supplementary question and I am pursuing it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இணைப்புப் பேருந்தைப்பற்றிக் கேள்வி கேளுங்கள். டிரான்ஸ்போர்ட்டைப்பற்றி பொதுவாகக் கேள்வி கேட்கக் கூடாது.

**திரு. கே. விநாயகம் :** பெரும்பாலான மக்களுக்கு இந்த விஷயத்தில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்கு, நிலைமையை சீர்திருத்துவதற்கு ஏதாவது கான்க்ரீட் ஸ்டெப்ஸ் எடுத்திருக்கிறார்களா என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கனம் உறுப்பினரின் துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்பு உடையதாக இல்லை என்றாலும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு அதிகமான பஸ்களை விட்டு ஜனநெரிசலைத் தவிர்த்திருக்கிறது. பீக் ஹவர் பிராப்லம் என்பது சென்னைக்கு மாத்திரம் உரிய ப்ராப்லம் அல்ல. எல்லாத் தலைநகரங்களிலும் முக்கியமாக இருக்கிற பிரச்சினையாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. இதைப் பற்றி நமது அரசு சிந்தித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

### *Co-operative Societies*

* 15. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government has any proposal to treat all the paid staff of the Co-operative Societies as Government servants;

(*b*) whether the Government has any proposal to run the Co-operative Societies on profit oriented business like manner and to introduce thrift deposit system in the Co-operative Societies; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) & (உ) கூட்டுறவு சங்கங்களின் நோக்கம் மக்களுக்கு சேவை செய்வது. அதில் ஆதாயம் என்பது ஒரு பக்க விளைவு (பை பிராடக்ட்) ஆகும்.

சிக்கன டிபாசிட் முறை பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்கனவே செயலில் உள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நஷ்டம் ஏற்படுவது இன்னொரு பை பிராடக்ட்.

Some time ago the Hon. Minister assured this House that he was going to completely reorganise and reorient the system and introduce the profit motive so that losses would be prevented. After having given the assurance in this House, has any attempt been made to implement it? What attempts have been made to see that the heavy losses are reduced at least to some extent, after the new Minister, who has got some pragmatic ideas, came to power?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The question was about the objective. The objective of any Co-operative society is public service. I said that the profit which accrued was only a by-product. Arising out of the supplementary question, I may say that action is being taken against all those societies which show deficits or losses continuously for three years.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாக, அவற்றைச் சீரமைப்பு செய்யவேண்டும் என்பதற்காக சந்தானம் குழு என்று ஒரு குழுவை ஏற்படுத்தினார்களே, அந்தக் குழுவின் அறிக்கையை அரசு எப்போது அமுல் நடத்தும்? அந்தக் குழுவின் அறிக்கையில் எவற்றை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, சந்தானம் குழுவின் சிபாரிசுகள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. காரணம், கூட்டுறவுத் துறை சம்பந்தமான காரியங்கள் ஐந்து அமைச்சுகளில் இருக்கின்றன. இந்த ஐந்து அமைச்சுகளும் என்னென்ன பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கின்றன. அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்றவர்களை அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளத் திட்டம் இல்லை என்றாலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்களில் வேறுபாடுகள் இருக்கின்றன. அதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்க முற்படுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, சந்தானம் கமிட்டிகூட, கூட்டுறவுச் சங்கங்களில் வேலைசெய்யும் ஊழியர்களை அரசாங்க அலுவலர்களாகக் கருதவேண்டும் என்று கூறவில்லை. எதற்காக 'பப்ளிக் சர்வென்ட்' என்று சொன்னார்





கள் என்றால், இந்தியன் பீனல் கோட் கீழ் நடவடிக்கை எடுக்க அப்படிக் கருதவேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மற்றபடி சர்க்கார் ஊழியர்களாகக் கருதவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களுடைய சம்பளத்தை சீரமைப்பு செய்வது என்கிற காரியம் அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சார், சந்தானம் கமிட்டியின் அறிக்கையில் உள்ள சிபாரிசுகளை அமுல் படுத்துவது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதே நேரத்தில் ஐந்து அமைச்சுக்களில் இலாகாக்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். இப்படி ஐந்து அமைச்சுக்கள் பொறுப்புள்ளனவாக இருக்கின்றன என்று அந்தக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, சந்தானம் கமிட்டியின் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், ஐந்து தனித் தனி அமைச்சுக்களில் பொறுப்புப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றி, பொதுப்படையாக அமுல் நடத்தப்படும் என்று பல முறைகளில் சொல்லியிருக்கிறேன். அரசியல் சட்டம், அமைச்சர்கள் மாநாட்டுத் தீர்மானங்கள், இவைகளுக்குப் புறம்பானவை, நிர்வாக சௌகரியங்களுக்குப் புறம்பாக உள்ளவை, இப்படிப்பட்ட காரியங்களைத் தவிர, மற்ற சிபாரிசுகளை ஏற்றுக் கொள்ளலாம். கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன என்று சொல்லும்போது, இந்த சிபாரிசுகள் ஐந்து அமைச்சுக்களில் தனித்தனியாக ஆராயப் பட்டுவருகின்றன என்று சொன்னேன்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வலம் வரும் சிறப்பங்காடிகள்.**

*16 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடமாடும் சூப்பர் மார்க்கெட்டுகளை ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திற்கு நடமாடும் சூப்பர் மார்க்கெட்டு வைப்பது இப்பொழுது இல்லையா ? அல்லது எப்பொழுதும் இல்லையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, எப்பொழுதுமே இல்லை. (சிரிப்பு) அதற்குக் காரணம் இருக்கிறது. சூபர் மார்க்கெட்டு என்பது எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்தில் வைத்து விற்கும் சிறப்பு அங்காடி. அதற்கு தரைப்பரப்பு, கிட்டத்தட்ட 5,000 சதுர அடி வேண்டும். அதை நடமாட வைக்க முடியாது. எப்பொழுதுமே இல்லை.

## *Suppression of Immoral Traffic Act*

* 17 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the **Minister** for Religious Endowments be pleased to state the number **and** particulars of house brothel cases registered under the Suppression of Immoral Traffic Act in Madras City which were not subsequently prosecuted in Court of Law or having been prosecuted in Court of Law but later withdrawn from Courts in 1967, 1968 and upto November 1969?

***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :*** *மன்றப் பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.*

* 18 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the **Minister** for Religious Endowments be pleased to state—

(*a*) whether there is any proposal pending now before the Government of Tamil Nadu to appoint a special officer **to advise** the Madras City Police regarding investigation of crimes registered under the Suppression of Immoral Traffic Act; and

(*b*) if so, the particulars thereof?

***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :*** *(அ) இல்லை.*

*(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, efficient Police Inspectors like Mr. Dhanaraj and Mr. Rajaram Nair who have booked here a large number of cases under this Act, have been transferred and the present Assistant Commissioner who has withdrawn cases and who has not even filed charge-sheets with regard to booked cases has been kept in this City for three years. May I know from the Hon. Minister the reason for the same?

***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :*** *தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த அதிகாரி, ஹவுஸ் ப்ராதல் கேஸ்கள் மட்டும், செக்ஷன் 3 (1)-ன் படி 51 கேஸ்களை புக் பண்ணியிருக்கிறார். இன்னும் செக்ஷன் 7-ன் படி 71 கேஸ்களும், இன்னும் லப கேஸ்களும் புக் பண்ணியிருக்கிறார். மொத்தம் 706 கேஸ்கள் பிடித்திருக்கிறார். இவற்றில் கன்விக்ஷன் ஆனவை 468 கேசுகள், பெண்டிங் ட்ரயல் 70, அக்விடல் ஆனவை 128 கேசுகள், வித்ட்ரான் 38, அட்மானிஷன் செய்யப்பட்டவை 2.*

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether the Assistant Commissioner has not even been able to secure his own decoy witnesses and on that score more cases have ended in discharge, proceedings of some cases have been stopped, and charge-sheets in respect of some cases have not even been filed? May I know from the Hon. Minister whether the retention of such an officer who has not been able to secure his own witnesses, will advance the cause of Police administration in regard to the implementation of this Act?

* 139–141ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



***மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :*** *கேஸ்கள் வித்ட்ரா செய்ததற்குக் காரணம், சாட்சிகள் சரியானபடி கோர்ட்டில் வந்து சொல்வது கிடையாது. பல பேர் முதலில் சொல்லிவிட்டு, மறுபடியும் பிடிக்கமுடியாமல் தலை மறைவாகி விடுகிறார்கள். வித்ட்ரா பண்ணவேண்டும் என்று செய்யவில்லை. ஆகவே, சரியான முறையில்தான் பணியாற்றியிருக்கிறார்கள்.*

DR. H. V. HANDE : Sir, will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that because the hon. Member (Thiru Martin) has been raising this particular subject frequently, his family has been put to a lot of violence and if so, whether the Hon. Chief Minister will give an assurance to the Hon. Members that for whatever happens in this House, protection would be given to them outside this House?

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *இப்படிப்பட்ட விவகாரங்களில் விபசாரிகள் ஈடுபடுவது மாத்திரமல்ல, குடும்பப் பெண்களும் ஈடுபடாமல் இருப்பது நல்லது.*

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** *தலைவர் அவர்களே, குடும்பப் பெண்கள் ஈடுபடுகிறார்கள் என்று முதல் அமைச்சர் சொல்வது தமிழ்ப் பண்பாட்டிற்கு அவ்வளவு நல்லதல்ல . . .*

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *டாக்டர் ஹாண்டே அவர்கள் வெகு அக்கறையாக, கேள்விக்குப் புறம்பாகக் கேட்ட துணைக் கேள்விக்கு, இப்படிப்பட்ட விவகாரங்களில் விபசாரிகள் ஈடுபடும் போது, குடும்பப் பெண்களும் ஈடுபடுவது நல்லதல்ல என்று குறிப்பிட்டேன்.*

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation. Sir, may I know whether protection would be given to Hon. Members from physical violence for acts committed in this House. Suppose we argue a point in this House and it may be distasteful to some persons outside. So, will the Government give an assurance that for whatever hon. Members discuss here, protection would be given to them outside this House. That is the only point. I would be very happy if the Hon. Chief Minister clarifies that point instead of side-tracking it.

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :*** *சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு எப்பொழுதும் தரப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பொதுவாக நாட்டில் இருக்கின்ற பிரஜைகள் எல்லோருக்குமே பாதுகாப்புத் தரப்படும். டாக்டர் ஹாண்டே சொன்னதற்கு, எந்த வழக்கைப் பற்றியும் இல்லை, பொதுவாக இப்படிப்பட்ட விவகாரங்களில் அவர்கள் தரத்திற்கு மற்றவர்களும் இறங்கக் கூடாது என்றுதான் சொன்னேன்.*

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** *குடும்பப் பெண்கள் என்று சொல்லும்போது, எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமோ? இன்றைக்கு ஒரு குடும்பத்திற்கு ஏற்பட்டது, மற்றவர்களுக்கும் ஏற்படாது என்று என்ன நிச்சயம்?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்தக் குடும்பம் என்று சொன்னால், விவரமாகச் சொல்லலாம். (திரு. கே. வினாயகம் தன் இருக்கையில் எழுந்தார்) (பலத்த கைதட்டல்).

**திரு. கே. வினாயகம் :** ஆச்சா ?

**குரல்கள் :** நோ, நோ.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள் . . .

THIRU K. VINAYAKAM : Sir, why should they disturb me? I am in possession of this House now. Please ask them to control their passions and they cannot be creating trouble like this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வி கேட்க உரிமை இருக்கிறது. அதேபோல, அவர்களும் சொல்லிய கருத்துக்களை ஆதரிக்கும் வகையில் கைதட்டி ஆரவாரம் செய்யலாம். ஆனால், ஆச்சா என்று சொல்வது . . . .

**திரு. கே. வினாயகம் :** எனக்கும் அந்த உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை; அந்த உரிமை இல்லை.

**திரு. கே. வினாயகம் :** தலைவர் அவர்களே, சட்டசபை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது என்று இங்கே பேசப்படுகிறது. சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்புத் தருவேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களுக்கு மாத்திரமல்ல, அவரது குடும்பத்தாருக்கும் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படிப் பாதுகாப்பு அளித்திருந்தால், இப்படிப்பட்ட அசம்பாவிதமான சம்பவங்கள் நடந்திருக்காது. ஆகவே, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கையாகும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சட்டசபை அங்கத்தினர்களின் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்பட்டு, அவர்களுக்குப் போலீசார் பாதுகாப்பு உதவி தர மறுத்ததாக எந்தச் செய்தியும் கிடையாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, ஏதோ கொஞ்ச நாட்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுத்துவிட்டு, பிறகு பாதுகாப்பை எடுத்துவிட்டால், மீண்டும் அந்தமாதிரியான அசம்பாவிதங்கள் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அப்படி குறிப்பிட்ட விவகாரம் ஏதாவது ஒன்றைச் சொல்லுமாறு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, திரு. மார்டின் வீட்டிற்குச் சில நாட்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னால் போலீஸ் பாதுகாப்பு தராததால்தான் இந்தமாதிரியான அசம்பாவிதம் நடந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. மார்டின் அவர்களுடைய இல்லத்திற்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுதாவது ஒப்புக்கொண்டதற்காக நன்றி. போலீஸ் பாதுகாப்பு என்பது ஆயுள்காலம் முழுவதற்கும் கொடுப்பது என்பது இல்லை. சில அசம்பாவிதமான காரியங்கள் நடக்கும்போது போலீசார் பாதுகாப்பு தருவார்கள். பின்னர் நிலைமையை அனுசரித்து, போலீஸ் பாதுகாப்பு தேவையில்லையென்று கருதி, போலீசார் அங்கிருந்து அகன்று விட்டிருக்கக்கூடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு மட்டும் போலீஸ் பாதுகாப்பு கொடுத்துவிட்டு பின்னர் பாதுகாப்பு தேவையில்லை என்று கருதுவது சரியல்ல. சர்க்கார் முதலிலேயே தீவிரமாக நடவடிக்கை எடுத்திருந்தால், பின்னால் இந்தமாதிரியான சம்பவங்கள் நடைபெற்றிருக்காது. சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்கவில்லையோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முற்றிலும் அறிந்துகொண்டுதான் பேசுகிறாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. இந்த விவகாரத்தைப் பற்றி பத்திரிகைகளில் எத்தனையோ செய்திகள் வந்திருக்கின்றன. திரு. மார்டின் வீட்டில் இருக்கிற நாய் எல்லோரையும் கடித்துவிடுகிறது என்ற ஒரு புகாரும் போலீஸுக்கு வந்திருக்கிறது. திரு. மார்டின் வீட்டில் உள்ளவர்களுக்கும், எதிர் வீட்டில் இருப்பவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு இது. முதலில் திரு. மார்டின் வீட்டிற்குப் போலீஸ் பாதுகாப்பு தரப்பட்டது. பின்னர் நிலைமையை அனுசரித்து பாதுகாப்பு எடுக்கப்பட்டது. போலீஸ் பாதுகாப்பு என்றால் எப்பொழுதும், பொழுதுவரைக்கும் போலீஸ்காரர் காத்துக்கொண்டிருப்பது என்பதல்ல. அப்படிச் செய்வது முடியாத காரியம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சியிலே இப்படியெல்லாம் நடைபெறுவதற்குப் போலீஸ் போய் தூண்டி விட்டிருக்கிறது என்று நாட்டு மக்கள் சந்தேகப்படுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள் எல்லார் மீதும் சந்தேகப்படலாம். 1965-ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது எங்கள் வீடுகளில் நாங்கள் கறுப்புக்கொடிகளை ஏற்ற முற்பட்டபொழுது சுமார் 100, 200 குண்டர்கள் எங்களுடைய வீடுகளைச் சூழ்ந்து

கொண்டு வீட்டில் உள்ள தாய்மார்களையும், குழந்தைகளையும், எங்களையும் தாக்கிய காட்சியை கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதை நாங்கள் மறந்துவிடவில்லை. கனம் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த நேரத்தில்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது. அந்தச் சம்பவத்திற்காகத்தான் இப்பொழுது இப்படி நடக்கிறது என்று நீங்கள் நினைக்கத் தேவையில்லை. பழிக்குப் பழி வாங்கும் முயற்சியில் நாங்கள் நடந்துகொள்ளவில்லை. போலீசார் இரண்டு தரப்பு வழக்குகளையும் விசாரித்து, உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, முன்னால் அப்படி நடந்தது என்பதற்காகத்தான் இப்பொழுது இப்படி நடைபெறுகிறதா? பழிக்குப் பழி என்றுதான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன விஷயங்களில் இன்னின்னவாறு நடந்துகொள்வோம் என்று எடுத்துக் காட்டுவதைப்போல உங்களுடைய நடவடிக்கைகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது அப்படி நடந்தது என்பதை எடுத்துக்காட்டினார். அப்பொழுது நடந்த சம்பவத்திற்குப் பதிலாகத்தான் இப்பொழுது இம்மாதிரியான காரியங்கள் நடக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்பொழுது அப்படி நடந்ததற்காக இப்பொழுது அப்படி நடக்கவில்லை. பத்திரிகைகளில் செய்தி வருவதற்காகத்தான் 'அப்பொழுது அப்படி நடந்தது என்பதற்காக இப்பொழுது இப்படி நடைபெறுகிறதா?' என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்கள். இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அம்மாதிரியான தவறுகள் எங்கள் ஆட்சியில் நடக்கவிட மாட்டோம் என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

காவல் துறையினர் இரண்டு தரப்பினர் வழக்குகளையும் விசாரித்து நியாயம் அளிப்பார்கள். தேவையானவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சந்தேகப்படக் கூடாது. சந்தேகம் என்பது ஒரு பெரிய நோய்.

### யூகலிப்டஸ் எண்ணெய் உற்பத்தி.

*19 வினா—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் யூகலிப்டஸ் எண்ணெய்த் தயாரிப்புத் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் தயாரிக்கப்படும் யூகலிப்டஸ் எண்ணெயின் மொத்த அளவு என்ன?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஒன்று.

(இ) சுமார் 3,000 கிலோ யூகலிப்டஸ் எண்ணெய் ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகிறது.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, யூகலிப்டஸ் எண்ணெய் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறதா? இதன்விளைவாக அரசுக்கு என்ன லாபம் கிடைக்கிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இந்த யூகலிப்டஸ் அடுத்த மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 250 இடங்களில் குடிசைத் தொழிலாக, கற்பூர இலையை ஏலத்தில் எடுத்துக் கொண்டு வந்து எண்ணெய் தயார் செய்கிறார்கள். தனியார் துறைகளிலும் அரசாங்கத் துறையிலும் இதைச் செய்கிறார்கள். எவ்வளவு என்ற கணக்குவிவரம் என்னிடம் தற்போது இல்லை.

**திரு. சோ. கருணைநாதன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நீலகிரித் தைலம் பெருவாரியான குடும்பங்களில் வாங்குகிறார்கள். அப்படியே நகர்ப்புற மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் வசதியாகக் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, இப்போது போதுமான அளவிற்கு, சுமார் 3 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் அரசாங்கத் தொழிற்சாலை மூலமாகவும், 85 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் குடிசைத் தொழில் மூலமாகவும் சேகரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் சுலபமாக எங்கும் கிடைக்கிறது.

### கல்பாக்கம் அணு மின் நிலையம்.

*20 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலைகள் எப்போது பூர்த்தி அடையும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கால்பாக்கம் அணு மின் நிலையத்தின் முதற் பிரிவு (200 மெ.வா. உற்பத்தித் திறன்) வேலைகள் 1974–75-ல் முடிவடையும்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, 1974-75-ல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதற்பிரிவு வேலைகள் முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் 200 மெகவாட் மின்சார உற்பத்தித் திறன் வேலைகளை விரைவில் முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1970 நவம்பர் 26

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, துரிதமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். இரண்டாவது அணுமின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கும் தறுவாயில் இருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, இரண்டாவது அணுமின் நிலையம் நமது மாநிலத்தில் எங்கே அமைக்க உத்தேசம்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இரண்டாவது பிரிவும் அங்கேயே அமைக்கப்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) சட்டம், அமைதி காக்கத் தவறியதால், கல் எறியப்பட்டு திரு. மத்தி கவுடருக்கு ஏற்பட்ட விபத்து.

### (ஆ) தேசியத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதன் அவசியம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance namely: the failure of the Government to maintain law and order resulting in the serious injury caused by pelting of stones to Sri Mathi Gowder, President, Coimbatore District Congress Committee, at midnight on 3rd November 1970 at Singanallur while he was travelling in a car from Dharapuram to Coimbatore."

என்று கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"The need to take steps for the safety of our National Leaders keeping in view the stone throwing incident on the car in which Thiru K. Kamaraj, M.P. was travelling in Coimbatore district."

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்.

இது எப்படிப் பேரவையை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை, முதலில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுருக்கமாகக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 நவம்பர் 26]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இது 1970-ம் ஆண்டு நவம்பர் 3-ம் தேதி இரவு நடந்த சம்பவம். வெளிக்குப் பார்த்தால் சாதாரண சம்பவமாகத் தோன்றலாம். இந்தச் சம்பவம் நடந்தபோது, நானும் திரு. காமராஜ் அவர்களும் முதல் காரில் தாராபுரத்திலிருந்து கோயம்புத்தூருக்குப் போய்க்கொண்டிருந்தோம். பின்னால் வந்த காரில் கோயம்புத்தூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் திரு. மத்தி கவுடர் வந்துகொண்டிருந்தார். சிங்காநல்லூருக்கருகில் அவர் சென்ற காரின்மீது கல் வீசி காரின் கண்ணாடி உடைந்து, அவருடைய உதட்டில் காயம் ஏற்பட்டு, பல் உடைந்துவிட்டது. அவர் போட்டிருந்த துண்டு பூராவும் ரத்தமயமாக இருந்தது. நாங்கள் உடனே அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, வேண்டிய சிகிச்சை அளித்தோம். அப்பொழுது இரவு 11-15 மணி இருக்கும். நான் உடனே சிங்காநல்லூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து, இப்படி கல்வீச்சு ஏற்பட்டு, அதனால் காயம் ஏற்பட்டு, பல் உடைந்துபோய்விட்டதைப்பற்றி விசாரிக்குமாறு சொன்னேன். ஆனால், அந்தச் சமயத்தில் போலீஸ் ஸ்டேஷனில் சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ, சப்-இன்ஸ்பெக்டரோ இல்லை. அவர்கள் தூங்கப் போய்விட்டார்கள் என்ற செய்திதான் எனக்குக் கிடைத்தது. நான் உடனே டி.எஸ்.பி.க்கு டெலிபோன் செய்தேன். 'துரை தூங்கிக்கொண்டிருக்கிறார்' என்று ஆர்டர்லி சொன்னான். நடந்த விவரங்களைக் கூறி அவரை எழுப்பச் சொல்லுமாறு சொன்னேன். இராத்திரி நேரம். அடுத்த நாள் காலையில் போன் செய்தபோது அது அவுட் ஆப் ஆர்டரிலேயே இருந்தது. மீண்டும் காலை 8½ மணிக்கு டி.ஐ.ஜி.க்கு போன் செய்தேன். முன்கூட்டியே ப்ரோக்கிராம் வகுத்து இன்ன இன்ன நாள், இன்ன இன்ன இடத்திற்கு வருவோம் என்பதை முன்கூட்டியே அறிவித்திருந்தும் பாதுகாப்பு இல்லையே என்று சொன்னோம். அவர் ஸ்பெஷல் ப்ராஞ்சு போலீசாரை 9½ மணிக்கு அனுப்பினார்.

இதுபற்றிப் பத்திரிகையில் செய்தி வந்தபோது நமது முதல் அமைச்சர் அவர்கள் வன்முறைச் செயல்களைக் கண்டித்துக் கண்டனம் தெரிவித்திருந்ததைக் கண்டு பாராட்டினோம். எந்தக் கட்சியினராக இருந்தாலும் குற்றம் கண்டு பிடிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நினைத்தோம்.

பின்னர் இதுபற்றி கோயம்பத்தூர் டி.ஐ.ஜி. பத்திரிகைக்கு ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார். ஒரு பத்திரிகையில் ஒரு விதமாக வந்திருக்கிறது. அதே தேதியில் இன்னொரு பத்திரிகையில் திரு. மத்தி கவுடர் பல் உடைபட்டதாகச் சொல்லப்படுவது சரியல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு தரமுள்ள பத்திரிகை என்பது சர்க்காருக்குத் தெரியும். டி.ஐ.ஜி. அவர்கள் கொடுத்த அறிக்கையையே மாற்றி, காரில் கல் விழுந்ததாகத் தெரியவில்லை, பல் உடைபட்டதாகத் தெரியவில்லை என்று இந்தப் பத்திரிகைகள் அந்தத் தேதியிலேயே எழுதியிருக்கின்றன. (திரு. கே. விநாயகம்:—அது என்ன பத்திரிகை?) 'மாலை முரசு', 'தினத்

தந்தி' பத்திரிகைகள்தான். இப்படி ஒருவர் கொடுத்த ஸ்டேட்மெண்டை மாற்றிப் பதிப்பித்ததற்கு அந்தப் பத்திரிகையின்மீது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை.

அதற்குப் பிறகு பலவிதமான கதைகள். கார் போயிற்று. கல் விழுந்தது. அதற்குக் காரணம் சினிமாவுக்குப் போய் வந்தவர்கள்—அப்போது சினிமா விட்ட காரணத்தினால்—செய்த காரியம் என்றார்கள். பதினொன்றேமுக்கால் மணிக்கு எந்தச் சினிமாவும் விடவில்லை.

அதற்குப் பிறகு மற்றொரு அற்புதமான செய்தி வந்தது. ஒரு பெண் சம்பந்தமான காதலால் இரண்டு பேர்கள் கல் எறிந்து கொண்டார்கள். அந்தக் கல் வந்து விழுந்திருக்கிறது என்றார்கள். காதலின் வேகம் கல்லெறிந்துதானா காட்டப்படவேண்டும்? சபாநாயகர் அவர்களே, நம்முடைய காதல் நாகரீகம் இந்த அளவுக்கா வந்திருக்கிறது? இது ஒரு செய்தி.

முதல் அமைச்சர் அவர்கள் வன்முறைச் செயல்களை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்திருந்தும், தலைவர் காமராசர் முன்னே போயிருக்கிறார், பின்னே வந்த காரில் இதுபோன்ற கல்லெறிச் சம்பவம் நடந்திருக்கிறது. இதைப்பற்றி நான் உடனே போன் பண்ணியும் துரை தூங்கிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள், தூங்கியிருக்கலாம் என்று பத்திரிகை நிருபருக்குச் சொல்கிறார்—இந்த நிலை நீடித்தால் என்ன ஆகும்?

வங்கத்தில் அஜய்முகர்ஜி, போலீஸ்காரர்கள் நான் எது சொன்னாலும் கேட்பது இல்லை என்று அவர்களைக் கண்டே பயந்தார்களே, அந்த நிலைதான் தமிழகத்தில் ஏற்பட இருக்கிறது. இது ஒரு சாதாரண விஷயமல்ல. எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக இவர்கள் பலவிதமான கவுரவங்களை அளிக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இல்லாவிட்டாலும், பொதுஜனம் என்கிற முறையில் நான் இரவு பதினொன்றே முக்கால் மணிக்கு டெலிபோன் செய்கிறேன். காலை 9½ மணி வரை என்றால் எதுவும் அதுபற்றி செய்ய முடியவில்லை. இதில் இருந்தே, வேண்டுமென்றே சதித்திட்டம் உருவாக்கப்படுகிறது என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இதுபோல திரு. மார்டின் வீட்டில் நடந்தது. இன்னும் தூத்துக்குடியில் நடந்தது. இதற்கெல்லாம் அரசியல் நோக்கம் இருக்கவேண்டுமென்றே சந்தேகிக்க வேண்டியிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பெரிய விவகாரத்தை இங்கே எடுத்துச் சொல்லியதாகக் கருதிக்கொண்டு இங்கே இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. காமராசர் அவர்கள் சென்ற காருக்குப் பின்னால் பத்து நிமிட



நேரம் கழித்துச் சென்ற கோவை மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மத்தி கவுடர் கார் மீது கல் விழுந்ததாகவும், அதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றும் பத்திரிகை நிருபர்கள் என்னைக் கேட்டபோது, அது சம்பந்தமாக நான் எந்தவிதமான தகவலும் அறியாமல் இருந்த நேரத்தில் நிருபர்களிடம் கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எந்தக் கட்சியாக இருந்தாலும் வன்முறைச் செயலின் மூலம் அரசியல் ஆத்திரங்களைத் தீர்த்துக்கொள்ள இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்பதை நான் நிருபர்களிடம் குறிப்பிட்டேன். இன்றைக்கும் இந்த அரசு, வன்முறைச் செயல்களின் மூலம் எந்த ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாது என்றே நினைக்கிறது. அவற்றை நாட்டில் நடைபெறவொட்டாமல் தடுக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இந்த விவகாரத்தில் நடைபெற்றது என்ன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தமக்குத் தெரிந்தவரையில் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இதில் எதையும் கற்பனையாகச் சொன்னார் என்று நான் சொல்லவில்லை. அவருக்குத் தெரிந்த தகவல்களை வைத்துக்கொண்டு எடுத்துச் சொன்னார். போலீசார் உடனடியாக நடவடிக்கை எடுத்தாலும் குற்றம் சாட்டுகிறார்கள். போலீசார் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டாலும் குற்றம் சாட்டுகிறார்கள். போலீசாருக்கு இந்தச் சம்பவம் பற்றி தகவல் கிடைத்தவுடன் போலீசார் தக்க நடவடிக்கை எடுத்துப் புலனறிந்து, நடந்தது இதுதான் என்று சொன்னவுடன் காங்கிரஸ் பத்திரிகைகள் எல்லாம் "இவ்வளவு அவசரமாக இதைப் பற்றி ஆராய்ந்தது எல்லாம் இதுபோன்ற தவறான தகவல்களைத் தருவதற்குத்தான்" என்று எழுதுவதும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் காங்கிரஸ் பத்திரிகையில் இதுபோலக் கடிதம் எழுதியிருந்ததையும் பார்த்தேன். அங்கே எடுத்த நடவடிக்கைக்குத் தவறான உள்நோக்கமும் கற்பித்திருந்தார்கள். இவ்வளவு அவசரமாக நடவடிக்கை எடுத்ததற்குக் காரணம், தமிழகத்தின் பெரும் தலைவர் பெயர் இணைக்கப்பட்டது, அவருக்குப் பின்னால் சென்ற ஒரு காருக்கு ஏற்பட்ட நிலை இது என்கிற காரணத்தினால், மிகுந்த அக்கறையுடன் அவசரமாக இதுபற்றி கவனித்தாக வேண்டிய பொறுப்பில் காவல்துறையினர் இருக்கிறார்கள்; இந்த அரசு இருக்கிறது. மிகுந்த அவசரத்தோடும் காவல்துறையினர் செயல்பட்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் போன் செய்த நேரத்தில் காவல் நிலையத்தில் யாரும் இல்லை என்பதும், துரை தூங்குகிறார் என்று ஒருவர் சொன்னார் என்பதும் விசாரித்து அறியப்படவேண்டிய விஷயங்கள். அவற்றை இங்கே முழுவதுமாக மறுக்க நான் விரும்பவில்லை. ஆனால் மறுநாள் டி.ஐ.ஜி. அவர்கள் இதுபற்றி விசாரித்திருக்கிறார்கள். திரு. மத்தி கவுடர் அவர்களே, சினிமாத் தியேட்டருக்குப் பக்கத்தில் கார் வந்தபோதுதான் கல் விழுந்தது

என்று தெரிவித்திருக்கிறார்கள். திட்டமிட்டு காரியம் செய்யப்பட்டிருக்கிறது என்று எண்ணுவார்களேயானால் பெருந்தலைவர் காமராஜர் காரை விட்டு விட்டு, பின்னால் வந்த காரைத் தாக்கியிருக்கவேண்டியதில்லை. அவர்களோ கண் அயர்ந்து போய் இருக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டாலும்கூட தாக்குவதற்கு அந்த இடத்தை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. அது சினிமாத் தியேட்டருக்குப் பக்கத்தில் இருக்கத் தேவையில்லை. திரு. மத்தி கவுடர் அவர்களே தம்முடைய அறிக்கையில் சினிமாத் தியேட்டருக்குப் பக்கத்தில் என்றுதான் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சினிமாத் தியேட்டருக்குப் பக்கத்தில் என்றால் அதன் அருகிலேயே இல்லை. இருநூறு கஜத்திற்கு மேல் தள்ளியுள்ள இடம் இது. அப்போது சினிமா விடுகின்ற நேரமும் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் திரு. மத்தி கவுடர் சொன்ன அறிக்கையை வைத்துச் சொன்னேன். சதி செய்து கூட்டமாக வந்து தாக்குவது என்கிறபோது அது எவ்வாறு செயல்படும் என்பதை நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆளும் கட்சியினர்களின் செய்கையால் அனுபவமாகப் பெற்றிருக்கிறோம். 1967 பொதுத்தேர்தலின்போது உடுமலைப்பேட்டையில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு இரவு ஜல்லிப்பட்டி 12½ மணி கூட்டத்திற்கு அண்ணா வர இருந்தார்கள். ஜல்லிப்பட்டியில் கூட்டத்திற்குத் தயாராகிவிட்டதா என்பதை முன்கூட்டியே சென்று பார்த்து போன் மூலம் அறிவிப்பதாக இப்போது அமைச்சராக உள்ள திரு. சாதிக் பாட்சா அவர்களும் மற்றவர்களும் உடுமலைப்பேட்டையில் இருந்து ஒரு காரில் இரவு ஜல்லிப்பட்டிக்குப் போகிறபோது ஒரு பெருங் கூட்டம் நடுவில் அவர்களது காரை மறித்து நிறுத்தியதும், கல்லாலும், தடியாலும் தாக்கியதும், திரு. சாதிக் பாட்சா அவர்கள் அங்கிருந்து ஓடி பக்கத்தில் இருந்த போன் மூலம் அண்ணா அவர்களுக்கு "நீங்கள் உடனடியாக வரவேண்டாம். பயங்கரமான திட்டங்களை வகுத்து எங்கள் காரைத் தாக்கியிருக்கிறார்கள்" என்று தெரிவித்ததும் எல்லோருக்கும் தெரியும். அதுபோலத் திட்டம் வகுத்துச் செயல்படுத்தப்பட்ட நிகழ்ச்சி அல்ல இது. கார் மீது கல் விழுவதற்கு-அரசியல் காரணமும் இருக்கலாம். கல்வீச்சு அனுபவம் அரசியல் துறையில் இருப்பவர்களுக்குத் தெரியாதது அல்ல. அந்த அனுபவம் எனக்குண்டு. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் இதைப் பெரிய விஷயமாக ஆக்காமல், போலீசார் உண்மை என்ன என்பதை ஆராய முற்பட்டார்கள். அது ஒரு காதல் தகராறு. காதலனுக்கும் அந்தப் பெண்ணை மணந்தவனுக்கும் ஏற்பட்ட தகராறு. அந்தத் தகராறில் சினிமா பார்த்துவிட்டு வருகிற நேரத்தில் பூசல் முற்றி இருவரும் கற்களை வீசிக் கொண்டார்கள். ஒரு கல் திரு. மத்தி கவுடர் காரில் விழுந்





திருக்கிறது. பல் உடைந்து விடவில்லை. உதட்டளவிலேதான் சாதாரண காயம் பட்டிருக்கிறது என்பதாகத்தான் செய்தி வந்திருக்கிறது. பல் அறவே உடைந்துவிடவில்லை, அந்த கல், காருக்குள் இல்லை. கண்ணாடியில் பட்டுத் தெரித்து விட்டதாகத்தான் செய்தி வந்திருக்கிறது. அந்தக் கல் காருக்குள் இருந்ததாகச் செய்தி இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அந்தக் கல்லை எடுத்து, ரத்தம் தோய்ந்த அந்தக் கல்லைப் போலீசாரிடம் கொடுத்திருக்கிறோம். திருட்டுப் பத்திரிகைகள் அப்படிச் சொல்லலாம். காருக்குள்ளே கல் விழுந்தது. அது 2½ அங்குலம் நீளம், 1½ அங்குலம் அகலம் இருந்தது. அதைப் போலீசாரிடம் கொடுத்திருக்கிறோம். பல் உடைந்ததையும் தெரிவித்திருக்கிறோம். பல் உடைந்ததா? கண்ணாடி உடைந்ததா? என்றெல்லாம் கூறுவது பொருத்தம் அல்ல.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது திருட்டுப் பத்திரிகையாக இருக்கலாம். நாட்டில் சில குருட்டுப் பத்திரிகைகளும் இருக்கின்றன. திரு. மத்தி கவுடர் அவர்கள் இது சாதாரண விஷயம், விட்டுவிடலாம் என்று சொன்னாராம். ஆனால் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்கவேண்டும், சாதாரணமாக விட்டுவிடக்கூடாது என்று கூறியதாக நான்கூட கேள்விப்பட்டேன். இதைச் சாதாரணமாக விட்டுவிடக்கூடாது, அரசியல் பிரச்சினையாக ஆக்க வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு, கல் கிடைப்பது சாதாரணம், அதை ரத்தத்தில் தோய்த்தெடுப்பது மிகச் சாதாரணம். நான்கூட, சென்ற ஆண்டு பிருந்தாவனம் எக்ஸ்பிரசில் சென்று கொண்டிருந்தபோது ஜோலார்ப்பேட்டையில் ரயிலில் நான் உட்கார்ந்து இருந்த அந்த இடத்திலே, பக்கத்திலே இருந்து கண்ணாடிமேல் ஒரு கல் விழுந்து கண்ணாடி நொறுங்கி சிதறி என்னுடைய உடம்பில் விழுந்தது. என் பக்கத்திலே உட்கார்ந்திருந்த செக்யூரிடி ஆபீசர் மேலும் கண்ணாடி நொறுங்கி விழுந்து சிறு சிறு காயம் ஏற்பட்டது. உடனே போலீசாரிடம் போகவில்லை. காங்கிரஸ்காரர்களோ, மற்ற எதிர்க்கட்சிக்காரர்களோ என் தலைக்குக் குறி வைத்தார்கள். உடனே நீதி விசாரணை வேண்டும் என்று சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் கொடுத்த ரிப்போர்டின்படி மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் ரயில் மீது விட்டெறிந்த கல் அகஸ்மாத்தாக என் பெட்டியில் விழுந்ததாக தெரிவித்தார்கள். இதைப்பற்றி பெங்களூரில் நிருபர்கள் கேட்டபோது, இது வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியம் அல்ல, அரசியல் காரணமாகச் செய்யப்பட்டது அல்ல, அரசியல் காரணம் கற்பிப்பது தவறு என்று குறிப்பிட்டேன்.

சிதம்பரத்தில் ரயில் இன்ஜின் டிரைவர், கிளீனர் அவர்கள் மீது துப்பாக்கிக் குண்டுகள் விழுந்தன. இது கம்யூனிஸ்ட்டுகள், நக்ஸல்பாரிகள் வேலையாக இருக்குமோ என்று சந்தேகப்

பட்டார்கள். அதற்குப் பிறகு போலீசார் விசாரணைக்குப் பிறகு அங்கே குருவிக்காரர்கள் குருவிகளைச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தக் குருவிக்காரர்கள் சுட்ட குண்டுகள் குருவிகள் மேல் படாமல் ரயில் இன்ஜின் மீது பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு நாட்களுக்குப் பத்திரிகையில் அதற்கு அரசியல் காரணம் கற்பித்தார்கள். ஆனால் அது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுரையில் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள், அமைச்சர் ஆனதற்குப் பிறகு, சென்றிருந்த நேரத்தில் அவருக்குப் பின்னால் வந்த மதுரை முத்து அவர்கள் காரில் கல் விழுந்தது. அதை நாங்கள் அரசியல் பிரச்சினை ஆக்கவில்லை. ஆக, இந்தக் கல் பிரச்சினை மிகவும் சாதாரணப் பிரச்சினை, மண்டை உடைந்திருந்தால் அது பெரிய பிரச்சினை. ஆகவே இதை அரசியல் ரீதியாகக் கண்டு, இந்த சிறிய விஷயத்தைப் பெரியதாக ஆக்காமல் போலீசார் கொடுத்த தகவல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொது மக்கள் அத்தனைபேரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்காக சபையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் பேசும்போது சொன்னார். கல் கிடைப்பது சுலபம் என்றும், ரத்தத்தில் தோய்த்தெடுப்பது சுலபம் என்றும் அவர்களுடைய பாணியிலே சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்வது பொருத்தம் இல்லை என்று நான் நினைக்கிறேன். கல் விழுந்த உடனே எடுத்துப் போலீசாரிடம் கொடுத்திருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னாரோ இல்லையோ என்று என்னையே சந்தேகப்படுகிறார்கள். இன்னும், முன்னமே எங்களுக்கு நடந்தது, இப்போது உங்களுக்கு நடந்தால் என்ன கெட்டுப்போச்சு என்ற முறையில் சொன்னார்கள். நான் அரசியல் காரணங்களுக்காகச் சொல்லவில்லை. இந்தக் கட்சிதான் செய்தது என்று சொல்லவில்லை. இதுமாதிரி தவறுகள் எல்லாம் நடக்கின்றன என்றுதான் சொல்லுகிறேன். தேர்தல் சமயத்தில் இம்மாதிரி சம்பவங்கள் நடக்குமானால் அவ்வளவு நல்லது அல்ல என்று கூறிக் கொள்ளுகிறேன்.

நான் நீதிவிசாரணை வேண்டுமென்று சொல்லவில்லை. விசாரணை வேண்டுமென்றுதான் சொன்னேன். கல் விழுந்ததா, கண்ணாடி உடைந்ததா, பல் உடைந்ததா, தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். டெலிபோன் செய்த உடனே போலீசார் வந்து பார்த்திருந்தால் பிரச்சினையைத் தெரிந்து கொண்டிருக்க முடியும். ஒன்றிரண்டு நாள் கழித்து கற்பனை செய்தா அப்படி இருக்கலாம், இப்படி இருக்கலாம் என்று போலீசாரைச் சம்பந்தப்படுத்திச் சொன்னது உங்களுடைய ஆட்சிக்கு அவ்வளவு நல்லது அல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது எங்களுக்கு [illegible],





எல்லோருக்கும் ஏற்படலாம். பாக்கி கட்சிகளுக்கும் ஏற்படலாம். நமது ஜனநாயக நாட்டிலே எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் அவர்கள் பாணியிலே, ஏதாவது சம்பவம் நடந்தால், இதற்கு முன்னாலே நடந்த சம்பவத்தைச் சொல்வது, துப்பாக்கிச் சூடு என்று சொன்னால் முன்னாலேயே நடந்த துப்பாக்கி சூடு பற்றிச் சொல்வது எல்லாம் பொருத்தம் இல்லை. கல் விழுந்தது சிறிய விஷயம் இல்லை. சிறியதைப் பெரியதாகவும், பெரியதைச் சிறியதாகவும் ஆக்கிக் காட்டுவது அவ்வளவு நல்லது அல்ல. இனிமேல் இதுமாதிரி சம்பவங்கள் நடக்காமல் உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த அரசியல் கட்சியும் பிரச்சாரம் செய்யட்டும். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த மாதிரி பொறுப் பற்ற முறையில் அரசாங்கம் செய்வது நல்லதல்ல. சட்டம் அமைதி கெட்டுவிட்டது. பாதுகாப்பு தரப்படவில்லை. அதைச் செய்தால் சர்க்காருக்கு நல்லது. அப்படிச் செய்தால்தான் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நினைப்பார்கள். எனவே இது பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் ஏற்கனவே ஏற்பட்ட சம்பவங்களைச் சுட்டிக்காட்டி இதுபோல் ஏன் நடக்கக் கூடாது என்று சொல்லியதாக ஒரு தவறான கற்பனையைச் செய்து கொண்டதற்காக வருந்துகிறேன். நான் அப்படிப்பட்டவன் அல்ல. உண்மைக் காரணங்களை மறைத்து அரசியல் முலாம் பூசிப் பேசக் கூடியவன் அல்ல நான். அரசியல் கட்சித் தலைவர்களுக்கு—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி அவர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் அவர் சிங்காநல்லூர் சம்பவத்தை இணைத்துப் பேசியதால் சொல்லுகிறேன். அது ஒரு காதல் விவகாரம். இதிலெல்லாம் அரசாங்கம் தலையிட முடியாது என்பதைக் கூறிக்கொண்டு இந்தச் சபையை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலமைச்சர் அவர்களுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகும், மேலும் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதைப் பற்றிய விவாதத்திற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கும்போதே என்னென்ன கூற வேண்டுமோ, அத்தனையும் கூறிவிட்ட காரணத்தாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1970 நவம்பர் 26

## (இ) மாம்பலம் காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள திறந்த வெளியிலிருந்து வினாயகர் சிலை அகற்றப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, நம்முடைய திரு. வினாயகம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'The sudden removal of Sri Vinayagar idol from the open ground adjacent to Police quarters of Mambalam Police station, Madras-17 thus causing great commotion and disturbance among the religious-minded Hindus which will naturally lead to communal tension in the City of Madras.'

என்று கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கத்தக்க நிகழ்ச்சியாகும் என்பதைத் திரு. வினாயகம் அவர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. வினாயகம் :** தலைவரவர்களே, இவ்வளவு நேரம் கருத்துக்களைச் சூடாகப் பரிமாறினோம். அவைகளையெல்லாம் மறந்து, கொஞ்சம் அமைதியாக இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும். நான் எந்தக் காரணத்திற்காகவும் இந்தப் பிரச்சினையில் சூடேற்ற மாட்டேன். இதைத் தலைவரவர்களும் கேட்க வேண்டும், அங்கத்தினர்கள் அனைவரும் கேட்க வேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக வினாயகர் சிலை ஒன்று சென்னையிலே, தியாகராயநகர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகாமையிலே தோன்றியது. காவல் துறையினர் குடியிருக்கும் இடத்திற்கு அருகாமையிலே தோன்றியது. இந்து மதத்திலே ஈடுபட்ட அங்கிருக்கும் பக்திமான்கள் இந்தக் கடவுள் இங்கு தோன்றியதனாலே இது கடவுள் அம்சமாக இருக்க வேண்டுமென்று தெரிந்து, காணிக்கை கொடுத்து நடந்து வந்தது. ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமெண்டு அதை அங்கீகாரம் செய்து அந்தக் கோயிலுக்குத் தர்மகர்த்தர்களைப் போட்டார்கள். ஏனென்றால், உண்டியல் வைத்து அங்கு பணம் வசூல் ஆகியது. அதை யாராவது எடுத்துக் கொண்டு போகக்கூடாது, அரசாங்கத்திற்குப் போக வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் அரசாங்கத்தால், அதை ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால் 'ரெகக்னைஸ்ட் டெம்பிள்' என்று அனுமதிக்கப்பட்டு, சட்டபூர்வமாக தர்மகர்த்தர்களைப் போட்டார்கள். அதையெல்லாம் அரசாங்கம் யோசிக்க வேண்டும். அப்படி நல்ல சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் என்ன சொல்லப்படுகிறது? அந்த இடம் தகராறுக்கு உரிய இடம். அந்த இடத்திலே முஸ்லீம்கள், ஹிந்துக்கள் அதிகமாக வாழும் இடத்தில் மசூதி கட்ட வேண்டுமென்ற சர்ச்சை எழுந்தது. பிறகு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உடன்பாடு ஏற்பட்டு, அதில் பெரிய மனிதர்கள், கவுன்சிலர்கள் சேர்ந்து, எம்.எல்.ஏ. சேர்ந்தாரோ என்னவோ தெரியாது, இப்படிப் பலரும் சேர்ந்து அந்த இடத்திலே கட்ட





வேண்டாம், வேறு இடத்தில் கட்டிக்கொள்ளலாம் என்று ஒப்பந்தம் ஏற்பட்டது. பிறகு முஸ்லீம்கள் பள்ளிவாசலாக இல்லாமல் ஒரு பள்ளி அதாவது ஸ்கூல்

'Or some kind of educational institution'

கட்டுவதாக ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது. அங்கு சிலை தோன்றிய பிறகு உண்மையாகவே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்த இடத்திலே . . .

**திரு. கே. வினாயகம் :** குடியிருக்கிறார்களே, போலீஸ் ஸ்டேஷனுக்குப் பின்னாலே அந்த இடத்தில். நான் இதை விளக்குவதற்கு முன்னாலேயே உங்களுடைய ஆயுதங்களைப் பயன்படுத்தத் தொடங்குகிறீர்களாதலால் நீங்கள் இதை மறுக்கப் போகிறீர்கள் என்று தெரிகிறது. எனவே, இப்பொழுது இந்தச் சபை நம் கையிலே இருக்கிறது, நாம் எதையும் முடிவு செய்யலாம், நமக்குள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு முடிவிற்கு வரலாம் என்ற யோசனை நமக்கு இருக்கக்கூடாது. இதைப் பொதுமக்கள் பார்க்கிறார்கள். இந்துக்கள், முஸ்லிம்கள் அனைவரும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்துக்களும் முஸ்லீம்களும் அண்ணன் தம்பிகளைப்போல் இருக்கும் நமது நாட்டில் இப்படி ஓரிரு நிகழ்ச்சிகள் வந்ததற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆனால் இதை எப்படிச் சாமர்த்தியமாகச் சமாளித்திருக்க வேண்டும்? அங்கு சுயம்புவாக வந்தது, சுயம்பு லிங்கம், தானாக வந்த லிங்கம் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும் நேரத்தில் (குறுக்கீடு) எல்லா விக்கிரகங்களையும் லிங்கம் என்றுதான் சொல்லுவார்கள். உங்களுக்கு அதிலே பழக்கம் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எல்லா விக்கிரகங்களையும் லிங்கம் என்று சொல்வதாகச் சொல்லுகிறார்கள். அம்பாள் விக்கிரகத்தையும் அப்படித்தான் சொல்லுவதா ?

**திரு. கே. வினாயகம் :** அதற்கு நீங்கள் 'செக்ஸ்' போட்டுப் பேசுவதாயிருந்தால் அதற்கு ஆண்டவன்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டுமே தவிர நான் காப்பாற்ற முடியாது. சபாநாயகரவர்களே, இதற்காகத்தான் நான் முன்னதாகவே சொன்னேன், சூடேற்றக்கூடாது, அமைதியாகப் பார்க்க வேண்டுமென்று.

பிறகு என்ன நடந்தது ? இவ்வாறு ஒரு மாத காலமாக அமைதியாக அங்கிருக்கும் இந்துக்கள் காணிக்கை தந்து கோயிலாகக் கட்ட வேண்டுமென்று நினைத்தார்கள். அதற்கு முஸ்லீம்களும் ஒத்துக்கொண்டார்கள். இவ்வாறு அமைதியாக இருக்கும் நேரத்தில் யாரோ ஒரு போலீஸ்காரர், அவர் கொஞ்சம் புத்தி சுவாதீனம் இல்லாதது மாதிரி முதலில் தெரிவித்து, பிறகு அவர் தான் கொண்டு வந்து வைத்தார் என்று அவரிடத்திலே வற்புறுத்தி ஸ்டேட்மெண்ட் வாங்கி விளம்பரம் செய்து, பிறகு ஒருநாள்

அவராக எடுத்துக்கொண்டு விட்டார் என்று ஊராருக்குப் பரப்பினார்கள். அது எப்படி வந்ததோ அப்படியே போனது என்று என்னிடத்திலே முதலமைச்சரவர்கள் தனியாகப் பேசும்பொழுது சொன்னார்கள். விநாயகர் எப்படி வந்தாரோ அப்படியே சென்று விட்டார் என்று கூறுகிறார்கள். இதற்குக் காரணம் வேறு. முதலிலே உங்களுக்குத் தெய்வ நம்பிக்கையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் சொல்ல வேண்டாம்.

**திரு. கே. விநாயகம் :** இருக்கிறது என்று சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம். ஆகவே, விநாயகர் எப்படி வந்தாரோ அப்படியே போனார் என்றெல்லாம் கேலி செய்தார்கள். அது ஒருபுறமிருக்க, நேற்று ஒரு அறிக்கையை, எந்தப் போலீஸ்காரர் வைத்தார் என்று சொன்னாரோ அவர் ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார். முதலிலே கடையிலே வாங்கிய பிள்ளையார் என்று சொல்லப்பட்டது. பிறகு அடையாற்றிலே ஒரு விக்கிரகம் மறைந்துவிட்டது, அங்கிருந்த விக்கிரகம் இல்லை, அதுவாகத்தான் இருக்குமோ என்று சொன்னார்கள். பிறகு போலீஸ்காரர் வைத்தது என்று பொது மக்களிடத்திலே அவர்களுடைய கண்ணோட்டத்திலே உண்டாக்க அரசாங்கத்தரப்பிலே முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடைசியிலே என்ற ஆயிற்று ? அது பொய்யாகிவிட்டது. ஹெட் கான்ஸ்டபிள் எடுத்துச் சென்ற பிறகு, அந்தப் போலீஸ்காரருக்கு தினந்தோறும் அமைதி இல்லை, இப்படிப்பட்ட ஒரு பொய்யைப் பெரிய அதிகாரிகள் சொல்லச் சொல்லி சொல்லிவிட்டோமே, நான் தான் கொண்டுவந்து வைத்தேன் என்று சொல்லிவிட்டோமே, பிறகு நாம் எடுத்துக்கொண்டோமே என்று மனப்போராட்டத்திற்கிடையே சிக்கி, ஒரு உண்மையைச் சொல்லி விட்டார். நேற்று ஒரு அறிக்கை விட்டார். அது பல பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அவருடைய பெயர் செல்வராஜ் என்று பத்திரிகையிலே இருந்து தெரிகிறது. அங்கு விஸ்வநாதன் அவர்களும் இன்னொருவர் துரை என்றெல்லாம் இருக்கிறது. அது எப்படியாகிலும், இதற்கு ஒரு கற்பனை செய்ய வேண்டும், இது தானாகத் தோன்றியதில்லை, நீதான் கொண்டுவந்து வைத்ததாகச் சொல்ல வேண்டும். நீ அவ்வாறு சொல்லி காப்பாற்றவில்லையென்றால் நமது அரசுக்கே அவமானம், கட்சிக்கு அவமானம் என்றெல்லாம் அவரை வற்புறுத்திச் சொன்னதாகவும், அந்த ஹெட்கான்ஸ்டபிள் அப்படியே செய்ததாகவும், பிறகு மனக்குழப்பம் போவதற்காக, தனக்குப் பெரிய கவலையாக இருக்கிறதே, கடவுளை நாம் ஏமாற்றிவிட்டோம், மக்களைத் தவறாக இழுத்துச் சென்றோம் என்ற அந்த வேதனை இருக்கிறதே, அதைப் போக்குவதற்காக அதை ஆங்கிலத்திலே சொல்லுவார்கள்

'to clear his own conscience'

என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால் சரியாகச் சொல்லியிருப்பேன். தமிழிலே இவ்வளவுதான் எனக்கு வரும். எனவே, இந்த அறிக்கையைப் பார்க்க வேண்டும்.


விநாயகர் சிலை அகற்றப்பட்டது குறித்து



இது சின்னப் பிரச்சினை அல்ல. பத்திரிகையிலே வந்திருக்கும் இந்த அறிக்கையைப் பொதுமக்கள் படித்த பிறகு, அரசாங்கம் எவ்வளவு சூழ்ச்சி செய்து, போலீஸ் அதிகாரிகளை வற்புறுத்தி அறிக்கை தயார் செய்கிறார்கள் என்று எண்ணுவார்கள். இன்னொரு இடத்தில் என்னவென்றால் கல் அடித்தது ஒரு போலீஸ்காரர் என்று சொல்லுகிறார்கள். பாவம் எந்த நிலையில் இருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். எனவே, இந்த விநாயகர் பிரச்னையைச் சமாளிப்பதற்காகப் போலீஸ்காரரைக் கையாளாகக் கொண்டிருப்பதைப் பார்த்து, இப்படியெல்லாம் வந்திருக்கிறதே என்ற ஒரு கொந்தளிப்பு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. இதனால் கம்யூனல் டென்ஷன் ஏற்பட்டு, சண்டை சச்சரவுகள் வருமே என்ற பயத்தினால்தான், இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

கடவுளை நம்புகிறவர்கள் நம்பட்டும் ; நம்பாதவர்கள் அந்த நிலையிலேயே இருக்கட்டும். அது வேறு நிலை. கடவுளை நம்பி கோயிலுக்குப் போய்த் தொழுகிறவர்களுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். உடனடியாக, மறுபடியும் அந்த விநாயகர் சிலையை அங்கு கொண்டு போய் வைத்து அந்த இடத்தில் கோயில் கட்டுவதற்கு அரசு அனுமதி தரவேண்டும். இதை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு அதைப் பார்த்து என்னுடைய முடிவைக் கூறுகிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திடீர் விநாயகரைப் பற்றி எப்போதும் இருக்கும் விநாயகர் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து தன்னுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்தத் திடீர்ப் பிள்ளையாரைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி அவர்கள்—மிகுந்த, ஆழ்ந்த ஆஸ்திகப் பற்றும், அவர்கள் குறிப்பிட்டது போல் தெய்விகப் பற்றும் கொண்ட ராஜாஜி அவர்கள்—" இந்தப் பிள்ளையார்க் கதையின் மூலம் மதத்திற்குக் கேடு உண்டாக்க வேண்டாம் " என்றுதான் பிள்ளையார் சிலையைப் பற்றி அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளுவோம் என்று—இன்று அல்ல, ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். உங்கள் பக்கத்தில் இருக்கும்போது கூட அந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

இந்தப் பிள்ளையார் விவகாரத்தில் தலைமையேற்றுப் பிரச்சினையைப் பெரியதாக ஆக்கிக் கொண்டிருக்கும் ஒரு பிரமுகர் இந்த வேலையை இப்போது மாத்திரம் செய்பவர் அல்ல. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இதே மாதிரி ஒரு காரியத்தைச் செய்ய

முயன்றபோது அந்தப் பகுதியில் உள்ள அண்ணங்கராச்சாரியார் போன்ற ஆஸ்திகப் பிரமுகர்கள் மறுப்பு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தியாகராயநகரில் சிவா-விஷ்ணு ஆலயம் என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. இந்தப் பிரமுகர் அந்த ஆலயத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கிறார். இவர் ஒரு நாள் திடீரென்று ஒரு நோட்டீஸ் போட்டு பக்தர்களை அழைத்து ஒரு விஷயத்தைச் சொன்னார். 'இரவு என்னுடைய கனவில் சிவா, விஷ்ணு இருவரும் வந்து இந்த ஆலயத்தில் ஐயப்பசாமியை வைத்துக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும்' என்று கூறியதாகக் கூறிக் கும்பாபிஷேகத்திற்காக நிதி திரட்டும் முயற்சிகளையும் மேற்கொண்டு, அதற்கான காரியங்களில் அந்தப் பிரமுகர் ஈடுபட்டார்.

உடனடியாக, அந்தக் கோயிலின்பால் அன்பு கொண்டவரும், ஆத்திகருமான அண்ணங்கராச்சாரியார் ஒரு அறிக்கை விட்டார், அந்தப் பெரியவர் விட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டது—

" சாஸ்திரத்திலே ஏற்கனவே உள்ள ஒரு பழைய ஆலயத்தில் வேறு எந்தப் புதிய தேவதையும் பிரதிஷ்டை செய்யக்கூடாது என்ற ஒரு திட்டமான சட்டம் இருக்கிறது. ஆகவே, இதுபோல் மகத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலயக் கமிட்டியாருக்கோ அல்லது ஜெனரல் பாடிக்கோ எந்தவிதமான உரிமையும் கிடையாது. ஆலயம் சரிவர நடந்து வருவதை மேற்பார்வையிடுவதுதான் அவர்களின் அலுவலே அன்றி இவ் விஷயத்தில் தலையிட அவர்களுக்குத் தகுதி கிடையாது. இப்பிரச்சினையைத் தெளிவாகத் தீர்க்க ஆகம சாஸ்திரத்திலே பாண்டித்யமுள்ள பல வித்வான்களின் முடிவே சிறந்தது . . . . ஆகவே, மேற்கண்டவாறு ஒவ்வொருவரும் தான் கனவில் கண்டவற்றையெல்லாம் நம் ஆலயத்துக்குள் புகுத்த எண்ணினால் அதற்கு முடிவில்லாமற் போவதோடு ஆலயம் ஆலயமாகவும் இருக்காது ".

என்று அண்ணங்கராச்சாரியார் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், அண்ணங்கராச்சாரியார் தனது துண்டுப் பிரசுரத்தில், காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சாஸ்தாவைப் பிரதிஷ்டிக்க அனுமதி தந்ததாக அந்தப் பிரமுகர் தெரிவித்ததை மறுத்துள்ளார்.

அப்போதே ஐயப்பசாமியை உருவாக்கி கும்பாபிஷேகம் நடத்துவதற்காகப் பணம் வசூலிக்கும் காரியத்தில் இறங்கியவர் இன்றைக்குத் திடீர்ப் பிள்ளையார் விஷயத்திலும் தலைமையேற்று இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'நாங்கள் நாத்திகர்கள், ஆகவே, அங்கே பிள்ளையார் இருக்க வேண்டாம், கோயில் இருக்க வேண்டாம்' என்று முடிவு



கட்டியதாக திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மையாக இருக்குமானால் நாட்டிலே இருக்கும் எவ்வளவோ பிள்ளையார் கோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டு, அகற்றப்பட்டு இருக்க வேண்டும். எந்தக் கடவுளும் இருக்க வேண்டாமென்று நாங்கள் கூறவில்லை. இந்தப் பிள்ளையார் வந்த விவகாரத்தைப் பார்க்க வேண்டும். பிரச்சினைக்குரிய இடத்தில் இந்த நிலை ஏற்படுகின்றபோது அரசு அதிலே அக்கறை செலுத்தவேண்டியிருக்கிறது.

அந்த வட்டாரத்தில் ஒரு இடத்தில் மசூதி கட்டுவது அல்லது பள்ளிவாசல் கட்டுவதிலே ஒரு பிரச்சினை. இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் மனக் கசப்பு ஏற்படும் விதத்தில் மாச்சரியங்கள் உருவாயின. உடனே, நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து 'நீங்கள் முன் நின்று பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்' என்று கேட்டுக் கொண்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பாருடனும் கலந்து பேசி எடுத்த முடிவிற்கு இசைவாக இந்துப் பெரியவர்களிடமிருந்தும், முஸ்லீம் பெரியவர்களிடமிருந்தும் கைப்படிக் கடிதம் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே பள்ளிவாசல் கட்டுவதற்காகக் குறிப்பிட்டிருந்த இடத்தை விட்டுவிட்டு போலீஸ் லைன் இருக்கும் இடத்தில் பள்ளிவாசல் கட்ட ஒப்புதல் அளித்துவிட்டார்கள். போலீஸ் லைனில் எந்த இடத்தில் இந்தப் பள்ளிவாசல் கட்டுவதகாத் திட்டமிடப்பட்டதோ அந்த இடத்தில் இந்தப் பிள்ளையார் திடீரென்று வந்தார். அப்படிப் பிள்ளையார் வந்ததற்குக் காரணமும் நன்றாகத் தெரிகிறது. போலீஸ் லைனுக்குப் பக்கத்தில் பள்ளிவாசல் கட்டக் கூடாது என்று அந்தப் பகுதியில் இருந்த சிலர் விரும்பிய காரணம் தவிர வேறு காரணம் எதுவும் நிச்சயமாக இருக்க முடியாது.

தங்களுடைய கொள்கையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக, தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக, குறிப்பிட்ட இடத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியை இந்துக்களுக்காக ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால், இதே பிரச்சினை மவுண்ட் ரோடில் ஏற்பட்டால் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? இதே போன்று கிறிஸ்தவர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு, ஜெமினிக்குப் பக்கத்திலே பூமி வெடித்தது, 'இந்து' ஆபீசுக்குப் பக்கத்திலே பூமி வெடித்தது, 'ஆனந்தவிகடன்' ஆபீசுக்கு எதிரே பூமி வெடித்தது, 'கல்கி' ஆபீசுக்கு முன்னாலே பூமி வெடித்தது—ஒரு சிலுவை வந்தது, இந்த இடத்தில் இயேசுநாதருக்கு ஒரு கோயில் கட்ட வேண்டும், ஒரு மாதா கோயில் கட்ட வேண்டும், சிலுவை வெடித்ததால் கிறிஸ்தவர்கள் எல்லாம் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டு அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவது என்றால் அதைவிட அபத்தம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆகவே, உங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள கடவுளை நீங்கள் இழுக்காதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1970 நவம்பர் 26

நாங்கள் கடவுளை நம்பவில்லை, கடவுள் நம்பிக்கை இல்லாததால் தான் இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். இதிலே மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்க வேண்டும். கடவுளை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா அல்லது கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளுகிறாரா என்பதுதான் கேள்வி. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அந்தக் காரியங்களைச் செய்து வருகிறோம். நீங்கள் கடவுளை ஏற்றுக் கொள்ளுகிறீர்கள், கடவுளைச் சாதாரணமாக ஆக்கி ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறுகிறீர்கள். கடவுளை உங்கள் பொறுப்பில் வைத்திருக்கிறீர்கள். நாங்கள் கடவுளை மிக உயர்ந்த இடத்தில் வைத்து கடவுள் எங்களை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எங்களைப் பண்படுத்திக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இதிலே, நீங்கள் ' நாத்திகம் ' என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டு எங்களை பார்த்து 'நாத்திகர்கள்' என்று சொல்லுவதுதான் ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட விநாயகர் சிலையைப் பொறுத்து இன்றைக்கு வந்திருக்கிற அறிக்கையைப் பற்றித் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் போலீஸ் கமிஷனருக்கும் எழுதி அனுப்பியிருப்பதாகக் கூறினார்கள். இவ்வளவு நாட்களாக இவர் இதைச் சொல்லாமல் சட்டசபை ஆரம்பிக்கும் நேரமாகப் பார்த்துச் சொல்லி இருக்கிறார். குமுதம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போது கூட இந்தவிதமாக எந்தக் கருத்தையும் அறிவிக்கவில்லை. இவர் இப்போது என்ன சொல்லியிருக்கிறார்? முதலில் கொடுத்த வாக்குமூலத்தின்போது தன்னைப்பற்றி என்ன கூறியிருக்கிறார்? செல்வராஜ் என்ற இந்தப் போலீஸ்காரர் முன்பு இதைப் போலவே பிள்ளையார் வியாபாரம் செய்திருக்கிறார். முதல் வாக்குமூலத்திலேயே கொடுத்திருக்கிறார். தியாகராயநகரில் உள்ள ஒரு நடிகரின் வீட்டுக்கு யாரோ ஒருவர் பிள்ளையாரை வைக்க வந்தார். பிள்ளையாரைப் பொதுவாகத் திருடித்தான் வைப்பது வழக்கம் என்ற காரணத்தால் அந்த நடிகர் மாம்பலம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் ஃபோன் செய்தார். பிள்ளையாரைத் திருடிக் கொண்டு வந்தவர், ஃபோன் செய்ததை அறிந்து, போலீசார் வந்தவுடன் பிள்ளையாரை அப்படியே ஓரிடத்தில் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். அந்தப் பிள்ளையாரை செல்வராஜ் எடுத்துச் சென்று தன்னுடைய வீட்டில் மரத்தடியில் வைத்துக் கொஞ்ச நாள் பூஜை செய்து வந்தார். இன்னொரு பெரியவர் அவரிடம், எச்சம் விழக்கூடிய இடத்தில் பிள்ளையாரை வைத்திருக்கிறீரே, ஏதாவது கோயில் கட்டி வைக்கக்கூடாதா என்று கேட்டார். உடனே, அந்தப் பிள்ளையாரை அவர் தியாகராயநகர் காய்கறி வியாபாரிகளிடம் கொடுத்து விட்டார். செல்வராஜ் கொடுத்த அந்தப் பிள்ளையாருக்குத் தியாகராயநகரில் கோயில் கட்டி வைத்



1970 நவம்பர் 26] [திரு. மு. கருணாநிதி]

திருக்கிறார்கள். இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இந்தச் செய்தி பத்திரிக்கையில் கூட வந்திருக்கிறது. செல்வராஜ் தான் இந்தப் பிள்ளையாரைக் கொடுத்தார் என்று கூட வந்திருப்பதாகக் கவனம்.

பிள்ளையாருக்கும் இந்த கான்ஸ்டபிளுக்கும் நீண்ட நாட்களாகவே தொடர்பு இருந்து வந்திருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இன்றைக்குக் கொடுத்திருக்கும் அறிக்கையின்படி கமிஷனருக்கு எழுதிக் கொடுத்திருப்பதில் கூட என்ன சொல்லியிருக்கிறார்?

திரு. கே. விநாயகம்: இதுவரையில் அந்த போலீஸ்காரர் கொடுத்த ஸ்டேட்மெண்ட் அனைத்தும், குமுதத்திற்குப் பேட்டியளித்த போது குறிப்பிட்டதும் கூட "அண்டர் ட்யூரஸ்" அப்படிக் கொடுத்தார். இப்போதுதான் உண்மையாக மனத்தில் இருக்கும் குழப்பத்தைத் தீர்த்துக் கொள்ள ஸ்டேட்மெண்ட் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. முன்பு கொடுத்த ஸ்டேட்மெண்ட்டை இன்றைக்குச் சொல்லுவது வழக்கு மன்றத்தில் எங்களைப் போன்றவர்கள் சொல்ல வேண்டியதாகும். இப்போது அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதே ஆள் நாளையதினம் மு.ப.
நேற்று கொடுத்தது மனச்சாட்சிக்கு விரோதமானது என்று 11-00
சொல்லக்கூடும். தன்னைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் வற்புறுத்தப்பட்டு ஒரு வாக்குமூலம் கொடுக்க ஆளாக்கப்பட்டேன் என்று சொன்னால், அதைப்பற்றி விசாரிக்க வேண்டியதுதான். டிப்பார்ட்மென்டார் அதைப்பற்றி விசாரிப்பார்கள். விஸ்வநாத ஐயர் என்ற இன்ஸ்பெக்டர் தன்னை இப்படியெல்லாம் சொல்லச் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவரும் விசாரிக்கப்பட வேண்டியவராக இருக்கலாம். பிள்ளையாருக்கும் இவருக்கும் அதிகத் தொடர்பு இருப்பதினால் அவர், தலைமீது வைத்திருக்கக்கூடும். ஆனால், பிள்ளையார் வந்தது ஏமாற்று வேலை என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதில் யார் குற்றவாளி என்பதில் விநாயகம் அவர்கள் இந்த ஹெட் கான்ஸ்டபிளுக்காக வாதாடினால் வாதாடட்டும். ஆனால், திடீர்ப் பிள்ளையாருக்காக வாதாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஹெட் கான்ஸ்டபிள் என்ன சொல்லியிருக்கிறார்? பிள்ளையார் விஷயமாக மற்றப் போலீஸ் ஆபீஸர்கள் யாரையும் பிக்சருக்குக் கொண்டுவர வேண்டாம் என்றும், எல்லாம் உன் ஒருவனோடே இருக்கட்டும், நீ ஒன்றும் பயப்படாதே என்றும் விஸ்வநாத ஐயர் இவருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அந்த ஹெட் கான்ஸ்டபிள் அப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்க வற்புறுத்தப்பட்டார் என்று சொல்கிறார். இதில் தண்டிக்கப்பட வேண்டியவர் அந்த விஸ்வநாத ஐயரா அல்லது அந்த ஹெட்

[திரு. மு. கருணாநிதி] [1970 நவம்பர் 26

கான்ஸ்டபிளா என்பதில் வேண்டுமானால் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆகவே, அதுகுறித்து அதுபற்றிய விசாரணைக்குப் பிறகு முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், அங்கே திரும்பவும் பிள்ளையார் வைக்கப்படவேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிய பிரச்னை பற்றி இப்போது நாம் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி வைக்க வேண்டிய தேவை இல்லை.

பத்திரிகைகளில் படம் எல்லாம் போட்டார்கள். சுவரொட்டிகள் எல்லாம் போட்டார்கள். பிள்ளையாரை ஜெயிலில் வைத்திருப்ப தாகவும் நாவலரை ஒரு போலீஸ்காரர் போலவும், என்னை ஒரு போலீஸ்காரர் போலவும் படம் போட்டு ஊர் எல்லாம் ஒட்டி, தி.மு.க.-வின் சாதனை 3 அல்லது 4 என்று போட்டார்கள். ஆனால் அந்த ஹெட் கான்ஸ்டபிள் அந்தக் குட்டை உடைத்திருக்கிறார். அப் பிள்ளையார் ஜெயிலில் இல்லை. இதுவரை என் வீட்டிலேதான் இருந்தார் என்று அவர் குட்டை உடைத்திருக்கும் வகையில்—அவர் குட்டை உடைத்தது மட்டுமல்ல—சுவரொட்டிகள் போட்ட வர்களுக்கும் நல்ல சூடு கொடுத்திருக்கிறார் என்பதில் அந்த ஹெட் கான்ஸ்டபிள் மீது எனக்கு மெத்த சந்தோஷம், நன்றி! பிள்ளையார் ஜெயிலில் இருக்கிறார், ஜெயிலில் இருக்கிறார் என்று பிரசாரம் செய்தவர்களுக்கு சூடு கொடுக்கும் விதத்தில், அந்தப் பிள்ளையார் தன் வீட்டிலேயே இருந்ததாக அந்த ஹெட் கான்ஸ்டபிள் இன்றைய செய்தியில் ஒத்துக் கொண்டிருக்கிறார்.

இப்போது அவருக்குள்ள கவலை, அவர்கள் ஸஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறார், அது நீக்கப்பட வேண்டும் என்பதுதான். முதலில் 'உங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்கிறேன்' என்று அந்த ஹெட் கான்ஸ்டபிள் விஸ்வநாத ஐயரிடம் பவ்யமாகச் சொல்லியிருக்கிறார். இன்ஸ்பெக்டர் விஸ்வநாதனுக்காக அதை ஒப்புக்கொண்டதாக 20-ம் தேதி சொல்லியிருக்கிறார் கமிஷனருக்கு அனுப்பிய கடிதத்தில்! ஆனால் 22-ம் தேதி ஐ.ஜி.-க்கு அனுப்பிய கடிதத்தில், நானும் சில கான்ஸ்டபிள்களும் மேல் நாட்டு மதுபானங்கள் வைத்திருப்பதைக் கண்டுபிடித்து ஒரு கேஸ் போட்டது. இன்ஸ்பெக்டர் விஸ்வநாதனுக்குப் பிடிக்கவில்லை என்றும், அதனால் இன்ஸ்பெக்டருக்கு தன் மேல் கோபம் ஏற்பட் டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட விசுவ நாதன் சொன்னார் என்பதற்காக, 'உங்களுக்காக எதை வேண்டு மானாலும் செய்கிறேன் என்று இவர் எப்படிச் சொல்லியிருக்க முடியும்? ஆகவே, அவர் கூறியிருப்பது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. அவர் முன்பு கொடுத்த வாக்குமூலம் குழப்பமானதா அல்லது அவர் இப்போது கொடுத்திருப்பது குழப்பமானதா என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம்.

அந்தப் பிள்ளையாருக்கு வசூலான பணத்திற்காக ஒரு அதிகாரியைப் போட்டது என்பதினால் அரசாங்கம் அதை அங்கீகரித்ததாகப் பொருள் அல்ல. ஐயப்பனுக்குக் கோவில் கட்டிக்



1970 நவம்பர் 26] [திரு. மு. கருணாநிதி]

கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று நினைத்து, அண்ணங்கராச் சாரியாரின் அறிக்கைக்குப் பிறகு மௌனியாகிவிட்ட ஆசாமி, இப்போது பிள்ளையாரை வைத்துச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் ஈடுபட்டபோது, ரூ. 30,000 வரை சேர்ந்தபோது ஏமாற்று வேலையில் ஈடுபடுகிறவர்களை அங்கே அனுமதித்தால் பணத்தைச் சுருட்டிக்கொண்டு போய்விடுவார்களே என்பதற் காகவே அறநிலைய அதிகாரிகள் அங்கு சென்றார்களே தவிர, அதை அங்கீகரித்து விட்டார்கள் என்று பொருள் அல்ல. அறநிலையத் துறை அந்தப் பிள்ளையாரை அங்கீகரிக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்னை. மக்களை ஏமாற்றும் நோக்கத்தோடோ அல்லது அங்கு மசூதி கட்டப்படக்கூடாது என்பதற்காகவோ அல்லது இந்து முஸ்லீம் கலவரத்தை உருவாக்குகிற ஒரு சூழ்நிலையில் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் பிள்ளையார் வந்ததாகச் சொன்னார்கள். அப்படியானால் பிள்ளையார் நேரடி யாகவே வந்திருக்கலாம், உண்மைப் பிள்ளையாரே வந்திருக்க வேண்டும். அப்படி வருவதை விடுத்து கல் பிள்ளையார்தான் வரவேண்டுமா? உண்மைப் பிள்ளையாரே வந்திருக்கக்கூடாதா? இதுபற்றி நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்கள். விசாரணை வைப்பதற்குத் தயார், பிள்ளையாரே வந்து சாட்சி சொல்வதாகயிருந்தால். மறுமலர்ச்சி யுகத்தில் பல்வேறு நாடுகளும் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் அப்பலோவை அனுப்புவதில் ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், 'பார் பார் பிள்ளையார் பார்' என்று 'பட்டணம் பார், பட்டணம் பார்', என்பதைப் போல் சொல்வது சில அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் நல்ல காரியமாக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆண்டவன் விவகாரத்தில் யார் யாருக்கு நம்பிக்கையிருக்கிறதோ அவர்கள் மனதை புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் ஆண்டவன் பெயரைப் பயன் படுத்திக் கொண்டு யார் யார் பித்தலாட்டங்கள் செய்ய எண்ணு கிறார்களோ அதை நிச்சயம் அனுமதிக்காது இந்த அரசாங்கம் என்று கூறி, இதுகுறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டு அமைகிறேன்.

திரு. கே. விநாயகம்: ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்குக் கடவுள் பேரில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல சர்ச்சை. அவர்களே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள் எங்களுக்குக் கடவுளின் பேரில் நம்பிக்கை இல்லை என்று. ஆண்டவனை சாட்சிக்குக் கூப்பிடுகிறார்கள். இப்படித்தான் ஒருவன் கூப்பிட்டான். இரணியன் அப்படித்தான் கூப்பிட்டான் ஒரு காலத்தில் ஆண்டவன் வருவான். நீங்கள் லெட்டர் எழுதியவுடன் வர மாட்டான். எப்போதோ வருவான், பார்த்துக் கொள்வோம். ஆகவே, நீங்கள் லெட்டர் எழுதும்போது அல்லது ஸமன்ஸ் அனுப்பும்போது வர மாட்டான். எப்போது வருவார் என்று சொல்லமுடியாது. இது ஜோக்கிங். விஷயத்திற்கு வருவோம்.

[திரு. கே. வினாயகம்] [1970 நவம்பர் 26

இப்போது இதுபற்றி சர்ச்சை செய்கிறோம். அதன் காரணமாக இந்த ஹெட் கான்ஸ்டபிள் மீதோ அல்லது அந்த விசுவநாதன் என்றோ ஏதோ பெயர் சொன்னார்கள், அவர் மீதோ 'அவுட் ஆஃப் தி வே'-யில் சென்று—என்கொயரி வைத்து நடவடிக்கை எடுப்பது என்பது அவர்கள் விஷயம். அதில் செய்யவேண்டியதைச் செய்யலாம்.—அவர்கள் இதை ஒரு பெரிய பிரச்னையாக்கி விட்டார்கள் என்று அவர்களைத் தண்டிக்கும் விதத்தில் விக்டிமைஸேஷன் செய்யமாட்டோம், அவுட் ஆப் தி வேயில் சென்று ஒன்றும் செய்ய மாட்டோம் என்ற உத்தரவாதத்தைத் தந்தால் இதை வாபஸ் வாங்குவது பற்றி யோசிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இப்பொருள்குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) கோவை சோமசுந்திரா ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் அல்லலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, கோவையில் 1,500 பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை செய்யும் சோமசுந்திரா மில் கடந்த நாற்பது நாட்களாக மூடப்பட்டு 1,500 தொழிலாளர் குடும்பங்கள் பட்டினிக்குப் பலியாக்கபட்டுவரும் நிலை பற்றி விவாதிக்க வேண்டும் என்று திரு. எம். பூபதி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆலைகளை மூடுவது, வேலைநிறுத்தம் ஆகியவைபற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க அனுமதி தருவதில்லை என்று மரபு காரணமாக இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒரு அறிவிப்பு.

1970-71-ம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவில், முன்னாள் நிதி அமைச்சர் அவர்கள் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தில், சட்டப்பேரவை விதி 193 (4)-ன் கீழ் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை உறுப்பினராக நியமித்திருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

5. அமைச்சர் அறிக்கை.

முன்னாள் நிதியமைச்சர் அளித்த விடையைத் திருத்தி வேளாண்மை அமைச்சர் அளித்த அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : தலைவர் அவர்களே, 3—9—1970 அன்று தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் உடுக்குறியிட்ட வினா எண். 406 (215)-ன் துணை வினா



1970 நவம்பர் 26] [டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து]

ஒன்றுக்கு விடையளிக்கையில் முன்னாள் நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பினவருமாறு தெரிவித்துள்ளார் :

" பர்மா அகதிகளுக்குப் பயிற்சிப பள்ளி ஒன்று திருச்சியிலும், ஒன்று கோயமபுத்தூரிலும் இருக்கிறது ".

மேற்கண்ட கூற்றைப் பின்வருமாறு திருத்த விரும்புகிறேன் :

" திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் உள்ள (அதிக பார வண்டிப் பயிற்சிப் பள்ளிகள்) பயிற்சிப் பள்ளிகள் பொது மக்கள் அனைவருக்குமென்று பொதுவாக ஒப்பளிக்கப் பட்டுள்ளனவேயன்றி, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர் களுக்கென்றே பிரத்தியேகமாக ஒப்பளிக்கப்பட்டன அல்ல. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் மேற்சொன்ன இரு பள்ளிகளின் பயிற்சி வகுப்புகளிலும் சேர அனுமதிக்கப்படு கின்றனர்."

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப் பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க இக் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக

1. திரு. நா. வீராசாமி,
2. திரு. கே. ஆர். கோவிந்தன்,
3. திரு. எஸ். இராமலிங்கம்,
4. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்,
5. திரு. எஸ். முத்துலிங்கம்,
6. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி

ஆகியோரை நான் நியமித்துள்ளேன்.

6. அறிக்கை அளித்தல்.

1967-68-ம் ஆண்டுக்கான காட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடு களுக்கும் மேற்பட்ட தொகை குறித்த பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I present the Report of the Public Accounts Committee on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1967–68.

7. அரசினர் தீர்மானம்.

விதி 23 (1)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளின் 23(1)-வது விதியைத் தளர்த்திவிட்டு இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

8. அரசினர் மசோதாக்கள்.

**(அ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதா**

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதாவை இந்த மாமன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இம் மசோதாவை அறிமுகப் படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் மசோதா.**

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக்கட்டுப்பாடு) நடவடிக்கைகளை செல்திறன் ஆக்குதல் மசோதாவை இந்த மாமன்றத்தின் முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகம் படுத்தப்பட்டிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றும் திருத்த) மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றும் திருத்த) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.



8. அரசினர் மசோதாக்கள்—(தொடர்ச்சி).

(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கள்கள் (மூன்றும் திருத்த) மசோதா.

THE HON. THIRU Si.Pa. ADITANAR : Sir, I move :

"That leave be granted for the introduction of the Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill 1970".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I introduce the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இப் பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா (ச. பே. ம. எண் 23/70).**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண். 23/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இந்த மசோதாவின் மீது பேசுங்கள்.

THIRU K. VINAYAKAM : There is an amendment that this Bill should be referred to a Select Committee. That may be taken up first.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் பேசிய பிறகு அதை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 1920-ம் ஆண்டு முதற்கொண்டு இம் மாநிலத்தில் நகரமைப்பு ஒரு திட்டமிட்ட அலுவலாக

* 31-8-1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. நகரமைப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்குமான சட்ட அதிகாரங்கள் 1920-ம் ஆண்டு தமிழ் நாடு நகரமைப்புச் சட்டத்திலும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளிலும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் கோட்பாடும் பயன்படும் தன்மையும் நகரப் பகுதிகளுக்கு மட்டுமே நீட்டிக்கப்பட்டது. கீழ்க்காணும் வகையில், தற்போதுள்ள சட்டத்தில் ஏனைய சில இடர்பாடுகளும் குறைகளும் உள்ளன.

(i) வட்டாரத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கு உள்ளாட்சி மன்றங்கள் சேர்ந்து கூட்டு நகரமைப்புக் குழுவினை அமைப்பதற்கு விதித்துறையிருப்பினும், பெருந் திட்டத்தைத் (Master Plan) தயாரிப்பதற்கும் அதை நிறைவேற்றுவதற்கும் வட்டாரத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் கட்டாயமான விதித்துறைகள் இல்லை.

(ii) மேம்பாட்டு வரிக்குப் போதுமான விதித்துறை இல்லை; இது நடைமுறையில் செயற்படுத்தப்பட முடியாததாகத் தெரிகிறது.

(iii) வட்டார அடிப்படையில் எல்லா நிலங்களின் ஒருங்கிணைந்த திட்டமும் வளர்ச்சியும் இல்லை.

இதுவரையில் இச்சட்டத்திற்கு விரிவான திருத்தங்கள் செய்யப்படவில்லை. விரிவான திருத்தங்கள் செய்யவேண்டியதன் அவசியம், 1938-ம் ஆண்டு முதற்கொண்டே உணரப்பட்டது.

நகரமைப்புத் திட்டங்கள், மேம்பாட்டுக் கட்டண விதிப்பைச் சீராக்கும் முறைகள், திட்டங்களுக்கு நிதி உதவியளிக்கும் முறைகள் ஆகியவற்றையும் விரிவான நகரமைப்புத்திட்ட மசோதா அவசியமென்று கருதப்பட்டால் அதையும் விரைந்து நிறைவேற்றும் நோக்கத்துடன் 1920-ம் ஆண்டு நகரமைப்புத் திட்டச் சட்டத்திற்கான திருத்தங்கள் குறித்து அறிக்கை அளிக்க 1947, அக்டோபரில் ஒரு குழுவை அரசு நியமித்தது. நகரமைப்புச் சட்டத்திற்கும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கும் திருத்தங்கள் செய்யும் கருத்துரையுடன் நகரமைப்பு சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்கள் குறித்தும் இக்குழு ஒரு விரிவான அறிக்கையை அளித்தது. மேலும், இச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. நகரமைப்பு நடவடிக்கைகள், தற்போதுள்ள சட்டத்தின் பழமையான விதித்துறைகளைக் கொண்டு முறைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன.

அமைச்சர் குழுவின் கட்டளையின்படி, இந்திய அரசின் சுகாதார, வீட்டுவசதி அமைச்சகத்தைச் சேர்ந்த மத்திய வட்டார, நகர அமைப்பு நிறுவனம், மேற்கு நாடுகளிலுள்ள பல நகர அமைப்புச் சட்டங்களை விரிவாக ஆராய்ந்த பின், மாதிரி நகர, கிராம அமைப்புத்திட்ட மசோதாவைத் தயாரித்து, வளர்ந்துவரும் பகுதிகளின் நிலைமைகளுக்கேற்ப அவசியமான திருத்தங்களுடன் அவற்றின் விரிவான சட்டங்களைத் தயாரிக்க இதை அடிப்படை-





யாகக் கொள்ளும்பொருட்டு 1961-ல் எல்லா மாநில அரசுகளுக்கும் அனுப்பிவைத்து, மேற்சொன்ன மாதிரி மசோதாவை ஆராயவும் இந்த மாதிரி மசோதாவின் அடிப்படையில் புதிய தமிழ்நாடு நகர, கிராம அமைப்பு மசோதாவைக் குறிப்பிடவும் 1963-ல் இந்த அரசு சிறப்புக் குழு ஒன்றை அமைத்தது.

மாதிரி மசோதாவை விரிவாக ஆராய்ந்த பின்னர், அதற்குப் பல திருத்தங்களை இக் குழு அறிவித்தது. பிற மாநிலங்களின் சட்டங்களும் விரிவாக ஆராயப்பட்டன; 1966-ம் ஆண்டு மகாராஷ்டிர வட்டார, நகரமைப்புச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டவாறு நகர, கிராம அமைப்பில் வட்டாரக் கருத்தும் சேர்க்கப்படவேண்டுமென்று தெரிய வந்தது. வரையப்பட்ட வட்டாரத்திற்கான வட்டார அமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதற்கான குறிப்பிட்ட விதித்துறைகளைச் சேர்க்கவும், அதனால், தற்போதுள்ள நகரங்களுக்கான பெருந்திட்டங்களைத் தயாரிப்பதுடன் வட்டார அமைப்புத் திட்டங்களில் அவ்வாறு வரையப்பட்ட பகுதிகளுக்கான புதிய நகரங்களை மேம்படுத்துவதற்கும் அவசியமிருப்பதாகக் கருதப்பட்டது.

இதற்கேற்ப, இரண்டு புதிய கூடுதல் கருத்துக்கள் இம்மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளன; ஒன்று, வட்டாரத் திட்டங்கள் பற்றியது; மற்றொன்று புதிய நகரங்கள் குறித்தது. புதிய நகர மேம்பாட்டிற்கு வட்டாரத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பகுதிகள், கீழ்க்காணும் பெரிய அளவுகளில் நகர, கிராம அமைப்பு நடவடிக்கையைக் குறிப்பிடுவனவாக அமைதல்வேண்டும்.

(i) வட்டார அளவு:

மக்கள் வாழும் வட்டாரங்களுக்கான வட்டார அமைப்புத் திட்டம். இது, கிராம, நகரக் குடியேற்றக் கோட்பாடுகளை ஏற்று, கிராம, நகரப் பகுதிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு வகை செய்யும்.

(ii) நகரப் பகுதி அளவு:

வட்டார அமைப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பெரு நகர்ப் பகுதிகள், நகர வளர்ச்சிப் பகுதிகள், புதிய நகரங்கள் ஆகியவற்றில் மேம்பாட்டுக்கான பெருந்திட்டம்.

(iii) உள்ளூர் அளவு:

பெருந் திட்டங்களில் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கான விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள்.

இந்த மசோதா குறித்த சிறப்பான கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) பாளையங்கள் தவிர தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் இச்சட்டம் பரந்து நிற்கும்;

(ii) அதிகாரிகளும் அரசுச் சார்பற்றவர்களும் அடங்கிய மாநில நகர, கிராம அமைப்புத் திட்ட வாரியம் எனப்படும் ஆலோசனை வாரியம் ஒன்றை அமைக்க வகைசெய்தல்;

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 நவம்பர் 26

(iii) வட்டார அமைப்புத் திட்டப் பகுதியாகவும் உள்ளூர் அமைப்புத்திட்டப் பகுதியாகவும் புதிய நகர மேம்பாட்டுப் பகுதியாகவும் எந்த ஒரு பகுதியையும் அறிவிக்கவும் இப்பகுதிகளுக்கான அமைப்புத்திட்ட அதிகாரமன்றங்களை அமைக்கவும் அவற்றில் கடமைகளை வரையறுத்து வகை செய்யவும் அரசுக்கு அதிகாரமளித்தல்;

(iv) இச் சட்டத்தில் காணப்படும் திட்டங்களை மாற்றுதல், நீக்குதல் அல்லது திருத்தியமைத்தல்;

(v) புதிய நகரமேம்பாட்டு அதிகாரமன்றம் வங்கிகளிடமிருந்தும் பிற பொது நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறுவதற்கான விதித்துறையுடன் பல அமைப்புத் திட்ட அதிகார மன்றங்களுக்கு நிதியளிக்கும் முறைக்கான வகை செய்தல் ;

(vi) நிலம், கட்டிடங்களின் மேம்பாட்டிற்கும் நிலம், கட்டிடங்களின் பயனை மாற்றுவதற்கும் அமைப்புத் திட்ட அனுமதியைப் பெறுதல்;

(vii) அமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு இந்த அறிவிப்பு வெளியிடப்படும் தேதியன்றுள்ள நிலவரப்படி அந்த நிலத்தின் விற்பனை மதிப்பைக் கணக்கில்கொண்டு அளிக்கப்படும் இழப்பீடு முறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் திருத்தத்துடன் 1894-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் இச் சட்டத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துதல்:

(viii) திட்டம் தயாரிக்கப்படும் அறிவிப்புத் தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லையென்றால் அந்த நிலம் இயல்பாகவே விடுவிக்கப்படுவதற்கு வகைசெய்தல்.

(ix) நிலம் அல்லது கட்டிடங்கள் அமைத்தல் அல்லது பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்துவதை மாற்றுதல்மீது அமைப்புத் திட்ட அதிகார மன்றங்கள், திட்டப் பரப்பின் பல்வேறு பகுதிகளுக்கும் பல்வேறு பயனுக்கும் பல்வேறு வீதங்களில் மேம்பாட்டுக் கட்டணங்கள் விதிக்கப்படவேண்டும்; மேம்பாட்டுக் கட்டணத்தின் உயர் அளவு வீதத்திற்கும் உட்பட்டு, மாநில அரசின் முன் அனுமதியுடன் இந்த வீதங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும்;

(x) மாநில நகர, கிராம அமைப்புத் திட்ட, மேம்பாட்டு நிதி ஒன்று அமைக்கப்பட்டு இந்த நிதியிலிருந்து எந்தக் காரணங்களுக்காகத் தொகை கொடுக்கப்படவேண்டுமென்பதையும் குறிப்பிட வேண்டும் ;

(xi) அமைப்புத் திட்ட அதிகார மன்றம் பெற்றுக் கொள்ளும் எல்லா மேம்பாட்டுக் கட்டணங்களும் தொகைகளும் "அமைப்புத் திட்ட, மேம்பாட்டு நிதிக்கணக்கு". என்ற தனிக் கணக்கின் பெயரில் பற்று எழுதப்படவேண்டும் ; இச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட காரியங்களுக்காக இந்த நிதி பயன்படுத்தப் படவேண்டும் ;



1970 நவம்பர் 26] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

(xii) இழப்பீடு அளித்தல், மேம்பாட்டுக் கட்டணங்களை விதித்தல், மதிப்பிடுதல் சம்பந்தப்பட்ட தகராறுகளை முடிவுசெய்ய நடுவர் மன்றம் அமைத்தல்;

(xiii தமிழ்நாடு அரசு வீட்டுவசதி வாரியம் மேற்கொண்ட எந்த ஒரு வீட்டுவசதித் திட்டத்திற்கு அல்லது பணிக்கு, இச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தாவென்று வகைசெய்தல்;

(xiv மத்திய, மாநில அரசு அதிகாரமன்றங்கள் அனுமதி பெறுவதனின்று விலக்களிக்கப்பட்டிருப்பினும் அவைகள் அவற்றின் கட்டிடப் பணிகள் குறித்து அறிவிப்புக் கொடுக்கவேண்டுமென்று வகைசெய்தல்.

உறுதியும் வலிவும் பொருந்திய சட்டபூர்வமான அடித்தளத்தை அமைப்பதற்கு இந்த மசோதா வகைசெய்கிறது; இந்த அடிப்படையில் எல்லா நிலைகளிலும் நகர, கிராம அமைப்புத் திட்டம் விரைந்து மேற்கொள்ளப்படவும் தற்போதுள்ள சட்டத்தில் காணும் பொத்தல்களும் குறைகளும் நீக்கப்படவும் இந்த மசோதா வகை செய்கிறது. இம்மசோதா, மேற்சொன்ன நோக்கங்களை எய்தக் கோருகிறது.

நீண்ட பெரும் காலமாகவே இந்த மசோதாவைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணம் இதற்கு முன்னால் இருந்த அரசுக்கே இருந்து வந்து இருக்கிறது. அதற்காகப் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த முறையில் இந்திய அரசாங்கமே எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் விதிமுறைகளைத் தயாரித்து அந்தந்த மாநிலத்திற்கு ஏற்ற வகையில் செய்ல்படுத்திக்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறது. அந்த வகையில் ஆராய்ந்து, இந்த மசோதாவைக் கொண்டு வந்து இருக்கிறோம். இவைகளைக் கூடுமான வரையில் நகராட்சி மன்றத் தலைவர்களைக் கலந்து கொண்டு அரசாங்கமே சில பல திட்டங்களைக் கொண்டு வர இருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு இந்த வகையில் இந்த மசோதாவை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஏ. அ. சுப்பராஜா, க. இராமமூர்த்தி, டாக்டர் ஹாண்டே ஆகிய மூன்று உறுப்பினர்களும் ஒரே மாதிரியான திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். திருத்தங்கள் ஒரே மாதிரியாக இருந்தால் ஏதேனும் ஒன்றைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நம்முடைய விதிகளில் இருக்கின்ற காரணத்தினால், திரு. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name, viz.,

"That the Bill be referred to a Select Committee consisting of members of the Assembly (list to be furnished later).

[1970 நவம்பர் 26

THIRU K. VINAYAKAM : Sir, I second the amendment.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவா அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் 127 பிரிவுகளைக் கொண்ட இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட பின் விவாதத்திற்கு வந்திருக்கிறது. சட்டப் பேரவையின் சென்ற தொடர்க் கூட்டத்தில், சட்ட மன்றத்தில் இல்லையென்றாலும், தனித்த முறையிலே இது ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்றைய தினம் இந்த மசோதா வந்திருக்கிறது. நான் இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டதற்குக் காரணம், இந்த மசோதாவை விரிவான முறையிலே படிப்பதற்கும், இதனுடைய விளைவுகளை ஆராய்வதற்கும் அங்கத்தினர்களுக்குப் போதுமான நேரம் தேவை என்பது தான். அதையேதான் நாம் அப்பொழுதே வற்புறுத்தினோம். அதற்குப் பிறகு அது எப்படியும் பொறுக்குக் குழுவிற்குப் போகும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்த மசோதாவின் விளைவுகளைப்பற்றி மிகத் தீவிரமாக அல்லது விரிவாக அங்கத்தினர்கள் ஆராயாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டுவிட்டன. ஆனால், இந்த மசோதா இன்றைக்கு இங்கு விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்த மசோதாவின்மீது பல்வேறு குழுக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன, அதற்கும் மேலாக நம்முடைய மாநிலத்திலுள்ள நகராட்சி மன்றத் தலைவர்களுடைய குழு, அமைப்பு செய்த சிபார்சுகளின் பேரில் சில திருத்தங்களைக் கூட கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் சிபார்சு செய்தாலும், இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் தமிழகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்க இருக்கிறது என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. கடந்த காலத்திலே காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட சில நிலைமைகளின் விளைவாக அவற்றை செயல்படுத்துகிற நேரத்தில், அதனுடைய விளைவுகளைப் பார்க்கிற நேரத்தில், இந்த மசோதா அந்த அளவுக்கு வேகமாகவோ அல்லது உடனடியாகவோ நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக, ஒரு கால வரையை நிர்ணயித்தாவது, அதற்குள் பொறுக்குக் குழு இதனைப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் இதனால் பல விளைவுகள் பின்னால் ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது.

இந்த மசோதாவில் 60, 61-வது பிரிவுகளில் டெவலப்மெண்டு சார்ஜ் என்ற அளவில் சில மாற்றங்கள் செய்வதற்காக, அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்கள் மீது வரி வசூலிப்பது அல்லது கட்டணத்தை வசூலிப்பதற்கான அதிகாரத்தை, அமைய இருக்கிற நகர சீரமைப்புக் குழுவிற்கு வழங்குவது பற்றி கூறப்பட்டிருக்கிறது, இது ஏற்கனவே இருக்கிற ஒன்று தான், பெட்டர்மெண்டு





லெவி என்று முன்னால் இருப்பதைப் பெயர் அளவில் டெவலப்மெண்டு சார்ஜ் என்று சொல்லி இதை மாற்ற இருக்கிறோம் என்று சாதாரணமாக இது பற்றிய வாதம் கூறக்கூடும். ஆனால், இந்த நேரத்தில் இது எப்படிப் பொது மக்களை சாதாரணமாகப் பாதிக்கும் என்பதைக் கருத்து ஊன்றிப் பார்க்கவேண்டும்.

பெட்டர்மெண்டு லெவி என்பது—பொது மக்கள் வரியாகத் தருகின்ற பணம் மிகக் குறைவு, சதவிகிதமும் குறைவு. ஆனால், டெவலப்மெண்டு சார்ஜ் என்று வருகிற நேரத்தில், நாம் பெயரை மாற்றுவது மட்டுமல்ல, வருவாயைப் பெருக்குவதற்கும் அதிகமான அளவில் வரி வசூலிப்பதற்கும் நம்மை அறியாமலோ, அறிந்தோ ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. டெவலப்மெண்டு சார்ஜ், எந்த அடிப்படையிலே கணக்கிடப்படும் என்பதைப்பற்றி 61-வது பிரிவிலே கூறப்பட்டிருக்கிறது. இண்டஸ்ட்ரியல், கமெர்ஷியல் ரெஸிடென்ஷியல், அக்ரிகல்சுரல், மிஸெலேனியஸ் என்று பல்வேறு நிலைமைகளை மனதில் கொண்டு, இந்தத் திட்டத்தின் விளைவாக எப்படி முன்னேறும் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த அடிப்படையிலே ஒரு கட்டணத்தை வசூலிப்பதற்கான நிலைமை ஏற்படுத்தப்படுகிறது. நகர்ப்புறத்தில் இருக்கிற வரி விகிதத்தைவிட மிக அதிகமான வரி விகிதத்தை, கட்டணத்தை வசூலிப்பது என்றால், என்ன பெயர் சொன்னாலும், அது பொது மக்கள் செலுத்துகின்ற பணம், அவர்கள் மீது சுமத்தப்படுகின்ற பளு என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தக் கட்டண விகிதம் மிகப் பெரிய அளவிற்கு சமுதாயத்தில் இருக்கிற ரூரல் பாபுலேஷன் என்று சொல்லப்படுகின்ற கிராமப்புற மக்களைப் பாதிக்கின்ற அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. பெட்டர்மெண்டு லெவி தான் டெவலப்மெண்டு சார்ஜாக இருக்கும் என்ற உறுதியை அரசு கொடுக்குமா? பெட்டர்மெண்டு லெவி என்ற பெயரால் இந்த அரசுக்கு எந்த அளவுக்கு வருவாய் வருகின்றதோ அதைவிட அதிகமாக டெவலப்மெண்டு சார்ஜ் என்ற கட்டண அடிப்படையிலே பணத்தை அரசு வசூல் செயயாது என்ற ஒரு அண்டர்டேக்கிங்கை, உத்திரவாதத்தை இந்த அரசு தருமா என்று நான் அறிய விரும்புகிறேன். நிச்சயம் தர முடியாது. தரமுடியாததற்குக் காரணம் டெவலப்மெண்டு சார்ஜ் என்ற பெயரால் அதிகமான அளவிலே கட்டணம் விதிக்க இருக்கிறார்கள் என்பதைத் தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இதற்காக ஒரு குழு, அல்லது ஒரு போர்டு அமைப்பது என்பதைப்பற்றி இந்த மசோதாவிலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்படி அமையவேண்டும் என்பதைப்பற்றிய பிரிவும் இருக்கிறது. இதைப்பற்றி மிகுந்த கண்காணிப்பு இருக்கவேண்டியிருக்கிறது. பல போர்டுகளை அமைத்திருக்கிறோம். சில நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன.

அந்த அனுபவத்தையொட்டி இதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். யார் தலைவர் என்பதைப்பற்றி யெல்லாம் கூறப் பட்டிருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்து, சில திருத்தங் கள் அரசுத் தரப்பிலிருந்தும், என்னுடைய தரப்பிலிருந்தும், மற்றவர்களுடைய தரப்பிலிருந்தும் வந்திருக்கின்றன. இது போன்ற விவகாரங்களை விரிவாகப் பரிசீலிக்க வேண்டும். இந்தக் குழு, வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, இதற்குச் சில அதிகாரங் களைத் தர இருக்கிறோம். இந்தக் குழு போலீசாரைப் பயன் படுத்திக்கொள்ளலாம். ரெவின்யூ இலாகாவைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு இலாகாக்களை, துறைகளை வேண்டும் பொழுது, வேண்டிய நேரத்தில் வேண்டிய காரணத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற விசேஷ அதிகாரத்தை இந்த வாரியத்திற்குத் தருகிறோம். இந்த அமைப்பு இவற்றையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், பயன்படுத்த வேண்டுமென்பதுதான் நம்முடைய எண்ணம் என்றாலும்கூட, பயன்படுத்துகின்ற சூழ்நிலையையும், விதிமுறைகளையும், நாம் நல்ல முறையில் அமைத்தால் நன்கு செயல்பட முடியும், அதற்கான சட்ட விதிகளை அமைக்கவேண்டும்.

என்ன சாபக்கேடோ தெரியவில்லை. இந்த அரசைப் பொறுத்த வரையிலும், பல் வேறு மசோதாக்கள் கொண்டுவரப்படும்பொழுது 10, 15 பிரிவுகளைக் கொண்ட மசோதாக்களாகத் தான் கொண்டு வரப்படுகின்றன. அவைகளுக்கான விதிகளை அமைக்கின்ற அதி காரத்தை அரசு எடுத்துக்கொள்கிறது. சட்டத்தில் என்ன நினைத்தோமோ அல்லது என்ன நினைக்க முடியுமோ என்பதை நாம் கற்பனையில் எண்ண முடியாத அளவுக்கு விதிகளைச் செய்கிறார்கள். உதாரணமாகத் கூட்டுறவுத் துறையைப்பற்றி மசோதாக்கள் வருவதைப் பார்க்கிறோம். இந்த மசோதாக்களைவிட, அதன் பின்னாலே நிறைவேற்றப்படுகின்ற விதிகள் எந்த அளவுக்கு அந்தத் துறையிலே நாட்டையும், மக்களையும் பாதிக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இந்த வாரியத்தை அமைப்பதற்கு, இந்த மசோ தாவை நிறைவேற்றி, அதற்கான விதிகளைப் பின்னாலே நிறை வேற்றிக்கொள்வதற்கு அதிகாரத்தை இந்த அரசுக்குக் கொடுக்கிற நேரத்தில், விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை இந்த மாமன்றம் கண்டிப்பாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குச் சென்றால்தான், மனதிலே எப்படிப்பட்ட எண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்ற அளவிலே இந்தப் பொறுக்குக் குழு துணை புரிய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்ல வேண்டும். கடந்த அரசானாலும் சரி, இந்த அரசானாலும் சரி, பெருவாரியான நிலத்தைக் கையகப்படுத்தும்போது, ஊழல்கள் நடைபெறுகின்றன. மின்சார வாரியமானாலும், வேறு வேறு துறையானாலும், ஊழல், ஊழல், என்ற குற்றச்சாட்டைத்தான் பார்க்கிறோம். அதைத்





தவிர்க்க முடியாது. அதிலிருந்து தப்பிக்கவும் முடியாது. அந்தச் சூழ்நிலையில், இந்த மசோதாவின் அடிப்படையில் நிலத்தைக் கையகப்படுத்தும், அதிகாரத்தைத் தருகிறோம். அந்த அதிகாரம் எந்த வகையில் பயன்படுத்தப்படும் என்பதை நம்முடைய ஊழல் அனுபவத்தை வைத்துக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். அதி காரத்தைப் பரவலாகக் கொடுத்துவிட்டு, பின்னால் ஊழல் ஏற் பட்டால் சொல்லுங்கள், குற்றஞ்செய்தவர்களைக் கொண்டு வாருங் கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லிப் பின்னால் வாதாடுவதைவிட, அப்படிக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருகிறவர் சொல்வது உண்மையா அல்லது அவற்றை மறுப்பவர்கள் சொல்வது உண்மையா என்பதையெல்லாம்பற்றி வாதங்கள் நடத்து வதை விட, நிலத்தைக் கையகப்படுத்தும் அதிகாரத்தைக் கொடுக் கும்போதே, மிக்க கவனத்தோடு, பொறுப்போடு, அந்த வாரியத் திற்குக் கொடுக்க வேண்டும் என்கிற நிலைமை இருக்கிறது. அந்தச் சூழ்நிலைமையைப் பார்க்கும்போது, இப்படி இந்த மசோதாவை அவசர அவசரமாக நிறைவேற்றத் தேவையில்லை, நிதானமாக, இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, ஆர அமர யோசனை செய்து முடிவு எடுப்பது நலமாக இருக்கும்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், மிகுந்த அளவில் காலங்கடத்தி வந்திருக்கிறோம். என்னென்ன வழிகள் என்பதை நிதானமாக ஆராய்ந்திருக்கிறோம். மற்ற மற்ற மாநிலங்களில் வாரியங்களுக்கு அங்கேயெல்லாம் எந்த நிலைமை என்பதைக் கேட் டறிந்திருக்கிறோம். அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டிருக் கிறோம். சிற்சில விவரங்கள் வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த விவரங்களையே வைத்துக்கொண்டு முடிவு எடுப்பது என்பதைவிட, பொறுக்குக் குழுவிற்கு விட்டு நிதானமாக அந்தக் குழுவில் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். பொறுக்குக் குழுவில் பேசுவதை இங்கே பேசலாம் என்றாலும் கூட, பொறுக்குக் குழுவில் பேசித் தெரிந்து கொள்ளும் விவரங்கள், இங்கே பேசிக் கொள்வதை விட அதிகமாக இருக்கும். அதிகமான விவரங்களை உரிய அதி காரிகளிடம் பெற முடியும். அதற்கான அவகாசத்தையும், சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், நகரச் சீரமைப்புத் திட்டங்கள் மசோதா எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பதற்காக சிறப்புக் குழுவை கடந்த காலத்தில், எங்கள் காங்கிரஸ் ஆட்சி முடிவு செய்திருக்கிறது. அதைத் தொடர்ந்துதான் இந்த மசோதா வந்திருக்கிறது. எப்படியிருக்க வேண்டும் என்பதற்கே ஒரு குழு போட்டார்கள் என்றால், மசோதாவை முடிவாகச் செய்யும்போது அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. தனிப்பட்ட பகுதியையோ நகரத்தையோ, அந்த வேறு பகுதிகளையோ வளப்படுத்தும் சீரமைப்புத் திட்டம் இல்லை இது. பரவலாக எந்தப் பகுதியானாலும், எந்தக் கிராமமா னாலும், அதற்காக விரும்பும் இடத்தில் அதாவது வாரியம் விரும்பும் இடத்தில், வளப்படுத்த முடியும், திருத்த முடியும்; உயர்த்த முடியும்

என்கிற நிலைமை. அதற்காகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட எந்தப் பகுதியையோ, தொழில் வளம் நிறைந்த பகுதியையோ; ஏதோ எண்ணிக்கை அளவில் என்று செய்யவில்லை. தமிழகம் முழுவதற்கும் பொருந்தும் நிலையில் வந்திருக்கிறது. கிராம, நகர, வட்டார, சீரமைப்பு என்ற அளவில் இருக்கிறது.

அப்படிப் பார்க்கும்போது, இந்த மசோதா ஒரு புரட்சிகரமான மசோதா. அப்படிப் புரட்சிகரமாக செய்யும்போது, வசதி படைத்தவர்கள், வரியைச் செலுத்தும் வாய்ப்பு வசதி படைத்தவர்கள் எப்பொழுதும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள், சாதாரண மக்கள்; எங்களைப் போன்ற நடுத்தர மக்கள், இவர்களைப் பாதிக்கும் அளவில் மசோதாவைக் கொண்டு வருகிறோம். மசோதா தேவை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறோம். அதே நேரத்தில், இப்படியே நிறைவேற்றப் பட்டால், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள், நடுத்தர மக்களும் பாதிக்கப்படுவார்கள். 'எங்கேயிருக்கிறது, காண்பியுங்கள்' என்று சொல்வது நல்லதல்ல. விரிவான பரிசீலனை தேவை. பாதிக்கப்படாத நிலைமை ஏற்பட்டால். நிச்சயமாக இந்த மசோதாவை நிறைவேற்றித் தமிழகத்திற்கு முழுவதும் சீரமைக்கும் பணியில் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

ஆகவே, இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, விரிவாகப் பரிசீலனை செய்து, அதன் பிறகு இந்த மாமன்றம் மசோதாவை நிறைவேற்றுவது நல்லது என்று நினைக்கிறேன். ஆகவே; அமைச்சரவர்கள், இதிலே மிகுந்த அக்கறையோடு ஈடுபட்டு, பொறுப்பேற்றிருப்பதால் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று எண்ணி, அமர்கிறேன்.

THIRU A. A. SUBBARAJA : Sir, I shall move the amendment standing in my name. . . . . . ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமெண்ட்மெண்டை மூவ் செய்ய வேண்டாம். அதுதான் அப்பொழுதே தலைவர் சொல்லியாகிவிட்டதே; நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த டவுன் அண்ட் கண்ட்ரி ப்ளானிங் என்ற மசோதா முக்கியமானது. இது புதிதாகக் கொண்டு வரப்பட்டாலும், ஏற்கனவே இருந்த சட்டத்திலே சில திருத்தங்களைச் செய்து, பல மாநிலங்களிலும் எந்த வகையில் இயங்குகின்றன என்பதைக் கேட்டறிந்து, அதே போல நம் மாநிலத்திலும் கொண்டு வந்தால் எப்படியிருக்கும் என்று யோசித்து, இந்த மசோதா கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதிலே என்னைப் போன்ற நகரசபைத் தலைவர்கள் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் எந்த எந்த விதத்தில் பாதகம் ஏற்படும் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்ட நிலையில் இருக்கிறோம். அந்த வகையில் இந்த மசோதாவைப் பார்க்கும் போது, எனக்குப் பட்ட சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.





என்னுடைய திருத்தத்திலே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டமே தேவையில்லை என்று சொல்லவில்லை. சட்டமாக வேண்டியது இல்லை என்பதில்லை. எங்கெங்கே பிரத்தியட்சமாகக் கஷ்டங்கள் ஏற்படுகின்றனவோ, அந்த அந்த கிளாசுகளைத் திருத்தி, அந்த வகையில் இதை அமைக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டால், அதற்கு ஆட்சேபணையில்லை. நண்பர் திரு. இராமமூர்த்தி அதை ஒரு சில இடங்களில் இருப்பதை விட்டு, மொத்தமாகச் சொன்னார்கள். கிளாசுகளை எடுத்துப் பார்த்தால் கஷ்டங்கள் வருகின்றன. சில கிளாசுகளால் ஏழை மக்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது.

புதிதாக ஏற்படக்கூடிய லோகல் ப்ளானிங் அதாரிடி என்கிற கமிட்டி ஸ்தல ஸ்தாபனங்களைவிடத் தனியாக ஒரு கமிட்டியாக இருப்பதால், சில கஷ்டங்கள் ஏற்படலாம். எப்படியென்றால், இதற்கு முன்பெல்லாம் நகரசபை முழுமையாக கமிட்டியாக திட்டங்களை வரைந்து, பின்னால் வரைந்தது வேண்டாம் என்றால், செயல்படுத்த முடியாது. இப்பொழுது அரசாங்கத் தரப்பில் தனியாகக் கமிட்டி அமைத்திருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லாப் பிரிவுகளும் இந்தத் திட்டத்தின் கீழ் வருகின்றன. ஒவ்வொரு பிரிவாக எடுத்துக் கொண்டு, அவற்றிற்கு ரூல்ஸ் ப்ரேம் பண்ண வேண்டும். நகர அமைப்புகளை எடுத்துக்கொண்டால், அந்தப் பிளானில் இருக்கக் கூடிய காலி இடங்களையெல்லாம் பிற்காலத்தில் விரிவுபடுத்தக்கூடிய வகையில், மற்றவர்களுக்கும் பாதகம் அளிக்காத வகையில் இருந்தால் வரவேற்கக்கூடிய விஷயம். நியூ டவுன் ஏரியா, லோகல் டெவலப்மெண்ட் ஏரியா என்று வரும்போது அந்த இடங்களில் ஏற்கெனவே கட்டிடங்கள் இருக்கும், குடிசைகளும் இருக்கும், குடிசைகளில் ஏழை மக்கள் இருந்துகொண்டிருப்பார்கள். குடிசைகளை அகற்றும்போது பிரச்சினைகள் எழுகின்றன. அந்த அமைப்புகளில் பிற்காலத்தில் லோகல் பஞ்சாயத்து அதாரிடி மூலமாக ரோடுகள், பார்க்குகள், ஸ்கூல்கள், ஆஸ்பத்திரி போன்றவற்றிற்கு இடம் அளிக்கும் வகையில் ரூல்ஸ் ப்ரேம் செய்யவேண்டும். அதற்காக ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். சில இடங்களில் தொன்று தொட்டு சுமார் 100 ஆண்டுகளாக வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கலாம். ரோடு பத்தடிதான் இருக்கும். இம்மாதிரி இருப்பது சுகாதாரக் குறைவு என்று சொல்லி, ரொம்ப நாட்களாக அங்கே வாழ்ந்துகொண்டிருப்பவர்களைத் தொல்லைக்குட்படுத்தக்கூடாது.

மற்றும் குடிசைகள் போடக்கூடாது என்கிறார்கள். ஏழை எளிய மக்கள், அன்றாடம் கூலி வேலை செய்யும் ஏழைகள் குடிசை போடாமல் என்ன செய்ய முடியும்? குடிசைகள் போடுவதால் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன, சேதம் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். உண்மைதான். ஆனால் தீ விபத்துக்கள் அகஸ்மாத்தா

கத்தான் வரும். குடிசைகள் இருக்கக்கூடாது என்று ஒரு சட்டத்தைப் போட்டு, அந்தச் சட்டத்தை அமல்படுத்தினால் அங்கே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் அந்த இடத்தை வேறு யாருக்காவது விற்றுவிட்டு, வேறு இடங்களுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஏழை எளிய மக்களும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் ரூல்ஸ் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும். தவிர, ஆங்காங்குள்ள நகரசபைத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அனுபவம் பெற்ற அதிகாரிகள் இவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்-ஸை உருவாக்கினால்தான் சட்டம் நல்லபடியாக அமையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பெட்டர்மெண்ட் கான்ட்ரிபியூஷனைப்பற்றி நண்பர் இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி டவுன் பிளானிங் பஞ்சாயத்து ஆக்டிலே கிளாஸ் 60, 61-லே வழி செய்திருக்கிறோம். இன்னும் புதிதாகச் செய்வதற்கு ஒன்றும் இல்லை. கான்ட்ரிபியூஷனைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்றுதான் நாம் சொல்ல வேண்டும். சில சலுகைகள் காட்டத்தான் வேண்டும். பெரிய பணக்காரர்களிடத்தில் அதிகமாக வாங்கலாம். அவர்கள் கொடுக்கவில்லையென்றால், முனிசிபாலிடியாரே ஆகக்கூடிய செலவைச் செய்துவிட்டு, அந்தப் பணத்தை அவர்களிடத்தில் வாங்கலாம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஏழை எளிய மக்கள் இருக்கும் இடத்தில் இந்தச் சட்டத்தைப் போட்டால் என்ன செய்ய முடியும்? அவர்களால் பணம் கொடுக்க முடியாது. பணம் கொடுக்காதவர்களை ஜெயிலில்தான் தள்ள முடியும். இந்த மசோதா நல்ல மசோதா தான். ஆகவே, அந்தந்த ஏரியாவில் இருக்கக்கூடிய நகரசபைத் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், அனுபவம் கொண்ட அதிகாரிகளையும் கொண்ட கமிட்டியை அமைத்து செய்ய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் குடிசைகளைப் போட்டுக்கொண்டு நெருக்கமாக இருக்கும் இடத்தில் இந்தச் சட்டத்தை அமல்படுத்த முடியாது. எனவே, அம்மாதிரியான இடங்களை 'பில்ட்டப் ஏரியா' அல்லது 'ஹட்டிங் ஏரியா' என்று அறிவித்து விடவேண்டும். இல்லையென்றால் இந்த மசோதாவின் அடிப்படையான நோக்கம் நிறைவேறாது, மக்களுக்கு வீண் கஷ்டங்கள்தான் ஏற்படும். லோகல் பிளானிங் அதாரிடி, ரீஜனல் பிளானிங் அதாரிடிக்கு சேர்மன் ஒருவர் போடலாம். எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும், எதிர்க் கட்சித் தலைவரை சேர்மனாகப் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் இந்தக் கமிட்டியில் லோகல் போர்டில் இருப்பவர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதில்லை. ஒன்றிரண்டு பேர்களைத்தான் போடலாம் என்று விதிகள் இருக்கின்றன. மேலும் தகராறுகள் ஏற்படும்போது அதைப்பற்றி லோகலில் அங்குள்ளவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். ரோடுகளை அகலப்படுத்த



வேண்டும், தெருக்களை அகலப்படுத்த வேண்டும் என்றால் அங்குள்ளவர்களுக்குத்தான் அங்குள்ள நிலைமை நன்றாகத் தெரியும். புதிதாக சேர்மனாக வருபவர் கையிலுள்ள பிளானை வைத்துக்கொண்டு, இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டும் என்றுதான் சொல்வார். மேலும் 'may be' என்று போட்டிருக்கிறார்கள். 'மே' என்று போட்டிருக்கிறார்கள். 'ஷல்' போட்டால் என்ன தப்பு? முன்னாலே இருக்கக்கூடிய கஷ்டத்தை உத்தேசித்துத்தான் இப்படிச் செய்கிறோம் என்று சொல்லலாம். 'மே' உபயோகித்து வேறு யாரையாவது போடலாம் என்று இருக்கிறது.

ஐ.ஏ.எஸ். ஆபீசர்களைப் போடவேண்டும். எந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்று கமிட்டியை அமைக்கிறோமோ அந்த நோக்கம் கெட்டுவிடக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே இருக்கிற சிக்கல்களை எல்லாம் அகற்ற வேண்டும். நண்பர் இராமமூர்த்தி அவர்கள் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்னார்கள். முக்கியமாகச் சொன்னது, போடக்கூடிய வரி எவ்வாறு எல்லாம் மக்களைப் பாதிக்கும் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அந்த வரிகளைக் கூடியமட்டில் குறைக்க வேண்டும். எடுக்கக்கூடிய ஏரியாவைப் புதிய ஏரியாவாக எடுக்க வேண்டும், அதற்கு வேண்டிய ரூல்களையும் ரெகுலேஷன்களையும் நல்ல முறையில் உருவாக்க வேண்டும். ஆகவே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பாமல் இதைச் செய்துவிட முடியாது. அமைச்சர் அவர்கள் கொஞ்சம் மனதிலே கவனம் எடுத்துக் கொண்டு, ரூல்களையும் ரெகுலேஷன்களையும் நல்ல முறையில் அமைப்போம் என்று வாக்குறுதி அளித்தால் நலமாக இருக்குமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker Sir, on behalf of the Swatantra Party I have given notice of an amendment that the Bill be referred to a Select Committee. Due to certain rules, three amendments have been clubbed together. Our amendment stands and we want the Bill to be referred to a Select Committee, because this is a very cumbersome and huge bill with 127 clauses. In the history of our legislature, there has not been a Bill with so many clauses which has not been referred to a Select Committee. Even in respect of small Bills with half a dozen or dozen clauses, if there is any difference of opinion on, or controversy about, the clauses, the custom has been to automatically refer them to Select Committee. The Select Committee interviews a number of important persons connected with the subject matter of the Bill and invites their opinion. It will be a surprise if such a Bill is not referred to a Select Committee. Even though the Hon. Minister for Education and Health might have decided not to refer the Bill to a Select Committee, I plead with him to reconsider his stand and allow the reference of the Bill to a Select Committee.

On page 171 of the Bill, it is mentioned in the Statement of Objects and Reasons : ' The Model Bill was commended for adoption in the States with suitable modifications to suit local conditions. In 1963, a Special Committee was constituted consisting of the Director of Town-Planning, the Commissioner, Corporation of Madras, and certain select Municipal Commissioners to examine, among other things, the said Model Town and Country Planning Bill. The Commissioner of the Corporation of Madras is changed once in every one or two years, and suddenly we find a new Commissioner being posted. There are 120 divisions in the City. Each division has got its own characteristics. A division like Perambur is entirely different in its composition and basic needs from a division like Mylapore or Saidapet. Similarly, the Park Town Division is different from any other division in the type of people inhabiting it and the amenities required. What is the point in having the Commissioner here? By the time he knows the names of the divisions and their location, he is transferred, and another officer is posted who has absolutely no idea of the place. When I say this, I mean no disrespect to the quality or calibre of the officer. I submit that, with all his experience, he may not be able to judge a problem aright. I wonder what the object is in this mixture of different officers who are transferred now and then.

In paragraph 4 of the Statement of Objects and Reasons it is said : " Planning will have to transcend statutory boundaries of local authorities and that, in many a case, a plan should be a composite one covering either a Metropolitan area of a Regional area ". How are we going to achieve the object ? Are we going to take the members of the Assembly reprebuting that area and who know the area, into confidence and have them on the board? Or, is it going to be a centrally organised board on a regional basis which will have the power? Then each regional board will come to its own decision. That point is not clear. That is one of the reasons why I want the reference of the Bill to a Select Committee.

I would like to submit one more point. Let us take for instance the City of Madras. Almost all the industries are located very near the City. In the last ten years, the population has increased by about twenty or twenty-five per cent. But the amenities have not increased ; on the other hand they have definitely deteriorated. There is no co-ordination between the Corporation of Madras, the Electricity Board and the Telephone Department. The Telephone Department digs the road, lays the cable and restores the road to its original position. Then the Electricity Board digs the road, lays the electric wire and restores the road to its original position. Then the Water Works Department digs the road and lays the pipes. Then comes the Sewage Department. The net result is that we find that almost all the roads in the City of Madras thoroughly bad and in a state of pell-mell. This is a very complex and complicated issue. Therefore we have to refer this Bill to a Select Committee.





The population is increasing and the amenities are going down. The only solution to avoid this position is to have satellite towns fifteen, twenty or thirty miles off the Madas City. To effect the dispersal of the population to these suburban regions, there is only one method and that is the provision of increased transport facilities. Take the City of Bombay. Persons living in Kalyan and Poona are able to come to their offices in Bombay City within one and a half hours. There is the system of electric trains and people from satellite towns are able to come to Bombay. Even there, they are not able to cope up with the traffic due to increase in the population. Similarly in Madras we should have electric trains from Chingleput. In North Madras we do not have electric trains as we have in South Madras. In North Madras we should have electric trains from Avadi and Ambattur. Satellite towns and transport facilities will facilitate the dispersal of population.

There was also a suggestion for laying a circular railway. We can have two or three different routes. Now we have a railway from the south. We can have a railway from east to west. The entire City of Bombay is covered by electric train by different routes. We can have a circular railway, a railway diagonally and also criss-cross lines. That is one of the ways by which we can have dispersal of population.

The other method is that we can have dispersal of offices. We can shift some of the offices in the Madras City to Madurai for instance. Offices where work of an emergent nature is not transacted can be transferred from the City to the southern parts so that we can take the load of population off the City. This is a huge Bill. So many problems have to be considered and this will be possible only if the Bill is referred to a Select Committee.

The machinery proposed in this Bill is unworkable and will create proliferation of officers with no commensurate benefit. It has been drawn up without any reference to realities in our urban and rural areas.

There is absolutely no co-ordination in this Bill.

The proposed Town and Country Planning Board (Clause 5) is predominently an official body with provision for only three members nominated from Members of the Legislative Assembly, the Legislative Council and the Parliament. Such a preponderantly official body would be worthless as it will not be acquainted with realities.

Here it is a question of co-ordination between different Departments. Even Municipal authorities like Inspectors of Municipal Councils and Panchayats are also not included. Is Town and Country Planning possible without these local autho- ந.ப. 12-00
rities? That is a very important point.

I come to the next point. The new Town-Planning Authorities will become new empires with a large staff independenfly of corresponding staff in Municipalities. (The Hon. Minister for

Food was seen conversing with the hon. Member). Now I am seeing some signs of the possibility of the Bill being referred to the Select Committee, which means that I need not dilate upon a number of other points which I wanted to refer. I would welcome the reference of the Bill to a Select Committee.

Now, we do not have enough technical staff for town planning. Are we going to dump Revenue Department officers for this work? Let them do their revenue work properly and the village Officers can be taken into their confidence. But other things can be given to experts.

Clauses 60 and 61 provide for the levy of development charges at Rs. 5 per sq. metre and Rs. 20,000 for a hectare. This will be an additional burden on the tax-payer. Already we have got the Urban Land Tax which is mounting. Along with that tax, we are going to have this levy and this aspect of the matter has to be seriously considered. Many people are going to resent it as they may not get commensurate benefits.

The Bill provides for a Tribunal for appeal against the award of compensation, etc., and this provision is no doubt good but the procedure will be cumbersome and the advantage is illusory.

The Bill is on the whole not well-conceived with reference to actual conditions. It gives too much power to the new authorities and perpetuates the mutual exclusiveness of the concerned authorities. If this Bill is referred to the Select Committee, I can raise some more points.

With regard to fly-overs, we are told that we are going to have fly-overs near Gemini. One day the Commissioner of Police gives a statement and on another day the Corporation Commissioner gives another statement and yet on another day the Hon. Minister gives a statement but actually the scheme has not been implemented. Tenders have been called for but still the work has not been taken up. There is some bottleneck somewhere and the Government should see that it is removed and the work started immediately.

As regards sub-way, we have been told that there is going to be a sub-way in Mount Road. Now, there is only a pathway for passengers. We should have a sub-way so that smooth traffic can take place there and I hope the Government will consider this aspect of the matter.

Now I come to the State Housing Board which is a supreme body which does not come within the purview of any rule or law. I would request the Government to see that the Board, like any other public institution, confines itself within certain rules.

Lastly, I will quote some excerpts from a British Official Handbook, 1967. It is stated therein :





"The Town Development Act, 1952 makes provision for the relief of congestion in large industrial towns in England and Wales by encouraging the transfer of population from these areas to places suitable for expansion where employment is provided. Here also, whenever we want to remove a slum, we transfer some people from that area to another area like Vyasarpadi or Ambattur. These people have to be provided with employment in the new areas where they have been transferred.

I have got a number of other points to refer to but now that the Hon. Minister has appreciated my points perhaps they have had an impact on him and has agreed to refer the Bill to a Select Committee, I do not want to refer to them. I am grateful to him. Thank you, Sir.

* **திரு. என். சங்கரய்யா :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று விவாதத்தில் இருக்கக்கூடிய இந்த மசோதாவைப்பற்றி இதனுடைய கோட்பாடுகளை என் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

ஏற்கனவே தமிழகத்தில் 1920 ஆண்டினுடைய நகர அமைப்புத் திட்டமிடுதல் சட்டத்தை மாற்றி அமைத்து, விரிவாக நகர்புறத்தையும் நாட்டுப்புறத்தையும் ஒருங்கிணைத்து, நகரத்திற்கான திட்டங்களையும் பிரதேச ரீதியான திட்டங்களையும் சீராக்குவதற்காக, நகர அமைப்புத் திட்டத்தையும் மாற்றி அமைப்பதற்காக வகை செய்யக்கூடிய இந்த மசோதாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த போது இந்திய அரசு தயாரித்து மாநிலங்களுக்கு அனுப்பிய ஒரு 'மாடல்' சட்டத்தின் அடிப்படையிலேயும், மகாராஷ்டிர மாநில சட்டத்தின் அடிப்படையிலும் இது உருவாக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். ஆகவே இன்று நாடு வளர்ச்சி அடைந்து வருகிற நோக்கில் மாநிலம் முழுமையும் பயன்படுகிற வகையில் நகரங்கள், நாட்டுப்புறங்களில் மக்கள் வசதியாக வாழ்வதற்கான வகையிலும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதையும் எதிர்கால ஏற்பாடு வளர்ச்சிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்காகத் திட்டம் இடவேண்டுமென்பதும் திறம்படச் செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால், இன்று சுமார் 127 பிரிவுகளைக் கொண்ட இந்த மசோதா இந்த சட்டப் பேரவைக் கூட்டத்திலேயே பரிசீலனை செய்து திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்படுவது சாத்தியம் அல்ல என்று நான் கருதுகிறேன். ஆகவேதான் இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை ஆதரித்துக் கூற விரும்புகிறேன். காரணம், இன்று அவசரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டால்—மதுரையிலே எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. ஜெய்ஹிந்த் புரம் என்ற மாடக்குளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ஊரை மதுரை நகர் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வந்தார்கள். நகரத்திலே வீடு கட்டவேண்டுமென்றால் என்னென்ன விதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இருக்கிறதோ, அதைவிடக் கடுமையான விதிகளைப் போட்டதன் காரணமாக இரண்டா

[திரு. என். சங்கரய்யா] [1970 நவம்பர் 26

யிரம் வீடுகளை இடிக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு கோர்ட்டில் வழக்குகள் இருக்கின்றன. அதன் காரணமாக அதில் அரசாங்கம் தலையிட்டு ஸ்டே செய்ய வகைசெய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நகர் அமைப்பு, கிராம அமைப்பு இவைகளைக் கவனிக்கும் போது, பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடுகள்தான் அதிக தூரம் செல்ல முடியும். இந்தியாவிலேயே, குறிப்பாகத் தமிழகத் திலே பார்க்கும்போது, சாதாரணமாக ஏழை மக்கள் நடுத்தர மக்கள் குடியிருக்கிற பிரதேசங்கள் பெரும்பாலும் இருக்கின்றன. ஆகவே, நாம் போடக்கூடிய திட்டங்கள் இந்த மக்களுடைய பொரு ளாதாரத்தைப் பாதிப்பதாக இருக்கக் கூடாது. யதார்த்தங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு திட்டத்தை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது.

இன்றைக்கு வாழ்வதற்குப் போதுமான வழியில்லாமல் நகரங் களிலும் நாட்டுப்புறங்களிலும் பெரும்பாலானவர்கள் இருக்கிறார் கள். இரண்டு விதமான நவீனமான முறைகள் இருக்கின்றன. ஒன்று, வீடுகளைக் கட்டும்போது ரோடுகளுக்கு இடம் இல்லாமல் கட்டி விடுகிறார்கள். மற்றொன்று, அதி அற்புதமான திட்டம் என்று போட்டுவிட்டு விதி முறைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை இருக்கிறது. நண்பர் சுப்பராஜு அவர்கள் சொன்னதைப் போல குடிசையில் வாழ்கிறவர்கள், ஏழை எளியவர்கள் இவர் களுக்கு நிபந்தனைகளை அதிகமாகப் போட்டால் அது அவர்களைப் பாதிக்கும். ஆகவே, இந்தக் காரணங்களை உத்தேசித்துத்தான் நாம் இன்றைக்கு இந்த இடத்திலே உடனடியாகச் சட்டம் ஆக்கா மல் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் இன்னின்ன பிரச்சினைப் பற்றி இன்னின்ன விதிகளை அரசாங்கம் வகுக்கலாம் என்று கூறு வதற்குப் பொறுக்குக் குழுவிலே சாத்தியம் இருக்கிறது. ஆகவே வதற்குப் பொறுக்குக் குழுவிலே அனுப்பக்கோருகிற தீர்மானத்தை ஆதரித்துக் கூறி அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கும்படியான மசோதாவிற்கு எங்கள் கட்சியின் சார்பில் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கும்படியான, இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகி றேன். தமிழ்நாட்டிலே நகரத்தையும் கிராமத்தையும் திட்டமிட்டு அமைக்கவேண்டுமென்பதில் ஆட்சேபனையில்லை.

இப்பொழுது இருக்கும்படியான நிலைமையில் ஜனத்தொகை வளர்ந்து வருகிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக ஜனத்தொகை வளர்ந்து வருகின்ற நேரத்திலே மக்களுக்குப் பல இடங்களில் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாத நிலைமையும் சுகாதார வசதிகள் இல்லாமலும் இருக்கிறது. இன்னும் 20 அல்லது 25 வருஷங்களுக்குப் பின்னாலே எந்த நிலைமையிலே போய்க்கொண் டிருப்போமோ சொல்ல முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல், வசதிகள் குறைவாக இருக்கின்றன. நான் லண்டனுக்குப் போய் இருந்த நேரத்திலே—அங்கே செட்டில்மெ


V2,11,31 N70
N71.35

1970 நவம்பர் 26] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

ஷன் மூலமாக பேசில்டன் என்ற இடத்தை அமைத்திருக்கிறார்கள், போய்ப் பார்த்திருக்கிறேன். லண்டனின் ஜனத்தொகை எட்டு மில்லியன் இருக்கும்படியான நிலைமையிலே அதைக் குறைப்பதற் காக 5 அல்லது 6 மில்லியன் ஜனத்தொகை மட்டும் அங்கே வைத்துக்கொண்டு மீதமுள்ள ஜனத்தொகையை லண்டனைச் சுற்றி யுள்ள 20 அல்லது 25 மைல் சுற்றளவிலுள்ள இடங்கள் ஒவ்வொன் றிலும் 10 லட்சம், 10 லட்சமாக இருக்குமாறு செய்து ஆறு பட்ட ணங்களை அமைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அங்கேயுள்ள வரு வாய் சுகாதார வசதிகள், மக்கள் உணர்வு இவை வேறு. நம்மு டைய நாட்டிலே உள்ள நிலைமை வேறு. நான் அண்மையிலே வெளி நாட்டிற்குப் போயிருந்தபோது, மலேஷியாவிலே சுற்றுப் பயணம் செய்தபோது நண்பருடன் நடந்துபோய்க் கொண்டிருந்தேன். உடனே ஒருவர் வந்து ஒரு காகிதத்தில் இரண்டு டாலர் என்று எழுதிக் கொடுத்தார். சிகரெட் துண்டைக் கீழே போட்டு விட்டாராம் நண்பர், அதற்காக 2 டாலர் வேண்டுமென்று சொன்னார். அதுவும் முதன்முறையாக இருப்பதால் 2 டாலர். அப்படியில்லாமலிருந்தால் இன்னும் அதிகமாக டாலர் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏதோ தவறு செய்துவிட்ட தற்காகத் தண்டனையாக அல்ல அவர்கள் கேட்பது. சுகாதாரம் பாதுகாக்கப் படவேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் செய்கி றார்கள். நாமும் அதுமாதிரித் திட்டங்களைப் போட்டுச் செய்ய வேண்டும்.

6497

முனிஸிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில் 8 கிலோமீட்டர் சுற்றளவுக்கு உள்ள இடங்கள் எல்லாம் டவுன் பிளானிங் என்று செய்து கிராம மக்களுக்குக் கஷ்டமாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கேயெல்லாம் நிலத்தை வைத்திருக்கிற வர்களுக்கு நிலத்தின் விலை ஏறிவிட்டது என்று சொல்லிக்கொள்ள லாமே தவிர, விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும். நாட்டு மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் தேவை. அந்த இடம் சுத்தமாக இருக்கவேண்டும். சுகாதார வசதிகள் இருக்கவேண்டும். பட்டணத்தை மட்டும் கவனித்துக்கொண்டு போவார்களானால் கிராமத்திலுள்ளவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டேதான் இருப்பார்கள். விவசாயத் தொழி லாளர்களுக்கு இருப்பதற்கு வீடுகூடக் கிடையாது, சுகாதார வசதிகளே இல்லை. காட்டிலே, பண்ணையிலே கீழ்த்தரமான நிலை மையில் வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். மக்களும் நன்றாக வாழ வேண்டும், அரசாங்கத்திற்கும் இடைஞ்சல் இருக்கக்கூடாது, அந்த வகையிலே மசோதாவைக் கொண்டுவரக்கூடிய முறையில் இதைப் பொறுக்குக் குழுவிற்குக் கொண்டுபோய் விவாதிக்க வேண்டும்.

இதைப்பற்றிப் பலகாலமாகப் பேசி வந்தாலும் நிறையக் கிளா சஸ் இந்த மசோதாவில் இருக்கின்றன. பகுதிகள் அநேகம் இருக் கின்றன. எனவே உட்கார்ந்து ஆர அமர யோசிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இதற்கு ஒரு கால்கெடு

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 நவம்பர் 26

வைத்துவிடலாம். இரண்டு மாதத்திற்குள்ளாக, அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்யாமல் சென்னையிலே உட்கார்ந்து, சட்டசபை அங்கத்தினர்கள் மட்டுமன்றி மேலவை அங்கத்தினர்களையும் அந்தப் பொறுக்குக் குழுவிலே போட்டு, ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக விதிகளை நாம் ஏற்படுத்தும்பொழுது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் பொறுக்குக் கமிட்டிக்குப் போகவேண்டுமென்று சொல்கிறோம். இது வந்ததற்குப் பிறகு அரசாங்கமே சில திருத்தங்களை இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். எனவே ஊர்ஜிதம் என்று இதைச் சொல்லமுடியாது. இப்பொழுது சர்க்காரும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஆற்ந்து ஆற அமர்ந்து ஆலோசனை செய்யவேண்டும். நம்முடைய பொருளாதார நிலைமைக்கு ஏற்ப, மக்களுடைய வாழ்க்கை வசதிக்கேற்ப, சுகாதார நிலைமைகளுக்கேற்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மேஜர் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிட்டிகளாக ஆக்கவேண்டுமென்றால் வேண்டாமென்று சொல்கிறார்கள். காரணம், வரி அதிகமாகப் போடப்படுவது தான். அங்கே அதிகாரியைப் போட்டுவிட்டால் அவர் உடனே 5 பங்கு 6 பங்கு அளவுக்கு வரிப் போட்டுவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியான சத்தியமங்கலத்தைப் பொறுத்தவரையில் மேஜர் பஞ்சாயத்தாக இருந்த முனிசிபாலிட்டியாகச் செய்திருக்கிறார்கள். கமிஷனர் போட்டு இருக்கிறார்கள். அவர் வந்தவுடனே ஆறு பங்கு வரியை உயர்த்தி விட்டார்கள். அங்கேயிருக்கும்படியான மக்கள் வரியைக் கொடுக்கும்படியான சக்தியில்லாதவர்கள்—சக்தி உள்ளவர்களாக இருந்தால் பரவாயில்லை. கிராமங்களிலே உள்ளவர்கள் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அவர்களை திடீரென்று 6 பங்கு கட்டவேண்டுமென்று வரி போட்டால் எப்படிக் கொடுக்க முடியும்? அதிலும் எவ்வளவு தவறுகள் நடக்கின்றன. கான்ட்ராக்டர்களிடம் ஒப்படைக்கிறோம். திரும்பவும் அதிகமான தொகை அவர்களுக்கு அளிப்பது என்ற நிலைமையை எல்லாம் கூடப் பார்க்கிறோம்.

சென்னையிலே கூவம் சீரமைப்பு என்ன ஆயிற்று என்பதைப் பார்த்தோம். மழை பெய்து எல்லாம் எல்லாம் போய்விட்டன. முதலமைச்சர் அவர்கள், நாற்றம் போய்விட்டது என்று சொல்கிறார்கள். எங்கே போய்விட்டது என்று கேட்டால் அது அவரவர்கள் மூக்கைப் பொறுத்தது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய மூக்கைப் பரிசோதனை செய்ய வேண்டும். அப்பொழுது தெரியும் எந்த மூக்கு நல்ல மூக்கு என்று. அமுல்படுத்த வேண்டுமென்பதற்காக மக்களிடமிருந்து வரியை வாங்கி அதை கான்ட்ராக்ட் எடுத்தவர்கள் மீண்டும் பொறுப்பு இல்லாமல் சில பேர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, சில பேர்கள் சம்பாதிப்பதற்காகத் திட்டம் அமையக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.



1970 நவம்பர் 26] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

எந்தத் திட்டத்தைச் செய்தாலும் நல்ல திட்டமாக, பயனுள்ள திட்டமாக, மக்கள் தாங்கும்படியான நிலைமையில் பயனுள்ள திட்டமாக இருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு அதிகாரங்களை அதிகமாகக் கொடுப்பது மக்களுடைய பிரச்னைகள் தீர்க்கூடிய நிலைமைக்கு உதவாவிட்டால் அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. கிராமப்புறங்களையும் சேர்த்துவிட்டார்கள். பஞ்சாயத்துக்களாக இருக்கும்பொழுதே வரி கொடுக்கமுடியவில்லை. வசூலிக்கப்பட்ட பணம் பரிபூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே இதைப் பற்றித் தெளிவாக ஆலோசனை செய்து முடிவு செய்வதற்கு ஏற்ற வகையில் இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று திரு. இராமமூர்த்தி அவர்கள், திரு. சங்கரய்யா அவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வாரம் பத்து நாட்கள் சென்னையிலே உட்கார்ந்து இந்த மசோதாவைப்பற்றி விவாதித்து முடிவு செய்து, கொண்டுவந்தால் நல்லதாக இருக்கும். எனவே பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற என்னுடைய கட்சியினுடைய திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நகர-நாட்டமைப்பு மசோதாவைப்பற்றி வரவேற்று தங்களுடைய கருத்துக்களைக் கூறியதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டு அமைப்பு, நகர அமைப்பு சீர்பட வேண்டுமென்று ஒப்புக்கொண்டார்கள். 1920-ம் ஆண்டிலே நாட்டு நகரமைப்புக்கான திட்டமிடப்பட்டு, முறைகள் மேற்கொள்ளப்பட்டு பல வகைகளிலே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. அது போதுமான அளவிற்கு இல்லாமல் இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் நான் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். பிறகு 1938-ஆம் ஆண்டில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு குழுக்கள் போடப்பட்டு ஆராய்ந்து, ஆராய்ந்து பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டதற்குப் பிறகு இந்திய அரசும் பொதுவாக மேலைநாடுகளில் நடப்பதையொட்டியும் வளர்ச்சியுறுகிற இதர நாடுகளைப் பார்த்தும் இந்தியாவிற்குப் பொருந்துகிற வகையில் ஒரு திட்டத்தை அமலாக்க எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பி அந்த அடிப்படையிலே நகரப்புறத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டு இருந்தார்கள். அதனையொட்டி இங்கே குழு அமைத்து அதைப்பற்றி ஆராய்ந்து அந்த வகையிலே செய்கிற அளவிற்கு இந்த மாநிலத்திற்கு ஏற்றவகையில் நாம் சிலபல முறைகளை மேற்கொண்டு இந்த மசோதாவை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1966-ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்திலே சிலபல முறைகளை மேற்கொண்டார்கள். அதிலிருந்து சில கருத்துக்களையும் இந்தத் திருத்தத்தோடு சேர்த்தோம். அது மட்டுமல்ல, நகராட்சி மன்றத் தலைவர்கள், இதிலே அனுபவம்பெற்ற தலைவர்கள், சிக்கல்கள் பலவற்றையும் தெரிவிக்க, அதையும் அரசு கருத்தில் கொண்டு அதையும் அரசாங்கமே கொண்டு வரும் திருத்தத்தின் அடிப்படை

யிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் பலரும் இங்கு கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவின் இன்றியமையாத் தன்மையை நாம் நன்றாக உணருகிறோம். நீண்ட நெடுங்காலமாக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியதைப்போலவும் மற்ற உறுப்பினர்கள் எடுத்துக்கூறியதைப்போலவும் வெளிநாடுகளில் திட்டமிட்டுத் திட்டமிட்டு இருப்பதினால், பலமுறை திட்டமிடுவதால், தங்கள் தங்கள் இச்சைப்படி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதால் அது அமைந்துவிட்டது, அதை என்ன செய்வது என்ற பிரச்னையால் பெரிய பெரிய நகரங்களில் போக்குவரத்துப் பிரச்னைகள், வாழ்வுப் பிரச்னைகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு பிரச்னைக்கும் அடிப்படைத் தேவையைக் கண்டறிந்து பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கக் காண்கிறோம். ஆகவே, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மேற்கொள்ளாமல், தங்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் தங்கள் தனிப்பட்ட வசதிக்கேற்ற பல்வேறு முறைகளை மேற்கொள்வதால் திட்டமிட்டு அமைக்கும் முறையை நாம் வற்புறுத்துகிறோம். அந்த முறையிலே விரிவான திட்டத்தை மேற்கொள்ளும்பொழுது, சென்னையைப் பொறுத்த வரையிலே சென்னையைச் சுற்றியிருக்கும் 10, 15 மைல்களில் வளர்ச்சியை மேற்கொள்ள இப்பொழுது சட்டத்தில் இடம் தரவில்லை. ஆகவே, சென்னையை மட்டும், நகர எல்லையை மட்டும் வைத்திருக்கும் சட்டம் அதற்கு அப்பால் இல்லை, அந்த இடங்களை விரிவுபடுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனால் சென்னை நகரை மனத்திலே கொள்ளும்பொழுது 15, 20 மைல் சுற்று வட்டாரத்தையும் நினைவில் வைத்து மேற்கொள்ள வேண்டும். இதைப்போன்றே மதுரை நகரம், கோயம்புத்தூர் நகரம் போன்ற பெரிய நகரங்களையும் பொறுத்து அமைகிறது. எனவே, தங்கள் தங்கள் விருப்பப்படி பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்ளுவதன் காரணமாகப் போக்குவரத்து, மற்றவைகளுக்கு ஏற்படும் வசதிக் குறைவும், சுகாதாரச் சூழ்நிலைக்கு ஏற்படும் வசதிக்குறைவும் ஏற்படுவதைத் தவிர்க்க விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். விரிவான திட்டங்களை மேற்கொள்ளும்பொழுது பல்வேறு முறைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதைப்பற்றிக் கூறும்பொழுதுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே இருக்கும் டெவலப்மெண்ட் சார்ஜ் போடுவதைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். 'லெவி அண்ட் கலெக்ஷன் ஆஃப் பெட்டர்மெண்ட் காண்ட்ரிபூஷன்' என்பதில் இருக்கும் சில சிக்கல்களைப் போக்க 'டெவெலப்மெண்ட் சார்ஜ்' என்று போடப்பட்டிருக்கிறது.

விதிமுறைகளை வகுக்கும்பொழுது நகராட்சி மன்றத் தலைவர்களின் அனுபவம் பெற்ற ஆலோசனைகளைக் கேட்டு நடத்தினால் நலமாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜு



அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, அந்த வகையிலேகூட நாம் ஆராய்ந்து சிலபல முடிவுகளை எடுக்கவேண்டும். ஆகவே, எல்லா நகராட்சி மன்றத் தலைவர்களையும் கலந்து கொள்வதற்காக, நகராட்சி மன்றத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதால் அவரைக் கலந்து கொண்டு, அவர் சீரிய யோசனைகளைச் சொல்வதற்கு வழிமுறைகளைச் செய்யலாம். அவர் நகராட்சி மன்றத் தலைவர்களின் குழுவிலே இருக்கும் பிற நகராட்சி மன்றத் தலைவர்களின் சீரிய யோசனைகளைக் கேட்டு, அவர் இந்தத் திருத்தத்தைச் செய்யும்பொழுது சீரிய யோசனைகளைச் சொல்லக்கூடும். ஆகவே, அந்தச் சீரிய கருத்தையும் வற்புறுத்துவதிலே எந்த ஆட்சேபணையும் இருக்க முடியாது.

வேறு பல திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். நாம் நகரங்களை அமைத்து, அழகாகவும், அதே சமயத்தில் மக்களின் வசதிக்காகவும் செய்ய சில திட்டமிட்ட முறைகள் ஆக்கப்பட்டால்தான் முடியும். இப்பொழுதிருந்து துவங்கினால்தான் முடியும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியதைப் போன்று, பல்லாண்டு காலமாக திட்டமிட்டுத் திட்டமிட்டுப் பல்வேறு வெளிநாடுகள் வளர்ந்து வருவதால், அதன் காரணமாகப் பல நெருக்கடிகளைச் சமாளிக்கத்தக்க அளவில் மேலைநாடுகளில் பெரும் பெரும் நகரங்கள் அமைந்திருக்கின்றன. அந்த நகரங்களை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் கண்டிருப்பார்கள், மேலைநாடுகளுக்குச் சென்ற பலரும் கண்டிருப்பார்கள். ஆகவே, நீண்ட பழம்பெரும் நகரமான இலண்டன் மாநகரத்தில் இருக்கும் சந்துகள், வளைந்து வளைந்து செல்லும் சாலைகள், தெருக்கள், குறுகிய தெருக்கள் பல இருந்தும் அங்கே 'ஹாரன்' சத்தம்கூடக் கேட்காமல் இருந்ததை 20 நாட்கள் நான் தங்கியிருந்தபொழுது அறிந்தேன். மற்றவர்கள் தங்கியிருந்தபொழுதும் பார்த்திருப்பார்கள். 20 நாட்களிலே ஒரு தடவைகூட நான் 'ஹாரன்' சத்தம் கேட்டு வழிவிட்டுச் செல்லும் முறையைப் பார்க்கவில்லை. அந்த அளவிற்குப் போக்குவரத்து முறை அமைந்திருக்கிறது. அந்த வகையில் திட்டமிட்ட முறைகளை மேற்கொண்டதன் காரணமாக அந்த வசதியைப் பெற முடிகிறது.

அதுமட்டுமல்ல. சிலபல வசதிகளைப் பெருக்கும் காலத்தில் வரி கட்ட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு, ஏழை எளியவர்கள் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு வசதி படைத்தவர்களிடம் வரி வாங்காத சூழ்நிலை ஏற்படக் கூடாது. அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், நியூயார்க் பட்டணத்தில் 'மேன் ஹேட்டன்' என்ற பெரிய தீவை 28 டாலர்களுக்குத்தான் வாங்கியதாக வரலாறுகளில் கூறப்படுகிறது. இப்பொழுது அந்தத் தீவின் விலை எவ்வளவு இருக்கும் என்பதை அங்கேயிருக்கும் கட்டிடங்களைக் கணக்கிடும்பொழுது தெரியும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், நகர்ப்புறத்தில் அரசாங்கமோ அல்லது நகராட்சி மன்றங்களோ அல்லது மாநகராட்சி மன்றங்களோ பொறுப்பேற்று வசதிகளைச் செய்யும்பொழுது

தானாக அங்கிருக்கும் நிலத்தின் மதிப்பும், கட்டிடங்களின் மதிப்பும் ஏறிச் செல்லுகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரத்திலே இருந்த நிலத்தின் மதிப்பும், கட்டிடங்களின் மதிப்பும் வசதிகளைச் செய்யச் செய்ய, பல்வேறு நிலைகள் ஏற்பட்ட பிறகு, வளர்ந்து வளர்ந்து இன்று பல மடங்கு ஏறியிருக்கிறது என்பதை மனத்தில் வைத்து மேற்கொண்டு வளர்ச்சிகளைச் செய்யும்பொழுது விலை மதிப்பைப் பார்க்கும் பொழுது கூடுதல் கட்டணம் வசூல் செய்வதில் தவறில்லை. அதே சமயத்தில் ஏழை எளியவர்கள் அந்த இடத்திலிருந்து அகற்றுவது என்றில்லாமல், அவர்கள் பாதிக்கப்படாத அளவிற்கு ஆனால் அதே சமயத்தில் இந்தத் திட்டங்களை வளர்ச்சியுறச் செய்ய வேண்டிய அளவிற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த முறையிலே சிந்தித்துப் பல்வேறு வழிவகைகள் வகுக்கப்பட்டு, ஆங்காங்கிருக்கும் நகரங்களில் இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் நகரமைப்புகள் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் விதிமுறைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மேலும் இது விரிந்த திட்டமாக இருப்பதால், பல்வேறு நகரங்களின் சீரமைப்பைப் பொறுத்த வரையிலே இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டு, சிலபல சங்கடங்கள் இருந்தால் அவற்றைப் போக்கி இந்த மசோதாவைக் கொண்டுவரலாம் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும் கருத்து கொண்டிருப்பதால் அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்வது என்று இசைந்து, பொறுக்குக் குழுவில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1938-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் 1970-ஆம் ஆண்டு ஆகியும் இன்னும் நிறைவேறவில்லை என்பதைப் பார்க்கும்பொழுது இதை இன்னும் காலந்தாழ்த்திக் கொண்டு போவதால், தால், ஒத்திவைத்துக்கொண்டு போவதால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் போய்விடும். எனவே வெளியூர்களுக்குச் செல்ல வேண்டுமென்ற நிலையில்லாமல், உறுப்பினர்கள் இங்கேயே அமர்ந்து அவர்களின் அனுபவத்தின் அடிப்படையிலே மேலும் சீர்திருத்த வேண்டியதற்கான முறைகளையும், செம்மைப் படுத்துவதற்கான சீரிய யோசனைகளையும் சொன்னால் ஓரிரு கூட்டங்களிலே விதிமுறைகளை யெல்லாம் செய்து சிறந்த நல்ல விளைவினைப் பெற முடியும் என்று கருதுகிறேன். அதற்கான ஒத்துழைப்போடு பொறுக்குக் குழுவிலே போடப்பட்ட உறுப்பினர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு, திருத்தம் தரும் முறையிலே அதையும் இந்தத் திருத்தத்தோடு இணைத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறேன். எனவே, இதை கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அடங்கிய அளவில் விடலாம் என்ற அளவில் நான் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர விரும்புகிறேன்.





Sir, I move the following amendment :—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 members (20 Members from the Assembly and 10 Members from the Council) to consider the Tamil Nadu Town and Country Planning Bill, 1970 and that the following members of this House be selected to serve on such a Joint Select Committee :

1. Thiru M. S. SIVASAMI
2. Thiru M. P. SARATHY.
3. Thiru PALANIVEL RAJAN.
4. Thiru RAMA ARANGANNAL.
5. Thiru S. ARUMUGAM.
6. Thiru M. KANNAPPAN.
7. Thiru S. GANESAN.
8. Thiru GINGEE V. MUNUSWAMI.
9. Thiru P. SEENIVASAN.
10. Thiru M. C. BALAN.
11. Thiru T. P. ALAGAMUTHU.
12. Thiru K. VINAYAKAM.
13. Thiru V. GEORGE.
14. Dr. H. V. HANDE.
15. Thiru N. SANKARAIAH.
16. Thiru T. THEERTHAGIRI GOUNDER.
17. Thiru M. SURENDRAN.
18. Thiru A. A. SUBBARAJA.
19. Thiru A. R. PERUMAL.
20. Thiru A. K. SUBBIAH.

The motion was put and carried.

MR. DEPUTY SPEAKER: Under Rule 139 (1) of the Assembly Rules, the Hon. Speaker has nominated the Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Health as a Member of the Joint Select Committee.

THIRU K. RAMAMOORTHI: What about my amendment, Sir?

I have not been asked to withdraw my amendment.

MR. DEPUTY SPEAKER: The amendment moved by the Hon. Minister is an amendment to your amendment and that has been carried.

**Now we shall pass on to the next item.**

**(உ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சி நீதி மன்றங்கள் (நடவடிக்கைகள் செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 31/70).**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சி நீதி மன்றங்கள் (நடவடிக்கைகள் செல்திறன் ஆக்குதல்) மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 31/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

பி ப 12–30 **திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே அதிகமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்து அமர விரும்புகிறேன்.

இந்த வகையிலே ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மசோதா சட்டமாக்கப்பட்டது தெரியாமல் பல்வேறு பஞ்சாயத்துக்கள் கோர்ட்டுகளை நடத்தி அதன் விளைவாக ஏற்பட்ட தீர்ப்புகள், அந்தத் தீர்ப்புகளின் விளைவாகப் பண வசூலைச் செய்வதிலோ, கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதிலோ இருக்கிற சங்கடங்களைத் தீர்க்க இந்த மசோதா வந்திருக்கிறது. இந்த மசோதாவிற்குக் காரணம், நோக்கம் என்பதிலே இது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

It is now too late for parties to initiate fresh legal proceedings on the original cause as most of them would have become time barred. Hence, the decrees and orders passed by such panchayats have necessarily to be validated or else there would be undue hardship.

இந்த மசோதா அதற்காக இன்றையதினம் கொண்டு வரப் பட்டிருந்தாலும், யாருடைய கோரிக்கையின் விளைவாக, எந்த நிலைமையின் விளைவாகக் கொண்டுவரப்பட்டது என்பது தெளிவாக விளக்கப்படவில்லை. எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன நிலைமை ஏற்பட்டது, யாருக்கு இதனால் என்னென்ன நிலை ஏற்பட்டது என்பதெல்லாம் இந்த அவைக்கு நன்றாகத் தெரிந்தாக வேண்டும் (குறுக்கீடு.) ignorance of law is no excuse சட்டம் எங்கள் காலத்தில் வந்ததாகக் கூறுகிறார்கள். யாருடைய கோரிக்கையின் விளைவாக இந்த மசோதாவைக் கொண்டுவரும் நிலைமை இந்தக் காலத்தில் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் நிறைவேறிய பிறகும் சில பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இயங்கி வந்திருக்கின்றன. அதிலே கொடுக்கப்பட்ட தீர்ப்பு சட்டப்படி செல்லத்தக்கது ஆகாது. சிலர் தேவையில்லை என்ற காரணத்தால் கோர்ட்டுக்குப் போகாமல் வாளா இருந்திருக்கலாம். அந்த வழக்குகளை எதிர்க்காமல் இருந்திருக்க

---

* 3—9—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



லாம். இந்த மசோதாவின் மூலம் அப்படிப்பட்டவர்களுக்கு என்ன பாதுகாப்புத் தரப் போகிறது ? அதிகாரம் இல்லாமல் உள்ள கோர்ட் என்று பேசாமல் இருந்து விட்டவர்களுக்கு, அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மசோதா அளவிலே என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

அடுத்து, பெண்டிங் விடிகேஷன்—அதாவது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இயங்கி வந்திருக்கின்றன. சட்ட விரோதமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிந்த பிறகு நடந்த வழக்குகள் அப்படியே நின்று விட்டன. அப்படி இருந்தால் அன்றையதினம் இருந்த நிலைமைக்குப் பிறகு இன்று உள்ள நிலைமைக்குப் பெருத்த வேறு பாடு இருக்கும். சில சாட்சிகள் இறந்து போயிருக்க முடியும். கடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களில்கூட பொய்யை மெய்யாக்கி யிருக்கிறது, மெய்யைப் பொய்யாக்கி இருக்கிறது. புதிதாக அந்த வழக்குகளை மீண்டும் விசாரிக்கும் நிலைமையில் அன்று இருந்த சாட்சிகள் இன்று இருக்க முடியாத நிலை இருக்கலாம். அந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மசோதா எந்த அளவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப் போகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன்.

ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அந்தச் சட்டத்தின் விளைவுகளை மதிக்கவில்லை என்பதற்காகப் புதியதாக ஒரு சட்டத்தை நிறைவேற்ற முன் வந்திருக்கிறீர்கள். 'நீங்கள் மதிக்கா விட்டால் பரவாயில்லை, உங்களை நாங்கள் மதிக்கிறோம்' என்ற நிலையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது ஜனநாயக மரபல்ல என்று தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களை உருவாக்கியபோது இதுபோன்ற பஞ்சாயத்து நீதிமன்றங்களை அமைக்கலாம் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து. 1958-ம் ஆண்டு ஊராட்சி மன்றங் களுடைய திருத்தச் சட்டம் வந்தபோது, இந்த ஊராட்சி மன்றங் களுடைய நீதிமன்றங்களைப் பொறுத்த வரையிலே எந்தவித முடிவும் எடுக்காத சூழ்நிலையிலே, ஏற்கனவே இயங்கி வந்த நீதிமன்றங்கள் எல்லாம் இயங்காத சூழ்நிலையிலே, உருவாக்கப் பட்டது. அதன் விளைவாக புதிதாக ஊராட்சி மன்ற நீதிமன்றங்கள் இயங்கவில்லை. ஆனால் சில இடங்களில் இப்படிப்பட்ட சட்டத்தைப் பின்பற்றாது தொடர்ந்து நீதிமன்றங்கள் இயங்கி வந்திருக்கின்றன. அதனுடைய விளைவு என்ன ஆகும் என்பதைப் பற்றிச் சந்தேகம் எழுப்பப்பட்டது. எப்படி இந்தச் சந்தேகம் வந்தது, ஏன் வந்தது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள்,

[1970 நவம்பர் 26

இந்தச் சட்டம் 1958-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இப்போது 1970-ம் ஆண்டு. இதற்கிடையில் இந்தச் சர்ச்சை எழுப்பப்பட்டது யாவருக்கும் தெரியும். நானே எதிர்க் கட்சியில் இருந்தபோது இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். 1958-ம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றிய பிறகு புதிய ஊராட்சி மன்றங்களில் நீதிமன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தால் அந்தத் தீர்ப்புகள் என்னவது என்பதைப் பற்றியெல்லாம் நானே இந்த மன்றத்திலே கேட்டது நினைவுக்கு வருகிறது. இப்போதாவது இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்தீர்களே என்று வழக்கறிஞர் நண்பர் பாராட்டுவார் என்று எதிர்பார்த்தேன். அவர் இதை எதிர்ப்பதற்கான காரணம் புரியவில்லை.

உண்மையிலேயே சில பேர்கள் இதனால் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடுதான் இது கொண்டுவரப்பட்டதே தவிர, சட்டத்தை மதிக்காதவர்களுக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டதல்ல. சட்டத்தை மதிக்காமல் இருப்பது தவறுதான். சில பேர்கள் இதனால் பாதிக்கக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியோடுதான், நடந்து கொண்டிருப்பது நியாயம் என்பதை உறுப்பினர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். வழக்காடாதவர்களுக்கு என்னவது என்று கேட்டார்கள். மூன்றாவது பிரிவில் விளக்கமாகக் கொடுத்திருக்கிறோம். லிமிடேஷனைப் பொறுத்தவரையில் எக்ஸெம்ஷன் கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்து விடுவதால் இந்தத் தீர்ப்புகள்பற்றி, தீர்ப்புகள் மூலம் எடுக்கக்கூடிய எக்ஸிக்யூஷன் மனுக்கள் பற்றி லிமிடேஷனிலிருந்து விலக்கு கொடுத்துவிட்டதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. ஒருசில சிக்கலைப் போக்கக்கூடிய சட்டம்தான் இது. 'Exclusion of time for limitation' என்பதை ஒப்புக்கொள்வார்களானால் அவர்கள் சொன்ன சங்கடம் நீங்கிவிடும்.

Thiru R. PONNAPPA NADAR : If there is any inconsistency between the Indian Limitation Act and the present law, which will prevail ? Is it the Indian Limitation Act or the present law ? Can the Hon. Minister give any clarification ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எப்போதுமே இதுபோன்ற லிமிடேஷன் சட்டங்களுக்கு நாம் விதிவிலக்கு கொடுப்பது, ஒரு சட்டம் கொண்டு வரும்போது விதிவிலக்கு கொடுப்பது, வாடிக்கை. அதுபோல் கொடுத்திருக்கிறோம். ஊராட்சி மன்றங்களிலும் நீதி மன்றங்கள் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு பரிசீலித்து வருகிறது. பஞ்சாயத்துக் கோர்ட்டை எடுத்து விட்டால் இருப்பது வில்லேஜ் கோர்ட்ஸ் ஆக்ட். அதைத் திருத்தியமைப்பதுபற்றிப் பரிசீலித்து வருகிறோம். ஏற்கனவே இருக்கிற சில தீர்ப்புகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதனால் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடுதான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.



1970 நவம்பர் 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ் நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சி நீதி மன்றங்கள் (நடவடிக்கைகள் செல்திறன் ஆக்குதல்) மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சி நீதி மன்றங்கள் (நடவடிக்கைகள் செல்திறன் ஆக்குதல்) மசோதா நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஊ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று கோருகிறேன்.

1920-ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், (தமிழ் நாடு சட்டம் 5/1920), பிரிவு 68-ல், ஒப்பந்தங்கள், ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதற்குரிய அதிகாரங்களை அளித்தல் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளதென்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மன்றத்தின் ஒப்பந்தக் குழு, ஒப்பந்தம் செய்து கொள்ளுதற்குரிய தற்போதைய பண வரம்பு ரூ. 1,000 ஆகும். நகராட்சிகள் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகள் காரணமாகத் தற்போதுள்ள உயர் வரம்பான ரூ. 1,000 உயர்த்தப்பட வேண்டுமென்று கருத்தறிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை அரசு பரிசீலனை செய்து, இதனை ஏற்றுச் செயற்படுத்துவதென முடிவு செய்துள்ளது. இதற்கென, நகராட்சிகள் அனைத்தும், அவற்றின் பொதுக்கணக்கில் பெறப்படும் ஆண்டு வருவாயினை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படும். ஒரு நகராட்சி அதன்படி எந்த வகையின்கீழ் கொண்டுவரப்படுகிறதோ, அந்த வகைக்கென உயர்த்தப்பட்டுள்ள உச்ச அளவிற்கு ஒப்பந்தக் குழுவானது ஒப்பந்தங்கள் செய்து

* 23-11-1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1970 நவம்பர் 26

கொள்ளலாம். இம்முறையில் உயர்த்தப்பட்டுள்ள அதிகாரங்களின் விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ள மசோதாவில் கண்டு கொள்ளலாம்.

மேலும், 1920-ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) அட்டவணை IV -இல் நகராட்சிப் பகுதிகளில் மற்ற வரி விதிப்புகளோடு சொத்து வரியையும் நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நகராட்சிப் பகுதிகளில் அண்மையில் பொதுவாகத் திருத்தப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள சொத்துவரி மிக உயர்ந்த நிலையில் உள்ளதென்று, சில நகராட்சிகளில் உள்ள மக்கள் விடுத்த கோரிக்கைகள் காரணமாக, 1970-ம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ் நாடு அவசரச் சட்டம் 6/1970), மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்தார்கள். இந்த அவசரச் சட்டத்தின் விளைவாக மேற்கூறிய வரி விதிப்புகளின்மீது ஏற்படும் மேல் முறையீடுகள் பற்றி இறுதி முடிவு செய்யும் நகராட்சி மன்றங்களுக்கு முறையிட்டுக் கொள்வதன் முன்னர், வருவாய்த்துறையைச் சார்ந்த இன்னொரு அதிகாரியிடம் வரி உயர்வால் பாதிக்கப்பட்டோர், முறையிடப்படும் வரியைச் செலுத்தாமலேயே, மேல்முறையீடு செய்து கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவசரச் சட்டத்தினால், மேல்முறையீடுகளைத் தீர்ப்பதில் வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் காலதாமதம் விளையக் கூடுமென்றும், அதனால் வரி செலுத்தா நிலையும், அந்நிலையால் நகராட்சிகளின் நிதி நிலைக்கு ஊறுகள் விளையக்கூடுமென்றும், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு, 1970-ஆம் ஆண்டு அக்டோபர் 24, 25 தேதிகளில் கூடிய நகராட்சிகள் மன்றத் தலைவர்கள் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட்டது. எனவே திருத்தப்பட்ட அவசரச் சட்டத்திற்கு முன்னர் உள்ள நிலையானது, (சட்டத்தின் அட்டவணை IV -இல் தொடக்கத்திலிருந்த விதிகளின் நிலை), மீண்டும் கொணரப்படவேண்டுமென்றும் மாநாட்டில் கருத்தறிவிக்கப்பட்டது.

அரையாண்டிற்கு ரூ. 15-க்கு மேற்படாத வரி விதிக்கப்பட்டோர், அவ்வரியைச் செலுத்தாமலேயே மேல்முறையீடு செய்து கொள்வதற்கும், அரையாண்டிற்கு ரூ. 15-க்கு மேற்பட்டு ரூ. 30-க்கு மேற்படாமல் வரி விதிக்கப்பட்டோர், திருத்தப்பட்ட வரி நிலைக்கு முன் இருந்த வரியை மட்டும் செலுத்தி முறையீடு செய்து கொள்ளும் வகையிலும் சலுகைகள் அளித்து விதிகளை ஏற்படுத்தலாமென்று மாநாடு மேலும் யோசனை கூறியது.

நம் முன் உள்ள இப்பிரச்னை நகராட்சி நிர்வாகம் பற்றியதாகும். நகராட்சித் தலைவர்கள் குழு, மேற்கூறிய காரணங்களுக்காக, அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டுமென ஒருமனதாக வேண்டிக் கொண்டுள்ளது. மக்களாட்சி



1970 நவம்பர் 26] [திரு. ப. உ. சண்முகம்]

மரபை ஏற்கும் வகையில், நகராட்சித் தலைவர்கள் குழு கூறியுள்ள யோசனைகளை ஏற்றுச் செயற்படுத்த அரசு முன்வந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன் படைக்கப்பட்டுள்ள மசோதாவில் அட்டவணை IV -இன் கீழ் தகுந்த விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மசோதா சட்டமானதும், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரச் சட்டம் திரும்பப் பெற்றதாகும்.

இவற்றைக் கூறி, இம் மசோதாவைச் சட்டமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களின் விளைவுகளை வரவேற்கிறேன் என்றாலும், எந்தச் சூழ்நிலையில் இது கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை எண்ணிப் பார்க்கும்போது அது மிகுந்த வேதனையைத் தருகிறது. மூன்றாவது அங்கத்தில் சொல்லும்போது,

" Representations had been received by the Government from the residents of certain municipalities in the State to the effect that the property tax assessed during the general revision had been unreasonably high."

என்றிருக்கிறது. இந்த வார்த்தைகள், எந்தளவிற்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது. நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரை பழக்கம் காரணமாகவோ அல்லது என்ன காரணத்தினாலோ, இதுபோன்ற மக்கள் பிரச்சினைகளை இந்த அரசுக்கு சாதாரண முறையில் தெரியப்படுத்தும்போது அவை தீர்க்கப்படுவதில்லை, கேட்கப்படுவதில்லை, மதிக்கப்படுவதில்லை. ஒரு துப்பாக்கிச் சூடு நடந்தால் உடனடியாக அது மதிக்கப்படுகிறது. மக்களின் குறைகளைத் துப்பாக்கிச் சூட்டின் விளைவாகத்தான் தீர்க்கமுடியும் என்ற நிலைக்கு இந்த அரசு ஆளாகியிருக்கிறது என்பதைத்தான் இந்த மசோதா தெளிவாகக் காட்டுகிறது. மின்சாரக் கட்டண உயர்வு மிகத் தவறானது என்று இந்த மன்றத்தில் பல முறை வாதாடியுள்ளோம், கெஞ்சினோம், திரும்பத் திரும்பக் கூறினோம். மக்கள் பிரதிநிதிகள் அந்த அந்த பகுதிகள் பற்றி இங்கு பல முறை கேட்டார்கள். ஆனால் கோவை மாவட்டத்தில் இதை எதிர்த்து ஒரு கிளர்ச்சி செய்தவர்களைத் துப்பாக்கியைக் கொண்டு சுட்டு வீழ்த்தி அதற்குப் பின்னால்தான் இந்தச் சலுகைகளை உங்களுக்குத் தருகிறோம் என்று தந்தது அரசு.

இன்றையதினம் தென்காசியிலே இதேபோல் இந்த சொத்து வரி உயர்வு மிகத் தவறான முறையில் நடைபெற்று வருகிறது என்பதை நாடு முழுவதிலும் உள்ள நகராட்சிகள் ஆங்காங்கு கண்டனம் தெரிவித்தாலும் அது கவனிக்கப்படுவதில்லை. அது கிளர்ச்சியாக உருவாகி, துப்பாக்கிச் சூடு முதலியன நடந்ததற்குப் பின்னாலேதான் இந்த மசோதா வந்து இருக்கிறது. நாம் ஜனநாயகத்தின் பெயரால் நம்முடைய அதிகாரத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்ட

சலுகைகளைத் தந்து கொண்டு இருக்கிறோம். இப்படித் தருகிற நேரத்தில், நாம் எந்த அளவிற்கு ஜனநாயகத்தை மதிக்கிறோம் என்பதைப் பாராட்டிப் புகழவும் தயங்குவது இல்லை.

இந்த மசோதாவுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தாக வேண்டும். இந்த சொத்து வரி உயர்வு மிக அதிகமாக ஆகி இருக்கிறது. அது சரியல்ல என்று உணர்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொல்கிறார். இதைப் பொறுத்தவரையில், இந்த அரசுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய இந்தத் துறை அமைச்சரவர்கள், நகரமன்றத் தலைவராக இருந்தவர்கள் ஆவார்கள். அவருக்கு நிறைய அதிலே அனுபவம் இருக்கிறது. இப்போது ஸ்பெஷல் ஆபீசர் என்று போடுகிறார்கள். இப்படிச் சொல்கிறபோது, நீங்கள் இருக்கும்போது போடவில்லையா என்ற பேச்சு வரும். இந்த ஸ்பெஷல் ஆபீசரைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் சரியாக நடப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக இருந்து வருகிறது. அந்தக் குற்றச்சாட்டுகள் இன்றையதினம் முன்னே இருந்ததைவிட மிக மோசமாக இருக்கிறது. இன்றைய தினம் ஸ்பெஷல் ஆபீசர்களாக போடுகிறவர்கள், அதிலே அனுபவம் இல்லாதவர்களாக, அல்லது ஸ்பெஷல் ஆபீசர்களாகப் போட வேண்டுமென்று அரசியல் ரீதியான சிபார்சுகளை, செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடியவர்களே இருக்கிறார்கள். நகர ஆணையர்களுக்கு உள்ள அதிகாரம் அவர்களுக்கு விதிக்கப்பட்டு இருக்கிறது. என்னுடைய பகுதியிலே கூட, ஒரு நகர மன்ற கமிஷனர் தன்னுடைய வேலையைச் சரியாகச் செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது, இன்னொரு பகுதிக்கு ஸ்பெஷல் ஆபீசராகப் போய் இருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் பல காரணங்களுக்காகப் பல செல்வாக்கின் மூலம் இந்த வேலையை வாங்கிக்கொண்டு போகிறார்கள். அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பின்னணியாக வைத்துக்கொண்டு இந்தக் காரியங்களை தவறாக, தங்கள் அதிகாரத்தை பிரயோகித்துக்கொண்டு, செய்துவருகிறார்கள். தங்களுக்கு வேண்டாதவர்களுக்கு, லஞ்சம் கொடுக்காதவர்களுக்கு அல்லது அரசியல் ரீதியாகக் கருத்து மாறுபட்டு இருப்பவர்களுக்கு அதிகமாக வரி விதிக்கப்படுகிறது. இப்படி அந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குத் தங்களுடைய வளர்ச்சி தான் குறிக்கோள். இந்த மசோதா கொண்டு வருவதற்கான காரணம் இதுதான் என்றாலும், அமைச்சர் வெளிப்படையாக அதைச் சொல்லவில்லை என்றாலும், இதுதான் உள் அர்த்தம். ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் நீக்குகிற நிலைமை வேண்டும்.

இந்த ஸ்பெஷல் ஆபீசர்களைப் பற்றிய குற்றச்சாட்டு இப்போது அதிகமாகச் சொல்லப்பட்டு வருகிறது. எப்போதும் இருக்கிற அதிகாரிகள் தானே என்று தட்டிக் கழிக்காமல், இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தவிர்ப்பதற்கான, அவற்றை நீக்குவதற்கான முறையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது காலம் கடந்த நடவடிக்கை என்றாலும், மக்கள்





உணர்ச்சியை உரிய காலத்தில் மதிக்கத் தவறியது என்றாலும், இன்றையதினம் அதற்கான பரிகாரம் காணும் வகையில் இந்த மசோதா கொண்டு வந்ததை வரவேற்கிறேன். நகராட்சிகளுக்கு உரிய நேரத்தில், உரிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கோரி முடிக்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, இந்த மசோதா கொண்டு வந்து இருப்பதை நான் மிக வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால் பரம்பரை பரம்பரையாக நாம் பார்க்கிறோம், எங்கே எந்த ஒரு அரசாங்கமும் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தால், அதை மக்களிடமிருந்து பெறக்கூடிய அவர்களுடைய எண்ணங்களை மதிப்பதும், அதிலே 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' சொன்ன பிரகாரம், இந்த நகர மன்றத்தில் இது சம்பந்தமாக என்னென்ன இடர்பாடுகள், கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதைப் பற்றி நாம் எடுத்துரைக்கிறோம். இதிலே கொஞ்சமும் மதிப்பைப் பார்க்காமல், இந்த அமைச்சரவை, இந்த ஆர்டினன்ஸை வித்டிரா செய்து நல்ல மசோதாவைக் கொண்டு வந்ததற்குப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில், அரசியல் கட்சிகள் பல விதத்தில் இருக்கலாம். கட்சி நோக்கத்தோடு சில பேர் பேசலாம். பேசாமல் இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியுடனும் சேராத, சுயேச்சை கட்சியின் சார்பாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது கொண்டு வந்து இருக்கக்கூடிய மசோதாவை நான் வரவேற்கவேண்டுமே தவிர, இதற்கு உள் நோக்கம் இருக்கிறது என்று அமைச்சர் மீது குற்றம் சுமத்துவது நல்லதல்ல.

ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவை இந்த டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட் பிரகாரம் ரிவிஷன் ஆபீசர்களை நியமிக்க வேண்டும். வரி அதிகப்படியாகப் போடும் நிலை சில இடங்களில் ஏற்படும். மேலும் சில இடங்களில் குறைக்கப்படலாம். இப்படி நடைமுறையில் பல இருக்கும். இதற்கெல்லாம் ஸ்பெஷல் ஆபீசர்கள் தான் காரணம் என்று குற்றம் சாட்டுவது அரசியல் நோக்கமாகத்தான் தோன்றுகிறது. சில இடங்களில் வரியைக் குறைப்பதற்கு 'டாக்சேஷன் கமிட்டி' என்று நகர சபைகளிலே இருக்கிறது. நகரசபைகளில் இருக்கும் 'டாக்சேஷன் கமிட்டி'க்கு அத்தகைய அதிகாரங்கள் இருக்கின்றன. இம்மாதிரியாக, அதிகமாகப் போடப்படக் கூடிய வரியைக் குறைப்பதற்கு அந்தந்தப் பகுதியில் இருக்கிற பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தக் கமிட்டியில் இருப்பதால்தான் முடிகிறது.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில நேரங்களில் நகரசபையின் வருமானம் மிக மோசமான நிலையில் இருக்கக் கூடிய காலத்தில், வரியை அதிகமாக்குவார்கள். அப்படி அதிகமாக்கும்போது, ஏழைக்கு ஒரு அளவு, பணக்காரனுக்கு ஒரு அளவு என்று பார்த்துப் போடமாட்டார்கள். சில நேரங்களில்

[திரு. வ. அ. சுப்பராஜா] [1970 நவம்பர் 26

ஏழைக்குப் போடும்படியான வரி அதிகமாக ஆகிவிடும். பணக்காரர்கள் குறைத்துக்கொண்டு விடுவார்கள். இப்படி ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை வரும், டாக்ஸ் ரிவிஷனில் தான் முனிசிபாலிடிகளுக்கு வருமானம் அதிகரிக்கிறது. இப்படிச் செய்யவில்லை என்று சொன்னால் முனிசிபாலிடிகளுக்கு வருமானம் வராது. அதோடு மட்டுமல்ல, அப்படி வருகிற காலத்தில் கூட, மறுபடியும் 5 வருஷத்திற்கு ஒரு முறை இருக்கக்கூடிய வருமானம் போதுமானதாக இருக்காது. ஆகவே, இப்போது இருக்கும் அமைப்பைப் பொறுத்தவரையில் 5 வருஷத்திற்கு ஒரு முறை ஒரு ரிவிஷன் ஆபீசரைப் போட்டு ரிவிஷன் செய்யப்படுகிறது.

லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது ஒன்று இரண்டு கமிஷனரிடத்தில் இருக்கலாம். அதற்காக எல்லோரும லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லி விட முடியாது. லஞ்சம கொடுத்தால் குறைத்து விடலாம், சிபார்சு செய்தால் வரியைக் குறைத்து விடலாம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க 5 வருஷத்திற்கு ஒரு முறை இம்மாதிரியான ரிவிஷன் போட்டால் யாருமே வேண்டாம் என்று சொல்வதற்கு இல்லை. அதை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவசியம் இல்லை. ஸ்பெஷல் ஆபீசர் போட்டு விட்டால், அதைக் குறைப்பதற்கு வழி இருக்கிறது.

We have to exhaust two resources, (1) Request for revision; (2) Appeal.

சில நேரங்களில் தவறுதல் நடக்காமல் இருக்காது. எங்கள் நகரசபையைப் பொறுத்தவரையில் பார்க்கிறேன். அரசாங்க சட்டத்தில் எம்.டி.எம். ஆக்டில் சொன்ன மாதிரி செய்யவேண்டுமென்று இருக்கிறது. அந்த பேசிஸ் வைத்து அதிகாரிகள் வரி போட வேண்டும். நடைமுறைக்கும் சட்டத்திற்கும் சற்று வேறுபாடு இருக்கும். அந்தச் சட்டத்தை உபயோகிப்பதால் பணக்காரர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் மத்தியதர மக்களுக்கும் அது எப்படி அமைகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பல முறை நான் சட்டமன்றத்தில் சொல்லி இருக்கிறேன்.

ஒரு காலத்தில் நம்முடைய மூதாதையர் நல்ல செல்வாக்கில் இருந்த காலத்தில் ரூபாய் 2—3 லட்சம் செலவில் ஒரு வீடு கட்டி இருக்கலாம். பின்னால் வந்த சந்ததியார் அந்த செல்வாக்கில் இருப்பதில்லை. அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அந்த வீடு ஒன்றை வைத்தே அவர்களுக்கு வீட்டு வாடகை ரூ. 1,000 வரும், ஆகவே வருஷத்திற்கு 3 மாத வாடகை ரூ. 3,000 கட்டுங்கள் என்று சொன்னால் அது சரியாகாது அப்படிச் செய்தால் அவர்கள் வீட்டை விற்று விட்டுத் தான் செல்ல வேண்டும். ஆனால் சட்டத்தின் மூலம் யாரும் 'டிஸ்கிரிமினேஷன்' காட்ட முடியாது. அதே நேரத்தில் இதை எப்படிக் குறைப்பது? ரிவிஷன் ஆபீசர் வருகிற நேரத்தில் அவர்கள் டிஸ்கிரஷனில் செய்ய முடியாது. ஒருவருக்கு ஒன்று, மற்றவர்களுக்கு ஒன்று என்று செய்ய



1970 நவம்பர் 26] [திரு. வ. அ. சுப்பராஜா]

மு.ப. 1-00 முடியாது. வீடு பெரியதாக இருக்கிறது, வாடகை மதிப்பு அதிகம் என்றால் ரிவிஷன் ஆபீசர் குறைத்து விட முடியாது. அவருக்கு ஒரே சட்டம்தான், மேலதிகாரிகள் போட்ட சட்டம்தான். அதன் அடிப்படையில் தான் ரிவிஷன் செய்வார்கள். முன்பு ரூ. 3 லட்சம் போட்டு வீட்டைக் கட்டிவிட்டு, வரியை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதைத் தவறு என்று சொல்லிக் கொண்டு இருக்க முடியாது. அதற்கு அடுத்தாற்போல் ஒரு கட்டம் இருக்கிறது. அப்பீல் கமிட்டி இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அந்தக் கமிட்டிக்குத் தான் அப்பீல் கொடுக்கிறார்கள். ஆனால், ரூபாயைக் கட்டித் தான் அப்பீல் செய்யவேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது. அப்படி அப்பீல் கொடுக்கும்பொழுது, இந்தப் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள். அவ்வளவு வரி கட்டுவதற்கு அவர் தகுதிதானா, தகுதி உடையவரா, அவருடைய நிலைமை எப்படி இருக்கிறது, அவருக்கு அவ்வளவு வரி போட்டால், அந்த ஏழை அல்லது அதேமாதிரி ஏழைகள் பிழைக்க முடியுமா என்பதையெல்லாம் பரிசீலித்துப் பார்த்து, தகுந்தபடி குறைப்பதற்கு அப்பீல் கமிட்டிக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, வேறு மாற்றுமுறை, ஆல்டர்னேடிவ் இல்லை என்று நாம் குறைபடுவதற்கு இல்லை.

இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். அதிலே சில முக்கியமான பிரிவுகள் இருக்கின்றன. இதற்கு முன்பு ஒரு ஆர்டினன்ஸ் போட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் நாங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னோம். சாதாரண சட்டப்படி இரண்டே இரண்டு முறை தான். ஒன்று ரிவிஷன். அங்கு இருக்கக்கூடிய கமிஷனர் அல்லது ஸ்பெஷல் ஆபீஸரிடம் பணத்தைக் கட்டாமலே ரிவிஷன் மனு கொடுக்கலாம். அவர்கள் என்ன செய்வார்கள்? ரிவிஷன் மனுவைப் பரிசீலனை செய்து, குறைப்பதாக இருந்தால் குறைத்துவிடுவார்கள், இல்லாவிட்டால் போடப்பட்ட வரியை ஊர்ஜிதம் செய்துவிடுவார்கள். அதற்குப் பிறகு, சட்டப்படி என்ன நிலைமை இருந்தது என்று சொன்னால், எவ்வளவு ரூபாய் உயர்த்தப்பட்டதோ, அல்லது ஊர்ஜிதம் செய்யப்பட்டதோ, அந்தத் தொகையைக் கட்டிவிட்டுத் தான் அப்பீல் செய்யவேண்டும். இருக்கிற நிலைமையை எடுத்துச் சொன்னோம் அமைச்சர் அவர்களிடத்தில். ரூபாய் கட்டவேண்டியிருப்பதால் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னோம். அமைச்சர் அவர்களும் மிகுந்த அக்கறையோடு கேட்டுக் கொண்டார்கள். ஒரு ஆர்டினன்ஸ் போட்டுவிட்டார்கள். நோக்கம் நல்ல நோக்கம் தான். நோக்கத்தைப்பற்றி யாரும் குறை சொல்ல முடியாது. செக்ஷன் 22-ஏ பிரகாரம் டெபுடி கலெக்டருக்குக் குறையாத ராங்க் உள்ள ரெவின்யூ டிபார்ட்மெண்டு ஆபீஸருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம் பணம் கட்டாமல் என்று போடப்பட்டிருந்தது. இது நல்ல கொள்கையாக இருந்தாலும், நடைமுறையில் பார்க்கும்பொழுது, நடைமுறைக்கு ஒவ்வாது என்பதைத்தான் எடுத்துச் சொன்னோம்.

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 நவம்பர் 26

எங்களுடைய நகர சபையைப் பொறுத்தவரையிலும் 16,000 ரிவிஷன் பெடிஷன்கள் வந்திருக்கின்றன. இவைகளை மார்ச்சு மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்றால் எப்படி முடியும்? ஆர்.டி.ஓ. அப்பீலுக்கு மேல், அப்பீல் இருந்தால் அப்பீல் கமிட்டி பரிசீலனை செய்யவேண்டும். இப்படி மூன்று கட்டங்கள் இருந்தன. இதனால் மார்ச்சு மாதத்திற்குள் டிமாண்டு நோட்டீஸ்களை விட முடியாத நிலைமை, நடைமுறைச் சிக்கல் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டார்கள். அதை இந்த நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. டெப்புடி கலெக்டர் ஒரு மாதத்தில் 16,000 பெடிஷன்களை பைசல் செய்ய வேண்டும் என்றால், ஒரு நாளைக்கு 300, 400 பெடிஷன்களை பைசல் செய்யவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள், நகரசபைத் தலைவர்கள் நகரத்தில் இருக்கின்ற அத்தனை ஜனங்களுடைய நிலையையும் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். நான் முன்பு கூறியது போல், ஒருவர் ஏழையாக இருப்பார், ஆனால் அவர் இருக்கும் வீடு முன்பு கட்டப்பட்டிருக்கும், அந்த அடிப்படையில் அவருக்கு வரி விதிக்கப்பட்டிருக்கும். இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பது என்பது நமக்கே கஷ்டமாக இருக்கிறது. டெபுடி கலெக்டரால் இதையெல்லாம் எப்படி ஆராய்ந்து பார்க்க முடியும். அதுவும் ஒரு நாளைக்கு 300, 400 பெடிஷன்கள் பைசல் செய்யவேண்டுமென்றால்? பெரிய பணக்காரர்கள், விவரம் தெரிந்தவர்களாக இருக்கக்கூடியவர்கள் டெப்ரிஸியேஷன் முதலியவைகளையெல்லாம் போட்டு, வால்யூ போட்டு பைல்களைக் கொடுத்துவிடுகிறார்கள். அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு, குறைக்க வேண்டுமென்றால் குறைத்து விடுகிறார். நடைமுறையில் என்ன நடக்கிறது? விவரம் தெரிந்தவர்களுக்கு, பணக்காரர்களுக்குத்தான் வரி குறைக்கப்படுகிறது. தொழில் துறையில் இருப்பவர்களுக்கு, பணக்காரர்களுக்குத்தான் வரி குறைக்கப்படுகிறது. ஏழைகளுக்குக் குறைக்கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. நோக்கம் நல்ல நோக்கம் தான். வருமானம் அறவே குறைந்து விட்டால், நகராட்சி மன்றங்கள் சர்க்காரிடம்தான் கடனுக்கு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னோம். அமைச்சர் அவர்களும் அதை நன்றாகக் கவனித்தார்கள். இந்தக் கஷ்டங்களையெல்லாம் எடுத்துச்சொல்லி, ஒரு நல்ல முறையை ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னோம். ஒரு மாற்று முறை வேண்டும் என்று சொன்னோம். பழைய வரியை மாத்திரம் கொடுத்துவிட்டு, மீதி இருப்பதையெல்லாம் பின்னால் குறைத்தவுடன், எவ்வளவு குறைக்கப்பட்டதோ, அது போக பாக்கியை கட்டவேண்டும் என்றால், அதிலே கொஞ்சம் யோசிக்க வேண்டியதுதான் என்று சொன்னோம். அப்படி குறைத்தவுடன், பின்னால் ரூபாய் கட்டவேண்டிய நிலை, இரண்டாவது கட்டம் ஏற்படும். இப்படியெல்லாம் செய்தால், பழைய வரியே இருக்கட்டும் என்று அதையே ஊர்ஜிதம் செய்துவிடலாம், மீதி இருப்பதை மறுபடியும் கட்டவேண்டும் என்றால், பப்ளிக்



1970 நவம்பர் 26] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

அஜிடேஷன் வரும், ஸைகலாஜிகல் பீலிங் வரும் என்று சொன்னோம். ஆகவே, இம்மாதிரி ஒரு திருத்தத்தைக் கொண்டுவரக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

இப்பொழுது அந்த ஆர்டினன்ஸையே வித்டிரா பண்ணி, அப்பீல் செய்யவேண்டுமென்றால், ரூ. 15, அதற்குக் கீழ் வரியுள்ளவர்கள் வரியே கட்டவேண்டாம், ரூ. 15-லிருந்து ரூ. 30-க்குள் பழைய வரியை மாத்திரம் கட்டினால் போதும் என்ற கருத்தை ஒட்டி, ஷெட்யூல் 4 ரூல் 26-க்கு அமெண்டுமெண்டு கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். இங்கு இருக்கக் கூடிய கட்சிக்காரர்கள் இந்த ஸ்லாபைப் பற்றி வேண்டுமானால், கொஞ்சம் கூட்டிக் குறைத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லலாம். வேறு ஒன்றும் இதைப்பற்றி சொல்வதற்கு இல்லை. என்னைப் பொறுத்த மட்டில், மதுரையைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கக்கூடிய ஏழைகளுக்கு நன்மை செய்கின்ற வகையில் இந்த ஸ்லாபை, ரூ. 15-லிருந்து 20 என்று உயர்த்தலாம், அதற்கு மேல் ரூ. 20-லிருந்து ரூ. 50 வரையில் என்று உயர்த்தலாம், மிடில் கிளாஸைப் பொறுத்தவரைக்கும்.

இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன், ஏற்றுக்கொள்கிறேன். ஒரு அரசு தாம் போட்ட ஆர்டினன்ஸையே வித்டிரா பண்ணி, பிரஸ்டிஜைப் பார்க்காமல், மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்றால், அதை நாம் வரவேற்றுத்தான் தீர வேண்டும். மூலாம் பூசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல. கட்சிகள் சார்பிலே இந்த ஸ்லாபைக் கொஞ்சம் கூட்டலாம், குறைக்கலாம் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, மற்றபடி இதை எல்லோரும் வரவேற்காமல் இருக்க முடியாது, இதைப்பற்றி வேறு ஒன்றும் சொல்ல முடியாது. ஆகவே, எல்லோரும் வரவேற்கக் கூடிய ஒரு மசோதா இது என்பதைச் சொல்லி, அமர்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம்: இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக எனது தொகுதி மக்கள் சார்பாக வரவேற்கிறேன். என்னுடைய தொகுதி திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய இரண்டு நகராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய தொகுதி. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கப்பட்டது. இப்பொழுது அது தீர்க்கப்படுகிற விதத்தில் அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக என்னுடைய சார்பாகவும் (தொகுதி மக்கள் சார்பாகவும் மீண்டும் வரவேற்கிறேன்.

பொதுவாக நகராட்சி மன்றங்கள் தங்களுடைய வருவாயைக் கூட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ரிவிஷன் செய்யவேண்டும் என்ற அளவிலே ஒரு சட்டம் போடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே ஐந்து ஆண்டு

களுக்கு ஒரு முறை ஒரு அதிகாரியை நியமித்து, வரியை மறு பரிசீலனை செய்து, கூட்டச் செய்கின்ற சூழ்நிலையை நகராட்சி மன்றச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். இம் மாதிரி செய்யப்படுகிறபொழுது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அதை ஒரு பெரிய பிரச்சினையாக்கி, மக்கள் முன்னிலையில் வைக்கிறார்கள். இதற்கு ஒரு தீர்வு காண வேண்டியிருந்தது. கடந்த 20 ஆண்டு காலமாக இந்தக் குழப்பமான நிலை இருந்துகொண்டு வருகிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முறையில் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றிய கருத்துக்களை நாங்களும், மற்ற உறுப்பினர்களும் அமைச்சர் அவர்களைச் சந்தித்துத் தெரிவித்தோம். மக்கள் கருத்தை ஏற்றுக்கொள்கிற அரசு நமது அரசு என்ற காரணத்தினால், அதை உடனே ஏற்றுக்கொண்டு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு அவசரச் சட்டத்தை, (ஆர்டினன்ஸ்) பிறப்பித்தார்கள். கவுன்சிலுக்கும், கமிஷனருக்குமிடையே கலெக்டர் அவர்களால் நியமிக்கப்படுகிற டெபுடி கலெக்டர் ராங்குக்குக் குறையாத ஒரு அதிகாரிக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் என்ற ஒரு அதிகாரத்தைக் கொடுத்திருந்தார்கள். நிலைமையைக் குழப்புகின்ற விதத்தில் ஆர்டினன்ஸ் இருந்தது என்பதை நாம் தெரிவித்துக்கொண்டோம். ஏனென்றால் ஆர்டினென்சைப் பொருத்தவரையில், கவுன்சிலுக்கும், கமிஷனருக்கும் இடையிலே ஆர்.டி.ஓ. வருகிறார். ஆர்.டி.ஓ. முனிசிபாலிடி நிதி நிலையை இன்ஸ்பெக்ட் செய்யும் அதிகாரத்தை, டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டில் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அவர் இன்ஸ்பெக்ட் செய்யும் அதிகாரியாக இருக்கும் பொழுதே, அவருக்கு மேல், கவுன்சிலுக்கு அப்பீல் இருந்தால் நல்லதல்ல என்று அதையெல்லாம் எடுத்திருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆர்டினன்சை, திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னது போல், கவுரவத்தைப் பார்க்காமல், மக்கள் நலனை மனதில் கொண்டு. அவசரச்சட்டம் என்றாலும், அதையும் நீக்கிவிட்டு, ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பது, உண்மையிலேயே பாராட்டத்தக்க

இந்த நேரத்தில் இன்னொன்றையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது கடமையாகிறது. சில தனியார் கல்லூரிகள் முனிசிபாலிடி நகராட்சி எல்லைக்குள் விடுதிகள் நடத்துகிறார்கள். அதற்காக மாணவர்களிடமிருந்து வாடகை வசூல் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் முனிசிபாலிடிக்குக் கல்லூரியிலிருந்து வரி செலுத்துவது கிடையாது. அவர்கள் மாணவர்களிடமிருந்து வாடகை வசூல் செய்யும்போது, வாடகை என்ற அளவில் இல்லா ஒன்றாகும்.

மல் (establishment charge) என்ற அளவில் வசூல் செய்கிறார்கள். ஆகவே, அவர்கள் முனிசிபாலிடிக்கு வரி கட்டாமல், வரி விதிப்பிலிருந்து எக்சம்ஷன் பெறுகிறார்கள். மாணவர்களிடமிருந்து வரியென்று இல்லாமல், எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜ் என்று வசூல் செய்கிறார்கள், அந்த வகையில் ரசீதும் கொடுக்கிறார்கள்.





அப்படி சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து தப்பித்துக் கொள்கிறார்கள். அதற்கான வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமமூர்த்தி பேசும்போது, ஏதோ மனதில்லாமல், வேறு வழியில்லாமல் வரவேற்பதாகத்தான் சொன்னார்கள். இந்த அரசாங்கம் கவுரவத்தைப் பாராமல் மக்கள் கருத்தைக் கேட்டு, அதற்குத் தகுந்த வகையில் சட்டத்தைத் திருத்த எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நானும் நகராட்சி உறுப்பினராக இருந்திருக்கிறேன். ஏராளமான பொதுக் கூட்டங்கள் மூலமும், மகஜர்கள் மூலமும் வரிப் பிரச்சினை பற்றி மனுக்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால், கடந்த 20 ஆண்டு காலத்தில், மக்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, ஏதாவது சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்களா என்றால், நிச்சயமாகக் கிடையாது என்பதை உறுதியாகச் சொல்லுவேன். துப்பாக்கிச் சூட்டைப்பற்றிச் சொன்னார்கள். நான் சேர்ந்திருக்கும் மாவட்டமாக இருப்பதால், நான் அதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நீதி விசாரணை கேட்கப்பட்டது. நீதி விசாரணைக்கு அரசாங்கத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எங்கே துப்பாக்கிச் சூடு ஏற்படும், பிணம் விழும், அதைக் கொண்டு அரசியல் நடத்தலாம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுவதானால், நிச்சயமாக 72-ல் அது அவர்களுக்கு நல்ல பாடமாக அமையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, துப்பாக்கிச் சூடுகளை அரசியலாக்கலாம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதவேண்டாம் என்பதைப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஆமாம், சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள். சிண்டிகேட்காரர்கள்தான் வருகிற 72-ல் நிச்சயமாக அந்தப் பாடத்தைப் பெறப் போகிறார்கள்.

உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னதுபோல, ரூ. 15 30 ரூபாய் என்று இருக்கின்ற அந்த முறையை உயர்த்திக் கொள்ளலாமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த திருத்தத்தை வரவேற்று, அமைச்சருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE: Sir, there is a general feeling for the past several years that whatever be the increased taxation, there is nc relief for the people and that the amenities are not commensurate with the extra taxation levied in most of the Municipalities and Corporation. In fact I was very much pleasantly surprised to read the statement of the Hon. Minister yesterday that the Government must evolve a system by which taxation must reduce and amenities must increase. I would be very happy if such a system is evolved and I would request the Hon. Minister to enlighten the House on the system by which he could reduce the taxes and give more amenities.

In this particular contest, I wish to make a reference to the Municipality of Coimbatore. There has been a Special Officer for the Coimbatore Municipality for a long time and he has been instrumental for the quinquennial revision of the municipal tax in the City of Coimbatore a year ago and there was an arbitrary increase in the municipal tax especially on the houses and a number of complaints were voiced by the people there. In fact, Members also came out and vehemently protested against it and they have stated that the arbitrary increase in taxation is something which cannot be tolerated by the public. Now what is the reality ? There is practically no improvement with regard to the amenities conferred on the citizens of Coimbatore. But there is an increase in taxation on houses which is not in proportion to the amenities given to the people. No proper relief has been given to them and it has been going on like that.

Now I come to paragraph 3 of the Statement of Objects and Reasons appended to the Bill. It is stated—

'Representations had been received by the Government from the residents of certain municipalities in the State to the effect that the property tax assessed during the general revision had been unreasonably high.'

It is a fact that it has been very unreasonably high.

It is further stated—

'The Government had considered the representations and decided to provide suitable relief to the aggrieved persons. . . '

The point is that the entire people especially in Coimbatore are aggrieved and therefore there is no point in expecting individuals to ask for relief and the relief expected is much higher.

The Government officials and especially Special Officers who are primarily responsible for levying high taxation will try to defend it but the Government, because of their contact with the public, legislators and other non-officials, have realised that it is unreasonably high. I think that this is the first time in the history of this Legislature that a paragraph of this type containing the expression 'unreasonably high' has been used. When the Government themselves admit that it is unreasonably high, it must have been still more unreasonably high. I do not know the particular context in which that expression has been used. But I have received valid information that the quinquennial revision in Coimbatore has been unreasonably high and I would request the Hon. Minister to come further down from the pedestal and give an assurance categorically that he would review the whole quinquennial revision that has taken place in the light of the discussions which have taken place in this House. I am not going into the merits of the Bill as we agree with the object of the Bill. But my only request is that the whole thing should be reviewed. Thank you, Sir.





திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன். முனிசிபல் சட்டப்படி 4-வது அட்டவணையில், 8-வது பிரிவின்படி ஐந்து வருடத்திற்கு ஒருமுறை இந்த வரியைப் புனர்ப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விதி கூறுகிறது. ஆனால் அதற்குச் சில முனிசிபாலிடிகளில் ஸ்பெஷல் ஆபீசர்களை நியமனம் செய்து அவர்கள் இந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எக்சிகியூடிவ் அதிகாரிக்குத் துணையாக இருப்பதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையெல்லாம் அவர்கள் சேகரித்து அதன் அடிப்படையில் வரியை உயர்த்துகிறார்கள். பொதுவாக, ஐந்து வருடத்திற்கு ஒருமுறை வரியை உயர்த்த வேண்டுமென்று சட்டத்தில் விதி இல்லாமல் இருந்தாலும், வருகின்ற ஸ்பெஷல் ஆபீசர்கள் எல்லோரும் ஐந்து வருடத்திற்குள் ரென்டல் வரி அதிகமாகி இருக்கிறது என்று சொல்லி வரியை உயர்த்தி விடுகிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் குழித்துறை சாதாரண பஞ்சாயத்தாக இருக்கிறது. நாகர்கோயில் முதல் நிலை முனிசிபாலிடியாக இருக்கிறது. குழித்துறை சாதாரண பஞ்சாயத்து. அந்தப் பஞ்சாயத்தில் வரியை உயர்த்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். 11 ஆயிரம் ரூபாயாக இருந்த வரியை 73 ஆயிரம் ரூபாயாக குழித்துறை முனிசிபாலிடியார் கூட்டியிருக்கிறார்கள். ரூ. 11 ஆயிரமாக இருந்த வரி ரூ. 73 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. அந்த அதிகாரிகள் எந்த முறையில் பரிசீலனை செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஸ்பெஷல் ஆபீசர்கள் எல்லாம் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்துகொள்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சில இடங்களில் இருக்கக்கூடிய ஸ்பெஷல் ஆபீசர்கள் ஒரே ஊரில் இருக்கும் ஒரு கடைக்கு 4 ரூபாய் வரியாகப் போடுகிறார்கள். பக்கத்து கடைக்கு 16 ரூபாய் என்று வரி போடுகிறார்கள். குழித்துறை முனிசிபாலிடியில் ஸ்பெஷல் ஆபீசர் இப்படிச் செய்திருக்கிறார். காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால், ஒரு கடையில் மகாத்மா காந்திஜியின் படம் மாட்டப்பட்டிருந்தது. இன்னொரு கடையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களின் படம் மாட்டப்பட்டிருந்தது. அண்ணா படம் இருந்த கடைக்கு வரி 4 ரூபாய், மகாத்மா காந்திஜி படம் மாட்டப்பட்டிருந்த கடைக்கு 16 ரூபாய் வரி. இது கட்சிக் கண்ணோட்டத்துடன் நடைபெறுகிற விஷயமா இல்லையா என்பதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

இப்பொழுது வரியை உயர்த்தியிருப்பது பொதுமக்களுக்கு அதிர்ச்சியை அளித்திருக்கிறது. ஏதாவது ஒரு அவசியத்தை முன்னிறுத்தி வரியை உயர்த்துவது நியாயம் என்று ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் பெரும்பாலான முனிசிபாலிடிகளில் உள்ள

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 நவம்பர் 26

வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கும்போது மிச்சம் வருகின்ற கணக்காகவே இருக்கிறது. நாகர்கோயில் முனிசிபாலிடியில் 2 லட்சம் ரூபாய் மிச்சம் என்கிறார்கள். இப்பொழுது நாகர்கோயில் முனிசிபாலிடியில் வரியை 7 லட்சத்திற்கு மேலாக உயர்த்தியிருக்கிறார்கள். காரணம் கேட்டால், இப்பொழுது நாகர்கோயில் முனிசிபாலிடி பர்ஸ்ட் கிரேடு முனிசிபாலிடியாக இருக்கிறது. அதை செலக்ஷன் கிரேடு முனிசிபாலிடியாக உயர்த்த வேண்டும் என்றால், அதற்கேற்ற வகையில் நிதிவசதிகளை உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இவர்கள் நகரத்தில் வாழ்கின்ற மக்களுடைய வசதிகளைப் பெருக்கியிருக்கிறார்களா என்பதைப் பார்த்தால் ஒன்றுமே இல்லை. இந்த வரி உயர்வு தேவையில்லை என்பதை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரென்ட் கன்ட்ரோல் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் ஃபேர் ரென்ட் அடிப்படையில் வரியை உயர்த்துவது நியாயமாக இருக்க முடியும். கர்நூல் முனிசிபாலிடியிலிருந்து ஒரு கேஸ் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், வரி அதிகமாக இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது, ஆனால் நமது அதிகாரிகள் வேண்டுமென்றே இப்படிச் செய்கிறார்களா, அல்லது முன்னால் அசெஸ் பண்ணியதை அடிப்படையாகக் கொண்டு உயர்த்திப் போடுகிறார்களா என்று தெரியவில்லை.

குறிப்பாக, இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரி உயர்வுக்கெல்லாம் மக்கள் ஆட்சேபனை தெரிவித்து, நாகர்கோயில் மக்களின் சார்பில் காங்கிரஸ்காரர்கள் சட்ட அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்ட வேண்டுமென்று கறுப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சட்ட அமைச்சர் அவர்கள் முனிசிபாலிடியில் தமக்குக் கொடுத்த வரவேற்புக்குப் பதில் அளித்துப் பேசுகையில், "சட்டம் தெரியாத சட்டசபை உறுப்பினர்கள் இப்படி ஆர்ப்பாட்டம் செய்யும்படிச் சொல்கிறார்கள்" என்று பேசிய பேச்சு பத்திரிகையில் வந்தது. குறிப்பாக சட்ட அமைச்சர் அவர்கள், இன்னொரு சட்டசபை உறுப்பினரைப் பார்த்து, "சட்டம் தெரியாதவர்" என்று சொல்லலாமா? . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இது வேடிக்கையான பேச்சாக இருக்கிறது. இதுமாதிரி செய்தியைத் திரித்துக் கூறும் பத்திரிகைகள் இருக்கின்றன. எந்த அமைச்சரும், ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் ஒரு சட்ட சபை உறுப்பினரைக் குறிப்பிட்டு, 'சட்டம் தெரியாதவர்' என்று பேச மாட்டார். அப்படி செய்தியைத் திரித்துக் கூறும் பத்திரிகைகளும் நாட்டில் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்களும் அப்படிப்பட்ட பத்திரிகைகளைப் பார்க்காமல் இருப்பது நல்லது என்று கூறுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, அந்தமாதிரிப் பத்திரிகைகள் நாட்டிலே, அந்தக் கட்சியிலேகூட இணைந்து இருக்கிறது.



1970 நவம்பர் 26]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, 'தினமலர்' என்ற பத்திரிகையில் வந்திருக்கிறது. திரு. பி. மகாதேவன் பிள்ளையைப்பற்றிக் குறிப்பிட்டு, அவர் சட்டம் பயிலாதவர் என்று பிரசுரமாகியிருக்கிறது. 'நான் அப்படிச் சொல்லவில்லையென்று' அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு மிக்க மகிழ்ச்சி. பொது வாழ்வில் இருக்கின்ற அமைச்சர்களில் இவர் நல்ல அமைச்சர் என்று நினைத்திருந்தோம் . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அங்கே பத்துப் பதினைந்து பேர் கொடிகளைப் பிடித்துக்கொண்டு இருந்ததை மறுநாள் காலைப் பத்திரிகை ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கொடிகளைப் பிடித்து கிளர்ச்சி செய்தனர் என்று போடும் பத்திரிகைகளில் நண்பர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நாகர்கோயிலில் கொட்டும் மழையில் தொண்டர்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு கறுப்புக் கொடி காட்டினார்கள். இவர்களை சட்டசபை உறுப்பினர் ஏதோ தூண்டிவிட்டார் என்று அமைச்சர் பேசியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அதற்கு ஆதாரம் வைத்திருக்கிறேன்.

அடுத்தபடி, வரி உயர்வு ஏற்படும்போது ஆட்சேபனை இருக்கலாம். தக்கலை நகரசபை, காங்கிரஸ் கையில் இருக்கிறது. அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள், 'காங்கிரஸ் முனிசிபாலிடியிலே வரி உயர்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று கண்டனக் குரலை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் தங்கள் கையிலுள்ள நாகர்கோயில் முனிசிபாலிடியில், 'வரி உயர்வு ஏற்பட்டிருக்கிறது' என்பதைக் காங்கிரஸ்காரர்கள் எடுத்துச் சொல்லியும்கூட அதைக் கவனிக்காத எதேச்சாதிகாரப் போக்கிலே போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, 15 ரூபாய் வரி உயர்வு உள்ளவர்கள் அப்பீல் உடனடியாகச் செய்துகொள்வதற்கு வழி செய்திருப்பதை நான் மனமார ஆதரிக்கிறேன். குறிப்பாக, குடிசைகள் போன்றவற்றிற்கு ப்ராப்பர்டி டாக்ஸிலிருந்து விதிவிலக்கு செய்ய அரசாங்கம் முற்பட வேண்டும். பெரிய பெரிய கட்டிடங்கள் வைத்திருக்கக் கூடியவர்கள் வாடகை வாங்குகிறார்கள். அவர்களுக்கு வரியை ஸ்லாப் சிஸ்டமாக வைத்தால் நல்லதாக இருக்கும். சிறிய அளவிலே சிறிய கட்டிடத்திலே நான்கைந்து ரூபாய் வாடகைக்கு விடக்கூடியவர்களுக்குக் குறைந்த அளவில் வரியும், அதிக வாடகை பெறுபவர்களுக்கு அதிக வரியும் விதிக்க வேண்டும். குறைந்த வாடகை வாங்குபவர்களிடம் பதினைந்து ரூபாய் என்று வரி வாங்குவது மனவேதனையாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கவனித்து நல்ல முறையில் பரிசீலனை

செய்ய வேண்டும். முனிசிபல் கவுன்சில்கள் எல்லாம் "எங்களுக்கு ரிவிஷன் தேவையில்லை" என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். ஐந்து வருடத்திற்கு முன்பு இருந்த வரி விகிதமே போதும், வரி உயர்வு தேவையில்லை என்று முனிசிபல் கவுன்சில்கள் போட்டு அனுப்பியிருக்கிற தீர்மானத்தின்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிறது என்று தெரியவில்லை. இருக்கக்கூடிய பிரச்சினைகளை எல்லாம் ஆராய்ந்து நல்லதொரு முடிவினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் அலுவல் இன்று 2 மணி வரை நடக்கும். இந்த மசோதாவை முடித்து விடலாம்.

THIRU K. VINAYAKAM : You cannot take us by surprise. We have not taken lunch. Anything should be finished within the time stipulated and if that is not possible, it shall have to be
பி.ப. 1-30 taken up the next day. We shall take up this Bill tomorrow. Whenever some member expresses any such sentiment, you will have to respect it, Sir.

MR. DEPUTY SPEAKER : After all, Thirumathi Janaki Ammal is the only speaker.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : The Bill has to go to the Council.

* **திருமதி கே. பி. ஜானகியம்மாள்** : துணைத் தலைவரவர்களே, தற்போது நம் முன்னால் இருக்கக்கூடிய முனிசிபல் ஆக்ட் திருத்த மசோதாவைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Council is not going to discuss this today. Government cannot tell us that the Bill has to go to Council. They are going to adjourn today because a member of that House had expired. They can take it up tommorrow.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திருமதி ஜானகியம்மாள் பேச ஆரம்பித்துவிட்டார்கள். இந்த மசோதாவை முடித்துவிடுவோம்.

* **திருமதி. கே. பி. ஜானகியம்மாள்** : ஏற்கனவே நகரசபைகளில் ஆங்காங்குள்ள வீடுகள் பரிசிலனை செய்யப்பட்டு, தரம் பிரித்து வரி நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அதோடு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்று ஸ்பெஷல் அதிகாரி ஒருவரைப் போட்டு மறுபரிசிலனை செய்வதும் வரியைக் கூட்டுவதுமாக இருக்கிறோம். இதில் என்ன விஷயம் என்றால் வரக்கூடிய அதிகாரிகள் எல்லோரும் நல்லவர்களாக, நாணயம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று நினைப்பதற்கில்லை. அவர்கள் நியாயமாக, நடுநிலையில் இருந்து,





சுயநலம் கருதாது பணி செய்வார்களானால் எவ்வித சிரமும் ஏற்பட்டிருக்காது. அதற்கு மாறாக நாணயமற்ற, சுயநலமிக்க அதிகாரிகளும் இருப்பதனால் இந்த வரிவிதிப்பில் பலவிதமான கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

வீடுகளை எடுத்துக்கொண்டால் காரை வீடுகள், ஓட்டு வீடுகள், கூரை வீடுகள் என்று மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். முன்பு ஒரு ஓலைவீட்டுக்கு ரூ. 8.25 வரியாக இருந்தது. இப்போது ஸ்பெஷல் அதிகாரி அதற்கு ரூ. 52.55 பைசாவாக உயர்த்தியிருக்கிறார். அதுபோலவே முன்பு ஒரு ஓட்டு வீட்டுக்கு ரூ. 12.70 இருந்தது, அதை இப்போது ரூ. 117.20 ஆக உயர்த்தியிருக்கிறார். அதுபோல முன்பு ஒரு காரை வீட்டுக்கு ரூ. 43.55 ஆக இருந்தது. அந்த வீட்டுக்கு வரியை தற்போது ரூ. 560 ஆக உயர்த்தியிருக்கிறார். முன்பு இருந்த வரியைவிட ஒரு மடங்கு அல்ல, இரண்டு மடங்கு அல்ல, இப்படிப் பல பல மடங்குகளை இந்த ஐந்து வருஷ ரிவிஷனில் உயர்த்தியிருக்கிறார் என்றால் இது என்ன நியாயம் என்றே மதுரையில் உள்ள எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. தாங்க முடியாத இந்த வரிச்சுமையை எதிர்த்துத் தான் சர்வ கட்சியினர்களிடையே ஒரு கொந்தளிப்பு நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறதே தவிர அரசியல் காரணம் எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் காரணத்தைச் சொல்லி பிரச்சினையைப் புரிந்துகொள்ளாது விடுவது சரியாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இந்த ஆக்டில் தென்னந்தோப்பு, மாந்தோப்பு சம்பந்தமாக ஒன்றும் இல்லை. ஆனால், ஐராவதி நல்லூர் என்ற இடத்தில் டி.எஸ். 230-இல் இருந்த தென்னந்தோப்புக்கு முன்பு 74 பைசா இருந்தது. இப்போது ரூ. 1,925.50 பைசா வரி விதிக்கப் பட்டிருக்கிறது.

அங்குள்ள ஸ்பெஷல் ஆபீசர் எப்படி மக்களிடம் நடந்து கொள்கிறார், அங்குள்ள கொந்தளிப்பான நிலைமை என்ன என்பதை இந்த அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டும். சில அதிகாரிகள் இப்படி இருக்கலாம் என்றாலும், இவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் அது சரியாக இருக்காது.

உதாரணமாக, மதுரையில் மஞ்சனக்காரத்தெருவில் ராமையா என்பவர் 27 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு வீட்டை வாங்கினார். அந்த வீட்டுக்கு வரி விதிக்க ஸ்பெஷல் அதிகாரியும், பில் கலெக்டரும் சென்றார்கள். அவரைத் தனியாக அழைத்து இந்த வீட்டுக்கு ஆயிரத்திற்குமேல் வரி விதிக்க வேண்டியிருக்கும், ஆறு மாதத்திற்கு 250 ரூபாய் என்பதாக ஐந்து வருஷத்திற்குமுள்ள தொகையை எங்களுக்குக் கொடுப்பதாக இருந்தால் குறைந்த வரியை விதிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் ஐந்து

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1970 நவம்பர் 26

வருஷத்திற்கு உங்களிடம் கொடுப்பதைக் காட்டிலும் வீட்டையே விற்று விடுகிறேன் என்று சொல்லி, இந்தி பிரச்சார சபைக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார். இது உண்மையான விஷயம். அரசாங்கம் ஸி.ஐ.டி. மூலமாக வேண்டுமானாலும் இதைப்பற்றி விசாரிக்கலாம். இந்த முறைகேட்டினால் ரிவிஷன் மூலமாக நகர சபைகளுக்கு அதிகமான வருமானம் வருகிறதோ என்னமோ இந்த ஸ்பெஷல் அதிகாரிகளுக்கு நிறைய வருமானம் கிடைக்கிறது. இது மறுக்க முடியாத உண்மை. இதை அரசு நல்ல முறையில் பரிசீலனை செய்து தவறு செய்கிற அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மசோதாவின் மூலம் அப்பீல் செய்துகொள்ள வகை செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஏழை மக்கள், ஆசிரியர்கள், நடுத்தர மக்கள் இவர்கள் எல்லாம் பாதிக்கப் படாதவாறு பாதுகாக்கவேண்டும். 15 ரூபாய்க்குக் குறைவாக வரி கட்டி வந்தவர்கள் வரியைக் கட்டாமலேயே அப்பீல் செய்து கொள்ளலாம். முப்பது ரூபாய்க்கு மேல் வரி கட்டி வந்தவர்கள் பழைய வரியைக் கட்டிவிட்டு அப்பீல் செய்துகொள்ளலாம் என்று திருத்த மசோதா கூறுகிறது. முப்பது ரூபாய், ஐம்பது ரூபாய் வரி கட்டி வந்தவர்கள் எல்லாம் மிகச் சாதாரண மக்கள். இவர்களைப் பொறுத்தவரையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரியைக் கூட்ட வேண்டிய அவசியமே இல்லை. இவர்களுக்கு ரிவிஷனே கூடாது. என்று அரசு சட்டம் கொண்டு வருவது நலமாக இருக்கும். ஏன் என்றால் 50 ரூபாய்க்கு உட்பட்டு வரிசெலுத்தக்கூடியவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள். ஆகவே அவர்களுக்கு 5 ஆண்டு களுக்கு ரிவிஷனிலிருந்து விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் மதுரையில் நான் சொன்ன அதிகாரிகளைப் பற்றி உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கூறிக்கொண்டு இந்த மசோதா நிறைவேறக்கூடிய காலத்திலே எனது கருத்துக்களை வற்புறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைச் சட்டமாக்குவதில் இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே, இருக்கக்கூடிய முனிசிபாலிட்டிகள் சிலவற்றிற்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய ஆட்சி, பழைய ஆட்சி என்று சொல்வார்களே அந்த ஆட்சியில் 200, 300 ரூபாய்க்கு பஞ்சாயத்துகளே காண்ட்டிராக்ட் விடுகின்ற விதங் களில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் ரூபாய் 195, 190 ஆகியவற்றிற்கு 10, 15 தனித்தனியாக டெண்டர்கள் விடுவார்கள். தவறுகள் ஏற்படுவதற்கு வழி வகைகள் இருக்கின்றன. அதிகாரங்கள் கொடுப்பது வரவேற்கத்தக்கது



1970 நவம்பர் 26] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தான். அதிகாரம் கொடுக்கிற நிலையில் நியாயமாக, முறையாக நடக்கிறதா என்று கண்காணிக்க வேண்டியது மிகமிக அவசியம். மேஜர் பஞ்சாயத்துகள் முனிசிபாலிடியாகக் கூடிய நிலையிலே, 5 அல்லது 6 பங்கு வரிகளை உயர்த்திப் போடுகிறார்கள். அப்படிக் கமிஷனர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக சத்திய மங்கலத்திலே முனிசிபாலிடியாக ஆக்கிய பிறகு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். முன்னாலே இருந்த வரியை 6 பங்கு உயர்த்தி யிருக்கிறார்கள். உடனே மக்கள் முறையிட்டார்கள். அதற்காக நான் அந்த முறையீட்டைக் கலெக்டரிடம் கொடுத்தேன். அதற்குக் கலெக்டர் ஸ்டே போட்டிருக்கிறேன், நீங்கள் சென்று ஸ்பெஷல் ஆபீசரைப் பாருங்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஸ்பெஷல் ஆபீசர் அதுபற்றித் தகவல் இல்லை என்று சொல்லிவிட் டார்கள். கலெக்டர் ஸ்டே போட்டிருக்கிறேன் என்று சொல்லுகி றார்கள். ஸ்பெஷல் ஆபீசர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆறு, ஏழு பங்கு வரியை உயர்த்திய ஸ்பெஷல் ஆபீசருக்கே இவ்வளவு அதிகாரம் இருக்குமேயானால், தேர்தல் நடந்து முடிந்த பிறகு புது மெம்பர்கள் வந்து என்ன செய்ய வேண்டுமோ செய்யட்டும். எனக்கு ஆட்சேபனை இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். எந்தப் படம் இருக்கிறதோ அந்தப் படத்திற்குத் தகுந்த முறையில் வரி வசூலிக்கிறார்கள். காந்தி படம் இருந்தால் 16 ரூபாயும் அண்ணா படம் இருந்தால் 4 ரூபாயும் வசூலிக்கிறார்கள். ரொம்ப நன்றாக இருக்கிறது. பன்னிரண்டு ரூபாயை விட்டுவிட்டார்கள். (குறுக்கீடு) ஆமாம்; காமராஜ் படம் இருந்தால் ரொம்ப ரொம்பக் குறைச்சல். மிக்க நன்றி. கருணாநிதி படம் இருந்தால் 5 ரூபாய் முனிசி பாலிடியே கொடுக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், படங்களை மாட்டியிருப்பதைப் பொறுத்து வரி வசூலிக் கிறார்கள் என்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கூறினார்கள். அப்படி காந்தி படங்கள் மாட்டிய கடைக்கு 16 ரூபாயும், அண்ணா படம் மாட்டிய கடைக்கு 4 ரூபாயும் வசூலித்ததாகக் கூறினார்கள். அப்படி மாட்டப்பட்ட இரு கடைகளும் ஒரே அளவானதா என்றும், இரண்டும் பக்கத்துப் பக்கத்துக் கடைகளா என்றும் தெரிவிப்பார்களானால் நல்லது. அப்படித் தவறு நடந்து இருக்குமானால் உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். படத்தை வைத்து வரி வசூலிக்கி றார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, சொல்வதற்குத்தானே நாங்கள் இருக்கிறோம்? தப்பு பண்ணு வதற்கு அவர்கள் இருக்கிறார்கள். எது வேண்டுமானாலும் பண்ணட்டும். கடைசியிலே திருத்திக் கொள்ளலாம் என்று சொல்லுகிற நிலையில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களைத் திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அரசாங்கம் தவறு செய்ய வில்லை. தவறுகளைத் திருத்திக் கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறோம். அப்படித் தவறுகளைத் திருத்திக் கொள்ளவே கூடாது என்று சொல்லுகிறார்களா? உங்களுடைய அரசாங்கம் முன்னாலே இருந்தபோது தவறுகளைத் திருத்திக் கொண்ட பழக்கமே இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எங்களுடைய அரசாங்கம் அடிக்கடித் திருத்திக்கொள்ளுகிற அளவுக்குத் தவறுகளை செய்யக் கூடிய சூழ்நிலையில் இல்லை. இன்னும் கூட அவர்கள் திருத்தம் செய்கிறார்கள். டிபார்ட்மென்டில் கேட்டால் இன்னும்கூட திருத்தம் வருமோ என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், அரசியல் கண்ணோட்டம் இருக்கக் கூடாது. மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் கூட குடிசைகளை அமைக்கிற வர்களைப் பற்றிச் சொல்லும்போது அரசியல் கண்ணோட்டம் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் கலெக்டர் சொன்னபோது ஸ்டே பண்ணி யிருப்பதாகச் சொன்னார்கள். ஸ்பெஷல் ஆபீசரைக் கேட்டபோது இல்லை என்று சொல்கிறார்கள் இதைவிட யார் பொறுப்பாகச் சொல்ல முடியும்? நானே நேரில் போய்ப் பார்த்தேன். ஸ்பெஷல் ஆபீசரிடம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர் வரவில்லை என்று சொல்கிறார்கள். அந்தக் கலெக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் ஒரு புகார் கொடுத்ததாகச் சொன்னார்கள். அவர் அதை நிறுத்தி வைத்ததாகச் சொன்னார்கள் என்றும் சொன்னார்கள். அவர் என்றைய தினம் அதைக் கேட்டார்? அது எத்தனை நாட்களுக்குள் வரவில்லை? உள்ளபடியே கலெக்டர் ஸ்டே கொடுத்து இருப்பாரானால், எதிர்க் கட்சித் தலைவரிடம் சொல்லியிருப்பாரானால், நான் அதைப்பற்றி விசாரிக்கிறேன். கலெக்டர் கொடுத்த ஸ்டேவுக்கு ஸ்பெஷல் ஆபீசர் மதிப்புக் கொடுத்தாரா இல்லையா என்பது தெரிந்துவிடும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, சொல்லு வதற்கு முன்னாலேயே உள்ளே புகுந்து விட்டார்கள். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்து சம்பந்தப் பட்ட இலாகா செயலாளரைப் பார்த்து உத்தரவு போடும்படி கேட்டுக் கொண்டேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதைக் கூறுகிறேன். நான் கலெக்டரிடம் 21-ந் தேதி கொடுத்தேன். இதிலே எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்காரிடம் உத்தரவு போட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறேன். எதற்காக நான் சொல்லுகிறேன் என்றால், [illegible] பகுதியிலே 5, 6 மடங்கு வரி போட்டிருக்கிறார்கள். [illegible]







கூடிய மக்களாக இருந்தால் கொடுக்க முடியும். விலைவாசியைக் குறைத்து விட்டோம், குறைத்து விட்டோம் என்று சொல்லு கிறீர்கள். ஆனால் உற்பத்திப் பொருளுக்குக் கட்டுப்பாடான விலையைக் கொடுத்தால்தான் நன்றாக இருக்கும். முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே முனிசிபாலிடிகளின் வசதிகளைப் பெருக்க வேண்டுமென்றால், ரீசனபிளாக, நியாயமாகப் போட வேண்டுமென்று விதி இருக்கவேண்டும். தென்காசியில் நடந்த தைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு உங்களுடைய பரிசைப் பற்றியும் சொன்னார்கள். இது மக்களிடம் நீங்கள் இப்படிக் கேட்கும்போது கொடுக்கக் கூடிய அளவில் இருக்க வேண்டும். இப்படி அடிக்கடி திடீர் திடீர் என்று மாற்றாமல் ஒரே அளவாக இருக்கின்ற வகையில் குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்டமன்ற கமிட்டியில் வைத்து ஒரு 'கோடிபிகேஷன்' அமைக்கவேண்டும். ஒரு பஞ்சாயத்து முனிசிபாலிடி ஆகும்போது எத்தனை சதவிகிதம் உயர்த்த வேண்டு மென்று 3-வது பிரிவா, 4-வது பிரிவா, 2-வது பிரிவா என்பதைப் பார்த்து முதலில் இருந்ததை விட 25 சதவிகிதம் உயர்த்தலாம். அல்லது 50 சதவிகிதத்தில் உயர்த்தலாம். ஆனால் 6, 7 பங்கு உயர்த்தி 600, 700 சதவிகிதத்தில் உயர்த்தினால் மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள், வரக்கூடிய தேர்தலை முன்னிட்டு இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்றும் அதற்கு உத்தரவாதம் கொடுத்தால் நான் இதை ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, நகராட்சித் திருத்தச் சட்டத்திற்குப் பலவிதக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. திருத்தங்களைத் தந்து பேசிய நண்பர் இராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது வரம்புமீறி, இந்தச் சட்டத்தைப்பற்றிப் பேசாமல் துப்பாக்கிச் சூடுபற்றி எல்லாம் சொன்னார்கள். துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகுதான் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்று சொன்னார்கள். துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகுதான் அரசாங்கம் சட்டங்களைத் திருத்துகிறது என்று சொன்னார்கள். துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகுதான் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று ஒருபொழுதும் இந்த அரசாங்கம் எண்ணியதில்லை. துப்பாக்கிச் சூடு ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம். அதைப்பற்றி நீதி விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. எனவே அதைப்பற்றி நான் விரிவாகப் பேசவேண்டிய அவசியம் இல்லை. திரு. இராமமூர்த்தி அவர்கள் துப்பாக்கிச் சூடு என்று சொல்வதற்காக எங்காவது பிணம் விழுந்தால் அதைத் தேடிக் கொண்டு அலையவேண்டாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்ன காரணத்திற்காக நடந்தது என்பதைப் பற்றிப் பேசுவதற்கு நேரம் இல்லை. தென்காசியில் நடைபெற்றது வரியைக் குறைப்பதற்காக நடைபெற்ற போராட்டம். நாம் சட்டத்தைத் திருத்திக்கொண்டு இருக்கிறோம்.

திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னதைப்போல, கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தங்களை நகராட்சித் தலைவர்கள்—எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும்--ஒன்று சேர்ந்து தீர்மானம் போட்டு அனுப்பி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டபொழுது, நான் முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு சொல்கிறேன் என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் நகராட்சித் தலைவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்கு மரியாதை கொடுத்து ஏற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நகராட்சித் தலைவர்கள் கொடுத்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுதான் நாம் இங்கே திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

ஏதோ சில இடங்களிலே அதிகாரிகள் தவறுகள் செய்தார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள், படத்தைப் பார்த்து வரி போடுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். அறவே அப்படி இருக்காது என்று நான் சொல்லமாட்டேன். எல்லாம் தவறு என்றும் சொல்ல மாட்டேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒன்று சொன்னார்கள். அதைப்பற்றி விசாரிக்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதைப்பற்றியும் விசாரித்துப் பார்க்கலாம். கலெக்டரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. விரைவிலே அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரியைத் திடீர் திடீரென்று உயர்த்திவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வரிகளைத் திருத்தியமைக்கவேண்டும். அதற்கு விதி இருக்கிறது. திருத்தியமைக்க வேண்டாம் என்று சொல்வதற்கில்லை. திருத்தியமைக்காவிட்டால் திரு. சுப்பராஜா அவர்கள் குறிப்பிட்டதைப்போல நகராட்சிகளுக்கு வருமானமே இல்லாத நிலைமை பின்னாலே ஏற்பட்டுவிடும். வருமானமே இல்லாமல் போய்விடும். வரிகளை . . .

திரு. பி. ஜி. கருத்திருமன்: திருத்தியமைக்கப்படவேண்டுமென்றால் குறைப்பதற்காகவும் இருக்கலாம் அல்லவா? அதிகப்படுத்துவது மட்டுமல்ல, குறைப்பதும் திருத்தியமைக்கப்படுவது தானே?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வரிகளைக் குறைப்பதற்கு நகராட்சிகளுக்கு நிறைய அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அது. எனவே, அவர்கள் குறைத்துக் கொள்ளலாம். அதிலே அரசு தலையிடுவதற்கில்லை.

அவசரச் சட்டத்தின்மூலம் ஆர்.டி.ஓ.-வை வைத்துச் செய்யலாமா என்று பார்த்தோம். ஆனால், அது வேண்டாமென்று மீண்டும் அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.



எனவே, ஐந்தாண்டுகளுக்கொருமுறை திருத்தியமைக்கப்பட வேண்டும். வேறு வழியேயில்லை. அதனால்தான் கொண்டுவந்திருக்கிறோம்.

திரு. சுப்பராஜா அவர்கள் நகராட்சி நிர்வாகத்திலே நிறைய அனுபவம் பெற்றவர்கள். நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். திரு. இராமமூர்த்தியோடு சேர்ந்துகொண்டு அவர்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். நல்லவேளையாக அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர் என்ற முறையில் தம்முடைய கருத்துக்களைச் சொன்னார்கள்.

குவின்க்வெனியல் ரிவிஷனின் விளைவாக ஏற்பட்டுள்ளவற்றைப் பற்றி நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஐந்து, ஆறு பங்கு வரி போட்டு விட்டார்கள் என்றால் அதற்கு இதன்மூலம் பரிகாரம் கிடைக்கும். இல்லையென்றால் கவுன்சில்மூலம் நடவடிக்கை எடுப்பார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகள், அவற்றிற்கு அதிகாரம் இருக்கிறது, அவர்கள் கொடுக்கிற முடிவே இறுதியான முடிவாகும். எனவே வரிக் குறைப்பு முயற்சியிலே அரசாங்கம் தலையிடாது.

மற்ற யோசனைகள் எல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பேசிவிட்டுப் போய்விட்டார்கள். சம்பந்தம் இல்லாதவை எல்லாம் சொல்லி உத்திரவாதம் வேண்டும், உத்திரவாதம் வேண்டும் என்று சொன்னார்கள். சட்டத்தைப் பற்றிப் பேசி உத்திரவாதம் கேட்டிருந்தால் பார்த்திருக்கலாம். இதற்குப் புறம்பாகப் பேசினார்கள். இப்பொழுது புதிய சட்டம் கொண்டுவரப்போகிறோம். மக்களுக்கு நன்மைசெய்யக்கூடிய வகையிலேதான் இது அமையும்

திருமதி ஜானகியம்மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். வீட்டையே விற்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பேச்சோடு அவர்கள் விட்டு விடாமல், எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றி விசாரணை செய்து அதிகாரிகள் தவறு செய்திருந்தால், எந்த அதிகாரியாக இருந்தாலும், கடுமையாக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது தகுதியற்றவர்களைப் போட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். உங்கள் கட்சிக்காரர்களையெல்லாம் போட்டு விடுகிறீர்கள், அரசியல் காரணமாகப் போடுகிறீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அரசாங்கப் பணியாளர்கள் அரசியல் காரணத்திற்காக இல்லை, அரசாங்கத்திற்காக இருக்கிறார்கள். ஆங்காங்கு ரிவிஷன் ஆபீஸர்கள் சென்று வீட்டுக்கு, கடைக்கு சென்று, வீட்டுக்கு வீடு நுழைந்து, நுழைந்து, எவ்வளவு வாடகை வரும் என்று விசாரித்து விசாரித்துத்தான் எழுதி அதன்பிறகு வரி போடுகிறார்

கள். அப்படித்தான் சட்டமும் இருக்கிறது. அவர்கள் செல்கின்ற பொழுது, வாடகைக்குக் குடியிருப்பவர்கள் இருந்தால் அவர்கள் சொல்வது ஒன்றாக இருக்கும், வீட்டுச் சொந்தக்காரர்கள் இருந்தால் அவர்கள் சொல்வது ஒன்றாக இருக்கும். வாடகைக்கு இருப்பவர் 500 ரூபாய் என்று சொன்னால் வீட்டுக்காரர் 250 ரூபாய் என்று சொல்வார். பத்திரத்தைக் கூட எடுத்துக் காட்டுவார். நான் நகராட்சித் தலைவராக இருந்த காரணத்தால் பல பார்த்திருக்கிறேன் இப்படி. ரிவிஷன் ஆபீஸர்கள் செல்லும் பொழுது என்ன சொல்கிறார்களோ அதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். இந்தப் புதிய சட்டத்தைப் பொறுத்த வரையிலும் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு **நிறைவேற்றப் பட்டது.**

MR. DEPUTY SPEAKER: The question is, "That clause 3 do stand part of the Bill."

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name;

In the proposed insertion of Rule 26-A in Schedule IV of the principal Act, in item (b), the words 'but does not exceed thirty rupees, then' shall be deleted.

THIRU P. G. KARUTHIRUMAN : I second the amendment.

THIRU A. A. SUBBARAJA : Sir, I move the amendment standing in my name :—

(i) In the proposed insertion of Rule 26-A in Schedule IV of the principal Act, in item (a), for the words "exceed fifteen rupees" substitute the words "exceed twenty rupees".

(ii) In the proposed insertion of Rule 26-A in Schedule IV of the principal Act, in item (b) for the words "fifteen rupees but does not exceed thirty rupees" substitute the words "twenty rupees but does not exceed fifty rupees".

THIRU K. R. GNANASAMBANDAN : I second the amendment.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலும் இரண்டொரு வார்த்தைகளை மட்டிலும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளலாம் என்று



நினைக்கிறேன். முப்பது ரூபாய்க்கு அதிகமாக வரி விகிதம் செய்யப் பட்டிருந்தால் அவர்கள் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் அப்பீலுக்குச் செல்லலாம் என்று இருக்கிறது. அதற்குக் குறைவாக இருந்தால் ஏற்கனவே என்ன பணம் செலுத்தவேண்டுமோ அதைச் செலுத்தாமலேயே அப்பீலுக்குச் செல்லலாம் என்று இருக்கிறது. தவறுகள் நடக்கவில்லை என்று சொன்னார்கள். என்னுடைய திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்தவரையிலும் ரிவிஷன் ஆபீஸர் ஒரு வரி விதிப்புச் செய்கிறார், அதிகமாக அது இருக்கிறது என்று அப்பீலுக்குச் சென்றால் பிறகு புதிய வரிவிதிப்பு இரண்டு மடங்கு அதிகமாகப் போட்டிருக்கிறார். கட்சி நோக்கத்தோடு காங்கிரஸ்காரர்களுக்கு அப்படிச் செய்திருக்கிறார். இதை என்னால் நிரூபிக்க முடியும். அதிகாரிகள் தவறுகள் செய்யவில்லை என்று சொல்லவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அந்த மாதிரி நடந்து இருக்கிறது. முப்பது ரூபாய்க்கு அதிகமாக உள்ளவர்கள் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் அப்பீலுக்குப் போகவேண்டு மென்றால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு அவர்கள் கட்டிவிட்டுத்தான் போகவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பணத்தைத் திரட்டிக் கட்டிவிட்டு அப்பீலுக்குப் போவது என்றால் முடியாது. எல்லோருக்குமே அந்த வசதி அமையாது. நாம் நினைத்துக் கொண்டிருக்கும் வசதிபடைத்த வர்கள்கூட பல நேரங்களில் 100 ரூபாய்கூட திரட்ட முடியாதவர் களாகயிருந்து கொண்டிருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, இதை மனத்திற்கொண்டு 30 ரூபாய்க்கு அதிகமானவர்கள் இதற்கு முன்னால் எந்த அளவிற்கு வரி விகிதம் செலுத்தினார்களோ அதைச் செலுத்திவிட்டுப் பிறகு அப்பீலுக்குச் சென்று, அங்கு உயர்வாகத்தான் கட்ட வேண்டுமென்றால் கட்டலாம் அல்லது அப்பீல் நியாயமாக இருக்கிறது என்றால் குறைவாகக் கட்டலாம் என்ற நிலையிருக்க வேண்டும். பி.ப. 2-00

இதைச் சொல்லுகின்ற இந்த நேரத்தில் இந்தத் தவறுகளை நடக்கவில்லை என்று அமைச்சரவர்கள் அப்படி ஏற்றுக் கொள்ளாமல் இந்த நிலைமைகள்—ரிவிஷனுக்குப் பிறகு, அப்பீல் கொடுத்த காரணத்திற்காக இரண்டு மடங்கு ஆக்கும் நிலை—கட்சிக்காகச் செய்யும் நிலை இருக்கிறது. அந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கும் திருத்தத்திலே 15-ஐ 20 ஆக்க வேண்டுமென்றும், 20-லிருந்து 30 ஆக்க வேண்டுமென்றும் இருக்கிறது. ஐம்பதுக்கு மேல் ஒரு ஸ்லாப் இருக்கவேண்டும். இது ஆறு மாதத்திற்கு ஒரு முறை. இதை வருஷத்திற்கு கணக்கிட்டால் கூடுதலாகக் காட்டும். ரிவிஷன் ஆபீசர் எண்ணத்தில் குறைந்த மதிப்புதான் இருக்கிறது. அதை நாம் வரையறுக்கவில்லை. எல்லோருமே பர்செண்டேஜ் இவ் வளவுதான் என்று சொல்லுகிறார்கள். டாக்சேஷன் கமிட்டியிலே 100 ரூபாய்க்கு நியாயமாக 10 ரூபாய் கூடுமென்றால் அதை

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 நவம்பர் 26

அப்படியே நிறுத்தி வைத்துக்கொண்டு பர்செண்டேஜ் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பர்செண்டேஜைக் கூட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் அளவில் ஒரு மில் இருக்கலாம். 1,000 ரூபாய் அளவில் ஒரு மில் இருக்கலாம். ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதை ரூபாய் 500-ஆகக் கூறலாம். அதே மில்லைப்போன்று அதே அளவிற்கு வேறொரு மில் இருந்தால் ரூபாய் 800 போடக்கூடும். எனவே, இனிமேல் இருக்கும் வரிமை। பர்செண்டேஜ் போடுவது நியாயமில்லை. ஐந்நூறு ரூபாயாக இருப்பது பர்செண்டேஜினால் 800 ரூபாய் ஆகக்கூடும். இது சட்டத்திற்குப் புறம்பாக ஆகக் கூடும்.

ரிவிஷன் ஆபீசர்கள்மேல் கொஞ்சம் தப்பு இருக்கிறது. அசெஸ் பண்ணுகிறார்கள். வேல்யூ பண்ணும்பொழுது ஒரு ரிவிஷனுக்கு 1,000 ரூபாய், இன்னொரு ரிவிஷனுக்கு 10,000 ரூபாய் என்று போடும் அளவிற்கு இருக்கிறது. அல்லது எவ்வளவு வேண்டுமானாலும் குறைக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜானகியம்மாள் நல்ல கருத்தினைச் சொன்னார்கள். வி.எல். டாக்ஸ் என்றிருக்கிறது. ஆறு ரூபாய் கட்டினால் ஆயிரத்து சொச்ச ரூபாய் வரும். அது கவுன்சிலுக்கு வரும். அப்பொழுது எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு, 1,000, 2,000 என்பதை 100, 50 என்று குறைத்திருக்கிறேன். எனவே, அப்படிக் குறைக்கவேண்டிய வி.எல்.டி.-ஐயே எடுத்து விட்டால் நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து, எக்ஸ்செம்ஷன். ஏழை எளியவர்களுக்கு ஏற்கெனவே எக்ஸ்செம்ஷன் சட்டத்தில் இருக்கிறது. வருஷத்திற்கு 18 ரூபாய் வாடகை, 6 மாதத்திற்கு 2 ரூபாய் 36 காசு கட்டுபவர்கள் விஷயத்தில் கவுன்சிலே செய்ய டீ-செண்ட்ரலைஸ் பண்ணியிருக்கிறது. தீர்ப்பு பண்ணியிருக்கிறோம்.

அதேபோன்று ரேர் கேஸ்களிலே கவுன்சில் நினைத்தால் ரைட் ஆஃப் செய்ய, ஏழை எளியவர்களுக்குச் செய்ய கவுன்சிலுக்கு அதிகாரமிருக்கிறது.

இதை உத்தேசித்துப் பார்த்து ரிவிஷனுக்கும், ரேர் கேசிற்கும் த்ரூ அவுட்டாக இருப்பதால் ஸ்லாபைக் கொஞ்சம் முன்னும் பின்னும் மாற்றிக்கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் யோசிப்பார்கள் என்று நம்பி அதைப் பார்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப்பொழுது 15 ரூபாய் வரை வரி கட்டாமல் மனுச் செய்யலாம். 15-லிருந்து 30 ரூபாய் வரை கட்டுபவர்கள் பாதி கட்டிவிட்டு, மேற்கொண்டு வரிக்கு அப்பீல் செய்யலாம். அதற்குமேல் வருபவர்கள் முழுப் பணத்தைக் கட்டவேண்டும். இது அரை



1970 நவம்பர் 26] [திரு. ப. உ. சண்முகம்]

ஆண்டிற்கு. முழு ஆண்டு என்றால் அரையாண்டிற்கு 15 ரூபாய் என்று இருப்பது 30 ரூபாய் ஆகும். ஆன்யுவல் ரிடர்ன்படி நகராட்சிக்கு 20 சதவிகிதம் வரி என்றால் எவ்வளவு ஆகுமென்றால், 100 ரூபாய் என்றால் 20 ரூபாய் ஆகும். 150 ரூபாய் என்றால் 30 ரூபாய் வரி வரும் நிலைமையிருக்கும். 150 ரூபாயில் வருபவர்கள் அவ்வளவு ஏழையாக இருக்க மாட்டார்கள். மேற்கொண்டு வரி கட்ட வேண்டியவர்கள் பெரிய வீடு உள்ள அளவிற்கு வசதியாக இருப்பார்கள், பெரிய கட்டடத்தை வைத்திருப்பார்கள். இந்த ஸ்லாப் சிஸ்டம்கூட நகராட்சி மன்றத் தலைவர்கள் ஏகமனதாகப் போட்ட தீர்மானம். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

Thiru K. RAMAMOORTHI: In view of the injustice that is being experienced by my Constituency, I am pressing my amendment.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு எண். 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 9. பேரவையின் மு » வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

97. Order issued under G.O.R. No. 1470, Revenue, dated the 19th August 1970 and Government Memo. No. 108886/CT III (1) 70-1, Revenue, dated the 3rd September 1970 in regard

to exemption from liability to entertainments tax, the benefit Cinematograph film shows at National Talkies, Arni to raise funds for the purchase of typewriter and roneo machine for the Subramania Sastriar High School, Arni. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

98. Notification issued with G.O. Ms. No. 1981 Public (Services-A), dated the 28th August 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations 1954, for inclusion within the Commssion's purview, certain teaching and non-teaching posts in Government Technical Educational Institutions. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

99. Notification issued with G.O. Ms. No. 1591, Public (Services-A), dated the 9th July 1970 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion within the Commission's purview, the post of Librarian in Agriculture Department. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

100. Notification issued with G.O. Ms. No. 60, Home, dated the 8th January 1969 in regard to extension of time for the payment of motor vehicles tax, in respect of stage carriages and carriers for the quarter ended 31st March 1969. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

101. Notification issued with G.O. No. 2664, Revenue, dated the 21st August 1970 in regard to certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Act 1939 (Tamil Nadu Act X of 1939).]

102. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1968–69 issued with G.O. Ms. 2226 Public (Services-A), dated the 29th September 1970 [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India).]

B. *Reports, Notifications and Other Papers.*

20. Report of the Committee on Public Accounts 1970–71 on the Excesses over voted grants and charged appropriations for the year 1967-68.



## இணைப்பு

(24ம் பக்கத்திலுள்ள 17-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

சென்னை மாநகரில் 1967, 1968 முதல் 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை மகளிர், பெண்கள் விபச்சாரத்தடைச் சட்டம், 1956-ன் கீழ்ப் பதிவு செய்யப்பட்டு பின் நீதிமன்றத்தில் முறைப்படி வழக்கு தொடராமல் விடப்பட்ட அல்லது வழக்கு தொடரப்பட்டு ஆனால் பின்னர் நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட வீட்டு விபச்சார வழக்குகளின் எண்ணிக்கை.

| ஆண்டும், வழக்கு எண் பிரிவும். (1) | நாள். (2) | வழக்கு முடிவு செய்யப்பட்ட முறை. (3) |
|---|---|---|
| **1967** | | |
| (1) 124/67 மகளிர் பெண்கள் விபச்சாரத் தடைச் சட்டத்தின் 7 (1) பிரிவின் கீழ். | 1967 ஜூலை 26 | .. குற்றம் சாட்டப்பட்டவர் வெகு காலமாகத் தலைமறைவாக உள்ளபடியால் 22445/67 எண் உள்ள குற்ற வழக்கு எழும்பூர், Vவது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திலிருந்து 26-5–1969 அன்று திரும்பப் பெறப்பட்டது. |
| (2) குற்ற எண் 225/67 மகளிர் பெண்கள் விபச்சாரத்தடைச சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ். | 1967 அக்டோபர் 14. | .. குற்றம் சாட்டப்பட்டவர் வெகு காலமாகத் தலைமறைவாக உள்ளபடியால் 16267/68 எண் உள்ள குற்ற வழக்கு எழும்பூர் V-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்திலிருந்து 26–5–1969 அன்று திரும்பப் பெறப்பட்டது. |
| (3) குற்ற எண் 286/67 மகளிர் பெண்கள் விபச்சாரத் தடைச் சட்டத்தின் 3 (1), 7 (1) என்ற பிரிவுகளின் கீழ். | 1967 டிசம்பர் 15. | .. குற்றம் சாட்டப்பட்டவர் வெகு காலமாகத் தலைமறைவாக உள்ளபடியால் 19099/69 எண் உள்ள குற்ற வழக்கு எழும்பூர் V-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்திலிருந்து 26-5–1969 அன்று திரும்பப் பெறப்பட்டது. |
| **1968** | | |
| (1) குற்ற எண் 158/68 மகளிர் பெண்கள் விபச்சாரத்தடைச் சட்டத்தின் 3 (1). 7 (1) பிரிவுகளின் கீழ். | 1968 ஜூலை 24. | .. சாட்சி குற்றஞ்சாற்றப்பட்டவருக்குச் சாதகமாகத் திரும்பி நீதி மன்றத்தில் அரசுத் தரப்புக்கு விரோதமாக மாறியபடியால் 14191/68 எண் உள்ள குற்ற வழக்கு சைதாப்பேட்டை VIவது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் இருந்து 4–12–1968 அன்று திரும்பப் பெறப்பட்டது. |

| ஆண்டும், வழக்கு எண் பிரிவும். (1) | நாள். (2) | வழக்கு முடிவு செய்யப்பட்ட முறை. (3) |
|---|---|---|
| **1969** | | |
| (1) குற்ற எண் 160 முதல் 162 வரை/69 மகளிர் பெண்கள் விபச்சாரத் தடைச் சட்டத்தின் 3 (1), 7 (1) பிரிவுகளின் கீழ். | 1969 செப்டம்பர் 6. | .. பொறியில் சிக்க வைப்பதற்கான சாட்சி நீதிமன்றத்தில் அரசுத் தரப்புக்கு விரோதமாக மாறியபடியால் 39110/ 9 எண் உள்ள குற்ற வழக்கு எழும்பூர், V-வது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் இருந்து 27-11-1969 அன்று திரும்பப் பெறப்பட்டது. |
| (2) குற்ற எண் 194 முதல் 197 வரை/69 மகளிர் பெண்கள் விபச்சாரத் தடைச் சட்டத்தின் 3 (1), 4 (1), 7 (1) பிரிவுகளின் கீழ். | 1969 அக்டோபர் 16. | .. பொறியில் சிக்க வைப்பதற்கான சாட்சியைக் குற்றம் சாட்டப்பட்டவர் தம் தரப்புக்கு இழுத்துக்கொண்டமையால் அவர் தலைமறைவாகச் சென்று விட்டார். எனவே நடவடிக்கை 7-12-1969 அன்று கைவிடப்பட்டது. |

**Statement showing the particulars of house brothel cases registered under the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 in Madras City which were not subsoquently prosecuted in a court of law or which were prosecuted in a Court of law were later on withdrawn from Courts, during 1967, 1968 and upto November 1969.**

| Year, case number and section. (1) | Date. (2) | Disposal. (3) |
|---|---|---|
| **1967** | | |
| (1) 124/67 under section 7 (1) of the Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 26th July 1967. | .. Withdrawn from the Court of V Presidency Magistrate, Egmore in C.C. No. 22445/67 on 26th May 1969 due to the accused absconding for a long period. |
| (2) Cr. No. 225/67 under section 3 (1) of Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 14th October 1967. | .. Withdrawn from the Court of V Presidency Magistrate, Egmore in C. C. No. 16267/68 on 26th May 1969 due to the accused absconding for a long period. |



| Year, case number and section. (1) | Date. (2) | Disposal. (3) |
|---|---|---|
| (3) Cr. No. 286/67 under sections 3 (1) and 7 (1) of Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 15th December 1967. | .. Withdrawn from the Court of V Presidency Magistrate, Egmore, in C. C. No. 19099/69 on 26th May 1969 due to the accused absconding for a long time. |
| **1968** | | |
| (1) Cr. No. 155/68 under sections 3 (1) and 7 (1) of Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 24th July 1968. | .. Withdrawn from the Court of VI Presidency Magistrate, Saidapet in C. C. No. 14191/68 on 4th December 1968 due to the witness being won over by the accused and turning hostile in the Court. |
| **1969** | | |
| (1) Cr. No. 160 to 162/69 under sections 3 (1) and 7 (1) of Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 6th September 1969. | .. Withdrawn from the Court of V Presidency Magistrate, Egmore in C. C. No. 39110/69 on 27th November 1969 due to the decoy witness turning hostile in the Court. |
| (2) Cr. No. 194 to 197/69 under sections 3 (1). 4(1) and 7(1) of Suppression of Immoral Traffic in Women and Girls Act. | 16th October 1969. | .. Action dropped on 7th December 1969 due to the fact that the decoy witness absconded being won over by the accused. |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1970 நவம்பர் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 21, 22 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### மகாபலிபுரம் கடற்கரைக்குத் தடுப்புச் சுவர்

* 23 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாபலிபுரம் கடற்கரைக் கோவிலை அடுத்துள்ள கடலில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில் மத்திய அரசின் பாதுகாப்பில் உள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. வினாயகம் : மகாபலிபுரம் கோயில் புராதனமான கோயில். அந்தக் கோயிலைப் பாதுகாக்கவேண்டியது மத்திய அரசின் பொறுப்பாக இருந்தாலும், நாமும் அதிலே ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அங்கு பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டியிருந்த தடுப்புச் சுவர் இப்பொழுது உடைந்திருப்பதால், அதை மத்திய அரசு புதுப்பிக்கவேண்டும் என்றாயினும் நம்முடைய மாநில அரசு சிபார்சு செய்யுமா? முன்பு தனுஷ்கோடியில் புயல் வ்ந்த போது, இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருந்தபோது, அன்றைய சர்க்கார் தனுஷ்கோடியில் ஒரு தடுப்புச் சுவர் கட்டவில்லை என்று கூக்குரலிட்டார்களே அது ஞாபகம் இருக்கிறதா? அதையொட்டியாகிலும் மகாபலிபுரத்தில் தடுப்புச் சுவர் கட்டுவதுபற்றி இப்பொழுது ஆட்சியிலுள்ள நீங்களும் மத்திய சர்க்காரில் இருப்பவர்களும் ஒன்று சேர்ந்துவிட்டீர்களல்லவா? அதனால் இனியாவது முயற்சி எடுக்கக்கூடாதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேள்வியில் பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் கட்டப்பட்டிருக்கும்

[1970 நவம்பர் 27

கோயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் கீழ் இருந்து வருகிறது. ஆகவே, அது பாதுகாக்கப்பட வேண்டிய குறிப்பை இந்த அரசு அவர்களுக்கு எழுதியிருக்கிறது. அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அதுபற்றி ஆராய்ந்து அதற்கென்று வல்லுநர் குழுவொன்றை அமைத்து, அந்தக் குழுவினர் இரண்டுவித சிபார்சுகளை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடலலைகள் வந்து கோயில்களைப் பழுதுபடுத்தாத அளவுக்குத் தடுத்துநிறுத்துவதற்குப் பாதுகாப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், கடற்காற்றின் காரணமாக அங்குள்ள பழைய சிற்பங்களும், மற்றவைகளும் அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்றும், அதற்குப் பல தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் யோசனைகளை வல்லுநர் குழு இந்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகவும், இந்திய அரசு அவற்றைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஆகவேதான், அதுபற்றிய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் விடையிறுத்தேன். ஆனால், மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, மத்திய அரசு அதுபற்றி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடலலைகளைத் தடுக்க பல்வேறு நாடுகளில் அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். அதை வைத்துத்தான் அந்த யோசனை சொல்லப்பட்டது. யோசனையில் எந்தத் தவறும் இல்லை. அதில் நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. நிதி வசதியைப் பொறுத்துத்தான் அதை நிறைவேற்றுவது இருக்கிறதே தவிர, நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் பொறுப்பில் மகாபலிபுரம் கோயில் இருந்தாலும், தஞ்சை பிரகதீசுவரர் கோயிலை எப்படி எடுத்துக்கொள்வதாக அரசாங்கம் கருதி கோரிக்கை விடுத்திருக்கிறதோ, அப்படிப்பட்ட கோரிக்கையை இந்த மகாபலிபுரம் கோயிலைப்பொறுத்தும் விடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மகாபலிபுரம் கோயிலைப்பொறுத்து இந்த அரசாங்கம் எழுதவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: மகாபலிபுரம் கோயில் மத்திய அரசின் பார்வையில் இருக்கிறது என்றும், ஆகவே மத்திய அரசுக்குத் தமிழக அரசு சிபார்சு செய்திருக்கிறது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். தடுப்புச் சுவர் கட்டுவதுபற்றி மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு ஏதாவது கடிதம் வந்ததா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினருடைய யோசனையின்பேரில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவினர் ஆராய்ந்து இரண்டுவித கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். கடலலைகள் வந்து கோயிலைப் பழுதுபடுத்



1970 நவம்பர் 27]

தாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும், பல ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் சிற்பங்களும், மற்றவைகளும் கடற்காற்றின் காரணமாகப் பழுதுபடுவதால் அவற்றை சில அறிவியல் முறைகளில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அந்த வல்லுநர் குழு இரண்டு திட்டங்களை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது, இந்திய அரசு அதைப்பற்றிப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரிடமிருந்து நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உலகப்புகழ் பெற்ற சிற்பங்களைப் பாதுகாக்கின்ற வகையில் இந்தத் தடுப்புச் சுவர் மகாபலிபுரத்தில் அமைப்பதற்காகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக் கமிட்டியினர் சிபார்சு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை செலவு செய்வதாக உத்தேசம் இருக்கிறது? அந்த இரண்டு திட்டங்களுக்கும் முறையே எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்பதையும் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்புகள் நம்முடைய அரசாங்கத்திற்கு இன்னும் எட்டவில்லை. இந்திய அரசின் பரிசீலனையில் அவை இருக்கக்கூடும்.

### எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு

* 24 வினு.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் தற்போது பின்பற்றி வரும் இறுதி தேர்வின் மொத்த மதிப்பெண்கள் 600 என்பதிலிருந்து 800 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழ்நாடு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பள்ளி இறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் பொதுநிலைப்படிப்பு (Academic Course) மற்றும் பலதிறப் படிப்புகளுக்கு (Diversified Course) உரிய உயர் மொத்த மதிப்பெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| படிப்புப் பிரிவு— | உயர்மொத்த மதிப்பெண்கள். |
|---|---|
| பொதுநிலைப் படிப்பு .. .. .. | 600 |
| பல்திறப் படிப்புகள்— | |
| அலுவலக இயல் (Secretarial) .. .. | 800 |
| பொறியியல் .. .. .. .. | 700 |
| வேளாண்மை .. .. .. .. | 600 |
| மனை இயல் (Home Science) .. .. | 600 |
| ஓவியம் மற்றும் வண்ணம் பூசுதல் (Drawing and Painting) .. .. .. .. | 600 |
| இந்திய இசை .. .. .. .. | 600 |
| பஞ்சாலைத் தொழில் நுட்பம் (Textile Technology). | 600 |

[1970 நவம்பர் 27

தற்போதுள்ள உயர்மொத்த மதிப்பெண்களை உயர்த்தும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுத் தாள்களைத் திருத்துவதைப் பொறுத்து, முன்பு இருந்த முறையை மாற்றி இப்பொழுது சென்னையில் ஒரே இடத்தில் வைத் திருப்பதால், சரியான முறையில் விடைத்தாள்கள் திருத்தப்படவில்லை என்றும், குறைந்த மதிப்பெண் வாங்கவேண்டியவர்களுக்கு அதிக மதிப்பெண்ணும், அதிக மதிப்பெண் வாங்கவேண்டியவர்களுக்கு குறைந்த மதிப்பெண்ணும் வரக்கூடிய நிலைமை ஏற்படுவதாகப் புகார் சொல்கிறார்கள். எனவே, முன்பு போலவே திருத்தும் முறையை அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கூறுவதற்கு நேர்மாறான கருத்துக்கள்தான் அரசுக்குக் கிடைத்திருக்கின்றன. முன்பிருந்த நிலையை விட இதில் ஒழுங்குமுறை கையாளப்பட்டு வருகிறது. ஆசிரியர்கள் சென்னைக்கு வந்துபோக, தங்குவதற்குச் சிலபல வசதிகள் முன்பு இல்லாதிருந்த காரணத்தால், முதல் ஆண்டு ஓரளவு குறை சொல்லப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட படி விகிதம் ஓரளவுக்குக் குறைவாக இருந்ததால் அதுபற்றி அவர்கள் முறையீடு செய்து கொண்டார்கள். சென்ற ஆண்டைவிட அந்தப் படி விகிதம் ஓரளவு உயர்த்தப்பட்டிருக் கிறது. முன்பு அவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமல் சிறிது கஷ்டத்திற்கு ஆளாகியிருந்த நிலையை இப்பொழுது மாற்றி, அந்தக் குறைபாடுகளெல்லாம் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, விடைத் தாள்கள் முன்பைவிட விரைவாகத் திருத்தப்படுகின்றன. அது மட்டு மல்லாமல், ஏற்கனவே சொல்லப்பட்ட சிலபல குறைபாடுகளுக்கும் இடமில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் ஒரே இடத் திற்கு வந்து, காலையில் சில விடைத்தாள்கள் மாலையில் சில விடைத் தாள்கள் என்று குறிப்பிட்ட எண்ணிக்கை—சுமார் பத்துப் பதினைந்து விடைத்தாள்கள் திருத்துவதனால் முறைகேடு ஏதும் ஏற்படாமலிருக் கிறது. முன்பிருந்த முறைப்படி, ஆசிரியர்கள் தங்கள் தங்கள் இடங் களில் இருந்து விடைத்தாள்களைத் திருத்தும்போது, சில நல்ல ஆசிரியர்கள் ஒழுங்காக நேரம் எடுத்துக்கொண்டு நல்ல முறையில் கவனம் செலுத்தித் திருத்தி அனுப்புவதும், சில ஆசிரியர்கள் கடைசி யில் சில நாட்களை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாகத் திருத்தி யனுப்புவதும், அதனால் விடையின் தன்மையைப் பார்க்காமல் பக்கத் தின் அளவைப்பார்த்துக்கூட மதிப்பெண் போடும் நிலையும் இருந்த தாகச் சொல்வார்கள். இப்பொழுது ஒரேயிடத்தில் ஆசிரியர்களை வைத்திருந்து, ஒரு நாளுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை விடைத்தாள் களைத் திருத்துவது என்ற முறையின் காரணமாக ஏற்கனவே இருந்த நிலைமையைவிட சீர்பெற்று, ஒழுங்காக நடைபெற வழிவகை ஏற்பட் டிருக்கிறது என்று குறிப்புகள்தான் அதுபற்றிய அறிக்கையிலே நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் எந்தவிதமான குறை பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்த மதிப்பெண்கள் 600 என்பதை 800 ஆக உயர்த்துவது பற்றியது மூலக் கேள்வி.



1970 நவம்பர் 27]

திரு. இல. பலராமன் : எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய மதிப் பெண்களை 600-லிருந்து 800 ஆக உயர்த்துவதன் நோக்கம் என்ன? இந்த விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கு என்ன தகுதி வேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? குறைந்த சர்விஸ் உள்ளவர்களுக்கும் விடைத்தாள்கள் திருத்தும் வேலை அளிக் கப்பட்டிருப்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அது பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் பொறுத்து மொத்த மதிப்பெண்களைத் தற்போது 800 ஆக உயர்த்த உத்தேசம் இல்லை. கீழ் வகுப்புகளில் 7, 8, 9, 10 ஆகிய வகுப்புகளில் 600 மதிப்பெண்களை 800 ஆக உயர்த்த திட்டமிடப் பட்டிருக்கிறது. முதலில் பரிட்சார்த்தமாக மாடல் ஸ்கூலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். அதிகப்படியான 200 மதிப்பெண்கள், ஹாண்ட் ரைட்டிங் அண்டு எக்ஸ்பிரஷன் 50, கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ் 50, காண்டக்ட் அண்டு காரக்டர் 50, லைப்ரரி ரீடிங் 50 என்ற வகையில் பிரிக்கப்பட்டு மாடல் ஸ்கூலில் பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தப்பட இருக்கிறது. இதைப் பார்த்து அதற்குப் பிறகு மற்றப் பள்ளிக்கூடங்களில் இதை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## பழனியை சுற்றுலா மையமாக்கல்

* 25 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) பழனியை சுற்றுலா கேந்திரமாக்க மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உண்டு.

(இ) இல்லை.

திரு. சு. துரைசாமி : பழனிக்கு ஏராளமான பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து போகிற காரணத்தால், அந்த இடத்தில் மத்திய அரசாங்கத்தின் சுற்றுலாக் கேந்திரம் அமைக்கப் படுமானால் வருமானம் வரும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து அப்படி ஒரு சுற்றுலாக் கேந்திரத்தை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய அரசு மத சம்பந்தமான இடங்களில் சுற்றுலாக் கேந்திரங்களை அமைப்பதில்லை. மாநில அரசு அப்படிப்பட்ட இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டத் திட்டமிட்டிருக்கிறது. அந்த வகையில் தற் போது தஞ்சை, கும்பகோணம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நான்காவது திட்ட காலத்தில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கத் திட்டமிருக்கிறது.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: பழனிக்கும் கோடைக்கானலுக்கும் இடையே மலைப்பாதை அமைய இருக்கிறது. ஆகவே, கோடைக்கானலுக்கு வருகிறவர்கள் பழனிக்கு வருகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பழனியைச் சுற்றுலாக் கேந்திரமாக்க நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதற்கு அறநிலைய இலாகா இருக்கிறது. பழனிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்து அவர்களுக்கு அதிகமான மானியம் கொடுக்கப்படுகிறது. அவர்களே இந்தத் திட்டத்தைச் செய்யலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: சமீபத்தில் அகில இந்திய சுற்றுலா மாநாடு மதுரையில் நடந்தது. தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளை வெளிநாட்டினரைக் கவரும் வண்ணம் சுற்றுலாக் கேந்திரங்களாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே தமிழக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மதுரையில் கூடிய மாநாட்டிலே புதிய திட்டம் ஒன்றும் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே, மத்திய அரசை நாம் வற்புறுத்திய மகாபலிபுரம் திட்டந்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திலே இந்த மாநாடு நடந்த காரணத்தால் 60,000 ரூபாய் தரப்பட்டது. மதுரைக் கோயிலில் ஒலி ஒளி அமைக்கும் திட்டத்திற்காக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிறது. மாநில அரசு 3½ லட்சம் ரூபாயில் அதற்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தால் 22 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசு அதை நிறைவேற்றித் தர முன்வந்திருக்கிறது.

## விவசாயிகளுக்கு உரம் வாங்க மான்யம்

* 26 வினா.—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு வழங்கப்படும் இரசாயன உரம் விலை மிக அதிகமாக உள்ளபடியால், விவசாயிகள் அதிக உரம் வாங்கும் முறையில் அரசு மான்யம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கடைப்பிடிக்கும் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் உரத்திற்குத்தான் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. உரத்தின் விலை தற்போது உயர்ந்துவிட்டதால், மத்திய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்க நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1967–69, ஆண்டுகளில் மத்திய அரசாங்கத்தில் இருந்து வாங்கி வைத்த உரத்தை 1969-ம் ஆண்டு பத்து சதவிகிதம் உயர்த்தி விற்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் கூறியபோது நாம் அந்த விலையை





உயர்த்தாமல் விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்கு உரத்தைக் கொடுத்தோம். ஏழெட்டு மாதத்திற்கு அந்த உரத்தின் விலையைக் கூட்டாமலே கொடுத்து வந்தோம். அதற்குப் பிறகும் டை-பாஸ்பேட் போன்ற கடினமான உரங்களை மத்திய அரசு கூறினாலும் 10 சதவிகிதம் உயர்த்தாமல் மாநில அரசு விவசாயிகளுக்கு விலையைக் குறைத்துக் கொடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. க. ர. நல்லசிவன்: தற்போது விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை வேகமாகக் குறைந்து கொண்டிருக்கிறது. உற்பத்திக்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பங்கு உரத்திற்காகச் செலவிட வேண்டியிருப்பதால், உதவித் தொகையை மத்திய அரசு கொடுக்காவிட்டாலும் மாநில அரசு அதைக் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதிக உரம் போட வேண்டியது ஐ.ஆர். 8 போன்ற பயிர்களுக்குத்தான், அதைப் போட்டால் அதிக அளவில் விளைச்சல் ஏற்பட்டு விவசாயிகள் லாபம் அடைகிறார்கள். கூடுமான வரையில் உரத்தை நியாயமான விலைக்குக் கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. மானியம் கொடுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர்: உரத்தின் விலையை மத்திய அரசு 10 சதவிகிதம் உயர்த்தினாலும் மாநில அரசு உயர்த்தாமல் கொடுப்பதை வரவேற்றாலும் 50 கிலோ மூட்டை என்பது 40 கிலோ அல்லது 30 கிலோ என்ற முறையில் இருப்பதால் அதை நல்ல பைகளில் போட்டு விநியோகிக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மூட்டையில் உரம் குறையாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது விவசாயிகள் உரத்தைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய வீடுகளிலேயே உரத்தைக் கொண்டு போய்க் கொடுக்கும் அளவுக்கு விவசாய இலாகா பொறுப்பேற்று கொடுத்துக் கொண்டு வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: விவசாயிகள் அதிக உரம் போடுவதன் மூலம் அதிக உற்பத்தி ஏற்பட்டு லாபம் அடைவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அதிகம் உரம் போட்டாலும் வருஷா வருஷம் ஏற்படுகின்ற வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு மானியம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எப்போதோ வருகிற வெள்ளத்திற்காக எப்போதுமே மானியம் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. அவசியம் இல்லை. அவ்வப்போது வெள்ளம் ஏற்படுகின்றபோது உதவிகளைச் செய்து கொண்டுதான் வருகிறோம். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவிகளைச் செய்து கொண்டுதான் வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: முன்பு விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகளுக்காக 30 சதவிகித மானியம் கொடுத்து வந்தார்கள். தற்போது அந்த மானியத்தை 15 சதவிகிதமாகக் குறைத்து விட்ட தோடு உரத்தின் விலையிலும் 10 சதவிகிதம் ஏற்றிவிட்டார்கள். இதனல் விவசாயிகள் அவதிக்குள்ளாகியிருப்பதால், அதை மறுபடியும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பூச்சி கொல்லி மருந்துகளுக்கு மானியம் கொடுக்கக்கூடாது என்பது மத்திய அரசாங்கத்தின் உத்தரவு. அப்படி இருந்தும் நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் இன்னும் அதற்கு மானியம் கொடுக்கப் பட்டு வருகிறது. அப்படிக் கொடுத்து வருவதைத் திடீரென்று எடுத்துவிடக்கூடாது என்று படிப்படியாகக் குறைக்க வேண்டு மென்ற அடிப்படையில் விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க 15 சதவிகித மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. பி. எஸ். மணி: அமைச்சர் அவர்கள் எப்போதும் வெள்ளம் வந்து கொண்டிருப்பதில்லை என்று சொன்னர்கள். இப்போது தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தால், தாளடிப் பயிர் முழுவதும் கடலுக்கு அடித்துச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் என்ன உதவி செய்வதாக உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. முன் கடனைத் தள்ளி புதிய கடனை அவர்களுக்கு கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நானும் பார்வை யிட்டு வந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உரத்திற்காக 30 ரூபாயும், பூச்சி கொல்லி மருந்திற்காக 10 ரூபாயும் ஏற்கனவே வாங்கியிருந்த கடனை விவசாயிகள் கொடுக்கவில்லை என்றாலும் மேலும் 40 ரூபாய் கடனைக் கொடுக்கலாம் என்று தீர்மானித்து கொடுத்திருக்கிறார்கள். எத்தனை ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றன என்ற சரியான கணக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் எந்த அளவு கடன் கொடுக்கலாம் என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

*Extra wages to employees of T.V.S. Group Companies*

* 27 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. Minister for Labour and Backward Classes be pleased to state—

(a) whether any agreement has been reached with the T.V.S. Group and its Labour Union at the instance of Commissioner of Labour for the payment of extra wages; and

(b) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) டி.வி.எஸ். தொகுதி யினருக்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே கூடுதல் ஊதியங் கள் கொடுப்பது குறித்து தொழிலாளர் நல ஆணையர் தலையீட்டிலோ, தொழிலாளர் நல ஆணையரின் முன்னிலையிலோ உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.



பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்

* 28 வின.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள இரும்பாநாடு செல்லும் சாலையில் பெரும் பாலமொன்று அமைப்பது குறித்து அரசு பரிசீலித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரும்பாநாடு செல்லும் சாலையில் பாம்பாற்றிற்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டும் பணி நான்காம் ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

* 29 வின.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியில் உள்ள ராயவரம்–கொத்தமங்கலம் சாலையின் இடையிலுள்ள பாம் பாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

*Magistrate's Court in Tuticorin*

* 30 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal pending before the Government of Tamil Nadu to shift the Magistrate's Court in Tuticorin to the compound of the District Munsif's Court; and

(b) if so, when it will be done?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இல்லை.

வலம் வரும் வழக்கு மன்றங்கள்.

* 31 வின.—திரு. கே. சகாதேவ கண்டர் / திரு. வை. சுவாமிநாதன் } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் கோர்ட்டு வண்டி சென்னையில் இருப்பதைப் போல் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க ஏதேனும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்போது மதுரை மாவட்டத் தில் போக்குவரத்துக் குற்றங்களை மட்டும் விசாரணை செய்ய ஒரு வலம் வரும் வழக்கு மன்றம் (Mobile Court) செயல்பட்டு

வருகிறது. இம்மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களிலும் இத்தகைய வலம் வரும் வழக்கு மன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு ஏதுவும் தற்பொழுது அரசிற்கு இல்லை.

திரு. கே. சகாதேவ கண்டர்: இனிமேலாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அப்படி நடமாடும் கோர்ட்டை ஏற்படுத்த அரசாங்கம் யோசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதைக்கு இல்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

*    *    *    *    *

*Seepage canal at Puthantharuvai*

* 32 *Q*.—Thiru T. MARTIN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal pending now to construct a seepage canal scheme at Puthantharuvai in Satankulam Panchayat Union Council in Tirunelveli district; and

(*b*) if so, the particulars there of?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) & (இ) சாத்தான்குளம், புத்தன்தருவையில் கசிவு நீர்க்கால்வாய் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் முடிவு எடுக்கப்படாத நிலையில் தற்போது இல்லை.

மன்னியாற்று முகப்பு.

* 33 விஞ.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் காவிரியிலிருந்து பிரியும் மன்னியாற்று முகப்பு தூர்ந்து போய் விடுவதைத் தடுக்க தற்போது அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மன்னியாற்று முகப்பு தூர்ந்து போய்விடுவதைத் தடுக்க ஒரு மதகு கட்டவும் இம் மதகிலிருந்து மன்னியாற்று முகப்புக்கு ஒரு வரத்துக்காலைத் தோண்டவும் ரூபாய் 3,33,840 மதிப்பீட்டில் வகுக்கப்பட்ட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

*Employees of State Transport Department*

* 34 *Q*.—Thiru N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Tamil Nadu State Transport Department has implemented the recommendations of the Central Wage Board for the motor transport workers?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க [illegible] பட்டது.





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இல்லை. தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் அளிக்கப்படும் ஊதியம், மத்திய ஊதியக் குழுவினுல் பரிந்துரைக்கப்பட்டதைவிட கூடுதலாக உள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துத் துறையில் அமல்படுத்தப்பட்டிருக்கிற ஊதிய உயர்வுக்கும் மத்திய குழுவின் பரிந்துரைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தமிழ்நாடு போக்குவரத்துத் துறையில் கொடுக்கப்படுகிற ஊதியமும், வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன் பற்றியுமுள்ள விவரங்களைத் தருகிறேன்.

கிரேட் 1 ஊழியர்களுக்கு அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் கொடுக்கப்படுகிற மாதச் சம்பளம் ரூ. 222. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன். ரூ. 185. கிரேட் 2-க்கு அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் கொடுக்கப்படுவது ரூ. 179. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன். ரூ. 165. கிரேட் 3-க்கு ரூ. 168.50 கொடுக்கப்படுகிறது. வேஜ்போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 150. டிரூஃபிக் இன்ஸ்பெக்டருக்கு ரூ. 309.50 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230. ஸ்டோர் கீப்பருக்கு ரூ. 341.40 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230. மெடிக்கல் ஆபீஸருக்கு ரூ. 500 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230. சூப்பரின்டென்டென்ட், ஸ்பெஷல் க்ரேட்டுக்கு ரூ. 528.06 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230. சூப்பரின்டென்டென்ட், ஆர்டினரி கிரேட்டுக்கு ரூ. 341.40 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன் ரூ. 230. டிரூஃபிக் சூப்பரின்டென்டென்டுக்கு ரூ. 554 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன் ரூ. 230. ஃபோர்மென்-க்கு ரூ. 309.50 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230. ஸ்டாடிஸ்டிக்கல் ஆபீஸர்-க்கு ரூ. 581 கொடுக்கப்படுகிறது. வேஜ் போர்ட் ரெக்கமென்டேஷன், ரூ. 230.

திரு. வி. கே. கோதண்டராமன்: கனம் அமைச்சர் அவர்கள் மத்திய ஊதிய வாரிய சிபார்சைவிட அதிகமாகவே கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றிச் சொன்னுர்கள். அது வரவேற்க வேண்டியதுதான். தனியார் துறையில் செயல்படும் தொழிலாளர்களுக்கு இந்த மத்திய ஊதியக் குழுவின் சிபார்சின்படி கொடுக்காத காரணத்தினுல், இப்போது பல மாவட்டங்களில் அவர்கள் போராடிக் கொண்டு வருகிருர்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே நீங்கள் அதிகப்படியாகக் கொடுக்கக்கூடிய ஊதிய உயர்வை கொடுக்கவில்லை என்று சொன்னுலும்கூட இந்த மத்திய ஊதிய வாரியத்தின் பரிந்துரையின் அடிப்படையிலாவது உடனடியாகக் கொடுக்கும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி யென்றாலும், இந்த ரெக்கமென்டேஷன்படி சிலயிடங்களில் கொடுக் கப்பட்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM: Sir, may I know how much daily batta the Transport Department gives to drivers and conductors working in Madras City and is the Minister aware of the fact that similar workers entertained by owners of private buses plying between mofussil stations and Madras City are paid a higher daily batta? How does our payment compare with the payment made by owners of private buses?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோதண்டராமன் அவர்கள் கேள்விக்கும் உங்கள் கேள்விக்கும் முரண்பாடு இருக்கிறது.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: This question does not arise from my answer. However my friend Thiru Kothandaraman will be satisfied with the answer.

*Employees of Land Development Banks in Madurai District*

*35 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether he has received a Memorandum, dated 26th March 1970 from the Employees of the Madurai District Co-operative Land Development Banks regarding their service conditions; and

(b) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(ஆ) பழைய நில வள வங்கிகளில் வேலை இழப்பவர்களுக்கு புதிய நில வள வங்கிகளில் முதல் இடம் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*Assistance by Land Development Banks to employment seekers.*

*36 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Co-operative Land Development Bank. Tamil Nadu has programmed to assist self employment seekers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.





திருப்பூர் கோவில்களில் அர்ச்சனைச் சீட்டு முறை

* 37 வினா—திரு. கே. சகாதேவ கண்டர்: மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள ஸ்ரீ விச்வேச்வரஸ்வாமி கோவிலிலும் வீரராகவப் பெருமாள் கோவிலிலும் அர்ச்சனைச் சீட்டு வாங்கும் முறை நீக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) & (ஆ) இல்லை ஐயா, இது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

*Registration at residence of parties*

* 38 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Sub-Registrar/District Registrar is allowed to go on personal attendance to parties for registration during working hours or out of office hours on collection of a fee of Rs. 20; and

(b) the quantum or portion of this personal attendance fee of Rs. 20 paid to the Registering Officer?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) பத்திரப்பதிவுத்துறை உதவிப் பதிவாளரும் மாவட்டப் பதிவாளரும் பொதுவாக அலுவலக நேரத்திற்குப் பிறகு நேரிற் சென்று பதிவு செய்ய அனுமதிக்கப் படுவர். அவசரமாகப் பதிவு செய்யப்படவேண்டிய நேர்வுகளில், அலுவலக நேரத்திலும் இவ்வாறாக நேரிற் சென்று பதிவு செய்யலாம். அலுவலக நேரங்களில் வெளியில் சென்று பத்திரங்களைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் நேர்ந்தால் பத்திரப்பதிவு அதிகாரி அலுவலக உதவியாளரையோ, எழுத்தரையோ தமக்குப் பதிலாக நேரிற்சென்று பதிவு செய்யும்படி கமிஷன் கட்டளையொன்றைப் பிறப் பிக்கலாம். நேரிற் பதிவு செய்தல் ஒரு ஆணுக்காயின் ரூ. 25-ம் பெண்ணிற்காயின் ரூ. 20-ம் கட்டணம் விதிக்கப்படும்.

(ஆ) இவ்வாறு நேரிற் சென்று பத்திரங்களைப் பதிவு செய் வதற்காக பத்திரப் பதிவு அதிகாரிக்கு பயணப்படி அனுமதிக்கப்படு வதால் இக்கட்டணத்தில் ஒரு பகுதிகூட அவர்களுக்குத் தரப்படுவ தில்லை.

[1970 நவம்பர் 27

Mudumalai Wild Life Sanctuary

* 39 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Expert Committee of the Indian Wild Life Board of the Government of India visited the Mudumalai Wild Life Sanctuary during February 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) ஆம்.

இந்திய அரசு அமைத்த இந்திய வன விலங்குகள் வாரியத்தின் வல்லுநர்க் குழு, 31—1—1970 முதல் 3—2—1970 வரை முதுமலை வன விலங்குகள் உய்விடத்திற்குச் சென்று பார்வையிட்டது. மேற் சொன்ன உய்விடத்திற்கு அக்குழுவினர் சென்று பார்வையிட்டது பற்றிய அதிகார பூர்வமான அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, what are the different kinds of wild animals that are found in the Mudumalai area and are there any possibilities of rearing lions which are found in the Gir forests in Rajasthan?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் மான், புலி, காட்டு எருமை போன்ற மிருகங்கள்தான் இருக்கின்றன. பெரும்பாலும், இராஜஸ்தான் பகுதியில்தான் சிங்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுகூட சரியான தகவல் இல்லை. இந்தியாவிலேயே எங்கும் சிங்கம் இருப்பதாகத் தகவல் இல்லை. முதுமலையில் சிங்கம் இல்லை என்று தகவல் சொல்லு கிறார்கள்.

கொடைக்கானல் மலைப்பகுதியில் ரப்பர் பயிர்

* 40 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் மலைப் பகுதியில் ரப்பர் பயிர் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, how is it not possible to grow these rubber plantations in that area? What are the congenial conditions that are required for that and how they are absent in the Kodaikanal Hills?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாட்டில் பொதுவாக, கன்யாகுமரிப் பகுதியில் தான் ரப்பர் பயிரிடுவதற்கான சீதோஷ்ண நிலை இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். அத்தகைய சீதோஷ்ணநிலையில் தான் ரப்பர் வளரும் என்று கூறுகிறார்கள். கொடைக்கானல் பகுதியில் ஒரு தனியார் ரப்பர் தோட்டம் வைத்து இருக்கிறார். கன்யாகுமரியில் கிடைக்கிற தரத்திற்கும், கொடைக்



1970 நவம்பர் 27]

கானலில் கிடைக்கிற தரம் குறைவாக இருக்கிறது என்று வல்லு நர்கள் கூறுகிறார்கள். இதற்கு, கொடைக்கானலில் இருக்கும் சீதோஷ்ணநிலை போதவில்லை என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 21-ம், 22-ம், முதலமைச்சரின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

திரு. கே. விநயகம் : நான் கையை உயர்த்திக் கொண்டே இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கொடுத்த உறுப்பினர் களில் கிட்டத்தட்ட பாதி உறுப்பினர்கள் அவைக்கு வரவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, it is the *force* of habit you are rushing through questions . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அல்ல. 20 கேள்வி களுக்கும் கேள்வி கொடுத்த உறுப்பினர்கள் வந்து இருந்தால், துணைக் கேள்விகள் போட்டு இருப்பார்கள். உறுப்பினர்களில் பாதி பேர் வரவில்லை. ஆகவே, இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் வரவில்லை என்பது நமக்கு தெரியாது.

* குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) ஒற்றி வைப்புத் தீர்மானங்கள்

(அ) அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. மார்ட்டின், திரு. ஆர். கருப்பையா, திரு. கே. விநயகம், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் "அண்ணாமலை சர்வகலாசாலையில் மாணவர்கள் வேலைநிறுத்தத்தைப் பற்றி" விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, திரு. டி. மார்ட்டின், திரு. ஆர். கருப்பையா, திரு. கே. விநயகம், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, திரு. கே. விநயகம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. கே. விநயகம் : தலைவரவர்களே, நான் நேற்று ஒற்றி வைப்புத் தீர்மானத்தின்மீது பேசியதால், இன்று திரு. ஆர். கருப்பையா அவர்களுக்கு பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

திரு. ஆர். கருப்பையா : பேரவைத்தலைவரவர்களே, கடந்த 2 தினங்களாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் பகுதிகள் மூடப்பட்டு விட்டன. காலவரையறையின்றி இப்படி திடீரென்று பல்கலைக்கழகம் மூடப்படுவதால், மாணவர்களுக்கு ஏற்படும் கஷ்டம் சொல்லி முடியாது. நான் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே பயின்றவன். இதற்கு முன்னாலே பல்கலைக்கழகம் மூடப்பட்டு

இருக்கிறது. இப்படி பல்கலைக்கழகம் மூடப்படுவதால் அங்கே இருக்கும் மாணவர்களுக்கும், விடுதியில் இருக்கும் மாணவர்களுக்கும் மிகவும் தொல்லை ஏற்படுகிறது. இது போன்ற நிலைமை அடிக்கடி வருகிறது. இது போன்ற நிலைமை வரக்கூடாது. ஏழை மாணவர்கள் அனேகம் பேர் படிப்பதால், அதுவும் குறிப்பாக வெளியூரிலிருந்து வந்து படிக்கிற காரணத்தால், மிகுந்த கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

40 ஆண்டுகளாக பல்கலைக்கழகம் சிறந்த முறையில் நடந்து வந்தது. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட 4 ஆண்டுகளில் பல முறை மூடப்பட்டு விட்டது. ஏதோ ஒரு சிறிய காரணத்திற்காக, சில அசம்பாவிதங்கள் நிகழ்ந்ததற்காக இந்த பல்கலைக்கழகத்தை மூடுவது முறையான காரியம் அல்ல. இப்படி அடிக்கடி பல்கலைக்கழகம் மூடப்படுவதால், அரசாங்கமே அந்தப் பல்கலைக்கழகத்தை எடுத்து நடத்தலாம். இல்லையென்றால், சிறு சிறு அசம்பாவிதங்களுக்காக, கல்லூரியை மூடாமல், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், கஷ்டம் ஏற்படாத வகையில், அந்த அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும், அமைச்சர் அவர்களே அவற்றில் தலையிட்டு அதை போக்க வேண்டும். இப்படி மூடப்பட்டு இருக்கும் நிலை தொடர்ந்து இருக்குமானால், மாணவர்களுக்கு இருக்கும் கல்வி வசதி பாதிக்கப்படும். அவர்கள் கல்வி இழந்து, பொருள் வசதி இழந்து மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே, இந்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த செய்தி குறித்து, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், கல்லூரியும், ஹாஸ்டலும் மூடப்படுவதற்கான காரணம், கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்னதாகவே, மாணவர்களுக்குள் சிறு தகராறு ஏற்பட்டு, அதனால் 5 மாணவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அப்படி, சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்கள் திருப்பி படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டாலும் கூட, அந்த சஸ்பென்ஷன் ரத்து செய்யப்படவில்லை என்ற காரணத்திற்காக, மீண்டும் சர்வகலாசாலை திறக்கப்பட்டபிறகு, மறுபடியும் கல்லூரி மூடப்படும்படியான நிலை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினையை அங்கே உள்ள சர்வகலாசாலை அதிபரும், மற்ற அதிகாரிகளும் சேர்ந்து இரு மாணவர்கள் கோஷ்டியிடையே ஏற்பட்டு இருக்கும் பூசலை சமரசமாக திருப்பி விடுவதற்கு சஸ்பெண்ட் ஆர்டரை நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். இதனால் ஒரு பகுதி மாணவர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. அதனால் இரு கோஷ்டியிடையே மோதல் ஏற்பட்டது.

அதைத் தீர்ப்பதற்காக அந்த சர்வகலாசாலை காம்பஸ்ஸில் போலீஸ் நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். இப்படி போலீஸ் நிறுத்தி வைத்து இருப்பதன் மூலம் மாணவர்களிடையே ஒரு பீதியையும், பரப்பரப்பையும் உண்டு பண்ணியிருக்கிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும், சர்வகலாசாலையிலும், கல்லூரிகளிலும், மாணவர்கள் படிக்கும் இடங்களிலும், போலீசைக் கொண்டு வந்து நிரந்தரமாக நிறுத்தி வைப்பது சரியான செய்கையாகாது. ஆதலால், உடனடியாக போலீசை வாபஸ் வாங்கவேண்டும். அப்போது





தான் அந்தப் பிரச்சினை அதிகரிக்காமல், சர்வகலாசாலை மறுபடியும் திறப்பதற்கான சூழ்நிலை ஏற்படும். தேவை ஏற்படுமானால், அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டு, சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்களை மறுபடியும் சேர அனுமதிக்கும் வகையில், சஸ்பெண்ட் ஆர்டரை கேன்சல் செய்யச் சொல்ல வேண்டும். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி அடிக்கடி சர்வகலாசாலை மூடப்படுகிற காரணத்தால், இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்து நாம் ஒரு நல்ல முடிவை எடுப்பதற்காக, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து, இந்த பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேலை நிறுத்தத்தை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொடுத்து, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பல்கலைக்கழகம் மூடப்படவேண்டுமென்ற நோக்கத்தை யாரும் கொள்ள மாட்டார்கள். பல்கலைக்கழகம், கல்லூரிகள் திறக்கப்பட்டு, நாட்டுக்கு மிக நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றுதான் எல்லோரும் விருப்பமாகவும், நோக்கமாகவும் கொள்வார்கள்.

சிறு சிறு காரணங்களுக்காக பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் வேலை நிறுத்தம் ஏற்படுவதும் இப்போது இயல்பான ஒன்றாக எங்கு பார்த்தாலும் ஏற்பட்டு விட்டதை நாம் எல்லோரும் நன்றாக உணர்கிறோம். இது இங்கே மட்டுமல்ல, உலகம் பூராவிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு அமைதி நிலைமை இருந்து இருக்கிறது. இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதற்கு காரணம், விளைவுகள், விபரீதமான நிகழ்ச்சிகள் என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் சில பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

26—8—1970 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களில் இரு சாராரிடையே ஏற்பட்ட மோதலையொட்டி பல்கலைக்கழக அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணையை ஒட்டி 5 மாணவர்களை 30—9—1970 வரை பல்கலைக்கழகத்திலிருந்து தாற்காலிகமாக நீக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதையொட்டி மாணவர்களிடையே பதட்ட நிலைமை ஏற்பட்டதன் காரணமாக 28—8—1970 முதல் மறு ஆணை பிறப்பிக்கும் வரை பல்கலைக்கழகத்தைத் தற்காலிகமாக மூடிவிடுவது என்று துணை வேந்தர் முடிவு செய்து அதை அறிவித்தார்.

12—10—1970 அன்று பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டது. அப்பொழுது 28—8—1970 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 5 மாணவர்கள் தாற்காலிகமாக நீக்கப்பட்டிருந்ததை எதிர்த்து மாணவர்களில் ஒரு பிரிவினர் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரினர். ஐந்து மாணவர்களுடைய தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட காலம் பல்கலைக்கழகம் மூடியிருந்த காலத்தில் முடிவடைந்துவிட்டது என்றாலும் கூட, பல்கலைக் கழகம் திறந்ததற்குப் பிறகு தாற்காலிகமாக நீக்கப்பட்ட குற்றச் சாட்டு படியக்கூடாது ஆகவே ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள் மறுபடியும் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அப்படி ரத்து செய்யக்கூடாது என்று மற்றொரு சாரார் வற்புறுத்தினார்கள். இரண்டு சாரார்களுக்குமிடையே இருக்கிற தன்மைகள் ஓரளவுக்கு சுமூகமாகப் பேசி தீர்க்கப்படவேண்டும் என்று பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும், மற்றவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். நிலைமை முற்றி, மாணவர்களிடையே வெளியார் சிலரது தலையீடும் ஏற்பட்டதால், பல்கலைக் கழகத்தில் விபரீத விளைவுகள் ஏற்படக் கூடாது என்ற காரணத்தினால், 24—11—1970 அன்று மீண்டும் மூடிவைக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பயிற்சிக் கல்லூரி ஆகியவை தொடர்ந்து இயங்கிவருகின்றன. பட்டமேம்பட்ட பயிற்சி வகுப்புகளும் நுண்கலை இயல் வகுப்புகளும் நவம்பர் 30-ம்தேதி திறக்கப்பட இருக்கின்றன. புகுமுக வகுப்புகளும், பட்டப் படிப்பு வகுப்புகளும் தாற்காலிகமாக மூடிவைக்கப்பட்டிருக்கின்றன. இரு சாராரையும் அழைத்து வைத்து பேசி, சுமூகமான முடிவு ஏற்பட வேண்டும் என்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான தீவிர முயற்சியில் ஈடுபடும்படி துணைவேந்தரும், மற்றவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தான் பல்கலைக் கழகத்தை தாற்காலிகமாக மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மூடாவிட்டால் வேறு பல விபரீத விளைவுகள் ஏற்பட்டு, ஏற்கனவே ஒருவர் குத்தப்பட்ட மாதிரி நிலைமைகள் ஏற்படலாம். இரு சாராருக்கும் அடிதடி நடந்து, அதன் மூலம் கலவரம் முற்றி இன்னும் தீவிரமாகப் போகும். ஆகவே, குறைந்த அளவுக்கு கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் பல்கலைக்கழகம் தாற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. விரைவில் திறக்கப்படும். நிரந்தரமாக சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். மாணவர்களிடையே இரு சாராருக்குமிடையே ஏற்பட்டுள்ள மாச்சரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கருப்பையா அவர்கள் அடிக்கடி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்படி மூடப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று சொன்னார். 1938-லிருந்தே ஆண்டிற்கு ஒரு முறையாவது வேலை நிறுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வந்திருக்கிறது. நான் இருந்தபொழுதே இருந்தது. ஆனால், அதற்கு



நான் காரணமாக இருந்திருக்கமாட்டேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல்வேறு சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாகத்தான் மூடவேண்டிய நிலை ஏற்படுகிறதே தவிர, நிர்வாகத்தின் தன்மைகளும், மற்றவைகளும் கூட இதற்குக் காரணம் அல்ல. நிர்வாகம் எந்த அளவுக்கு தலையிடவேண்டுமோ, அந்த அளவுக்கு தலையிட்டு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. விரைவில் திறக்கப்படும். அதற்கான முயற்சிகளை அரசினரும், பல்கலைக்கழக துணை வேந்தரும் மேற்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

தற்பொழுது பல்கலைக்கழகத்தின் பாதிப் பகுதி நடந்துக்கொண்டிருக்கிறது. இன்னும் புகுமுக வகுப்பும், பட்டப் படிப்பு வகுப்பும் தான் தாற்காலிகமாக மூடிவைக்கப்பட்டிருக்கின்றன. விரைவிலே திறக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைப்பற்றி மேலும் விவாதிப்பதன் மூலம், இருசாராருக்குமிடையே மோதல் இருப்பதன் காரணமாக மேலும் விபரீத விளைவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது. அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு, பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படவேண்டும். ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாலும், விரைவில் மூடப்பட்ட வகுப்புகள் திறக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதாலும், இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I want this information which will help the entire House and State. I am not putting anything out of the way.

ஐந்து மாணவர்களை இப்பொழுது சஸ்பெண்டு செய்து வைத்திருக்கிறார்களே, அவர்களில் நான்கு மாணவர்கள் வன்னியர்கள் என்றும், இன்னொருவர் வன்னியர் அல்லாதவர் என்றும் சொல்லப்படுகிறது. கம்யூனல் கலர் வருகிறதே, அதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அங்கு இந்தப் பூசல், ஜாதிச் சண்டை வராமல் பார்த்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

We are fighting shy of the real facts. We are allowing the subject to drift away.

இப்படி ஏதாவது நடந்துகொண்டே தான் இருக்கும். அதைத் தடுப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். நான் ஏன் இதைப்பற்றிக் கேட்கிறேன் என்றால், மாணவர்களுக்கும், அரசுக்கும், மக்களுக்கும் உதவி செய்வதற்குத்தான். அதைவிட்டுவிட்டு உண்மையான பிரச்சினை திர்க்கப்படாமல், வேறு விஷயத்தை பேசிவிட்டு, நானும் தீர்மானம் கொண்டுவந்தேன், மந்திரி அவர்களும் பேசினார், நானும் பேசினேன் என்று சொல்லிவிட்டு

[Thiru K. Vinayakam] [1970 நவம்பர் 27

போவதில் பயனில்லை. பிறகு இம்மாதிரி நடந்துகொண்டே தான் இருக்கும். நம்முடைய நாட்டின் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு, அதற்காகத்தான் நான் விளக்கம் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் உள்ளத்தில் இருக்கிற காரணத்தினால், சுமுக முடிவு என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி குறிப்பிட்டு சுட்டிக் காட்டுவதன் மூலம் ஜாதி பற்றிய நிலைமைகள் ஏற்படக்கூடும். அவை களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத் தான், அதைப் பற்றி விசாரணை நடத்தி சுமுகமான சூழ்நிலை ஏற்படவேண்டும். ஜாதி அடிப்படையில் மாணவர்கள் பிரிவதோ அல்லது வேறு வகை யில் பிரிவதோ எதிர்காலத்திற்கு உகந்தது அல்ல என்று நான் தீவிரமாகக் கருதுவதன் காரணத்தினால் தான், அதைப்பற்றி நட வடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி மேலும் வளர்கின்ற அளவுக்குப் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தவும், தொடர்ந்து நிலையான உறுதியான சுமுக முடிவு ஏற்பட வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, அவையில் பிற அலுவல் களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## (ஆ) மதுரையில் கைநெசவாளர்கள் கைது செய்யப்பட்டதும் அதையொட்டிய கிளர்ச்சியும், மறியலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் மதுரை நகரில் பல்லாயிரக்கணக்கான கைநெச வாளர்கள் கடந்த 24—10—1970-ம் தேதி முதல் கூலி உயர்வு கோரி நடந்த கிளர்ச்சியில் 146 பேர்கள் கைது செய்யப்பட்டதும், தொடர்ந்து கிளர்ச்சியும், மறியலும் நடத்தவிருக்கும் நிலைமையினால் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட அலுவல்களின் கீழ் வருகிற காரணத்தினால், இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## (இ) கிராம அதிகாரிகள் நடத்த இருக்கும் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சீமைச்சாமி அவர்கள்

" the proposed strike by the village officers in the State due to failure of Government to implement their demands presented to Government on 28th March 1970.



1970 நவம்பர் 27] [பேரவைத் தலைவர்]

என்ற காரணத்தை ஒட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி இனி நடைபெறப்போகிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுக்கக்கூடாது என்பதினாலும், ஸ்ட்ரைக்குகளைப்பற்றி விவாதிப்பதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கக்கூடாது என்று விதி முறைகள் இருப் பதன் காரணத்தினாலும், இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

## (ஈ) உணவு தானியங்களின் விலைக்குறைவால் விவசாயிகளின் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கே. ஆர். நல்ல சிவன் அவர்கள் உணவு தானியத்தின் தற்போதைய விலை நிலவரம் அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைந்து விட்டதன் காரணமாக மாநிலத்திலுள்ள விவசாயிகளின் நிலை பாதிக்கப்பட்டு, உணவு தானிய உற்பத்தி குறையும் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வு தாழ்வு என்பது நாட்டிலே அவ்வப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

## (உ) காவிரி நீர் குறித்து மைசூர், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே ஏற்பட்டுள்ள விவாதமும், அதன் விளைவு களும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. இராமமூர்த்தி அவர்கள்,

" The impact on our State because of the situation created over the Cauvery Water dispute between Mysore, Kerala and our என்பதைப்பற்றி

விவாதிக்கவேண்டும் என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற காரணத்தினால், நான் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : I am no disputing your ruling இந்தப் பிரச்சினை பல்வேறு நேரங்களில் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. பல அறிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன. இருந் தாலும் கூட, இந்தப் பிரச்சினை முடிவடையாதது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் நாள் தோறும் விவாதிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டு களும், பல்வேறு அரசியல் காரணங்களும் தலைவர்கள் மீது சுமத்தப் படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்கவேண்டிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன......

[1970 நவம்பர் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுத்த பிற்பாடு, அதைப்பற்றி மறுபடியும் பேசக்கூடாது.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் வெள்ளத்தைப்பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டத்தட்ட இந்த மன்றத்தில் பாதி உறுப்பினர்கள் இதைப்பற்றித் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஒரு விரிவான அறிக்கையை தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் தீர்மானம் கொடுத்து, அதைப்பற்றி அவர்களைப் பேச விடுவதற்குப் பதிலாக (திரு. கே. விநாயகம் : சென்னையில் கூடத் தான் வெள்ளம்) அமைச்சர் அவர்கள் அறிக்கை விடுக்க இருப்பதால். அதற்காக நான் இந்தத் தீர்மானங்களை நிறுத்தி வைத்திருக்கிறேன். அறிக்கை விரைவிலே தயாரிக்கப்பட்டு, அவையிலே வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### காவிரி நீர்ப்பங்கீடு பற்றி தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களிடையே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியுற்றது குறித்து.

THIRU G. GOMATHYSANKARA DIKSHITHAR : Under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz., the failure of the talks beween the States of Tamil Nadu and Mysore on Cauvery water distribution.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் காவிரி நீர் பகிர்ந்தளிப்பது குறித்து தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களுக்கிடையே நடந்த பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்தது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU A. A. SUBBA RAJA : Under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance viz., the failure of talks between the States of Tamil Nadu and Mysore on Cauvery Water distribution.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்கும் மைசூருக்கும் இடையே 1892-லும், 1924-லும் ஏற்பட்ட ஒப்பந்தங்களை மீறி மைசூர் அரசு காவிரி ஆற்றின் கிளை நதிகளுக்குக் குறுக்கே கீழ்க்காணும் பாசனத் திட்டங்களை முனைந்து நிறைவேற்றி வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவர் :—

1. ஹேமாவதி.

2. கபினி.



1970 நவம்பர் 27] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

3. சுவர்ணவதி.

4. ஹாரங்கி.

மைசூரின் ஹேமாவதி திட்டத்தைப் பற்றிக் கலந்து பேச 1968 ஆகஸ்ட் திங்களில் டாக்டர் கே. எல். ராவ் தலைமையில் மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திரபட்டீலும், தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சரும் (இப்போதைய முதல்வர்) கலந்துகொண்ட கூட்டத்தில், 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி நமக்குச் சேர வேண்டிய வரையறைக்குட்பட்ட தண்ணீர் அளிக்கும் வாக்குறுதியைத் தாம் மதித்து நடப்பதாகத் திரு. வீரேந்திரபட்டீல் நமக்களித்த உறுதிமொழியை இங்கு நினைவு கூறலாம். இப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, ஹேமாவதி திட்டத்திற்கு நமது இசைவை அளிப்பதற்கு முன்பாக, சில விளக்கங்களையும், உறுதி மொழிகளையும் நாம் வேண்டினோம். நமது கடிதத்திற்கு எந்தவிதமான பதிலும் நமக்குக் கிடைக்கவில்லை. இதனையடுத்து அத்தகைய உறுதிமொழி எதுவும் தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்படவில்லை என்றும், மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவின் தொழில் நுட்ப அனுமதியுடனோ, அனுமதியின்றியோ தனது திட்டங்களை மைசூர் நிறைவேற்றும் என்றும் மைசூர் முதல்வர் மைசூர் சட்டமன்றத்தில் தெரிவித்தார். மைசூரின் இந்த மனப்போக்கைக் கருதி, இவ்வரசு, இந்த நிலைமையின் விபரீதத்தை இந்தியப் பிரதமருக்கு வலியுறுத்தி எழுதியது. மேலும் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் தீர்க்கப்படுகிற வரையில் மைசூர் தொடங்கியுள்ள பாசனத் திட்டங்களை உடனடியாக நிறுத்த பிரதமர் தலையிடவேண்டுமென்று இம் மாநில அரசு அவரை வேண்டிக் கொண்டது. இத்தகைய கருத்து வேறுபாடுகளை இணக்கமான முறையில் தீர்த்து வைக்க மத்தியப் பாசன–மின்சக்தி அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் முற்படுவாரென நமக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் டாக்டர் கே. எல். ராவ் செய்த முயற்சிகள் பயனற்றுப்போயின. இப்பாசனத் திட்டங்களை ஒரு சார்பாக நிறைவேற்ற மைசூர் அரசு முனைந்ததால் இவ்வரசு இந்திய அரசுடன் மீண்டும் இது பற்றிக் கடிதத் தொடர்பு கொண்டது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு மைசூர் இணங்கும் வகையில் உடனடி நடவடிக்கை எடுக்காவிடில், நடுவர் மன்றத் தீர்ப்புக்கு இதை விடவேண்டும் என்று நாம் குறிப்பிட்டோம். இதை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுவதன் முன்னர் மைசூர் அரசுடன் மீண்டும் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசிப்பார்ப்பதாக இந்திய அரசு கூறியது.

இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்திய அரசு, அதிகாரிகள் அளவில் 1970 ஜனவரி 27, 28-ம் தேதிகளிலும் அமைச்சர்கள் அளவில் 9—2—1970 தேதியிலும் புதுடில்லியில் மாநாடுகளைக் கூட்டியது. இங்கு நடைபெற்ற விவாதங்களிலே, இவ்வரசு கோரிய இரு உறுதிமொழிகளை நமக்குத்தர மைசூர் பிரதிநிதிகள் மறுத்து விட்டனர். அவையாவன :—

( ) மைசூர் 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்களுக்கு இணங்கும்.

(ii) மேற்கொண்டு விவாதங்கள் முடிகிறவரையில் பாசனப் பணிகள் தொடர்ந்து நடத்தப்பட மாட்டா.

மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இவ்விரு உறுதிமொழிகளும் முன்நிபந்தனையாக இருக்கவேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

மைசூர் அரசின் மேற்சொன்ன நிலையையொட்டி இந்த விபரீத நிலைமையைப் பற்றிப் பிரதமருக்கு 17—2—1970 அன்று நாம் தெளிவு படுத்தினோம். நடுவர் மன்றத்திற்கு உடனடியாக இத் தகராறை அனுப்புமாறு கேட்டு, இந்திய அரசுக்கு விரிவான கடிதம் ஒன்றும் அனுப்பினோம்.

டாக்டர் கே. எல். ராவ், முதல்வர்கள் மாநாடு கூட்டித் தகராறுக்குரிய விஷயங்களை பற்றித் தீர்வுக்கு வரலாம் என்று ஆலோசனை கூறினர். இவ்வகையில் முதல் கூட்டம் புதுடில்லியில் 17—4—1970 அன்றும், இரண்டாவது கூட்டம் 16—5—1970 அன்றும் நடைபெற்றன. 16—5—1970 அன்று நடைபெற்ற விவாதங்களின் முடிவில், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள், மத்திய நீர், மின்சக்தி ஆணைக்குழுத் தலைவரின் தலைமையில் இவ்விரு மாநிலங்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க கபினி, ஹேமாவதி திட்டங்களின் ஒழுங்கு முறை விதிகளைத் தயாரிக்க வேண்டுமாறு ஆலோசனை கூறப்பட்டது.

இதையொட்டி, தலைமைப் பொறியாளர்கள் புதுடில்லியில் 1970 ஜூலை 13, 14-ஆம் தேதிகளில் விவாதம் நடத்தினர். எனினும், 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் ஒழுங்கு முறை விதிகளைத் தயாரிக்க மைசூர் தலைமைப் பொறியாளர் மறுத்துவிட்டார். தங்கள் முன் வைக்கப்பட்ட குறிப்பான இந்தப் பிரச்சினையில் கூட ஒரு முகமான முடிவு காணுமலேயே தலைமைப் பொறியாளர்கள் அவரவர் மாநிலங்களுக்குத் திரும்பினர். இருந்தபோதிலும் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க மைசூர் பாசனத் திட்டங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள் தயாரிக்கப்படுமென்று டாக்டர் கே. எல். ராவ் திட்டவட்டமாக அளித்த உறுதி மொழியின் மேல், 31—8—1970 அன்று நடைபெற்ற விவாதக் கூட்டத்தில் கலந்து கொள்ள நமது தலைமைப் பொறியாளரை அனுப்பிவைப்பதாக நாம் ஒப்புக் கொண்டோம். இந்தக் கூட்டத்திலும் ஒருமைப்பட்ட முடிவுக்கு வர இயலவில்லை.

தலைமைப் பொறியாளர்கள் அளவில் நடைபெற்ற விவாதங்கள் தோல்வியுற்ற போதிலும் இறுதியான முடிவெடுப்பதற்காக டாக்டர் கே. எல். ராவ், மூன்று மாநில முதல்வர்கள் மாநாட்டைப் புதுடில்லியில் 12—10—1970 அன்று கூட்டினர். மைசூர் அரசு மேற்கொண்டும் விவாதம் நடத்தலாம் என்று கேட்டுக்கொண்டிருக்கையிலேயே அணை கட்டும் பணிகளை நடத்தி வருகிறது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டிய போதிலும் இறுதிப்பேச்சு வார்த்தைகளை 27—10—1970 அன்று சென்னையில் வைத்துக் கொள்வதென்று





அப்பொழுது முடிவு செய்யப்பட்டது. மைசூரில் நீர்த்தேக்கங்கள் கட்டும் பணிகள் இந்த ஒப்பந்தத்தின்படியே திட்டமிட்டுள்ள போதிலும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க மைசூர் முதல்வர் தயாராக இராததால் சென்னையில் 27—10—1970 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் முறிந்தன. இவ்வாறாக பேச்சு வார்த்தைகளின் மூலம் தகராறைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய எல்லா முயற்சிகளும் பயனற்றுப்போனதாலும், 1924-ம் ஆண்டு ஒப்பந்த நிபந்தனைகளின்படி நடக்க மைசூர் அரசு தயாராயில்லை என்ற நிலை உருவாகியுள்ளதாலும் இந்தத் தகராறை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்வதைத் தவிர, நமக்கு வேறு வழியில்லை. இதற்கிணங்க, மேலும் காலதாமதம் செய்யாமல் இத்தகராறினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடவேண்டிய அவசியத்தையும், அப்படி விடாவிட்டால் தஞ்சாவூர் வடிநிலப் பகுதியில் நமது பாசன வாய்ப்புகள் மிகவும் பாதிக்கப்படுமென்பதைப் பற்றியும் பிரதமருக்கு மீண்டும் வலியுறுத்தி 8—11—1970-ல் அவருக்குக் கடிதம் எழுதியுள்ளோம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்க்கக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய அதே நேரத்தில், அது எப்பொழுது தீரும் என்று சொல்ல முடியாது இருப்பதால், நமக்கு உடனடியாக, நம்முடைய தமிழ் நாட்டில் நீர்ப்பாசன வசதி மிகவும் அவசியமானதாகவும், முக்கியமானதாகவும் இருக்கும் இந்த நேரத்தில், சுமார் 40 இடங்களில் சிறிய பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டக் கூடிய அளவுக்கு வாய்ப்பு, வசதிகள் இருப்பதால், அது சம்மந்தமாக அதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன என்பதால், அப்படிப் பட்ட நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கு தீவிரமாக நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எந்த நீர்த்தேக்கம் என்று விவரம் சொன்னால், பதில் சொல்லலாம். இப்பொழுது நான் குறிப்பிட்டது காவிரி பற்றி.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் கொடுத்த அறிக்கையின்படி பார்த்தால், மத்திய சர்க்காரிடம் அணுகியும் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் கூட, இன்னமும் அவர்கள் வேலையை நிறுத்தாத நிலைமை இருக்கிறது. மத்திய சர்க்காராலும் அதை நிறுத்த முடியவில்லை, என்கிற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், நம்முடைய சர்க்கார் எடுத்துக் கொண்ட நிலையான நடவடிக்கை என்ன? நம்மால் இயலாத நிலையில் எப்படி அவர்களை நிறுத்தமுடியும் என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே கொடுத்த அறிக்கையில் சொல்லியிருக்கிறேன் நிலையான முடிவு பற்றி. இந்த பிரச்சினைக்கு பரிகாரம் காண உடனடியாக நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பி, பணிகளை நிறுத்த, ஸ்டே செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

[1970 நவம்பர் 27

## (4) அறிக்கை அளித்தல்.

### 1963–64-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் தணிக்கை செய்யப்பட்ட பொதுக் கணக்காய்வுக்குழுவின் அறிக்கை.

THIRU P. G. KARUTHIRUMAN : I rise to present the Report of the Committee on the Audit Report on the Accounts of the Tamil Nadu State Housing Board for the year 1963–64.

## 5. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆவடி நகரியம் அமைத்தல்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That in pursuance of sub-section (1) of section 4-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the House do resolve that the area covered by the Avadi Municipality in the Chingleput district which is an industrial colony be declared to be a Township".

### (ஆ) அம்பத்தூர் நகரியம் அமைத்தல்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That in pursuance of sub-section (1) of section 4-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the House do resolve that the area covered by the Ambattur Municipality in the Chingleput district which is an industrial colony be declared to be a Township".

### (இ) கத்திவாக்கம் நகரியம் அமைத்தல்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That in pursuance of sub-section (1) of section 4-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the House do resolve that the area covered by the Kathiavakkam Municipality in the Chingleput district which is an industrial colony be declared to be a Township".

### (ஈ) மாதவரம் நகரியம் அமைத்தல்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That in pursuance of sub-section (1) of section 4-A of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the House do resolve that the area covered by the Madhavaram Municipality in the Chingleput district which is an industrial colony be declared to be a Township".



1970 நவம்பர் 27] [திரு. ப. உ. சண்முகம்]

Sir, the Ambattur municipality was constituted with effect from 20th November 1970 comprising the area which was previously under the Ambattur Panchayat Township. The Ambattur Panchayat Township was formed on 1st October 1965 under the Tamil Nadu Panchayats Act, 1958 The township comprised nine revenue villages and its area extended over 12½ square miles. The administration of the township rested in the hands of a Township Committee headed by the Collector of Chingleput and consisting of both official and non-official members. The area was formerly under the jurisdiction of six different panchayats. Due to rapid industrialisation and urbanisation of the area, it was considered desirable to establish a single statutory authority to look after its administration particularly to deal with the complexity of the problems arising out of modern industrialisation.

The municipality is situated about eight miles from the Madras City and forms part of the industrial belt. The population of the municipality according to the 1961 Census was 27,000 and the estimated population is about 50,000. The normal income of the defunct panchayat township committee was about Rs. 12 lakhs. From the point of view of population and income, the area is comparable to a First grade municipality. The efficiency and the growth of industrial economy of Ambattur could be fostered well under a municipal Township. From the administrative point of view also; if a municipal township is constituted, there will be a general enhancement of revenues from all sources and this will enable the township committee to meet the anticipated additional commitments towards the provision of essential and improved civic amenities.

With the rapid growth of population in the area, a number of residential colonies have sprung up and consequently the municipal administration will have to provide better educational and public health facilities, water supply and drainage and a number of other amenities like markets, dispensaries, maternity and child welfare centres parks, play grounds, etc.

It will also be necessary to afford adequate incentive and facilities to the private sector by providing suitable sites for industry for housing and for a host of other attendant amenities. The proposed township will have to devote its attention mainly to the promotion and development of the industrial economy which is the main-stay of the area.

An important problem which the proposed township will be called upon to tackle successfully relates to the present land utilisation position and the drawing up of a comprehensive plan for future utilisation of land in the area. While setting aside areas for industries various supporting factors like water supply, housing and other facilities will have to be taken into consideration. It will also be necessary to keep in mind, open space which acts as essential lungs of the township. A municipal township will be betted suited to attend to the probision of these amenities.

It may be mentioned that the Ambattur Panchayat Township Committee appointed a Special Study Committee to conduct a detailed study of the problems of the township and the measures needed to meet the expected developments in the next few decades. The Committees with the Collector as Chairman included administrators, Engineers, Town Planners, Industrialists and an economist from the University of Madras. The Committee was inclined in favour of a municipal type of administration for the area.

The Avadi municipality comprises six revenue villages and an area of 29.48 square miles. Its population acording to the last Census was 31,117 and its present population is estimated to be about 53,000. The average annual income of the panchayat township was about Rs. 7.5 lakhs. The area was previously under the control of the Avadi Township constituted under the Tamil Nadu Panchayats Act, 1958.

Avadi municipality is a highly industrialised area. Certain strategic industries of the highest national importance under the control of the Government of India are located in the area. The arguments advanced in favour of the constitution of a municipal township for Ambattur will hold good equally in the case of Avadi also.

Kathivakkam was till recently a town panchayat in the Madhavaram Panchayat Union. It was constituted into a municipality with effect from 20th November 1970. Its jurisdiction extends over the entire Kathivakkam revenue village. The area of the municipality is about 1.84 square miles. The population of Kathivakkam according to the 1961 Census was 5,004 and it present population will be about 14,000. The average annual income of the erstwhile panchayat is about Rs. 4½ lakhs. The ordinary elections to the panchayat were not held in July 1970 as it was proposed to constitute a municipal township for the area.

Kathivakkam is a rapidly growing industrial area. Many important industries like Ashok Leyland, Ennore Foundries, E.I.D. Parry Limited (Fertiliser factory) are located there. The Ennore Thermal Station and the Cellular Concrete Plant of the State Housing Board under construction in the neighbouring Tiruvottiyur municipality has added importance to this town. Besides, Kathivakkam is also famous as a tourist resort as fishing, boating etc., in the backwaters and sea attract a large number of tourists throughout the year. Thus, Kathivakkam is eminently suited for conversion into a municipal township. In fact, the defunct panchayat had resolved to request the Government to constitute it into a township.

Madhavaram was till recently a town panchayat and was included in the Madhavaram Panchayat Union. The election to the panchayat was not held in July 1970 as it was proposed to constitute a township for the area. It was constituted into a municipality with effect from 20th November 1970. It comprises the single revenue village of Madhavaram. The area of the municipality is 6.72 square miles and its population according to the 1961 Census was 12,474. The estimated population of the municipality is about 29,000. The average annual income of the defunct panchayat was about Rs. 2 lakhs.



Madhavaram is a fast developing industrial area. Many industries are located there including the Government Milk Colony, Government Leather Goods Estate, etc. Most of the area of the municipality is vacant and is ideally suited for starting industries. There is immense potentiality for the improvement of the area into an industrial complex. Thus, Madhavaram municipality is also best qualified for conversion into a Municipal Township.

The Ambattur and Avadi Panchayat Townships and the Kathivakkam and Madhavaram Town panchayats were converted into municipalities as they could not directly be converted as Municipal Townships under the Tamil Nadu District Municipalities Act, 1920. A motion has to be passed by both the Houses of the Legislature under section 4-A (1) of the Tamil Nadu District Municipalities Act, 1920 to declare them as Municipal Townships. The proposed township committees will be constituted more or less on the model of the Kodaikanal Township Committee. The relevant provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 will be extended to the four townships. Questions relating to the composition of the Township Committee, the number of official and non-official members, the term of office of members will be taken up for consideration after approval of the resolutions by the Legislature.

I request the House to pass the resolutions.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker Sir, the Hon. Minister has come requesting this august House to pass a resolution for converting some municipalities into townships. The practice so far has been to put in more democracy in the administration. The present step is a retrograde step. Many municipalities are functioning all right and there is sufficient income. What exactly is the result of converting the Avadi and Ambattur Municipalities into townships? I can understand why you have brought forward this resolution. Whether it be a municipality or a panchayat, the voters are given the right to elect their representatives; there is the element of democracy. If a township is constituted the scope for election is taken away and the ruling party can nominate members of their party to the township committee. It is with that idea that you have brought forward this resolution. This is a retrograde step.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I am sorry to interrupt the hon. Member. I want to clarify one thing. It is not an elected body now. It has been a nominated body earlier also.

THIRU K. VINAYAKAM: It is not as if I do not know what is behind this legislation. My point is that if you allow it to function as a municipality or a panchayat board, there is scope for the people to elect their own representatives. Now you have constituting it into a nominated body. You have constituting it into a Township and, why do you want to do so? If a municipality or a panchayat is not able to give more benefits like drainage water supply with their resources, it is the duty of the Government to constitute it into a township and give some financial aid and that I can understand. Here, there is a body which is capable of being a panchayat or a municipality but you are making it a nominated body and are not throwing it open for election. You are putting the clock back and you are going a step behind and not further. That is the idea I sense in regard to this matter. You want to nominate your own men to the township committees to be constituted by the Collector or by the Government. That is the element to which we are objecting. It is not as if we do not want townships. Townships must be constituted. But we do not want municipalities or panchayats to be constituted into townships and thus perpetuate the nominated elements without throwing open them to the public franchise. That is my point.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, I fully endorse the view of the hon. Member, Thiru Vinayakam for the following reasons. Firstly, we do not have elected councillors in these places. For the benefit of the House I shall read some excerpts from the Government notifications, dated 19th November 1970. It is stated therein—

'In exercise of the powers conferred by sub-section (1) of section 7 of the Tamil Nadu District Municipalities Act, 1920, the Governor of Tamil Nadu hereby notifies that with effect on and from the date of its constitution, namely, the 20th November 1970, the Avadi Municipal Council shall consist of twenty-four Councillors.'

It is also stated in another notification that the Ambattur Municipal Council shall consist of twenty Councillors. Similarly Kathivakkam Municipal Council shall consist of sixteen Councillors and the Madhavaram Municipal Council sixteen Councillors. They are not going to be elected Councils. This was notified on the 19th November. In another notification it is stated—

'In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920, the Governor of Tamil Nadu hereby declares that the local area now



within the jurisdiction of Avadi Township (Chingleput district) shall be a municipality with the name of Avadi with effect on and from the 20th November 1970.'

To-day is 28th November 1970 and that means that the notifications had been published several days before this Resolution was brought forward in this House. Sir, we have not been consulted even before a decision on this matter was taken. Now, a sort of drama is enacted in this House. The publication of these notifications poses the question, what is the necessity for this House exist. The normal concept of democracy is flouted. That is an important aspect which I want the Hon. Minister to take into consideration.

The second point is that we are going to have fresh elections to about 10 municipalities. Now these four townships are going to be converted into municipalities and whether elections will be held or not for these Councils. I want a categorical answer from the Hon. Minister in regard to this matter.

Another point is that when the Townships have been constituted, their importance will increase. As I stated yesterday, we should have satellite towns. We should think of ways and means to make these four places satellite towns and have important offices there. By doing so, we will have a dispersal of population. At the same time, I would respectfully submit that we should have a better communication system. Now the communication system is so bad and the buses running in those places and which are under the jurisdiction of the present Minister for Public Works are so awfully bad that a person who had to go to Avadi had to travel like a pilgrimage from Tirupathi to Madras. My point is that we should have better and frequent transport service between these four places. In this connection, I want to suggest that for the Southern region we can have electrification of the routes, one route from Madras to Kathiavakkam and another from Madras to Arkonam. I respectfully submit these points for the consideration of the Hon. Minister.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இதிலே முக்கியமான ஒரு அபிப் பிராயம் என்னவென்றால் எங்கே பார்த்தாலும் முனிசிபாலிட்டிகளை டவுன்ஷிப்பாகவும், பஞ்சாயத்துக்களை முனிசிபாலிட்டிகளாகவும் இந்தச் சர்க்கார் அதிகமா மாற்றி வருகிறது என்பதுதான். பஞ்சாயத்துக்கள், மேஜர் பஞ்சாயத்துக்கள் என்று சொன்னால் இப் போது சர்க்கார் அவற்றுக்கு மானியம் கொடுத்து உதவி செய்கிற நிலை இருக்கிறது. ஆனால் இவற்றை டவுன்ஷிப் ஆக்டில் கொண்டு போய்விட்டால், முனிசிபாலிட்டி ஆக்டில் கொண்டுபோய்விட்டால் அந்தச் சட்டங்களின்படி மக்களிடத்திலேயே அதிகமாக வரியைப் போட முடியும். அதனால் சர்க்கார் அவற்றுக்குக் கொடுத்து வருகிற மானியம் மிச்சமாகும் என்கிற கருத்தில்தான் இப்படிச் செய்கிறார்

களோ என்று தோன்றுகிறது. இப்படி மாற்றுவதனுல் மக்களிடத்தில் அதிகமான வரிப்பணத்தை வசூல் செய்யக்கூடிய நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே, இருக்கக்கூடிய கருத்து என்னவென்று சொன்னுல், மக்களுடைய வாழ்க்கை நிலையை மனதில் கொண்டு இந்த பஞ்சாயத்துக்களை முனிசிபாலிட்டிகளாகவும், முனிசிபாலிட்டிகளை டவுன்ஷிப்பாகவும் மாற்றுவதை நிறுத்திவைக்கவேண்டும். மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறபோது மறைமுகமாக வரி விதிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையைத் தான் இது அளிக்கும். நல்ல மழை பெய்து பஞ்சம் இல்லாமல் இருக்கிறபோது வேண்டுமானுல், பஞ்சாயத்துகளே இல்லாமல் முனிசிபாலிட்டிகளாக ஆக்கினுல் நன்ருக இருக்கும். இப்போது இத்தகைய மாற்றம் தேவையில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. இராசரத்தினம்: தலைவர் அவர்களே, ஆவடி 1965-ம் ஆண்டிலே இருந்து பஞ்சாயத்து நகரியமாக இருந்து, இப்போது முனிசிபல் நகரியமாக ஆக்கப்படுகிறதே தவிர, அதற்கு முன்னுலே 1965-லே இருந்து இருக்கின்ற வரி உயர்த்தப்படவில்லை. ஏற்கனவே இருந்த வரிதான் இருக்கிறது. வேறு இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த நான்கு பஞ்சாயத்து டவுன்ஷிப்களை நகராட்சிகளாக மாற்றுவதற்கு கவர்னர் மூலம் "நோட்டிபிகேஷன்" போடப்பட்டது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் படித்தார்கள். நோட்டிபிகேஷன் போடுவதன் மூலம் மன்றத்தின் உரிமை பாதிக்கிறது என்றும் மன்றமே இருக்க வேண்டியதில்லை என்றும் கவர்னரே செய்து விடலாம் என்று சொல்வது பொருத்தம் அல்ல. சட்டப்படி செய்து இருக்கிறேம்.

திரு. கே. விநயகம்: கவர்னர் ஆர்டினன்ஸ்தான் போடுவார். பர்மனென்ட் ஆக இருக்க முடியாது. ஆறு மாதம் தான் இருக்கலாம். அதனுல்தான் நீங்கள் இப்போது எங்களிடம் வருகிறீர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பஞ்சாயத்து டவுன்ஷிப்களை நகர டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கான தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறேன். இந்த மன்றத்தின் உரிமைகளை பறிப்பதாகவும், மன்றமே தேவையில்லை என்ற முறையில் அரசு கருதுவதாக வாதிப்பது பொருத்தம் இல்லை. தேவை இல்லை. இது நகரங்களை டவுன்ஷிப்பாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மக்களுக்கு அதிகமான வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். ஏனென்ருல் இவைகள் எல்லாம் வளருகின்ற பகுதிகள். இது அரசாங்கத்தின் தனிப்பட்ட வசதியைப் பொறுத்தது அல்ல. அப்படி நினைத்திருந்தால பஞ்சாயத்து டவுன்ஷிப் கமிட்டிகளை நாங்களே நியமித்துக் கொண்டே இருக்கலாம். அதைப் பற்றிக் கவலை இல்லை. இது முதல் படி. நகராட்சிகளை அமைக்கலாம். அதன் பிறகு தேர்தல்களை நடத்தலாம். அதற்கு இது முதல் படியாக செய்கிறேம். தலைவர்



சுப்பராஜா அவர்கள் சொன்னுர்கள். இப்போது ஊராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுத்துக் கொண்டு வருகிறது. அதை நகராட்சிகளாக மாற்றிவிட்டால், அந்த மானியங்களை நிறுத்தி விடுவதற்காகத்தான் இதைச் செய்கிறேம் என்று சொன்னுர்கள். அப்படி அல்ல. அரசாங்கம் செலவைக் குறைப்பதற்காக இப்படிச் செய்யவில்லை. மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் இவ்வாறு செய்கிறேம். இந்த அடிப்படையில் தான் செய்யப்பட்டதே தவிர, மற்றபடி அரசாங்கம் செலவைக் குறைக்கவேண்டுமென்று செய்கிறது என்று சொல்வது முறையல்ல. ஆகவே இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4-ஏ பிரிவின் (1) உட்பிரிவை யொட்டி செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆவடி நகராட்சியின் ஆளுகைக்குட்பட்டதும் தொழிற்பேட்டையுமான பகுதி ஓர் நகரியமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4-ஏ பிரிவின் (1) உட்பிரிவை யொட்டி செங்கற்பட்டு மாவட்டத்தில் அம்பத்தூர் நகராட்சியின் ஆளுகைக்குட்பட்டதும் தொழிற்பேட்டையுமான பகுதி ஓர் நகரியமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1920-ம் ஆண்டுமாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4-ஏ பிரிவின் (1) உட்பிரிவை யொட்டி செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம் நகராட்சியின் ஆளுகைக்குட்பட்டதும் தொழிற்பேட்டையுமான பகுதி ஓர் நகரியமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் உள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4-ஏ பிரிவின் (1) உட்பிரிவை

யொட்டி செங்கற்பட்டு மாவட்டத்திலும் மாதவரம் நகராட்சியின் ஆளுகைக்குட்பட்டதும் தொழிற்பேட்டையுமான பகுதி ஓர் நகரிய மாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

6. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆட்சேபக் குறிப்பு.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் செப்டம்பர் 1-ந் தேதி 1970-ம் ஆண்டிலே இந்தத் தமிழ்நாடு கூட்டுறவுத் துறையைப் பற்றிய இந்தமசோதாவை வெளியிட்ட போது—எல்.ஏ.பில். 27/70 அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இந்த மசோதா அவசர சட்டமாக அக்டோபர் 14-ந் தேதி வெளியிடப் பட்டது. இன்றைய தினம் மறுபடியும் அரசாங்கத் திருத்தத்துடன் கொண்டு வரப்பட்டு 10—11—1970 முதல் இந்த மசோதா அங்கீ கரிக்கப்படவேண்டு மென்று கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதிலே இந்த மசோதா கொண்டு வரப்பட்ட விதமும் அதற்குப் பின்னல் காரணம் இல்லாமல் அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்ட விதமும்—அவசரச் சட்டம் எந்தவித காரணமும் இன்றி பிறப்பிக்கப் பட்டது என்ற முறையில் 16—11—1970 முதல் அங்கீகாரம் தரப்பட வேண்டுமென்ற முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசாங் கத்தைப் பொறுத்த வரையில் இது எப்போது கொண்டு வரப்பட வேண்டுமென்ற நிலே இல்லாத நிலைமையில், முறைகேடான முறை யில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிகாரத்தைத் துஷ் பிரயோகம் செய்திருக்கிறுர்கள். அதன் காரணமாக இன்றையதினம் இதை இந்த மன்றம் விவாதிக்க தலைவர் அனுமதி அளிக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இது சென்ற கூட்டத் தொடரிலே விவாதத்திற்கு வந்தது. ஆனல் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடந்து கொண்டிருந்த காரணத்தினல், இதன் மீதான விவாதத்தை அப் போது எடுத்துக் கொள்ள முடியவில்லே.

(திரு. கே. விநயகம் குறுக்கீடு) அவர்களுக்காகத்தான் நான் சொல்லுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ரொம்ப நன்றி. அந்த அமைச்சர் பதில் சொல்லத் தெரியாததால் இவர் சொல்லுகிறுர்.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Have confidence also with me.



சென்ற கூட்டத் தொடரில் விவாதத்திற்கு வந்தபோது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் விவாதத்தில் இருந்ததால், நேரம் இல்லாமல் போய்விட்டது. அது உடனடியாக அமுலுக்கு வர வேண்டுமென்ற நிலேயில், இந்தச் சட்ட மன்றம் புரோரோக் செய்யப்பட்ட காரணத் தினல், ஆர்டினன்ஸ் போடப்பட்டது. எந்தத் தேதியிலிருந்து கொடுக்க வேண்டு மென்று கேட்டார்கள். இதிலே சட்டத்திலே ஒன்றும் புறம்பு இல்லே. அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப் பட்டது என்று சொல்வதற்கும் அவசியம் இல்லே. நேரம் இல்லாத காரணத்தினல் அப்போது விவாதிப்பதற்கு முடியாமல் போய் விட்டது. அதனல் அவசரச் சட்டமாக ஆக்கப்பட்டது. இப் போது சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறது. இதிலே சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் நடக்கவில்லே. அதிகாரமும் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லே.

THIRU K. RAMAMOORTHI: I have to make my point clear. 1—9—1970-ல் அறிமுகப்படுத்தப் பட்டு 16 அக்டோபரில் அவசரச் சட்டமாகக் கொண்டு வரப்பட்டு அதற்கு 10—11—1970-ல் அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறுர்கள். அவசரச் சட்டம் கொண்டு வந்த நேரத்திலே இதற்கான அவசரம் இல்லே, என்று தெரிகிறது. மசோதா அறிமுகப் படுத்தப்பட்ட பிறகு தோற்றுவிடுவோம் என்று பயந்து அவசரச் சட்டம் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தாலா, அல்லது அமைச் சரவையைக் கலக்காமல் இருந்த காரணத்தாலா, வேறு பல காரணங்களுக்காகவா, விருப்பு வெறுப்புக் காரணத்தாலா அல்லது அரசியல் காரணத்திற்காகவா, இந்த அவசரச் சட்டத்தை, இந்த மன்றத்தின் உரிமையை மீறிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? அப்படிக் கொண்டு வந்தாலும், கொண்டுவரப்பட்ட தேதியிலிருந்து அமலுக்கு வந்தால் பரவாயில்லே. கொண்டுவரப்பட்ட பிறகு ஒரு மாதம் தள்ளி அமலுக்குக் கொண்டுவரலாம் என்று கொண்டு வந்திருக் கிறீர்கள். அவசரச் சட்டத்திற்கான காரணத்தையும் காணேம். தேதிகளேப் பொறுத்தவரையில் என்ன கணக்கு வைத்துச் செய்கிறீர் கள் என்றும் தெரியவில்லே. இந்த மசோதாவுக்கு ஜனநாயக முறையில் எந்த அளவுக்கு மரியாதை கொடுத்திருக்கிறுர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கட்சிப் பிரச்சினேயாக நான் இதைச் சொல்லுகிறேன் என்று தலைவர் அவர்கள் நினேக்கக் கூடாது. இந்தத் துறையிலே உள்ள அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே இதைச் செய்திருக்கிறுர்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இதைப் பற்றி விவாதிப்பதற்கு அனுமதி தராமல் இந்தச் சபையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திரு. இராமமூர்த்தி அவர்கள் ஜனநாயக மரபுக்குப் புறம்பாகக் கொண்டுவரப்பட்டிருக் கிறது என்று சொன்னர்கள். அப்படியல்ல. தோற்றுவிடும் என்று பயந்து திரும்பவும் கொண்டு வருவதாகச் சொன்னர்கள். ஆனல் நான் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதா

தோற்காது, தோற்கடிக்கப்பட முடியாது, என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். எப்பொழுதும் எங்களுக்குப் பயம் கிடையாது. நான் முன்னமேயே தெளிவாகச் சொன்னேன். சென்ற சட்ட மன்ற கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்ட காரணத்தால் இதைக் கொண்டு வருவதற்கு நேரமில்லை: நம்பிக்கையோடுதான் அப்பொழுது அறிமுகம் செய்தோம். ஆனால் நேரமில்லை. சட்டமன்றம் புரோரோக் செய்யப்பட்ட பிறகு—திரு. இராமமூர்த்தி அவர்கள் சட்டம் படித்தவர்கள், தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்—நிறைவேற்ற முடியாது. ஆகையால்தான் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதனால்தான் மீண்டும் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான ஜனநாயகப் புறம்பும் இல்லை. ஜனநாயகத்தின் அரிச்சுவடியைப் படித்துவிட்டுப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Let him withdraw that word.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஜனநாயக அரிச்சுவடியைப் படித்துவிட்டு நீங்கள்தான் பேசவேண்டும், நாங்களல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நம்முடைய இராமமூர்த்தி அவர்களுடைய வாதம் ஆர்டினன்ஸ் கொண்டுவருவதற்கு உரிமையிருக்கிறது. ஆனால் ஒரு மசோதா அறிமுகம் செய்யப்பட்டதற்குப் பிறகு ஆர்டினன்ஸ் கொண்டுவரலாமா என்று கேட்கிறார்கள்.

THIRU K. RAMAMOORTHI : Even if the House is prorogued, this Bill does not lapse. The Hon. Minister does not know the rules. He does not know how the Ordinance was brought about.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லேப்ஸ் ஆகாததினாலே கொண்டுவரலாமா, அப்படிச் செய்யலாமா என்கிறார்கள். ஆர்டினன்ஸ் அப்படிக் கொண்டுவருவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஒரு முறை அறிமுகம் செய்யப்பட்ட மசோதாவுக்கு ஆர்டினன்ஸ் கொண்டுவரலாமா என்று கேட்கிறார்கள். கொண்டுவரலாம். லோக் சபையிலே சொல்லியிருக்கிறார்கள்.

The President may issue an Ordinance to enforce the provisions of a Bill pending before a House or to enforce the provisions of a Bill already passed by one House but not yet passed by the other House.

என்று. ஆக ஒரு அவையிலே நிறைவேற்றப்பட்ட மசோதா இன்னொரு அவையிலே நிறைவேற்றப்படாத நிலையிலேயேகூட ஆர்டினன்ஸ் கொடுக்கலாம் என்று இருக்கின்ற காரணத்தினாலே இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எதற்கெடுத்தாலும் பழைய ஆட்சி பழைய ஆட்சி என்கிறீர்களே, அதிலே இதைப்பற்றி ஏதாவது இருக்



கிறதா? முன்னரே 20 வருஷக் காங்கிரஸ் ஆட்சியிலே நடந்திருக்கிறதா? ஆதாரம், ஆதாரம் என்கிறார்களே, இதற்கு ஆதாரம் கொடுக்கமுடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மன்றம் டெல்லிப் பாராளுமன்றத்தினை யொட்டி நடைபெறுகின்றது. அங்கே அப்படி நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அது நாம் எல்லாம் உள் அடக்கிய மன்றம். அங்கே அப்படி நிகழ்ச்சி நடந்தது என்றால் நாம் அதைக் கொள்வதில் தவறில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வேண்டுமென்றால் லோக் சபா, வேண்டாமென்றால் வேண்டாம். எந்த விதி இருக்கிறது எந்த விதி இருக்கிறது என்று கேட்கிறார்கள், இப்பொழுது நான் கேட்கிறேன் எந்த விதியிலே இப்படிச் செய்யலாம் என்று இருக்கிறது. எத்தனையோ பார்-அட்-லா படித்தவர்கள் தலைமை வகித்தார்கள், பி.ஏ.பி.எல். படித்தவர்கள் தலைமை வகித்தார்கள். தாங்கள் அருள் கூர்ந்து பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மாதிரி பில்லுக்கு கவர்னர் இதற்கு முன்பு ஆர்டினன்ஸ் கொடுத்திருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்றப் பாரம்பரியத்தை தெரிந்துசொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சி லோக் சபையிலே சேர்ந்து இருந்தபொழுது வந்ததுதான் அது. இந்த அவையில் ஏதாவது முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றால் லோக் சபை என்ன கருத்து கொண்டிருக்கிறது, இங்கிலாந்துப் பாராளுமன்றம் என்ன கருத்து கொண்டிருக்கிறது என்பதை யொட்டித்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம். இனி மேலே இதுவே இங்கே எடுத்துக்காட்டாக அமையக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் நிர்ணயச் சட்டம் 213-வது பிரிவுப்படி ஆளுநர் அவர்கள் அவசரம் என்று கருதுகிற நேரத்தில் அவசரச் சட்டம் கொண்டுவர உரிமை இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : அவருக்கு எப்படித் தெரியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அப்படியானால் அந்தச் சட்டம் எழுதியிருக்கப்படக் கூடாது. 213-வது பிரிவு இருக்கக் கூடாது. அந்தப் பிரிவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

If at any time, except when the Legislative Assembly of a State is in session or where there is a Legislative Council in a State, except when both Houses of the Legislature are in session, the Governor is satisfied that circumstances exist which render it necessary for him to take immediate action, he may promulgate such Ordinances as the circumstances appear to him to require.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1970 நவம்பர் 27

THIRU K. VINAYAKAM : How does he get satisfied except on the advice of Ministers?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. சட்டத்திலே போட்டுவிட்டு அவருக்கு எப்படித் தெரியும் என்றால் தெரிந்து இருக்க வேண்டும் என்ற காரணத்தால்தான் சட்டத்திலே போட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் இந்த மன்றத்திலே அதற்கு பிரிஸிடெண்ட் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். எல்லா வற்றிற்கும் இங்கேயே பிரிஸிடெண்ட் எதிர் பார்க்க முடியாது. ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபொழுது எப்படி ஏற்படுகிறதோ அதையொட்டித் தான் பிரிஸிடெண்ட். இப்பொழுது நடந்திருப்பது எதிர்காலத்தில் பிரிஸிடெண்ட்டாக அமையும். நமக்குப் பாராளுமன்றத்திலே பிரிஸிடெண்ட் இருக்கிறது. இந்த மன்றத்திலே இருக்க வேண்டு மென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

## 7. அரசினர் மசோதாக்கள்.

### தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 27/1970).

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதா * சட்டப்பேரவை மசோதா எண். 27/1970 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இந்த மசோதாவுக்கான காரணங்கள் ஏற்கனவே அச்சடித்து மாண்புமிக்க உறுப்பினர்களுக்கு விநியோகிக் கப்பட்டுள்ளன, மீண்டும் அவைபற்றிப் படிக்கத் தேவையில்லை அந்தக் காரணங்களோடு சேர்த்து இரண்டொரு கருத்துக்களைச் சொன்னால் விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன் என்பதால் அதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

மாநிலத்தினுடைய விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் அதாவது ஒரு வருடத்திலே திரும்பக் கொடுப்பதற்கான கடனைக் கொடுப்பதில் மாநில கூட்டுறவுச் சங்கமும், மாவட்டச் சங்கங்களும் ஈடுபடுகின்றன. இந்தக் கடன்களைக் கொடுக்கின்றன. அவ்வாறு கொடுப்பது ஏறத்தாழ ரு. 70 கோடி 80 கோடி அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அரசு கியாரண்டி கொடுத்துப் பெற வேண்டிய பணமாக இருக்கிறது. அரசு அவ்வாறு கியாரண்டி கொடுப்பதாக இருந்தாலும் அதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இந்தப் பேரவைக்கு உண்டு. எந்த வரையறைக்குள் எப்படி கியாரண்டி கொடுக்க வேண்டுமென்று சொல்லவேண்டிய பொறுப்பு அசெம்பளிக்கு உண்டு. அரசியல் சட்டம் 293-வது பிரிவிலே

within such limits, if any, as may from time to time be fixed by the Legislature of such State by law and to the giving of guarantees within such limits

---

* 1—9—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1970 நவம்பர் 27] [திரு. சி. பா. ஆதித்தனார்]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மாநில அல்லது மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்கப்படுகின்ற கடன்கள் ரிசர்வ் பாங்கியிலிருந்து வருகின்ற காரணத்தால் வருகின்ற பணத்திற்கு கியாரண்டி கொடுக்கப்படுகிறது. அசெம்பிளியின் கண்காணிப்பிற்கான அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டுமென்று வரையறை செய்ய வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப் பட்ட ஒன்றாகும். அதற்கு இந்தத் திருத்தத்தில் 73 டி 2 என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கடன்கள் என்று கொடுக்கும் பொழுது சின்னஞ்சிறிய விவசாயிகளுக்கும், சமுதாயத்திலே பல ஹீனமான இடத்திலேயிருக்கும் மக்களுக்கும் கூட்டுறவு வங்கிகளிலே யும் சரி, அல்லது கூட்டுறவுத் துறையிலேயும் சரி நிர்வாகத்திலே இடம் கொடுக்க வேண்டுமென்ற கருத்து பரவலாக இருக்கிறது என்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அவ் வாறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல. அவ்வாறு பலஹீனமாக இருப்பவர்களுக்கு, "வீக்கர் செக்ஷன்ஸ் அண்ட் ஸ்மால் ஃபார்மர்ஸ்" அவர்களுக்கு நிர்வாகத்திலே இடம் இருக்க வேண்டுமென்பது 1968-ம் ஆண்டு ஜுன் மாதத்திலே சென்னையிலே நடந்த கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டிலே பரிந்துரை செய்யப் பட்ட ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல. 1969-ம் வருடம் எல்லாக் கூட்டுறவு அமைச்சர் களும் ,இந்திய தேசத்தில் உள்ள எல்லாக் கூட்டுறவு அமைச்சர்களும் கூடி, இந்திய தேசத்தின் மத்திய அமைச்சரும் இருந்த இடத்தில் மீண்டும் வற்புறுத்தப்பட்டது. அந்தத் தீர்மானம்

"Reservation of seats on the Board of Management to small farmers and members of the weaker sections".

என்று பரிந்துரை செய்யப்பட்டது. Reservation of seats கொடுக்க வேண்டுமென்ற கருத்து அதிலே தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில்

Provided that representation in the committee shall be given to weaker sections of society.

என்று 73-பி உட்பிரிவு 3 என்ற இடத்திலே குறிப்பிடப்பட்டிருக் கிறது. (குறுக்கீடு) நான் சொன்னவுடனே புரிந்து கொள்வதைப் பற்றி மகிழ்ச்சி. முன்பு ஒருமுறை இரண்டு நாட்களுக்குப் பிறகு புரிந்து கொண்டேன் என்று தெரிவித்தார்கள்.

அடுத்தாற்போல், விவசாயிகளுக்குப் பல வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. நீண்ட காலக் கடன் கொடுப்பது ஒரு வங்கி. அதாவது 15 வருடம், 10 வருடம் என்ற முறையில் கொடுப்பதற்குத் தனி கூட்டுறவு வங்கி. குறுகிய காலக் கடன் கொடுப்பது மற்றொரு வங்கி. அதாவது 1 வருடம், 3 வருடம் என்று கொடுப்பது. இப்படி இந்த நிலையிலிருக்கிறது. கூடியவரையில் ஒரு விவசாயி வங்கிக்குப் போனால், தன் தேவைகளை அந்த வங்கியிலே பூர்த்தி செய்யுமள

விற்குத் திருத்தம் பண்ண வேண்டுமென்று பலமுறை பலர் சொல்லி இருக்கிறார்கள். ஒரு விவசாயி, தனக்குப் பயிர்க்கடன் வேண்டுமென்றால் ஒரு வங்கிக்கும், அதே சமயத்தில் தான் கிணறு வெட்ட, பம்பு செட்டுக்கு வேண்டுமென்றால் மற்றொரு வங்கிக்கும் அலைய வேண்டுமென்ற நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து பொதுவாக இருப்பதுமல்லாமல், நமது கூட்டுறவு அமைச்சர்களுடைய மாநாடு நடந்தபொழுது அதில் பேசிய தலைவர் சொன்னார், 1968-ம் வருடத்தில்—

The distinction between the long-term and the short-term credit seems to be rather unreal in the context of the present day agriculture. Even if a small farmer is given a pumpset, he may have to do some levelling of the land also which calls for long-term credit. The pump itself will be financed by medium term loans and his day to day needs are to be financed by short-term loans. The farmers make no distinction between these two sectors. Then why should the co-operative sector have two separate sections for dealing with the farmer implementing a single programme ?

என்று சொன்னார். அந்த விவசாயி சம்பந்தப்பட்ட வரையில் அவனுக்குப் பணம் தேவைப்படுகிறது, பயிர் கடனுகவோ, அல்லது நீண்ட காலக் கடனுக நிலத்தை வளர்ப்படுத்தவோ தேவைப்படுகிறது. அந்த விவசாயிக்குத் தேவைப்படுவது குறைந்த வட்டியில் கடன். அதற்காகப் பலபல துறைகளில் பலபல கூட்டுறவு வங்கிகளுக்குச் செல்வது என்பது தேவையற்றது என்று 1968-ம் வருடத்தில் இங்கே, சென்னையிலே நடந்த மாநாட்டில் தலைவரவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தலைவரை இப்பொழுது எவ்வளவு தூரம் தலைவர் என்று ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரியவில்லை. இதைச் சொல்லியவர், இராணுவ இலாக்காவிற்குப் பொறுப்பாக இருக்கப்பட்ட திரு. ஜகஜீவன்ராம் அவர்கள், அந்தக் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பாக இருந்தவர்கள். அவர்கள் சொன்னார்கள், அதை வாசித்தேன். எனவே, ஓரளவு இந்த வங்கிகளை ஒருங்கிணைப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்ற கருத்து பரவலாக கூட்டுறவாளர்களிடமிருக்கிறது. அதற்கு 73-இ என்ற பகுதியிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. கட்டாயமாக அதற்கு இணைப்பு, வேண்டுமென்று சொல்லாமல், "வாலண்டரி பேசிஸ்" என்று 73 இ-யில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த மசோதாவை ஆய்விற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கோருகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the amendment standing in my name—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970), be circulated for the purpose of eliciting opinion thereon."

The amendment was duly seconded.





THIRU N. S. V. CHITHAN : Sir, I move the amendment standing in my name—

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. No. 27 of 1970), be referred to a Select Committee consisting of the following members of the Assembly (List to be furnished later)."

The amendment was duly seconded.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. அ. சுப்பராஜா, அவர்கள் கொடுத்த திருத்தம், திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்ததைப் போல் இருப்பதால் அதை "மூவ்" செய்ய வேண்டாம். ஒன்றுதான் "மூவ்" செய்யலாம்.

THE HON. THIRU SI. PA. ADITANAR : I also move the Government amendment standing in my name.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களுடைய அமெண்ட்மெண்ட் கிளாஸ் 1-க்குத்தானே? இது ஜெனரல் அமெண்ட்மெண்ட்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று இந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகளைப் பற்றியும், மாநில வங்கிகளைப் பற்றியும் உள்ள இந்த மசோதாவின் மேல் விவாதத்தைத் துவங்குவதற்கு முன்பு இந்த மசோதாவைக் கொண்டுவந்த அமைச்சரவர்கள் —நான் மிகுந்த ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன்— அவர்கள் பல நேரங்களிலே வாக்குறுதிகள் கொடுப்பது உண்டு. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படா விட்டால் உடனே நான் பதவியை விட்டு விலகுகிறேன் என்று சூளுரை உரைப்பதும் உண்டு. ஆகவே, இந்தக் கூட்டுறவு சம்பந்தமாக மற்றொரு மசோதாவைக் கொண்டு வரும் வாய்ப்பு இந்தத் துறையிலே இருக்கும் அமைச்சருக்கு இருக்காது என்று கருதினேன். காரணம், கடந்த காலத்திலே ஒரு மசோதாவின் மீது அல்லது கூட்டுறவுத் துறையின் மீது பேசியதாகக் கவனம், இந்த மாநிலத்திலேயிருக்கும் எல்லாப் பஞ்சாயத்து மன்றங்களின் எல்லைகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு வங்கியாவது ஒரு ஆண்டிற்குள் வைக்காவிட்டால் பதவியை விட்டுவிடுவேன் என்று உறுதி தந்தார்கள். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி அவ்விதமாக...

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பதவியை விட்டு நீங்கி விடுவது நல்லது என்று நினைக்கிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லவில்லை: சொல்லியிருந்தால் எடுத்துக் காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சரவர்கள் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட முடியாது. இப்போதைக்கு முடியாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போதுக்கு ஆகாது என்பது மட்டுமல்ல; எப்போதைக்கும் ஆகாது.

[1970 நவம்பர் 27

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவு அழுத்தமாக இருக்கிறார் என்பது தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுறவுத் துறையைப் பற்றிய ஜெனரல் டிஸ்கஷன் மாதிரிப் பேசாதீர்கள். திருத்த மசோதாவைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரை இது அவசியந்தானா, நோக்கங்களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றும் வகையில் மிக அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய மசோதாதானா என்று ஆராயாமல் கொண்டு வரப்பட்ட மசோதா என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். தேவையற்ற இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் மூலமாக இந்த மன்றத்தின் பொன்னான நேரத்தை வீணாக்குவதோடு கூட இதன் மூலம் பெருமளவு பண விரயமும் ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டையும் கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் முதல் முதலாக, கூட்டுறவுத் துறையில் இருக்கும் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்று ஒரு நிபுணர் கமிட்டியை—என்ன நிபுணர் கமிட்டியோ—சந்தானம் கமிட்டி என்ற பெயரால் போட்டார்கள். பெருமளவு பணத்தைச் செலவு செய்தார்கள். பழைய கூட்டுறவுச் சட்டத்தை ரத்து செய்து விட்டு புதிய கூட்டுறவுச் சட்டத்தைக் கொண்டு வந்தே தீருவோம் என்று இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். சந்தானம் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்து ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. அந்தத் துறை அமைச்சர், சட்டத்தில் வல்லுநர், பிரமாதமான சட்டத்தைத் தயாரித்துத் தரப் போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்ப்பார்த்திருக்கும் நேரத்தில் தேவையற்ற இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. பழைய சட்டத்தை ரத்து செய்துவிட்டு புதிய கூட்டுறவுச் சட்டத்தைக் கொண்டு வருகிற பொறுப்போ அதற்குண்டான வலிவோ இல்லாத துறையாக இந்தத் துறை இருந்து கொண்டிருக்கிறது. சந்தானம் கமிட்டி அறிக்கையின்படி அவர்கள் எப்போது அந்தப் புதிய சட்டத்தைக் கொண்டு வரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. 1972-க்குள் நிச்சயமாக அவர்கள் செய்யமாட்டார்கள். இதிலே அரசியல் நோக்கம் மட்டும் அல்லாமல் பல்வேறு காரணங்கள் பின்னால் இருக்கின்றன என்ற விவரமும் எங்களுக்குத் தெரியும்.

இந்த அமைச்சரவை ஒருமித்த கருத்தோடு இயங்குகிறதா என்ற சந்தேகம் இருப்பதை சற்று நேரத்திற்கு முன்னால் இந்த அவையே கண்டது. இந்த மசோதா செப்டம்பர் 1-ம் தேதி வந்தது. அதற்கு பிறகு கவர்னர் மாமன்றத்தைக் கலைத்து விட்டார். இந்த மசோதா செத்துவிட்டது. அதற்காக அவசரச் சட்டம் கொண்டு வந்தோம். இல்லையென்றால் அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கமாட்டோம் என்று பொறுப்பான அமைச்சர் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னார். சம்பந்தப்பட்ட அமைச்சர் வாய் திறக்காமல் இருந்து விட்டார். அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம்



1970 நவம்பர் 27] [திரு. க. இராமமூர்த்தி]

சட்டமன்றத்தைக் கலைத்ததால் ஏற்பட்டது அல்ல. இது சட்டமன்ற விதிகளை அறிந்த அத்தனை பேருக்கும் தெரியும். இந்த அவசரச் சட்டம் அமைச்சரவை ஒன்றுகூடி எடுத்த முடிவின் பேரில் கொண்டு வரப்பட்டது அல்ல என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் தனக்கு இருக்கும் அதிகாரத்தை, செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அவசர சட்டத்தைக் கொண்டு வந்து தன்னுடைய முக்கியத்துவத்தை நிலை நாட்டிக்கொண்டாரோ என்ற நிலைமையும் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி இருந்தாலும் இதனுடைய விளைவுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாதிக்கும் என்றாலும் ஜனநாயக வளர்ச்சிக்கும் உகந்ததாக இருக்காது. அவசரச் சட்டம் என்றால் அவசரம் இருக்கும்போதுதான் யாராக இருந்தாலும் கொண்டு வருவார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஏதோ அவசரம் தோன்றியிருக்கிறது என்ற கற்பனையின் பெயரால் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. கற்பனா சக்தி மிகுந்த அமைச்சர் நம்முடைய அமைச்சரவையில் இருப்பது நம்முடைய பாக்கியமோ, துர்பாக்கியமோ ஆண்டவன்தான் பதில் சொல்லவேண்டும். 16—10—1970-ல் அவசரச் சட்டம் கொண்டு வந்து 10—11—1970-ல் செத்த பிள்ளைக்கு உயிரூட்டும் நிலை புதிய ஒன்று என்பதைத் தலைவர் அவர்களே உணருவார்கள். இந்த மாமன்றம் இத்தனை ஆண்டு கால ஆட்சியில் இன்றுதான் முதன் முறையாக இந்த நிலையைப் பார்க்கிறது. எவ்வளவு துர்ப்பாக்கியவாதிகளை கூட்டுறவுத் துறையில் வைத்துக் கொண்டிருக்கிறது?

திரு. சி. வி. எம். அண்ணாமலை : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். உறுப்பினர் அவர்கள் விவாதத்தில் இருக்கக்கூடிய பொருள் பற்றிப் பேசாது அமைச்சருடைய தன்மையைப் பற்றியும், அந்த அமைச்சர் அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பது பற்றியும், முதலமைச்சரைப் பற்றியும் குறிப்பிடுவது முறையானதுதானா? உறுப்பினர் திருத்திக் கொள்ள ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இதுபற்றி நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I want to create the atmosphere for eliciting public opinion.

இந்த மசோதாவை 10—11—1970-ல் இருந்து நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்ன? யாரோ பார்த்துச் சொன்னதன் பேரில் கொண்டு வரப்பட்ட மசோதா என்றும் சொன்னார்கள். அந்த மத்திய அமைச்சர் அவர்கள் இன்று காங்கிரஸ் கட்சியில் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களோ மாட்டார்களோ என்ற சிலேடையான நக்கலையும் பார்த்தோம்.

அவர்கள் சொல்லியது 1968-ம் ஆண்டில். 1970-ல் அவசரச் சட்டம் வந்திருக்கிறது. எவ்வளவு அவசரமாக கூட்டுறவுத்துறையில் காரியங்கள் நடக்கின்றன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் மூன்று மசோதாக்கள் இருக்கின்றன. பத்து நிமிடத்திற்கு மேல் நீங்கள் பேசியாகிவிட்டது. ஜெனரல் டிஸ்கஷனுக்கு பத்து நிமிடத்திற்கு மேல் கொடுப்பதில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இது ரொம்ப முக்கியமான மசோதா. இது கூட்டுறவுத் துறையையே பாதிக்கக்கூடிய மசோதா. விவசாயிகளுக்குத் தரப்படுகின்ற குறுகிய காலக் கடன்களுக்காக ரிசர்வ் பாங்குக்கு தங்களுடைய பொறுப்பைச் சொல்லுகின்ற காரியத்திற்காக இந்த மசோதா வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதிலும் இன்னொரு ஏமாற்றம் இருக்கிறது என்பதை மட்டும் காட்ட விரும்புகிறேன். அமைக்கப்படுகிற இந்த நிர்வாகக் குழுவில் யார் யார் அங்கம் வகிப்பது என்பதுபற்றிச் சொல்லும்போது ரிஸர்வேஷனில் "ஸ்மால் ஃபார்மேர்ஸ்" என்று சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு அதில் பிரதிநிதித்துவம் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

முன்னாள் அமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய திரு. மதியழகன் அவர்கள் சொல்லியிருப்பது எனக்கு நினைவிற்கு வருகிறது. இந்த நாட்டிலுள்ள சிறிய விவசாயிகள் என்பவர்கள் யார் என்பதைப் பற்றிச் சொல்லும்போது—அப்பா அதைப்பற்றி அடிக்கடிச் சொல்வார்கள். இந்த மன்றத்திலும் கூறியது உண்டு. அப்படிச் சொல்கிற நேரத்தில் கழனியில் இருக்கிற வரப்பில் சேற்றை மிதித்துக் கொண்டு உழுது கொண்டே நடமாடிக்கொண்டிருக்கிறானே அவன் தான் இந்த நாட்டிலுள்ள சிறிய விவசாயி என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பத்து ஏக்கர்காரனைக் கூட அவர் சிறிய விவசாயி என்று அன்றைய தினம் ஒப்புக்கொள்ள தயாராயில்லையென்று தெளிவாகச் சொல்லி அதன் விளைவாக நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அவர்கள் இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதை இந்த அமைச்சரவையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் அன்றைய தினம் சொல்லியுள்ள கருத்துக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசும், அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அந்தக் கட்சியும் அதற்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளது என்று கருதுகிறேன். ஸ்மால் ஃபார்மர்ஸ் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர யார் அந்த ஸ்மால் ஃபார்மேர்ஸ் என்பதைப் பற்றி ஒரு விளக்கத்தையும் காணோம். "as may be prescribed . . . ." என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லப் போகிறார்களோ? யார் அந்த ஸ்மால் ஃபார்மேர்ஸ் என்று சொல்லப் போகிறார்களா? எல்லா வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு கார் இல்லாத ஏழைகளாக உள்ள பலரைக் காண்கிறோம். இப்படிப்பட்ட ஏழைகளாக தங்களை உருவகப்படுத்திக் கொண்டு அல்லது கருதிக்கொண்டிருக்கிற



பலர் இந்த ஸ்மால் ஃபார்மேர்ஸ் என்ற குடையின்கீழ் அல்லது வரப்பில் சேற்றை மிதித்துக்கொண்டிருக்கிறவர்கள் என்ற அடிப்படையில் வரப்போகிறார்களா என்பதைப் பற்றி அரசு ஒரு உறுதியான விளக்கத்தைக் கொடுத்தாக வேண்டும். அதற்கான விளக்கத்தை பொறுப்புள்ள துறையாக இருந்தால் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கவேண்டும். ஸ்மால் ஃபார்மேர்ஸ்க்கு என்று இடம் ஒதுக்கி அந்த ஸ்மால் ஃபார்மேர்ஸ் என்பவர்கள் யார் என்று சொல்வதற்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத ஒரு துறையின் ஒரு மசோதாவும் நம் மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல. "வீக்கர் செக்ஷன் ஆஃப் தி சொஸைட்டி", இந்த நாட்டிலுள்ள பலஹீனமான மக்கள் அல்லது பதவிக்கு வர முடியாத மக்களுக்காக இடங்கள் ஒதுக்கியுள்ளார்கள். அரிசனங்கள் மலைவாசிகள், மற்றவர்களுக்கெல்லாம் இடம் ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். இன்றைய தினம் நாம் ஜாதிகளை கடந்து, மதங்களைக் கடந்து, எல்லாவற்றையும் மறந்து விட்டவர்களாக வாழ்ந்தாலும் இந்த எண்ணம் இன்று மக்கள் மத்தியில் இருந்துகொண்டுதானிருக்கிறது என்பதை நாம் மறந்து விட முடியாது. அந்த அடிப்படையில் பெரும்பான்மையான சமுதாயத்தினர், வன்னியர்கள் அல்லது ரெட்டியார்கள் அல்லது மறவர்கள் அல்லது முதலியார்கள் என்று பல்வேறு ஜாதியினரில் ஒரு பகுதியினர் பெரும்பான்மையான அளவில் அந்தந்த பகுதியில் இருப்பார்களேயானால் அங்கிருக்கிற மிகச் சிறுபான்மையினருக்கு என்ன பாதுகாப்பு, அவர்களுக்கு இதில் ரெப்ரஸென்டேஷன் உண்டா அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்போகிறீர்களா, அப்படி கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி இந்த மசோதாவில் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். பின்னால் மறைந்து கொள்வதற்காக பொதுவாக ஒன்றைப் போட்டுவிட்டு அதன் பின்னணியில் எதையும் செய்யமுடியும் என்பதற்காக இதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதத்தில் ஒவ்வொரு கட்சி சார்பிலும் இவ்வளவு பேர்கள் பேசுகிறோம் என்று பெயர் கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு ஒவ்வொருவருக்கும் இவ்வளவு நேரம் என்று நேரம் ஒதுக்க முடியும். இதில் யார் யார் பேசப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : அதுதான் பில்லில் உள்ள சலுகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கையைத் தூக்குகிறவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் பேசும் போது ஒருவரம்பிற்கு உட்பட்டு பேசினால் நன்றாகயிருக்கும்.

THIRU K. RAMAMOORTHY : Sir, my point is that there is no necessity for this Bill.
பப்ளிக் ஒப்பினியனுக்கு அனுப்பலாம் என்பதை ஒத்துக்கொண்டால், I am prepared to resume my seat.

[1970 நவம்பர் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில் தேவையா இல்லையா என்பது குறித்து தீர்ப்பளிப்பது அல்ல என் பொறுப்பு. இன்று கொடுக்கப்பட்டுள்ள வேலையை இன்று முடிக்கவேண்டும். அதுதான் தலைவரின் பொறுப்பு. மூன்று பில்கள் உள்ளன. அவை பாஸா கின்றனவா இல்லையா என்பதல்ல, அவற்றின் மீது பேசி முடிவு எடுக்கவேண்டும். இரண்டரை மணி நேரம்தான் இருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக் கொள்ளவேண்டும். நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தால் என்ன செய்வது? உறுப்பினர் அவர்கள் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : வீக்கர் செக்‌ஷன் பற்றிச் சொன்னேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இது இன்றைக்கு தேவையே இல்லை. ஸ்மால் டேர்ம் லோன்ஸ், லாங்க் டேர்ம் லோன்ஸ், மீட் டேர்ம் லோன்ஸ் என்று மூன்று வகையான கடன்களைப் பயன் படுத்திக் கொண்டு அவற்றினை ஒன்றாக்குவதற்காக கொண்டு வரப் படுகிறது இது என்று சொல்லப்பட்டது. 1967-ல் இந்த மன்றம் துவங்கியதிலிருந்து இந்த மூன்றையும் ஒன்று சேர்த்து ஒரு இடத்தில் ஒரு அமைப்பாக அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை எப்பொழுதோ செய்திருக்கமுடியும். அப்போது அதைச் செய்யவில்லை. இன்றையதினம் அதற்கு ஒரு அவசரத் தேவையில்லை. இன்றையதினம் இருக்கிற கூட்டுறவு வங்கிகளை வைத்துக்கொண்டே சமாளிக்கமுடியும். இன்றையதினம் உள்ள வங்கிகள் சாதிக்க முடியாததை புதிதாக வரப்போகிற வங்கிகள் சாதிக்கப் போகிறது என்றதொரு கற்பனை உருவாக்கிக்கொண்டு இல்லாத ஒரு அவசரத்தை ஏற்படுத்திக்கொண்டு இப்படிப்பட்ட ஒரு மசோதாவை இந்த மன்றத்தின் முன்னால் கொண்டு வந்து இம்மன்றத்தின் நேரத்தையும், மக்கள் வரிப்பணத்தையும், நாட்டு மக்களின் பொன்னான நேரத்தையும் வீணடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவை பொதுமக்களின் பார்வைக்கு அனுப்பி இது தேவைதானா இல்லையா என்பதைப் பற்றி மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை இந்த அரிய துறையும் அதைச் சார்ந்த அமைச்சர் அவர்களும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, கொண்டுவரப் பட்டிருக்கிற மசோதாவின் மீது இன்று பொதுவான ஒரு கருத்தைச் சொல்லவேண்டுமென்று சொன்னால் இப்படி இந்த மசோதாவை இவ்வளவு அவசரமாகக் கொண்டுவருவதால் ஏற்படக்கூடிய நன்மை களைப் பற்றி கொஞ்சம் பார்க்கவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட தொரு அவசரமான நிலை இல்லை என்பதோடு இதை பொதுமக்களின் கருத்துக்கு அனுப்புவது நல்லது என்பது என்னுடைய கருத்து. நமது அமைச்சர் அவர்கள் இரண்டு தடவையும், சென்ற தடவையும் அமெண்ட்மெண்ட்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்போதும் கூட பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்களை



1970 நவம்பர் 27] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

ரொம்பவும் பாராட்டவேண்டும். நாள் ஆக ஆக அதில் கொஞ்சம் அக்கறை செலுத்தி நல்லவிதத்தில் இன்னும் பல திருத்தங் களைக்கொண்டுவந்து மேலும் நல்ல முறையில் இதை இயங்கச் செய்யவேண்டுமென்ற கருத்தை அவர்கள் வைத்துள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நான் சொல்வது இந்த மசோதா நல்லதொரு மசோதாவாக இருந்தாலும்கூட இந்த நேரத்தில் இன்னும் சிறிது அவகாசம் அளித்து நல்ல பல கருத்துக்களை நல்ல அனுபவம் உள்ள கோவாப்ப ரேட்டர்ஸ் இடமிருந்தும் அதிகாரிகளிடம் இருந்தும் பெறலாம். நடைமுறையில் சில சிக்கல்கள் இருக்கலாம். ஆகவே, அதை யெல்லாம் உத்தேசித்து பப்ளிக் ஒப்பினியனைக் கேட்டு பிறகு இந்த மசோதாவைக் கொண்டு வருவது நன்றாகயிருக்கும் என்பது என் அபிப்பிராயமாகும். நான் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன், ராமமூர்த்திக்கு கொடுத்த நேரமாவது எனக்குக் கொடுக்கவேண்டும். நான் சுயேச்சை. * *

திரு. என். எஸ். வி. சித்தன் : நாங்கள் ஆண்டவர்கள் கட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் * * என்றா சொன்னீர்கள். அந்தச் சொற்றொடரை சபை நிகழ்ச்சிகளி லிருந்து நீக்குகிறேன். பத்திரிகைகளிலும் அது வர வேண்டாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : * * "வீக்கர் செக்‌ஷன்" என்று போட்டிருக்கிறது.

"weaker sections of Society" includes small farmers, Scheduled Castes, Scheduled Tribes and Women.

என்றிருக்கிறது. இதில் "வீக்கர் செக்‌ஷன்" என்றால் வீக்கர் என்பது பொருளாதார நிலையிலா அல்லது அவர்களின் உடல் சக்தியிலா? என்பது எனக்குப் புரியவில்லை. "விமன்" என்று போட்டிருக்கிறோம். அவர்களை வீக்கர் செக்ஸ் என்று பொதுவாகச் சொல்கிறோம். பெண்கள் என்றால் மல் யுத்தம் செய்யக் கூடிய பெண்களும் இருக் கிறார்கள். ஹமீதா பானு மாதிரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் வேண்டாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : வீக்கர் செக்‌ஷன் என்கிறார்கள். ஃபார்மேர்ஸ் என்கிறார்கள். அதில் பணக்காரர்களும் இருக்கலாம். ஏழைகளும் இருக்கலாம். ஒட்டுமொத்தமாக விமனை "வீக்கர் செக்ஸ்" என்று சொல்கிறோம். "வீக்கர்" என்பது பொருளாதார நிலையிலா அல்லது உடல் நிலையிலா என்பது பற்றி "வேகாக" இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன். *

** மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஆணைக்கிணங்க நீக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "வீக்கர் செக்ஷன்" என்றால் பொருளாதாரத் துறையில் வீக்கர் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். "ஃபிசிக்கலி வீக்கர்" என்று பொருள் கொள்ளவேண்டிய தில்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா : இந்த மசோதாவின் நோக்கம் என்ன? ரொம்பவும் ஏழைகளாக, கஷ்டப்படுகிற சிறு விவசாயி களுக்கு நல்ல விதத்தில் அவர்களுக்கு கடன்களை அளிக்க வேண்டும். ஆனால், அவர்களுடைய பொருளாதாரத்தை கருத்தில் கொண்டுதான் கடன் வழங்க வேண்டுமென்று இருக்கிறது. அவர்களுடைய நிலையைக் குறிக்காமல், ஏதோ பொதுவாக ஒரு செக்ஷனைப் போட்டு வைக்கிறோம் என்று போடப்பட்டிருக்கிறது. அதிலே தெளிவு இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, இந்த நாமினேஷன் போடுவதில்

'Provided further that the number of nominated members shall not exceed one-fifth of the total number of members of the Board or the Committee . . . .

என்று இருக்கிறது.

இப்படிப்பார்க்கிறபோது, எத்தனை சொசைடிகள் இருக்கின்றனவோ அவற்றில் முக்கால்வாசி டைரக்டர்கள் அதிலே வந்து உட்கார்ந்து இருக்கிறார்கள். இங்கே இருக்கும் நிலையில், நிர்வாகத்தில் குறைந்த டைரக்டர்கள் போட்டு, நல்ல நிர்வாகம் நடக்க வேண்டும். ஒரு சொசைடியில் 1000 பேர் இருக்கிற மாதிரி, ஸ்டேட் பாங்க் நாமி னேஷன் போட்டால் வருகிற லாபத்தில் டி.ஏ. டீ.ஏ. என்று வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள். 1/5 வரைக்கும் நாமினேஷன் போடலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கு மேலே போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதிலே 1/5 நாமி னேஷன் போடுவது எந்த விதத்தில்? அவர்களுக்கு ஓட்டு போட உரிமை உண்டா? இன்னும் பல விதத்தில் ரூல்ஸ் போடுகிற காலத்தில், அந்த ரூல்ஸ் போடுவோம் என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள்.

'(ii) the number of members to be elected to the Board and the Committee and the number to be elected from each registered society or class of registered societies;

(iii) the number of members to be nominated to the Board

இந்த மாதிரி கொடுத்து இருக்கிற காலத்தில், அங்கே சர்க்காரில் கடன் கொடுக்கிறோம். சர்க்காரிலிருந்து நாமினேஷன் செய்யும். இப்படி நாமினேஷன் செய்து கொண்டு வருகிற நேரத்தில், அங்கே எலெக்டட் மெம்பர்களை விட கூடி விடக்கூடாது. அதற்காகத்தான் பேசிஸ் 5-ல் ஒரு பங்கு என்று போட்டு இருக்கிறார்கள். 5-ல் ஒரு பங்கு மெம்பர்ஸ்க்கு ஓட்டிங் பவர்ஸ் இருக்கிறதா, இல்லையா?



ஓட்டிங் இல்லை என்று கொடுத்து இருக்கிறது: இதை எல்லாம் பார்க்கிறபோது ரொம்பத் தெளிவாக இல்லாத ஒரு நிலையை அங்கே நாம் காண்கிறோம். அதோடு கூட, 'Guarantee by Government'

'subject to such maximum amount as may be fixed by them and subject to such conditions as they may think fit to impose, guarantee the repayment of the principal of . . . .'

என்றும் இருக்கிறது. நாம் அதிலே சில வரைமுறை வைக்க வேண்டும். இன்னின்ன சொசைடிக்கு இன்னின்ன ஷேர் கேபிடல் என்று சொல்ல வேண்டும். இப்படி வரையறை இல்லாமல், அப்போதைக்கப்போது என்னென்ன தோன்றுகிறதோ, என்னென்ன நினைக்கிறோமோ அப்படிக்கொடுக்கக்கூடாது. ரூல்ஸ், பிரின்சிபில் இல்லாமல் செய்வது என்பது வேக் ஆகப்படுகிறது.

பலதரப்பட்ட தெளிவான நிலை இல்லாதிருப்பதால், இவ்வளவு அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டுமா என்று சொல்லிக்கொண்டு, இது நல்ல மசோதாதான், இதில் பப்ளிக்கின் பொதுக் கருத்தை கருத்தில் கொண்டு, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, on behalf of the Swatantra Party, I wish to state that we totally oppose this Bill for the following reasons. Reason No. 1 is that most of the Land Development Banks that are being started by the present Hon. Minister have members and Directors who belong to the Ruling Party. This is never heard of in the history of Co-operatives for the past decade and a half. If the Hon. Minister wants proof, I can give it. This particular method should be completely done away with and the Hon. Minister should at least hereafter take note of the strong feelings of the House and see that he does **not** indulge in such practices in future.

Secondly, I wish to state that there is every serious possibility of the funds that we are placing in the hands of the Government going to the Election Fund shortly. Now I shall read some excerpts from the Statement of Objects and Reasons appended to the Bill. It is stated therein—

'This would mean that in the State of Tamil Nadu, the State and the Central Co-operative Banks will have to provide short and medium term credit to the extent of *Rs. 70 to 80 crores* in the last year of the Fourth Plan.'

Just imagine the fantastic amount that we are placing in the hands of the Government . . . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR : These moneys are not placed in the hands of the Government. If the hon. Member reads further one line below, he will find that the Government only guarantees and the money comes from the Reserve Bank to the State Co-operative Bank direct. We only guarantee it.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ரிசர்வ் பாங்கியிலிருந்து வரும் வழியிலேயே போய்க்கொண்டு இருக்கிறது. இங்கே வந்து சேர்வது இல்லை.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : What the Leader of the Opposition tries to suggest is that in-between the Reserve Bank and the State Co-operative Bank the Government come in and take a part of the money.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அங்கே இருந்து வருகிற நேரத்தில், பல்வேறு இடங்களுக்கு போவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, may I clarify the point? On a previous occasion, one of the leading Members of the Opposition suggested that the money went into the hands of the Government. Then, the hon. Member, Thiru Kanagasabai who has got a lot of experience in regard to the Co-operative Bank intervened and said that not a single pie of the money went into the hands of the Government. Of course, the amount may be Rs. 80 or 90 crores for the State Co-operative Bank. For the State Land Development Bank, I am bringing forward a Resolution to increase the guarantee amount to Rs. 125 crores. So, the point is that not a single pie passes through the Government. What we do is, we only guarantee the amount.

DR. H. V. HANDE : I shall explain very clearly that it is going into the hands of the persons belonging to the Ruling Party.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Let him not go away from the point which he made earlier. He first used the words 'the Government'. Now he says 'certain persons'. The Government are not 'certain persons'.

THIRU K. VINAYAKAM : Now the Hon. Minister alone is present in the House and he is fighting a lone battle.

DR. H. V. HANDE : I will explain it. I would only appeal to the Hon. Minister to hear me completely. After that, if he has got anything to say, he can say so. This money from the Reserve Bank will go through the Registrar of Co-operative Societies and . . . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR : It has been pointed out already that the money does not go either to the Government or to the Registrar of Co-operative Societies. It goes direct to the Bank.

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் ..................(திரு. மு. சின்னசாமி : குறுக்கீடு)

THIRU K. VINAYAKAM : He has not even completed a sentence.



THIRU P. G. KARUTHIRUMAN : The Hon. Member is on his legs. How can the Hon. Minister interfere?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் குறுக்கீடு செய்வதற்கு உரிமை உண்டு. இல்லை என்பதற்கு எங்கே விதி இருக்கிறது ? "He has got a right to interfere". (உறுப்பினர்கள் குறுக்கீடு) நீங்கள் பேசிக்கொண்டே போனால் நான் என்ன சொல்வது? மன்றத்தில் ஒரு உறுப்பினர் விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது ஏதாவது தவறுதலான செய்தியை, தவறுதலாக நினைத்துக் கொண்டு பேசினால், அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் தருவதற்கு உரிமை இருக்கிறது. அமைச்சர் கொடுத்த விளக்கத்திற்குப் பின்னால், பேச வேண்டிய உறுப்பினர்கள் பேசலாம்.

THIRU K. VINAYAKAM : He must give a reasonable opportunity to the Member to explain his point. Then only he can interfere.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள் கூட அமைச்சர் அவர்கள் தனிமையாக இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். சம்பந்தப்பட்ட அமைச்சர் மன்றத்தில் இருந்தால் போதும். எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

DR. H. V. HANDE : May I submit for the consideration of the Chair one or two points for the smooth conduct of business of the House. I am now raising a Point of Order. Point No. 1 is this. The hon. Member Thiru Chinnaswami is participating in the debate, not from his seat but from another seat. I do not know whether according to our rules he is competent to speak from a different seat. Are you going to allow this? I want a ruling from the Chair. Will you kindly ask the Member to go to his seat and then participate in the discussion on the Bill? I request the Hon. Leader of the House to look into this. How can the proceedings of the House be conducted, if I am interrupted like this?

திரு. வி. எஸ். கோவிந்தராஜன் : திரு. விநாயகம் அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசினார்களே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் தலைவர் மூலமாகப் பேசவேண்டும். நேரடியாக உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசுவது முறையல்ல.

DR. H. V. HANDE : When that Member is talking from a different seat, you do not pull him up. But when I am speaking from my own seat, you are pulling me.

MR. DEPUTY SPEAKER : I am not allowing the Member Thiru Chinnaswami to talk from a different seat.

[1970 நவம்பர் 27

DR. H. V. HANDE : The distinguished Member Thiru Chinnaswami is interrupting me while I am talking and that too not from his seat but from a different seat. Is it right and is it according to rules? I want a ruling from the Chair.

The distinguished Member is interrupting me often. How can I talk? The Chair is helplessly watching it. I can understand your difficulty, Sir.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈரோடு சின்னசாமி அவர்கள் இன்னொரு இடத்தில் மாறி உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. அம்மாதிரி பேசுபவர்களை நான் கண்டிக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எங்களைச் சொல்வதுபோல் அவரையும் கண்டித்தால் நன்றாக இருக்கும்.

I must be allowed to talk. I must be given freedom to talk.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான்தான் வாக்குறுதி கொடுத்துவிட்டேனே, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது திரு. ஈரோடு சின்னசாமி அவர்களை அவர் இடத்திற்குப் போங்கள் என்று சொல்கிறார்கள். நமது சட்டமன்ற விதிமுறைகளில் ஒரு உறுப்பினர் பேசும்பொழுது உறுப்பினர்கள் அவர்களுடைய இருக்கையில் இருந்து பேசவேண்டும். வேறு இடத்திலிருந்து பேசக்கூடாது என்று இருக்கிறது. அப்படியில்லாமல் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பார்த்து, "நீங்கள் போய் உங்கள் இடத்தில் உட்காருங்கள்" என்று வேண்டுகோள் விடுப்பதற்கு நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளில் இடம் இருக்கிறதா என்று தயவு செய்து தலைவர் அவர்கள் தீர்ப்புக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதற்கு முன்னால் இருந்த சபாநாயகர் அவர்கள் இப்படி வந்து உட்காரக்கூடாது என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்களே?

DR. H. V. HANDE : I want the debate to be conducted properly according to rules. There is no special priority given to any Minister with regard to interruptions. I would like the Chair to find out from our rules and regulations any rule that gives extra power to any Minister to obstruct any Member and talk. When a Minister gets up, I yield the floor since I want to know what he has to say. Only when I yield the floor, he can talk. There is no rule according to which a Minister can ask a Member to sit down and then talk. All Members are equal in this House



1970 நவம்பர் 27]

as far as debating is concerned. That is my humble submission to the Chair. I respectfully submit to the Hon. Chair to examine the rules to find out whether any special powers had been given for Ministers to get up and speak, while a Member is talking. Out of courtesy, when a Minister gets up, I sit down and yield the floor because I am anxious to hear what the Minister has got to say. May I request the Hon. Minister not to interrupt me till I finish my speech?

Coming to the debate proper, I shall explain how the money is likely to go to the ruling party members. I will come to the other end. Probably the Hon. Minister is allergic if I come to the apex. I shall go from the bottom. (Thiru K. Vinayakam : From the gutter ). I shall not use that word. I use a more polite expression. I would like to go from the bottom. When a person belonging to the ruling party wants some money, what he must possess is some piece of land. It may be any land, even arable land. On that land, the Land Development Bank gives money. For whose development is the money given by the bank? Not for the development of the land. It goes to the development of the person belonging to the ruling party. I can quote instances. I can give names of persons who have got money like that. I have got proofs. If the Hon. Deputy Speaker allows me I can give the names. Afterwards it should not be regretted. Members belonging to the governing body of the bank are all members belonging to the ruling party. So, it is very easy for X Y or Z belonging to the ruling party to get the money. I say this on authority. In many of the areas wherein this bank had been started during the last 1 or 1½ years, they are all manned by ruling party members. In certain other areas, if unfortunately Members of other parties are there, money is not given at all. Money goes to the ruling party men and these persons want it for political election purposes.

The Board of Directors are composed of the ruling party men and money is sanctioned. Who is to object to this? It is Registrar of Co-operative Societies. I respectfully submit that a number of times I had put questions as to why a particular bank or society could not be superceded and what action had been taken against the persons responsible. I have framed lot of questions all these 1-1/2 years (and even some of my friends had told me that I am putting too many questions on this) and even the Hon. Minister had accepted that there has been lot of misappropriation of funds. When there is a serious allegation and when there is a possibility of misappropriation of funds. . . . .

(Mr. Deputy Speaker sounded the gong.)

This is an important point. I am not going to talk on the clauses of the Bill and I am the only person talking from my party and

[Dr. H. V. HANDE] [1970 நவம்பர் 27

so I may be given some more time. Lot of time had been taken on interruptions (Thiru K. Vinayagam: We concede some of our time.)

MR. DEPUTY SPEAKER: That is left to the Chair to decide.

DR. H. V. HANDE: I am making a request to the Chair. Give me some more time. What happens to the Registrar? Suppose he takes stringent and strong action? What is the fate of the Registrar then? What is the fate of such officers who take strong action? I can quote instances. They are summarily transferred and a new man is posted. In Madras Corporation it has happened. A new officer, who does not know the a, b, c of the working of the post, is posted. I say this kind of thing is wrong. There are a number of cases of members of the Legislature, having got funds from the bank. If the Hon. Deputy Speaker were to allow me, I can give the names of those Members. I have got proof of the money granted by the bank. It will be shocking revelation to this House if I reveal it. I can prove that money has gone to legislators who are already provided with monthly salary by this House. When such is the case, I demand on the floor of the House with what face can you come before this House with this Bill, except to grant money to these fabulous men belonging to the ruling party.

Why are you fighting shy to present the report? Because a number of persons in whom the Government are interested will have to be removed from the directorship. Therefore the Santhanam Committee Report has not been placed. Our late revered Anna promised that he would place it. Not a word has been mentioned by the Hon. Minister about it. These are very serious things. Therefore I demand on the floor of this House a division on the motion and request that this Bill be rejected.

மு.ப. 11-40 திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஐந்து நிமிடங்கள் தான் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. நா. வீராசாமி : எனக்கு முன்னால் பேசிய டாக்டர். ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு தவறான கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்திச் சொன்னார்கள். முதலிலே, கொண்டுவரப் பட்டுள்ள மசோதா கூட்டுறவு சொசைடிஸ் அமெண்ட்மெண்ட் ஆக்ட் பற்றியது. அதில் லாண்ட் டெவலப்மெண்ட் பற்றி அவர்கள் இங்கே பேசிவிட்டார்கள். அதற்கும் சென்ட்ரல் பேங்குகளுக்கும் தொடர்பில்லை. அவர்கள் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்காக இந்த வங்கிகள் பயன்படுகின்றன என்கிற



1970 நவம்பர் 27] [திரு. நா. வீராசாமி]

தவறான கருத்தைச் சொன்னார்கள். திட்டவட்டமாக, அறுதியிட்டுச் சொல்லுகிறேன். இன்றைக்கு நாட்டில் இருக்கும் கூட்டுறவு இயக்கத்தில் இருப்பவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து பேர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். திராவிட முன்னேற்றக் கழகத் தார்கள் எந்த வங்கியிலும் இல்லை. அப்படி இருக்கும் காங்கிரஸ் காரர்களுடைய பட்டியலை வேண்டுமானாலும் அமைச்சர் கொடுக்கட்டும்.........

திரு. பி. ஜி. கருத்திருமன் : நூற்றுக்கு 95 பேர்கள் காங்கிரஸ் காரர்கள் என்கிறார்கள். யார் காங்கிரஸ்காரர்கள்? நிரூபிக்க முடியுமா? கேட்பதற்குப் பதில் சொல்ல வேண்டும். 100-க்கு 95 பேர்கள் என்று சொன்னதை நிரூபிக்க முடியுமா? விசாரணை நடத்தத் தயாராக இருக்கிறார்களா?

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பெயர்களை வேண்டு மானாலும் சொல்லத்தயாராக இருக்கிறேன். மாவட்ட வங்கிகளில் அப்படி காங்கிரஸ்காரர்கள் டைரக்டர்களாக இருப்பதைக் காட்ட முடியும். தமிழகத்தில் அத்தனை மாவட்டங்களிலும் எங்காவது, யாராவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்றால், திரு. அன்பில் தர்மலிங்கம் என்பவரும், நான் ஒருவன் ஆக இரண்டு பேர்கள்தான் வங்கிகளில் இயக்குநர் களாகத் தேர்தலில் நின்று போட்டியிட்டு வெற்றிபெற்று இருக் கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய திரு. இராமமூர்த்தி அவர்கள், அரசியல் காரணத்திற்காக, உள் எண்ணங்களை வைத்துச் செய்யப்படுகிறது, அமைச்சர்களுக்குள் தகராறு, ஆர்டினன்ஸ் என்றெல்லாம் சொன்னார்கள். ஆர்டினன்ஸ் கொண்டுவருவது ஆளும் கட்சிக்கு எப்பொழுது தேவை என்று படுகிறதோ அப்பொழுது கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டு வர உரிமை இருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதன் அவசியம் தெரியாமல் இருக்கலாம். இன்றைக்கு வெகுவாகக் கூட்டுறவுத் துறையில் இருப்பவர்கள் விவ சாயத்திற்குச் சம்பந்தப்படாதவர்கள். விவசாயிகள் அல்ல. அவர்கள் குட்டி ராஜாக்கள் போல், சர்வாதிகாரிகளாக இருக்கும் முறையில் வங்கிகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்ற வேண்டும். ஏழை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் அளவில் செய்ய வேண்டும் என்று இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் ஏழை களின் அரசாங்கம், ஏழைகளுக்காக, விவசாயிகளுக்கு உதவியளிக்கும் வகையில் செய்ய வேண்டும் என்று சட்டத்தைத் திருத்த முற்பட் டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில்தான் அவரச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

ஒன்றுமே விளக்கம் இல்லை என்றார்கள். திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். ஆணா, பெண்ணா என்று கேட்டால் எப்படி? மசோதாவை அறிமுகப்படுத்தியிருக்கிறது. விதி முறைகள் வரும் வரையில் காத்திருந்தால் தெரியும். திரு. இராமமூர்த்தி அவர்கள், ஆர்டினன்ஸைக் கொண்டு வந்தார்கள், சட்டமாகக் கொண்டு வருவதற்கென்ன என்றார்கள். என்ன, பயமா? 138 பேர்கள்

[திரு. நா. வீராசாமி] [1970 நவம்பர் 27

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கும்போது, பயந்துகொண்டு கொண்டுவரப்படவில்லையா என்று கேட்டார்கள். நாங்கள் யாருக்கும் பயந்துகொண்டு செயல்படத் தேவையில்லை.

திரு. சுப்பராஜா அவர்கள் வீக்கர் செக்ஷன்பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றுவரையில் கூட்டுறவுத் துறையில் ஆண்களைத்தவிர பெண்களுக்கு நியமனம் எங்கே கொடுத்தார்கள்? பெண்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்களா? இல்லையே! இதுவரையில் இல்லை. மேடையில் பேசுவார்கள் புரட்சிகரமான முறையில் செய்கிறோம். பெண்களுக்கும் சம உரிமை கொடுக்கிறோம் என்று. ஆனால், கொடுத்திருக்கிறார்களா ? சமுதாயத்தில் சரிபாகமாக இருக்கும் பெண்களுக்குக் கூட்டுறவுத் துறையில் பங்கு கொடுக்க வேண்டும் என்று வீக்கர் செக்ஷன் என்று சொன்னால், அதை பார்சனாலிடியா என்று கேட்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் அவர்கள் இடமே பெறமுடியாமல் இருந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கும் இடம் கொடுக்கத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. ராமமூர்த்தி சொன்னார்கள், வீக்கர் சொசைடியில் நாயுடு, முதலியார், செட்டியார் என்றெல்லாம் இருக்கிறார்கள். அப்படி எத்தனையோ இருக்கிறது. மலை ஜாதியினர் பாதிக்கப்படுவர் என்றெல்லாம் சொன்னார்கள். கொஞ்சம் சட்டம் படித்தவர்கள், நன்றாகத் தெரியும். ரிசர்வேஷன் என்று இருக்கும்போது, அப்படிப்பட்ட காரணத்தால், செட்டியார், முதலியார் மற்றவர்கள் போட்டி போட முடியாது. இன்றைக்கு அரசுத் துறையில் வேலைகள் நியமனம் செய்யும்போது 16 சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு என்று சட்டம் வைத்திருக்கிறோம். அந்த இடங்களுக்கு வேறு ஜாதியினர் கன்சிடர் செய்யப்படுவதில்லை. அதேபோல் வீக்கர் செக்ஷன் என்று வைத்துவிட்டால், அந்த இடத்திற்கு செட்டியார், முதலியார் அல்லது ராமமூர்த்தி போன்றவர்கள் செல்ல முடியாது. அது அவர்களுக்கும் தெரியும். ஆனாலும், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவருகிறதே, ஏழைகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கொண்டுவருகிறதே, விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்காகக் கொண்டுவருகிறதே, இப்படி முன்னேற்றத்திற்கு இடம் கொடுத்துவிட்டால், பின்னால் மேடையில் பேசமுடியாதே, கூட்டுறவுத் துறையில் குற்றங் குறைகள் சொல்லமுடியாதே என்று அஞ்சிக்கொண்டு, எதை எதையோ பேசுகிறார்கள். இது ஏழைகளுக்காகவும், விவசாயிகளுக்காகவும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விதிமுறைகள் வரும்வரையில் காத்திருக்கவேண்டும். அப்பொழுது என்னென்ன பயன்கள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த அமெண்ட்மெண்டில் சொல்லியிருக்கிறார்கள்.

"In the proposed new Chapter IX-A under clause 73-B (I), deleet the words "as many Central Co-operative Banks as may be deemed necessary" and sustitute the following 'not more than one Central Co-operative Bank in each district'."



1970 நவம்பர் 27] [திரு. நா. வீராசாமி]

என்று ஏதோ ஹைதர் காலத்து நிலையை நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் அடைந்து கொண்டு வருகிறோம். அந்த நிலையில் வங்கிகளை நிர்வாகத்திற்கு ஏற்ற முறையில், நிலைமைகள் உருவாக வேண்டும் என்று செய்கிறார்கள். இன்றைக்கு மாவட்டத் திற்கு ஒரு வங்கி என்று வைத்துக்கொண்டு இருப்பவர்கள் அங்கே ஆட்டிப்படைக்கிறார்கள். அந்த முறையில் முன்னால் இருந்த அரசாங்கம் நிலைமைகளை உருவாக்கியிருந்தது. அதில் மாற்றத்தைச் செய்து, திராவிட முன்னேற்றக் கழக அரசு அமெண்ட்மெண்ட் கொண்டுவந்தால் எதற்காக என்று கேட்பது நியாயமில்லை.

ஒரு மாவட்டத்திற்கு ஒரு வங்கிதான் என்று ராமமூர்த்தி வாதாட முடியாது. அவர்கள் ஆண்ட காலத்தில்கூட தஞ்சாவூரில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும் இரண்டு வங்கிகள் தஞ்சை மாவட்டத் தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதற்குத் தனி அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

அதேபோல காங்கிரஸ் ஆட்சியில், திருச்சி மாவட்டத்தில், திருச்சியில் ஒன்றும், புதுக்கோட்டையில் ஒன்றும், ஒரே மாவட்டத் தில் இரண்டு வங்கிகள் இயங்கிவந்தன. அப்படி இதற்கு முன்னால் அங்கீகாரம் கொடுத்துவிட்டு, அந்த நிலையை ஏற்றுக்கொண்டுவிட்டு, இன்றைய தினம் தனிப்பட்ட இரண்டு மாவட்டங்கள் மாத்திரமல்லா மல், எல்லா மாவட்டங்களிலும், வட ஆற்காடு மாவட்டம், செங்கல் பட்டு மாவட்டம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்தால் தான் விவசாயிகளுக்குப் பயன்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப் படையில் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தத்தை எதிர்ப்பதில் ஒன்றும் அர்த்தம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அப்படிப் பல வங்கிகள் உருவாகின்ற நேரத்தில் என்னுடைய வேண்டுகோளாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை ட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். வங்கிகளை ஒரு டிவிஷனுக்கு ஒன்றாக பரவலாக அதிகமாக்குங்கள், ஒரு மாவட்டத்தில் மூன்று கோட்டங்கள் இருக்கின்றன என்றால் மூன்று வங்கிகளை ஏற்படுத் துங்கள், நான்கு கோட்டங்கள் இருக்கின்றன என்றால் நான்கு வங்கி களை ஏற்படுத்துங்கள். விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் கடன்களைக் கொடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குங்கள். இந்த விஷயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

ஆர்டினன்ஸ் அறிவிக்கப்பட்ட நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத் திலும் உருவாகிற வங்கிகளின் தலைவர்கள் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் இயக்குனர்களாக வேண்டுமென்ற முறை அறிவிக்கப்பட்டிருந்தது. அது தேவையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம்செலுத்தி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஒவ்வொரு சென்ட்ரல் பாங்கிலும் தலைவராக இருப்பவர்கள் ஒருவரைத் தேர்ந் தெடுத்து மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு டைரக்டர்களாக அனுப்பு

கிறுர்கள். இப்படித் தேர்ந்தெடுத்து அனுப்புவதன்மூலம் மாநிலக் கூட்டுறவு வங்கி நல்ல முறையில் செயல்படும் என்ற என்னுடைய யோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் ஏழை விவசாய மக்களுக்கு உதவக் கூடிய சட்டம். ஆகவே, அப்படிச் செய்தால் ஏழை விவசாயிகள் இந்தச் சட்டத்தை வரவேற்பார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா, விவசாயிகளுக்குத் துரிதமாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட ஒன்று என்ற கருத்தை இந்தச் சபையில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே விவசாய சமூகம் வெகு நீண்ட நாட்களாக கவனிக்கப்படாத நிலையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலம்போய், அவர்களுக்கு விரிவான முறையில் துரிதமாக உதவிகளைச் செய்து விவசாயத்தை அபிவிருத்தி செய்து வருகிறது. அந்த நல்ல எண்ணத்தில்தான் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் பல்வேறு காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறது. அதனுடைய விளைவாகத்தான் இப்போது நான்காவது திட்டத்திலே இன்னும் அதிகப்படியான தொகைகளை விவசாயத்திற்கு ஒதுக்கி, குறுகிய காலக் கடன்களாகவும், நீண்டகாலக் கடன்களாகவும் விவசாயி களுக்குக் கொடுத்து வருகிறுர்கள். இப்படி அதிகமான தொகைகளை விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறுர்கள். இப்படி அதிகமான தொகைகளை விவசாயிகளுக்குக் கொடுத்துவருவது விவசாயிகளுக்கு நலம் பயக்குமா, கடனைத் திருப்பித் தருவது அவர்களுக்குச் சுலபமாக இருக்குமா என்பதைப் பார்க்கும்போது அவ்வளவு சுலபமாக இருக்காது என்ற கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எதிர்த்தரப்பிலே பேசிய கனம் உறுப்பினர்கள் ரொம்பக் கார சாரமாக இந்த மசோதாவையே தொலைத்துவிட வேண்டுமென்ற முறையில் பேசினுர்கள். அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டுதான் பேசினுர்களா அல்லது அவசரக் கோலத்திலே பேசினுர்களா என்று தெரியவில்லை. அவர்கள் சற்று நன்ருகச் சிந்தித்துப் பார்த்திருந்தால் இதை எதிர்த்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். கிராமத்திலே உள்ள விவசாயிகளுடைய கருத்தை அவர்கள் அறிந் திருக்க மாட்டார்கள். ஒரு மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கி இருக்க வேண்டும். இப்போது எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு சொசைடி ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் தாமதம் ஏற்படலாம். சில இடங்களில் தவறுகள் ஏற்படலாம். அதற்காக அந்தத் திட்டமே தவறு என்று சொல்லிவிடக்கூடாது. ஏற்படும் தவறுகளைக் களைந்து இனிமேல் தவறுகள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



இந்தச் சட்டத்தை யார் எதிர்க்கிறுர்கள் என்று பார்க்க வேண்டும். பழமையிலே இருப்பவர்கள், நீண்டகாலமாகக் கூட்டுறவு சங்கங்களைப் பிடித்துக்கொண்டிருப்பவர்கள், தங்கள் கையிலேதான் எல்லாவற்றையும் ஒப்படைக்க வேண்டும், தாங்களேதான் பதவி வகிக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள்தான் இப்படி எதிர்க் கிறுர்கள். இவர்களை வெளியே போகச் சொல்ல முடியவில்லை. அவர்கள் தாங்களாக வெளியே போக விரும்பவில்லை. ஒரு மாவட்டத்திலே ஒரு வங்கி இருக்கிறது என்ருல் அதிலேயிருந்து 30 கோடி 40 கோடி ரூபாய் கடன் கொடுக்கிருேம். இன்னும் 70, 80 கோடி ரூபாய்கூட கடன் கொடுக்க இருக்கிருேம். இந்த அதிகாரங்கள் எல்லாம் தங்கள் கைகளிலேதான் இருக்க வேண்டுமென்று பழைய பெருச்சாளிகள் எண்ணுகிறுர்கள். அவர்கள் ஏன் வெளியே போக மறுக்கிறுர்கள் என்பதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை. புதியவர்களாக வருபவர்கள்மட்டும் நல்லவர்களா, அவர்கள் புதிய பெருச்சாளிகளாக மாற மாட்டார்களா என்று அவர்கள் கேட்கலாம். ஆகவே, போடுபவர்களை ஜாக்கிரதையாகக் கவனித்து நல்லவர் களாகப் பார்த்துப்போட்டு நல்ல முறையில் நடத்த வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதை வெறும் அரசியல் கண்ணேட்டத்தில்மட்டும் பார்த்துவிடாமல் மக்கள் நலன் கருதி, யாரைப் போட்டால் நன்ருகச் செய்வார்களோ அவர்களையே போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் தங்கள் ஆட்களைத்தான் போடுவார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே யார் யாரைப் போட்டார்கள் என்று இப்போது தெரிகிறது. இந்த ஆட்சியில் இருப்பவர்களும் தங்களுக்கு இருக்கிற சூழ்நிலைகளை அனுசரித்து அப்படிச் செய்யலாம். ஆகவே, யாரும் இதில் அரசியல் கண்ணேட்டத்தோடு செயல்படக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் விவசாயிகளுக்குமட்டுமே உதவி செய்யக்கூடிய அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கக் கூடாது. விவசாயத் தொழிலைச் சார்ந்திருப்பவர்களையும் அனுசரித்து, அவர் களுக்கும் கடன்வசதி போன்றவைகளைச் செய்து உதவி செய்ய வேண்டும். கிராமங்களில் சிறு கடைகளை வைத்துக்கொண்டு சிறு வியாபாரிகள் இருக்கிறுர்கள். அவர்கள் விவசாயிகளைச் சார்ந்திருக் கிறுர்கள். அதோடு, தச்சுவேலை செய்பவர்கள், கொல்லு வேலை செய்பவர்கள் போன்றவர்கள் எல்லாம் விவசாயிகளைச் சார்ந்திருக் கிறுர்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்வசதி போன்றவைகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் "மல்ட்டி பர்பஸஸ்" கூட்டுறவுச் சங்கங்களாக இருக்க வேண்டுமேயல்லாது, தனி சொசைடியாக இருக்கக்கூடாது. வீக்கர் செக்ஷன்களையும் இதில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்பதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து [1970 நவம்பர் 27

அடுத்தபடியாக, பல ஆக்ட்டுகள் வரும்போது அதற்கான விதிகளை நாம் முதலில் வகுத்துக்கொள்ள வேண்டும். இவற்றைச் சட்டத்திலே கொண்டுவர எவ்வளவு காலம் இருக்கலாம் என்பன போன்ற வரையறை செய்துகொள்ள முடியாதா? நாம் எல்லா வற்றையும் ஆக்ட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தால் இந்த மாதிரியான சங்கடத்திற்கு இடம் இருக்காது.

நமக்கு கூட்டுறவுத் துறைக்கு 80 கோடி ரூபாய் தேவை இருக்கிறது. இதனை நீங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் பிரித்து மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுவீர்களோ என்று எதிர்க்கட்சியினர் நம்புகிறார்கள். பணம் எல்லாம் வீணாகப் போய்விடவில்லை. எல்லாம் விவசாயிகளிடம்தான் போகிறது. முன்பு கொடுத்த பணம் எல்லாம்கூட நிச்சயம் திரும்ப வசூலாகிவிடும். விவசாயத்திற்குக் கொடுக்க இருப்பதை இப்படி எதிர்த்திருக்க வேண்டாம். அதிகம் எதிர்க்காமல், இதை ஆதரிக்க வேண்டும்.

கிராமங்களிலுள்ள சொசைடிகளில் இன்னும் சிக்கல்கள் இருக்கின்றன. நாம் கடன் கொடுக்கிறபோது, இன்னும் எவ்வளவோ அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தாலும் அப்படிக் கொடுக்க முடியவில்லை. நாம் ஒவ்வொரு விவசாயிக்கும் எவ்வளவு லிமிட்டோ அவ்வளவுக்குக் கடன் பணம் சாங்ஷன் செய்து விவசாயிக்கு செக் கொடுத்துவிட வேண்டும். விவசாயிக்கு என்றைக்குப் பணம் வேண்டுமோ அன்றைக்கு வங்கியில் செக் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ளலாம். சில சமயங்களில் விவசாயி நடவு செய்யும்போது பணம் தேவையென்றால் அந்தச் சமயத்தில் நம்மால் பணம் கொடுக்க முடியவில்லை. அப்படிப் பணம் வாங்குவதற்கும் காலதாமதமாகும். எந்த நேரத்தில் எந்தத் தேவைக்கு வேண்டுமோ அதற்குத் தகுந்தாற்போல விவசாயிகள் பணம் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும். காலத்தோடு கடன் கொடுத்து உதவ முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இந்த முயற்சிகளைத் தீவிரப்படுத்தி தாமதமே இல்லாது விவசாயிகள் செக் கொடுத்து கடன் பெறக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக நான் முன்பே சொன்னதுபோல எல்லா அதிகாரங்களையும் விதி அமைக்கும்போது அமைத்துக்கொள்ள எடுத்துக் கொள்ளாது சட்டத்திலேயும் சில வரையறைகளை ஏற்படுத்தி விட்டால் நன்றாக இருக்காதா என்பதையும் அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சிறிய விவசாயி என்று சொல்கிற இடத்தில் சொந்தமாகவோ அல்லது சாகுபடிக்கோ குறிப்பிட்ட அளவு நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்கள் என்று இருக்கிறதேதவிர இந்த அளவு நிலம் என்பது குறிப்பிடப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அப்படியின்றி இந்தச் சட்டத்திலேயே ஒரு வரையறை செய்யப் படுவது சரியாக இருக்கும் என்று நான் சொல்கிறேன்.



1970 நவம்பர் 27] [திரு. என். சங்கரய்யா]

குறிப்பாக, லிப்ட் இர்ரிகேஷன் சிஸ்டம் சட்டத்திலேயே ஸ்மால் லாண்டு ஓனர்ஸ் என்பதற்கு 1 அல்லது 2 ஹெக்டார் நிலம் வைத்திருப்பவர்கள் என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஹெக்டார் என்றால் 2½ ஏக்கரா நிலம் வரும். நாம் இந்தச் சட்டத்திலும் சிறு விவசாயிகள் என்பதற்கு 2½ ஏக்கரா அல்லது 3 ஏக்கரா நிலம் உடையவர்கள் என்று வரையறை செய்துவிடுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய நோக்கம் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடியவர்கள் பயன்பெறவேண்டும் என்பது தான். இன்று வரைக்கும் சமுதாயத்தின் மேல்தட்டில் இருக்கக் கூடிய நிலப்பிரபுக்கள், நிலக்கிழார்கள் ஆகியோர்கள்தான் இந்த சொஸைடிகளில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதை மாற்றி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற சிறிய விவசாயிகள் இன்னும் திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்தப் பகுதியில் வாழக்கூடிய சிறிய கைத்தொழில்காரர்கள் பயன்பெறும் படியாகச் சட்டத்தைத் திருத்த வேண்டும். சட்டத்திலேயே சில வரையறைகளை ஏற்படுத்திவிட வேண்டும். காரணம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிகளை இயற்றக்கூடிய அதிகாரங்களை சர்க்கார் சற்று அதிகமாகவே எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. விதிகளை வகுத்துக்கொள்ளக்கூடிய அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருப்பது சாதாரணத் தன்மை வாய்ந்தது என்று சொல்லலாம். குறிப்பாக ஸ்மால் பார்மர்ஸ் என்றால் இந்த அளவு நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள்தான் என்று குறிப்பிட்டுவிடலாம். இன்னும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு பேரை நாமினேட் பண்ணுவது. நாமினேட் பண்ணக்கூடியவர்களுக்கு இருக்க வேண்டிய யோக்கியதாம்சங்கள் என்னவாக இருக்க வேண்டும் என்பதை எல்லாம் சட்டத்திலேயே தீர்மானித்துவிடுவது முக்கிய மானதாக இருக்கும். அதிகாரம் அரசியல் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்று சந்தேகிப்பதற்கு இடமில்லாமலிருக்கும்.

குறிப்பாக இதிலே ' the number of members to be nominated to the Board and the Committee and their qualifications ' என்பதாக யோக்கியதாம்சங்களைக்கூட நிர்ணயிக்கும் அதிகாரத்தை அவர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் விதி இயற்றுகிற போது தம் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் பண்ணக்கூடிய நிலைமை இருப்பதனால் நியமனங்களைப் பொறுத்தவரை பல கட்சிகளைக்கொண்ட அமைப்புகளும் இருப்பதனால் எந்தவிதமான பாதகமும் யாருக்கும் ஏற்படாது என்று உத்தரவாதம் அளிக்க இப்போது வசதியில்லை.

நிலங்கள் பட்டா கொடுக்கும் விஷயத்தில்கூட ஸ்தலக் கமிட்டிகளை அமைத்து அவர்கள் யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று யோக்கியதாம்சங்களைப் பார்த்து முடிவு செய்கிறார்களோ அப்படிக் கொடுக்க வேண்டுமென்று கேரளாவிலே வழிவகை இருக்கிறது. ஆகவே இந்த நியமனப் பிரச்சினையையும் சர்ச்சைக்குரிய பிரச்சினை யாக்கி விடாமல் இன்ன யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும். இன்னவாறு நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதைச் சட்டத்திலேயே வரையறை செய்வது நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்

கொள்கிறேன். அத்தகைய ஒரு உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் அளித்தால் நல்லது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த மசோதாவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கூறும்போது நாட்டில் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கடன் தேவைப்படுகிறது, அதற்காக இதைப் பரவலாக்க வேண்டியதாக இருக்கிறது என்று குறிப்பிட்டது வரவேற்கத்தக்க நோக்கம். ஆனாலும் அதே நேரத்தில் ஒன்றைக் கவனிக்கவேண்டும். இன்றைய தினம் ரிசர்வ் பாங்க் 3 சதவீத வட்டிக்குப் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை வாங்கி பல் பாங்குகள்மூலம் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு வந்து சேரும்போது எட்டேமுக்கால் சதம், 9 சதவீத அளவுக்கு வட்டி உயர்ந்து விடுகிறது. இதைக் குறைக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். வட்டி விகிதம் குறைவதற்கு வழிவகுக்கும் நோக்கம் இருப்பதாக அமைச்சர் அவர்களும் சொல்லவில்லை. நோக்கத்திலும் அப்படி இல்லை.

இன்றைய தினம் தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் அங்கங்கே இருக்கின்றன. ரிசர்வ் பாங்கிடம் இருந்து அவர்கள் கடன் வாங்கி 5 சதவீத வட்டிக்குக் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்பதையும் நாம் யோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் இந்த மசோதாவில் வீக்கர் செக்ஷனுக்கு உதவி செய்ய வழி செய்திருப்பது வரவேற்கத் தக்க அம்சம். இதில் குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள், சிறிய விவசாயிகள் இடம்பெற வழி செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தின் படி மத்தியக்கூட்டுறவு பாங்குத் தலைவர்கள் மாநிலக் கூட்டுறவு பாங்கு டைரக்டர்களாக ஆகிவிடுகிறார்கள். இதுபோக, மேலும் டைரெக்டர்கள் மாநிலப் பாங்குக்குத் தேர்ந்தெடுப்பது அவசியந் தானா? அதிகமான டைரெக்டர்களுடன் நியமன உறுப்பினர்களும் சேர்ந்தால் இவ்வளவு பேர்கள் இருப்பதனால் சிக்கனம் இருக்குமா? அதிக நிர்வாகச் செலவால் வட்டி விகிதத்தைக் குறைக்க முடியாது. இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

நம்முடைய அடிப்படை நோக்கம் ரிசர்வ் பாங்கிடம் 3 சதவீதத் துக்குப் பணம் வாங்கினால் விவசாயிகளிடம் போகிறபோது 5 சத வீதத்துக்கு மேல் வட்டி விகிதம் போகக்கூடாது. 1:5 என்ற விகிதத்தில் சமுதாயத்தின்கீழ் நிலையில் உள்ளவர்களும் இந்த பாங்கு களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்க வழி செய்யப்பட வேண்டும். அதற்குத் தக்க வகையிலும் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை மசோதாவைப் பொறுத்து என்னுடைய ஒரு கருத்தை மாத்திரம் சொல்ல ஆசைப்படுகிறேன்.



கூட்டுறவு இயக்கம் நாட்டிலே குறிப்பாக விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிற நல்ல இயக்கம் ஆகும். இந்த இயக்கம் விவசாயிகளுக்கு, அவர்களுடைய முன்னேற்றத்துக்கு இன்றியமையாத ஒரு நல்ல திட்டம். இது தமிழ் நாட்டிலே, இந்திய தேசத்திலேயே சிறப்பாக நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தில் விவசாயிகளுக்கு முன்கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பழைய கடன்களைத் தீர்ப்பதற்கும் கூட்டுறவு சங்கத்திலே ஒரு வகை செய்து கொடுக்க வேண்டும். இப்போது விவசாய மகசூல் கடன் பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பழைய கடனைத் தீர்ப்பதற்கு வழியில்லை. புதிதாக வங்கிகளில் நியமனம்—கோ-ஆப்ஷன்—செய் வதற்கு பல விதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. வீக்கர் செக்ஷன், பேக்வர்டு கிளாஸ், ஷெட்யூல்டு கிளாஸ் என்று நிர்ணயம் செய் திருக்கிறார்கள். இதிலே பஞ்சாயத்து சேர்மன்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு இடம் அளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுகள்தான் கிராம மக்களோடு இணைந்து பணி ஆற்றக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே இதிலே நியமனம் செய்யும்போது பாரபட்சம் இல்லாமல்—எல்லாக் கட்சி களும் ஒப்புக்கொள்கிற வகையில்—செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இலாகாவில் அரசியல் இருக்கக்கூடாது. அரசியல் புகுந்தால் மக்களுக்கு நன்மை பயக்காது. இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயலாற்ற முடியாது. கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் சமநிலை, சமத்துவம் கொடுக்குமாறு நல்ல முறையில் இதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவு இயக்கம் நல்லமுறையிலே தமிழ் நாட்டிலே நடப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறி வரவேற்று முடிக் கிறேன். வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபையின் முன் வந்திருக்கும்படியான இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த மசோதாவை மிகவும் வன்மையாக நான் எதிர்க் கிறேன். எதிர்ப்பதோடு மட்டும் அல்ல, இதைச் சொன்ன உடனே இந்த அமைச்சர் அவர்கள் பார்த்தீர்களா, பார்த்தீர்களா, விவசாயி களுக்கு நன்மை செய்ய நினைத்தால் இவர்கள் எதிர்க்கிறார்களே என்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வார்கள். அதைப்பற்றி நன்றாகத் தெரியும். இந்த ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் கொடுப்பதற்குப் பதிலாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தக் கட்சியிலே உள்ளவர்களுக்குத்தான் எல்லா வசதிகளையும் கொடுக்க முடியும் என்று போட்டு விடலாம். அதைச் செய்வதற்குப் பதிலாக இந்தமாதிரி திருத்தம் கொண்டு வந்து ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லி 10, 15 கோடியாக இருந்ததை 70, 80 கோடியாக ஆக்கி இருக்கிறீர்கள். பத்து கோடியாக இருந்த போதே ஊழல், ஊழல் என்று சொல்லிய நீங்கள் இன்று 70, 80

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 நவம்பர் 27

கோடியாக இருக்கும்போது எவ்வளவு ஊழல் இருக்கும் என்று கேட்கிறேன்.

காரணம், உங்கள் ஆட்சியில் ஊழல் என்பது சாதாரணம். மிகவும் மலிவாகக் கிடைக்கும் சரக்கு. அவர்கள் பாணியில் வீக்கர் செக்ஷன் என்று கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள். அதை ஆரம்பிப்பதற்கு முன்னாலே என்னென்ன தவறுகள் நடந்து இருக்கின்றன. எத்தனை பட்டாக்கள் கொடுக்கிற விஷயத் திலே—புறம்போக்கு பட்டா கொடுக்கிற விஷயத்திலே ஊழல் நடந்திருக்கிறது. பட்டா கொடுத்து மோட்டார் போட்டு உடனடி யாக ரோட்டை போட்டு கொடுத்திருக்கிறீர்கள். இல்லை என்று நிரூபிக்க முடியுமா ? அந்த இடத்திலேயே காரில் கொண்டு போய் காண்பிக்கிறேன். ரோட்டையும் போட்டீர்கள். இப்பேர்ப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கட்சியை வளர்ப் பதற்கு, இப்பேர்ப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் கொடுப்பதற்காகத்தான் மாற்றி அமைக்கிறீர்கள்.

முன்னே எல்லாம் எத்தனை அரசாங்கங்கள் பார்த்து இருக்கிறோம். உலகத்திலே இதைப்போல எந்தக் கட்சியும் கிடையாது. இந்த அரசாங்கத்தில் சர்வாதிகாரி ஆட்சி நடைபெறுகிறது என்ற குற்றத்தைச் சாட்டுகிறேன். இந்த ஆட்சியிடம் ஸ்டாலின் தோற்று விட்டான், இட்லர் தோற்றுவிட்டான். டாக்டர் கோயபல்ஸ் கூட இவர்களிடம் பாடம் கேட்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. கட்சியை வளர்ப்பதற்காக, மக்களுக்காகத்தான் என்று சொல்வதற் காகத்தான் இந்தச் சட்டத்தை எல்லாம் கொண்டு வருகிறார்கள். (சிரிப்பு) சிரிக்கிறீர்கள். சந்தோஷம். அமைச்சர் அவர்களுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பாடம் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள் என்று சிரிக்கிறார்கள். மக்கள் பார்த்துச் சிரிக்கிறார்கள். மக்கள் பார்த்துச் சிரிப்பார்கள். முக்குக்கு முக்கு, ஒவ்வொரு மூலையிலும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே காரமடை என்ற ஊரிலே பொது மக்கள் எல்லாம் பணம் வசூலித்து வங்கியை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்ன ஆயிற்று? ஆரம்பித்தீர் களா, ஆனால் பணம் கொடுக்காத ஊர்களில் எல்லாம் ஆரம்பித்திருக் கிறீர்கள். லோன் போட்டால் வட்டச் செயலாளரிடம் சர்ட்டிபிகேட் வாங்கி வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதை இல்லை என்று சொல்ல முடியுமா? இல்லை என்றால் லோனை திருப்பக் கட்ட வேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பா. ஆதித்தனார்: அது கோவை மாவட்ட காரமடையைப் பற்றியது. சென்ட்ரல் பாங்கைப் பற்றியது. அது காங்கிரஸ்காரர்கள் கையில்தான் இருக்கிறது. ஊழல் நடந்தது என்று சொன்னால் அதற்கு யார் பொறுப்பு என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.



1970 நவம்பர் 27]

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதனால்தான் நாங்களும் பண்ணு கிறோம் என்று சொல்லுகிறீர்களா? அமைச்சர் அவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள் அல்ல. ரொம்ப சாமார்த்தியமானவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சப்ஜக்ட்டுக்கு வாருங்கள். அமைச்சரைப்பற்றி காமன்ட்ஸ் தேவையில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்களுடைய அறிவும், திறமையும், திட்டமும் ரொம்ப பயமாக இருக்கிறது. உலகப் பிரசித்தி பெற்றவர் ஆயிற்றே. டிரான்ஸ்போர்ட் அமைச்சராக இருந்தபோது ரகசிய மான திட்டம் வைத்திருந்தார்கள். அதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டால் 2 கோடி லாபம் வரும் என்று சொன்னார்கள். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் நேற்று என்ன சொன்னார்கள். ஆம் கொடுத்தார்கள். தூக்கி எறிந்து விட்டேன் என்று சொன்னார் கள். ரகசியமான திட்டத்தை அவர்கள் கொடுத்ததை தூக்கி எறிந்து விட்டேன் என்று சொல்லுகின்றார்கள். அவர்களுடைய திட்டம் எல்லாம் இப்படித்தான் 'அபார்ஷன்' ஆகுமோ என்னவோ? பொதுமக்கள் பணம். அவர்கள் வரி கொடுத்த பணம். இவ்வளவு பொறுப்பு இல்லாமல் நடக்கக்கூடாது. பொறுப்பு இல்லாமல் ஒரு இலாகாவில் பணம் இல்லாமல் இருந்து இப்போது 80 கோடி அளவுக்குப் போய் வீக்கர் செக்ஷன், விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு, ஸ்மால் ஃபார்மர்களுக்கு என்று சொல்லி, ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய பெரிய பதவியில் இருப்பவர்கள் சர்க்கார் செலவில் இருக்கிற விஷயம் எல்லாம் இருக்கிறது. சிலர் 100 ஏக்கர் வாங்கியிருக் கிறார்கள். அதை பத்து லட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை.

வீக்கர் செக்ஷன் என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். இப்படிச் சொன்னால் காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் இல்லையா? என்று கேட்பார்கள். ஆட்சி உங்கள் கையில்தானே இருக்கிறது. நடவடிக்கை எடுங்களேன். கருத்திருமன் தப்பு பண்ணினாலும் நட வடிக்கை எடுங்களேன். போங்கள் கோர்ட்டுக்கு என்றீர்கள். வாருங்கள் போகலாம். நீங்கள்தான் பயந்து கொண்டு இருக் கிறீர்கள். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் ஆடிட் பண்ணாத சொஸைட்டிகள் இருக்கின்றன. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? நீங்களே ஊழல் ஊழல் என்று கூறுகிறீர்கள். இப்போது 80 கோடிக்கு போய் இருக்கிறீர்கள். இப்போது எவ்வளவு ஊழல் இருக்குமோ?

* * * * *

அது மட்டுமல்ல. கோவாபரேடிவ்** சொஸைட்டி ராமலிங்க செட்டியார் ஆரம்பித்த சொஸைட்டி ஐயா. சிறப்பாக அமைக்கப் பட்ட தமிழ்நாட்டிலே உள்ள சொஸைட்டி. அந்தப் பெருமை யும் எங்களுக்குத்தான். இந்தியாவிலேயே, மிகவும் சிறப்பாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

கோயம்புத்தூரிலே ஆரம்பிக்கப்பட்டது. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் கோவாபரேடிவ் இயக்கத்தின் தந்தை என்று சொல்லுவார்கள். அதை எல்லாம் சொன்னால் அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர், திருநெல்வேலி என்று எல்லாம் போகிறார்கள். ஏழைகளுடைய நன்மைக்காக என்ன திட்டங்கள் இருக்கின்றன? ஏ முதல் என் வரையில் திருத்தமா? ஏன் இஸட் வரையில்கூட வைத்துக்கொள்ளலாம். தி.மு.க. கட்சிக்காரர்களுக்கும் அதைச் சேர்ந்த விவசாயிகளுக்கும்தான் இந்த மசோதா என்று போட்டுக் கொடுங்கள். மெஜாரிட்டி எடுத்துக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

ஸ்டாலின் செய்தான், ஒரு முறைப்படி செய்தான்; இட்லர் செய்தான், ஒரு முறைப்படி செய்தான்; முஸோலினி செய்தான், ஒரு முறைப்படி செய்தான், அவர்களை மிஞ்சி விட்டார்களே, உதவி சபா நாயகர் அவர்களே. கோயபல்ஸை விட பிரச்சாரம். கோயபல்ஸ் உங்களிடம் தோற்று விடுவான். உங்களிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் அவன். மூன்று படி அரிசி கொடுப்பேன் என்று அவன் சொன்னான். நீங்கள் சொன்னீர்களே, என்ன ஆயிற்று? அவர்களைப் போல் செய்திருந்தால் நான் யுத்தத்திலே ஜெயித்திருப்பேனே என்று கோயபல்ஸ் நினைப்பான், நீங்கள் காங்கிரஸை தோற்கடித்தமாதிரி செய்திருப்பேனே என்று நினைப்பான்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் சாதாரணமானவர்களா? உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு இலாகாவிலே அனுபவம் உள்ளவர்கள். வயதிலே மூத்தவர்கள். இலண்டனிலே படித்தவர்கள். பல நாடுகளிலே வக்கீல் தொழில் சிறப்பாக நடத்தி வந்தவர்கள். என்ன என்ன நுணுக்கங்கள் எப்படி எப்படி எல்லாம் செய்யலாம் என அறிந்தவர். அவர்களினால் தி.மு.க. இருப்பதாக அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். சர்க்காருக்கு எச்சரிக்கை விடவேண்டியது எதிர்க்கட்சித் தலைவருடைய பொறுப்பு, அதனால் சொல்கிறேன். என்னமோ இருக்கிறது? ஜாக்கிரதையாக இருங்கள், உங்களுக்கே ஆபத்து வரும், திடீரென்று எது வேண்டுமானாலும் வரலாம். அரசியல் நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த பில்லில் என்ன தப்பு இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தி.மு.க. கட்சியை வளர்ப்பதற்காகக் கொண்டு வந்த சட்டம் இது என்று சொல்லி விடுங்களேன். பிறகு வாருங்கள் பொதுமக்களிடத்திலே, என்ன ஆகிறது என்று பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவர் வேகமாக, வேகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கோயபல்ஸ்பற்றி எல்லாம் சொன்னார்கள். அவர்களுடைய நெருங்கிய நண்பராக இருக்கிறார்கள். அவர்களுடைய நண்பராக இருப்பதற்குத் தகுதியும் இருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் சந்தானம்



கமிட்டி செய்திருக்கிற சிபார்சுகளை ஏற்று கொண்டுவரப்பட்டு இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா அல்லது மறுக்கிறார்களா என்பதைப்பற்றி சொல்ல வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கஷ்டம் வந்தால் சந்தானம் கமிட்டி சிபாரிசுகளைப் பாருங்கள் என்று சொல்வது......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவர் கோபித்துக்கொள்ள வேண்டாம். பொறுமையாக நாம் விவாதிப்போம். மசோதாவிலே திருத்தம் வந்திருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பலப்படுத்துவதற்காக, வளர்த்துக் கொள்வதற்காக என்று சொல்கிறார்கள்; அவர் ஏமாற்றுகிறார், உங்களுக்கே ஆபத்து வரும் என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் கேட்பது, சந்தானம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர் இருந்த குழு செய்த சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு மசோதா, கொண்டுவந்திருக்கிறோம். அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன் : சந்தானம் தி.மு.க. அல்ல என்று சொல்கிறார்கள். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் உங்கள் பக்கம் வந்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் உங்களிடமும் அதேமாதிரி வந்தவர்களும் இருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இருபது வருடத்திற்குப் பிறகு எங்களுக்கு அந்த நிலைமை. ஆனால் உங்களுக்கு $3\frac{1}{2}$ வருடத்திற்குள்ளாகவே அந்தத் தலைவலி வந்து விட்டது. இங்கேயிருந்து உங்களைத் திட்டியவர்களே தாளம் போடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்...............

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் அரசியல் பேசினால் நானும் பேசுவேன். சந்தானம் தி.மு.க. வைச் சேர்ந்தவரா என்று கேட்டதால்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ: சண்முகம்: நான் அரசியல் பேச வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகவே, அவர்களும் அரசியல் பேச வேண்டாம். தி.மு.க. வைச் சேர்ந்தவரா இல்லையா என்பது வேறு. சந்தானம் குழு செய்த சிபாரிசுகளில் சிலவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று கேட்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சந்தானம் கமிட்டி சிபாரிசுகளைப் பூரணமாக ஏற்றுக்கொள்கிறார்களா? நேற்றுத்தான், அதை ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம் என்று ஒரு அமைச்சர் சொன்னார்கள். இதிலே உங்களுக்குள்ளே டிபரன்ஸ் ஆப் ஒபினியனா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சிலவற்றை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம், அதைச் சரி என்று சொல்கிறார்களா அல்லது தப்பு என்கிறார்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: சிலவற்றைச் சேர்த்துக் கொள்வது பாதிக் கிணறு தாண்டியதுமாதிரித்தான். பூராவையும் தாண்ட வேண்டும். சந்தானம் கமிட்டி சிபாரிசுகளைப் பொறுத்தவரையில் உங்களுக்குச் சாதகமானதை வைத்துக்கொண்டு கொண்டுவந்திருக் கிறீர்கள். உதவி சபாநாயகர் அவர்களே, அவர்களுக்கு இருக்கிற சாமர்த்தியம் மாதிரி எங்களுக்கும் ஓரளவிற்கு இருக்கிறது. சந்தானம் கமிட்டி சிபார்சுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பூராவும் நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பரிந்துரை என்றாலே தேவையானவற்றை மட்டும் எடுத்துக் கொள்வதுதான். பரிந்துரைகள் எல்லாவற்றையும் அப்படியே எடுத்துக்கொள்வது என்றால் அது பரிந்துரையாகாது. பரிந்துரை கொடுத்தால் அதை ஆராய்ந்து தேவையானவற்றை நடைமுறை சாத்தியமானவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். சந்தானம் குழுவின் சிபாரிசுகளிலிருந்து தேவையானவற்றை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அது தேவையா இல்லையா என்று தான் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: பூரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். சந்தானம் அவர்கள் (குறுக்கீடு) ஏன் பேசக்கூடாது......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சந்தானம் அவர்களை இந்த அரசாங்கம் தாழ்வாகக் கருதவில்லை. ஒரு சிறந்த அறிவாளி என்று ஒத்துக்கொண்டுதான் அந்தக் குழுவினைப் போட்டிருக்கிறோம். சாதாரண ஆளாகக் கருதவில்லை. உங்கள் கட்சி எங்கள் கட்சி என்று கட்சியை இழுக்க வேண்டாம். பொதுவாகப் பேசவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். உங்களுக்குப் பிரயோஜனமாக, கட்சிக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு பிரதிகூலமாக இருப்பதை விட்டுவிடுவதா? ஒரு வங்கிக்கு நாமினேஷன் செய்ய வேண்டும். சென்ட்ரல் பாங்கை ஐந்து பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். இவை எல்லாம் எதற்காகச் செய்யவேண்டும். ஐந்தாகப் பிரிந்தால் ஐந்து டி.எம்.கே.-க்களை புகுத்திக்கொண்டு விடலாம் என்றுதானே. அதைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் வருகிறது. எதற்காக ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தஞ்சாவூரிலே இரண்டு இருக்கின்றனவே.



திரு. பி. ஜி. கருத்திருமன்: அது பணத்தைப் பொறுத்தது. (குறுக்கீடு) உங்களுடைய வசதி, உங்களுடைய வளர்ச்சி, உங்களுடைய நிலைமை, உங்களுடைய ......... எல்லாம் பொறுத்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மக்கள் வசதிக்காகத்தான். மக்கள் வசதியே எங்கள் வசதி, எங்கள் வசதியே மக்கள் வசதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ரொம்ப ரொம்பப் புரியுது. எத்தனையோ வசதிகள். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் என் கூட வரவேண்டும். நான் காட்டுகிறேன். வங்கிகளின் பெயரால் மக்கள் வசதி என்ற பெயரால் நிலம் கொடுத்து மோட்டார் எல்லாம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் உங்கள் மக்கள் வசதி, மாப்பிள்ளை மக்கள் வசதி, மருமகள் வசதி இவையெல்லாம் மக்கள் வசதிகள். என்ன என்ன வசதிகள் எல்லாம் செய்து கொடுத்திருக்கிறீர்கள், மிகவும் நல்ல வசதிகள் செய்து கொடுக் கிறீர்கள். ஆதாரம் எங்கே என்று கேட்கிறார்களே, வாருங்கள் காட்டுகிறேன். நடவடிக்கை எடுப்பார்களா? நான் சொல்வ தெல்லாம் மக்கள் வசதி என்னும்படியான பெயரால், (குறுக்கீடு) அதைப்பற்றித்தான் சொல்லுகிறேன், விஷயம் அவ்வளவு பரந்து இருக்கிறது. ஏறக்குறைய 80 கோடி ரூபாய் என்று போட்டிருப்பது 500 கோடி ரூபாயில் இருக்கப் போகிறது. அது ஏழை மக்களுடைய பணம். அந்த மக்களிடமிருந்து கிடைத்த வரிப் பணத்தை இப்படிச் செய்யக்கூடாது என்றுதான் குற்றச்சாட்டை சாட்ட விரும்புகிறேன். ஆகவே, சுருக்கமாகச் சொன்னால் இந்த மசோதாவை அனுமதிக்க முடியாது, இது தேவையில்லை. ஆகவே, இதை எதிர்க்கிறோம் என்று கூறி அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் அந்தத் திருத்தங்களை நான் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அதற்கான காரணத்தைச் சொல்லுகிறேன். கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், இட்லர், முசோலினிபற்றியும் இன்னும் பல பெரியவர் களைப்பற்றியும் பேசினார்கள். அதைப்பற்றிப் பதில் சொல்லாததற்குக் காரணம் அதற்கும் இந்த மசோதாவிற்கும் சம்பந்தமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவரவர்களே, இட்லர், முசோலினி செய்ய முடியாத காரியத்தை இந்த மசோதாவின் மூலம் இவர்கள் கட்சிக்கு செய்ய முற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் சாட்ட விரும்பினேன். அதைப் புரிந்துகொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, சில காரியங்கள் எனக்குப் புரிவதில்லை. உதாரணமாக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள், திடீரென்று கிளம்பலாம் என்று எச்சரிக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படித் திடீரென்று கிளம்புவது ஒருமுறை போதும், இனிமேல் வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் திடீர் திடீரென்று கிளம்பிக் கொண்டிருந்தால் என்ன ஆவது?

[1970 நவம்பர் 27

திரு. பி. ஜி. கருத்திருமன்: இப்பொழுது விளக்கம் வேண்டும் ஒருதரம் போதும் என்று சொன்னார்கள். இன்னொருமுறை தெரியாமல் கிளப்புகிறார்களோ.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நண்பர் இராமமூர்த்தி அவர்கள் என்மீது அளவு கடந்த பற்றும் அன்பும் உள்ளவர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உங்கள்மேல் இல்லாத பற்று ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அவர்கள் பேசும்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இல்லை, அதனால் அப்படிக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அமைச்சர் விலக வேண்டும், விலக வேண்டுமென்று சொன்னார்கள். அதே சமயத்தில் அதனுடைய உட்கருத்து அதுவாக இருக்க முடியாது. ஏன் என்றால், நீங்கள் என்மீது எவ்வளவுக்கெவ்வளவு தாக்குகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிப்பார்கள். எனக்கு அதிகமான வலு உண்டாகும். ஆகையால் அவர்கள் அன்போடு தாக்கினார்கள் என்று கருதுகிறேன். ஒருவேளை உள்ளபடியே அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று அவர்கள் எண்ணியிருந்தால் ஒரு தந்திரம் சொல்லிக் கொடுக்க ஆசைப்படுகிறேன். என்ன சொல்ல வேண்டுமென்றால் இந்த ஆதித்தனார் நல்லவர், நேர்மையானவர், திறமையுள்ளவர் என்று இப்படிச் சொன்னீர்களானால் என்னுடைய கட்சிக்காரர்கள், ஆகா, இப்படியா எதிர்க்கட்சிக்காரர்கள்.........

திரு. பி. ஜி. கருத்திருமன்: தகுதியுள்ளவர், நல்ல உலகப் புகழ் பெற்றவர் என்றுதானே சொல்லுகிறோம். ஒருவேளை இப்படிச் சொல்லி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள திட்டம் போடுகிறாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆனால், நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள், சில காரியங்களை நல்ல விதமாகச் சொல்லும்பொழுது திடீரென்று மறுத்ததை, ஆற அமர உட்கார்ந்து, ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் போனபிறகு சொல்லுவார்கள்.

THIRU K. RAMAMOORTHI: The Hon. Minister must know that such replies . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நீங்கள் எந்த விதியின் கீழே பேசுகிறீர்கள்?

THIRU K. RAMAMOORTHI: He has misquoted me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த விதியின் கீழ் பேசுகிறீர்கள்?



1970 நவம்பர் 27]

திரு. க. இராமமூர்த்தி: விதியை, காங்கிரஸ்காரர்களைப்பற்றித் தான் கேட்டுக்கொண்டிருப்பீர்களா?

We cannot be throttled like this. The Hon. Minister has made it a point to misquote. I must have my say.

திரு. பி. ஜி. கருத்திருமன்: விதி என்றால், அவரைப்பற்றிக் கூறும் பொழுது எழுந்திருக்க உரிமை உண்டு. அந்த விதி. 'இண்டர்வீன்' பண்ணும் விதி.

THIRU K. RAMAMOORTHI: He cannot misquote me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அமைச்சரவர்கள் உங்களைப்பற்றிச் சொன்னதை இன்னும் முடிக்கவில்லை. அதற்குள் செல்ஃப் எக்ஸ்ப்ளனேஷன் கேட்கிறீர்களே?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திடீர் திடீரென்று கொஞ்சம் கோபாவேசமாகப் பேசுவதாகயிருந்தாலும், இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் சொல்வதை ஆதரித்துப் பேசுவார்கள் என்பது தெரியும். 2—4—1970-ம் நாள் நான் இங்கே பேசும்பொழுது திரு. இராமமூர்த்தி அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள்:

The Hon. Minister for Co-operation is giving a wrong information. I am not a member of any Bank or Land Mortgage Bank.

ராங்க் இன்பர்மேஷன், நான் தவறாகப் பேசினேன் என்று சொன்னார்கள். பிறகு 4-ம் தேதியன்று பேசுகிறார்கள்:

Hon. Speaker, Sir. On 2nd April 1970 while intervening in the reply by the Hon. Minister for Co-operation I said that I was not a member of the Land Mortgage Bank, Tindivanam. On verification I find that I had been a Member of the Tindivanam Land Mortgage Bank.

என்று கூறியிருக்கிறார்கள். நான் அன்றைய தினம் இல்லை. இல்லாத இடத்திலேயே என்னைப் பற்றி நன்றாகச் சொன்னதைப் பற்றி பெருமைப் படுகிறேன்.

(Thiru K. Ramamoorthy rose.)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: திரு. இராமமூர்த்தி, நீங்கள் உட்காருங்கள். ஒரு உறுப்பினர் எழுந்து பேசுவதற்கு தலைவரின் அனுமதியை வாங்க வேண்டும். பாயின்ட் ஆஃப் செல்ப் எக்ஸ்ப்ளனேஷன் என்று அமைச்சரவர்கள் உரையை முடித்த பிறகு பேசலாமே தவிர, இடையிலே பேசக்கூடாது. You must obey my ruling.

THIRU K. RAMAMOORTHI: What is your ruling? You cannot throttle me this way.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகரவர்களே, என்னுடைய கட்சியைச் சார்ந்த அங்கத்தினரைப்பற்றி அமைச்சரவர்கள் படித்தார்கள். விஷயத்தைப்பற்றி சொன்னார்கள். அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுக்கொண்டு பிறகு சொல்வது நல்லது என்று கருதுகிறேன். அமைச்சரவர்கள் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைப்பற்றி சில விஷயங்களை மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று விரும்பினால், அமைச்சரவர்கள் உரையை முடித்த பிறகு, விளக்கம் சொல்லவேண்டும். அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் உரையை முடித்த பிறகு, திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுந்து நின்று, தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டுமென்று அனுமதி கேட்டால் நிச்சயமாகக் கொடுப்பேன். இப்பொழுது சொல்வது, அமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தன்னிலை விளக்கம் என்று குறுக்கீடு செய்ய உரிமை இல்லை என்பதுதானே தவிர, தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு எப்பொழுதுமே உரிமை கிடையாது, அதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உதவி சபாநாயகரவர்களே, இங்கிருக்கும் அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான். எனவே, இப்படி நீங்கள் முடிவு செய்தால் நாங்கள் சட்டசபையில் இருக்க வேண்டிய வேலை கிடையாது. இன்றைக்கு மந்திரியாக இருப்பவர்கள் நாளைக்குப் பின்னால் போய் உட்கார்ந்து கொள்கிறார்கள். இது ஒன்றும் பர்மனெண்ட் ஜாப் அல்ல, ஹெரிடிட்டரி அல்ல. இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இருப்போமா என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, நாங்கள் பேசும் பொழுது அமைச்சர்கள் இண்டர்வீன் செய்யலாமா? நாங்கள் பேசும்பொழுது அந்தச் சூட்டை தணிப்பதற்காகத் திட்டம், அதற்கு சபாநாயகர் அவர்கள் உடந்தை என்று சொல்லவில்லை, கொஞ்சம் அனுகூலமாக இருக்கிறார்கள். எனவே, அவர்களைப்பற்றி டேமேஜிங்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லக்கூட உரிமை இல்லை என்றால், டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது எல்லோரும் செய்துகொண்டிருந்தார்களே, பேசுவதற்கே விடவில்லையே. இப்பொழுது இருக்கும் மரபு, கன்வென்ஷன் என்னவென்றால், எப்பொழுது எப்பொழுது எவ்வளவு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்பொழுது விளக்கிக்கொள்வது என்பது. விதி என்பது ஒரு பக்கம் இருக்கிறது. திரு. அண்ணாதுரை அவர்கள் கன்வென்ஷன் என்றால் கன்வீனியன்ஸ் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைத்தான் நான் சொல்லுகிறேன். இவ்வளவுதூரம் டேமேஜிங்காக அமைச்சரவர்கள் பேசலாம். ஆனால் திரு. இராமமூர்த்தி அவர்கள் கடைசியாகப் பேசினால் என்னவாகும்?, திரு. இராமமூர்த்தி பேசக் கூட்டம் கலைந்தது என்று பத்திரிகையிலே வரக்கூடிய நிலையிருக்கும். எனவே, டேமேஜிங்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைப்பற்றி, திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறியதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு



வந்தார்கள். அவர் முடிப்பதற்கு முன்பாக, அவர் படித்துக்கொண்டு வருகிறபோதே இடையிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுந்தார்கள். அமைச்சர் அவர்கள் படித்து முடித்த பிறகு பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றோ, பாயின்ட் ஆஃப் செல்ஃப் எக்ஸ்பிளனேஷன் என்றோ விளக்கம் கூறலாம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் பேசுகின்ற உறுப்பினரை நிறுத்திவிட்டு எழுப்பப்பட்ட பிரச்சினை பாயின்ட் ஆப் ஆர்டர்தானா என்பதற்குத் தலைவர் ஆராய்ந்து முடிவு கூறுவார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்துக்கொண்டிருக்கும்போது நடுவிலேயே எழுந்தது சரியல்ல. முடித்த பிறகு எழுந்திருந்து சொல்லியிருக்கலாம். அத்தகைய மரபு கையாளப்பட்டு வருகிறது. அந்த முறையில் அவர்கள் முடித்த பிறகு எழுந்து கேட்டிருந்தால் முறையாக இருந்திருக்கும்.

திரு. கே. விநாயகம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் இப்போது நம்முடைய விதிமுறைகளைப்பற்றி நன்றாக, தெளிவாகச் சொன்னார்கள். இது அமைச்சர்களுக்கும் பொருந்துமா? நடைமுறையிலே என்ன நடக்கிறது? (குறுக்கீடு)

I am raising on a point of Order. Are the rules governing the proceedings of this House common to everybody including the Ministers or are there special set of rules governing the conduct of Ministers alone on the floor of the House so far as this House is concerned. Please let me have your ruling on this.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I submit these are general questions which can be gone into later.

THIRU K. VINAYAKAM: What business has the Minister to say this. He cannot interfere.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி நான் அல்லவா சொல்லவேண்டும். நீங்கள் இருவரும் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி?

THIRU K. VINAYAKAM: You are in for trouble. You should pull up the Hon. Minister when he is interrupting us like this. There cannot be two sets of rules, one for Minister and another for others.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அமைச்சர்களாக இருந்தாலும் இதே முறைதான் கையாளப்படும் என்று தயவுசெய்து திருவாய் மலர்ந்து அருளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஓர் உறுப்பினர் பேசும்போது மற்ற உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இந்த மன்றத்தில் அமைச்சர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும்கூட தனி உரிமை கொடுத்திருக்கிறோம். அமைச்சர்கள் பேசும்போதும், உறுப்பினர்கள்

பேசும்பொழுதும் தலைவரவர்கள் எழுந்து நின்று குறுக்கிடுகிறார்கள். அந்த வகையில் ஒரு கன்வென்ஷன்—முறையைப் பின்பற்றி வருகிறோம். அந்த முறையை எல்லா உறுப்பினர்களும் பின்பற்ற வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்கு விதிமுறைகள் இல்லை.

THIRU K. VINAYAKAM : We observe some conventions. Are they applicable only to Hon. Ministers?

MR. DEPUTY SPEAKER : Rules are the same for all, but some exemption is given to Ministers of the Cabinet.

THIRU K. VINAYAKAM : I believe the Chair is sympathetic to the governing party and unsympathetic to us.

MR. DEPUTY SPEAKER : It is a charge against the Chair. It is not a decent thing for the hon. Member to accuse the Chair.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : You should not frame a charge against the Chair.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நண்பர் இராமமூர்த்தி அவர்கள் மீது நான் எந்த விதமான பழியையும் சுமத்த முற்பட வில்லை. முன்னால் நடந்த நடவடிக்கையை வாசித்தேன். ஒன்றுகூட விடாமல் வாசித்தேன். கடைசியாக அன்றைக்கு முடித்தார்கள்

The error was due to the fact that I misunderstood membership for directorship.

சாதரண உறுப்பினருக்கும், செயற்குழு உறுப்பினருக்கும் வேற்றுமைத் தெரியாத காரணத்தால் அமைச்சர் பேசும்போது குறுக்கிட்டேன் என்று வருத்தம் தெரிவித்திருந்தார். இன்றைக்கும் நீங்கள் குறிப்பிட்டீர்களானால் பின்னர் இன்னொரு நாள் வருத்தம் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இன்றைக்கு எடுத்துக் கொண்ட காரியத்தை மட்டும் பேசி முடிப்பது சிறந்ததாக இருக்கும்.

நண்பர் இராமமூர்த்தி அவர்கள் "1968-லேயே இதைப்பற்றித் தீர்மானம் நிறைவேறிவிட்டது; மாநில அமைச்சர்களும், மத்திய அமைச்சரும் கூடி முடிவு எடுத்தது 1968 ஜூன் மாதம். இவ்வளவு காலதாமதம் ஏன்?" என்று கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்லும் வகையில் திரு. சுப்பராஜா அவர்கள் பேசிவிட்டார்கள். ஏன் இவ்வளவு காலதாமதம் என்று இவர்கள் கேட்டதற்கு அவர்கள் பேசியது பதிலாக அமைந்துவிட்ட காரணத்தால் நான் இதிலே அதிகமாகச் சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகுந்த காரசாரமாக, கோபாவேசமாகப் பேசினார். கோபத்திற்கு இடம் கொடுத்தால் ஆராய்ந்து அறிகிற திறன் குறைந்து விடுகிறது. நான் பொதுவாகச் சொல்லுகிறேன். கோபதாபத்திற்கு இடம் கொடுக்காமல்





இருந்தால் சிறு சிறு வேற்றுமைகள் நன்றாகத் தெரிந்திருக்கும். இந்த மசோதாவில் சொல்லியிருக்கும் 70 கோடி அல்லது 80 கோடி ரூபாய் பற்றிச் சொல்லும்போது அரசுக்கு வருகிறது என்று சொன்னார்கள். அரசுக்கு வரவில்லை என்று சொன்னவுடன் ரிஜிஸ்ட்ராருக்கு வருகிறது என்று சொன்னார்கள். ரிஜிஸ்ட்ராருக்கு வரவில்லை என்று சொன்னவுடன் வேறு யாருக்காவது வரும் என்று சொன்னார்கள். ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்து நீ என்னை ஏன் ஏசினாய் என்று கேட்க, ஆட்டுக்குட்டி நான் ஏசவில்லை என்று சொல்ல, அப்படியானால் உன் பாட்டனார் ஏசியிருப்பார் என்று ஓநாய் கூற, ஆட்டுக்குட்டி என் பாட்டனாரும் ஏசவில்லை என்று கூற, ஓநாய் உடனே அப்படியானால் உன் உறவினர் யாராவது ஏசியிருப்பார்கள் என்று சொன்னதுபோல், சொன்னதை மாற்றிக்கொண்டே போகத் தேவையில்லை. அது தேவையான குற்றச் சாட்டும் இல்லை, அவசிய மான குற்றச்சாட்டும் இல்லை.

அவர்கள் கொஞ்சம் ஓங்கி, உரக்க சொன்னார்கள். சபை மண்டபமே அதிரக்கூடிய அளவுக்கு இருந்தது. "இந்த அமைச்சர் ஒரு உதாரணத்தை எடுத்துச் சொல்லமுடியுமா, இதிலே டி.எம்.கே. இல்லாதவர்களை நியமித்திருப்பதுபற்றி" என்று உரத்துக் கூறினார். அப்போதே பதில் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அவர் களுடைய அந்த ஆவேசத்தைப் பார்த்து, இவ்வளவு ஊக்கமாகப் பேசுவதைப் பார்த்து, குறுக்கிட வேண்டாமென்ற காரணத்தால் சும்மா இருந்தேன். இப்போது அனுமதிப்பார்கள் என்று நினைக் கிறேன். அவர்களுடைய கட்சியைப்பற்றி மட்டும் சொல்லுகிறேன். காங்கிரஸ்(ஓ)வைப்பற்றிச் சொல்லவில்லை. நிலவள வங்கியில் வேறு கட்சியைச் சார்ந்த யாராவது இருக்கிறார்களா என்று கேட்டதற்குச் சொல்லுகிறேன். திரு. மெய்யப்பன், பி.ஏ., பி.எல்., எம். எல்.ஏ., கல்லல் நிலவள வங்கி பொறுப்பில் இருக்கிறார். எம்.எல்.ஏ. என்பதால் அவர் சட்ட மன்ற உறுப்பினர் என்று தெரிகிறது. அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சரியாகத் தெரியவில்லை. ஃபார்வர்டு ப்ளாக்கா? இல்லை? ஹாண்டே அவர்களுடைய கட்சி என்று தெரிகிறது. வேறு கட்சிக்காரர்கள் கேட்டாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். திரு. கருத்திருமன் அவர்கள் கேட்கவில்லை —கேட்டால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

நண்பர் மாரிமுத்து அவர்களும், சங்கரைய்யா அவர்களும் விதிகளைத் தனியாகக் கொண்டு வருகிறீர்களே, சட்டத்தில் கொண்டு வந்து விடக்கூடாதா என்று கேட்டார்கள். விதிகள் என்று சொல்லும்போது இன்ன காரியங்கள் என்று விளக்கிக்கொண்டு போக வேண்டும். இன்ன காரியங்களை மூலச்சட்டத்திற்குக் கொண்டு போக வேண்டுமென்பதற்குத்தான் முறைகள் இருக்கின்றன. அதன் படி செய்யப்பட்டிருக்கிறது. விதிகளில் வருகிறது என்ற காரணத் தால் அதைப்பற்றிப் பேசவோ, எடுத்துச் சொல்லவோ உரிமை இல்லாமல் போகாது. விதிகள் சட்டப் பேரவை முன் மீண்டும் வைக்கப்பட வேண்டும். அப்போது நீங்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. நண்பர் மாரிமுத்து அவர்கள்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 நவம்பர் 27

நன்றாக ஆதரித்துப் பேசினார்கள். நண்பர் சுப்பராஜா அவர்கள் பெரிய கேள்வியைத் தூக்கிப் போட்டுவிட்டு அமைதியாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நம் சட்டசபை விடுதியில் ஒரு கேளிக்கை நடந்தது. அப்போது ஒரு பெண் மாதிரி அவர்கள் வேடம் போட்டுக்கொண்டு வந்திருந்தார்கள். ஆகவே, அவர்கள் வீக்கர் செக்ஷனில் பெண்கள் இருப்பதைப்பற்றியெல்லாம் நன்றாகக் கேட்டார்கள். பெண்களைப் பற்றி இதில் சொல்லியிருப்பதற்குக் காரணம் நாங்கள் அல்ல. அது அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது. அரசியல் சட்டத்தில் 15-வது பிரிவில் இருக்கிறது. அரசியல் சட்டத்தில் பெண்களுக்கு தனிச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆக, இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகும் இன்னும் நீண்ட நேரம் பேசத் தேவை இல்லை. இதற்கு திருத்தங்கள் கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் அருள்கூர்ந்து அவற்றை வற்புறுத்தாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். இந்தக் கூட்டுறவுத் துறை விவாதத்தின் மீது நான் பேசிய பேச்சைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு இராமமூர்த்தி திருத்திக் கொள்ளலாம் என்ற முறையில் என் சட்டசபை காரக்டர் பற்றி அவர்களுக்கே உள்ள நகைச்சுவையோடு கூறினார்கள். Misunderstood என்பதற்கு அவர்கள் சரியான பொருள் சொன்னார்களா? இரண்டு நாட்களுக்குப் பிறகாவது திருத்திக் கொள்கிற அந்தப் பெருந்தன்மை எனக்கு இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு மட்டுமல்ல—அமைச்சர் அவர்கள், லீடர் ஆஃப் தி ஆப்போஸிஷன் என்பது விதியிலேயே கிடையாது என்று சொல்லி அமைச்சரவைக்கு ஒரு அவமானத்தை உண்டாக்கி இன்றையதினம் அந்த அமைச்சரவையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்த மசோதாவைப் போன்று பல மசோதாக்களைக் கொண்டுவந்து அந்தக் கட்சிக்கு பெருத்த அவமானத்தைத் தேடித் தருவார்கள். அந்த அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களை விலக்கி அந்த அபாயத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தபோது தாம் குறுக்கிட விரும்பவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாடகத்தில் நடிப்பது போன்று அப்படி இப்படி என்று பேசியபோது நானும் குறுக்கிட விரும்பவில்லை. நாடகத்தில் நடிக்கிறது மாதிரி அவர்கள் பேசியது சுவாரஸ்யமாக இருந்தது. நான் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை: "இன் எஃபெக்ட்" அரசாங்கத்திற்கு பணம் வருகிறது, "இன் எஃபெக்ட்" ரெஜிஸ்ட்ரார் அளவில் அதிகாரங்கள் இருக்கின்றன என்றால் அதை அவர்கள் சரியாகக் கேட்கவில்லை. நாடகத்தில் நடிப்பது மாதிரி அப்படி, இப்படி என்றெல்லாம் சொன்னார்கள். 'ஃப்ரீ என்டெர்டெயின்மென்ட்' கிடைத்தது. 'வி என்ஜாய்ட் இட்'.



1970 நவம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் பற்றிச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர்கள் என் பழைய நண்பர். நானும் அவரும் சேர்ந்து மேல் சபையில் பெஞ்ச்மேட்டாக இருந்திருக்கிறோம். Exceptions prove the rule. இப்போது புதிதாக ஒரு எக்ஸெப்ஷனைக் கண்டுபிடித்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970) be circulated for the purpose of eliciting opinion thereon."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றதாக அறிவிக்கப்பட்டது.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்:—

ஏற்போர்.

1. திரு. பி. ஜி. கருத்திருமன்.
2. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
3. திரு. கே. விநாயகம்.
4. டாக்டர் எச். வி. ஹாண்டே.
5. திரு. எஸ். இராமலிங்கம்.
6. திரு. க. இராமமூர்த்தி.
7. திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்.
8. திரு. எ. பட்டாபி நாயுடு.
9. திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான்.
10. திரு. ரா. ராமசந்திர துரை.
11. திரு. பி. எஸ். எல்லப்பன்.
12. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
13. திரு. கே. சகாதேவ கண்டர்.
14. திரு. கே. எஸ். கோதண்டராமையா.
15. திரு. மு. முத்தையா.
16. திரு. பா. தம்பி நாயக்கர்.
17. திரு. ஆர். சீனிவாசக நாய்க்கர்.
18. திரு. என். எஸ். வி. சித்தன்.
19. திரு. ஏ. பாலையா.
20. திரு. எம். வில்லியம்.
21. திரு. இல. பலராமன்.

22. திரு. த. சி. சுவாமிநாத உடையார்.
23. திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்.
24. திரு. ஜே. ஜேம்ஸ்.
25. திரு. வ. ஜார்ஜ்.
26. திரு. மு. கந்தசாமி படையாச்சி.
27. திரு. ஆர். கருப்பையா.
28. திரு. நா. சௌந்தரபாண்டியன்.
29. திரு. ப. மகாதேவன்.
30. திரு. டி. மார்டின்.
31. திரு. இ. எம். சுப்பிரமண்யம்.
32. திரு. க. முருகேசன்.
33. திரு. தோ. மு. நல்லசாமி.
34. திரு. சி. நஞ்சன்.

மறுப்போர்.

1. திரு. ஜி. ஆர். எட்மண்ட்.
2. திரு. எஸ். அக்னிராஜு.
3. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
4. திரு. சி. வி. எம். அண்ணாமலை.
5. திரு. வி. டி. அண்ணாமலை.
6. திரு. எஸ். ஆறுமுகம்.
7. திரு. ஆலடி அருணா.
8. திரு. கு. ஆண்டி என்ற குருசாமி.
9. திரு. சோ. கருணாநிதன்.
10. திரு. சி. கே. சின்னராஜி.
11. திரு. வி. சின்னசாமி.
12. திரு. ந. தருமலிங்கம்.
13. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
14. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.
15. திரு. து. ப. அழகமுத்து.
16. திரு. இராம. அரங்கண்ணல்.
17. திரு. மா. முத்துசாமி.
18. திரு. கா. வேழவேந்தன்.
19. திரு. எம். எஸ். மணி.
20. திரு. ஆர். என். அரங்கநாதன்.
21. திரு. ஆ. துரையரசன்.
22. திரு. வி. எஸ். கோவிந்தராசன்.



23. திரு. கே. கோவிந்தராசுலு.
24. திரு. ஆ. கோவிந்தராசன்.
25. திரு. கி. ஜயராமன்.
26. திரு. எம். கந்தசாமி.
27. திரு. எம். ஆர். கண்ணன்.
28. திரு. ஆ. கருப்பையா.
29. திரு. கே. எம். கதிரவன்.
30. திரு. கொளத்தூர் கோதண்டம்.
31. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி.
32. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி.
33. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி.
34. திரு. அ. கிருஷ்ணன்.
35. திரு. ம. சொ. கோவிந்தராசன்.
36. திரு. பெ. மலைச்சாமி.
37. திரு. வீ. மலைக்கண்ணன்.
38. திரு. பி. துரைராஜ்.
39. திரு. பி. எஸ். மணியன்.
40. திரு. மூ. மாரிமுத்து.
41. திரு. எம். மேத்தா.
42. திரு. ரா. ரா. முனுசாமி.
43. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
44. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
45. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்.
46. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா.
47. மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்.
48. திரு. கே. ஏ. மதியழகன்.
49. திரு. செ. கோ. விசுவநாதன்.
50. திரு. என். ராஜாங்கம்.
51. திரு. மா. இராசாங்கம்.
52. திரு. மு. ச. சிவசாமி.
53. திருமதி. கோ. பத்மாவதி.
54. திரு. பா. நாகலிங்கம்.
55. திருமதி சு. குப்பம்மாள்.
56. திருமதி வி. ப. பழனியம்மாள்.
57. திரு. செஞ்சி வெ. முனுசாமி.
58 திரு. ஈ. எம். நடராசன்.
59. திரு. எஸ். பி. பச்சையப்பன்.
60. திரு. சி. பழனி.

[1970 நவம்பர் 27

61. திரு. ஏ. சி. நரசிம்மன்.
62. திரு. எம். கோபால்.
63. திரு. எம். பன்னீர்ச்செல்வம்.
64. திரு. பெ. பெரியசாமி.
65. புலவர் பொ. பொன்னம்பலம்.
66. திரு. தி. பொன்னுமலை.
67. புலவர் க. முருகையன்.
68. திரு. டி. ஏ. ராஜவேலு.
69. திரு. க. ந. இராமச்சந்திரன்.
70. திரு. எஸ். ஆர். சென்னியப்பன்.
71. திரு. வ. க. இராமராசன்.
72. திரு. இ. ராமசாமி.
73. திரு. ஜே. எஸ். இராசு.
74. திரு. மு. இரத்தினசபாபதி.
75. திரு. பி. எஸ். சந்தானம்.
76. திரு. கோ. பூவராகன்.
77. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
78. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
79. திரு. ஆ. கு. சுப்பையா.
80. திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்.
81. திரு. கே. என். குமாரசாமி.
82. திரு. சோ. அழகர்சாமி.
83. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
84. திரு. எம். சுரேந்திரன்.
85. திரு. என். மருதாசலம்.
86. திரு. எஸ். ஜே. ராமசாமி.
87. திரு. ஏ. அ. சுப்பராஜா.
88. திரு. அ. ப. சண்முகசுந்தரம்.
89. திரு. ந. தீர்த்தகிரி.
90. திரு. வி. எஸ். இளஞ்செழியன்.
91. திரு. தொ. க. சிறைமீட்டான்.
92. திரு. ந. சோமசுந்தரம்.
93. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
94. திரு. அ. லெ. சுப்பிரமண்யம்.
95. திரு. எம். சுப்பிரமண்யக் கவுண்டர்.
96. திரு. டி. தங்கப்பன்.
97. திரு. தி. சி. திம்மராய கவுண்டர்.
98. திரு. எஸ். கே. வடிவேலு.



1970 நவம்பர் 27]

99. திரு. எஸ். அழகுத்தேவர்.
100. திரு. நா. வீராசாமி.
101. திரு. சி. வே. வேலப்பன்.

நடுநிலை வகிப்போர்.

1. திரு. என். சங்கரய்யா.
2. திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.
3. திருமதி கே. பி. ஜானகியம்மாள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தை ஏற்போர் 34 பேரும், திருத்தத்தை மறுப்போர் 101 பேரும், நடுநிலை வகிப்போர் 3 பேரும் இருக்கிறார்கள். ஆகவே, திருத்தம் தோல்வியுற்றது என்று அறிவிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. In the first reading stage Thiru A. A. Subbaraja has given an amendment that the Bill be circulated for the purpose of eliciting opinion thereon. He has not been given permission to withdraw the amendment. But he had voted with the Government now. His voting with the Government is not in consonance with his amendment before the House. We are in possession of that amendment. What exactly is the position? Please explain.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. ஒரு உறுப்பினர் திருத்தம் கொடுத்தால் அந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெறுவதற்கு, அவருடைய கருத்தை மாற்றிக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு எந்த நேரத்திலும் உரிமை இருக்கிறது.

திரு. கே. வினாயகம் : திரும்பப் பெறுவதற்கு பெர்மிஷன் வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் திருத்தத்தை திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் முன்மொழியவில்லை:

திரு. கே. வினாயகம் : முன்மொழிந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் மூவ் செய்யவில்லை. திரு. ஏ. அ. சுப்பராஜா கொடுத்த திருத்தமும், திரு. க. இராமமூர்த்தி கொடுத்த திருத்தமும் ஒரே மாதிரியான திருத்தம் என்ற காரணத்தால், ஒரே மாதிரியான திருத்தம் கொடுத்தால் ஒரு திருத்தம்தான் மூவ் செய்ய விதி உண்டு. அந்த விதியை ஒட்டி திரு. க. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை மட்டும் முன்மொழிய அனுமதி கொடுக்கப்பட்டது. (குறுக்கீடு) இதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் முன்மொழியவில்லை. ஆகவே, அதைத் திரும்பப் பெற வேண்டிய

அவசியம் இல்லை. அவர்கள் எந்த நேரத்திலும் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள உரிமை இருக்கிறது. ஏன் மாற்றிக்கொண்டாய் என்று கேட்பதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன், நீங்கள் உங்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறீர்களா?

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"That the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 27 of 1970) be referred to a Select Committee consisting of the following members of the Assembly (list to be furnished later)".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண்: 27/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## பிரிவு இரண்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I move the amendment standing in my name—

In clause 2, in the proposed new section 73-B, letter subsection (3) as clause (a) of that sub-section, and (i) in clause (a) as so lettered—

(a) for the words "The Board and the Committee shall consist of such number of members to be elected and nominated as may be prescribed", substitute the following namely :—

"The Board shall consist of the Presidents or Chairmen, as the case may be, of all the Central Co-operative Banks, such number of other members to be elected and nominated as may be prescribed and an *ex-officio* member to be specified in the rules and the Committee shall consist of such number of members to be elected and nominated as may be prescribed and an *ex-officio* member to be specified in the rules";



(b) in the third proviso, after the words "as the case may be", insert the words "on the date of the commencement of the Amendment Act", and for the words "or until the society which they represent ceases to function or otherwise ceases to have its right of representation", substitute the expression "or until the date up to which their term of office as members has been extended under clause (c) of sub-section (3) of section 27";

(c) after the third proviso, add the following proviso, namely :—

"Provided also that the ex-officio member shall not be entitled to vote at elections.";

(ii) after clause (a) as so lettered, insert the following clause, namely :—

"(b) The Government may, by order, depute one or more officers of the Government to attend any meetings of the Board and the Committee and to take part in the discussions thereat, but such officer or officers shall not have the right to vote".

THIRU A. A. SUBBARAJA : I move the amendment standing in my name—

"In the proposed new Chapter IX-A under clause 73-A (i) in line 37 after the words "Scheduled Tribes and women" add the following "Daily coolies and the persons who are earning below Rs. 300 per annum '.

The amendment was duly seconded.

THIRU K. RAMAMOORTHI : I move the amendment standing in my name—

(i) In the proposed new Chapter X-A in sub-section 1 of clause 84-B delete the word "Principal" after the words "a society the" and delete the word "mainly" after the words "by lift irriation".

(ii) In the proposed new Chapter X-A in sub-section 2 of clause 84-B delete the words "such extent of land as may be prescribed" and substitute the following :—

"five acres of cultivable land".

(iii) In the proposed new Chapter X-A in sub-section 1 (a) of clause 84-C delete the words in connection . . . . society" and substitute the words "for the purpose of providing lift irrigation".

(iv) In the proposed Chapter X-A in clause 84-C (2) delete the word "creditor" and add the words "auditor of the Society".

(v) In the proposed new Chapter X-A in sub-section 3 (a) of clause 84-C delete the word "creditor" and add the words "Board of Directors of the Society".

(vi) In the proposed new Chapter X-A in sub-section (1) (i) of clause 84-D add the following at the end" and wishes to make use of the Society for irrigating his land";

(vii) Delete item (iii) in sub-section (1) of clause 84-D.

The amendment was duly seconded.

திரு. சோ. அழகர்சாமி: என்னுடைய பெயரில் கொடுக்கப் பட்டிருக்கிற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்—

(i) In the proposed new Chapter IX-A in Clause 73 A (d), after the word "cultivating" insert the words "and a tenant cultivating".

(ii) In the proposed new Chapter IX-A, in Clause 73 A (f) after the words "Small Farmers" insert the words "cultivating tenants, Agricultural Labourers".

(iii) In the proposed new Chapter IX-A, in Clause 73-B (3), add the following in the end of the second proviso: "and those Members should be only from the weaker sections of the Society".

The amer.d... was duly seconded.

THIRU N. S. V. CHITHAN: I move the amendment standing in my name—

In the proposed new Chapter IX-A, under Clause 73-B (3), in the second proviso after the words "shall not exceed one-fifth of the total number", add the words "or three whichever is less".

The amendment was duly seconded.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற திருத்தத்தினுடைய கருத்து என்னவென்றால், "வீக்கர் செக்ஷன்' என்ற இடத்தில் தினசரி கூலி வேலை செய்பவர்களையும், வருடத்திற்கு ரூ. 300-க்குக் கீழே சம்பாதிக்கிறவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். "வீக்கர் செக்ஷன்" என்ற பகுதியிலே, அதனுடைய நோக்கத்தை அனுசரித்து, அதிலே பொதுவான முறையில் இல்லாமல், வீக்கர் செக்ஷன் என்று சொன்னார்கள், அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திலே. அந்த விளக்கத்தைப் பொறுத்தமட்டில் நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே வந்திருக்கக்கூடிய மசோதாவின் நோக்கம் பொருளாதார நிலையிலே மிகவும் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கும், மற்ற செக்ஷன்களுக்கும் இந்த சட்டத்தில் இடம் கொடுக்கவேண்டும் என்பதுதான். எந்த செக்ஷனைச் சார்ந்தவராக இருந்தாலும், பொருளாதார அடிப்படையில் வருமானத்தின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதை வரவேற்கவேண்டும் என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது, பெண்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நானும்





ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பெண்களில் பொருளாதாரத்தில் மிகுந்த மேம்பாடு உள்ளவர்கள் இருக்கவேண்டிய அவசியமில்லை. பொருளாதார அடிப்படையில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளவர்கள் கஷ்டப்படக்கூடியவர்கள், அவர்களுக்கு அனுபவம் இருக்கும், அந்த அனுபவம் உதவியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதை மனதில் கொண்டு அமைச்சர் அவர்கள் விதிகளைச் செய்யும்பொழுது கொஞ்சம் திருத்தி அமைத்து பொருளாதார அடிப்படையில் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: நான் கொடுத்த திருத்தம் என்னவென்றால், 'ஸ்மால் பார்மெர்ஸ்' என்று சொல்லும்பொழுது, சொந்தமாக விவசாயம் செய்யக்கூடியவர்கள், சிறு நிலக்காரர்கள் என்று கூறுகின்றதே தவிர, 'டெனன்ட் கல்டிவேடிங்' அதாவது குத்தகைக்கு சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளையும் சேர்த்துக் கொள்ளக்கூடிய முறையில் அதிலே இல்லை. ஆகவே, 'டெனன்ட் கல்டிவேடிங்' என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். அமைச்சர் அவர்கள் முதலில் பேசும்பொழுது கூறினார்கள், இம்மாதிரி சாதாரண ஆட்களை எல்லாம் நிர்வாகத்தில் பங்கு கொள்ளக்கூடிய முறையில் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று. அதுதான் நோக்கம் என்று சொன்னார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ள என்னுடைய இந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலே என்னுடைய திருத்தத்தை, அதாவது

'It shall not exceed one-fifth of the total number of three whichever is less'.

என்பதை முன்மொழிந்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பொதுவாக கூட்டுறவுச் சட்டத்தை அமுல் நடத்தும் பொழுது 1904-லிருந்து 1910 வரையில் நியமன முறை இல்லாமல் இருந்தது. அரசினர் பங்கும், கூட்டுறவு இயக்கத்தினுடைய எல்லையும் விரிந்து பரந்து செல்வதற்கு ஆரம்பித்ததற்குப் பின்னால், அரசாங்கத்திற்குப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்ற முறையில் நியமன உறுப்பினர்கள் முறை அமுலுக்கு வந்தது. 1955-ம் ஆண்டில் பாட்னாவில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு காங்கிரஸில் அரசாங்கத்திற்கும், கூட்டுறவு இயக்கத்திலுள்ளவர்களுக்கும் இடையே ஒரு "ஆனரபிள் செட்டில்மெண்டு" என்று சொல்லக்கூடிய முறையில் அரசாங்க சார்பிலே நியமன உறுப்பினர்கள் நிர்வாகக் குழுவில் இடம் பெறவேண்டும் என்ற உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1961-ம் ஆண்டுச் சட்டம் 21-ம் பக்கம் 27-வது பிரிவிலே, இரண்டாவது உப பிரிவிலே

'Where the Government or a financing bank have or has taken shares in, or given financial or other assistance to a registered

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 நவம்பர் 27

society, the Government or the financing bank, as the case may be, may nominate to the committee such number of persons not exceeding three or one-third of the total number of members of the committee whichever is less, as the Government may determine'.

என்று மிகத் தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். இதிலே நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களின் தொகை மூன்றில் ஒரு பங்கு என்று இருந்ததை, இப்பொழுது ஐந்தில் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்று உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், அதில் அல்லது மூன்று, எது குறைந்த எண்ணிக்கையோ அத்தனை நியமன உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று இருந்தது.

ஐந்தில் ஒரு பங்கு என்ற முறையை வகுத்து, அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் மத்திய கூட்டுறவு நில வள வங்கியில், நிர்வாகக் குழு காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்தது என்பதற்காக, தங்களுடைய கட்சிக்காரர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, தி.மு.க.வினர் ஆதிக்கத்திற்கு வர வேண்டும் என்பதற்காக மத்திய வங்கி நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மாவட்டத்திற்கு இரண்டு என்பதை நான்கு உறுப்பினர்களாக உயர்த்தி, ஐந்தில் ஒரு பங்கு என்று நியமன உறுப்பினர்களைப் போட்டு, 10 உறுப்பினர்களை நிர்வாகக் குழுவில் போட்டு, அதைக் கைப்பற்றி இருக்கிறார்கள். அரசாங்கம் இதற்குச் சொல்கிற காரணம் எதுவாக இருந்தாலும், முழுக்க முழுக்க ஆளும் கட்சிக்குச் சாதமாக, இந்தத் திருத்தம் அமைந்துவிடக்கூடாது என்ற காரணத்தினால்தான் ஐந்தில் ஒரு பங்கு அல்லது மூன்று, எந்த எண்ணிக்கை குறைவோ அதன்படி நியமன உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்ற என்னுடைய திருத்தம் இதில் இடம் பெற வேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். ஏனைய மாநிலங்களில் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாகத்தான் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அந்த முறையில் இதைத் திருத்த வேண்டும். இல்லாத வரையில் ஆளும் கட்சிக்குச் சாதகமாகத்தான் இது அமையும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, "ஸ்மால் பார்மெர்ஸ்" என்பதற்கு இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட கூட்டுறவு நில வள வங்கி திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 'ஸ்மால் பார்மெர்ஸ்' என்பதற்கு ஒரு ஹெக்டர் நிலம் வைத்திருப்பவர்கள் என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே சிறிய விவசாயிகள் யார் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. அரசினர், சிறிய விவசாயிகள் எந்த அளவுக்கு நிலம் வைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படையை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இடம் கொடுக்காமல் (ஸ்மால் பார்மெர்ஸ்) என்பதற்குத் திட்டமான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

எனவே, நியமன உறுப்பினர்கள் மூன்றுக்கு மேல் போகக் கூடாது என்ற என்னுடைய திருத்தத்தையும் வற்புறுத்தி, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நண்பர் சுப்பராஜா அவர்கள் பெண்களைப்பற்றிச் சொன்னார்கள். அரசியல் சட்டத்தில் 15-வது பிரிவில் பெண்களுக்கும் சமமான சலுகை உண்டு என்று இருக்கிற காரணத்தினால், இதிலே தவறு இல்லை. இதிலே சொல்லப்பட்டிருக்கிற வாசகத்தைப் பார்த்தால்

Weaker sections of the Society" includes small farmers Scheduled Castes, Scheduled Tribes and Women".

என்று இருக்கிறது. அப்படிப் போட்டதினாலேயே அவர்களை நியமித்துவிடவேண்டுமென்பது இல்லை. அவர்களில் வீக்கர் செக்‌ஷன் ஆஃப் சொஸைடி யாரோ அவர்களை நியமிக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. சுப்பராஜா அவர்களுக்கு வசதியுள்ள பெண்களை நியமிக்கக்கூடாது, அப்படி நியமிப்பதில் ஆட்சேபனை இருக்கும் என்றால், அதைக்கூட நிறைவேற்றுவதற்கு இதில் இடம் இருக்கிறது.

நண்பர் அழகர்சாமி அவர்கள் நிலம் இல்லாதவர்களுக்கும் இடம் அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே அவர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்மால் பார்மெர்ஸ்' என்பதற்கு விளக்கம்

'Small farmer means a person owning or cultivating'

என்று சொல்லப்படுகிறது. நிலச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். அல்லது, "ஆர்" என்று இருக்கிற காரணத்தினால் விவசாயம் செய்தாலே போதும்.

அடுத்தபடியாக, நியமனத்தைப்பற்றி திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். கோவாபரேடிவ் சொஸைடீஸ் ஆக்டில் இருக்கப்பட்டது மூன்றில் ஒரு பங்கு என்பது. மூன்றில் ஒரு பங்கு என்று இருந்ததை, ஐந்தில் ஒரு பங்கு என்று இப்பொழுது திருத்தியிருப்பதால், அதற்கு உச்ச வரம்பு தேவையில்லை. மூன்றில் ஒரு பங்கு என்று இருந்ததன் காரணத்தினால் மூன்று என்ற ஒரு உச்ச வரம்பு தேவையாக இருந்தது. அதை ஐந்தில் ஒரு பங்கு அரசு நாமினேஷன் செய்யலாம் என்று குறைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு உச்ச வரம்பு தேவையில்லாத நிலைதான் இருக்கிறது.

இன்னொன்று சொன்னார்கள், கட்சிக் கண்ணோட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் அதைப்பற்றி பேசியதால் நான் சொல்கிறேன். அவர்கள் பேசியது நிலவள வங்கி பற்றியது. நாம் இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது மத்திய வங்கி பற்றி. மதுரை மாவட்டத்தில் மொத்தம் 11 நிலவள வங்கிகள் இருக்கின்றன. அதில் எந்த நிலவள வங்கிகள் சரியான அளவுக்கு வசூல் செய்யவில்லையோ, வராக் கடன் அதிகமாக இருக்கிறதோ, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் இப்பொழுது இருக்கும்படியான நிலைமை என்னவென்றால் கொடைக்கானல் நிலவள வங்கி 9 பெர்சண்ட்........

[1970 நவம்பர் 27

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் மத்திய கூட்டுறவு நிலவள வங்கியைப்பற்றி சொன்னேன். அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தைப்பற்றிக் கூறுகிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதிலே குற்றச்சாட்டு சேர்ந்திருக்கிற காரணத்தினால், கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்கிறார்கள் என்று சொன்னதினால் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவராதலால் அதைப்பற்றி மட்டும் சொல்கிறேன். கொடைக்கானல் நிலவள வங்கியில் வராக் கடன், வசூல் செய்யாமல் இருப்பது 9 சதவிகிதம். நடவடிக்கை எடுக்கவில்லை. போடியில் 0; உசிலம்பட்டியில் 0; வரவேண்டிய பாக்கியையெல்லாம் வசூல் செய்துவிட்டார்கள். பழனியில் 0. மேலூரில் 1.5 சதவிகிதம். உத்தமபாளையத்தில் 0. சோளவந்தானில் 4 சதவிகிதம் நிலுவை. மதுரையில் 0. இதிலே நல்ல முறையிலே நடக்கும் நிலவள வங்கி எவை என்று பார்க்கும்போது, எவை எவை வசூல் பண்ணாமல் இருக்கின்றன என்று பார்க்கும்போது மற்றவைகளெல்லாம் குறைவாக இருக்கும்போது, திருமங்கலத்தில் மட்டும் வராக்கடன், நிலுவையாக இருப்பது 32 சதவிகிதம். (திரு. சித்தன் தன் இருக்கையில் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I am the President of the Bank and I want to clarify the position.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் குறிப்பிட்டது 30—6—1970-ல் உள்ள நிலைமை. மதுரை மாவட்டத்தில், கட்சிக் கண்ணோட்டத்தில் செயல்பட்டிருந்தால், நடவடிக்கை எடுத்திருக்கலாமே. சூபர்சீட் செய்திருக்கலாமே. அப்படிச் செய்யவில்லை. 32 சதவிகிதம் வராக் கடன் வசூல் செய்யாமல் இருக்கும்போது கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே. இது என்ன கட்சிக் கண்ணோட்டமா? இது ஜூன் மாதத்தில் இருந்த நிலை. இன்றைக்கு இருக்கும் நிலை, செப்டம்பர் முடிய உள்ள நிலை என்ன? இன்றைக்கு 85 சதவிகிதம் கொடுத்த கடன்கள் வசூல் ஆகவில்லை திருமங்கலத்தில். அப்படியென்றால், கட்சிக் கண்ணோட்டம் இல்லை என்பதை ருசுப்படுத்திச் சொல்லுகிறேன். மாண்புமிகு திரு. சித்தன் தலைமையில் இயங்கும் நிலவள வங்கியிலேயே இப்படியிருந்தும், எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே. அதைப்பற்றி பாராட்டிச் சொல்லக் கூடாதா? கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் செயல்படுகிறோம் என்பதைக் காட்டத்தான் இதைச் சொல்லுகிறேன். இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு, திருத்தங்களை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், சார். நான் தலைவராக இருக்கும் திருமங்கலத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் இந்த மன்றத்தில் கொடுத்திருக்கிற தகவல் சரியானது அல்ல என்பதை இன்னும் இரண்டு நாட்களில் நிரூபிக்கிறேன்.



1970 நவம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் கொடுத்த தகவல் சரியானது அல்ல என்பதற்கான ஆதாரம் இருந்தால் இப்பொழுதே சொல்லலாம். இரண்டு நாளில் கொடுக்கிறேன் என்று இப்பொழுது சொல்வது சரியல்ல. இன்னொரு நாள் அதைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்பொழுது சொல்லலாம். இன்றைக்கே எழுந்து பின்னால் கொடுக்கிறேன் என்று சொல்லத் தேவையில்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி, திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோருடைய திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

புதுப்பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் திருத்தம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : என்னுடைய பெயரில் உள்ள திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

" After clause 3, add the following new clause, namely :—

'4. *Repeal.*—The Tamil Nadu Co-operative Societies (Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance 4 of 1970), is hereby repealed ".'

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

புதிய பிரிவு 4, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 1 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சார், என் பெயரில் உள்ள திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 நவம்பர் 27

"For sub-clause (2) of clause 1, substitute the following sub-clause, namely :—

'(2) It shall be deemed to have come into force on the 10th November 1970.'"

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் மிக மிக முக்கியமானது. அமைச்சர் கொண்டுவந்துள்ள திருத்தம் முக்கியமானதோடு, தேவையற்றதும் கூட. காரணம் இந்த மசோதா 1—9—1970-ல் இந்த அவைமுன் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, அவை கலைக்கப்பட்டு இருந்தாலும், மசோதாவின் உயிர் இருந்தது. ஒரு வேளை சட்ட நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்களோ. அதற்குப் பிறகு இந்த மசோதா அவசரச் சட்டமாக கவர்னரால் அறிவிக்கப்பட்டது. இந்த மசோதா அவைமுன் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இங்கே கொண்டுவரப்பட்ட தேதி 16—11—1970. அதற்குப் பிறகு அவசரச் சட்டம் வந்துவிட்டால், அந்த சட்டம் நாடு முழுவதிலும் இயங்கலாம். அறிவிக்கப்பட்ட அன்றைய முதல் அமுலுக்கு வருகிறது. நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அவசரம் இருக்கிற காரியங்களுக்கு அவசரச் சட்டம் கொண்டுவரப்படும். அந்தத் தேதியிலிருந்து அது அமுலுக்கு வரும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரிவு சம்பந்தமாகப் பேசுங்கள்.

THIRU K. RAMAMOORTHI : Sir, the Hon. Minister has moved the amendment that it shall come into force on the 10th November 1970. அது தேவையில்லை என்று சொல்லுகிறேன். அதற்குக் காரணமும் சொல்லுகிறேன். ஆகவே, கவர்னருடைய அவசரச் சட்டம் அறிவிக்கப்பட்டபோது, அவசரம் இல்லாமலேயே, தேவையில்லாமலேயே, என்ன காரணத்திற்காகவோ, அமைச்சரவையைக் கூட கலந்தாலோசித்தார்களா என்று சந்தேகப்படும் அளவில், இது அவசரச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. இன்றையதினம் அந்த அவசரச் சட்டத்திற்குப் புறம்பாக, 10—11—1970 முதல் அமுலுக்கு வந்ததாக, அமைச்சர் அரசுத் துறையிலிருந்து திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக மசோதாக்களை என்றையதினம் நிறைவேற்றித் தருகிறோமோ, என்று முதல் நடைமுறைக்கு வர வேண்டுமென்று இந்தப் பேரவை விரும்புகிறதோ அன்று முதல்தான் நடைமுறைக்கு வருவது உண்டு. ஆனால்—ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்—முந்திய தேதியிலிருந்து அமலுக்கு வரவேண்டுமென்றால் அதற்கான அவசரம் இருந்திருக்க வேண்டும். அப்படி இருந்ததாகத் தெரியவில்லை. 10—11—1970-லிருந்து வரவேண்டுமென்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்களால் அவசர சட்டமாகப் பிறப்பித்த நேரத்தில் 16—10—1970-லிருந்து என்று போடப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது தங்களுக்கு



1970 நவம்பர் 27] [திரு. க. இராமமூர்த்தி]

இருக்கும் "ஸ்டீம் ரோலர் மெஜாரிட்டியைக்" கொண்டு, தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு எந்தத் தேதியையும், எந்தச் சட்டத்தையும் மாற்றிக்கொள்ளலாம் என்று நினைப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட மெஜாரிடி இருக்கின்ற காரணத்தினாலேதான் தங்களுடைய செய்கைகளுக்கு இந்த மாமன்றத்தை உடந்தையாக்குகின்ற அளவிலே, இந்தச் சட்டத்திற்கான திருத்தத் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள். அச்சடிப்பதிலே கோளாறு இருந்தால் அதை திருத்திக்கொள்ளலாம். 16—10—1970-லே ஏன் இது அவசர சட்டமாக கொண்டுவரப்பட்டது என்பதற்கான காரணங்களை என்ன காரணத்தாலோ அவர்கள் சொல்லவில்லை. வேண்டுமென்றே தவறான தகவல்களை இந்தப் பேரவைக்குத் தருகிறார்களோ, அல்லது உண்மையை மறைக்கிறார்களோ, என்னவென்றே புரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமையிலே இந்தச் சட்டத்திற்கு கவர்னர் அவர்கள் அவசரம் என்று எண்ணி ஆர்டினன்ஸ் அறிவித்ததற்குப் பிறகுதான், இந்த அவசரம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைமையை ஒப்புக் கொண்டால் இன்னொரு நிலைமை ஏற்படும். கவர்னர் அவர்களுக்கு எது அவசரம், எது அவசரம் இல்லையென்று தெரியாத நிலையில் அவருக்குத் தவறான தகவல்கள் தரப்படுகிறதோ என்ற தவறான எண்ணம் நாட்டு மக்களிடத்தில் ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைகளிலே, தேதி மாற்றுகிற நிலைமையைப்பற்றி விளக்கம் தராத முறையிலே, இதனுடைய அவசியத்தைத் தெரிவிக்காத முறையில், தேதியை மட்டும் திருத்த வேண்டுமென்று சொல்வது நல்லது அல்லவென்று கூறி, இதற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. THIRU SI. PA. ADITANAR : When an Act replaces an Ordinance, it is usual for the replacing Act to come into force on and from the date on which the Ordinance came into forec. The date of the coming into force of the Ordinance has been put in the amendment. That is the usual practice.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 27/1970) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 27/1970), திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்",

[பேரவைத் தலைவர்] [1970 நவம்பர் 27

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

@ 103. Notification issued with G.O. Ms. No. 2521, Agriculture, dated the 8th September 1970 in regard to certain amendments to the Tamil Nadu Collection of Statistics Rules, 1966, published at pages 1963-64 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th November 1966, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 14 (8) *of the Collection of Statistics Act*, 1953, *Central Act XXXII of* 1953.]

@ 104. Notification issued with Memo. No. 63831/C.T. II (1) 70-3, Revenue, dated the 16th June 1970 in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232-280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959.]

@ 105. Notification issued with G.O. Ms. No. 3159, Home, dated the 22nd December 1969, in regard to exemption from liability to tax in respect of the vehicle bearing registraion number MDR 5873 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Ramanathapuram. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931).]

@ 106. Notification issued with G.O. Ms. No. 1121, Home, dated the 22nd June 1970, in regard to collection of reduced rate of tax in respect of the lorry MDN 2762 belonging to the Lawrence School, Lovedale, Ootacamund. [*Laid on the Table of the House under section II* (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931.]



1970 நவம்பர் 27]

@ 107. Notification issued with G.O. Ms. No. 1379, Home, dated the 17th June 1970 in regard to exemption from payment of tax in respect of the vehicle bearing registration number MSM 8363 belonging to Dr. Earnest L. Mader, Agronomy Adviser, United States Agency for International Development Mission for India attached to the American Consulate, Madras. [Laid on the *Table of the House under section* 11 (2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931).]

### B. *Reports, notifications and other papers.*

'Nil'

## தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 நவம்பர் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.)

*Standard Motors (Private) Limited, Vandalur*

* Q—DR. H. V. HANDE :
THIRU MUNU ADHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Government has received the Varghese Committee report on the closure of the Standard Motors (Private) Ltd., Vandalur;

(b) If so, the details thereof and the action the State Government proposes to take on the same ; and

(c) the steps taken by the State Government for reopening this factory which is now under closure ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) Yes.

(b) The Varghese Committee report is under examination by the Government of India.

(c) The Government of India have been requested to take a final decision immediately under the Industries (Development and Regulations) Act, 1951. Their decision is awaited.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that the Varghese Report is under examination. May I know at least two or three important and salient points contained in that Report and how far the points contained in that Report would be useful for use to ake the factory re-open? What are the exact steps taken by this Government for reopening the factory and whether they had any discussion with the Management ? May I know whether it is a fact that except about 100 employees the rest of the employees are willing to come back and work in the factory ? Will the Hon. Minister be pleased to give us full details about the whole matter ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு சமயத்தில் ஒரு கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரே சமயத்தில் பல கேள்விகள் கேட்டார்கள். இது பற்றி முதலில் நம்முடைய

[1970 நவம்பர் 28

அரசாங்கம் நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்தியது. அவர்கள் சில கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கஷ்டங்களையெல்லாம் நிவர்த்திப்பதற்கு நம்முடைய அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தது. கடைசியாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதற்குக் காரணம்—அவர்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது—மத்திய சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஊதியக் குழுவின் சிபார்சுகளை (வேஜ் போர்டு ரெகமண்டேஷன்ஸ்) இந்த நிர்வாகத்தினர் அமல் நடத்த மாட்டேன் என்று சொன்னதாகவும், தொழிலாளர்கள் அதை முழுக்க முழுக்க அமல் நடத்த வேண்டும் என்று சொன்னதாகவும் அவர்க்ள் எங்களிடத்தில் சொன்னார்கள். நானே அதில் தலையிட்டு, "நீங்கள் இரண்டு பேரும் பேச்சு வார்த்தை நடத்துங்கள்; அதிலே உங்களுக்குள்ளே ஒரு முடிந்த முடிவு எடுக்க முடியாவிட்டால் அரசாங்கம் தலையிட்டு ஊதியக்குழுவின் சிபார்சுகளை எப்படி அமல் நடத்துவது என்பதைப் பற்றி உதவி செய்யும்" என்று சொன்னேன். அதைக் கேட்டுவிட்டுச் சென்றதில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மிகுந்த அக்கறையோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக நான் கேள்விப்பட்டேன். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அவர்களுடைய அறிக்கையில் தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாத காரணத்தால்—நிர்வாகம் சொன்னதைத் தொழிலாளர்கள் ஒத்துக் கொள்ளாத காரணத்தால்—ஊதியக் குழுவினர் சிபார்சு செய்திருந்ததைவிடக் குறைத்துக் கொடுப்பதாக நிர்வாகம் சொன்னதைத் தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாத காரணத்தால்—பேச்சு வார்த்தை முடிவடைந்துவிட்டதாகவும், அதன் காரணமாக உடனடியாக மூடுவிழா என்று அறிவித்ததாகவும் அந்த அறிக்கையில் இருக்கிறது.

இது போன்று எந்த நிர்வாகத்தினரும் செய்ததாகக் கண்டதில்லை; கேள்விப்பட்டதில்லை. தகராறு ஏற்பட்டால் தொழில் துறையினர் வருவார்கள்; பேச்சுவார்த்தை நடத்துவார்கள். ஆனால், இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், பேச்சுவார்த்தை முறிந்தவுடன், முன்பு எந்த அமைச்சருடைய உதவியைக் கேட்டார்களோ, எந்த அரசாங்கத்தினுடைய உதவியைக் கேட்டார்களோ அதையெல்லாம் கொஞ்சங்கூட மதிக்கவில்லை. அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது என்பதை நாங்கள் பத்திரிகையில்தான் பார்த்தோம். அவர்கள் இரண்டு காரணங்களை சொல்லியிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை முறிந்தது என்பது ஒரு காரணம். "இக்கனாமிக் ரீஸன்ஸ்" என்பது மற்றொரு காரணம். இவ்விரண்டு காரணங்களை இதிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்த வரையில்—இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில்—நிர்வாகத்தினரே உடனடியாகத் தொழிற்சாலையை மூடிவிட்டகாரணத்தால், தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடாது. தென் பகுதியிலே இந்த ஒரு கார் உற்பத்தித் தொழிற்சாலைதான் கிடைத்திருக்கிறது என்பதை உணர்ந்து, உடனடியாக நாம் அதற்கு முயற்சி எடுத்தோம். நம்முடைய மத்திய அரசு மிகுந்த ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு நம்முடைய வேண்டுகோளை ஏற்றுக கொண்டு, ஒரே வாரத்தில் ஐ.டி.ஆர். ஆக்டின்கீழ் ஒரு குழுவை



1970 நவம்பர் 28]

அமைத்துத் தந்தார்கள். இது சரித்திரம் காணாத நிகழ்ச்சி. மத்திய சர்க்கார் நமக்காகச் செய்து தந்தது. அந்தக் குழு அறிக்கை தந்திருக்கிறது. அது பெரிய அறிக்கை. முக்கியமாகச் சொல்ல வேண்டுமானால்—தொழிலாளர்களிடத்திலும் சில தவறுகள் இருப்பதை அவர்கள் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள்; நிர்வாகத்திலும் மிகுந்த திறமையற்ற தன்மை இருப்பதையும் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, பண வசதி அவர்களுக்கு ஏராளமாகத் தேவை என்றும் அவர்கள் வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கு இந்த அறிக்கை வந்து நம்முடைய கருத்தைக் கேட்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அறிக்கை இங்கே வரவில்லை. உடனடியாக இதற்கென்று ஒரு ஏற்பாடு செய்தோம். நம்முடைய அதிகாரியை அனுப்பி, அந்த அறிக்கையை உடனடியாக விமானத்தில் வாங்கிவந்து, மறு நாளே நம்முடைய பதிலைத் தயாரித்து, அதையும் ஒரு அதிகாரி எடுத்துச் சென்றிருக்கிறார். மத்திய அரசாங்கத்திடம் கொடுப்பதற்காக.

நம்முடைய யோசனைகளாக நாம் அதில் சொல்லியிருப்பவை என்னவென்றால், மத்திய அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்பது முதலாவது. மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்த வேண்டும் என்பது இரண்டாவது யோசனை. மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அனுமதி தந்து, இங்கேயுள்ள தனியார்த் துறையையும் இணைத்துக் கொண்டு இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்றும், இப்பொழுது 3,500 கார்கள் உற்பத்தி என்று இருப்பதை சுமார் பத்தாயிரம் கார்கள் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் நம்முடைய அரசாங்கம் மூன்றாவது யோசனையாகத் தெரிவித்திருக்கிறது. மத்திய அரசாங்க அமைச்சர்களும் இதிலே ஆர்வம் எடுத்து வருகிறார்கள். மிக விரைவாக இந்தச் சட்டத்தின்கீழ் ஆணை பிறப்பித்து, வாடுகின்ற தொழிலாளர்களுக்கு நாமெல்லாம் உதவி செய்யக்கூடிய அளவுக்கு இந்தத் தொழிற்சாலையைத் திறக்கக்கூடிய ஒரு பரிகாரத்தை மத்திய அரசாங்கம் காண்பார்கள் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது.

<u>திரு. முனு. ஆதி:</u> தலைவர் அவர்களே, தொழிற்சாலையை மூடுகின்றபோது தொழிலாள்ர்களுக்கு ஒரு நோட்டீஸ் தந்தார்கள். அதில், ஏறக்குறைய 35 லட்ச ரூபாய் நஷ்டம் ஆனதால் நாங்கள் தொழிற்சாலையை மூட வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு, பின்னர் தொழிலாளர்கள் வேலை செய்யாது, வேண்டுமென்றே வேலைக்குத் தடங்கல் செய்யும் முறையில் நடந்து கொள்வதால் நாங்கள் தொழிற்சாலையை மூடவேண்டி வந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். மூடப்படுவதற்கு முன்பே அரசாங்கத்திற்குச் சொல்லி அதை மூடவில்லை. கதவடைப்பு செய்ததை லீகலைஸ் செய்கின்ற அளவுக்கு நிர்வாகத்தினர் முயற்சி செய்கிறார்கள். தொழிலாளர்கள் 100 பேரை வேலையிலிருந்து நீக்கப் போகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் அத்தனை பேரும் வேலை செய்யாததால் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்கிறார்கள்.

[1970 நவம்பர் 28

குறிப்பிட்ட 100 பேரைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த 100 பேரை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்று நிர்வாகத்தினர் சொல்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிர்வாகத்திடமிருந்து தொழிற்சாலையை எடுத்து அரசே அதை ஏற்று நடத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த நிர்வாகத்தைப் பொறுத்த அளவுக்கு முன்னுக்குப்பின் முரணான காரணங்களைச் சொல்வதாகக் கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை, அந்த அறிக்கையிலும் அப்படித்தான் இருக்கிறது. இதை சில பேர் வாடிக்கையாக வைத்துக் கொண்டிருப்பது நம் நாட்டின் துர்ப்பாக்கியம்தான். ஆனால், நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எந்த முதலாளியாயினும் இந்த நாட்டிலே ஒரு தொழிற்சாலையை நினைத்தால் மூடலாம், நினைத்தால் திறக்கலாம், தொழிலாளர்களைப் பழிவாங்கலாம், வலது கம்யூனிஸ்ட், இடது கம்யூனிஸ்ட், நக்ஸல்பாரி, தி.மு.க. என்று ஏதாவதொரு வர்ணம் பூசித் தொழிலாளர்களைப் பழிவாங்கலாம் என்று முயற்சித்தால், இந்த அரசாங்கம் அவர்களைத் தண்டிப்பதில் தயக்கம் காட்டாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நஷ்டம் என்று அவர்கள் முதலில் சொல்லியிருக்கிறார்கள். பின்னர், "இக்கனமிக் கிரௌண்ட்ஸ்" என்ற காரணத்தைச் சொல்லி, அதனால் மூடுகின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிச் சொல்லப்பட்ட நிர்வாகத்தைப்பற்றி நாம் பரிசீலிப்பது நியாயம் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்ட காரணத்தால், ஐ.டி.ஆர். ஆக்டிலே பரிசீலித்தோம். மாண்புமிகு உறுப்பினர், ஏதோ 150 தொழிலாளர்களை விட்டுவிட்டால் தொழிற்சாலையைத் திறந்து விடுகிறோம் என்று நிர்வாகத்தினர் சொல்வதாகச் சொன்னார்கள். அதுகூட முன்னுக்குப்பின் முரணான வாதம். முதலில் "க்ளோஷர்" என்பதைச் சட்டப்படி செய்வதாகச் சொல்லுகிறார்கள். பிறகு, 150 பேர்களை—ஏதோ ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி—வெளியேற்றிவிட வேண்டும். வெளியேற்றினால் தொழிற்சாலையை நாங்கள் நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். இதுவும் முன்னுக்குப்பின் முரணாகத்தான் இருக்கிறது. எந்தத் தொழிலாளி சட்ட விரோதமாக நடந்தாலும்—அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதை இந்த அரசு தடுக்காது. ஆனால் அந்தக் கட்சியைச் சேர்ந்தவன், இந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று வர்ணம் கொடுத்து பழிவாங்க முயற்சிப்பதை அனுமதிக்காது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நான் அவர்களை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் கருதுவதில்லை. அவர்களுக்கு வேண்டியது தங்கள் பிழைப்பு—உழைப்புக்கேற்ற ஊதியம். அவர்களில் யாராவது தவறு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நிர்வாகத்தினருக்கு உரிமையிருக்கிறது. அந்த உரிமையை இந்த அரசாங்கம் எந்தக் காலத்திலும் மதிக்கத் தவறியதில்லை. யாரோ, சிலபேர் மீது தீய எண்ணம் கற்பித்து பழி வாங்க முயற்சிப்பது இந்த



1970 நவம்பர் 28]

நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்ற செயல் அல்ல என்பதைத்தான் இந்த அரசாங்கம் வலியுறுத்தும். யார் எதிர்த்தாலும் அதைப்பற்றி இந்த அரசாங்கம் பயப்படாது.

திரு. கே. விநாயகம்: அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் முதலாளிகள் சரியாக நடக்கவில்லை என்கிறார்கள். அமைச்சர் சொல்வதே உண்மை என்று விவாதத்திற்கு வைத்துக்கொள்வோம். இதைத் திறப்பதற்கு மத்திய அரசாங்கம் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது, மாநில அரசாங்கம் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது என்று சொல்லிவிட்டால் போதுமா? திறப்பதற்கு சட்டப்படி வழியிருக்கிறதா? அல்லது புதிய சட்டத்தைக் கொண்டுவந்தாவது அதை உடனடியாகத் திறப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சி செய்யுமா? பாதிக்கப்பட்ட தொழிலாளர்களைப் பார்த்து தொழிற்சாலை திறக்கப்படும். பொறுமையாக இருங்கள் என்று பட்டினி கிடப்பவர்களைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே இருப்பது சரிதானா? இதுபற்றி பைனல் டெசிஷன் எடுக்க என்ன செய்யப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது, மாநில அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது என்பதுபற்றி திரு. விநாயகம் குறிப்பிட்டதன் பொருளை புரிந்துகொள்ள முடிகிறது. நான் முன்பே இதுபற்றி இந்த அரசாங்கமும் சரி, மத்திய அரசாங்கமும் சரி எவ்வளவு துரிதமாக—தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைச் சொன்னேன். 22—5—1970-ல் தான் இந்தத் தொழிற்சாலை மூடு விழா பத்திரிகையில் வந்தது. 1—6—1970-ல் மத்திய அரசாங்கம் உத்தரபோட்டு ஐ.டி.ஆர். ஆக்டின்கீழ் குழு அமைத்தார்கள்—8 நாட்கள் என்றால், உண்மையில் மத்திய அரசாங்கம் இவ்வளவு விரைவில் செயல்பட்டதற்கு நாம் அவர்களுக்கு நன்றி செலுத்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆயினும் இது பற்றி அவர்களுக்கும் முறைப்படி நோட்டீஸ் கொடுத்து, அவர்களது பதிலையும் பெற்று முடிவாக நடவடிக்கை எடுப்பதுதான் சரியானதே தவிர, அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகச் சந்தர்ப்பம் ஏற்படும். இந்த அளவுக்கு அவசரப்பட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கனம் உறுப்பினர் சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன். இப்போதுள்ள சட்டத்தின்படி அதை எடுக்க வழியில்லை என்றால், ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தாவது எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டதற்குப் பாராட்டுகிறேன். அதுவும் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி உறுப்பினரே இந்த யோசனையைக் கூறியது வரவேற்கத்தக்கது. அதுபற்றியும் இந்த அரசாங்கம் யோசனை செய்து வருகிறது. அதற்கேற்ற சட்டத்தையும் தயாராக வைத்திருக்கிறோம். மத்திய அரசு மறுத்தால் மாநில அரசு இந்தச் சட்டத்தைப் பிறப்பித்து எடுத்துக்கொண்டு நடத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த அறிக்கை வெளிவந்த பிறகு மத்திய அரசு இதை எடுத்து நடத்தக் கூடாது என்பதற்கு நிர்வாகத்தினர் டெல்லியில் பலவிதமான முயற்சிகளைச் செய்து

வருகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, உடனடியாக இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி, பட்டினி கிடக்கக்கூடிய தொழிலாளர்களை மேலும் பட்டினி கிடக்கச் செய்யாமல், அந்தத் தொழிற்சாலையைத் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் முதலாவதாகக் குறிப்பிட்டது உண்மை, அத்தகைய முயற்சிகள் டெல்லியில் எடுக்கப்பட்டு வருவதை இந்த அரசு அறியும், ஆயினும் இப்போதுள்ள முற்போக்கு மத்திய அரசு அந்தப் பிற்போக்குவாதிகளை ஆதரிக்காது என்று நம்புகிறேன்.

DR. H. V. HANDE : Will the Government examine a concrete proposal viz. to invite the representatives of labour, leaders of few political parties and if necessary management also, within the short time of one week to see whether a decision could be taken straightaway in an objective manner in the interest of workers ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதுமே இதுபோன்ற பிரச்சினையில் அரசியலை நுழைக்க அரசு விரும்பாது. ஆகவே கனம் அங்கத்தினர் யோசனையை ஏற்றுக்கொள்வதற்கில்லை. நிர்வாகமும், தொழிலாளர்களும் எந்தவிதமான சுமுகமான முடிவுக்கு வந்தாலும் இந்த அரசு குறுக்கே நிற்காது.

திரு. முனு. ஆதி : குறிப்பிட்ட சில தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளாமலும் சேர்த்துக்கொள்கிறவர்களுக்கும் கூட பழைய சர்வீசை எல்லாம் தள்ளிவிட்டு புதியதாக நியமனம் செய்வது போன்ற ஏற்பாட்டை மேற்கொள்ளவும் நிர்வாகத்தினர் முடிவு செய்தால், அதை இந்த அரசு சட்டப்படி எதிர்ப்பதோடு அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வறுமையில் வாடி வதங்குகிற சில தொழிலாளர்களைப் பயன்படுத்தி இந்த மாதிரியான செயலை மேற்கொள்ள நிர்வாகம் முயற்சி செய்கிறது. இது மனிதத் தன்மைக்கே புறம்பானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### *Southern Structurals*

* 2Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the date on which the Southern Structurals was closed ;

(*b*) the reasons therefor ; and

(*c*) the action taken by this Government to re-open the same ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) 19th December 1969.

(*b*) Financial difficulties and inefficiency of the management.

(*c*) The Government have addressed the Government of India to take action under the Industrial (Development and Regulation) Act.





DR. H. V. HANDE : May I know whether it is a fact that Government through their financial corporations had promised to pay some amount for this management ? Later on after the management has mismanaged the whole thing, did this Government come forward to buy a share at a lower rate, at 40 per cent of the share value? Is that not a fact? Is it also a fact that Government had already made concerete proposals to the management to buy it and If so what are the steps taken by this Government to see that factory is re-opened?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களே தன்னுடைய கேள்வியில் இந்த அரசாங்கம் என்ன என்ன முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்கமும் இந்த விஷயத்தில் ஒத்துழைத்தது. தொழிற்சாலை மூடப்பட்டவுடனேயே கல்கத்தாவில் உள்ள ஒருகம்பெனியின்—கார்டன் ரீச் வொர்க்ஷாப்—உதவியுடன் சதர்ன் ஸ்டரக்சுரல் கம்பெனியை திறக்க என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. இதன் நிர்வாகம் வெளிநாட்டில் இருக்கிறது. அதிகாரம் ஒரு ராஜாவிடத்தில் இருக்கிறது. 10 ரூபாய் ஷேர் 50 பைசாதான் மதிப்பு. இந்த நிலையில் தொழிலாளர்களுடைய நலனைக் கோரி எல்லா ஷேர்களையும் முதலில் 2½ ரூபாய் என்று வாங்கலாம் என்று முயற்சித்தோம். பிறகு 4 ரூபாய் கூட கொடுக்கலாம் என்று யோசித்தோம். கணக்குகளைப் பார்க்கும்போது கடன்கள் சொத்துக்களைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கிறது என்று தெரிந்தது. இன்னும் சட்டவிரோதமான செயல்களில் எல்லாம் அது ஈடுபட்டு வந்திருக்கிறது என்பது எல்லாம் மத்திய அரசாங்கத்தின் ஸி.பி.ஐ. புலன் விசாரணையில் தெரிய வந்தது.

இப்போதும் கூட ஒரு முயற்சி. தொழிற்சாலையை அரசாங்கமே ஏற்று நடத்துவது ரூ. 30 லட்சம் முதலீடு செய்து தொழிற்சாலையை லாப நஷ்டம் அரசாங்கக் கணக்கில் இடைக்காலமாக ஜாயின்ட் மேனேஜ்மெண்டாக நடத்தலாம் என்று யோசனை. மேலவையில் உள்ள ஒரு தொழிலதிபர் கூட இது மிகுந்த நல்ல யோசனை, நிர்வாகத்தினர் இதை ஏற்றுக்கொள்ள தாம் முயற்சிப்பதாகச் சொன்னார். அந்தப் பேச்சு வார்த்தை நடக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு 11 மாதங்கள் ஆகின்றன. 10 தொழிலாளர்கள் பட்டினியால் இறந்துவிட்டார்கள். 2 பேர்கள் பைத்தியம் பிடித்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இனியும் காலம் கடத்தாமல் பரிதாபகரமான நிலையில் இருக்கக்கூடிய தொழிலாளர்களின் நலனை உத்தேசித்து அந்த தொழிற்சாலையை திறக்க இந்த அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத் திறக்க இந்த அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்து வருகிறது என்றுதான் சொன்னேன். இதை இன்னொரு துருவத்திற்கு இழுத்துச் சென்று தொழிலாளர்கள் பட்டினியால் சாகிறார்கள் என்று பிரச்சாரம் செய்வது சரியல்ல, பட்டினியால் யாரும் இறந்ததாகச் செய்தி என்னிடம் இல்லை. விசாரிக்கிறேன். ஆனால் அரசாங்கத்தின் பஸ்ஸை கொளுத்தினார்கள் என்ற தகவல் வந்தது. அதைப்போய் பார்த்தேன்.

DR. H. V. HANDE: May I know the number of employees who are now out of job on account of this closure and whether Government have taken any steps to rehabilitate at least a few of them and give them preferential treatment in certain other employment which Government is likely to have in their employment agencies? Will the Government categorically tell us the probable date on which this factory is likely to be opened?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1,200 தொழிலாளர்கள் என்று என்னிடத்தில் தகவல் இருக்கின்றது. இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். வேலை அற்ற தொழிலாளர்களுக்கு மூடிக்கிடக்கின்ற காலத்திலே என்ன செய்ய வேண்டும் என்பது புதிய பிரச்சினை. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கத்தின் தொழிலாளர் துறையும் இதுபற்றி பரிசீலித்து வருகின்றன. எப்போது திறக்கப்படும் என்று கேட்டார்கள். எவ்வளவு விரைவாக திறக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக திறக்க முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 21, 22, 41, 42 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*High School building at Bhavani*

*43 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the construction of the Government High School buildings at Bhavani, at Coimbatore District has been aken up by the Public Works Department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பவானி அரசினர் (கழக) பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இப்போது இருக்கும் கட்டிடத்தின் மேல், முதல் மாடி கட்டிடம் கட்ட வரைப்படமும், மதிப்பீடும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து அரசாங்கத்தின் ஒப்பளிப்புக்கு வந்துள்ளன. இது பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எவ்வளவு தொகைக்கு மதிப்பீடு வந்திருக்கிறது, கட்டிடம், எப்போது கட்டி முடிக்கப்படும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே ஏற்கனவே பெண்கள் அரசினர் பள்ளியில் ஒரு அறிவியல் ஆய்வுக் கூடக் கட்டிடம் ஏற்கனவே எழுப்பப்பட்டுவிட்டது. மேல் மாடிக் கட்டிடத்திற்கு ரூ. 34,700 செலவில் வரைப்படமும், மதிப்பீடும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. நிதித் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒப்புதல் வந்ததற்குப் பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

*Municipal High Schools in Madurai*

*44. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether it is a fact that most of the Municipal High Schools in Madurai are without basic amenities like black boards, wooden partitions between class rooms or clocks?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கே. விநாயகம்: முனிசிபல் நிர்வாகத்திலே, போதுமான அளவுக்கு பணவசதி இல்லாத காரணத்தாலே, அதற்குத் தரப்பட வேண்டிய சலுகைகள் தரப்படவில்லை. ஒவ்வொரு வகுப்பறைக்கும் நடுவில் ஒரு "பார்ட்டிஷன்" இருக்க வேண்டுமென்றும், பள்ளிகள் பெண்களும், பிள்ளைகளும் ஒதுங்குவதற்கு வேறு இடம் இருக்க வேண்டுமென்றும் என்றெல்லாம் நிர்வாகக் குறிப்பிலே, கமிஷனர் ரிப்போர்ட்டிலே, வந்து இருப்பது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் இப்போது பதில் சொன்னார்களே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை என்று, இது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது அப்படி இல்லையா என்று கேட்டார்கள். இல்லை என்று சொன்னேன். இப்போது 12 பள்ளிகள் இருக்கின்றன. அதற்கு சாமான்கள் வாங்க, பல்வேறு மேஜை நாற்காலி வாங்குவதற்கு 1,30,000 ரூபாய்க்கு ஆர்டர் வழங்கப்பட்டிருக்கிறது. 76,463 ரூபாய்களுக்கு சாமான்கள் வந்து சேர்ந்துவிட்டன. பிற சாமான்களும் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

*Reclamation of ayacut lands under Parambikulam Aliyar Project*

* 45 Q.—DR. H. V. HANDE: Will the Hon the Minister for Agriculture and Harijan Welfare be plased to state—

(a) whether there is any scheme for reclamation of ayacut lands under the Parambikulam-Aliyar project;

(b) if so, the area of the lands proposed to the reclaimed;

(c) whether any loans would be distributed to the farmers in the area; and

(d) the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டப் பகுதியின்கீழ் நிலங்களைப் பண்படுத்துதலுக்கான திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) ஆம்.

(எ) அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பராதீனம் செய்வதற்கும் அடைமானம் வைப்பதற்கும், தங்களுக்கு உரிமையுள்ள தங்களது நிலங்களை அடைமானம் வைப்பதன் மீது ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 600 வரை அவர்களுக்குக் கடன் வழங்கப்படும். பணியை நிறைவேற்றுவதிலுள்ள முன்னேற்றத்தையொட்டி இக்கடன்களைத் தவணைகளில் வழங்கப்படும். இதற்கென செலுத்தத் தக்க வட்டி வீதம் 7¾ சதவீதமாகும். முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் சேரும் வட்டித் தொகை இரண்டாவது ஆண்டின் இறுதியில் வசூலிக்கப்படும். கடன் தொகை மூன்றாவது ஆண்டிலிருந்து 8 சம தவணைகளில்

[1970 நவம்பர் 28

திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். எனவே, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான மொத்தக் கால அளவு 10 ஆண்டு களாகும்.

DR. H. V. HANDE: For a long time a controversy has been going on in the Coimbatore area with regard to whether the Parambikulam-Aliyar water should be given for cultivation of dry crops or wet crops. Now that we are having extra water for the area, will the Government tell us whether they will allow the cultivation of wet crops in the area? What is the amount allotted for the scheme and what is the numbrr of acres to be benefited?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தப் பகுதியிலே இருக்கிற நிலப்பரப்பை பண்படுத்துவதற்காக இந்தத் திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பண்படுத்துவதற்காக 10 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவு செய்து பண்படுத்த வேண்டு மென்ற திட்டம் ஒன்று 1965-ம் ஆண்டிலேயே இருந்தது. படிப்படி யாக, கொஞ்சம் கொஞ்சமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. முதல் தவணையாக 75 ஆயிரம் ஏக்கருக்கு 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இரண்டாவது தவணையாக 85,100 ஏக்கருக்கு 4 கோடியே 52 லட்சம் செலவு செய்யப்பட்டது. மூன்றாவது தவணையாக 32,000 ஏக்கருக்கு 190 லட்சம் அதாவது ஒரு கோடியே 90 லட்சம் செலவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: May I know whether the Government is prepared to consider the request of the ayacutdars to declare the whole area as a wet crop area and give them facilities in the context of the new scheme?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இந்தத் திட்டம் "டிரை பிராஜக்ட்" ஆக ஏற்படுகிற திட்டம். இப்போது கொடுக்கின்ற தண்ணீர் ஏற்கனவே நாம் கொடுப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு ஆயக்கட்டுகளுக்கு கிடைப்பதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது.

It is too early to consider the question of allowing wet crops.

*Programmes of Social Welfare Board*

*46 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the State Social Welfare Board has programmed to organise a wing to clean Madras City?—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். நகர துப்புரவுப் பணியில் மகளிர் நலத்துறை அவ்வப்போது ஈடு பட்டு வருகிறது.

திரு. கே. சகாதேவ கண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தைத் துப்புரவு செய்வதற்கு இனிமேல் இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா, என்று அறிய விரும்புகிறேன்.



1970 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சமூக நலத் துறை வாரியம் மூலமாகவும் நமது மாநில அரசாங்கத்தின் மகளிர் அமைப்புகள் மூலமாகவும் துப்புரவுப் பணி இதிலே விருப்பம் உள்ள மக்களை வைத்து செய்யப்பட்டு வருகிறது. இன்னும் கல்லூரி மாணவர்களை வைத்து துப்புரவு எப்படிச் செய்ய வேண்டுமென்று, சில பகுதிகளுக்குச் சென்று பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கல்லூரி மாணவிகளை வைத்தும் இது செய்யப்படுகிறது.

*Tamil Nadu Development Supplement*

*21 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Tamil Nadu Development Supplement was released in the press about 30th June 1969;

(b) the details thereof; and

(c) the cost of the publication?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

சோழவந்தானில் உள்ள மனமகிழ் மன்றங்கள்.

* 22 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சோழவந்தானில் Recreation Club -கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மனமகிழ் மன்றங்கள் மூன்று உள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: சோழவந்தானில் மாத்திரம் அல்ல. தமிழ் நாட்டில் இருக்கிற ரெக்ரியேஷன் கிளப்புகள் என்கிற பெய ரால் நடத்தப்படுகிற இடங்களில் எல்லாம் சூதாட்டமும் சட்டத் திற்குப்புறம்பான செயல்களும் அதிகமாக நடைபெறுகிற காரணத் தால் அவைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அனுமதியை ரத்து செய் வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவற்றிற்குக் கொடுத்திருக்கிற அனுமதி மத்திய அரசாங்க 1860 சங்கங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் 20-வது பிரிவின் கீழ் இவைகள் நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யப் படுகின்றன. சூதாட்ட இடங்களாக இருப்பதைப் போலீசார் கண் காணித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். லைசென்சை ரத்து செய்ய முடியாத நிலையிலே அதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இதை ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: இந்த ரிக்ரியேஷன் கிளப்புகள் என்று சொல்லப்படுகிற அடிப்படையிலே, சென்னையிலே கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதிகமான அளவு லைசென்ஸ் கொடுக்கப்பட்

டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இத்தனை மணிக்கு மேல் விளக்குகள் எரியக் கூடாது என்று இருந்தும் இரவெல்லாம் விளக்குப் போட்டுக்கொண்டு திறந்து வைத்துக் கொண்டு அங்கே சூதாட்டம் நடைபெறுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும். எப்போதும் கட்சி தான் ஆட்சிக்கு வரும். அவர்கள் எந்தக் கட்சியைப்பற்றிக் கூறு கிறார்கள் என்று புரியவில்லை. மனமகிழ்மன்றத்தின் சூதாட்டம் மட்டுமல்ல, அரசியல் சூதாட்டங்களும் தடுத்து நிறுத்தப்பட்டிருக் கின்றன.

Thiru T. MARTIN: When the clubs make application for registration they will have to state in the applications the objects for which the club is being started. May I know from the Hon. Chief Minister whether the Registrar looks into the objects and then grant registration or whether the clubs themselves have asked for permission for gambling and permission for gambling was given?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகளை நிபந்தனை இல்லாமல் பதிவு செய்யவேண்டுமென்று 1860 சங்கங்களுடைய பதிவுச் சட்டத் தின் 20-வது பிரிவு கூறுகிறது. ஆகவே, நிபந்தனை எதுவும் விதிக்க முடியாது. பதிவை ரத்து செய்வதற்கு வழி இல்லை. மாநில அரசு திருத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறது என்று முன்னாலே நான் குறிப்பிட்டேன்.

*Complaint against Raffle Agent in Tirunelveli*

*41 Q.—Thiru T. MARTIN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any petition, dated 7th February 1970 has been received from the public by the Chief Minister, Director of Tamil Nadu Raffle Schems and District Collector of Tirunelveli regarding the violations of Tamil Nadu Raffle Scheme by the authorised agent, Tamil Nadu Raffle Scheme Licence No. 35, Tirunelveli Junction; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். தேதிபோடாத மனு ஒன்று 12—2—1970 அன்று தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு இயக்குநரால் பெறப்பட்டது.

(இ) பரிசுச் சீட்டு ஏஜண்ட் மீது நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என்று காரணம் காட்டுமாறு அறிவிப்பொன்று அவருக்கு அனுப்பப்பட்டது. அவரது விளக்கம் பரிசீலனை செய்யப்பட்டபின், கூட்டுமுறை மூலம் விற்கப்பட்ட பரிசுச் சீட்டுகள் குறித்து மிகையாக வசூலிக்கப்பட்ட தொகைக்கு என ரூ. 84 (ரூபாய் எண்பத்தி நான்கு மட்டும்) அவர் செலுத்தவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது. அந்த ஏஜண்ட் 24—6—1970 நாளிட்ட 1733 செலுத்துச் சீட்டு எண்ணில் அத்தொகையை அரசுக் கருவூலத்தில் செலுத்தினார்.



பரிசுச் சீட்டுக்களின் வரவு விற்பனை இவை குறித்த சரியான கணக்கு களை இனி எழுதிவராவிட்டால், எதிர்காலத்தில் ஏஜெண்டின் உரிமம் ரத்தாகுமென்று அவருக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

Thiru T. MARTIN: Sir, the Supreme Court has held in the R.M.D.C. Case which arose from the Mysore State that running of lotteries is not a trade or business but a gambling. That being so, even though there is no constitutional sanctity for the running of this gambling under the Constitution, may I know from the Hon. Chief Minister whether he would at least as a first step stop the entry of lottery tickets from other States to this State, exploiting the common people of our State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இந்தப் பரிசுச் சீட்டு முறை இந்தியா முழுவதும் அநேகமாகப் பின்பற்றப்பட்டு வருகிற முறையாகும். எல்லா மாநிலங்களாலும் இந்த முறை பின் பற்றப்பட்டு வருகிறது. மராட்டிய மாநிலத்திலே மற்ற மாநிலங் களின் பரிசுச் சீட்டுகள் உள்ளே வரக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோல மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகளை நாமும் தடுக்கலாமா அல்லது மராட்டிய மாநிலப் பரிசுச் சீட்டுகளை மட்டும் தடுக்கலாமா—ஏனென்றால் மராட்டியத்திலே நம்முடைய மாநில பரிசுச் சீட்டுகள் தடுக்கப்பட்டு இருக்கின்றன—என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாநிலப் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களுக்குப் போகாமல் இருப்பதற்கு யோசனை எதுவும் இப் பொழுது இல்லை.

திரு. கே. விநாயகம்: இப்பொழுது பரிசுச் சீட்டுகள் விற்கிற விஷயத்திலே நம்முடைய மாநிலத்திலே எந்த இடத்திலே அதிகமாக விற்கிறது? நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களிலே அதிகமாக விற்கப்படுகின்றனவா? ஆகவே, என்ன ப்ரப்போர்ஷனிலே இந்த இரண்டு கேட்டகரிகளிலும் விற்கப்படு கின்றன என்பதற்குக் கணக்கு இருக்கிறதா? சமீபத்திலே 10 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டதாலே நம்முடைய மக்கள் எல்லாம் அதை வாங்கி ஆயிரக்கணக்கானவர்கள் ஏமாந்து போய் விடக்கூடிய நிலைமையிலே பஞ்சாபிக்காரருக்கு அந்தப் பணம் போய் சேர்ந்துவிட்டதாலே இங்கே எல்லாரும் ஏமாந்து போனார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள திரு. விநாயகம் அவர்கள் இப்படிப் பேசுவது நல்லதல்ல.

*Rifle clubs in Madras*

*42 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of rifle club are so be started in Madras City; and

(b) if so, the details thereof?

[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சென்னை மாநகரில் ஏற்கனவே உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி நிலையங்களைத் தவிர வேறு எதுவும் தொடங்க உத்தேசம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Mylapore Hindu Permanent Fund*

* 47 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon the Minister for Labour and Backward Classes be pleased to state—

(a) whether there were any labour troubles in the Mylapore Hindu Permanent Fund during the early months of 1970;

(b) if so, he details thereof; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) தொழிலாளர்களால் எந்தத் தொழில் தகராறும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு எந்தப் புகார்களும் அல்லது முறையீடு களும் செய்து கொள்ளப்படவில்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

திருமங்கலம் பேரூராட்சி.

* 48 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் பேரூராட்சி, நகராட்சியாக உயர்த்தப் படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் ஓர் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இருந்தது. ஆனல் மத்திய அரசின் மக்கட் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் தற்போது மக்கட் தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக ஓர் தடை விதித்து இருப்பதால், மாநில அரசு உடன் செயலாற்ற வேண்டி இராததும், அவசியமற்றது மான செயற்குறிப்புகளை, தள்ளிவைக்குமாறு மாநில அரசை கேட்டுக் கொண்டமையால், திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பை, மாநில அரசு, தற்போதைக்கு தள்ளி வைத்துள்ளது. மத்திய அரசின் மக்கட்தொகை கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட தடையை நீக்கின உடன் ஆவன செய்யப்படும்.

ரேஷன் கடை வியாபாரிகள்.

* 49 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

ரேஷன் விதிகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்ற காரணத் துக்காக 1969-ம் ஆண்டு, ஜனவரி முதல் இதுவரை எத்தனை ரேஷன் வியாபாரிகளது லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளது?



1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டபூர்வ பங்கீட்டு முறை அமலிலிருந்த சென்னை மாநகரில் 8 பங்கீட்டு வியாபாரிகளின் அனு மதியும், கோயம்புத்தூரில் 2 பங்கீட்டு வியாபாரிகளின் அனுமதியும் இதுவரை ரத்து செய்யப்பட்டன. சட்டபூர்வமற்ற பங்கீட்டு முறை அமலிலிருந்த ஏனைய மாவட்டங்களில் 56 பங்கீட்டுக் கடைக்காரர் களின் அனுமதி ரத்து செய்யப்பட்டன.

*Supply of steel for Furniture Manufacturers*

• 50 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether he has received a Memorandum, dated 2nd April 1970 from the Steel Furniture Manufactures Association, Coimbatore; and

(b) if so, the details thereof and the steps taken to ensure reghlar and proper sdpply of their steel requirements?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) அவையின்முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப் பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: Sir, may I know whether it is a fact that many of these manufacturers are finding it difficult to go along with their work as they are not getting adequate quota and a number of people are likely to be thrown out of employment and if so, whether this Government have of late taken any drastic steps to see that they get the quota. Also, whether they will examine their grievances and do the needful in the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக தொழிற்சாலை களுக்குக் கிடைக்கவேண்டிய மூலப்பொருட்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை நம்முடைய அரசு உணர்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசாங்க மும் அடிக்கடி இதைபற்றிப் பரிசீலனை செய்து தேவையான மூலப் பொருட்களை, தேவையானல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு சிறு தொழிலதிபர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முன் வந்துள்ளது. அண்மையிலே 10 கோடி ரூபாய் அளவிற்கு நாடு முழுவதிலும் உள்ள சிறு தொழிலதிபர்கள் இரும்பு சம்பந்தப்பட்ட மூலப்பொருட்களை இறக்குமதி செய்துகொள்வதற்கு அனுமதி அளித் திருப்பதை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, as far as the relief under the category of sales tax is concerned, our Government have denied their request. But what about the Central Excise Duty and which is the Government that are considering it, whether, it is our Government or that Government? If that Government is considering it—It is relevant—what is the exact reaction from the Central Government?

---

@ பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

A. 133—8

[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எக்ஸைஸ் வரியைப் பொறுத்த அளவுக்கு மத்திய சர்க்கார்தான் பரிசீலிக்கவேண்டும் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்து இருக்குமென்று நம்புகிறேன். அரசாங்கம் போடுகின்ற வரியை விட்டுக்கொடுப்பதிலே கொஞ்சம் தாமதமாகத்தான் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, நாற்காலி மேஜைகளின் விலை இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக இரண்டு மடங்கு ஆகி 17 ரூபாயாக இருந்த நாற்காலியின் விலை 30 ரூபாய்க்கு ஏறி விட்டது. விலை ஏறியிருப்பதைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி மூலப் பொருட்கள் கிடைப்பதைப்பற்றியது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தனியார் துறையிலே இருக்கிறவர்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை இருந்தாலும் மின்சார வாரியம் போன்ற போர்டுகளிலே—அதிலும் தமிழ் நாட்டிலே 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்று முனைந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே—தேவையான இரும்புக் கம்பிகள் கிடைக்காத காரணத்தினாலே, மத்திய அரசாங்கத்திடம் சொல்லியும் கிடைக்காத காரணத்தினாலே, அந்த வாரியத்திற்கு அதிகமான இரும்புவேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றுத் தர நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு.செ. மாதவன் : அயர்ன் அன்ட் ஸ்டீல் மெட்டீரியல்ஸ் பொறுத்த அளவிற்கு மத்திய அரசாங்கம் போதுமான அளவுக்கு மூலப்பொருள்கள் தரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல மின்சார வாரியம் எடுக்கின்ற முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படாத அளவுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய சொந்தத் தொழிற்சாலைகளுக்குக் கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு இன்னும் பள்ளிகள், கல்லூரிகள் கட்டுவதற்குக்கூட அரசாங்கத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காத சூழ்நிலையை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவந்திருக்கிறோம். முதலமைச்சர் அளவிலேகூட நம்முடைய பிரதம மந்திரி அவர்களிடம் அடிக்கடி இதைப்பற்றிக் கூறப்பட்டு வருகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, மூலப்பொருட்கள் கிடைக்காத சமயத்திலே 1967–68, 1968–69-லே சிறு கைத்தொழிற்சாலைகளை நிறுவ மனுச் செய்தவர்களில் சென்னையிலே ஒரு பகுதிப் பேர்களுக்கு கோட்டாக் கொடுக்கப்பட்டும், ஒரு சிலருக்குக் கொடுக்காமல் இருந்ததும், அவர்கள் வழக்குமன்றத்திற்குக் கொண்டுபோய் நீதிபதி அவர்களும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தும், இதுவரையில் கொடுக்காமல் இருப்பதும் சர்க்காருக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் மனுச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், இதுசம்பந்தமாக தவறுதல் நடப்பதாக அரசாங்கம் கருதி நம்முடைய அதிகாரிகளை அனுப்பிப்



1970 நவம்பர் 28]

பரிசீலனை செய்தும் மறுபடியும் கூடக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்களுக்குச் சீக்கிரம் கிடைக்கச் செய்வதற்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் கூறியது என்ன விவரம் என்றே எனக்குத் தெரியவில்லை. ஒரு பகுதி, 2 பகுதி என்று சொன்னார்கள். எந்தப் பகுதி என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், (approved fabricators) என்று ஏற்கெனவே தொழில் செய்து கொண்டிருந்தவர்களை 'approved fabricators' என்ற கேடகிரி என்று கொடுத்து, அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. தொழில் நடத்தத்கூடிய வசதியோடு புதிதாக வருபவர்களுக்கு (Non-approved fabricators) என்று வைக்கப்படுகிறது. அவர்களும் கேட்கிறார்கள். தேவையான அளவிற்கு நமக்கு மூலப்பொருள்கள் கிடைத்தால் இந்தப் பிரச்சினையே எழாது என்று நான் கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மூலப்பொருள்கள் அனுமதிக்கப்படும் கோட்டாதாரர்கள், அந்தப் பொருள்களைக்கொண்டு உற்பத்திகளைச் செய்யாமல் அப்படியே விற்று விடுகிறார்கள் என்ற புகார்கள் வருகின்றனவே, அப்படி வரும் புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? இம்மாதிரி முறைகளினால் நமக்குக் கிடைக்க வேண்டிய கோட்டா சரிவரக் கிடைக்காமல் போகிறதே என்று சிலரிடமிருந்து புகார்கள் வருகின்றனவே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட புகார்கள் சில பேர்களால் சொல்லப்பட்டது. ஆனால் அதற்காக தப்பு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் விரும்புவார்கள் என்று நான் கருதமாட்டேன். காரணம், அப்படிச் சிலர் தொழில் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். ஒரே கட்டடத்திற்கு முன்னால் பல பெயர்கள் தொங்குகின்றன. அந்தக் கட்டடத்திலே ஒன்றுமே இல்லை. ஆனால் ஏராளமான பேர் கோட்டா வாங்கும் முறையில் வந்ததாக இந்த அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததன் காரணமாக விஜிலன்ஸுக்கு அனுப்பி அரசாங்கம் பரிசீலித்தது, பிறகு நடவடிக்கை எடுத்தது. கனம் அங்கத்தினர் அவர்கள், அவர்கள் பக்கம் போய்விடக்கூடாது.

## கோவில்பட்டி வட்டத்தில் புவி இயல் ஆய்வு.

* 51 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில புவி இயல் ஆராய்ச்சிப் பிரிவினர் திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டித் தாலுக்காவில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், எப்போது, எந்தெந்த இடங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டது?

(உ) எங்கெங்கு என்னென்ன கனிப் பொருள்கள் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது?

[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) முதல் & (உ) வரை: ஒரு அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நமது மாநில புவி இயல் ஆராய்ச்சிப் பிரிவினர் கோவில்பட்டி பகுதியில் ஆராய்ச்சி செய்து, டோலமைம் மக்னீசிய சத்துள்ள சுண்ணாம்புக்கல், சிப்சம் ஆகிய கனிப்பொருட்கள் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கோவில்பட்டி வட்டாரத்தில் உள்ள நிலைமை அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது மிகவும் வறட்சியான பாகம். இந்த ஆண்டு இவ்வளவு மழை பெய்தும் அங்கு நான் வரும்வரையில் மழையில்லாமல் பெரும் பஞ்சம் ஏற்படும் அபாயமிருக்கிறது. அங்கு எந்தவிதமான வேறு உபதொழிலும் கிடையாது. எனவே, இந்த மூலப்பொருட்களை வைத்து அந்த வட்டாரத்தில் ஏதாவது தொழில்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா? அந்த வட்டார மக்களின் நெடுநாளைய ஆசைகளை நிறைவேற்றும் வகையில், அதை வறட்சிப் பகுதி என்று அரசு கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னென்ன பொருள்கள் என்ற விவரம் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொருள்களைக் கொண்டு தொழில் செய்ய முன்வந்தால் அரசாங்கம் அதற்கு உதவி செய்யலாம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உறுப்பினர் என்ற முறையிலே, அந்தப் பகுதியை ஒன்றாக இணைத்து கூட்டுறவுத்துறையிலே வந்தாலும் அதற்கும் அரசாங்கம் உதவி செய்து, அந்தப் பகுதியில் தொழிற்சாலை வருவதற்கு இந்த அரசாங்கம் தன்னாலியன்ற உதவிகளைச் செய்யும்.

THIRU K. S. KOTHANDARAMAIAH: There are a number of areas in our State which have not been surveyed by the geological unit and it appears that they take up places here and there and carry out the survey in a haphazard manner. In Dharmapuri district they surveyed one or two areas and left out other places. Instead of that, if they take one district as a whole and conduct the survey fully it will be very useful. May I know whether they have a planned scheme to conduct the survey of the entire State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநில முழுவதும் ஒருங்கிணைந்த சர்வே செய்ய வேண்டுமென்ற கருத்தை வரவேற்கிறேன். ஆனால் செய்யப்படவில்லை என்று சொன்னது தவறாகும். ஐ.நா. சபையின் உதவியோடு ரஷ்ய நிபுணரின் தலைமையிலே ஜியலாஜிகல் சர்வே டிபார்ட்மெண்ட் இருக்கிறது. நம்முடைய இலாக்கா அல்ல, வேறொரு இலாக்கா இருக்கிறது. அவர்கள் ஏரியல் சர்வே செய்கிறார்கள் தமிழ்நாடு முழுவதும். எந்தப் பகுதியிலே உடனடியாகப் பொருள்கள் கிடைக்கும் என்ற குறிப்புகள் தென்படுகின்றனவோ அந்தப் பகுதிகளிலே உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்காக மற்றப் பகுதிகளை விட்டு விட்டார்கள் என்பது அல்ல. எல்லாப் பகுதியிலும் அந்த முயற்சி நடைபெறுகிறது.

---

* இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 நவம்பர் 28].

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கூட்டுறவு முறையிலே தொழில் ஆரம்பித்தால் உதவி செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படிக் கூட்டுறவுத்துறையிலே ஆரம்பிக்கப் பல கஷ்டங்கள் ஏற்படலாம். மூலதனம் சேர்ப்பதில் கஷ்டங்கள் ஏற்படலாம். எனவே, அரசாங்கமே முதலில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத்துறையிலே நம்பிக்கை அற்ற நிலையில் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசக்கூடாது. அவர்கள் முயற்சி எடுத்தால் அதை வெற்றிகரமாக முடிக்க முடியும். அவர்களே முன்வந்து தலைமை வகிக்கலாம். பணத்தைப்பற்றிய கவலை வேண்டாம். கூட்டுறவுத்துறையில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அளிப்பதற்கு அதற்காக என்று தனி வங்கி நம்முடைய மாநிலத்திலேதான் இந்திய நாட்டிலேயே இருக்கிறது.

*Cauvery river Modernisation Scheme.*

* 52 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:
THIRU S. DURAISWAMY:

Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the World Bank has come forward to finance the Cauvery River Modernisation Scheme of the Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்திலுள்ள பழைய டெல்டாப் பகுதியை ரூ. 49 கோடி செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கையொன்று தயாரித்து மத்திய நீர் மின்சக்தி ஆணைக்குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கிக்குழு இத் திட்டம் குறித்து மதிப்பீடு செய்தது. இத் திட்டத்தின் பயன் தேவைகளை அக்குழு ஏற்றுக்கொண்டது. இத் திட்டம் இப்போது மத்திய அரசிடம் முடிவுறு நிலையிலுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மத்திய அரசிடம் முடிவுறாத நிலையிலிருப்பதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அனுமதி பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அப்பொழுது அந்த வேலையைத் துவங்கலாம்.

*Lands acquired near railway station at Sundaraperumalkoil*

* 53 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether wet paddy field nearly half an acre was acquired by the side of railway gate near the railway station at Sundaraperumalkoil (Thanjavur district) to straighten the road between Kumbakonam and Thanjavur;

(b) if so, when this land was acquired and at what cost; and

(c) the reasons for keeping the land unused?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) 0.73 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை ரூ. 1,748-க்கு 1950-ம் ஆண்டில் உரிமை பெறப்பட்டது.

(உ) இருப்புப்பாதையின் குறுக்கே செல்லும் பாதையை
மாற்றியமைப்பதற்காக ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறு
வதில் ஏற்பட்ட காலதாமதத்திஞல் சாலையை நேர்படுத்துதல், இருப்
புப்பாதையின் குறுக்கே செல்லக்கூடிய பாதையை மாற்றியமைத்தல்
முதலான வேலைகளை முன்னதாக செயல் படுத்த முடியவில்லை.
ரயில்வே நிர்வாகத்தாரின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை எடுத்துக்
கொள்ளப்படுகிறது.

## திருநெல்வேலி–நாகர்கோயில்–திருவனந்தபுரம் ரயில்பாதை.

* 54 விஞ.—திரு. சு. துரைசாமி:
திரு. வை. சுவாமிநாதன்: } மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலிக்கும், திருவனந்தபுரத்திற்கும் நாகர்
கோயில் வழியாக ரயில் பாதை அமைக்குமாறு மத்திய அரசுக்கு
பரிவுரை செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்,

(இ) நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரி வரை இணைப்
பாதையுடன், திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரத்திற்கு நாகர்
கோயில் வழியாக புதிய இருப்புப்பாதை போடுவதற்காக போக்கு
வரத்து ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்திய அரசின்
ரயில்வே வாரியம் ஆணையிட்டுள்ளது. இந்தப் போக்குவரத்து
ஆய்வுப் பணி நிறைவேறிவருகின்றது.

திரு. சு. துரைசாமி. பேரவைத் தலைவரவர்களே, இந்தப்
பரிசீலனை முடிந்து நடப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது மத்திய
சர்க்காரின் தயவில் இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR: May I know the priority
which this scheme has been assigned by the State Government?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In November last
the General Manager of the Southern Railway stated that the
Railway Board had ordered to carry out a traffic survey of new



line between Trivandrum and Tirunelveli (via) Nagercoil and that the traffic survey has commenced. He requested that instructions to officers concerned be issued for co-operation.

Priority has not been assigned. But we have been pressing the Centre to take it up early.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, கடந்த 20
ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்களிடையே இந்தக் கோரிக்கை
இருந்து வருகிறதே, இதை விரைவில் நிறைவேற்றுவதாக, பாராளு
மன்ற இடைத்தேர்தல் நடந்தபொழுது ஒரு வேட்பாளர் கூறிஞரே,
அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாரே.
வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர் இதற்கு முயற்சி எடுத்
திருக்கிருரா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்தத் திருநெல்வேலி
நாகர்கோவில் வழியாக இரயில் பாதை வேண்டுமென்று நம்முடைய
அரசாங்கம் பலமுறை மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறது.
ஆனல் சுமார் ஒரு மாதகாலத்திற்கு முன் மத்திய இரயில்வே
அமைச்சரவர்கள் பேசும்பொழுது 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில்
தென்னுடுகளில் எந்தப் பகுதியிலும் புதிதாக இரயில் பாதைகள்
இல்லை என்ற முறையில் பேசியிருக்கிருர்கள். எனவே, நான்காவது
ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ்நாட்டிலே அல்லது மற்ற சதர்ன்
ஸ்டேட்ஸிலே புதிய பாதை அமைக்கப் போவதாகத் தெரியவில்லை.
ஆகவே, இதைச் சுட்டிக்காட்டி, அவசியம் நான்காவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் இதை அமல் படுத்த வேண்டுமென்று நம்முடைய
அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஏற்கெனவே
கைவிடப்பட்ட திட்டம்தான். மறுபடியும் பரிசீலனை செய்து எடுத்
துக்கொள்ளப்பட்டு ரயில்வே வாரியத்தால் சர்வேக்கு எடுத்துக்
கொள்ளப்படுகிறது. நம்முடைய அரசும் அவ்வப்பொழுது வற்
புறுத்தி வருகிறது.

## கடலூர் துறைமுகம்.

* 55 விஞ.—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு
கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக
மேம்படுத்துவது தொடர்பாக மாநில அரசு மத்திய அரசுடன்
தொடர்பு கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) கடலூர்
ஒரு இடைநிலைத் துறைமுகம் (Intermidiary Port) இதை மேம்
பாடு செய்ய வேலை நடந்து வருகிறது. அதனை ஆழ்கடல் துறை
முகமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

DR. H. V. HANDE: May I know whether it is a fact that some time ago the Hon. Chief Minister met the Chairman of the Mineral and Metals Trading Corporation and appealed to him to increase the Corporation's shipment of iron ore through the Cuddalore Port and whether, by way of respect to the request of the Chief Minister, has he taken any steps to divert from Madras Port and export a larger quantity through the Cuddaolre Port?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற மெடல் கார்ப்பரேஷன் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். பிறகு என்னையும் சந்தித்தார்கள். கடலூர் துறைமுகத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டிய வேலையைத் துரிதப்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்படி துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு கோடி முப்பத்தி ஒன்பது லட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: கிழக்குக் கடற்கரை ஓரப் பகுதியில் நமக்குப் பெரிய துறைமுகங்கள் இல்லாத காரணத்தால் மறு பரிசீலனை செய்து கடலூர் துறைமுகத்தை மேஜர் போர்ட் ஆக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்பதை நான் நன்றாக உணருகிறேன். அந்தத் துறைமுகத்தில் கப்பல் வெகுதூரத்தில் நின்று அதிலே ஏறிச் சென்று மிகவும் சங்கடப்பட்டவன் நான். ஆனால் இப்போது அதை இடைநிலைத் து-றைமுகமாக ஆக்குகின்ற வேலை முடிந்த பிறகு மேஜர் போர்ட் ஆக ஆக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM: In the conversion from an intermediate port to a major port, what exactly are the impediments which the Government is beset with?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் கடலூர் துறைமுகம் இருக்கின்ற பகுதி புயல் வீசும் பகுதி. தூத்துக்குடி துறைமுகம் இருக்கும் பகுதியானது புயல் பாதுகாப்பு உள்ள பகுதி. ஆகவே, தூத்துக்குடி துறைமுகத்தை மேஜர் போர்ட் ஆக அமைக்கும் வேலை நடந்து வருகிறது: வருகின்ற மார்ச் 31-ம் தேதி அளவில் சிறு சிறு கப்பல்கள் இங்கிருந்து புறப்படும் வகையில் துறைமுகத்தை அமைக்கும் வேலை வேகமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. கடலூர் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் இண்டர்மீடியரி போர்ட் ஆக ஆக்குவது என்று 1 கோடி 39 லட்சம் ரூபாயில் முடிந்து விடுகிறது. ஆனால் மேஜர் துறைமுகமாக ஆக்க வேண்டுமென்றால் அதைப் போல் எவ்வளவோ மடங்கு அதிகமாகச் செலவாகும், என்பது மட்டுமல்ல, புயல் வீசுகின்ற (சைக்ளோன் ஏரியா) பகுதியில் இருப்பதால் ஆழ்ந்து சிந்தித்துச் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது.





DR. H. V. HANDE: While we are very happy to learn from the Hon. Minister that a crore and odd rupees has already been earmarked, may I know the amount spent so far and has the Government any intention to introduce a short passenger service from Madras to Cuddalore so that it will divert to some exhent the heavy road taffic, as it will be economical and will also provide a turist attraction?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இதிலே, இன்னும் எவ்வளவு செலவு செய்ய வேண்டிய பாக்கி இருக்கிறது என்ற விவரம் கைவசம் இல்லை. அப்படிச் செலவு செய்ய வேண்டியிருக்குமானால் தமிழக அரசு சிறு துறைமுக நிதியிலிருந்து முன்பணமாகச் செலவு செய்து மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வகை இருக்கிறது.

பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய விதமாக துறைமுகத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். தற்போது சரக்குகளை ஏற்றிச் செல்லும் வகையில்தான் வேலை நடந்து வருகிறது. பிரயாணிகள் நாகப்பட்டினத்தில் ஏறி கிழக்கு நாடுகளுக்குச் செல்லுகிறார்கள்

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: கடலூர் துறைமுகப் பகுதி சைக்ளோன் ஏரியா, தூத்துக்குடி பாதுகாப்பான பகுதி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியும் புயல் வீசும் பகுதியாக இருப்பதால் அதை அபிவிருத்தி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சைக்ளோன் ஏரியாவாக இருக்கக்கூடிய பகுதியை ஆழ்கடல் துறைமுகமாகக் கட்ட அதிகச் செலவாகிறது. ஆகவே, நாகப்பட்டினம் துறைமுகம் கூட இடைநிலைத் துறைமுகமாகத்தான் இருக்கிறது. இப்போது கடலூர் துறைமுகத்திற்குச் செலவாகிற ஒரு கோடி 39 லட்சம் ரூபாய் செலவு பூராவும் மத்திய அரசிடமிருந்து பெற்றுச் செலவு செய்வதாகும் நாகப்பட்டினம் துறைமுகத்தையும் பெரிதாக்க செயற்குறிப்பை தூத்துக்குடி துறைமுக வேலை முடிந்த பிறகு எடுத்துக் கொண்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம்.

## பாசனத் திட்டங்களுக்கு நிதி

* 56 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 370 கோடி ரூபாய் செலவில் சிறு பாசனத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு முழுவதும் மூன்று லட்சம் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் தோண்டி பம்ப்

[1970 நவம்பர் 28

செட்டுகள் அமைப்பதற்காக 368.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு 1969-ம் வருஷம் ஜூலை மாதம் மத்திய விவசாய கூட்டுறவு அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர் இந்தத் திட்டத்தின் முதற்பகுதியாக விவசாய மறு நிதி வங்கி (ஏ.ஆர்.சி.)-யின் உதவி பெற்று 67,000 கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் வெட்டி பம்ப் செட் அமைக்க 59.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1969-ம் வருஷம் அக்டோபர் மாதம் திட்டம் தயாரித்து இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : 368 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு தயாரித்திருக்கும் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாகிலும் பணம் கொடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடம் நிதி கோரத் தேவையில்லை. இதற்கு வேண்டிய அவ்வளவு பணத்தையும் ரிசர்வ் வங்கியின் கிளையாக இருக்கும் மறு நிதி வங்கி கொடுத்து விடுகிறது. மத்திய அரசிடம் உதவி கோர வில்லை, கோரத் தேவையும் இல்லை.

திரு. இல. பலராமன் : இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு கிணறுகள் தோண்டுவது என்று அரசாங்கம் திட்டம் தயாரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீலகிரி மாவட்டம் தவிர என்று சொன்னேன். மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்தக் கிணறுகள் வெட்டுவதற்கும் பம்ப் செட்டுகள் வைப்பதற்கும் திட்டம் இருக்கிறது. எந்த மாவட்டத்திற்கு எவ்வளவு என்று சொல்ல வேண்டுமென்றால் ஒரு சில மாவட்டங்களைப் பொறுத்துத்தான் நினைவில் இருக்கிறது. இந்த மாவட்டத்திற்கு எவ்வளவு கிணறுகள் என்று குறிப்பாக, தனியாகக் கேட்டால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. கருணைநாதன் : அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம் நீங்கலாக என்று சொன்னார்கள். நீலகிரி மாவட்டத்திலும் காய்கறிகள் பயிரிட கிணறுகள் வெட்ட வேண்டியிருக்கிறது. அதையும் அரசு ஏற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீலகிரி மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதியில் அவ்வாறு தண்ணீர் வசதி இருக்கிறது என்ற குறிப்புகளைக் கொடுப்பார்களானால் அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நிபுணர்கள் சொன்னது, மலையில் கிணறுகள் வெட்டினால் நிரந்தரமாகத் தண்ணீர் இருக்காது என்பதாகும். ஆகவேதான் நீலகிரி மாவட்டம் தவிர என்ற முறையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. நஞ்சன் : நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஏராளமாக நெல் விவசாயம் செய்கிறார்கள். அங்கு ஒருபோக சாகுபடி செய்து வருகிறார்கள். அங்கு இந்தத் திட்டத்தின்கீழ் கிணறு வெட்டிக் கொடுத்தால் இருபோக சாகுபடி செய்ய முடியும்.



1970 நவம்பர் 28]

கூடலூரார் பகுதியில் மாயூர், மசனகுடி பகுதிகளில் கிணறு வெட்டிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு ஆதாயமாக இருக்கும். ஆகவே, அந்தப் பகுதியில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மலைப் பகுதியில் தண்ணீர் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் அடிநீர் அதிகமாக இருக்கும் என்று கூற முடியாது. கேரளாவை எடுத்துக் கொண்டால் 120 அங். மழை பெய்கிறது. ஆனால் கிணறுகளின் மூலமாகத் தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் 120 அடி, 140 அடி, 200 அடி வரை சென்றால்தான் தண்ணீர் கிடைக்கும். நீலகிரி மாவட்டத்தில் கூடலூரார் பகுதியில் நீர் இருக்கும் என்று நிபுணர்கள் சொன்னால் இந்தத் திட்டத்தின்கீழ் நிச்சயமாக அந்தப் பகுதியிலும் கிணறுகள் தோண்டிக் கொடுக்க முடியும்.

## ஓசூர் பகுதியில் மாட்டுப் பண்ணை

* 57 வினு.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா— 10-00 a.m.

தர்மபுரி மாவட்டத்தில், ஓசூர் பகுதியில் பெரிய மாட்டுப் பண்ணை ஏற்படுத்த தமிழ்நாடு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the proposed new Catt'e Farm, in Hosur taluk there is some history behind the location of the Cattle Farm. The proposal came into being in 1968 when the late Thiru Govindaswami, Minister for Agriculture, came there. He recommended particular spot for examination. The present Director of Animal Husbandry and also the Secretary in-charge of Agriculture of the Central Government, Shri B. Sivaraman came there and recommended it. But unfortunately, that place has been left out and an alternate site has been suggested. The late Hon. Minister, Thiru Govindaswami had stated that he would do justice to the originally proposed place, may I request the present Honourable Minister to go into the whole matter and do justice?

THE HON. THIRU K. V. SUBBIAH : There is no move to open a big Livestock Farm in the Dharmapuri district by the Government of Tamil Nadu. There is already a big Livestock Farm in the Hosur taluk of the Dharmapuri district. However, the Government of India have suggested to open a Central Jersy Cattle Breeding Farm in the Hosur taluk and action is being taken to acquire the land in Pane area from the Forest Department. It is now in the preliminary stage.

In September 1970, the Government of India were informed that this Government are agreeable to place 500 acres in Pane area belonging to the Forest Department and an area of 316.66 acres of Government Poramboke land in Denkanikottah Sub-taluk of the Dharmapuri district at their disposal for the establishment of the Frissian Cattle Farm in this State. The Government of India

[1970 நவம்பர் 28

were also informed that the terms and conditions under which the lands would be transferred can be settled after inspection of the land by the Government of India and its suitability is decided. The reply of the Government of India is awaited.

*Minimum salary for archakas*

* 58 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon the Minister for Religious Endowments be pleased to state whether any minimum salary has been prescribed for the archakas in temples under the control of the Hindu Religious Endowment Department?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை, ஐயா, கோவில் களின் வருமானத்திற்கு ஏற்றவாறு அர்ச்சகர்களின் ஊதியம் வழங்கப்படுகிறது.

திரு. கே. சகாதேவ கண்டர் : கோவிலில் அர்ச்சனை செய்யக் கூடியவர்களுக்கு இதுவரையிலும் ஊதியம் எதுவும் கொடுப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் வேலையும் மிகக் கடுமையானதாக இருக்கிறது. அதோடு அவர்கள் கடவுளை நம்பியிருப்பதினாலும் இனிமேலாவது இந்த அரசாங்கம் அவர்களுக்கு சிறிய அளவு ஊதியமாவது கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அர்ச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஊதியம் கொடுக்கப் படவில்லை என்று சொன்னார்கள். எங்களுக்குத் தெரிந்தமட்டில் அந்த அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. உறுப்பினர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட இடத்தைப் பற்றிச் சொல்வார்களானால் அது சம்பந்தமாக பரிசீலனை செய்யலாம். இனிமேலாவது கொடுப்பார் களா என்று கேட்டார்கள். இதுவரையில் கொடுத்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கேள்விக்கு இடமில்லை என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு கோவிலும் தனி யூனிட் டாக, அந்தந்தக் கோவிலுக்கு வருகிற வருமானத்தை வைத்துக் கொண்டு அங்கங்கே செய்கிறார்கள். ஒரு கோவிலில் ஒரு அர்ச்ச கருக்கு ஐந்து ரூபாய் கிடைக்கும், இன்னொரு கோவிலில் ஒரு அர்ச்ச கருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் கூட கிடைக்கலாம். ஆகவே அதை வைத்துக்கொண்டு சொல்லமுடியாது.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி : கோவில் அர்ச்சகர் களுக்கு அர்ச்சனைச் சீட்டு, மா விளக்கு போன்ற காரியங்களுக்காக அந்த அர்ச்சகர்களுக்குக் கொடுக்கப்படுகிற விகிதாசாரம், பர்செண் டேஜ் அதிகமாக இருக்கிறது. ஆகவே, கோவிலுக்கு வருகிற வருவாய் குறைவாக இருக்கிறது. ஆகவே மாநிலம் பூராவிற்கும் எல்லாக் கோவில்களிலும் இந்த அர்ச்சனை சீட்டுகளிலிருந்து கொடுக்கப்படுகிற விகிதாசாரம் குறைந்தபட்சம் இவ்வளவுதான் என்று நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இது ஆங்காங்கு வருகிற பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. அதிகமாக பக்தர்கள் வருவதைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல என்று நினைக் கிறேன்.



1970 நவம்பர் 28]

காஜாமலையில் சந்தன மரங்கள்

*59 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

காஜாமலைப் பகுதிகளில் உள்ள சந்தன மரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள படுகை நிலங்கள்

* 60 வினா.—திரு. வை சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள காட்டிலாக் காவை சேர்ந்த படுகை நிலங்கள் எத்தனை?

(இ) அவைகள் தற்போது அரசின் மேற்பார்வையின் கீழ் உள்ளனவா?

(உ) அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) (1) ஒதுக்கக் காடு படுகை நிலங்கள் 21 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1331.46 ஹெக்டர்கள்.

(2) ஒதுக்க நிலப்படுகை நிலங்கள் 30 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1410.78 ஹெக்டர்கள்.

(இ) & (உ) அவைகள் தற்போது காட்டிலாகாவின் மேற்பார்வையில் உள்ளன. அவைகள் விவசாயம் செய்வதற்குக் குத்தகைக்கு விடப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்திலுள்ள இந்தக் காடுகளில் அரசாங்கம் ஏதாவது மரங்கள் பயிர் செய்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சவுக்கு, தேக்கு போன்ற மரங்களை காட்டு இலாகா பயிரிட்டு வருகிறார்கள்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : இந்தக் காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் பலயிடங்களில் சாகுபடிக்கு இலாயக் கில்லாத பூமியாக இருக்கின்றன. அந்தயிடங்களில் காடுகள் வளருவ தில்லை. ஆகவே இந்த நிலங்களை நிலமற்றவர்களுக்குக் கொடுப் பதற்கு அரசாங்கத்தால் ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காவேரிக் கரை படுகை நிலங்களைப் பற்றிய கேள்வி இது. அந்த நிலங்கள் பாதுகாக்கப் பட்டால்தான் காவேரிக் கரை முதலில் பாதுகாக்கப்படும் என்பதற் காக காவேரிக் கரை ஓரங்களில் உள்ள படுகைகளை குத்தகைக்கு விடுவதில்லை. நாங்களே பராமரித்து வருகிறோம்.

[1970 நவம்பர் 28

திரு. முனு ஆதி : மக்கள் பெருக்கத்தை முன்னிட்டும், விவசாயிகள் பலர் நிலம் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருப்பதை முன்னிட்டும் காட்டு இலாகா நிலங்களை விவசாயிகளுக்குத் தருவதற்கான யோசனையிருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய திட்டத்தையொட்டி உபயோகப்படாத காட்டு இலாகா நிலங்களை விவசாயிகளுக்குத் தருவதற்காக அரசாங்கம் எண்ணம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி காட்டு இலாகா நிலங்களை விவசாயத்திற்கு தகுதிபடைத்த ஒதுக்கம் இல்லாத காட்டு இலாகா நிலங்களை விடுவதற்காக இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) மழை, புயல் இவற்றினுல் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. விநாயகம், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. எம். பூபதி, திரு. கோ. பாரதி மோகன், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. பி. எஸ். மணி, திருமதி கே. பி. ஜானகியம்மாள், திரு. க. இராமமூர்த்தி, திரு. கொ. இர. ஞானசம்பந்தன், திரு. சி. கோவிந்தராசன், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகிய உறுப்பினர்கள்

'Havoc caused by the heavy rain and cylone in Tamil Nadu with particular reference to Thanjavur, Chingleput, South Arcot Districts, Madras City etc.'

என்ற பொருள் குறித்து விவாதம் செய்வதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். இவ்வளவு உறுப்பினர்களும் இதற்கான காரணங்களை......... ......

திரு. கே. விநாயகம் : தாங்கள் அனுமதித்தால் அதன் தனித் தன்மையைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு பேர்களும் பேசுவது என்ருல்.........

திரு. கே. விநாயகம் : விதியை திருத்தியமைக்கப் போகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சிக்கு ஒருவராகப் பேசலாம். திரு. விநாயகம் அவர்களை முதலில் அழைக்கிறேன்.



1970 நவம்பர் 28]

திரு. கே. விநாயகம் : தலைவரவர்களே, அண்மையில் சிறந்த அளவுக்கு மழை பெய்தது. அது நாடு முழுவதிலும் பெய்தது. ஆனுல், எனக்கு இருக்கிற அனுபவம் செங்கல்பட்டு மாவட்டத்திலும், சென்னையிலும் தான். அங்கே மழையினுல் ஏற்பட்ட சேதத்தைத்தான் நான் கொஞ்சம் நன்கு அறிவேன்.

சென்னையைப் பொறுத்தவரையில், இந்த வடிகால் நீர் சரியாகப் போகிற அளவுக்கு "டிரைனேஜ்" அமையவில்லை. அதனுல், மழை பெய்த உடனே, தண்ணீரெல்லாம் ரோடிலேயே தங்கி விடுகிறது. பெய்த மழைத் தண்ணீர் "அண்டர் கிரௌண்ட் டிரைனேஜ்" மூலம் போவதோ அல்லது கூவம் ஆற்றில் போய் விழுவதோ தடைப்பட்ட காரணத்தால் தான் இப்படி ஏற்பட்டு இருக்கிறது. கூவம் ஆற்றை சீரமைக்கும் வேலையை சரியான நேரத்தில் சீக்கிரமாக செய்து இருக்க வேண்டும். அப்படிச் செய்யப்பட்டு இருந்தால், அந்த ஆற்றில் போய் இந்த மழைத் தண்ணீர் விழுந்து இருக்கும். இப்படி தண்ணீர் கூவத்தில் போய் விழுகிற வாய்க்கால்களை எல்லாம் மூடி விட்ட காரணத்தால் சென்னை மவுண்ட் ரோடிலேயே 4 அடிக்கு தண்ணீர் இருந்தது. அது வடிய கிட்டத்தட்ட 3 நாட்கள் ஆயிற்று. இதை சென்னையில் இருந்த அமைச்சர்களும், அங்கத்தினர்களும் பார்த்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒரு வேளை அமைச்சர்கள் நேரடியாக காரில் இங்கே வருவதால் பார்க்காமல் இருந்து இருக்கலாம். ஆகவே, அது ஏன் வடியவில்லை என்று தெரியாமல் இருந்து இருக்கலாம். நான் மவுண்ட் ரோடில் இருக்கிற சாதாரண வாசி. அது மாத்திரம் அல்ல, ஆயிரம் விளக்கு பகுதியில், உங்கள் அலுவலகம் இருக்கிறது பாருங்கள் அங்கே கூட தண்ணீர் தேங்கி இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. கே. விநாயகம் : மவுண்ட் ரோடில் அண்ணாத்துரை சிலை வைத்து இருக்கிறீர்களே, அதன் கீழ் உள்ள "சப்-வே" யில்கூட தண்ணீர் அடிக்கடி தேங்கி விடுகிறது. "பயர் இன்ஜின்" வைத்துத் தான் தண்ணீர் இறைத்து எடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) இது எல்லாம் "ஹாவக் காஸ்ட் பை ரெயின் தான்".

கூவம் ஆற்றில் வேலை செய்தால் சரியானபடி செய்ய வேண்டும். அங்கே வைத்து இருக்கும் தென்னம்பிள்ளைக்கு எல்லாம் ஆண்டவன் தான் கதி. (குறுக்கீடு) (மணியடிக்கப்பட்டது). இது எல்லாம் "ஹாவக் காஸ்ட் பை ரெயின் தான்". ஆதலால், இது மாதிரி நாம் பிரச்னைகளை அணுகுவதற்கு பயந்தால் என்ன செய்வது? இன்னும் எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன.

இதை நிவாரணம் செய்வதற்கு அரசாங்கம் கொஞ்சம் தாமதம் காட்டி இருக்கிறது. இப்போது 30,000 குடிசை வாழ் மக்கள் வீடுகள் இழந்து, குடிசைகள் இழந்து இருக்கிருர்கள். அவர்களுக்கு குடிசை கட்டுவதற்கும், சாப்பாடு, துணி முதலியவற்றிற்கும் மிகுந்த சிரமப்பட்டார்கள். முன்பெல்லாம் யார் யாரோ சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பார்கள். ஆனுல் இப்போது அவர்கள் எல்லாம் காணேம். இந்த மக்களுக்கு நிவாரணம் தருவதிலே

[திரு. கே. விநாயகம்] [1970 நவம்பர் 28

அரசாங்கம் அதிக அக்கரை காட்டவில்லை. தாமதம் காட்டி இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கூட நேரடியாகச் சென்று ரூ. 3 லட்சம் நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். 30,000 மக்களுக்கு இந்த உதவி போதுமா?

கடலூரர் பகுதிகளில் பயிர்கள் சேதம் அதிகமாக இருக்கிறது. இந்த நிவாரண வேலைகள் தாமதப்பட்டு செய்ததால் தான், இந்த மாதிரி மக்கள் கஷ்டத்திற்குள்ளானார்கள். அரசாங்கம் நேரடியாக மக்களுக்கு செய்ய வேண்டிய சலுகைகளை கடமைகளைச் செய்ய வில்லை. அவர்களுக்கு செய்ய வேண்டிய நிவாரண வேலைகள் என்ன என்பதைப் பற்றி விவாதிப்பதற்காக, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை கொஞ்சம் ஒத்தி வைத்து, இந்த பொது முக்கியத் துவம் வாய்ந்த பிரச்னையைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Speaker, Sir, I request you to adjourn the House to discuss a matter of urgent public importance, namely the damage caused over a major portion of the State of Tamil Nadu in the City of Madras, Chingleput, South-Arcot and Tanjore on account of heavy downpour of rains between 15th and 22nd November 1970 and to discuss the relife measures for the victims who have been affected due o the rains.

I am glad that the Hon. Speaker had given the assurance that the Hon. Chief Minister would give a statement. Even though he is about to give a statement, I request the Hon. Speaker to adjourn the House for one or two hours to discuss this question. If it is not possible to adjourn it in the morning, we could have it in the evening. It is because this is a serious question and lakhs and lakhs of people who were living in slums had been affected. The Hon. Chief Minister and Minister for Harijan Welfare had visited a few slums. It is humanly impossible for them to inspect all slums. They had gone to certain areas. Several persons in neighbouring areas felt that it would have been better if the Hon. Chief Minister visited their slums also and seen their fate. But, of course, it is an impossible task. A similar situation happened in 1966 when revered Anna was in the opposition and a few of us together visited several slums and they wanted us to visit other slums also. But it is not possible. I know it.

Lakhs of slum dwellers had been rendered homeless, now, Government should try to express on the floor of the House what are the areas affected and what is the fate of those affected. They should tell us whether a survey had been taken of the slums affected due to these rains, extent of demage assessed and whether full relief measures had been taken. I find even in the Cooum, wherein lakhs and lakhs of rupees had been invested (it had now gone into crores) the slabs had fallen away after the rains. It usually happens that after some rains the slabs fall away. Much had been spent on this project. Everything has been washed away and the whole Cooum is in pell-mell.



1970 நவம்பர் 28]

In addition to this there is the prospect of a depression in the Bay coming in a day or two. Already the weather today is not good. The weather is not clear. Therefore it will be better if we know exactly what are the concrete measures Government are going to take, the slum Board may be there but they can't do much—what are the immediate measures they are going to take; it is said that Government are giving from Rs. 10 to 60 per person; a more liberal amount may be given. Taking into consequent suffering of the slum-dwellors are request the Hon consideration all these things, and the spiralling prices and Speaker to adjourn the business the House for an hour or two so that we can discuss this matter even after the Hon. Chief Minister has given his statement. Thank you.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவரவர்களே, சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் கிட்டத் தட்ட 3 லட்சம் ஏக்கர்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. அதே போல் தென் ஆற்காடு மாவட்டத்தில் 6,000 ஏக்கர்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. எட்டுக்குடி, திருக்குவளைப் பகுதிகள் பரிபூர்ண மாக தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. 20-ம் தேதி பெய்த மழையில் சிந்தாமணியில் ஏராளமாக அரிசனங்கள் வீடுகள் இழந்து தவிக் கிறார்கள். உடனடியாக வீடுகள் அவர்களுக்குக் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால், வீடு இழந்தவர்களுக்கு இப்போது ரூ. 30 தான் கொடுக்கப்படுகிறது. ரூ. 30-ல் வீடுகள் கட்டிக்கொள்ள முடியாது.

தஞ்சை கடைமடைப் பகுதியில் ஏராளமான பயிர்கள் நாச மடைந்து இருக்கின்றன. இம்மாதிரியான நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இது தீர்க்கப்படவேண்டும். கடைமடைப் பகுதியைப் பொறுத்தவரையில் தடுப்புச் சுவர் கட்டுவது அவசியம். இது மாதிரி செய்வதன் மூலம் வெள்ளம் வருவதைத் தடுத்து நிறுத்தி விடமுடியும். ஒவ்வொரு தடவையும் தற்காலிகமாக ஏற்பாடு செய்வதன் மூலம் பயிர்களை மழையிலிருந்து பாதுகாக்க முடியாது. சமீபத்தில் எட்டுக்குடி பகுதிகள் தண்ணீரில் மூழ்கிவிட்டது. இந்த அபாயம் தீர்க்கப்படவேண்டுமானால், கடைமடைப் பகுதியில் கடல் தண்ணீர் வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். வடிகால் சரியாகச் செப்பனிடப்படவேண்டும். சக்கிலியான் வாய்க்காலில் 20-ம் தேதி எடுத்துக்கொண்ட உடைப்பு இன்னும் செப்பனிடப்படவில்லை. இதனால் சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாகவே, இப்படி இருக்கிறது. டிபார்ட்மெண்ட் ஏன் இவ்வளவு நாட்களாக நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது என்று தெரியவில்லை. சிந்தா மணிப் பகுதியில் தாளடிப் பயிர்கள், முதல் பயிர்கள் நாசமாகி யுள்ளன.

இப்படிப் பயிர்கள் நாசமாவதால், சாகுபடி குறைகிறது. இருந்த போதிலும், விளைச்சலில் 4-ல் ஒரு பங்கு குத்தகைதாரர்களுக்குக் கட்டவில்லை என்றால் "எவிக்ஷன்" செய்யவேண்டுமென்று சொல் கிறார்கள். என்ன செய்வது? ஏன் இந்த அவை நிகழ்ச்சிகளை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கேட்கிறேன் என்றால், நிவாரணம் மட்டுமல்ல, நிரந்தரமான சட்டம் செய்யவேண்டும். குத்தகை

[திரு. கொ. இர. ஞானசம்பந்தன்] [1970 நவம்பர் 28

சாகுபடியாளர்களுக்கு இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு சர்க்கார் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டும். சர்க்காரும், கடன், ஐ.எம்.எஸ்., லோன் ஆகியவற்றை இம்மாதிரியான நேரங்களில் வசூலிக்காமல் இருக்கவேண்டும்.

கொஞ்சம் அழுகாமலும், சேதமாகாமலும் இருக்கும் பயிர்களுக்கு "ஷார்ட் டேர்ம்" கிராப் விதை, "பெர்டிலைசர்" கொடுத்து உதவவேண்டும். இதுபற்றித் தீவிரமான பரிசீலனையை விவசாய இலாகா செய்து, சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும். இம்மாதிரியான பல நிரந்தரமான பணிகளைச் செய்வதற்கு, இந்தப் பிரச்னையைக் குறித்து உடனடியாக விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அறிக்கை கொடுக்கப்பட்டாலும், நிரந்தரமான பணிகளை மேற்கொள்வதற்கு இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க வேண்டும்.

சாமந்தாம்பேட்டை பகுதியில் கடல் அரித்து விட்டது. அங்கே உள்ள மீனவர் குடிசையில் தண்ணீர் புகுந்து விட்டது. அவர்கள் உள்ளே போகமுடியாமலும், வெளியே வர முடியாமலும் மிகுந்த சிரமப்படுகிறார்கள். இதைத் தீர்ப்பதற்கு அதிகாரிகள் போதுமான அளவு அக்கறை காட்டவில்லை. நாகப்பட்டினம் நகரத்திலுள்ள கிழக்குப் பகுதியில் கடல் தண்ணீர் உள்ளே புகுந்ததால் பல வீடுகள் கடல் தண்ணீரில் அமிழ்ந்து விட்டது. கலெக்டர் ரூ. 30 தரலாம் என்று சொல்கிறார்கள். ரூ. 30-ல் வீடுகள் கட்ட முடியாது. கடல் அலையால் தாக்கப்படாமல் இருப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடு செய்யவேண்டும். நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்று சொன்னால் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதன் மூலம்தான் இந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்த்து சமாளிக்க முடியும். அதோடு விவசாயம் மோசமாகிவிட்டது. சாகுபடியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். வேலை கிடைக்காமல் பட்டினியாக இருக்கக்கூடிய நிலை ஏற்படும். விவசாயத் தொழிலாளர்கள் இம்மாதிரி வேலை இழந்து பட்டினியாக இல்லாமல் இருப்பதற்கு நிவாரண வேலைகளை ஆரம்பிப்பது மிகவும் அவசியம்.

ரொம்ப நாட்களாகவே ஆறுகளின் லைன்கள் தாழ்ந்த நிலையில் இருக்கின்றன. அவைகள் உயர்த்தப்படவேண்டும். ஆறுகள் ஆழப்படுத்தப்படவேண்டும். இது விவசாயிகளைச் சார்ந்த பிரச்னை மட்டுமல்ல. பல நிரந்தரமான பிரச்னைகள் ஏற்படக்கூடிய பல அம்சங்கள் இதிலே உள்ளடங்கியிருப்பதால் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதித்தால்தான் நிலையான திட்டம் தீட்டுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னையை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சமீப காலத்தில் பெய்து கொண்டிருக்கிற பெருமழையின் விளைவாகத் தமிழ்நாட்டில் குளம், ஆறு போன்ற நீர்த் தேக்கங்களிலெல்லாம் பெரும் அளவுக்கு



1970 நவம்பர் 28] [திரு. ஆ. கு. சுப்பையா]

உடைப்புகள் ஏற்பட்டு, வெள்ளம் ஏற்பட்டு, பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் வடிகால் இல்லாமல் பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் மூழ்கிக் கொண்டிருக்கிறது. முன்னால் இருந்த அரசு திரு. வேதநாராயணன் என்பவரை நியமித்து வடிகால் திட்டம் தயாரித்தது. அந்த வடிகால் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றினால்தான் ஜில்லாவிலுள்ள வடிகால் இன்மைப் பிரச்னையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு ஒரு வழி ஏற்படும். அதன் காரணமாக லட்சக்கணக்கான ஏக்கர்களில் தாளடி நடவுகளெல்லாம் அழிந்துபோய்விட்டன. இனிமேல் பயிர்கள் தேறுது, அதைப் போலவே, கதிர் வந்த பயிர்கள் ஐ.ஆர். 8, பாடஞ்சம்பா, எட்டாம் நெம்பர் தானியங்களெல்லாம் கதிர்கள் வந்து நீரில் மூழ்கி இருக்கிறது. அதன் விளைவாகப் பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுபடுத்தக்கூடிய முறையிலே உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கும்பொழுது இன்னொன்றையும் மனதில் கொள்ளவேண்டும். விவசாயிகள் கடன் பட்டிருக்கிறார்கள். கடனைத் தீர்ப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். கடனை ஒத்திவைக்க வேண்டும். ஆகவே, அதே சமயத்தில் நிலவரி, தண்ணீர்த் தீர்வை வசூலை இந்த ஆண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ரத்து செய்யவேண்டும். குத்தகைதாரர்களுக்குக் குத்தகை அளக்க முடியாத நிலை ஏற்பட்டு, நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி ஆபத்துக்கள் விவசாயிகள் மத்தியில் ஏற்படும் என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், தாழ்வான பகுதிகளில் குடியிருக்கக்கூடிய அரிசனங்களின் வீடுகள் பெரும் அளவுக்கு இடிந்து நாசமாகியிருக்கின்றன. மீண்டும் குடிசைகளைக் கட்டுவதற்கு வசதியில்லாமல் எப்படி அவர்கள் குடிசைகளைப் போட்டுக் கொள்வார்கள்? ரூ .10, ரூ. 20, ரூ. 30 என்று நிவாரணம் கொடுப்பது போதுமானது அல்ல. ஏதோ ஒரு காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை வைத்துக்கொண்டு இப்பொழுதும் அதே தொகையைக் கொடுப்பது என்பது நியாயமாக இருக்க முடியாது. அதிகமான ஒரு தொகையை அவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். வீடு தீப்பற்றி எரிந்தால் குறைந்தபட்சம் ரூ. 80 கொடுக்கக்கூடிய நிலையைத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போல குறைந்தபட்சம் ரூ. 80 அல்லது ரூ. 100 கொடுக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். ரூபாய் கொடுக்கவில்லை என்று சொன்னால், குடிசைகளைப் போட்டுக்கொள்வதற்குத் தேவையான சாமான்களை, அதாவது கீற்று, மரங்கள், இதர பொருள்களைக் கொடுத்தால் அவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு முடியும்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான சாலைகள் உடைந்து போயிருக்கின்றன. அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான பணமும் இல்லை. பஞ்சாயத்துக்களிடம் பணமே கிடையாது. பஞ்சாயத்து யூனியன்கள் அந்தச் செப்பனிடும் வேலைகளை மேற்கொள்வதற்கும் பணம் இல்லை.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1970 நவம்பர் 28

ஆகவே, அரசாங்கமே அவர்களுக்குக் கணிசமான அளவுக்கு நிதி உதவி செய்தால்தான், உடைந்துபோன சாலைகளைச் செப்பனிட்டு, போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியும். இதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், அரசு இதற்காக ஒரு ஸ்பெஷல் அதிகாரியை நியமித்து, சேதம் அடைந்த சாலைகளைக் கணக்கெடுத்து, இந்த செப்பனிடும் வேலைகளைத் தனி அதிகாரிகளை வைத்து தனியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்தால்தான், சீக்கிரமாக இந்த வேலையை செய்து முடிக்க முடியும். இல்லை என்று சொன்னால், அதிகாரிகள் பழைய மாதிரி அந்த வேலைகளைத் தாமதமாகத்தான் செய்து கொண்டிருப்பார்கள். வடிகால் வசதி இல்லாமல் உடைப்புகள் ஏற்படும்.

இன்னொரு ஆபத்து என்னவென்றால், மழை பெய்துகொண்டிருக்கும்பொழுது காவிரித் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மேட்டூரிலிருந்து 19-ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட்டு தண்ணீர் வந்து கொண்டிருந்ததினால்தான், தண்ணீர் போவதற்கு வழியில்லாமல் இம்மாதிரியான உடைப்புகள் ஏற்பட்டன. 15-ம் தேதியே மழை ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது தண்ணீரை அடைத்து வேறு பகுதிகளுக்குத் திருப்பியிருப்பார்களேயானால், இம்மாதிரியான ஒரு பெரிய சேதம் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்காது. பொதுப்பணித் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அசட்டையாக இருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் நிவாரணம் அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு துரிதமாகச் செய்யவேண்டும். ஆகவே, சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

<u>திரு. கே. பி. எஸ். மணி :</u> மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கடந்த 10 நாட்களாகப் பெய்கின்ற மழையின் காரணமாகத் தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், மேலத் தஞ்சை, மேற்குப் பகுதியைப் பொறுத்த அளவிலே அதிகமாக நஷ்டம் இல்லையென்றாலும், கீழ்த் தஞ்சை முழுவதும் அழிந்துவிட்டது என்று சொன்னால், அது மிகையாகாது என்று நினைக்கிறேன். மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் அவர்கள் வெகு சிரமத்தோடு காரைத் தள்ளிக்கொண்டு வந்து, நடந்து வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரிடையாகப் பார்த்தார்கள். கிராமம் கிராமமாக தாழ்த்தப்பட்ட மக்கள் குடிசைகள் அழிந்து கிடந்ததை அவர்கள் நேரில் கண்டார்கள். ஒரு சில பெரியவர்களின் உதவியைக் கொண்டு ஆங்காங்கு கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருப்பதையும் பல இடங்களில் அவர்களே நேரில் பார்த்தார்கள். தஞ்சை தாலூகாவில் இருக்கக்கூடிய சிறு ஏரிகள் உடைந்து போயிருக்கக்கூடிய சூழ்நிலையையும் பார்த்தார்கள்.

நவம்பர் மாதத்தில் ஏற்படக்கூடிய மழையின் காரணமாக உண்டாகும் கஷ்டங்களைப் பற்றி இந்தச் சபையில் பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறோம். முன்னாலிருந்த ஜில்லா கலெக்டர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் நிலையை ஆராய்ந்து வடிகால்



1970 நவம்பர் 28] [திரு. கே. பி. எஸ். மணி]

திட்டம் போட்டிருந்தார்கள். அதே மாதிரி தஞ்சை ஜில்லாவிற்கும் ஒரு வடிகால் திட்டம் நீட்டியிருந்தார்கள். இதுவரையிலே அந்தத் திட்டம் எந்தத் துறையினாலும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைக் கேட்டால், "இதற்கான திட்டங்கள் இருக்கின்றன. சர்க்காரில் பணமில்லை, நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று சொல்கிறார்கள். "திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம், அரசு நாளைக்கே உத்தரவு போட்டால், ஓராண்டு காலத்திற்குள் நாங்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்துவிடுவோம்" என்று சொல்கிறார்கள். கீழ்த் தஞ்சையைப் பொறுத்த அளவில், உப்பனாறு, கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் வடிகால் வசதியில்லாமல் இருக்கக்கூடிய நிலைமை நீடித்து இருக்கிறது. இதனால் சீர்காழி, நன்னிலம், மாயவரம் தாலூகாக்கள் பாதிக்கப்படுகின்றன. முன்பு எஸ்டேட்டாக இருந்த காலத்தில் வடிகால் வெட்டி முகத்துவாரத்தில் இருந்த மண்ணை அப்புறப்படுத்தி, கடலை ஆழப்படுத்தி, தண்ணீர் உடனடியாக வடிவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள். இப்பொழுது ரயத்துவாரியாக மாறியவுடன், யார் நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்து ஆழப்படுத்தி, நீரை வடித்துக்கொண்டு விடுவார்கள்? அதை நிறுத்தி விட்டார்கள். அதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இப்பொழுது பெய்த மழை அதிகமாக இல்லை. இருந்தாலும், கடலில் முகத்துவாரத்தில் தண்ணீரை வாங்க முடியாத நிலை இருப்பதன் காரணமாக, தண்ணீர் வடிய முடியாத நிலையில், வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் உண்மையிலேயே பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகாவது வடிந்து விடும் என்று நம்பினோம். அங்கிருந்து வந்திருக்கிற தகவல்படி இன்றும் மழை பெய்து கொண்டிருக்கிறது. சம்பா பயிர்கள் வளர்ந்து, கதிர் வருகிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அவைகளெல்லாம் நீரில் மூழ்கி இருப்பதன் காரணமாக நீர் சாவியினால் அழிந்துவிடும். நல்ல பலனைக் கொடுக்காது.

தாளடிப் பயிர்கள் முழுவதும் அழிந்துவிட்டது. ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 ஆகிய பயிர்களைப் பொறுத்தவரையில், விளைந்த பயிர்களாக இருக்கின்றன. ஆனால் நெல்லை அறுக்க முடியாத அளவுக்குத் தண்ணீரில் மூழ்கி இருக்கிறது. ஆயிரக்கணக்கான சிறவிப் பறவைகள் நெல்லைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இத்தகைய கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும். இதை ஏதோ ஒரு முறையாக வைத்துக்கொண்டு, எவ்வளவுதான் எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னாலும், அவையை ஒற்றி வைத்து இந்தப் பிரச்னையை விவாதிப்பது ஆளும் கட்சியினருக்கு ஒரு முறையாகாது என்ற ஒரு சம்பிரதாயத்தைப் பார்க்காமல், தயவுசெய்து நெருக்கடியான உணவு நிலையை உத்தேசித்து, இதைப் பற்றி விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லா உபரியாக இருந்த காலம், மற்றைய மாநிலங்களுக்கு கொடுக்க முடியும் என்று பெருமையோடு இருந்த காலம் போய், நாமே மற்றவர்களிடமிருந்து வாங்க வேண்டிய நிலை

[திரு. கே. பி. எஸ். மணி] [1970 நவம்பர் 28

ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுவதற்கு இடம் இருக்கிறது. ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதித்து ஒரு முடிவு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த
மு.ப. 10-30 மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு விவாத அளவில் நடைபெற வேண்டும் என்று கூறப்பட்டாலும், அநேகமாக இதைவிட அதிகமாகப் பேசுவதற்கு இல்லை என்ற அளவில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்பேரில் விரிவான விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசு மேலும் நிவாரண வேலைகளில் ஈடுபடவும், அதிகாரிகள் மேலும் விரிவாகப் பணிகளில் ஈடுபடவும் எடுக்கும் முயற்சிக்கு இது பயன்படும் என்ற அளவில், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு தாமதமாக இருக்கிறது என்று நண்பர் வினாயகம் குறிப்பிட்டார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் வருவதற்கு முன்பே, 22-ம் தேதி நான் ஓர் அறிக்கையை வைத்து, அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்பாக ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நிரந்தரமாக வடிகால் திட்டங்கள், உடைப்புக்கள் சீர்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும், பணம் ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன். இந்த நிலையில் அரசு தாமதம் காட்டுகிறது என்பது வினாயகம் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருக்கிற காரணத்தால் சொல்லித் தீர வேண்டிய மரபு என்பதால் சொன்னார்கள் என்று எடுத்துக் கொள்வேனேயல்லாமல், அவர்கள் மனமாரச் சொன்னார் என்று கருதமுடியாது.

வெள்ளம் வந்தால் யார் யாரோ வருவார்கள்; ஆனால் இப்பொழுது . . . . . .

திரு. கே. வினாயகம்: அமைச்சர் அவர்கள் நேரிடையாக முகபாவங்களைப் பார்க்கலாமேதவிர, மனத்திற்குள்ளே புகுந்து பார்க்கும் அளவுக்கு எப்படி மனமாரச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள்? மனத்திற்குள் இருப்பது எப்படி அமைச்சருக்குத் தெரியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. (சிரிப்பு)

யார் யாரோ வெள்ளம் என்றால் வருவார்கள், இப்பொழுது யாருமே வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். எப்பொழுதும் வருகிறவர்கள் போகிறார்கள். இடையில் வந்தவர்கள்தான் வரவில்லை. தேர்தல் நிதி திரட்டப் போய்விட்டார்கள். நாங்களெல்லாம் இந்தக் காரியங்களிலெல்லாம் முனைந்து, மக்கள் துன்பத்திற்கு ஆளாகும்போது, அவர்களுடைய துன்பத்தைத் துடைக்க இந்த அரசும், அதிகாரிகளும் ஈடுபட்டுப் பணிசெய்கிறார்கள். பொதுவாக நீண்ட நாட்களாகத் தஞ்சை மாவட்டத்திலும், மற்ற மாவட்டங்களிலும், வடிகால் சீர்திருத்தம் நடைபெறவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். குறைபாடு இருப்பது உண்மைதான். நானும்



1970 நவம்பர் 28] [திரு. மு. கருணாநிதி]

ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு காவிரி மாடர்னைசேஷன் ஸ்கீம் என்று திட்டத்தைப் போட்டு அதற்கு உலக வங்கியிடம் கடன் பெறுவதற்கும் திட்டமிட்டு, அவர்களும் ஒத்துக்கொண்டு ஏறத்தாழ ரூ. 40 கோடிக்கு மேல் தருவதாகச் சம்மதித்து இருக்கிறார்கள். இடையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அதிகம் தண்ணீர் கேட்போம் என்று சில பேருக்குச் சந்தேகம் ஏற்பட்டு,அந்தச் சந்தேகம் ஒரு தடையாக ஆகி, அந்தத் தடையை ஆராய்ந்து செயல்படுத்த மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் இந்தக் காவிரி மாடர்னைசேஷன் . ஸ்கீம் திட்டத்தால் ஏற்கனவே இருக்கின்ற வடிகால்கள், ஏற்கனவே இருக்கின்ற நீர்ப்பாசனக் கூறுகள் ஒழுங்காகச் செயல்படுமேயல்லாமல், அதிகமாகத் தண்ணீர் எடுக்க மாட்டோம். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இதற்கு இடையில் தாற்காலிகமாகச் சங்கடங்களை நீக்க அரசு பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த அளவில் இந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

## வடமேற்குப் பருவக் காற்றினால் பெரு மழை நிவாரணப் பணிகள்.

1970-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழ் நாட்டில் பொதுவாகவும், குறிப்பாகக் கடற்கரை ஓரத்திலும், வடமேற்குப் பருவ நிலை தீவிர நிலையை அடைந்தது. இந்தப் பருவ நிலையின் காரணமாகப் பல இடங்களில் பெரு மழையும், மற்றைய இடங்களில் நல்ல மழையும் பெய்தது. குறிப்பாகப் புயல் என்ற ஓர் நிலைமை இல்லாவிட்டாலும் காற்று அழுத்த மந்த நிலை காரணமாக வடமேற்குப் பருவ நிலை வலுவடைந்தது. வங்காள விரிகுடாக் கடல் ஓரத்திலுள்ள சென்னை நகரிலும், தஞ்சை, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களில் பல இடங்களில், குறிப்பாகச் சென்ற வாரம் பெரு மழை பெய்தது. குறிப்பாக கடலூரில் ஐந்து நாட்களில் சற்றேறக்குறைய 28 அங்குல மழையும், சென்னை நகரில் நான்கு நாட்களில் 15 அங்குல மழையும் பெய்தது. கடலோரப் பகுதிகளிலுள்ள பல்வேறு சிற்றூர்களிலும், வேதாரண்யம், நாகப்பட்டினம் போன்ற இடங்களிலும், மிக அதிகமான மழை பெய்தது. இந்த மழையின் காரணமாகப் பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டன. வீடுகளும், குடிசைகளும் பாதிக்கப்பட்டன. சென்ற ஆண்டு நடைபெற்ற வறட்சிப்பணியின் காரணமாக, ஏரி, குளங்களில் பெருமளவுக்கு உடைப்பு ஏற்படவில்லை. சில இடங்களில் ஏரி, குளங்கள் நிரம்பியதன் காரணமாகக் கரைகளில் சேதம் ஏற்பட்டது. சாலைகள் சில இடங்களில் பாதிக்கப்பட்டுப் போக்குவரத்து தடைப்பட்டது. குடிசைப்பகுதிகளில் வாழும் ஏழை மக்கள் சில இடங்களில் தங்கள் பொருட்களை இழந்தனர், குறிப்பாக இந்த சேதத்தைப்பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

[திரு. மு. கருணாநிதி] [1970 நவம்பர் 28

சென்னை நகரத்திலுள்ள தாழ்ந்த பகுதிகளில் வெள்ள நிலை ஏற்பட்டது. 30,000 குடிசைகள் சேதமடைந்தன என்று கணக்கிடப்படுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 4,500 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 64 நீர்ப்பாசனச் சாதனங்கள் பெரு மழையால் பாதிக்கப்பட்டன.

தென்னாற்காடு மாவட்டத்தில் 10,000 குடிசைகள் பாதிக்கப்பட்டன என்று கணக்கிடப்படுகிறது. சிதம்பரம் தாலூகாவில் 30,000 ஏக்கர் நிலத்திலும், கடலூரில் 3,000 ஏக்கர் நிலத்திலுமுள்ள பயிர்கள் பெருமழையால் மூழ்கியதாகக் கணக்கிடப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் 10,000 குடிசைகள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக சீர்காழி, மாயவரம், நன்னிலம் பிராந்தியங்களில் சுமார் 1,20,000 ஏக்கராவில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது. சுமார் 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் மறுபடியும் பயிரிட வேண்டிய நிலைமை இருப்பதாகத் தெரிகின்றது. தஞ்சை மாவட்டத்தில் குளங்களிலும், வாய்க்கால்களிலும் 43 இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் 3-வது வாரத்தில் இதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பெருமழை பெய்ததின் காரணமாக அம்மாவட்டத்தில் சாலைகளுக்கும், நீர்ப்பாசனச் சாதனங்களுக்கும் சேதமேற்பட்டுள்ளது.

வடமேற்குப் பருவ நிலை துவங்குமுன்னரே இப்பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், அவருடைய நிர்வாகமும், பொறியியல் நிர்வாகமும், குளங்களையும், ஏரிகளையும் கண்காணித்து, முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற ஓர் உத்தரவை அரசு வலியுறுத்தியது. மழை பெய்து சேதமேற்படுகிறது என்று தெரிந்தவுடனேயே மாவட்ட அதிகாரிகள் அனைவரும் உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். வீடுகளை இழந்த மக்கள் வேறிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்குச் சில நாட்களுக்கு உணவு வினியோகம் செய்யப்பட்டது. நீர்ப்பாசனச் சாதனங்களில் உடைப்புக்களை மூடுவதற்கு நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டன. எத்தனை பரப்பளவில் பயிர் நீரில் மூழ்கியுள்ளதென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மதிப்பீடு செய்யத் துவங்கியுள்ளனர். வீடிழந்த ஒவ்வோர் குடும்பத்திற்கும் உடனடி நிவாரணமாக ரூபாய் 30 அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரில் மட்டுமில்லாமல் மற்றைய மாவட்டங்களிலுள்ள எல்லா இடங்களிலும் இந்த நிவாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மொத்தச் மொத்தச் செலவு சுமார் ரூ. 16.5 லட்சம்.

மேலும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனேயே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு என்று ரூபாய் மூன்று லட்சம் ஒதுக்கி அளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன் செய்யும் வகையில் இந்தத்தொகை உபயோகப்படுத்தப்படும்.



1970 நவம்பர் 28] [திரு. மு. கருணாநிதி]

வேளாண்மைத் துறை அமைச்சரும், பொதுப்பணி அமைச்சரும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விவரங்களை நேரில் அறிந்து வந்தனர். "கேர்" நிறுவனம் அரசுடன் ஒத்துழைத்துத் தேவையான மாவு, சமைக்கும் எண்ணெய் போன்றவற்றை அளிப்பதற்கு முன் வந்துள்ளது. வீடிழந்தோர்க்கு மான்யத் தொகை கொடுப்பதற்கான அரசாங்க நிதி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அளிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் பயிர்கள் நீரில் மூழ்கியதன் காரணமாக மேலும் உரங்களும், மருந்து வகைகளும் தேவையாக இருப்பதால், தேவையானவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 40 வீதம் கடனாகக் கொடுக்க மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

உணவு வழங்குவதில் சென்னை நகரில் சுமார் 50,000 ரூபாயும், தஞ்சை மாவட்டத்தில் சுமார் 40,000 ரூபாயும் செலவாகுமென்று கணக்கிடப்படுகிறது.

உடனடியாகப் பெருமழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும், நீர்ப்பாசனச் சாதனங்களையும் பழுதுபார்த்து, அவற்றைச் சீரமைப்பதற்காக அரசு முன்வந்துள்ளது. நீர்ப்பாசனச் சாதனங்களைப் பழுதுபார்த்து, குளங்கள், வாய்க்கால்கள் உடைப்புகளைத் தடுத்து அவைகளுடைய கரைகளைப் பலப்படுத்துவதற்காகவும், வெள்ளம் வருங்காலத்தில் அவைகள் வெள்ளத்தினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும் அரசு உடனடியாக ஒரு கோடி ரூபாய் செலவிட அனுமதி தரும். பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுதுபார்ப்பதற்காக 50 லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க அரசு முன்வந்துள்ளது.

நீரில் மூழ்கி பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றும் வகையிலும், வேண்டுமானால் மறுபடியும் விதைப்பதற்காகவும், நாற்று நடுவதற்காகவும் கடன் வசதிகள் செய்யப்படும்.

நீரில் மூழ்கி அப்படியே நாசமடைந்த இடங்களில் மறுபடியும் விதைப்பதற்கான விதைகள் இலவசமாக, தேவையுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும்.

அரசு மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், மற்றோர்க்கும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு அவர்கள் துயர் தீர்ப்பதற்குத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆகவே, இந்த அறிக்கை அவைமுன் வைத்துள்ள காரணத்தால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குத் தேவையில்லை என்று தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே இயற்கையாக ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் வழக்கமாகவே தாங்கள் மத்திய சர்க்காரிடம் போய், "எங்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது, 14 கோடி ரூபாய் கொடுங்கள்" என்று கேட்பீர்கள். இப்பொழுது ஏற்பட்ட சேதத்தின் விளைவாக மத்திய சர்க்காருக்கு, பணம் கொடுக்கும்படி ஏதாவது மனுப் போட்டு,

[திரு. கே. விநாயகம்] [1970 நவம்பர் 28

தங்களுடைய செல்வாக்கை உபயோகித்து, 24 ஓட்டுகளைப் பயன் படுத்தி, பணத்தைப் பெற முயற்சித்திருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இடர்பாடுகள் ஏற்படுகின்றபொழுது தங்களுடைய செல் வாக்கைப் பயன்படுத்தி, ஓட்டுக்களைப் பயன்படுத்தி, பணத்தைப் பெற பேரம் பேசுவது எங்களுடைய வழக்கம் அல்ல. எங்களுடைய உரிமையைப் பயன்படுத்தி, நிவாரண வேலைகளுக்குப் பணம் தேவை என்று கூறி, பணத்தைப் பெறுபவர்கள் நாங்கள். "பதவி பறிபோய் விடுமே, நாற்காலி பறிபோய்விடுமே" என்பதற்காக ஒன்றுமே மத்திய சர்க்காரிடம் கேட்காமல் உங்களைப்போல சும்மா இருந்து விடுபவர்கள் நாங்கள் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிக்கை படித்தபோது நிவாரண நிதியாக ஒரு குடும்பத் திற்கு 30 ரூபாய் கொடுத்ததாகச் சொன்னர்கள். முன்பு குடிசைகள் எல்லாம் தீப்பற்றி எரிந்தபோது முன்னள் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடிசைக்கும் 50 ரூபாய் மானியமாகவும், 50 ரூபாய் கடனகவும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதுபோல, இப் பொழுதும் 50 ரூபாய் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, தீப்பற்றி எரிந்த குடிசைகளுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்கெனவே இருந்த அரசு நிவாரண நிதியாக 30 ரூபாயும், துணிமணிகளுக்காக 10 ரூபாயும் ஆக மொத்தம் 40 ரூபாய் கொடுத்து வந்தது. புதிய அரசு ஏற்பட்ட பிறகு நமது அண்ணு அவர்கள் நிவாரண நிதி 30 ரூபாய், துணிமணிகளுக்காக 10 ரூபாய் என்று இருந்ததை மாற்றி, நிவாரண நிதியாக 60 ரூபாயும், துணிமணிகளுக்காக 20 ரூபாயும் ஆக மொத்தம் 80 ரூபாய் என்ற அளவில் தந்தார்கள். மேலும், தீப் பற்றுகின்ற இடங்களில் குடிசைகள் எல்லாம் அறவே அழிந்துவிடும். ஆனல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்கும்போது அதனுடைய சேதம் எவ்வளவு என்பதை அறுதியிட்டுக் கூறமுடி யாது. ஒருசில இடங்களில் குடிசைகள் பூராவாக அழிந்திருக்கலாம். ஒருசில இடங்களில் சுவர்மட்டும் விழுந்திருக்கலாம். ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு, அவர்களுக்குக் கடன் தரும் விஷயத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன படி ஏதாவது செய்ய முடியுமா என்பதை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்ட திருத்துறைப்பூண்டி, மன்னர்குடி, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, அறிக்கை யின் தொடக்கத்திலேயே நாகப்பட்டினம் பகுதியையும் குறிப்பிட் டிருக்கிறேன்.



1970 நவம்பர் 28]

DR. H. V. HANDE: May I know whether in the City of Madras an assessment has already taken place, whether the Government have with them a list of huts wiped out or partially wiped out and whether the authorities have started disbusing the amount?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் கொடுப்பதற்கு துவக்கப்பட்டு விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் கூறிய விளக்கத்தையொட்டி, இதை விவாதிக்க சபையின் பிற நடவடிக்கைகளை ஒற்றிவைக்கத் தேவையில்லை என்று கருதி, இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

### (ஆ) நமனசமுத்திரத்திலுள்ள புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டதும் தொழிலாளர் பாதிப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டைமான் அவர்களும் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும், "திருச்சி மாவட்டம். நமனசமுத்திரத்திலுள்ள புதுக் கோட்டை டெக்ஸ்டைல்ஸ் கடந்த சில மாதங்களாக மூடப்பட் டுள்ளதால், 400-க்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கின்ற அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்க வேண்டும்" என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி கதவடைப்பு முதலியவை காரணமாக, இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பது கூடாது என்று ஏற்கெனவே பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினல், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

## 3. கவனஈர்ப்பு

### அரசு அச்சகத்தில் கையாடல் நடந்ததாகக் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர் களே, சர்க்காருக்குச் சொந்தமான சென்னை அச்சகத்தில் 1970 செப் டம்பரில் பல லட்சக்கணக்கான ரூபாய் கையாடியதாக வந்துள்ள செய்தியைப்பற்றியும், சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியுமான பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர்-பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, சென்னை அரசு அச்சகத்திலுள்ள தலைமைக் காசாளர் பணம் செலுத் துதல், பணம் பிரித்து அளித்தல் ஆகிய அலுவல்களைக் கவனிப்பது அவரது கடமையாகும். தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க ஒரு கூட்டுறவுச் சங்கம் உள்ளது. ஒவ்வொரு மாதமும் தொழிலாளர் களுக்குச் சம்பளம் தரும்பொழுது அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய தொகையைக் குறிப்பிட்டு மொத்தம் வசூலாத வேண்டிய

[திரு. என். வி. நடராசன்] [1970 நவம்பர் 28

தொகைகளின் பட்டியல் ஒன்று அக்கூட்டுறவுச் சங்கத்தால் கொடுக்கப்படுகிறது. தொழிலாளர்களிடமிருந்து மேற்படி தொகைகளை வசூலித்து அத்தொகையைக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டியது தலைமைக் காசாளரின் கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கம் அனுப்பும் கேட்புப் பட்டியலுக்கிணங்க தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகைகள் காலம் கடந்து சங்கத்தில் செலுத்தப்படுவதாகவும், இவ்வாறு காலம் கடந்து செலுத்தப்படுவதால் ஏற்படும் வட்டி இழப்பு காரணமாக சங்கத்திற்கு விரயம் ஏற்பட்டு வருவதாகவும் 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சங்கத்திடமிருந்து தமக்குப் புகார் ஒன்று வந்துள்ளதென எழுது பொருள்–அச்சுத்துறை இயக்குநர் அறிக்கை அனுப்பியுள்ளார். இந்த முறையீட்டின்பேரில் சங்கத்திற்குச் சேர வேண்டிய தொகையை ஒவ்வொரு மாதமும் 10-ம் தேதிக்குள் செலுத்தி விட வேண்டும் எனவும், செயலில் உள்ள விதிகளுக்கிணங்க வசூலிக்கப்பட்ட, செலுத்தப்பட்ட தொகைகளைக் காட்டும் பதிவேடு ஒன்றைப் பேணி வர வேண்டும் என்றும் அப்போதிருந்த தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜ் அவர்களுக்கு எழுது பொருள்–அச்சுத்துறை இயக்குநரால் ஆணையிடப்பட்டது. மேற்படி முறையைப் பின்பற்றுவதில் தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜ் காலங்கடத்தி வந்திருக்கிறார். இதற்கிடையில், 31—8—1970 அன்று மாதக் கணக்குகளைச் சரி பார்க்கும்போது தலைமைக் காசாளருக்கு மேல் உள்ள அடுத்த அரசிதழ்ப் பதிவுபெற்ற உயர் அதிகாரியான அரசு அச்சக நிர்வாக உதவியாளர் ரொக்க இருப்பில் பணம் குறைவதாகக் கண்டு பிடித்தார். 31—8—1970 அன்றுள்ளபடி, ரொக்க இருப்பு ரூ. 40,198.85 ஆக இருந்திருக்க வேண்டும். ஆனால், ரூ. 18,752.85 மட்டுமே இருப்பதை அவர் கண்டார். அதே சமயத்தில் 1—8—1970 அன்று வசூலிக்கப்பட்ட தொகைகள் அந்த மாதத்தின் இறுதிவரை செலுத்தப்படவில்லையெனக் கூட்டுறவுச் சங்கச் செயலாளரும் புகார் செய்தார். அப்போதிருந்த தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜை உடனே தொகை குறைவதற்கான காரணம் பற்றி விளக்கம் தரும்படி 2—9—1970 அன்று கேட்கப்பட்டது. கணக்குகள் முழுமையாகச் சரிபார்க்கப்பட்டன. 16—9—1970 அன்றுள்ள மொத்தம் ரூ. 1,73,641.76 குறைவதாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

அரசுப் பணத்தை கையாடிய குற்றம் செய்திருப்பதாக 14—9—1970-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கிணங்க, தமிழ்நாடு நிதி விதிக்கோவை முதல் தொகுப்பின் 302(உ) விதியின்படி சென்னை, காவல்துறைக் கமிஷனர், மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் ஆகியோருக்கும், அரசுக்கும் எழுதுபொருள்–அச்சுத்துறை இயக்குநர் அறிக்கை ஒன்றை அனுப்பினர். 15—9—1970 முதற்கொண்டு அப்போதிருந்த தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜ் தற்காலிகமாக வேலையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். இந்த வழக்கு குறித்து உடனடியாகத் துப்புத் துலக்கி, குறைவதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொகையை இயன்ற விரைவில் வசூலிக்கும்படி போலீஸ் கமிஷனர் கேட்டுக்கொள்ளப்பட்டார். 14—9—1970-ல் திரு. டி. ஜெயராஜ் காவலில் வைக்கப்பட்டார். புலனாய்வு குறித்து மேலும் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், புலனாய்வு தொடங்கு



1970 நவம்பர் 28] [திரு. என். வி. நடராசன்]

வதற்கு முன்னர் கணக்குகள் முறையாகத் தணிக்கை செய்யப்பட வேண்டுமென்று போலீஸ் கமிஷனர் கேட்டுக் கொண்டதால், இந்த வழக்கிற்காகவென்றே சிறப்பாக மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் அலுவலகத்திலிருந்து தணிக்கை அதிகாரி ஒருவரை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது: 2—11—1970 முதற்கொண்டு தணிக்கைப் பணியை அவர் தொடங்கியுள்ளார். தணிக்கை நடந்து வருகிறது. இதற்கிடையில், அப்போதிருந்த தலைமைக் காசாளர் திரு. டி. ஜெயராஜிடமிருந்து பணம் பெற்றுச்சென்றவர்கள் காவல்துறையின் இசைவுடன் பணத்தைத் திருப்பிச் செலுத்த முன் வந்துள்ளனர். அவ்வாறு பெறப்படும் தொகைகள் வசூலிக்கப்பட்டு ஒரு தனிக் கணக்கில் எழுதி வரப்படுகின்றன. தொடக்கப் புலனாய்வுகளிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்கும் அரசுக்கு சொந்தமான பணம் தற்காலிகமாகவும், நிலையாகவும் நீண்ட காலமாகவே அதாவது 5 ஆண்டுகளுக்கு மேலாகவே கையாடல் செய்யப்பட்டு வந்துள்ளதாகத் தோன்றுகிறது. கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளப் பிடிப்புத் தொகைகளிலிருந்தும் வழங்கப்படாத சம்பளப் பணத்திலிருந்தும், பல தொழிலாளர்களுக்கு எந்த வித அனுமதியுமின்றி கடன்கள் கொடுக்கப்பட்டு வந்திருப்பதாகத் தோன்றுகிறது. இந்தக் கடன்களில் பெரும்பாலானவை திருப்பிச் செலுத்தப்படவில்லை அல்லது வாங்கிய கடன் தொகைக்குக் குறைவாகவே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன. இதனால் இருப்புத் தொகை பெருமளவிற்குக் குறைந்துவிட்டது. இதைத் தவிர நிலையான பணக் கையாடல்களும் நடந்துள்ளன. 1957 டிசம்பரில் ஓய்வுபெற்ற முன்னாள் தலைமைக் காசாளர் திரு. என். வரதராஜனும், 16—10—1970 அன்று கைது செய்யப்பட்டார்.

இது குறித்து மிக விரிவாக துப்புத் துலக்கும்பொருட்டு 30—9—1970 வரை இக்கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளை சிறப்புத் தணிக்கை அதிகாரி ஒருவரைக் கொண்டு விரிவாகத் தணிக்கை செய்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இத் தணிக்கை நடந்தேறி வருகிறது.

இத்தகைய பணக் கையாடல்கள் இனி நடைபெறாமல் தடுப்பதற்காக, தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து தொகைகள் பிடிக்கப்பட்டவுடனேயே கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கில் மத்தியக் கூட்டுறவு வங்கியில் நேரடியாகச் செலுத்தி விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றாட ரொக்க இருப்பு புத்தக இருப்பையொத்திருக்கிறதாவெனச் சரிபார்க்கும்படி அரசிதழ் பதிவுபெற்ற நேர்முக உதவியாளருக்கு எழுதுபொருள்–அச்சுத்துறை இயக்குநரால் அலுவலக ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 4. அரசினர் மசோதாக்கள்

### (அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு) திருத்த மசோதா

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I beg leave of the House to introduce the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection form Eviction) Amendment Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்ற கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதாவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) மசோதா

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I beg leave to introduce the Tamil Nadu Court-Fees and Suits Valuation (Amendment) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மதோசாவை சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.



4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா (ச.பே.ம. எண் 38/1970)

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைத் தலைவர் அவர்களே—

தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண் டாம் திருத்த) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண். 38/ 1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதா இறவை நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்களை ஏற் படுத்த வழிவகை செய்கிறது. இந்த மசோதாவுக்கான காரணங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப் பட்டிருக்கிறது.

நிலங்களை வளப்படுத்துவதற்கு என்று ஏற்கனவே நிலவள வங்கி கள் இருக்கின்றன. நிலங்களை வளப்படுத்துவது என்றால் கிணறுகள் வெட்டி பம்புசெட்டுகள் வைப்பது, அல்லது நிலங்களைத் திருத்திச் சரிப்படுத்துவது அல்லது வேறு முறைகள் மூலம் நிலங்களை நிரந்தர மாக வளப்படுத்துவது. இதற்கு உதவி செய்வது நிலவள வங்கிகள். முன்னால் இவற்றுக்கு நில அடமான வங்கிகள் என்று பெயர் இருந் தது. அந்த நில அடமான வங்கிகளின் பெயரைத்தான் நிலவள வங்கிகள் என்று மாற்றி அதைப் பரவலாக்கினோம். இதுவரை 65 கோடி ரூபாய் இந்தவகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நூறு கோடி அளவைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க் கிறேன். இவ்வளவு பெரிய தொகை நிலவள வங்கிகளின் மூலமாகக் கொடுத்து வந்தும் கூட இதனால் சின்னஞ்சிறிய விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

நம் நாட்டில் நூற்றுக்கு எண்பதுபேர்கள் சிறு விவசாயிகள் தான். அவர்களுக்கு நிலவள வங்கிகளினால் பயன் ஏற்படவில்லை. ஆகவேதான் போன வருடம் சில திருத்தங்களை நாம் இந்தச் சட்டத் தில் செய்தோம். அதுவும் கூடப் போதுமானதாக இல்லை. உதா ரணமாக திண்டிவனத்தில் உள்ள நிலவள வங்கியை, நான் எடுத்துக் கொள்ளவில்லை. காஞ்சிபுரம் நிலவள வங்கியை எடுத்துக்கொள் ளுங்கள். அதன்மூலம் 1 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைவரைப் பார்த்து நான் புள்ளிவிவரங்களைக் கேட்டபோது "மொத்தம் கொடுத்திருப்பது ஒரு கோடி ரூபாய்" என்றார். "ஒரு ஏக்கர் நிலம் உள்ளவருக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள்?" என்றால் ஒருவருக்கும் இல்லை. "2 ஏக்கர் நிலம் உள்ளவருக்குக் கொடுத்திருக்கிறீர்களா" என்றால் இல்லை. "3 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கிறவர் யாருக்காவது கொடுத்திருக்கிறீர்களா" என்றால் இல்லை. இப்படி சிறு விவசாயிகள் யாருமே பயன்படாத வகையில்

* 5—9—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. சி. பா ஆதித்தனார்] [1970 நவம்பர் 28

அங்கே உள்ளவர்கள் புறக்கணிக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. முன்னால் இருந்த சட்டம் இடம் கொடுக்கவில்லை. போன வருடம் தான் ஒரு சிறு திருத்தத்தைச் செய்தோம். முன் இருந்த சட்டப்படி விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடன் கொடுப்பதாக இருந்தால் 2 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளவனுக்கு அந்த நிலத்தின் மதிப்பு 2 ஆயிரம் என்றால் ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம். ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்றால் அதைக்கொண்டு எப்படி கிணறு வெட்ட முடியும்? பம்பு செட்டு வைக்க முடியும்? ஆகவேதான் சிறு விவசாயிகள் யாரும் அதனால் பயன் அடைய முடியவில்லை.

நாம் என்ன சொன்னோம். ஒரு விவசாயி கடன் கேட்கிறபோது அப்போது அவனிடம் இருக்கும் புஞ்சை நிலத்திற்கு என்ன மதிப்பு என்று கணக்கு எடுக்கக் கூடாது. நீர்ப்பாசன வசதிகள் எல்லாம் செய்யப்பட்ட பிறகு, புஞ்சை நஞ்சையான பிறகு, பாலைவனம் போன்றது சோலைவனமாக மாற்றப்பட்ட பிறகு அந்த நிலத்திற்கு என்ன விலை—மதிப்பு இருக்கும் என்பதைக் கணக்கெடுத்து பண உதவி செய்யவேண்டுமென்று நிலவள வங்கிச் சட்டத்தைத் திருத்தினோம். அதற்குப் பிறகும் கூட சின்னஞ்சிறு விவசாயிகள் பயன் அடையவில்லை. அதற்குக் காரணம் தமிழ்மாநிலத்தில் சிறு விவசாயிகள் தான் அதிகம். ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னால் உங்களுக்கு நன்றாக எடுத்துச் சொன்னதாக இருக்க முடியும். கள்ளக்குறிச்சி தாலுக்காவில் ஒரு சின்ன ஊர். அதில் 110 ஏக்கரா நிலம் இருக்கிறது. ஆனால் அவற்றுக்கு 130 பட்டாக்காரர்கள்—விவசாயிகள் இருக்கிறார்கள். முக்கால ஏக்கர், ½ ஏக்கர் நிலம் உள்ளவர்கள் எல்லாம் கூட இருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் கூட பயன் பெற வேண்டுமென்றால் என்ன செய்வது?

பஞ்சாப் மாநிலத்தில் சிறு விவசாயிகளிடம் இருக்கும் நிலத்தை கட்டாயமாக பக்கத்தில் உள்ள பெரிய விவசாயிகளுக்கு விற்க வழி இருக்கிறது. அதுபோல இங்கே செய்யலாம் என்றால் மனக் கசப்புகள்தான் வளரும். எந்தச் சின்னஞ்சிறிய விவசாயியும் தம்முடைய நிலத்தை பக்கத்தில் உள்ள பெரிய நிலக்காரருக்கு விற்க மனமொப்பி முன்வரமாட்டான். ஆகவே, என்ன செய்வது?

எல்லா நிலத்தையும் ஒன்றாகச் சேர்த்து கூட்டாக விவசாயம் செய்துவிடலாம் என்று சொல்வார்கள். அதையும் முயற்சித்துப் பார்த்தோம். அதில் தோல்வியே அடைந்தோம்.

ஆக என்ன செய்வது? ஒரு நிலம் நன்றாக விளைய விதை வேண்டும், உரம் வேண்டும் என்றால் அடிப்படையாகத் தேவைப்படுவது தண்ணீர் தான், மழையைப் பார்த்துக்கொண்டு இருக்காது மழை இல்லாவிட்டாலும் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எடுத்துப் பாசனம் செய்ய அடிப்படையாக வசதி செய்யப்பட வேண்டும்.

ஆகவேதான் இந்தச் சட்டத்தில் என்ன செய்கிறோம் என்றால் இரண்டு ஏக்கர், 3 ஏக்கர், பத்து சென்ட், 5 சென்ட் நிலம் வைத்திருக்கிற சிறு விவசாயிகள் எல்லோரையும் உறுப்பினராகக் கொண்ட கூட்டுறவு சங்கத்தை அமைத்து, ஒரு 60 ஏக்கர் நிலம்



1970 நவம்பர் 28] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

என்றால், அவை எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு நான்கைந்து இடத்தில் குழாய்க் கிணறுகளை அமைத்து நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக்கொடுக்க வழி வகுக்கிறோம். மழையையே நம்பி வாழ வேண்டுமென்று நிலைமை மாற உதவி செய்கின்ற சட்டம் இது. இது வேளாண்மை பெருங்குடி மக்களுக்கும் பெரிதும் உதவி செய்யக் கூடிய ஒன்று. ஆகவே இதை உங்கள் முன்னிலையில் வைத்து நீங்கள் அனைவரும் ஒருமனதாக இதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. A. SUBBARAJA: Sir, I move the following amendment:— மு.ப. 11-00

'That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 38 of 1970) be circulated for the purpose of eliciting opinion thereon.'

The amendment was duly seconded.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மசோதா ரொம்ப வரவேற்கக் கூடியது, அவர்களுடைய விளக்கத்தைச் சொன்னார்கள். பரிட்சார்த்தமாக ஒவ்வொரு கட்டத்திலும் கோவாபரேடிவ் ஜாயிண்ட் பார்மிங் வைத்துப் பார்த்ததில் சரியாக இல்லை. மக்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் சாதாரணமாக கம்யூனிடி வெல்ஸ் போடுவதற்கு ஆட்களை சேர்ப்பதற்கு முடியவில்லை. இருக்கிற பங்கு விவசாயிகளுக்கு இந்த நில வள வங்கி மூலமாகக் கடன் கொடுக்கிற காலத்திலே ஒரு தரப்பட்ட மக்கள் அதிகமாக பயனடைகிறார்கள். ஏழை எளிய மக்கள் 100-க்கு 80 சதவிகிதம் இருக்கக்கூடிய மக்களுக்கு குறைந்த பட்சம் நல்லதொரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவைப் பொறுத்தமட்டிலே ஒன்றே ஒன்றை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்றையதினம் கொண்டு வந்த மசோதாவில் "டெபனிஷன்" என்று ஸ்மால் பார்மர்ஸ்—சாகுபடியாளர்களுக்கு வசதி செய்தும் சேர்க்கப்பட்டிருந்தது. இதிலே அவர்களுக்கு டெனன்ட்ஸ்களுக்கு எந்த விதமான சலுகைகளும், உரிமைகளும் இல்லாமல் "லாக்குனா" இருக்கிறது. தற்போது நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால் இந்த கோவாபரேடிவ் சொசைட்டி, கிரடிட் சொசைட்டி எல்லாம் டெனன்ட்ஸ்களுக்கும் பயனடைந்து கொண்டிருக்கிற நேரத்திலே அதிகமாக இருக்கிற சாகுபடியாளர்களுக்கு வசதி இல்லாமல் போகிறது. அவர்கள் பயனடையாததை நாம் இந்த மசோதாவின் மூலம் காண்கிறோம். இதை மனதில் கொள்ளவேண்டுமென்பது என்னுடைய கருத்து. இனிமேல் சாகுபடியாளர்களுக்கு, ஸ்மால் பார்மர்ஸ்களோடு, டெபனிஷன்னில் சேர்த்து ஒரு திருத்தம் கொடுத்தால் மிக நல்லபடியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவில் உள்ள அத்தனை கருத்துக்களும் நல்ல முறையில் இருக்கிறது என்பதனை நான் சொல்லிக் கொண்டு 84 (ஜி)-ல்

'Provided that any member admitted under this section may with the approval of the Registrar, be removed from membership

by the committee; and any application for obtaining such approval shall be made within two months from the date of admission of such member.'

என்று இருக்கிறது. அந்த "டு மன்த்ஸ்" என்பது குறைந்த பட்சம். கொஞ்சம் கூட அவர்களுக்கு என்ன உசிதம் என்று கருதுகிறீர்களோ அப்படிக் கொடுத்து, இந்த டெபனிஷனில் சேர்த்தால் தான் இது முழுமையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதா தேவையற்ற மசோதா என்பதை ஆரம்பத்திலேயே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது தேவையற்ற மசோதா என்பதை என்னுடைய கருத்திலே சொல்வதைவிட அமைச்சர் அவர்களுடைய கருத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் விதத்திலே சட்டத்தைக் கொண்டுவந்து விளக்கிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்கும் முன்பாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இந்தத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பிரமையை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. இந்த மன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி, ஏதோ புதியதாக நிலைமையைத் தான் உருவாக்கி விட்டதாகவும் அதன் விளைவாக மாபெரும் விளைவுகள் புரட்சிகள் எல்லாம் இந்த நாட்டிலே ஆரம்பிக்கப்பட்டது என்று நிலைமை ஏற்படுத்தி, அந்தப் புரட்சிக்குத் தன்னைத் தலைவனாக, கதாநாயகனாக உண்டாக்கிக் கொள்ளுகின்ற பிரமையை இந்த நாட்டிலே உண்டாக்குகின்ற வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இன்றைய தினம் ஸ்மால் பார்மர்ஸ், சிறு விவசாயிகள், சின்னஞ்சிறு விவசாயிகள், ஏழை விவசாயிகள் இவர்களுக்கு உதவக்கூடிய நிலைமை என்பதை அழுத்தம் திருத்தமாக சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்தவர்கள், வழக்கறிஞர், சட்டம் படித்தவர்கள், அவர்கள் கதாநாயகன் என்றெல்லாம் பேசுவது......

திரு. கா. இராமமூர்த்தி : நீங்கள் மட்டும் ஜனநாயகத்தின் அரிச்சுவடியை படித்துவிட்டு வாருங்கள் என்று சொல்லலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஜனநாயகத்தின் அரிச்சுவடியைப் படித்து விட்டு வாருங்கள் என்று நேற்று ஏன் சொன்னேன் என்பதை நண்பர் இராமமூர்த்தி அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனால் விவாதத்திற்கு வந்து சூட்டோடு பேசினால் அதற்கு தக்க முறையில் சூடாக பதில் கிடைக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : கிடைக்கிற பதிலை எதிர்பார்த்துத் தான் கொடுக்கிறோம். (குறுக்கீடு).

This is the way in which the Chair has been respected by this House and the Hon. Minister himself leaving apart all these things,



தலைவர் அவர்களே, இந்த சின்னஞ்சிறு விவசாயிகள் பற்றி மிக விரிவான விளக்கங்கள் இங்கே தரப்பட்டிருக்கிறது. சின்னஞ்சிறு ஏழை விவசாயிகள், ½ ஏக்கர், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் விவசாயிகள் என்றெல்லாம், இந்த விவசாயிகளை எந்தெந்த விவசாயிகளுக்கு இந்த மசோதா வந்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

இந்த சட்டப் பேரவை மசோதா எண் 12/69—இதன் மீது பேசும்போது அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகள் யார் என்பதைப் பற்றிப் பேசினார்கள். அதிலே 28—8—1969 சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலே "டாக்டர் ஹாண்டே அவர்கள் நான் 1 ஹெக்டார் என்று சொன்னதாகவும், அவர் ஐந்து ஹெக்டார் என்று சொன்னதாகவும் சொல்கிறார். ஐந்து ஹெக்டார் அதாவது 12½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களை எப்படி சிறு விவசாயி என்று கூற முடியும்" என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் 12½ ஏக்கர் வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகளாக ஆகமாட்டார்கள் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதே அமைச்சர் அவர்கள் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த சிறு விவசாயிகளுக்கு இருக்கின்ற சட்டத்தை வைத்து நன்மை செய்ய முடியும் என்று அவர்கள் கூறுவது இந்த லிப்ட் இரிகேஷன் உட்பட நிறைய வசதி செய்து கொடுக்க முடியும் என்று பேசியிருக்கிறார்கள். அதுவும் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு பதில் சொல்கிற வகையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 2½ ஏக்கர் வைத்திருப்பவர்கள் சிறு நில சொந்தக்காரர்கள் என்று அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். "அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள் சிறு நிலச் சொந்தக்காரர்கள் என்றால் 2½ ஏக்கரா உள்ளவர்களை வைத்துக் கொள்ள சம்மதித்தார் சந்தோஷம். நடைமுறையில் இப்படிப்பட்ட சிறு நில விவசாயிகளுக்குத்தான் கடன் வழங்குவதில் முதலிடம் அளிக்கப்படும். இந்த வகையில்தான் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு கிணறு, ஒரு பம்பு செட்டு வைப்பது என்றால் 5 ஏக்கரா முதல் பத்து ஏக்கரா பாசனம் பெறும். இந்த ஐந்து முதல் பத்து ஏக்கராவுக்குச் சொந்தமாக நான்கு விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால் அந்த நான்கு பேர்களும் சேர்ந்து ஒரு கூட்டுறவு சொசைட்டியை அமைத்துக் கொள்ள கடன் கொடுப்பதில் இவர்களுக்கு முதலிடம் கொடுக்க வழி செய்யும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன." என்று பேசியிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பேசிய பேச்சு, அதோடு மட்டுமல்ல. இருக்கின்ற சட்டமே போதும் என்று 24—3—1969-ல் சொல்லி இருக்கிறார்கள். அதிலே அவர்கள் சொல்லுகிற நேரத்திலே ஒரு விளக்கத்தைத் தருகிறார்கள்.

"வட்டார அளவிலே வங்கி வசதிகளைப் பெருக்குவதற்குக் கூட்டுறவு மத்திய வங்கிகளால் இயலாது போனால், கூட்டுறவுத் துறையில், "வட்டார வங்கிக் கழகங்களை" அமைத்தாகவேண்டும் என்பதைத் தவிர இன்று நிலவும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லை.

வட்டார அளவில் இயங்கும் இவ்வங்கிகள் செயல்படத் தொடங்கிவிடில் உழவர்களுக்குக் கடனுதவி கிடைப்பதில் உள்ள காலதாமதம் மறைந்து விடும். கடனுதவி நாடும் மக்கள் நெடுந் தொலைவு அலைய வேண்டிய தொல்லையும் நீங்கும். அத்துடன், கிராம மக்களிடையே "வங்கிப் பழக்கம்" பரவும்.

ஆகவே இந்த அளவு இந்த அமைச்சர் அவர்கள் கடந்த காலத்திலே இன்றைக்கு இருக்கிற சட்டங்களை வைத்தே செய்துவிடலாம் என்று பேசி இருக்கிறார்கள்.

இந்த அமைச்சர் அவர்கள் இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு ஸ்மால் பார்மர்ஸ் என்பதற்கு இரண்டு வகையிலே டெபனிஷன் தந்திருக்கிறார்கள். ஒன்று இரண்டரை ஏக்கர் வரை வைத்திருக்கிறவர்கள் சிறிய விவசாயிகள் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், இன்னொன்று $12\frac{1}{2}$ ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் சிறிய விவசாயிகள் அல்ல என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சிறிய விவசாயிகள் என்பவர்கள் இரண்டரை ஏக்கருக்கும் $12\frac{1}{2}$ ஏக்கருக்கும் இடையே எங்கே தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஸ்மால் பார்மர்ஸ் டெபனிஷனிலே 'as may be prescribed' என்றுதான் சொல்கிறார்களே தவிர எவ்வளவு என்ற விளக்கம் இல்லை. கோபப்படுவதிலே பிரயோசனம் இல்லை. மசோதாவிலே "small farmer" "lift irrigation society" means a lift irrigation society of which no member owns more than such extent of land as may be prescribed'
என்று இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு முன்னதாக நமக்குக் கொடுத்திருக்கின்ற தகவல் $2\frac{1}{2}$ ஏக்கர் வைத்திருக்கிறவர்களைச் சிறிய விவசாயிகள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் $12\frac{1}{2}$. ஏக்கர் என்ற அளவிலே வைத்திருக்கிறவர்கள் சிறிய விவசாயிகள் அல்ல என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதிலே யார் சிறிய விவசாயிகள் என்ற தெளிவான விளக்கத்தை இந்த மசோதாவிலே சேர்க்கின்ற தைரியம், துணிவு இந்தத் துறைக்கு இந்த துறை அமைச்சருக்கு இல்லை. இந்த மசோதா கொண்டுவருகின்ற நேரத்திலே இல்லை. இனிமேலே விதிகளிலே காட்டுவதாகச் சொல்கிறார்கள். எப்பொழுது முடியுமோ எனக்குத் தெரியவில்லை.

நான் மீண்டும் ஒரு குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இது வெறும் விளம்பர நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா என்று குற்றம் சாட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள். நேரமாகிறது.

I must restrict the time.

THIRU K. RAMAMOORTHY: You have always the power to restrict the time. This is a Bill on which we have got to express our views. . .

MR. SPEAKER: Even in respect of Bills, I have to restrict the time.





திரு. க. இராமமூர்த்தி: இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் சிறிய விவசாயிகளுக்கு நன்மை செய்வதாக இருந்தால் ஒரு அவசரச் சட்டம் மூலமாகக் கொண்டுவரப்பட்டு உடனடியாகச் செய்வது போல் கொண்டுவந்து கம்மிங் இன்டு போர்ஸ் 10—11—1970-லிருந்து என்று சொன்னார்கள். 10—11—1970-வது தேதியிலிருந்து கொண்டுவர என்ன விளைவுகள் என்பதை அவர்கள் சொல்லவில்லை, இனிமேல் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அது மட்டுமல்ல, சிறிய விவசாயிகள் நிரந்தரக் கடன்தாரர்களாக அரசாங்கத்தின் பிடிப்பிலே சிக்கிக்கொண்டுவிடுகின்ற சொஸைடியாக இது மாறிவிடும் என்றும் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். எல்லாத் தரப்பினருக்கும் எங்களுக்கும் தெரியும். ஆளும் தரப்பினர்க்கும் எங்களுக்கும் தெரியும். ஐ.எம்.எஸ்.-லிருந்து கடன் என்ற பெயராலே விவசாயிகள் கடன் வாங்கியதன் விளைவாக அதிகாரிகளின் பிடியிலே அவர்கள் சிக்கிக்கொண்டு அல்லல் பட்டுக்கொண்டு வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்படுகிறார்கள், அப்படிப்பட்ட நிலைமை என்னுடைய மாவட்டத்தில் மட்டுமல்ல, பல மாவட்டங்களிலே இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் சிறிய விவசாயிகள் என்ற பெயரிலே நிலம் படைத்தவர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்கள் விரும்புகிற நேரத்திலே பிரிந்து செல்லமுடியாத வகையிலே ஒரு கட்டுப்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்திலே சேருகிறவர்கள் விரும்பிச் சேர்ந்தாலும் திரும்பிச் செல்லமுடியாத நிலைமையை இந்த மசோதா உருவாக்குகிறது. இதன் விளைவாக சிறிய விவசாயிகள் தங்களுக்குப் பிடிக்காத விவகாரங்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே நடைபெறுமானால் பிடிக்காதவர்கள் பதவியைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்கு ஆதரவாகவோ பாதகமாகவோ செயல்பட்டால் சிறிய விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வெளியேறுவதற்கு இருக்கின்ற வாய்ப்பையும் சுதந்திரத்தையும் மறுக்கிறது இந்த மசோதா. இது சட்டமாக்கப்படுமேயானால் சிறிய விவசாயிகளைக் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆட்சியிலே பிடிப்பிலே கொண்டுவருவதற்கான மறைமுகமான சர்வாதிகாரம் வந்துவிடும். இந்த நாட்டு விவசாயிகள் நிரந்தர அடிமைகளாக்கப்படுவார்கள்.

இந்த மசோதா தேவையற்றது. இந்த மசோதாவைத் தெளிவாக நாம் பார்க்க வேண்டும். இதனுடைய உண்மையான நோக்கமே சிறிய விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு என்றால் இருக்கின்ற சட்டத்தை வைத்துக்கொண்டே செய்துகொள்ள முடியும் என்று அவர்கள் சொல்லியிருந்தாலும் இப்பொழுது இருக்கிற சட்டத்திலே வழியிருக்கிறது என்று சொன்னாலும்கூட இப்பொழுது கொண்டுவந்து இருக்கிறார்கள். புதிதாக ஒரு அத்தியாயத்தை உண்டாக்கத் தேவையில்லை. இந்த மசோதா இந்த மன்றத்தினுடைய காலத்தை வீணடிக்கின்ற ஒன்று 'தேவையற்றது' என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, பாசன சொஸைடி ரொம்ப அவசியம் என்று நான் கருதுகிறேன். சிறு நிலக்காரர்கள் தங்களுடைய சக்தியிலே கிணறு போன்றவைகளை

ஏற்படுத்திக்கொண்டு பாசன வசதிகள் செய்துகொள்வதற்கு பல பேர்கள் சேர்ந்து செய்வதற்கு வசதியாக இது அமைந்திருக்கிறது. இஷ்டப்பட்டவர்கள்தான் இதிலே சேர்ந்துகொள்ளலாம், கட்டாயப் படுத்தப்படப் போவதில்லை. அப்படி கட்டாயப்படுத்த வேண்டு மென்று இந்த மசோதாவிலே சொல்லப்படவில்லை. எனவே விரும்புகிறவர்கள் சேர்ந்துகொள்ளலாம். இதுவரையில் இப்படிப் பட்ட வசதி கிடையாது. இதிலே சர்வாதிகாரம் எப்படி வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆகையினாலே இதை நான் வரவேற் கிறேன். இதிலே 'ஸ்மால் பார்மர்ஸ்' என்பதற்கு விளக்கம் சொல்லப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை யிலும் கோயில் நிலங்களையும், பெருநிலக்கிழார்களுடைய நிலங்களை யும் எடுத்துக் கொண்டால் குத்தகைதாரர்களே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சொஸைடி நிலச் சொந்தக்காரர்கள் சேர்ந்து அமைக்கின்ற சொஸைடிதான் என்று நினைக்கிறேன். இதிலே சொத்துக்களை அடமானம் வைப்பது என்றால் சொந்தக்காரர்கள் தான் செய்யமுடியும். நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் இது பயன்படும் என்ற அளவிலே இருக்கிறது. குத்தகைக்காரர்களாக இருக்கிறவர்களுக்குப் பயன் கிடையாது. எனவே குத்தகைக்காரர் களாக இருக்கிறவர்களுக்கும் இந்த வசதி கிடைக்கக்கூடிய முறையிலே இதைச் செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே காலத்தோடு தண்ணீர் இறைத்துப் பாசனம் செய்யவேண்டும். நேற்றுக் கொண்டுவந்த மசோதாவிலே இருப்பதைப் போல இந்த மசோதாவிலும் கல்டிவேட்டர்ஸ் என்பதையும் விளக்கத்திலும் சேர்க்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இதிலே எல்லா நிலத்தையும் டெக்ளரேஷன் செய்ய வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். 10 பேர்கள் சேர்ந்து கொண்டு ஒருவருக்கு 5 ஏக்கர் வீதம் இருந்தால் 50 ஏக்கர்களையும் டெக்ளரேஷன் செய்ய வேண்டுமென்றால் அடமானம் சொஸைடியிலே வைத்து விட்டால் மற்ற கடன்கள் வேண்டுமென்றால் அவர்கள் கடன் வாங்குவதற்கு அடமானம் வைப்பதற்கு நிலம் இருக்காது. கடன் தொகை எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கான நிலத்தை மட்டும் அடமானம் வைத்தால் போதும் அதற்கு டெக்ள ரேஷன் கொடுத்தால் போதும் என்று வைத்துவிட வேண்டும். அப்படி இல்லாமல் பூரா நிலத்தையும் வைக்க வேண்டுமென்று இருக்கிறது என்று நினைக்கிறேன். இன்னொரு சொஸைடியிலே கடன் வேறு காரியங்களுக்கு வாங்க வேண்டுமென்றால் வழியில்லை. எனவே எவ்வளவு கடன் வேண்டுமோ அந்த அளவிற்கான மதிப்பிற்கான நிலத்தை மட்டும் அடமானம் வைப்பதற்கு அனுமதி அளிக்கும் வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். மெம்பர்ஷிப் அப்ளிகேஷன் கொடுத்தால் முதலிலேயே கொடுத்து விடும்பொழுதே அதோடு சேர்த்தே அக்ரிமெண்டும் கொடுக்க வேண்டுமென்று செய்ய வேண்டும். அப்ளிகேஷன் போடுவது முதலிலே, பிறகு அக்ரி மெண்ட் கொடுப்பது—அதற்காக ஒரு தனிப் பிரிவு பின்னாலே வரு கிறது என்று நினைக்கிறேன்—என்று தனித்தனியாக செய்துகொண்டி ருந்தால் நிர்வாகத்தில் எவ்வளவு தாமதம் ஆகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.



சில பகுதிகளிலே ஓப்பன் வெல் பயன் தருவதில்லை: ஆழ் குழாய்க் கிணறுதான் வெட்டவேண்டும். எல்லா இடங்களிலும் அது பயன்தராது. ஆழ் குழாய்க் கிணறு போடுவதிலே இந்த சொஸைடி யின்மூலம் செய்வதிலே 3,000, 4,000 நஷ்டம் வந்தால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக விதிகள் போடுகிறபொழுது அதைப் பார்த்துப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் சொன்ன குறைபாடுகளைப் போக்கி இந்த மசோதாவை நல்ல முறையிலே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே கண்டிருக்கிற ஷரத்துக்களின்படி—தமிழகத்திலே தண்ணீர் வசதியில்லாத பிரதேசங்கள் ஏராளமாக இருக்கின்றன— அந்தப் பிரதேசங்களிலே வாழக்கூடிய சிறு விவசாயிகளுக்குத் தண்ணீர் வசதி கிடைப்பதற்காகத் தண்ணீர் இறைவைக்கு கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக ஏற்பாடு செய்வதாலே நல்ல பலனை அடைய முடியும் என்று கருதுகிறேன். ஆகவே இந்த மசோதாவிலே ஏற்கனவே பேசிய நண்பர்கள் சொன்னபடி சிறிய விவசாயிகள் என்றால் ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்லே 1 அல்லது 2 ஹெக்டார் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் மசோ தாவிலே டெபனிஷனிலே வரையறுத்து சிறிய விவசாயிகள் என்றால் யார் என்று போடவில்லை: விதிகளிலே நிர்ணயிக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட முக்கியமான மசோதாவிலே சிறிய விவசாயிகளுக்குத்தான் அதிகமான வசதிகள் கிடைக்க வேண்டும். மசோதாவிலே சிறிய விவசாயிகள் யார் என்பதற்கு ஒரு விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். 84 ( H ) என்ற பிரிவில் சாப்டர் VI உடைய ஷரத்துக்களுக்குக் குந்தகம் இல்லாத முறை யிலே விஷேமான சலுகைகளை அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த வசதிகள் என்ன என்ன என்பதை சட்டத் திலேயே கொண்டு வரவேண்டும். வசதி படைத்த விவசாயிகள் சொந்தச் செலவிலே புஞ்சைப் பிரதேசங்களிலே வசதிகள் செய்து கொள்ளமுடியும். சிறிய விவசாயிகளுக்கு இறைவைப் பாசன வசதி செய்து கொடுப்பதில்தான் நம்முடைய முனைப்பு முழுவதும் இருக்க வேண்டும். விசேஷ வசதிகள் என்ன என்பதை மசோதாவிலே சொல்லி விடுவதன் மூலம் சிறிய விவசாயிகள் நிறையச் சேர்ந்து பயன் அடைய வேண்டுமென்ற நிலைமை ஏற்படும். விவசாயம் செய் வதற்காக சிறு விவசாயிகளுக்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கப் படும் என்று தெரிவிப்பதற்குப் பயன்படும். ஒருவர் இதிலே சேர்ந்தால் எந்த அளவுக்கு தன்னுடைய நிலத்திலே ஈடாக வைக்க வேண்டுமென்று ஒரு அளவு வைத்தால் நல்லது. பல காரியங் களுக்காக கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படும். அப்பொழுது நிலத்தை வைத்து கடன் வாங்க முடியாத நிலைமை ஏற்படும். விவசாயிகள் வேறு காரியங்களுக்காகக் கடன் வாங்க முடியாத நிலைமை ஏற்படும். விவசாயிகளுடைய தேவைகளை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு அவர்களுக்குக் கடன் வசதி, தண்ணீர் வசதி இவற்றைப் பெறுவதற்கு ஒரு சொத்துத் தான் இருக்கிறது. அதை வைத்துப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்

களிலே கடன் பெற வேண்டியிருக்கிறது. சொஸைடியிலே கடன் கொடுத்தவருடைய சம்மதம் இல்லாமல் வேறு சொஸைடியிலே வாங்க முடியாத நிலைமையில் அங்கேயே சிக்கிக் கொள்கிற நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற நிலைமையெல்லாம் வருகிறது.

இது சற்றுக் கடினமாக இருக்காதா? ஆகவே, இன்றைய தினம் ஒரு குறிப்பிட்ட விவசாயி, ஏதாவது காரணத்தினுல் தன்னுடைய நிலத்தை விற்க வேண்டுமென்ருல், இதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால், இதிலேயுள்ள கமிட்மெண்டிலிருந்து பங்குத்தொகையைச் செலுத்தி விட்டால் விலகிக்கொள்ளலாம் என்ற நிலையிருந்தால், இக்கட்டான நிலைக்கு ஆளாவோமா, இதிலிருந்து மீள முடியாதோ என்ற பயம் இருக்காது. இதில் சேருவதற்கு ஊக்கமளிக்கும். ஆகவே, இந்தக் கருத்துக்களின் நோக்கம், சிறிய விவசாயிகள் ஊக்கத்தோடு சேர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும், சிறு விவசாயிகள் சொஸைட்டிகளுக்கு விசேஷ சலுகைகள் என்று மொட்டையாகக் குறிப்பிட்டிருப்பதை அரசாங்கம் தெளிவாகச் சொல்வதன் மூலம் இந்த மாநிலத்திலேயுள்ள புஞ்சைப் பிரதேசங்களிலேயுள்ள விவசாயிகளுக்கு இந்த வசதியைச் செய்து கொடுக்க நல்ல காரியத்தைச் செய்ததாக ஆகும். ஆகவே, இந்தக் கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறு விவசாயிகள் சொஸைட்டிகளை அமைப்பதற்கு கூட்டுறவு இலாகா உந்திக் கொள்ள வேண்டும், விவசாயிகளாக முன் வந்தால்தான் ஏற்பாடு செய்யப்படும் என்பதில்லாமல் இலாக்காவின் மூலம் அதிலிருக்கும் வசதிகளைச் சொல்லி, குறிப்பாக, பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்கு இதிலுள்ள அனுகூலங்களை எடுத்துச் சொல்லி ஏற்பாடு செய்வதற்கு இலாக்காவின் முன்முயற்சி தேவை என்பதை வற்புறுத்திக்கூறி அமர்கிறேன்.

Dr. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, on behalf of our party. I want to strees the fact that this Bill is the direct result of parcelling of lands into small bits. A few years ago we warned that a situation of this kind would arise and small farmers would find it increasingly difficulty to mobilise the necessary capital Nobody paid heed to our warnings then and the land was parcelled into small bits. What do we find now? This Bill has come now and under this Bill we find that a person owning one or two acres will not be able to irrigate his land. He will not have the wherewithal or capital to invest in his land. That is exactly what we visualised when we were against parcelling of land previously. At that time we were shouted down as reactionaries and all sorts of epithets were used against us. We cautioned but it was not beeded. What is the net result? Ultimately production is affected.

We said that small farmers would find it difficult to cope up with the increasing needs of fertilisers, investment on seeds, for lift irrigation etc. It is impossible for a small farmer to have one pumpset to irrigate his land. It has become necessary for him to resort to co-operative efforts. Recently we have seen what had



happened in the other country. It ended in a fiasco. We said it would happen ultimately. But we were then dubbed as reactionaries. Now they, in the other country had come to realise that they had to make changes in their system. They had taken a decade to realise their wrongs. But what are we doing ? We are going to realise the same thing after a decade or two, that we were wrong.

Let us see what we are doing. Let us take Clause 84 (E) It says :

" Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force, no member of a lift irrigation society shall, so long as he continues to own the land for which water is supplied by the lift irrigation society or any portion thereof, be entitled to withdraw his membership ".

With due respect to my distinguished friend Thiru Marimuthu, I have to state, just as my leader Professor Ranga had stated, that ultimately what will happen is that the small landowner will be dispossessed of his land. We cannot even call them as small land owners. They are persons possessing small bits of land. They will be dispossessed of their holdings by this method. I am pointing this out to the Hon. Minister. He will of course in his own inimitable method give a suitable reply. It would be interesting to watch his reply also. Of course, we go on saying this is all for small people, poor people. All these things are vote-catching devices. Without those slogans one cannot come to this House. That has become the fashion of the day. In fact what we are doing is we are driving away the small people from their land. In the name of nationalisation, we have driven the educated people into unemployment; neither the private nor public sector has come forward to give emploment to our graduates; we have only increased unemploymenf by nationalisation. Similarly because of this ' land policy ' what will happen ultimately is that the man will be dispossessed of his land. He is now in a ' soup ' (The Hon. Thiru Si. Pa. Aditanar: "Tast soup" For our distinguished Minister it may be 'tasty ', But for the poor farmer, it will be a ' tasteless and dangerous soup '. That is my fear. If he is not able to pay an instalment or two, he cannot go either forward nor come backward. He will be completely under the wise clutches of governmental enactment from which he cannot escape. He will be the victim of this Clause 84 (E).

I would suggest one remedial measure for the consideration of the Hon. Minister and which will prevent the small farmer from falling into the ' soup '. Better delete this clause, and see that the poor farmer is somehow saved.

See the second paragraph. It says :—

" Provided that the lift irrigation society may subject to such conditions as may be prescribed permit any member to withdraw. "

What a dangerous thing ? How much easy to dispossess him ? What do you mean by this term 'small farmer'? Why can't you define it clearly? Why not make it clear? Why should you fight shy or defining it and leave it to the Rules Committee? Specifically, say that a small farmer is one having two or three acres. Be bold enough to define it. Why this wishywashy thing ? I hope and trust the Hon. Minister in addition to the interesting things he would put in his reply, will instead of damning me, try to save the farmer. Thank you.

திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகரவர்களே, அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா, நல்லமுறையிலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அவர்கள் ஒரு தனி முயற்சி எடுத்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நல்ல நோக்கத்தோடுதான் இதை கொண்டு வந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் இலாக்காவை பரவலாக, எல்லா இடங்களிலும் விரிவுப் படுத்த வேண்டுமென்று பல வழிகளிலே முயற்சி எடுத்து இதை ஒரு பகுதியாக, சிறு விவசாயிகள் இதைப்பயன்படுத்த வேண்டு மென்று இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நோக்கம் நல்ல நோக்கம்தான். ஆனால் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்கெனவே என்ன ஆயத்தங்கள் செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயிகளில் தண்ணீர் வேண்டாமென்று சொல்லுபவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். தண்ணீர் வேண்டு மென்று சொல்லும் விவசாயிகளில் அதிகமாக எல்லோரும் விரும்பு வார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் எந்தெந்தப் பகுதியிலே கிடைக் கிறது என்பதை நாம் முன்கூட்டியே பரிசீலனை செய்து இந்த இடங் களில் இந்திந்த இடங்களில் இத்தனை இத்தனை அடி ஆழத்தில் ஒரு குழாய்க்கிணறு அமைக்க எவ்வளவு செலவாகும், குழாய்க்கிணறுகள் இறக்க எத்தனை நாட்களாகும் என்பதற்கெல்லாம் பரிசீலனை செய்து ஏதாவது செய்திருக்கிறோமா என்பதைப் பார்க்கும்பொழுது நம் முடைய மாநிலத்திலே இன்னும் நடைபெறவில்லை என்பதைத்தான் என்னைப் பொறுத்தவரையில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலம் குழாய்க்கிணறு இறக்கும்பொழுது அவ்வாறு இறக்குவதற்குத் துளைக்கருவிகள் இருக்கின்றனவா? இன்றைய தினம், மாநிலம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும்பொழுது, இத்தனை இடங்களிலே இத்தனை மாதங்களிலே காரியங்கள் நடக்கின்றன என்ற நிலவரத்தைப் பார்க்க முடியவில்லை. தன்னுடைய நிலத்தை சொஸைட்டியிலே பதிவு செய்து வைத்துவிட்டு, வேறு வழியிலே ஈடுசெய்து, வேறு முறையிலே குழாய்க்கிணறுகளை இறக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

முன்கூட்டியே, போதுமான கருவிகள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அந்தக் கருவிகள் சரியானபடி வேலை செய் கின்றனவா என்றும் பார்க்க வேண்டும். ஒரு வருஷத்தில் பத்து குழாய்க் கிணறுகள் போடக்கூடிய அளவுக்காவது கருவிகள் இருக் கின்றனவா என்றால் இல்லை. அதற்கும் பழுது ஏற்பட்டு விட்டால்



இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் பழுது பார்க்கப்படாமல் இருக்கும் நிலை இருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் சரியாகப் பரிசீலிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கம் அமைப்பது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி அல்லது கூட்டுறவுத் துறை அதிகாரி அல்லது கிராம சேவக்குகள் முயற்சி எடுத்து விவசாயிகள் அதிலே சேரும்படியாக ஊக்குவிக்க வேண்டும்.

சிறு விவசாயிகள் என்றால் யார் என்று கேட்டார்கள். பெரிய விவசாயிகள் மின்சாரத்தை ஏற்கனவே பயன்படுத்தி விட்டார்கள். பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைப் பயன்படுத்தி விட்டார்கள். யார் யார் பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரையும், மின்சாரத்தையும் விவசாயத்திற்காக இதுவரை பயன்படுத்தவில்லையோ அவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள்தான். ஒரு ஏக்கரா அல்லது பத்து ஏக்கரா என்று பார்க்க வேண்டியதில்லை. எத்தனை ஏக்கராக இருந் தாலும் அதிலே உற்பத்தியாவது நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தான்.

ஏதோ இதை விளம்பரத்திற்காகச் செய்வதாக முன்னால் பேசிய வர்கள் சொன்னார்கள். சிறியவர்கள் என்று சொன்னாலே சில பேருக்கு அலர்ஜி. எல்லாம் அரசாங்கத்திற்கு அடிமையாகிவிடும் என்றெல் லாம் சொன்னார்கள். அவர்கள் எப்போதும் இப்படித்தான் சொல்லுவார்கள். அதைப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை. ஏழைகள், சிறியவர்கள் என்று சொல்லும்போது ஏற்கனவே பெரிய அளவில் அனுபவித்து வருகிறவர்களுக்கு ஒரு அலர்ஜி.

இதை அமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நல்ல நோக்கம் நிறைவேறும் வகையில் செயல்படுத்த வேண்டும். அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் விஸ்தரிப்பு அதிகாரிகள் அல்லது கிராம சேவக்குகள் மூலம் இந்தத் திட்டத்தைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும், கூட்டுறவுச் சங்கம் அமைத்து அவர்களை இதிலே சேர்க்க வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு அதிகப் பளு ஏற்பட்டுவிடக் கூடாது. கிணறுகளைத் தோண்டி தண்ணீர் வராமல் போனால் முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். விவசாயி பாதி ஏற்றுக் கொள்ள வேண்டும். கால்வாசி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கிணறுகளைத் தோண்டி தண்ணீர் வராமல் போனால் அந்தச் செலவு முழுவதையும் மாநில நிலவள வங்கியே ஏற்றுக்கொள்ளுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோ. பூவராகன்: அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஒரு மாதத்திற்குள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு ஒரு மாதத் திற்குள் குழாய்க் கிணறுகள் தோண்டி தண்ணீர் பயன்படும் அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மின்சார இலாகாவும், குழாய்க் கிணறு இறக்கும் இலாகாவும் தொடர்புடையதாக இருக்க வேண்டும். குழாய்க் கிணறு இறக்கிவிட்டு மின்சாரத்திற்காக ஆறு மாதம், ஒரு வருஷம் காத்திருக்கும் நிலைமை இருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. பி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆக்கபூர்வமான யோசனையாக இருக்கிறது. நான் மகிழ்ச்சியோடு ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இதற்காக மின்சார இலாகாவிற்கு நிலவள வங்கியில் இருந்து 3,000 ரூபாய் கொடுப்பதற்கும் அந்தப் பணத்தை விவசாய மறுநிதி வங்கி யிலிருந்து பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கோ. பூவராகன்: இதிலே எனக்குச் சொந்த அனுபவம் இருக்கிறது. இந்தப் பணத்தைக் கொடுத்து விட்டால் மட்டும் போதாது. அவர்கள் பல விஷயங்களைப் பார்க்கிறார்கள். தனிப் பட்ட விவசாயியாக இருந்தால் நேரடியாகத் தொடர்பு கொண்டு மின்சார இணைப்பை வாங்கிக் கொள்ள முடியும். சங்கம் என்று அமைத்தால் யார் அந்த ஏற்பாடுகளைச் செய்வது? அந்தப் பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும். மின்சார இலாகாவைப் பொருத்தவரை சில முறை வைத்திருக்கிறார்கள். ஏதோ எதிர்பார்க் கிறார்கள். அதை இந்த மன்றத்திலே வெளிப்படையாகச் சொல்ல முடியாது. ஆகவே, அந்தப் பொறுப்பை பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளும்படி அமைக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதற்கு விதிகளை அமைக்கின்றபோது குறைபாடுகள் எல்லாம் இல்லாமல், விவசாயிக்கு அதிகச் செலவு இல்லாமல், பளு இல்லாமல் அமைக்க வேண்டும். அதே போன்று சங்கங்களும் நல்ல முறையில் அமைக்கப்பட்டு துரிதமாகப் பணியாற்ற வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே. இந்த மசோதா மிக வரவேற்க வேண்டிய மசோதா. சாதாரணமாக, சிறு சிறு விவசாயிகள் இதுவரை தன்னுடைய நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு கிணறு வெட்டவோ, வேறு அபிவிருத்தி செய்யவோ எந்தவிதமான கடனும் பெற முடியாமல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது கொண்டு வந்தி ருக்கும் மசோதாவில் மேலும் ஒன்றிரண்டு அம்சங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் பேச முன் வந்திருக் கிறேன்.

புஞ்சைப் பகுதியில் ஒரு கிணறு வெட்டுவதற்குக் குறைந்தது பத்தாயிரம் ரூபாய் ஆகிறது. சுவர் கட்ட, ரூம் கட்ட, பம்ப் செட் வைக்க மேற்கொண்டு பத்தாயிரம் ரூபாய் ஆகிறது. 20,000 ரூபாய் செலவு செய்து குறைந்த பட்சம் 10, 15 ஏக்கர் வரை பாசனம் பெறு கின்ற அளவுக்கு வகை செய்தாலும்; விவசாயிகள் பத்தாண்டுக் காலத்தில் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் வரை திரும்பச் செலுத்த வேண்டும். அப்படிப் பார்க்கும்போது ஒரு ஏக்கர் வைத்திருக்கும் விவசாயி ஆண்டு ஒன்றுக்கு 300 ரூபாய் திரும்பச் செலுத்த முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

அதே நேரத்தில் இன்று அந்தப் புன்செய் பகுதிகளில்—அப்போது அரசாங்கச் செலவிலேயே சமுதாயக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படுகின்றன—லிப்ட் இரிகேஷன் சொஸைட்டிகள் உள்ள



இடங்களில் இப்படிப்பட்ட சமுதாயக் கிணறுகளை வெட்டிக்கொடுத் தால்தான் கிணற்றுப் பாசனத்தை மேலும் செம்மைப்படுத்த வசதி யாக இருக்கும். இந்தச் சங்கத்தில் சேர்ந்திருந்திருப்பவர்கள் கிணறுகளை ஆழப்படுத்த அல்லது பாசன வசதி செய்து கொள்ள கடன் வாங்கியிருப்பதோடு மேலும் விவசாயம் செய்வதற்காக குறுகிய காலக் கடன்கள் பெற முடியுமா என்ற சந்தேகம் இருக் கிறது. அதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கொடுக்கப்படும் நீண்ட காலக் கடன்கள் பத்து ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும் என்றிருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் இந்த நீண்ட காலக் கடன்களை முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் திரும்பச் செலுத்தலாம் என்ற முறை இருக்கிறது. ஆகவே நீர்ப்பாசன வசதிக்காக கொடுக்கப்படக் கூடிய கடன்களை முப்பது ஆண்டுத் தவணையில் திரும்பிச் செலுத்தக் கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகைகள் அளித் தால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். நஞ்சைப் பகுதிகளுக்கு பாசன வசதியை அரசே செய்து கொடுப்பது போல புஞ்சைப் பகுதிகளில் ஏற்படக்கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றவற்றிற்கும் சமுதாயக் கிணறுகள், மேலும் குழாய் கிணறுகள் அமைப்பது போன்றவற்றிற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தண்ணீர் இல்லாமல் போனாலோ அல்லது அதனால் நஷ்டம் ஏற்பட்டாலோ அந்தச் செலவு பூராவையும் மாநில வங்கியே ஏற்றுக்கொள்வதாக சொன்னார்கள். அது மிக மிக நல்லதொரு ஏற்பாடு. பத்து பதினைந்து ஏக்கர்களில் பத்து பேர்கள் சேர்ந்து ஒரு கிணறு வெட்டினாலும் ரூ. 20,000 ஆகும். அதைத் திருப்பிச் செலுத்துவதிலுள்ள கஷ்டங்களை உணர்ந்து அதை மேலும் சுலப மான தவணையில் திரும்பச் செலுத்தக்கூடிய அளவிற்கு திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. ர. நல்லசிவன்: மதிப்பிற்குரிய உப-தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பேசும்போது விவசாயிகள் கூட்டுறவு முறையின்கீழ் வருவதற்கு மிகவும் தயங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மைதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின்கீழ் நிலச்சீர்த்திருத்தம் வந்திருக்கிறது. இனி நமக்கு பெரிய அளவில் நிலங்கள் கிடைக்கப் போவதில்லை. சிறு சிறு பட்டாதாரர்கள்தான் அதிகமாவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களையெல்லாம் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வருவதற்கு நிர்ப்பந்தமான நடவடிக்கைகள் எடுத்தாலும்கூட நான் அதை வரவேற்கிறேன். சிறு சிறு துண்டு நிலங்கள் அதிகமாகும் நாடு நம் நாடு. கூட்டுறவுத் துறையின்கீழ் விவசாயிகள் வருவது கிடையாது. அமைச்சர் அவர்கள் கூறியது முழுக்க முழுக்க உண்மை. அவர்கள் கூட்டுறவுத் துறையின்கீழ் வந்தால்தான் சரியான சலுகைகளை அரசாங்கம் கொடுக்கும் என்ற நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணினால்தான் மக்களை கூட்டுறவுத்

[திரு. க. ர. நல்லசிவன்] [1970 நவம்பர் 28

துறையின்கீழ் கொண்டு வர முடியும். இதை அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

An ambitious minor irrigation scheme of constructing wells (including tube-wells) and installing pumpsets is under implementation.

என்று ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது. குளம் கால்வாய் போன்றவைகளிலிருந்து அரசாங்க அனுமதியோடு கூட்டுறவு முறையில் தண்ணீர் எடுத்து பாய்ச்சுவதற்கு தயாராகயிருந்தால் அதையும்கூட இதன்கீழ் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இதற்கு ஒரு மசோதா அதற்கு ஒரு மசோதா என்று இருக்கவேண்டியதில்லை. ஆகவே, அதையும் இந்த மசோதாவின் கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் பாய்ச்சுவதில், எவ்வளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும், எவ்வளவு பாய்ச்ச முடியும் என்பதைப் பற்றி ஆராய்ந்து அதையும் இந்த மசோதாவின்கீழ் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, கடன்கள்பற்றிச் சொன்னார்கள். முதலில் ஒரு இடம் புன்செய்யாக இருக்கிறது, அதை ஈடாக வைத்து ஆயிரம் ரூபாய் வாங்கியிருக்கக்கூடும். ஒரு புதிய அமைப்பு வரும்போது அதன் அடிப்படையில் மேலும் அவற்றின் மீது கடன் கொடுப்பதற்கான வகையினை இந்த மசோதாவில் செய்யவேண்டும். புதிய அமைப்பு வரும்போது இப்போது அதன் மீது கடன் வாங்கியிருந்தாலும் மேலும் அதன் மேல் கடன் வாங்குவதற்கு அல்லது கூட்டுறவு சங்கமே மேலும் கடன் கொடுக்கக்கூடிய அளவிற்கு தேவையான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். நீண்ட காலக் கடன்கள் விஷயத்தில் இந்தத் தவணை முறையை நீட்டித்துக்கொடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு வருடம் ஒன்றுக்கு ஒரு விவசாயியால் ரூ. 100 என்ற அளவிற்குத்தான் கட்ட முடியும். மின்சாரக் கட்டணம், பிற கட்டணங்கள் என்று ரூ. 300 அளவிற்கு வந்தால் அவர்களால் கட்ட முடியாது. ஆகவே, நீண்ட காலக் கடன்களை அடைப்பதில் தவணை முறையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உதவி சபாநாயகர் அவர்களே, இச்சபை முன் வந்திருக்கிற இந்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை கூறுவதற்கு நான் முற்படுகிறேன். பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் இந்த மசோதாவின் மீது அவரவர்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களைப் பார்க்கின்றபோது இந்தச் சட்டம் மிகவும் பிற்போக்கானதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான் எடுத்துக் கூறினார்கள். உதாரணமாக, 83-வது பிரிவைப் பொறுத்தளவில் இதில் சர்வாதிகாரம் புகுந்திருக்கிறது. ஆகவே, இதை மாற்றியமைக்கவேண்டுமென்ற கருத்தினையும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால் இங்கு பேசும்போது சிறு நிலச்சுவாந்தார்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.



1970 நவம்பர் 28] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அந்த சிறு நிலச்சுவாந்தார்கள் யார், யார் அந்தப் பாக்கியசாலிகள் என்பதைப்பற்றி விரிவான விளக்கம் தந்திருக்கிறார்களா என்று பார்க்கும்போது இல்லை என்பதை திட்டவட்டமாகக் கண்டுகொள்ள முடியும்.

அதிலும் குறிப்பாக, இன்று ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். யாருக்கோ அலர்ஜி ஏற்படுகிறது என்று. இது புதிதாக ஏற்பட்டதா அல்லது முன்பு பழைய சமயத்தில் ஏற்பட்டதா என்பதைப்பற்றிய விவரங்களுக்குச் செல்ல நான் விரும்பவில்லை. இன்று, வறுமையை ஒழிப்போம் என்றெல்லாம் பலர் கோஷம் போடுகிறார்கள். ஆனால் உண்மையில் வறுமை ஒழிந்திருக்கிறதா அல்லது சிறு நிலச்சுவாந்தாரர்களுக்காக நல்ல பல திட்டங்களைக் கொண்டுவந்து நல்ல அம்சங்களைக் கொண்ட திட்டங்களைக் கொண்டுவந்து நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமே செய்யப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லமுடியும். சாதாரணமாகச் சொல்வார்கள், நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் ஏழைகளின்பால் என்று. அதே மாதிரி ஏழைகளுக்காகப் பரிந்து பேசுகிற நாகரீக வாதிகள் பலர் இருக்கிறார்கள் இன்றையதினம். அதெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இந்த மாதிரியான திட்டங்கள் இடுகிறபோது கட்சிப் பிரசாரம் இதில் உறைந்திருக்கிறது என்பதை மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது.

உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிலவள வங்கிகள் பற்றியெல்லாம் கூறினார்கள். என் தொகுதியில், சர்க்கார் உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்த ஒருவரை ஒரு நிலவள வங்கித் தலைவராக இன்று போட்டிருக்கிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் அவரே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபேட்சகராக நிற்கப்போவதாக அவர்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் நல்ல நாணயமாக உள்ளவர்களைப் போடுவதுபற்றி எங்களுக்கு ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஒருவரை, அந்த இலாகாவிலிருந்து கண்டெம் செய்யப்பட்ட ஒருவரை, ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரை அதிலும் நாணயமாக நடக்கப்போகிறது என்று சொல்லப்படுகிற நிலவள வங்கிக்கு தலைவராகப் போடுவது நியாயமா என்பதை கனம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர் விளவங்கோடு நிலவள வங்கிக்கு தலைவராகப் போடப்பட்டிருக்கிறார். அவரது பெயர் கிருஸ்டோபர் என்பதையும் அன்னாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, விளவங்கோட்டில் நிலவள வங்கி ஏற்படுத்தவும் இல்லை, அதற்கு யாரும் நியமிக்கப்படவும் இல்லை. கிருஸ்டோபர் என்பவர் இலாகாவிலிருந்து வெளியேற்றப்படவும் இல்லை. இதைத் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர் இப்போது வங்கியின் தலைவராக இருக்கிறார். மார்த்தாண்டத்தில் காரியாலயம் ஒன்றும் இருக்கிறது என்று அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டிலாக்காவில் ரேஞ்சராக வேலை பார்த்தவர் என்பதையும் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஒரு புறம் இருக்க, இந்த மாதிரியான காரியங்கள் எல்லாம் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, கூட்டுறவு அடிப் படையில் இந்த மாதிரியான 'லிப்ட் இர்ரிகேஷன் ஸ்கீம்' செய்வது மிருந்த பொருத்தமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அநேகமாக, இந்த கூட்டுறவு அடிப்படையில் நடக்கும் நிறுவனங்கள் லாபகரமாக இல்லை. இதில், பங்குதாரர்களுக்கு பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன், இந்த கோவாபரேடிவ் அடிப் படையில் நடக்கிற நூற்பு ஆலைகளைப் பார்க்கிறபோது, எத்தனை ஆலைகள் லாபத்தில் ஓடுகின்றன என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். இந்த மாதிரிப் பார்க்கும்போது, இந்தத் திட்டங்களைக் கைவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கூறுகிறேன்.

பொதுவாக, இந்தச் சட்டத்தில் பல பிற்போக்கான கருத்துக்கள் இருப்பதால், இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது கூட்டுறவு அமைச்சர் கொண்டுவந்துள்ள திருத்த மசோதாவின் மீது எல்லோரும் கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்து என்னவென்றால், சிறு நில விவசாயிகள் கஷ்டப்படுவதைப்பற்றியும், இதற்கு முன்னால் சட்டம் இல்லாததைப்பற்றியும் சொன்னார்கள். "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை"யாக இருக்கிறது. சிறு நில விவசாயிகள் மீது எல்லோருக்கும் அக்கரை இருக்கிறது. இந்த நாட்டில் இருக்கும்படியான மக்களுக்கு மட்டுமல்ல, விவசாயிகளுக்கும் உரிமை, பாதுகாப்பு, வசதி எல்லாம் செய்யவேண்டியது வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால் நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பெருத்த விளம்பரமாகத்தான் தெரிகிறது.

வங்கிகளை தேசீயமயம் ஆக்கிவிட்டோம் பார்த்தீர்களா, வறுமையை விரட்டிவிட்டோம் பார்த்தீர்களா என்று எல்லாம் சொன்னார்கள். பூக்கடைக்காரர் இப்போது வங்கியிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம். டீக்கடைக்காரர் பணம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். எங்கள் முற்போக்கு சக்தியைப் பார்த்தீர்களா என்று சொன்னார்கள். அந்த முற்போக்கு வாதிகளுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். தேசீயமயம் ஆகிய வங்கிகள் என்று சொன்னார்கள் அல்லவா, அதற்காக ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூட்டுறவு சங்கம் என்றால் அந்தப் பணம் எங்கே இருந்து வருகிறது? (குறுக்கீடு) எங்கெங் கிருந்தோ வருகிறது என்று சொன்னார்கள், அவற்றையெல்லாம் நான் சொல்லக்கூடாது.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உதாரணத்திற்குச் சொல் கிறேன் என்று சொன்னார்கள். நான் முதலிலேயே சொல்லவேண்டு மென்று நினைத்தேன். "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக இருக்கிறது" என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ரொம்ப கீழ்த்தரமான உதாரணங்களைத் தருவது, சொல்வது எதிர்க்கட்சித் தலைவருக்கு நல்லதல்ல. நல்ல சிறந்த உதாரணமாக சொல்வது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் என்ன கீழ்த்தரமான உதாரணங்களை சொல்லிவிட்டேன். உங்கள் தலைவர் அண்ணாதுரை அவர்கள், ஒரு பெண் தொடையை தட்டி அழைத்தாள், நான் அந்தத் தொடையைப் பார்த்து இருக்கிறேன் என்று எல்லாம் சொல்லியிருக் கிறார். நான் அப்படிப்பட்ட கீழ்த்தரமான முறையில் எதையும் சொல்லவில்லை ரிகார்டில் இருக்கிறது. "ஆடு நனைகிறது" என்று உதாரணம் சொல்லக் கூடாதா? என்னமோ நான் கீழ்த்தரத்திற்கு போய்விட்டேன் என்று சொல்கிறார். நான் கீழ்த்தரத்திற்குப் போக மாட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உங்களை கீழ்த்தரத்திற்குப் போகவேண்டாம் என்றுதான் சொல்கிறேன். நீங்கள் மேல் தரத்திலேயே இருக்கவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்கள் தலைவர் போனதைவிட கீழ்த்தரத்திற்குப் போய்விட முடியாது. இதற்கே கீழ்த்தரம் கீழ்த்தரம் என்றால், நான் பல உதாரணங்களைக் காட்டுவேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், மறைந்த மாண்புமிகு அண்ணா அவர்களைப்பற்றி பேசுகிறார்கள். தனியாகப் பேசும்போது சொல்வார்கள், எனக்கு அண்ணா ரொம்ப வேண்டியவர், நெருக்கமானவர் என்று எல்லாம் சொல்வார்கள். எனக்கு நண்பர் என்று சொல்லிவிட்டு, அவரைப் பற்றி சொல்வது நல்லது அல்ல, முறையல்ல. இப்போது இருப்ப வர்களைப்பற்றி பேசுவது நல்லது, இல்லாதவர்களைப்பற்றி பேசுவது நல்லதல்ல. உதாரணம் சொல்லும்போது, அடுத்தவர் மனம் புண்படாத மாதிரி சொல்லவேண்டும். கொஞ்சம் நல்ல உதாரண மாகச் சொல்லவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதுவும் உங்கள் அண்ணாவிடத் திலிருந்து கற்றுக்கொண்டதுதான். அதுதான் நான் சொல்கிறேன். உங்களுடைய ரகசியத்தை எல்லாம் என்னிடத்தில் சொல்லி இருக்கிறார். அந்தந்த சமயத்தில் அது வெளிவரும் (சிரிப்பு) (குறுக்கீடு) என்னென்னவெல்லாமோ சொல்லி இருக்கிறார். (குறுக்கீடு) சொல்கிறேன்.

முற்போக்கு என்று எல்லாம் சொன்னார்கள். ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு பணம் வேண்டும். பாங்கிகளில்தான் கோடிக் கணக்கான பணம் இருக்கிறது, அதனால்தான் பாங்கிகளை தேசீயமயம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 நவம்பர் 28

ஆக்கினேம் ஏழைகளுக்கு தருவதற்கு என்று சொன்னுர்கள். இந்தியாவிலேயே பெரிய பாங்கு ரிசர்வ் பாங்குதான். அதுதான் இந்த 'கரன்ஸி' இஷ்யூ செய்கிறது. அதிலே ரிசர்வ் பாங்கு கவர்னர் கையெழுத்து போட்டு இருக்கிருர். அதிலே என்ன எழுதி இருக்கிறது. I promise to pay the bearer on demand the sum . . . . . . . . .at any office of issue சர்க்காரின் நாணயம் மக்களுக்கு வேண்டுமென்று சொல்கிருர்கள். சில வங்கிகளில் அழுக்கடைந்த நோட்டுகள் இருக்கின்றன. அழுக்கடைந்த நோட்டுகள் ரிசர்வ் பாங்கியில் எடுக்காமல் பல ஆயிரக்கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய்கள் தேங்கிக்கிடக்கிறது. கோயம்புத்தூர் சிண்டிகேட் பாங்கியில் ரூ. 5½ லட்சம் ரூபாய் தேங்கிக்கிடக்கிறது. (குறுக்கீடு) கூட்டுறவு சங்கங்களுக்கு அங்கே இருந்துதான் பணம் வரவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எதிர்க்கட்சித் தலைவர் கோபப்பட வேண்டாம். இப்போது அவைமுன் இருக்கிற கோவாபரேடிவ் சட்டத்தைப்பற்றி பேசுவார் என்று எதிர்பார்த்தால், ரிசர்வ் பாங்கி எப்படி நடக்கிறது என்பதைப்பற்றி பேசுகிருர்கள். பல புள்ளிவிவரங்கள் அவருக்குத் தெரிந்து இருக்கலாம். அவற்றை இந்த மன்றத்தில் விவாதித்து நாம் ஒன்றும் செய்யப் போவதில்லை. அவைமுன் இருக்கிற சட்டத்தைப்பற்றி பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது. ரிசர்வ் பேங்க் பணம் கொடுக்காமல் ஸ்டேட் பாங்கு ஒன்றும் செய்ய முடியாது. நோட்டுகள் வரவில்லை என்று என்னிடத்தில் சொன்னுர்கள். நான் உடனே மத்திய சர்க்காரின் அமைச்சருக்கு தந்தி கொடுத்தேன். அவர் ஒப்புக்கொண்டு இருக்கிருர். வாஸ்தவம்தான், அழுக்கடைந்த நோட்டுக்களை வைக்க இடம் இல்லை, ஆகவே அதை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னுர். நம்முடைய ரிசர்வ் பாங்கு பணம் இப்படி 10 கோடி ரூபாய் (அழுக்கடைந்த நோட்டுகள்) தேசியமயமான பாங்குகளில் இருக்கிறது. இப்படி எத்தனையோ கோவாபரேடிவ் சங்கத்திலும் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே இருக்கும்படியான நண்பர்கள் சொன்னுர்கள், 25–35 ரூபாய் கொடுத்தோம். 85–90 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறேம் என்றெல்லாம் சொன்னுர்கள். இப்படி அடுக்கிக்கொண்டே போனுர்கள். அமைச்சர் அவர்கள் கூட என்னைப் பாராட்டினல் தான் எனக்கு வருத்தம் இருக்கும் என்று சொன்னுர்கள். நான் அவரைப் பாராட்டுகிறேன். கள்ளக்குறிச்சியில் 100 ஏக்கராவில் 130 ஆட்கள் இருந்தார்கள் என்று சொன்னுர்கள். அதற்காக இந்த வங்கிகள் துவக்கினேம் என்றும் சொன்னுர்கள். இந்தச் சட்டம் வருவதெல்லாம் இந்த விஷயத்திற்காகத்தான். 130 என்றுல் 250 ஓட்டு வரும் (குறுக்கீடு) உதவி சபாநாயகர் அவர்களே, என்ன திட்டம் பார்த்தீர்களா, இந்த 250 ஓட்டும் உங்களுக்கு வரும் என்று நினைக்கிறீர்களா?



1970 நவம்பர் 28]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிற எதிர்க்கட்சித் தலைவருக்கு, ஓட்டுப்போடுவார்களா, அல்லது தீர்மானம் கொண்டுவந்து இருக்கிற எங்களுக்கு ஓட்டுப் போடுவார்களா என்பதை காலம் வரும், பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஏதோ நீங்கள் கள்ளக்குறிச்சியில் கொடுத்துவிட்டால் ஆகிவிடாது. இங்கே இருக்கிற "கட்டு விரியன்" துண்டுக்காரர்களை மக்கள் அடிக்கப்போகிருர்கள். பாக்கி இருக்கும் மக்களுக்குத் தெரியாதா? நீங்கள் போட்டுக்கொள்கிற, கருப்பு, சிவப்புத் துண்டு போட்டு இருக்கிறீர்களே, அதற்கு நான் "கட்டுவிரியன்" என்று புதிதாகப் பெயர் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சணமுகம்: 'கட்டுவிரியன்' துண்டு என்று புதிதாக பட்டத்தைக் கொடுத்திருக்கிறுர். 'கட்டுவிரியன்' கொடிய நாகம். அதோடு விளையாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். விளையாடினுல் விளைவு விபரீதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: விளையாடுவோம், அடித்து எறிவோம். மக்களின் சக்தி 'கட்டுவிரியனை' அடித்துத் தூக்கி எறியும் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 'கட்டுவிரியன்' பாம்பை அடித்துத் தூக்கி எறிவோம் என்று தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு இருக்கிருர்கள். அங்கே உடைந்துகொண்டு இருக்கிறது. உங்களுக்கும் கையெல்லாம் ஆடுகிறது. சக்தியற்ற நீங்கள் எப்படி 'கட்டுவிரியனை' அடிக்கப்போகிறீர்கள்? ந.ப. 12–00

திரு. பி. ஜி. கருத்திருமன்: உங்களிடத்தில்தான் 3 பேர் வெளியே அனுப்பப்பட்டு இருக்கிருர்கள். இன்னும் எவ்வளவு பேர் வெளியே அனுப்பப்படப்போகிருர்களோ? 1972-ல் பூராவும் போகப் போகிறீர்கள். 137 வரும் என்று நினைக்கிறீர்களா? அது எல்லாம் ஒன்றும் இனி நடக்காது. 'கட்டுவிரியனை' எப்படியும் தூக்கி எறிவோம். 25 ஆண்டுகள் ஆண்ட எங்களையே மக்கள் தூக்கி எறிந்தார்கள் என்று சொன்னுல் நீங்கள் எங்கே தூக்கி எறியப்படப் போகிறீர்களோ? அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசிக்கொண்டே இருக்கிருர். "ஸுடோ-சீப்-மினிஸ்டர்" என்று நினைத்துக்கொண்டு இருக்கிருர்.

அமைச்சர் அவர்கள் ஒரு உண்மையைச் சொன்னுர்கள்.

130 பேர்கள் இருக்கிருர்கள். அதற்காக கூட்டுறவு வங்கிகள் அமைக்கிருர்கள் என்று சொன்னுர்கள். என்ன அர்த்தம்? ஏழை மக்களுக்கு நல்லது செய்யட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. நல்ல திட்டங்களை போடட்டும், வரவேற்கிறேன். ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். கூட்டுறவு முறையில் லிப்ட் இர்ரிகேஷன் என்று சொன்னுர்கள். ஒரு காரியம் செய்யட்டும். நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். நான்கு லட்சம் பம்பு செட்டுகள் கொடுக்கப்

பட்டிருக்கின்றன. இன்னும் 7 லட்சம், 8 லட்சம் பம்பு செட்டுகள் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இதிலே அரசாங்கம். ஒன்று செய்யட்டும். இனிமேல் யார் பம்பு செட்டு வைத்தாலும், எலக்ட்ரிக் கனெக்ஷன் கேட்டாலும், சர்க்கார் கடன் கொடுப்பது என்று தீர்மானம் செய்யட்டும். பரிபூரணமாக வரவேற்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சங்கங்களை அமையுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உடனே செய்ய வேண்டியது என்ன? வருஷா வருஷம் 50,000, 60,000 பம்புசெட்டுகள் கொடுக்க வேண்டுமென்றால், எந்த விவசாயி, யார் பம்பு செட்டு கேட்டாலும், அதற்காக பூராவும் கடன் கொடுக்க வேண்டும். சர்க்கார் உடனே எலக்டிரிக் கனெக்ஷன் கொடுக்கவேண்டும். பிறகு அந்தக் கடன் தொகையை விவசாயிகள் தவணை முறையில் திருப்பிக் கட்டட்டும் என்று சொல்லுங்கள். அதை நான் வரவேற்கிறேன். அதையெல்லாம் விட்டுவிட்டு கடன் வாங்குவதற்கு ஒரு இடம், பாக்கிக்கு இன்னொரு இடம், இன்னொன்று வாங்குவதற்கு இன்னொரு இடம், இப்படி இருக்கிறது. நில வள வங்கிகளில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? விவசாயிகளுக்கு அந்த வங்கிகள் பயன் படுகின்றனவா?

எதற்கு எடுத்தாலும் ஆதாரத்தைக் காட்டு, ஆதாரத்தைக் காட்டு, என்று சொல்வார்கள். ஆதாரத்தைக் காட்டினால் "திருப்பி பட்டாவை வாங்கு" என்று சொல்வார்கள். ஆதாரத்தைக் காட்டினால், அய்யா, தப்பு நடந்து போய் விட்டது என்று சொல்கிறார்கள். தப்பு நடந்தது தப்பு தானே? உதாரணத்திற்குச் சொல்கிறேன். காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் நிலவள வங்கி துணைப் பதிவாளர் உத்தரவு ஆர்.ஸி. நெம்பர் 1397/69- (தேதி 19—9—1969) கண்டுள்ளபடி நில வள வங்கி அமைப்பதற்காக ஏழை விவசாயிகள் ரூ. 5,000 கொடுத்தார்கள். இதுவரைக்கும் அங்கே வங்கி அமைக்கப்படவில்லை. காரணம் என்ன? காங்கிரஸ் அனுதாபிகள் உள்ள இடம். அப்படியில்லாத இடத்தில், அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்ள இடத்தில் பணம் கட்ட வேண்டியதில்லை. இவர்களே வலிய போய் வங்கிகள் அமைத்துக் கொடுக்கிறார்கள். காரணம் என்ன? அதைத் தான் சொல்கிறேன். கட்சிக்காக என்று ஒரே ஒரு திருத்தம் கொண்டுவந்து விடுங்கள். திராவிட முன்னேற்றக் கட்சிக்காக, கட்சியில் இருக்கும்படியான அங்கத்தினர்களுக்காக, கட்சி ஊழியர்களுக்காக, கட்சியில் இருக்கும்படியான செயல் வீரர்களுக்காக இந்தச் சலுகைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு சட்டம் போடுங்கள்.

வந்தார்கள், பொது மக்களுக்கு வேண்டிய திட்டங்களை தீட்டினர்கள், காரியங்களைச் செய்தார்கள் என்றால், வரவேற்க வேண்டியது தான். ஆனால், என்ன நிலை இருக்கிறது? ஏழை விவசாயிகளுக்கு இப்படி பகுதி பகுதியாக சட்டம் போடுவதால் பிரயோசனம் கிடையாது. ஏற்கனவே செய்த சட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்தி, ஏற்கனவே விவசாயிகளுக்குக் கொடுத்த சலுகைகள், முறையாக, நாணயமாக, நேர்மையாகக் கொடுத்து, விவசாயிகளுக்கு



நன்மை செய்வார்களேயானால், அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அப்படியில்லையே. எதை எடுத்தாலும் கட்சி கண்ணோட்டம்தான். அவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை? நான் ஒரு உதாரணம் கொடுத்தால், முன்பு இப்படி நடந்ததே என்று ஒரு உதாரணம் காட்டுவது. முன்பு நடந்தது என்றால் நடந்திருக்கலாம். நல்ல உதாரணமாக காட்டுங்களேன். கெட்ட உதாரணங்களையா காட்டவேண்டும். நான் கல் அடி என்று சொன்னால் "முன்னால் நாங்களும் கல்லடி பட்டோம்" என்று சொல்வது. முன்னால் கொலை நடக்கவில்லையா என்று கேட்பது. முன்னால் கொல்லவில்லையா, முன்னால் நடக்கவில்லையா என்று கேட்கிறார்கள். நான் கேட்பது என்னவென்றால், இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்? முன்னால் ஏதோ ஊழல், தவறுகள் நடந்துவிட்டது என்றால், இவர்கள் வந்திருக்கிறார்களே தர்மப் பிரபுக்கள், இவர்கள் நாணயமாக, நேர்மையாக நடந்துகொள்வது தானே? ஏழை மக்கள், ஏழை மக்கள் என்று சொல்கிறார்கள். சிறு நில விவசாயிகள் என்று சொல்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு நன்மை ஏற்படுகிறதா? ஒரு நண்பர் குறிப்பிட்டபடி பெருநில விவசாயிகள் யார், சிறுநில விவசாயிகள் யார் என்பது இருட்டாகவே இருக்கிறது. கட்சியை வளர்ப்பதற்கு, கட்சி ஊழியர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதற்குத்தான் இம்மாதிரி சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றனவே தவிர, ஏழை எளிய விவசாயிகளின் நன்மைக்காக அல்ல என்ற குற்றச்சாட்டை சாட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நான் ஏற்கனவே சொன்னமாதிரி, கட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு, இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகா, அமைச்சருக்குச் சொல்லவா வேண்டும். பார் கருத்திருமன் எதிர்க்கிறார். ஏழை விவசாயிகளுக்கு உதவ மறுக்கிறார் என்பார். இதன் மூலம் ஏழை விவசாயிகளுக்கு மட்டும் நன்மை என்றால் நான் வரவேற்பேன். ஆனால் இது கட்சியை வளர்க்க என்று செய்யப்படுகிறது. ஏழை விவசாயிகள் சுயநலவாதிகளுக்கு இரையாவதை எதிர்க்கிறேன். மக்களிடம் சொல்ல எங்களுக்கும் தெரியும்.

விவசாயி என்றால் அரிசனங்கள், அரிசனங்கள் இல்லாமல் விவசாயம் நடத்தவே முடியாது. அரிசன சகோதரர்களுக்கு என்று ஒரு வார்த்தையைச் சேர்த்துக் கொள்ளுங்கள். சிறு விவசாயிகள் என்றால் வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். விவசாயிகள் என்றால் விவசாயிகளாகவே இருக்க வேண்டும். ஆனால் இது துஷ்பிரயோகம் செய்யப்படுவதை, கட்சியை வளர்க்க உபயோகப்படுவதை எதிர்க்கிறேன். ஆகவே, இந்த மசோதாவை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இந்த மசோதா, இரவை நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்களைப் பற்றியது. குறிப்பாக நான் தொடக்கத்திலேயே சொன்னேன். ½ ஏக்கர், ¼ ஏக்கர், 10 செண்ட், 5 செண்ட், 2 செண்ட் என்ற அளவில் வைத்திருக்கும் சிறுநிலச் சொந்தக்காரர்கள் வாழ்க்கையை நடத்துவதில் தத்தளிக்கும் நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட மக்களுக்கு இது உதவும் என்று சொன்னேன். இந்த மசோதாவை இவ்வளவு பேர்கள்

வரவேற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைகிறேன். எந்த மசோதா வையும் இந்த அளவிற்கு வரவேற்றதைப் பார்த்ததில்லை. ஆகவே, இது நல்ல மசோதாவாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கூட, அதைப்பற்றிச் சொல்லும்போது தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கி பற்றியும், நோட்டுக்கள் பற்றியும் பேசினுர்கள். இதெல்லாம் மசோதாவிற்குச் சம்பந்தம் இல்லாதது....

திரு. பி. ஜி. கருத்திருமன்: சம்பந்தம் இல்லை என்பது எனக்கும் தெரியும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: சம்பந்தமில்லை என்று தெரிந்தே பேசினேன் என்று சொல்வது சரியில்லை, விதிகள் இருக்கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இதற்கும் மத்திய சர்க்காருக்கும் சம்பந்தம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: அந்த அளவில் அவர்கள் வரவேற்று இருப்பது கூட எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

அவர்கள் சொன்னுர்கள், சிறு விவசாயிகளுக்கு என்று கொண்டு வருவது. சிறு விவசாயிகள் 80 பர்சன்ட் ஆக இருப்பதால், அவர்களுடைய ஓட்டுக்களைப் பெறுவதற்காக இப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறுர்கள் என்றுர்கள். ஓட்டுக்கள் பெறக்கூடியது என்று தெரிந்தும்கூட இதை ஆதரிக்கக் கூடாதா? உங்களுக்கும் ஓட்டு வேண்டாமா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களுக்கு ஓட்டு உங்கள் வழியாகத்தான் வரவேண்டுமா? எங்களுக்குக் கொடுப்பவர்கள், கொடுப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: பல காரியங்களைப் பற்றிச் சொன்னுர்கள். இன்னொரு மசோதா இருப்பதால், நேரம் இல்லை: சொன்ன காரியங்கள் கவனிக்கப்படும் என்று சொல்ல முடியும். குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பூவராகன் பேசும்போது, இரண்டொன்றைச் சொன்னுர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களுடைய கட்சிதான் அசல் காங்கிரஸ். அவர்கள்தான் எங்களை "டைவோர்ஸ் பண்ணிவிட்டு போய் விட்டார்: (திரு. கோ. பூவராகன் தன்னிடத்தில் எழுந்தார்).

THIRU K. VINAYAKAM: Sir, on what grounds does the Hon. Member, Thiru Bhuvarahan rise to speak? My Leader has asked for information from the Hon. Minister for Co-operation and not from Thiru Bhuvarahan. The hon. Member, Thiru Bhuvarahan has no business to butt in.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த இன்பர்மேஷன் சம்பந்மாக அவர்களும் எழுந்திருக்கிறுர்கள்.



திரு. கோ. பூவராகன்: நாங்கள் தான் காங்கிரஸ்; காங்கிரஸ் கொள்கை தவறுமல் நடக்கிறேம், அதைச் சொல்லிக் கொள்ள இவர்களுக்கு யோக்கியதையில்லை:

திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்கே போகிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: எங்களுக்கு இது சங்கடமாக இருக்கிறது. சில சமயங்களில் 'ஓ' காங்கிரஸ் என்கிறுர்கள், இன்னும் 'ஓகோ' காங்கிரஸ் என்றும் சொல்லுகிறுர்கள். எதிர்க் கட்சியில் இருக்கும் இந்த காங்கிரஸைத்தான், பூவராகன் காங்கிரஸைத்தான், உண்மையான காங்கிரஸ் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேம்......

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவ்வளவுக்கு வந்துவிட்டீர்களா? பேசுங்கள், பேசுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர். 'ஓ' காங்கிரஸ் என்பது "ஓகோ" காங்கிரஸ் என்றும் சொல்லுவார்கள். நான் இவர்களை 'உ' காங்கிரஸ்; 'உண்மையான' காங்கிரஸ் என்று சொல்லுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அமைச்சர் அவர்களுக்கு அதெல்லாம் நன்றுகத் தெரியும், பல கட்சிகளிலிருந்து வந்தவர்கள். எது 'உ' எது "ஊ" என்று தெரிந்துகொள்ளவேண்டும். "ஊ" என்றுல் ஊதிப்போனது.........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: திரு. பூவராகன் பேசும் போது, அனுபவத்தின் காரணமாக, இன்னின்ன சங்கடங்கள் இருக்கும் என்று சொன்னுர்கள். துளைபோடும் கருவி பற்றிச் சொன்னுர்கள். அது நியாயமான கேள்வி. அந்தச் சங்கடத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் செயல் படுகிறேம். துளைபோடும் டிரில்லிங் மெசின், 101 இருக்கின்றன. அவற்றில் 51 பயனற்றவைகள். 50 தான் பயன் உள்ளவைகளாக இருக்கின்றன. இதை மனதில் வைத்துக் கொண்டு, முதல் அமைச்சர் அவசரத்தை முன்னிட்டு, ராஞ்சி என்ற இடத்திலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் 30 கருவிகள் அவசர அவசரமாக வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். இன்னும் அதிகமாக வரவழைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும். (குறுக்கீடு) நான் சொல்வது ட்ரில்லிங் பற்றி. விவசாயத்தைப் பற்றி அனுபவமே இல்லாதவர்கள், ட்ராக்டருக்கும், டிரில்லிங் மெசினுக்கும் வித்தியாசம் தெரியாமல் சொல்கிறுர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அதை வாங்கி ஏமாந்து போனீர்கள், இதை வாங்கியும் ஏமாந்து போகாதீர்கள் என்றுதான் சொல்லவந்தேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ரஷ்யா நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிறது. தேவைப்பட்டால் உள் நாட்டில் தயார் செய்யவும் ஏற்பாடு இருக்கிறது.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 நவம்பர் 28

டாக்டர் ஹாண்டே வழக்கம் போல் சொன்னார்கள். ஸ்மால் ஃபார்மார் யார், சிறிய விவசாயி யார்? அவர்கள் காண்கிற அளவில் விவசாயி இருப்பார் நண்பர் இராமமூர்த்தி அவர்கள் பேசியதை வாசித்துவிட்டார்கள். ஏன் சிறிய விவசாயிக்ள் என்பதை சட்டத்திலே சொல்லவில்லை என்பதற்குக் காரணம் இருக்கிறது. தற்போது சிறிய விவசாயிகளுக்கு மத்திய அரசு சில சலுகைகளை, சில உதவிகளைச் செய்ய முன் வந்திருக்கிறது. சிறிய விவசாயிகள் என்று அவர்கள், அதாவது மத்திய அரசு—யாரைக் குறிப்பிடுகிறார் களோ அவர்களைத்தான் நாம் சிறிய விவசாயிகள் என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. சிறிய விவசாயி என்றால் இத்தனை ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு வரையறை இருக்கிறது. தற்போது இருக்கப்பட்டது 2 ஹெக்டார் வைத்துக் கொண்டிருப் பவர் சிறிய விவசாயி. ஒரு ஹெக்டார் என்றால் 2½ ஏக்கர். அதாவது, 2 ஹெக்டார் என்றால் 5 ஏக்கர் பரப்பளவாகிறது.

நண்பர் திரு. சங்கரய்யா அவர்கள் பயிர்க் கடன் பற்றிச் சொன்னார்கள். பயிர்க்கடன் பெறுவதற்கு நிலத்தை அடமானம் வைக்க வேண்டும் என்பதல்ல. சிறிய விவசாயிகள் கூட்டுறவு நிலவள வங்கியிலிருந்து கடன் பெறுவதால், பயிர் கடன் வாங்குவது தடைப்பட முடியாது. விற்பனை பெருத்த அளவில் செய்யப்படும் என்று எதிர் பார்க்கிறேன். நிலம் புஞ்சையாக இருக்குமானால் 500 ரூபாய் அல்லது ஆயிரம் ரூபாய் அல்லது இரண்டாயிரம் ரூபாய் என்று இருக்கலாம். ஆனால், அந்த நிலத்திற்கு நீர்வசதி கிடைத்த பிறகு அந்த நிலத்தின் விளைச்சல் காரணமாக நிலத்தின் விலை 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் என்று ஏறுகிறது. குறைந்த விலையில் கடனைப் பெற்றிருப்பவர்கள், விற்பனை காலத்தில் அவர்கள் வாங்கிய கடனை கொடுத்துவிட்டால் தங்கள் விருப்பம்போல் அவர்கள் விலையேற்றத்தைச் செய்துகொள்ள முடியும்.

அடுத்தபடியாக, நண்பர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் இதை வரவேற்றார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் இரண்டொன்றைச் சொன்னார்கள். அவர் ஏதோ ஒரு பெரிய புத்தகத்தைக் கொண்டுவந்திருந்தார்கள். நண்பர் அவர்கள் நேற்று இரவெல்லாம் கண் விழித்து, விளக்கு வெளிச்சத்தில், முன்னால் நிலவள வங்கியைப்பற்றி நான் பேசியதையெல்லாம் படித்திருப்பார் என்று கருதுகிறேன். அவர் அப்படி எந்த விஷயத்தை தேடினார்கள் என்பதும் எனக்குத் தெரியும். "நிலவள வங்கி எல்லாம் அந்தந்த வட்டாரங்களில் ஏற்படவில்லையென்றால், அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிடுவேன்" என்று நான் சொன்னதாக அவர் கருதிக் கொண்டிருக்கும் செய்தியைப்பற்றித்தான் தேடியிருப்பார். அவர் அப்படிப் தேடிப் பார்த்ததில் இன்னும் அவருக்கு அந்தச் செய்தி கிடைக்கவில்லை. அவர் நான் பேசியதை எல்லாம் அழுத்தந் திருத்தமாகப் படித்துப் பார்க்கட்டும். இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளைக்காவது வந்து, 'நான் அப்படிச் சொன்னது தவறு' என்று அவர் ஒப்புக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன். குறிப்பாக அவர் ஒன்றைப்பற்றி அதாவது 'வங்கியிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதன் மூலமாக, கடன் பெறுகிறவன் அடிமையாகி



1970 நவம்பர் 28] [திரு. சி. பா. ஆதித்தனார்]

விடுவான்; அரசின் பிடியில் சிக்கிக்கொள்வான்' என்றெல்லாம் சொன்னார். அவர் சொல்வதுபோல், வங்கியில் கடன் வாங்கியவர்கள் அடிமையாகிவிட்டதாக யாரும் இல்லை. அரசின் பிடியில் சிக்கிக்கொண்டதாக யாரும் தெரியவில்லை. நான் அவரையே கேட்கிறேன், 'உங்களுக்கு அப்படி யாராவது தெரிந்தால் சொல்லுங்கள்' என்று. நண்பர் ராமமூர்த்தி அவர்களும் கடன் வாங்கியிருக்கிறார்கள். அவர் அடிமையாகி விட்டாரா, அரசின் பிடியில் சிக்கிக் கொண்டாரா என்பதை அவர் கூறவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சியில் நாங்கள் கடன் வாங்குவதற்குக்கூட உரிமை இல்லையா?

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, நான் கடன் வாங்கியது இந்த மசோதா வருவதற்கு முன்பு, நான் வாங்கிய கடன் இந்த மசோதாவின் அடிப்படையில் அல்ல. இதைச் செய்துவிட்டால் இனி கடன் வாங்குவதற்கு வழி இல்லை. கடன் வாங்குபவர்களைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா இது. ஏற்கெனவே வாங்கிய கடனுக்கும் இதற்கும் சம்பந்தப்படுத்தி, தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, இப்போது யார் யார் கடன் வாங்கினார்கள் என்று தெரியாது. கடன் வாங்கியவர்கள் எப்போதோ போய்விட்டார்களே.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, அரசு அளிக்கின்ற கடன்களை எல்லாரும் பெறவேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம். அதில் கட்சி வேறுபாடு கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திரு. ராமமூர்த்தி எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. அவருக்குக் கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. நிலவள வங்கியிலிருந்துதான் அவருக்கும் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அவருக்கு எங்கள் மீது கோபம் வரலாம். கடன் வாங்கிய அவர் அரசின் பிடியில் சிக்கிக் கொண்டார் என்று தெரியவில்லை. இது எல்லோருக்கும் உதவி செய்யும் திட்டமாகும்.

அடுத்தபடியாக, திரு. நல்லசிவம் அவர்கள் சிறிய விவசாயிகளை ஒன்று சேர்ப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறு விவசாயிகளை ஒன்றாகச் சேர்ப்பதற்கு, கட்டாயமாகச் சேர வேண்டும் என்பதற்காக, ஒரு சட்டம் கொண்டுவந்தாலும் ஆதரிப்பேன் என்று அவர்கள் சொன்னார்கள். கட்டாயப்படுத்துவது என்பது விரும்பத்தக்கது அல்ல. இதிலுள்ள நன்மைகளைத் தெரிந்துகொண்டு தாங்களாகவே வந்து சேர்ந்தால்தான் நல்லது. சிறு விவசாயிகள் தாங்களாகவே ஒன்றாக சேரவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். கட்டாயம் என்று வைத்துக்கொள்வது அவ்வளவு நல்லதல்ல. தற்போது மத்திய அரசு Small Farmers Developmental Agency மூலமாக சிறு விவசாயிகளுக்குப் பெருத்த அளவிலே கடனைக் கொடுக்க ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அத்திட்டத்தின்படி தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1½ கோடி ரூபாய் கொடுக்கிறார்கள், மதுரை மாவட்டத்திற்கு 1½ கோடி ரூபாய்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1970 நவம்பர் 28

கொடுக்கிறார்கள், நெல்லை மாவட்டத்திற்கு 1½ கோடி ரூபாய் கொடுக்கிறார்கள், வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறார்கள், சேலம் மாவட்டத்திற்கு 1 கோடி ரூபாய் கொடுக் கொடுக்கிறார்கள். இப்படியாக மத்திய அரசு திட்டத்தில் சொன்னதைவிட அதிகமாக சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இப்படி கொடுக்கின்ற நிதியின் மூலமாக மக்களுக்கு நாம் பெரிய நன்மைகளைச் செய்ய முடியும். மத்திய சர்க்கார் கொடுக்கின்ற நிதி எவ்வளவு, எந்த எந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எவ்வளவு எவ்வளவு தரலாம் என்பவை போன்ற விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

"என்னென்ன சலுகைகளை அளிக்கப் போகிறீர்கள்? அதைக் குறிப்பிடக்கூடாதா?' என்று நண்பர் அழகர்சாமி மிகவும் ஆசையோடு கேட்டார்கள். ஆனால் "எவ்வளவு என்பதை" இன்றைக்கு வரையறுத்துச் சொல்ல முடியாது. அதனால், கொடுக்காமல் இருப்போம் என்று சொல்வதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. மத்திய அரசு தமிழக அரசின்பால் கொண்டுள்ள அன்பின் காரணமாக அல்லது பற்று–பாசத்தின் காரணமாக இவ்வளவு பெரும் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை கூட்டுறவு வங்கியின் மூலமாக சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து, இறைவை நீர்ப்பாசனம் மூலமாக இன்னும் விளைச்சலைப் பெருக்க முடியும். மேலும் அதைக்கொண்டு இருபது மடங்கு கடன் உதவி பெற்று பெருத்த அளவில் நன்மையைச் செய்ய முடியும். சிறிய விவசாயிகள் கூட இதனால் மிகுந்த பயனை அடைய முடியும். இதுபற்றி நான் வெளியில் பேசியதாக இங்கே குறிப்பிட்டார்கள். பசுமைப் புரட்சி என்று சொல்கிறபோது
பி.ப. 12-30 தரைக்கு அடியில் உள்ள தண்ணீரை மேலே கொண்டுவந்து 3 போகம் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுமானால் அது இந்த மசோதாவின் மூலமே கைகூடும் என்று உறுதி கூறுகிறேன். ஆகவே, இந்த மசோதாவுக்குக் கொடுத்திருக்கும் திருத்தங்களை எல்லாம் திரும்பப்பெற்று இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராஜா அவர்கள் கொடுத்த தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 38/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:—

"பிரிவு 2 இம்மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."



[1970 நவம்பர் 28

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendments standing in my name:—

(i) In the proposed new Chapter X-A in sub-section (1) of clause 84-B delete the word 'Principal' after the words 'a society the' and delete the words 'Mainly affer the words by lift irrigation'.

(ii) In the proposed new Chapter X-A in sub-section (2) of clause 84-B delete the words "such extent of land as may be prescribed" and substitute the following:—

"five acres of cultivable land"

(iii) In the proposed new Chapter X-A in sub-section (1) (a) of clause 84-C delete the words "in connection. . . society" and substitute the words "for the purpose of providing lift irrigation"

(iv) In the proposed Chapter X-A in clause 84-C (2) delete the word "creditor" and add the words "auditor of the society".

(v) In the proposed new Chapter X-A in sub-section (3) (a) of clause 84-C delete the word "creditor" and add the words" Board of Directors of the Society".

(vi) In the proposed new Chapter X-A in sub-section (1) (i) of clause 84-D add the following at the end:—

"and wishes to make use of the Society for irrigating his land".

(vii) Delete item (iii) in sub-section (1) of clause 84-D.

Mr. SPEAKER: There is one other amendment. That also may be moved.

THIRU K. RAMAMOORRTHY: Yes, Sir, I move the following amendment.

"In the proposed new Chapter X-A delete clause 84-E".

Thiru R. PONNAPPA NADAR: I second the amendments.

THIRU A. A. SUBBARAJA: Sir, I move the following amend ment:—

In the proposed new Chapter X-A in sub-section (2) of clause 84-B after the words 'small farmers' insert the following words cultivating tenants'.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் வழி மொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீதான விவாதத்தில் அமைச்சர் அவர்கள் தருகிற பதிலில் இருந்து இந்தத் திருத்தங்களை முன்மொழிய வேண்டிய அவசியம் ஏற்படாது என்று நான் நினைத்தேன். சில திருத்தங்களையும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைத்தேன். இரண்டுக்கும் சந்தர்ப்பம் இல்லாத முறையில் அமைச்சர் அவர்கள் பதில் துர்பாக்கியமாக அமைந்துவிட்டது.

[திரு. க. இராமமூர்த்தி] [1970 நவம்பர் 28

நீர் இறைப்பு கூட்டுறவுச்சங்கம் எதற்காக அமைகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கூட்டுறவு சங்கங்களின் நோக்கம் என்ன என்பதை இந்த ஷரத்து 84-பி யில் சொல்லியிருக்கிறார்கள். அதிலே விவசாயத்திற்கு நீர்ப்பாசனத்திற்கு மட்டும்தான் என்ற வரையறை செய்யப்படவில்லை. நீர்ப்பாசனத்தையொட்டி என்று சொல்லி—மற்ற எல்லா வழிகளிலும் இது விரிவான முறையில் செயல்படத் தொடங்குமென்றால் அதனால் பெரிய அபாயம் ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ன காரணத்திற்காக ஏற்படுத்தப்படப்போகிறதோ அந்தக் காரணங்களுக்காக மட்டும் செயல்பட சட்டத்தில் வரையறை செய்யப்பட வேண்டும். 84-பி பிரிவுக்கு என் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் இது முழுமையாக அமையும். பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவருவதற்காக மட்டும் இது அமையக்கூடியதாக இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஸ்மால் பார்மர்ஸ் என்பதையும் எனக்குப் புரிகிற வகையில் சொல்வதாக மிகத் தெளிவாகச் சொன்னார்கள். சொன்னதோடு நிலவள வங்கியில் கடன் வாங்குபவர்கள் எப்படி சர்க்கார் பிடியில் சிக்கிக்கொள்வார்கள். சர்க்காருக்கு எதிராக உள்ளவர்கள் இல்லையா என்றார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கியவர்களும் கூட ஆட்சியில் உள்ளவர்களுக்குப் பயப்படாது இருக்கத்தக்க வகையில் அத்தகைய சுதந்திரம் கொடுத்து கூட்டுறவுச் சங்கச் சட்டத்தை நாங்கள் ஆட்சி செய்தபோது கொண்டுவந்தோம். அரசாங்கமே அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகளை ஊக்குவிக்க ஒரு பகுதி மானியமாகவும், ஒரு பகுதி கடனாகவும் கொடுக்கிறது. எந்தக் காரியத்திற்காக அந்த உதவி அளிக்கப்படுகிறதோ அந்தக் காரியத்தை நாணயமாகச் செயல்படுத்துகிற வரையில் யாருக்கும் யாரைக் கண்டும் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் கிணற்றுக்காக வாங்கிய கடனைத் தவறான முறையில் செலவு செய்துவிடுகிறபோது தான் 'காலம் கொடுங்கள், பின்னால் கட்டிவிடுகிறேன் என்பதும், தவணை கேட்பதும்" ஆக அரசாங்கத்தின் இரும்புக் கரங்களுக்குள் அகப்படுகிறார்கள். யாரை அழைத்து வந்தால் தவணை கிடைக்கும், அவர் திராவிட முன்னேற்றக் கழக எம். எல். ஏ.-யா, அமைச்சருக்கு வேண்டியவரா என்பது எல்லாம் பார்க்க ஆரம்பிப்பார்கள். தவறு செய்ய இடமளிப்பதும், தவறு செய்தவர்களைத் தங்களுடைய அரசியல் லாபத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதும் தமிழகத்தில் பரவலாக இப்போதே ஏற்பட்டுவிட்டது. அதற்குத்தான் இந்த மசோதா துணை புரியும்.

அடுத்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்மால் பார்மர்ஸ் என்றால் எந்த அளவுக்கு நிலம் உள்ளவர்கள் என்பதைத் திட்டவட்டமாக நாமே நிர்ணயிக்கலாம். மத்திய சர்க்கார் அது பற்றி என்ன முடிவு செய்ய இருக்கிறது என்று பார்த்து அந்த இடத்தைப் பூர்த்தி செய்துகொள்ளவிட வேண்டியதில்லை. $1\frac{1}{2}$ ஏக்கரா ஸ்மால் பார்மர்ஸ் என்றால் அவர்களாவது பயன் பெற்றார்களா இல்லை, $2\frac{1}{2}$ ஏக்கரா பயன்பெறவில்லை, 3 ஏக்கரா பயன் பெறவில்லை என்பதாக அமைச்சர்... [illegible]



1970 நவம்பர் 28] [திரு. க. இராமமூர்த்தி]

எடுத்துக்காட்டியே உதாரணம் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றி அபிவிருத்தி மன்றத்தில் சொன்னபோது புள்ளி விவரமே தப்பு என்று சுட்டிக்காட்டினேன். இதில் கட்சி அரசியல் வந்துவிடலாமா என்றார். வராமல் என்ன? என்னுடைய மாவட்டத்திற்கு $1\frac{1}{2}$ கோடி கொடுக்கப்பட்டது என்றால் ஒவ்வொரு கோட்டாட்சி பஞ்சாயத்து யூனியனும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக் கிறது. ஆனால் எங்களுடைய கோட்டாட்சி உட்படுத்தப்படவில்லை. இதற்கு அரசியல் காரணம் இருக்காதா என்று நினைக்கிறேன். ஆட்சியாளர்கள் அதற்கெல்லாம் மேற்பட்டவர்களாக இருக்கலாம் என்றாலும் இதற்கு வேறு என்னதான் காரணம்?

கூட்டுறவு அமைச்சர் அவர்கள் முதல் அமைச்சருக்கு எதிராகக் கூட காரியங்கள் செய்கிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக் கிறது. முதல் அமைச்சர் அவர்கள் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்கிறார்கள். மாநிலத்தில் இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கூட நாம் பயன்படுத்தாமல் இருப்பது வெட்கப்படத் தக்கதாகும். ஸ்மால் பார்மர்ஸ் என்றால் 'இத்தனை ஏக்கர் உள்ளவர்கள்தான்' என்பதாக நாம் நமக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு நம் மாநிலத்தில் உள்ள நிலைமைக்கேற்ப தீர்மானித்துக் கொள்ள முடியும். ஆனால் மத்திய சர்க்கார் எப்படி நிர்ணயிக் கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்வது நம்முடைய அதிகாரத்தை நாமே பயன்படுத்திக்கொள்ளாது மத்திய சர்க்காரை எதிர்நோக்கி நிற்பதும், அதே சமயம் மாநில சுயாட்சி கோருவதும் மிகுந்த அவமானம் அளிப்பதாகத்தான் இருக்கிறது. அதிகமான அதிகாரங்களைப் பெறவேண்டும் என்று கோருவதில் நியாயம் இருக்கிறதோ இல்லையோ அர்த்தமில்லை என்றுதான் இதைப் பார்க்கும்போது சொல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்து, 84-ஸி பிரிவு டெபனெட்டாக "லிப்ட் இர்ரிகேஷனுக்குத்தான்' என்பதாக வரையறுக்க வேண்டும். இதில் ஒரு சங்கடமும் இருக்கிறது. அந்த ஒரு சொஸைட்டியில் எத்தனை நிலக் காரர்கள் இருக்கிறார்களோ அவர்களுடைய நிலங்களை எல்லாம் இந்த சொஸைட்டியில் அடமானம் வைக்கச் செய்து இந்த சொஸைட்டி அந்த நிலத்தை வேறு இடத்தில் அடமானம் வைத்துப் பணம் பெற்று உறுப்பினர்களுக்குக் கடன் கொடுப்பது என்கிறபோது ஒருவர் தாம் செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டு சில சூழ்நிலைகளினால் விலகிக்கொள்ள நினைத்தாலும் பின்னால் முடியாது. மேலும் தம் நிலத்தை விற்கவோ, இன்னொரு விவசாயி யிடத்தில் மாற்றிக்கொள்ளவோ நினைத்தாலும் முடியாதுபோகும். விவசாயிகளுக்கு இப்போதுள்ள உரிமைகள் இந்த மசோதாவினால் பறிக்கப்பட இருக்கிற அபாயமும் இருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையிலும் அப்படி ஒரு வேளை போகவேண்டுமென்றாலும் போக முடியாத சூழ்நிலையிருக்கிறது. விதி 84 (சி)-யில்

"No lands in respect of which a declaration has been made under sub-section (1) of any part of such land or any interest in such land shall be sold or otherwise transferred without the previous

written permission of the lift irrigation society, and such permission shal! not be given by the lift irrigation society without the approval of the creditor ".

என்று சொல்லுகிருர்கள். இந்தக் கிரடிட்டார் அவர்களுடைய அப்ரூவல் பெற்ற பிறகுதான் இந்த சொசைட்டியைவிட்டுப் போக முடியும் என்ற நிலைமை இருக்குமாஞல் சர்வாதிகாரத் தன்மை எங்கே இருக்கிறது என்று கேட்டவர்கள் ஆளும் கட்சியில் இல்லாமல் இந்தப் பக்கத்தில் இருந்து கேட்டவர்கள், இதை எல்லாம் படித் திருப்பார்கள் என்று நினைக்கிறேன். கடன் கொடுத்தவனுக்கு அதிக மான பாதுகாப்புத் தேவை என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். தனி மனிதஞக இருந்தாலும் சரி ஒரு இன்ஸ்டிடியூஷஞக இருந் தாலும் சரி தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்வான். அந்த வகை யிலே இது விவசாயிகளுக்குப் பாதகம்தான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதோடு மட்டும் அல்ல. அதற்கு அடுத்தப் பகுதி யாக இந்த 84 (டி) "

" that he shall. . . . . . . . . .

That he agrees to pay his share of the capital expenditure and the maintenance charges for providing supply of water (including overhead charges and depreciation as may be determined by the committee from time to time with the approval of the Registrar ".

இது பழையபடி கடன் கொடுத்தவன் சம்மதத்தைப் பெற்றுத் தான் நடத்த முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அங்கேதான் 'கிளட்ச்சஸ்' இருக்கிறது. அந்த கிளட்ச்சஸ் இவ்வளவு அழகாகத் தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அவ்வப்போது அனுமதி பெற்றுத்தான் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. இது மின்சாரம் பாய்ச்சப்பட்ட இரும்பு வேலியைப் போன்றுதான் போட்டிருக் கிருர்கள் இந்த மசோதாவின் மூலம் இந்த சர்க்கார்.

84 (டி) என்ற பாராவிலே சொல்லுகிருர்கள்

" Arrangement regarding period of membership, sharing of expenditure "

என்று சொல்லுகிருர்கள். அதிலே நான்

" and wishes to make use of the Society for irrigating his land "

என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். எவ்வளவு காலம் இந்த சொசைட்டியின் மூலமாகத் தண்ணீர் தேவையோ அத்தனை காலம் விவசாயிகள் இதில் அங்கத்தினராக இருப்பதற்கு உரிமை வேண்டு மென்பதுதான் என்னுடைய திருத்தம். அப்படி இறைக்கும் இர்ரிகேஷன் சொசைட்டி எவ்வளவு காலம் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறதோ அவ்வளவு காலம் பங்குதாரராக விவசாயிகள் இருந்துவிட்டுப்போக முடியாது என்று சொல்லுகிருர்கள். நான் சொல்வதிலே தவறு இருந்தால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது திருத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். அடுத்து 84 (டி)-யில்



" Arrangement regarding period of membership, sharing of expenditure ".

அதற்குத்தான் நான் கீழ்க்கண்ட திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

" Delete item (iii) in sub-section (1) of clause 84-D ".

எவ்வளவு காலத்திற்கு ஒருவர் அங்கத்தினராக இருப்பது என்பதை சொல்லுகிற நேரத்திலே

" Such other matters as may be prescribed ".

அதைப்பற்றி இந்த மசோதாவிற்கே புரியவில்லை. எவ்வளவு காலம் இந்த அளவுக்குக் கடன் சேர்க்கவேண்டுமென்ற விளக்கத்திற்குப் பின்ஞல் சொல்லலாம் என்று சொல்வதற்குக் காரணம், தெளிவில்லா காரணத்தாலே இதைத் தீர்ப்பதற்கு முடியாத நேரத்திலே அவசரம் அவசரமாக கொண்டுவரப்பட்ட மசோதா இது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. கடைசியாக 84 (இ) பிரிவில்

" Prohibition against withdrawal of membership Notwith-standing anything contained in this Act or in any other law for the time being in force, no member of lift irrigation society shall, so long as he continues to own the land for which water is supplied by the lift irrigation society or any portion thereof be entitled to withdraw his membership.

THE HONRABLE THIRU SI. PA. ADITNAR : Provided. . .

THIRU K. RAMAMOORTHY : Provided that the lift irrigation society may subject to such conditions as may be prescribed permit any member to withdraw.

'புரொவைடட்' என்று சொன்ஞர். as may be prescribed " என்பதைச் சொல்ல விரும்பவில்லை. புரொவைடட் அமைச்சர் அவர்களுக்கே புரியவில்லை. அமைச்சர் அவர்களுக்குப் புரிந்திருந்தால் அதைச் சொல்வதற்கு இவ்வளவு காலம் கொடுத்து இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதோடு as may be prescribed என்பதுதான் சிறிய விவசாயிகள் கழுத்தில் மாட்டப்படுகிற தூக்குக் கயிறு: அதோடு மட்டுமல்ல. அது கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படைக் கொள்கையை மீறின ஒரு கொள்கையாக இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு மிக நன்ருகத் தெரியும். இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டுறவு இயக்கத்திலே நெருங்கின தொடர்பு கொண்டுள்ளனர். ஒருவருக்கொருவர் விரும்பிச் செய்கின்ற தாங்களாகவே விரும்பி அமைத்துக் கொள்ளுகின்ற ஒரு அமைப்பு இது. விரும்பி ஏற்றுக்கொண்ட அமைப்பிலிருந்து விரும்பும்போது விலகும் உரிமை இருக்கவேண்டும். இந்த உரிமையைப் பாதிக்கின்ற அளவிலே கூட்டுறவினுடைய உயிர்க் கொள்கையைப் பாதிக்கும் விளைவான சட்டம் இது. இந்தச் சட்டம் தவிர வேறு எந்தச் சட்டத்திலும் இதுபோல அங்கத்தினராக சேர்ந்து போக முடியாத நிலை என்று இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆஞல் இங்கே மட்டும் உண்டாக்குகிறீர்கள். ஏன் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா? இந்த " ஏன் " என்பதில்தான் அரசியல் இருக்கிறது. சொந்த லாபம் இருக்கிறது. தனிப்பட்டவர்கள் சலுகை இருக்கிறது

என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. இன்னும் இதிலே சேர்ந்தவர்களுக்குச் சுதந்திரம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. இதிலே இருந்துதான் ஆகவேண்டும். அதிகாரிகளோ, அல்லது சம்பந்தப்பட்டவர்களோ உத்தரவு கொடுக்கின்ற வரையிலும் தொடர்ந்து இருந்து ஆகவேண்டுமென்ற சூழ்நிலை—பயங்கரமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் எத்தனை சங்கடங்கள் ஏழை விவசாயிகளுக்கு, சிறிய விவசாயிகளுக்கு உண்டாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நாட்டிலே உள்ள கூட்டுறவுச் சட்டத்தை அவமதிக்கும் மசோதாவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவசரச் சட்டம் கொண்டுவரப்படத் தேவையில்லை என்றாலும்கூட என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்பட்டது. அந்த அவசரத்தை விளக்க முடியாத நிலைமையிலே இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வளவு குறைபாடுள்ள இந்த மசோதாவை எதிர்க்கிறோம், எதிர்க்கிறோம், எதிர்க்கிறோம் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, நான் கொடுத்த திருத்தத்தைப் பொறுத்தவரையில் ஸ்மால் பார்மர்ஸ் என்பதோடு கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்பதையும் சேர்த்துக் கொண்டு விட்டால் நல்லது என்பதுதான். அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டும். கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக இருக்கிறவர்களுக்குச் சொந்தமாக ப்ராப்பர்டி இருக்குமானால் அவர்கள் அவற்றை சொஸைடிக்கு அடமானம் வைத்துப் பயன் பெறக்கூடிய வசதியும் ஏற்படும். இதிலே யாருக்கும் குறை இருக்காது. எனவே, நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து திருத்தம் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்காமல் மதிப்பு என்று பார்க்காமல் கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்பதையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிந்து விட்டேன் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் இப்பொழுது கிளாஸ் இரண்டை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நண்பர் இராமமூர்த்தி அவர்கள் அடிப்படையான ஒரு தவறைக் கொண்டிருப்பார்கள், அதனால்தான் அவ்வளவு தூரம் எதிர்த்தார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு நான் பிடித்து இருக்கிறேனோ இல்லையோ தெரியாது என்று சொன்னார்கள். அந்தச் சந்தேகத்தில்தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் தெரிவித்துக் கொள்கிறேன். இராமமூர்த்தி அவர்களை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆகவே அந்தச் சந்தேகம் துளிக்கூடத் தேவையில்லை. அவர்கள் சில மாற்றங்களை எடுத்துச் சொன்னார்கள். ஸ்மால் பார்மர்ஸ் சிறிய விவசாயி என்று இந்தச் சட்டத்திலே போட்டிருக்கிறோம். நிலவள வங்கிச் சட்டத்திலே சிறிய விவசாயி என்றால் குறைவாகச் சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டத்தைப்



பொறுத்தவரையிலே ரூல்ஸிலே அதைப்பற்றிச் சொல்லலாம் என்று இருந்தாலும்கூட விதிகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. 'extent of land . . . shall be two hectares . . '. என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு ஹெக்டார் என்பது ஐந்து ஏக்கர்.

THIRU K. RAMAMOORTHY : Nothing prevent us from including it in the Act itself.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அப்படி அடிப்படைக் கருத்தினை வைத்துக்கொண்டுதான் சொல்கிறார்கள். மத்திய சர்க்கார், சிறிய விவசாயிகள் என்றால் என்ன என்று சொல்லியிருக்கிறார்கள். தென் ஆற்காடுக்கு ஒன்றரை கோடி ரூபாய் வரையில் கொடுத்த பொழுது அவர்கள் யார் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்களோ, அதை ஏற்றுக்கொள்வதற்குப் பின்தங்க முடியாது. அவர்களே, இன்ன உறுப்பினர் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று சொல்லலாம். கூட்டுறவு முறையின்மூலம் தண்ணீரைப் பெற்றுக்கொண்டிருக்கும் பொழுது விலக முடியாது. உறுப்பினருக்கு மட்டும்தான் தண்ணீர் கொடுக்க வேண்டும். இது கூட்டுறவு முறைக்கு ஏற்றதுதான். உறுப்பினர்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. உறுப்பினர்களுக்குத்தான் உரிமை இருக்கிறது. சுயாட்சியும் இருக்கிறது. ஆகவே இதிலே எதுவும் மாறுதல் தேவையில்லை.

THIRU K. RAMAMOORTHY : Sir, I press my amendments.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றன.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

'In clause 4, sub-clause (i), for the word "sections" in the two places where it occurs, substitute the word "section".'

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4 திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

புதிய பிரிவு 5.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

'After clause 4, add the following new clause, namely :—

"5. *Repeal.*—The Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Ordinance, 1970 (Tamil Nadu Ordinance 5 of 1970), is hereby repealed ".'

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

புதிய பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 1 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

'For sub-clause (2) of clause 1, substitute the following sub-clause, namely :-

" (2) it shall be deemed to have come into force on the 10th November 1970 ".'

தலைவர் அவர்களே, ஆர்டினன்ஸ் என்பதை ஆக்ட் என்று மாற்று கிறோம், அவ்வளவுதான்.

THIRU K. RAMAMORTHY : Sir, I move the following amendment—

'In sub-clause (2) of clause I add at the end the following :—

" which date shall be not earlier than 15—4—1971 ".'

தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தினுடைய நோக்கமே இந்த மசோதாவுக்கு அவசரத் தேவையில்லை என்பதுதான். இது வரையிலும் அதை யாரும் மறுக்கவில்லை என்று நினைக்கிறேன். மசோதா நிறைவேறி விட்டாலும் அதனுடைய விளைவுகளைப்பற்றி மற்றவர்கள் கருத்துத் தரலாம். அதற்கு விதிகள் செய்வதற்கு இடம் வைத்திருக்கிறார்கள். மக்களுடைய ரீஆக்ஷனைப் பார்த்து விதிகளை அமைக்கலாம் என்ற நிலைமையில் 15—4—1971-லிருந்து புதிய தமிழ் ஆண்டிலே வருகிறது, அந்த ஆண்டிலே கொடுமைகள் குறைகிற வகையில் இதை ஆர அமர யோசிப்பதற்கு இடம் இருக்கவேண்டும். அவசரம் அவசரமாக இந்த மசோதாவை நிறைவேற்றி விட்டாலும் விதிகளை ஆர அமர யோசித்துப் போடக்கூடிய வழிவகைகள் இருக் கின்ற வகையிலே என்னுடைய இந்தத் திருத்தத்தை முன்மொழிந்



திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்களுக்கு நான் வேண்டியவன் நெருங்கியவன் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதை இதிலே காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு என்னால் ஆனமட்டும் முயற்சி செய்து வருகிறேன். பி.ப. 1-00

'I shall come into force on 10th November 1970.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் ஆங்கிலத்தில் சொன்னால் நன்றாகத் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

The Ordinance came into force on the 10th November 1970. Suppose we say that the Act comes into force on some other date. There will be a vacuum in between in which neither the Ordinance nor the Act would have been in force. Such a vacuum is not desirable. In every case where an Ordinance is later on converted into an Act, the date of coming into force is the date on which the previous Ordinance came into force, அந்தச் சட்ட காரணத்திற்காக அரசினர் திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

THIRU K. RAMAMOORTHY : Though I do not agree with the explanation of the Hon. Minister, as a mark of courtesy, I do not press my amendment.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 38/1970), திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

[1970 நவம்பர் 28

## (ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 41/1970)

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண் 41/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

இந்த மசோதா அபெக்ஸ் சொசைட்டிகள், பெரிய சங்கங்களை பற்றிக் காரணங்களெல்லாம் Statement of Object and Reasons) ஏற்கனவே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகமாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை. ஆகவே, இதை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Co-operative Socities (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970) be referred to a Select Committee consisting of . . . members of the House" (list of members to be furnished later).

The amendment was duly seconded.

Thiru A.A. SUBBA RAJA: Sir, I move the following amendment:–

"That the Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970) be circulated for purpose of eliciting public opinion."

The amendment was duly seconded.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் நான் அதிகமாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றைமட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவிற்கும்கூட இப்பொழுது தேவை ஏற்படவில்லை என்று நான் நினைக்கிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொள்வதற்கு இன்றைக்கிருக்கும் சட்டமே போதுமானதாக இருக்கிறது. ஆகவே, சட்டங்களை எந்த அளவிற்கு அதிகமாக ஆக்குகிறோமோ, அதன் பிரிவுகள் எந்த அளவிற்கு வளர்ந்துகொண்டு போகிறதோ அந்த அளவிற்குச் சிக்கல்களும், சாதாரண எளியவர்கள் புரிந்துகொள்ள முடியாத நிலைமையும், அதன் விளைவாக மிஸ்–அண்டர்ஸ்டாண்டிங், கன்ஃப்யூஷன் போன்றவைகள் சாதாரண மக்களுக்கு உண்டாகும். இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் அதிகாரிகளுக்கு உண்டாகும். கூட்டுறவுத்துறை நிர்வாகத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்த நிலைமை வரும். அபெக்ஸ் சொஸைட்டிகளைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கத்திலேயே இருந்துகொண்

*26—11—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது



1970 நவம்பர் 28] [திரு. க. இராமமூர்த்தி]

டிருக்கிறது. இந்தச் சங்கம் நிறுவுவதற்கான அதிகாரம் இப்பொழுதிருக்கும் சட்டத்திலேயே இருக்கிறது. ஆகவே, இவ்வளவும் இருக்கும் நிலைமையிலே புதிதாக ஒரு அங்கத்தை, சாப்டரை, புதிய அதிகாரத்தை உண்டாக்க வேண்டுமா?

இன்னொரு தவறையும் காண்கிறோம். பல சட்டங்களை உருவாக்குவதால், சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டிற்கு உரிய மரியாதையை அளிக்கத் தவறுகிறோம். அது மட்டுமல்ல, இதிலே எது எது தேவையோ அவைகளை அந்த ரிப்போர்ட்டிலேயிருந்து நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொல்வார்களேயானால், அதற்கு முறையாகச் செய்யக்கூடிய காரியம் என்னவென்றால், சந்தானம் கமிட்டி ரிப்போர்டை ஒரு நாளைக்கு இங்கே வைத்து விவாதம் நடத்தினால்தான் எது எது தேவை, எது எது தேவையில்லை என்பதை அறிவதற்கான வழிவகையாக இருக்கும். அதை விட்டு விட்டு, அந்த ரிப்போர்ட்டிலே சில பகுதிகளிலே சொல்லியிருக்கும் சில கருத்துக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து அந்தக் கருத்துக்களை மட்டும் செயல்படுத்துகின்ற நிலைமையில் சில சட்டங்களைக் கொண்டு வந்தால், அது இன்றைக்கு அதிகாரத்திலிருப்பவர்கள் அந்த ரிப்போர்ட்டிலே எது எது சாதகமாக இருக்கிறதோ அவைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களோ என்ற நியாயமான ஐயப்பாட்டை நியாயப்படி போக்கிவிட முடியாது. ஆகவே, இது போன்ற மசோதாக்களுக்கு இன்று உடனடியாகத் தேவையும் இல்லை, அவசியமும் இல்லை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையில் இந்த மசோதா எதற்காகக் கொண்டுவரப்படுகிறதோ, அந்த நிலைமையை அந்த மசோதா இல்லாமலேயே உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற நிலைமையிருக்கும்பொழுது, புதிதாக இப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவையில்லை என்று நினைக்கிறேன். இது தேவையா இல்லையா, இதை அனுமதிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்வது நல்லது என்று கருதுகிறேன்.

அதோடுமட்டுமல்ல, இந்த போர்ட் ஆஃப் சொஸைட்டீஸ், நோட்டிஃபைட் டேட் பற்றியும், ஓவர்ரைடிங் புரொவிஷன் என்பதெல்லாம் தேவையா என்கின்ற நியாயமான அச்சம் ஏற்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் பல ஊழல்கள் நடக்கின்றன. அமைச்சரவர்களே சிலவற்றை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், முந்திய பேச்சுக்களிலே சொல்லியிருக்கிறார்கள். சில நிர்வாகத்திலே தேர்தல்கள் நடத்தும் அதிகாரத்தை, பொறுப்பேற்றிருக்கும் அங்கத்தினர்களுக்கும், டைரக்டர்களுக்கும் கொடுத்திருக்கிறோம். அதன் காரணமாகப் பல நியாயமான மனுக்கள் தள்ளுபடி செய்யக்கூடிய நிலைமை அரசியல் ரீதியாக ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் உடனடியாகக் கோர்ட்டிற்குச் செல்லக்கூடிய முறையை உருவாக்க வேண்டும். கடந்த காலத்தில், கோர்ட்டுக்குச் செல்லாமலிருந்தால், கோர்ட்டுக்குப் போக முடியாத சூழ்நிலையிருந்தால்தான் இந்தத் துறை வளரும் என்று நினைத்தோம். ஆனால் அதை இன்று பலர் தவறாகப் பயன்படுத்தும் முறையில், அந்த நல்லெண்ண சமிக்ஞையைச் சரியாகப் பயன்படுத்தாத நிலைமையிருக்கிறது. ஓவர்ரைடிங் புரொவிஷன்

[திரு. க. இராமமூர்த்தி] [1970 நவம்பர் 28

தேவையா என்றால் தேவையில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது. கோர்ட்டுகளுக்கு அந்த அதிகாரங்களிருந்தால் இந்த நிலைமை சீர்படும். அதிகாரங்களை மட்டும் திருத்திவிட்டு, அங்கத்தினர்களைக் கண்காணிப்பதைப்பற்றி இல்லாவிட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்பதற்கு என்னுடைய திண்டிவனம் நகரத்தின் வங்கியையே நினைவு படுத்தி எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பல நிலைமைகள் காலம் தவறுகின்றன, காலம் கடக்கின்ற நிலை ஏற்படுகிறது. அவற்றையெல்லாம் தடுக்க இந்த புரொவிஷனே தேவையா இல்லையா என்பதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலைமையிருக்கும். ஆகவே, இவற்றையெல்லாம் வைத்து இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, இது அவசியம்தானா என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு தேவையென்றால் அந்த மாற்றங்களோடு நிலைமையை உருவாக்கி, அதற்குப் பிறகு இந்த மசோதாவை நிறைவேற்றலாம் என்று கூறி, இதற்கு இப்பொழுது அவசரமோ, உடனடி அவசியமோ இல்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவரவர்களே, இந்த மசோதாவைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால் சில கருத்துக்களைக் கொஞ்சம் வருத்தமாகச் சொல்ல வேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

In the Statement of Obejects and Reasons "guaranteed finances should have a statutory recognition and status."

In the management of these types of societies, special interests and particularly persons actually engaged in the trade or occupation or industry concerned and weaker sections of society should have their share and rightful place.

என்று சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல. இரண்டாவதாக என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே நாமினேஷன்ஸ் வருகின்ற காலத்தில், அங்கே நாமினேஷனிலே இருக்கும் நாமினேட்டெட் மெம்பர்ஸ் இப்பொழுது நடைமுறையிலே இருப்பவர்களுக்கு, ஓட்டுப்போட அவர்களுக்கு உரிமையில்லை என்றிருக்கிறது. ஆனால் வருகின்ற இந்த மசோதாவைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கும் ஓட்டுரிமை இருக்கும் என்ற நிலையிருக்கிறது. எதற்காக இந்த நிலையில் போடுகின்ற நாமினேட்டெட் மெம்பர்களுக்கும் ஓட்டளிக்கும் நிலையிருக்க வேண்டுமென்ற சந்தேகமிருக்கிறது. அதுமட்டுமல்ல,

The appointment of Managing Director. The Managing Director shall be appointed and sub-section (2)

என்று போட்டிருக்கிறது. அப்பாயிண்ட்மெண்ட் என்றால், ஏற்கெனவே ஜனநாயக முறைப்படி இயங்க, ஜெனரல்பாடியில், மினிட்ஸ் அண்ட் பைலாஸ் எல்லாம் செய்கிறார்கள். அதிலும் நமது சர்க்கார் ரொம்பவும் நல்ல முறையிலே சுயாட்சி வேண்டும், டீ-செண்ட்ரலைஸ் பண்ண வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், ஜெனரல்பாடி கூடி உண்டாக்கக்கூடிய அதிகாரங்களை, நாம், ஸ்டேட்டிஸம் ஆக்கினால்



1970 நவம்பர் 28] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

அடிப்படைக் கூட்டுறவுத் தத்துவத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்ற நிலைமை இந்த மசோதாவில் இருக்கிறதோ என்ற ஐயம் கொஞ்சம் ஏற்படுகிறது, கொஞ்சம் என்ன, அழுத்தமாக ஏற்படுகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

பை-லா படி பிசினஸ் மானேஜர் எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது சொசைட்டிக்கு உள்ள உரிமையைப் பறித்துக் கொள்ளும் வகையில் ஸ்டேட் கவர்ன்மெண்ட் அப்பாயின்ட் செய்யும் முறையில் மானேஜிங் டைரக்டர் என்று போடுகிறார்கள். இது நம்முடைய கொள்கைக்கே ஒத்துவரவில்லை. "நாமினேடெட் மெம்பர்ஸ், வீக்கர் செக்ஷன்" என்று போட்டவுடனே பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். என் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. இதனால் ஆளும் கட்சியாக எந்தக் கட்சி வந்தாலும் தலைவலிதான். அந்த பாங்குகளில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டதா என்று புரியாத நிலையில் இருக்கிறோம். அதைக் கொஞ்சம் தெளிவாக எடுத்து விளக்கினால் நன்றாக இருக்கும். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் "எலிசிடிங் பப்ளிக் ஒப்பினியன்" என்று நான் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அவசரப்படாமல் ஆலோசித்து அந்த விதமாகச் செய்தால் நன்றாக இருக்கும்.

திரு. ஆர். கனகசபை : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரை இதிலே இருக்கிற ஷரத்துக்களைவிட இதிலே உள்ள தத்துவம் முக்கியமானது. கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த தத்துவம் என்ன? இப்போது இந்த மசோதாவின்படி வரக்கூடிய தத்துவம் என்ன என்பதைப் பார்க்கும்போது கூட்டுறவு தனிப்பட தானாக இயங்கக்கூடிய ஸ்தாபனம், அதிலே அரசாங்கம் தலையீடு கொண்டு பல காரியங்களைச் செய்யலாமா என்ற தத்துவத்தின் அடிப்படையாக வந்திருக்கும் மசோதா.

எந்தத் தத்துவமாக இருந்தாலும், எந்தக் கொள்கையாக இருந்தாலும், ஒரு காலத்தில் உள்ள தத்துவம் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரி இருக்க முடியாது. பொருளாதாரக் கொள்கையாக இருந்தாலும் சரி, மனிதன் அன்றாடம் நடக்கக்கூடிய காரியங்களாக இருந்தாலும் சரி, ஒரே தத்துவத்தை ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை பிடித்துக் கொண்டே இருக்க முடியாது.

வெளிநாட்டில் அரசாங்கத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. நம்முடைய நாட்டில் ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டானபோது இருந்த நிலை படிப்படியாக மாறிவிட்டது. தி.மு.க. அரசாங்கமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் அரசாங்கமாக இருந்தாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களை அரசாங்கம் தன்னுடைய மேற்பார்வைக்குள், கண்காணிப்புக்குள் கொண்டு வந்திருக்கிறதே தவிர, தனிப்பட்டு இயங்கும்படியாகச் செய்துவிடவில்லை. காரணம் சூழ்நிலைதான். என்ன சூழ்நிலை?

[திரு. ஆர். கனகசபை] [1970 நவம்பர் 28

இப்போது ராஜ்ய சங்கங்களுக்கு, தலைமைச் சங்கங்களுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனக்கு சில சங்கங்களைப் பற்றித் தெரியும். மற்றச் சங்கங்களுக்குப் பணம் கொடுக்கும் சங்கத்தின் பொறுப்பாளியாக இருப்பதால் பல சங்கங்களைப் பற்றி எனக்குத்தெரியும். அரசாங்கத்தின் உதவி இல்லாமல் பல சங்கங்கள் நடக்கக்கூடிய நிலைமையில் இல்லை. காரண்டி கொடுப்பது மட்டும் அல்ல; "மார்ஜின் மணி" கூட இல்லாத நிலையில் சங்கங்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சங்கத்தில்—பெயரைச் சொல்லவில்லை—"மார்ஜின் மணி" கூட இல்லாமல் முதலில் 25 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அதுவும் காணாது 50 லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அந்தச் சங்கத்திற்கு $2\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை வாங்குவதற்குச் சக்தி இருந்தும் ஒரு கோடி ரூபாய் கூட வாங்க முடியாத நிலையில் சங்கத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கத்தை நம்பி சங்கங்களை நடத்தும் நிலை இருக்கிறது. மூலதனம் எவ்வளவோ அதை விட அரசாங்கத்தின் பொறுப்பு அதிகமாக இருக்கும் நிலையில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கிறது என்று சொல்லுவதில் பயன் இல்லை. ஆகவே, பழைய தத்துவத்தை, கொள்கையை அடிப்படையாக வைத்துக் கூட்டுறவுக் கொள்கையிலே தலையிடுவது தவறு என்று சொல்லிக் கொண்டிருப்பதைவிட, எந்தப் பொருளாதாரக் கொள்கைக்காக, கீழ்த் தரப்பட்ட மக்களைக் கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் மேம்பாடு அடையச் செய்ய முடியும் என்ற கொள்கைக்காக இந்த முறைகளில் சட்டங்களை இயற்றித்தான் ஆகவேண்டும். இந்தச் சட்டங்களின்படி மாற்றங்கள் ஏற்படத்தான் வேண்டும். மானேஜிங் டைரக்டர், பிசினஸ் மானேஜர் என்பதில் எல்லாம் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. அரசாங்கத்தின் பணத்திற்குப் பாதுகாப்பான முறையில் பொருளாதாரக் கொள்கையை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு இதுதான் வழி என்று நினைக்கும்போது அந்த வழியில் இந்தச் சட்டத்தை இயற்றுவது எந்தவிதத் தவறும் ஆகாது என்ற என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தலைமைச் சங்கங்கள் பலவகையாக இருக்கின்றன. இப்போது அரசாங்க மூலதனம் அதிகமாகப் போட்டிருக்கும் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ்–க்கு எல்லாம் மானேஜிங் டைரக்டர் போட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் மூலதனமாக 20 லட்சம் ரூபாய் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் காரண்டி என்று கொடுக்கும் போது இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பொறுப்பு அரசுக்கு ஏற்படுகிறது. அப்படி இருக்கும்போது இதிலே அரசாங்கத்தின் தலையீடு இருப்பதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது. அரசாங்கத்தின் உதவியை நாடவில்லை என்றால் நம்முடைய சொந்தப் பொறுப்பிலேயே நடத்த முடியும் என்றால் அதிலே முழு உரிமை கொண்டாட எல்லா வித உரிமையுண்டு. ஆகவே, அரசாங்கம் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அரசாங்கத்தின் கண்காணிப்பைப் பலப்படுத்தி காரியத்தைச் செய்ய இந்தச் சட்டம் அவசியம் என்ற காரணத்தால் இதை ஆதரிக்கிறேன். வணக்கம்.



1970 நவம்பர் 28]

* <u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u>: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் அவசியம் என்ன, தேவை என்ன என்பதைப் பற்றி ஓரளவுக்கு நண்பர் திரு. கனகசபை அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். எந்தச் சங்கமாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும் திறம்பட நடப்பதாக இருந்தால் அதில் தலையிட வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு கிஞ்சித்தும் வராது. அரசு பெரிய அளவில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழகத்தில் உதவி செய்கிறது. வேறு நாடுகளோடு ஒப்பிட்டுப் பேசுவதில் பயன் இல்லை. இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு, குறிப்பாக மாநில அளவு சங்கங்களுக்கு மூன்று வகையாக உதவி செய்வது அவசியமாகிறது. மூலதனம் கொடுக்கிறோம். கடனுதவி கொடுக்கிறோம். அதோடு மானியம்–இனாம் என்று கூடக் கொடுக்கும் நிலைமையில் சங்கங்கள் இருக்கின்றன. இவ்வளவு தூரம் அரசு ஈடுபடுகின்ற காரணத்தால் அவை நன்றாக நடைபெற வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருப்பதில் ஆச்சரியம் இல்லை. இப்போது காரண்டி வேறு கொடுக்கிறோம். எவ்வளவோ தலைமைச் சங்கங்களுக்கு பல கோடிக் கணக்கில் காரண்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் அரசு அந்தப் பணத்தை கன்சாலிடேடெட் பண்டில் இருந்து, வரிப் பணத்திலிருந்து ஈடு செய்யும் நிலைமையில் இருக்கிறது. அந்த நிலைமை வரக்கூடாது என்று விரும்புகிறோம். அரசியல் சட்டத்தின் 293-வது விதியை அன்றைக்கே நான் வாசித்து காண்பித்தேன். காரண்டி கொடுக்கும் நிலை ஏற்படுமானால்

within such limits if any, as may from time to time be fixed by the Legislature of such State by law and to the giving of guarantees within such limits, if any, as may be so fixed

என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

காரண்டி என்று கொடுப்பதில் நாம் உடனடியாகப் பணம் கொடுக்கவில்லை என்பதால் நமக்கு அதிலுள்ள ஈடுபாடு குறையவில்லை. உடனடியாகக் கொடுத்தாலும் சரி, அல்லது காரண்டி என்று உத்தரவாதம் கொடுத்தாலும் சரி அப்படிக் கொடுப்பதாகயிருந்தால் நாம் கண்காணித்தாகவேண்டும். சாதாரணமாக ஒரு ஸ்டேட் பாங்காக இருந்தால் 40 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சொல்வதற்கு, இந்த அசெம்பளி சொல்லியாக வேண்டும். அல்லது நிலவள வங்கியாக இருந்தால், 125 கோடி, அதற்குமேல் கொடுக்கக்கூடாது என்று சொல்வதற்கு, இந்த அசெம்பளி சொல்லியாக வேண்டும் என்பதை நம் அரசியல் சட்டமே குறிப்பிட்டிருக்கிறது.

இதில் அரசியல் என்றெல்லாம் சொல்வார்கள், அரசியல் இல்லை. ஏன் அப்படி அரசியல் இல்லை என்று சொல்கிறேன் என்றால், 1968-ம் ஆண்டு இங்கு ஒரு மாநாடு நடந்தது. அதில் எல்லா மாநிலங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறை அமைச்சர்களும் கலந்துகொண்டார்கள். அதில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருந்தார்கள். பல தீர்மானங்களைச் செய்தார்கள். அதில் ஒன்று, தேர்தல் நடத்துவது பற்றி அந்தந்தச் சங்கங்களின் தலைவர்கள் தேர்தல் நடத்துவதால் அதில்

பல தவறுகள் ஏற்படுகின்றன, சங்கத் தலைவர் தேர்தல் நடத்திஞல் அவருக்கு வேண்டியவர்கள் வந்தார்கள், அவருக்கு வேண்டாதவர் களின் நாமினேஷன் பேப்பர்ஸ் தள்ளுபடி செய்யப்பட்டது என்றெல்லாம் புகார்கள் அடிக்கடி ஏற்படுகின்றன என்று அதற்காக ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அதில் அரசியல் இல்லை. கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் எல்லாம் சேர்ந்து, மத்திய அமைச்சர் அவர்களும் சேர்ந்து செய்த தீர்மானம் அது. அந்தந்தச் சங்கங்களின் தேர்தல்களை தலைவர்கள் நடத்தக்கூடாது, அதில் சம்பந்தப்படாதவர் ஒருவர்தான் நடத்துவது என்று தீர்மானித் தோம். அதன்படி இன்று ஆந்திராவில் பெரிய சங்கங்களில் தேர்தல் களை அதன் சங்கத் தலைவர்கள் நடத்துவது கிடையாது. அதிகாரிகள் தான் நடத்தவேண்டும். ஏனெனில் யார் தலைவராக வந்தாலும் அதிகாரிகள் கவலைப்படுவதில்லை. அவர்கள் அங்கு அப்படிச் சட்டம் செய்திருக்கிறுர்கள்.

அதேபோல் மராட்டிய மாநிலத்திலும் தேர்தலை கலெக்டரே நடத்தவேண்டும். வட்டச் சங்கம் அல்லது மாநிலச் சங்கமாக இருந்தாலும் கலெக்டரே நடத்தவேண்டும் தேர்தலை. அப்படி சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறுர்கள். 1968-ல் ஒரு தீர்மானம் போட்டோம். இன்டிப்பன்டென்ட் எலெக்ஷன், தேர்தலை நடத்து கிறவர் அச்சங்கத்திற்குச் சம்பந்தப்படாதவராக இருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அந்தச் சங்கத்தின் தலைவரே நடத்துவதாகயிருந்தால் அவருக்கு வேண்டியவர்கள் தொடர்ந்து இருந்துவர வழிவகை ஏற்பட இடமிருக்கிறது. அந்நிலை மாற வேண்டுமென்றுதான் அப்படி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அப்படி கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

1969-ல் பங்களூரில் ஒரு மாநாடு நடந்தது. அதற்கு எல்லா மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர்களும் வந்திருந்தார்கள். அப்போது திரு. குருபாதசுவாமி இருந்தார்கள். 70-ல் டெல்லியில் ஒரு சில வாரங்களுக்கு முன்னுல் கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு நடந்தது. அதற்கு திரு. பக்ருதீன் அலி அஹமது அவர்கள் தலைமை தாங்கிஞர்கள். இதை அங்கு மீண்டும் வலியுறுத்திஞேம், தேர்தல் நடத்துவது அந்தச் சங்கத்தில் சம்பந்தப்படாதவர் நடத்த வேண்டும் என்று. இப்படியெல்லாம் வழிவகை செய்யவேண்டிய தேவை இருப்பதால் அதற்குரிய அதிகாரத்தை அரசு எடுத்துக் கொள்கிறதே தவிர அதிகாரம் செலுத்தவேண்டும் என்பதற்காக அல்ல. முன்பிருந்த சட்டத்தின்படி மூன்றில் ஒரு பங்கு வரையில் நாமினேட் செய்யலாம் அரசு. இப்போது ஐந்தில் ஒரு பங்காக அதைக் குறைத்திருக்கிறோம் என்றுல் அது அதிகாரம் செலுத்த வேண்டுமென்ற எண்ணத்திஞல் அல்ல, சங்கங்கள் கண்காணிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அதற்காக அதற்கு வேண்டிய குறைந்த அதிகாரங் களை மட்டும்தான் இந்தச் சட்டத்தில் எடுத்துக்கொள்கிறோம் என்று கூறி .........(குறுக்கீடு) கவர்ன்மென்ட் நியமித்தால் அவர்களுக்குக் கிடையாது, கவர்ன்மென்ட் என்பதை அழுத்திச் சொல்கிறேன்.





இதற்குத் திருத்தம் கொடுத்திருப்பவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இம்மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தமும், திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களின் திருத்தமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 41/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றுவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 41/1970) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் 30—11—1970, திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders*

@ 108. Notification issued with G.O. Ms. No. 2748, Home, dated the 15th October 1970 in regard to extension of time for the payment of Motor Vehicles Tax in respect of stage carriages and public carriers for the quarter ending 31st December, 1970. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

109. Notification issued with G.O. Ms. No. 2392, Rural Development and Local Administration, dated the 19th November, 1970 in regard to constitution of "Avadi Municipality" with effect on and from the 20th November, 1970 [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

110. Notification issued with G.O. Ms. 2393, Rural Develoment and Local Administration, dated the 19th November, 1970 in regard to constitution of "Ambattur Municipality" with effect on and from the 20th November, 1970. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

111. Notification issued with G.O. Ms. No. 2394, Rural Development and Local Administration, dated the 19th November, 1970 in regard to constitution of "Kathiwakkam Municipality" with effect on and from the 20th November, 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

112. Notification issued with G.O. Ms. No. 2395, Rural Development and Local Administration, dated the 19th November, 1970 in regard to constitution of "Madhavaram Municipality" with effect on and from the 20th November 1970. [Laid on the Table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

113. Notification issued with G.O. Ms. No. 2396, Rural Development and Local Administration, dated the 19th November, 1970 in regard to inclusion of Avadi, Ambattur, Kathiwakkam and Madhavaram Municipalities in Schedule IX to the Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

114. Notification issued with G.O. Ms. No. 1675, Home dated the 16th July, 1970 in regard to an amendment to the Tamil Nadu Buildings, Lease and Rent Control) Rules, 1961 published at pages 1 to 14 of Part V of the *Tamil Nadu Government Gazette Extraordinary*, dated the 5th June 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 34 (4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

115. Notification issued with G.O. Ms. No. 2416, Agriculture, dated the 22nd August 1970, in regard to establishment of regulated market at Irumbudipatti of Kulithalai taluk in Tiruchirappalli district to provide facilities for the purchase and sale of groundnut, gingelly and chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

116. Notification issued with G.O. Ms. No. 1980, Public (Services-A), dated the 28th August, 1970 in regard to amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion with in the Commission's purview the posts of Graduate Librarians and Assistant Librarians in Government Colleges of Engineering and Technology in Technical Education Department. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]



117. Notification issued with G.O. Ms. No. 2233, Agriculture, dated the 30th July, 1970 in regard to establishment of eleven regulated markets in Madurai district to provide facilities for the purchase and sale of paddy, cotton, groundnut and chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

118. Notification issued with G.O. Ms. No. 1734, Rural Development and Local Administration, dated the 10th September, 1970 in regard to amendment relating to increase of members from eleven to twelve and appointment of Tourist Officer, Madurai as Official Member in the Kodaikanal Township Committee under the Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

119. Notification issued with G.O. No. 2640, Revenue, dated the 19th August, 1970, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232 to 280 of the Rules Supplement to Part I of the Tamil Nadu Government Gazette, dated the 1st April 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

120. Notification issued with G.O. Ms. No. 1162, Agriculture, dated the 16th April 1970 in regard to cancellation of Agriculture Department notification No. 2433 of 1966, published at page 917 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazettee*, dated the 15th June 1966, declaring the South Arcot district as a notified area for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in so far as it relates to green chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*B. Reports, Notifications and other papers.*

@ 21. Report of the Committee on Public Account 1970–71 on the Audit Report on the Accounts of the Tamil Nadu State Housing Board for the year 1963–64.

£ 22. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Ordinance, 1970 (Tamil Nadu Ordinance No. 7 of 1970).

£ 23. The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1970, with Annexure.

£ 24. The Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970.

‡ 25. The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 41 of 1970).

---

@ Laid on the Table of the House on 27th November, 1970.
£ Despatched to Members on 25th November, 1970.
‡ Despatched to Members on 26th November, 1970.

## இணைப்பு 1.

[251-ம் பக்கத்தில் 50-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

The requests contained in the Memorandum were for—

(i) the supply of indigenous iron and steel at prices fixed by the Joint Plant Committee;

(ii) the allotment of M.S. sheets through the Association;

(iii) recommending the Association for recognition by the Joint Plant Committee;

(iv) recommending the import of sheets in the event of shortage in Indigenous Production;

(v) relief from the levy of Sales tax and excise duty.

The steps taken to ensure regular and proper supply of steel requirements are as follows :—

(i) The Government of India have introduced revised distribution procedure for iron and steel with effect form 22nd May 1970 enabling the indentors to place indents without any ceiling on the main stell plants through the Joint Plan Committee;

(ii) Continuance of the arrangements of procuring and distributing iron and steel through the Government owned raw material depots to the small-scale fabricators who may be unable to transport materials in wagon loads;

(iii) Recommending the direct import by Actual users of licensable iron and steel items to the maximum extent possible and the making of allocations against the import by the Hindustan Steel Limited.

The Government have also examined the request for the relief from the levy of sales-tax and found it not possible to accede to it. As regards the relief from the Central Excise duty the matter is under the consideration of the Government.

மனுவில் கண்ட கோரிக்கைகளாவன :—

(1) " இணை தொழில் குழு (Joint Plant Committee) நிர்ணயித்த விலைகளில் உள்நாட்டு இரும்பு எஃகு வழங்குதல்.

(2) சங்கத்தின் மூலமாக எம்.எஸ். தகடுகள் (M.S. Sheets) ஒதுக்கீடு செய்வது.

(3) இணைதொழில் குழுவிற்கு சங்கத்தை அங்கீகரிக்குமாறு பரிந்துரை வழங்குவது.

(4) உள்நாட்டு உற்பத்தி குறைந்திருக்கும்போது தகடுகள் இறக்குமதிக்குப் பரிந்துரை வழங்குதல்.

(5) விற்பனை வரி, ஆயத்தீர்வை ஆகியவற்றிலிருந்து விலக்களித்தல்.

முறைப்படியும் தகுந்தவாறும் எஃகு வழங்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளாவன :—





(1) இணைதொழில் குழுவின் மூலமாக முக்கிய எஃகு உற்பத்தியாளர்கள் உச்சவரம்பு இல்லாத தேவைப்பட்டியல்களை அளிக்க இயலும்பொருட்டு இந்திய அரசு 22—5—1970-லிருந்து திருத்திய வழங்கல் ஏற்பாட்டைக் கொண்டு வந்துள்ளது.

(2) வாகன் அளவுக்கு மூலப்பொருள்களைத் தருவிக்க இயலாத சிறுரகத் தொழில் பிரிவுகளுக்கு அரசாங்க மூலப்பொருள் சேமிப்புக் கிடங்குகள் மூலம் இரும்பு எஃகைக் கொள்முதல் செய்து வழங்கும் ஏற்பாடுகளைத் தொடரச் செய்தல்.

(3) உரிமம் வழங்குதற்குட்பட்ட இரும்பு உருக்கு இனங்களை நேரடியாக இறக்குமதி செய்ய உண்மையாக உபயோகிப்பவர்களுக்கு பரிந்துரைகள் வழங்குதலும், இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் இறக்குமதி செய்யும் மூலப்பொருள்களிலிருந்து ஒதுக்கீடுகள் செய்தலும்.

விற்பனை வரியில் விலக்களிப்பது பற்றி அரசு ஆராய்ந்து இக் கோரிக்கை ஏற்க இயலாதெனக் கண்டுள்ளது. மத்திய ஆயத்தீர்வையிலிருந்து விலக்களிப்பது பற்றிய கோரிக்கையை அரசு ஆராய்ந்து வருகிறது.

## இணைப்பு–2.

[254-ம் பக்கத்திலுள்ள 51-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

விடை :

(அ) & (இ). ஆம். 1964, 1965 ஆகிய ஆண்டுகளிலும், 1967, 1969 ஆகிய ஆண்டுகட்கு இடைப்பட்ட காலங்களிலும் கயத்தாறு, நாகலாபுரம், பசுவந்தனை, கோவில்பட்டி, விளாத்திகுளம், மணியாச்சி, குறுக்குச்சாலை, ஓட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(உ) மேற்கண்ட பகுதிகளில் சுண்ணும்புக்கல் (படிக வகை), டோலமைட் மக்னீசிய சத்துள்ள சுண்ணும்புக்கல், ஜிப்சம் ஆகிய கனிப் பொருட்கள் கிடைப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் படிக வகை சுண்ணும்புக்கல், நாகலாபுரத்தையடுத்த பணிக்கர்குளம், தடியாம்பட்டி, பசுவந்தனையை அடுத்த புதுப்பட்டி, எப்போது வென்றான் ஆகிய இடங்களில் கிடைக்கிறது. டோலமைட்டு (கால்சிய, மக்னீசியக் கார்பனேட்டு) என்ற கனிப் பொருள், 18 முதல் 21 சதவீத மக்னீசிய சத்துடையதாய், கோவில்பட்டியையடுத்து வள்ளிநாயகபுரம், கடலை என்னும் இடங்களில் கிடைக்கிறது. கயத்தாற்றினையடுத்த தெற்கு மயிலோடை, கலப்பை ஆகிய இடங்களில் கிடைக்கிற சுண்ணும்புக்கல், 15 சதவீத மக்னீசிய சத்து கொண்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சிப்சம் கிடைக்குமிடங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| (அ) விளாத்திக்குளம் : | கடல்குடி<br>சுப்பலாபுரம்,<br>துரைசாமிபுரம்,<br>கந்தசாமிபுரம்,<br>சின்னனூர். |
| (ஆ) கயத்தாறு : | தெற்குமயிலோடை. |
| (இ) மணியாச்சி : | பாண்டியாபுரம். |
| (ஈ) கோவில்பட்டி | வள்ளிநாயகபுரம். |
| (உ) குறுக்குச்சாலை : | சு. குமாரபுரம், சிந்தலாக்கரை |
| (ஊ) ஓட்டப்பிடாரம் : | குலசேகரநல்லூர். |

(*a*) and (*b*): Yes. The investigations were carried out by the State Geology Branch in Kovilpatti Taluk, during the year 1964–65 and also between 1967–69 in the areas around Kayathar, Nagalapuram, Pasuvandanai, Kovilpatti, Vilathikulam, Maniyachi, Kurukkuchalai and Ottappidaram.

(*c*) The following are the minerals reported in the areas investigated.

(i) Crystalline limestone

(ii) Dolomite and Dolomatic limestone.

(iii) Gypsum.

The Crystalline limestones occur around Panikkarkulam and Tadoyampatti near Nagalapuram ; around Pudupatti near Pasuvandanaiand near Eppoduvendran.

Dolomite (*i.* double carbonate of calcium and Magnesium) containing 18 to 21 per cent Mg Ooccurs in Vallinayakapuram and Kadalai villages near Kovilpatti,. Dolomitic limestones with an average MgO content of 15 per cent occur in the Therkumylodai and Kalappapatti villages near Kayathar.

Gypsum occurences have been reported in the following places :

| | |
|---|---|
| (1) Villathikulam area. | Kadalkudi.<br>Supplapuram.<br>Duraiswamipuram.<br>Kandasamipuram.<br>Sinnur. |
| (2)Kayathar area : | Terkumylodai. |
| (3) Maniyachi area. | Pandiyapuram. |
| (4) Kovilpatti area : | Vallinayakapuram. |
| (5) Kurukkuchalai area : | S. Kumarapuram and Sindalakkarai. |
| (6)Oottapidaram area : | Kulesekaranallur. |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**திங்கட்கிழமை, 1970 நவம்பர் 30.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Training in Radiology in Government Hospitals*

* 61 THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals to train more men in Radiology in the Government Hospitals?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசு மருத்துவ மனைகளில் ரேடியாலஜி என்று சொல்லப்படும் கதிர்வீச்சு மருத்துவத்தில் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் ? அவர்கள் தற்போதுள்ள தேவைக்கு போதுமான அளவுக்கு இருக்கிறார்களா ? இல்லையென்றால், அவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிற பயிற்சி போதுமானதாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. தேவைப்படுகிற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. 'டிப்ளமா இன் ரேடியாலஜி கோர்ஸ்' என்ற அளவில் சென்னை பெரிய மருத்துவக் கல்லூரியில் 20 பேர்களும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 4 பேர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 6 பேர்களும் 18 மாதப் பயிற்சி பெறும் முறை தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கிறது. இதைத் தவிர, எம்.டி. (ரேடியோ டயக்னஸிஸ்), எம்.டி. (ரேடியோ தெரபி) என்று இருக்கிறது. டி.எம்.ஆர். (D), டி.எம்.ஆர். (T) என்கிற தேர்வுகளுக்கு இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மெடிகல் ஆபீசர்களுக்கு பயிற்சி கொடுக்கும் முயற்சியும் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறது. இதனுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் இல்லை என்றாலும், அதற்கான பயிற்சி போதுமான அளவுக்குத் தரப்பட்டு வருகிறது. இப்பயிற்சி பெறுவதற்கு முன்வர டாக்டர்கள் கொஞ்சம் பின்வாங்குகிறார்கள். ஏனென்றால், இதிலே படிக்க

வேண்டுமென்றால், ஸ்டடி லீவ் எடுத்துப் படிக்கவேண்டும். அதிலேயும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரைச் சம்பள அளவுக்குத்தான் கிடைக்கக்கூடும். அதனால் பலர் இப்பயிற்சி பெறமுன்வருவதில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, அப்படிப்பட்டவர்களுக்கு முழுச் சம்பளம் கொடுத்து, அதில் அவர்களுக்குப் பயிற்சி தரும் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறது. அந்த வகையில் கிடைக்கவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்பொழுது பயிற்சி பெறுகிறவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கும் நிலை இல்லை. எம்.டி. (ரேடியோ டயக்னசிஸ்), எம்.டி. (ரேடியோ தெரபி) ஆகியவற்றில் இரண்டு ஆண்டு மெடிகல் ஆபீசர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. தா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் கதிர்வீச்சு முறையில் மேலும் பலருக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்பை நம்முடைய அரசு உண்டாக்கியிருப்பதைப்போல், சென்னை நகரத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை ஒட்டியிருக்கும் மெட்ராஸ் மெடிகல் காலேஜில் போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூஷனை ஒன்றைத் துவக்குவது என்றும், நம்முடைய நாட்டில் புதிது புதிதாக வியாதி வருவதைக் குறித்து ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க அங்கு வசதி செய்துகொடுத்து, மேல் பட்டப்படிப்புக்கு வகை செய்வதென்று அரசாங்கத்தில் ஒரு செயற்குறிப்பு இருந்ததே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது? அது எப்பொழுது செயல்படப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனால், அதை போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக ஆக்கவேண்டும் என்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இதுபோன்று பலதரப்பட்ட பட்டப்படிப்புகள் படிக்க முன்வருகிறவர்களுக்கு மேலும் பல ஆண்டுக்காலம் நீடிக்கக்கூடிய அளவுக்கு உயர்த்தப்பட்டு வருகிறதா? அதை மேலும் சீராக்கக்கூடிய அளவுக்கு அந்தப் பட்டப் படிப்புக்கு உதவி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த ரேடியாலஜியைப் பொறுத்த வரையிலும் கொடுக்கப்படுகிற பயிற்சி கொடுக்கப்பட்டுவருகிறது. அதிலும் சென்னையில் போஸ்ட்-க்ராஜுவேட் டிப்ளமா கோர்ஸ் படிக்கிறவர்களுக்கு ரூ. 200 ஸ்டைபெண்டு கொடுத்து பயிற்சி அளிக்கப்படுகிறது. நான் முதலில் சொன்னபடி, ஸ்டடி லீவ் எடுத்துப் படிக்கவேண்டும் என்ற நிலையை மாற்றி ஓரளவு முழுச் சம்பளச் சலுகை அளிப்பதன்மூலம் மேலும் சில டாக்டர்கள் வந்து பயிற்சி பெறுவார்கள் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இப்பொழுது அரசாங்கம் அந்த வகையில் பரிசீலித்து வருகிறது.



### ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி போதனைப் பயிற்சி

* 62 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆங்கில போதனைக்காக ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட Melt compaign மீண்டும் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that of late the standard of English has been going down very badly and the attainments which the pupils are expected to have, are also awfully lacking with the result the Masters who handle this subject are no good to handle it. At least to maintain the standard if not to improve it, will the Government reconsider the possibility of having fresh teaching course for the Masters who handle the English subject?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 'மெட்ராஸ் இங்கிலீஷ் லாங்க்வேஜ் டீச்சிங்' காம்பெய்ன் என்கிற ஒரு முறை 1958-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டு, அதன்மூலம் 33,000 ஆசிரியர்கள் அதுமாதிரி பயிற்சி அளிக்கப்பட்டார்கள். அந்த 'மெட்ராஸ் இங்கிலீஷ் லாங்க்வேஜ் டீச்சிங்' காம்பெய்ன் என்கிற முறை இப்பொழுது இல்லை. ஆனால், 6-ஆம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரையிலும் உள்ள ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கின்ற வகையில். அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கும் முயற்சியினை மேற்கொண்டு, அதற்காக நான்கு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த நான்கு இடங்களிலும் தொடர்ந்து அந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதற்காக பிரிட்டிஷ் கவுன்சில், மற்றவைகளின் உதவி பெற்று, அதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது. திருநெல்வேலி, கடலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய நான்கு இடங்களிலும் வைத்து, ஆசிரியர்களுக்கு 1967-68-லிருந்து தொடர்ந்து ஆங்கிலம் பயிற்றுவிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் கவுன்சிலில் நான் இதுபற்றிப் பேசினேன். ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்ற கல்லூரியில் கூட உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தை மிகச் சிறந்த முறையில் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும்போதே அவர்கள் அந்த முறைகளைக் கற்றுக்கொண்டால் அவர்கள் ஆங்கில ஆசிரியர்களாகச் செல்லுகின்றபோது அதனுடைய முழுப் பலனையும் ஆங்காங்கு பெற வசதி ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்து, அதுபற்றி உதவி செய்வதாக அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கும் முறையில் மேலும் பயிற்சி அளிக்கும் முறை கைவிடப்படவில்லை. தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால், 'மெட்ராஸ் இங்கிலீஷ் லாங்க்வேஜ் டீச்சிங்' காம்பெய்ன் என்ற பெயரில் இப்பொழுது நடைபெறவில்லை.

[1970 நவம்பர் 30

THIRU K. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether there is a proposal for teaching 'Modern English' for these teachers?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது தேவைப்படுவது 'மாடர்ன் இங்கிலீஷ்' என்ற நவீன ஆங்கிலப் பயிற்சிதான். இந்த நவீன ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கிற முறை, சொல்லிக் கொடுக்கிற முறை ஆகியவற்றை ஆசிரியர்களுக்கு சொல்லித்தரத்தான் இப்போது பயிற்சி நிலையம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த நவீன ஆங்கிலப்பயிற்சி இந்த காலத்துக்குத் தேவைப்படுகிற ஆங்கிலப்பயிற்சி எந்த வகையில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். அந்த அடிப்படையில்தான் பல்கலைக்கழகம் முடிவு எடுத்து, சிலபஸில் மாறுதல் செய்து இருக்கிறது. பள்ளிகளில் மாறுதல் செய்யும் முயற்சி பள்ளிக் கல்வி இயக்குனர் அவர்களால் ஆராயப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Mere training alone will not help the teachers to teach English effectively and usefully. What is needed is good books to school libraries. If good books are there, the teachers could study them and enrich their knowledge. So, will the Hon. Minister think of providing sufficient number of good English books to school libraries and change the syllabus to provide for the same?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான். ஆகவே, அந்தப் புதிய முறையில் அவர்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவித்து, மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்றவகையில் பயிற்சி அளிக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பயன்படும் புத்தகங்களை வழங்கவும் அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், ஆல் இந்தியா காம்படிடிவ் எக்சாமினேஷன், ஐ.ஏ.எஸ். போன்ற பரீட்சைகளில் இங்கே இருந்து செல்லும் மாணவர்களின் தேர்வு எண்ணிக்கை குறைந்ததால், நம்முடைய மாநிலத்திற்கு நியாயமாக வரவேண்டிய 'கோட்டா' கிடைப்பதில்லை. இதற்குக் காரணம், இந்த ஐ.ஏ.எஸ். போன்ற பரீட்சைகள் ஆங்கிலத்தில் எழுத வேண்டி இருப்பதால் இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, தமிழில் இந்த ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதும் நிலை வருகிற வரையிலாவது, ஆங்கிலத்திற்கு கொஞ்சம் முக்கியத்துவம் கொடுத்து பயிற்சி நடத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆங்கிலப் பயிற்சி இன்னும் வலிவு பெறவேண்டும் என்ற அடிப்படையில்தான் பல் வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1970 நவம்பர் 30]

அகில இந்தியப் பரீட்சைகளில் தமிழகத்தில் இருக்கும் மாணவர் கள் அதிக எண்ணிக்கை பெற முடியாத காரணத்தால், 20-30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சிறந்த நிலையிலிருந்து நாம் கீழே இறங்கி விட்டோம் என்பதல்ல. அல்லது வேறு பல மாநிலங்களில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் சிறந்த பயிற்சியினைப் பெற்று விட்டார் கள் என்று பொருள் அல்ல. நம்முடைய மாநிலமே சிறந்த நிலையில் இருந்தது. இப்போது தாழ்ந்து இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே தாழ்ந்து இருந்த மற்ற மாநிலங்கள் இன்னும் தாழ்ந்துதான் இருக்கும். ஆனால், அது மட்டும் முக்கிய காரண மல்ல. இந்த தேர்ந்தெடுக்கும் முறையில் பல சிக்கல்கள் இருக் கின்றன. இதிலே தேர்ந்தெடுக்க உட்காருபவர்கள், முக்கியமாக தென் நாட்டில் இருப்பவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற உணர்வோடு உட்காருகிறார்கள். இதனால் நம் மாநிலத்திலுள்ளவர் கள் தேர்ந்தெடுக்கப்படாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி ஒரு கருத்து டெல்லி வட்டாரத்தில் எடுத்துச் சொல்லப்படுகிறது. இதிலே நியாயம் இருக்கிறது என்று கருதவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பயிற்சி அளிக்கும் வகையில், தனிப்பயிற்சி வழங்கப்பட்டு மாணவர்கள் பலபேர் ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதச் சென்று இருக் கிறார்கள். இந்த எண்ணிக்கை தாழ்ந்து போனதற்கு, நம்முடைய தரம் தாழ்ந்து விட்டது என்று சொல்வது சரியல்ல.

**திரு. ம. பொ. சிவஞானம் :** பேரவைத் தலைவரவர்களே, ஆங்கிலம் ஒரு அந்நிய மொழியாக இருப்பதாலும், தமிழ்நாட்டிலே எல்லாத் துறைகளிலும் தமிழுக்கே முதலிடம் என்ற முறை கொண்டு வந்து இருப்பதாலும், ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுக்க முடியாது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறதா? குறிப்பாக, மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் ஆங்கிலம் எந்த அளவுக்குத் தேவையோ அந்த அடிப்படையில் பாடத்திட்டங்களை தயாரித்துக்கொண்டு பயிற்சி தருகிறார்கள். நம்முடைய நாட்டில் ஆங்கிலம், ஆங்கிலேயர் காலத்தில் எப்படி போதிக்கப்பட்டதோ அதே அடிப்படையில் வைத்துக்கொண்டு பாடத்திட்டங்களை போதித்து வருகிறோம். இது மாற்றி அமைக்கப்பட்டு, பாடத் திட் டங்களை தற்போது தேவையான முறையில் மாற்ற அரசு ஏதேனும் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழிலேயே எல்லாவற்றையும் போதிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது. ஆங்கில அறிவு வேண்டுமென்ற நிலையில், அதற்கான முறையில் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் முறையானது மாற்றம் செய் யப்பட்டு வருகிறது. அதற்காக நவீன ஆங்கிலம் போதிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. பொதுத்துறை, தொழில் துறை, விஞ்ஞானம் ஆகியவற்றைப் படிக்க போதிய ஆங்கில அறிவு பெற வேண்டுமென்பதற்கான நோக்கத்தின் அடிப்படையில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் ஆங்கிலம்

தாழ்ந்து இருக்கும் என்று பொருள் இல்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் நாளுக்கு நாள் தமிழிலேயே எல்லாம் நடத்த வேண்டுமென்ற கொள்கைக்கு ஆக்கம் தருகிற முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that due to the recent policy of Government that only graduates in Tamil Medium would be preferred for Government offices and then only there would be preference for people who had studied in the English medium—it is only due to this kind of rigid, niggardly policy of this Government that the efficiency of teaching as well as learning of this language has been impaired beyond any repairable capacity ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியிலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

**திரு. கே. விநாயகம் :** கேள்வியிலே குற்றச்சாட்டு இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழே பயிற்சி மொழி என்று ஆக்கப்பட்ட பிறகுதான், தமிழ் படித்தவர்களுக்கு முதலிடம் தருவது என்று ஆணை பிறப்பித்து இருக்கிறோம். இந்த ஆணை இப்போது போட்டதுதான். 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்படிப்பட்ட நிலை இருந்து வருகிறது. ஆட்சி மொழி தமிழ் என்று நாம் ஏற்றுக்கொண்டு விட்டோம் தமிழ் ஆட்சி மொழி ஆகிய காரணத்தால், ஆங்கிலம் படித்தவர்களைவிட தமிழ் படித்தவர்கள் இருந்தால்தான் அரசாங்கம் சிறப்பான முறையில் செயல்பட முடியும். ஆகவேதான் அரசு இந்த முடிவை எடுத்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த முடிவை காலம் கடந்து எடுத்து இருக்கிறோம் என்ற குறைதான்.

இந்தத் தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு எங்கே வேலை வாய்ப்பு இருக்கிறது, யாரும் வேலை தரமாட்டார்கள் என்ற சூழ்நிலை எழுந்தது. வேலை வாய்ப்பு கிடைக்க நம்பிக்கை இல்லை, ஆகவே, தமிழ் மீடியத்திற்கு மாணவர்கள் வரமாட்டேன் என்ற நிலை இருந்தது. அந்தக் குற்றச்சாட்டிலும் கொஞ்சம் நியாயம் இருந்தது. ஆகவே, தமிழிலே படித்து விட்டு வருபவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிற வகையில் தமிழ் படித்தவர்களுக்கு முதலிலே வேலை வாய்ப்புத் தருவதற்கும், அதற்குப் பின்னாலே ஆங்கிலம் படித்தவர்களுக்கு வேலை தரவும் அரசு உத்தேசித்து இருக்கிறது. இந்த ஆணையினால், ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தமிழைப் போதனா மொழியாக எடுத்தவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு அதிகமாகக் கொடுப்பது என்ற அரசு முடிவுப்படி, கல்லூரியில் படிக்காமல், அதாவது பண்டிதர்கள், வித்வான்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை தருவதற்கு இந்த அரசு முதலிடம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த அறிவு மட்டும் போதும் என்று கருதப்படுகிற துறைக்கு அவர்களுக்கு முதலிடம் தந்து வேலை வாய்ப்பு தரப்படும். 'டெக்ஸ்ட் புக் பிரஸ்ஸிலே' ஃப்ரூப் திருத்த வேண்டும். அதற்கு நன்றாகப் படித்து இருக்கும் பண்டிதர்களை எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட வேலைகளுக்கு, அல்லது அந்தத் தகுதி தேவைப்படும் வேலைகளுக்கு அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தமிழில் படித்தவர்களுக்கு வேலை அளிப்பதிலே முதல் இடம் அளிப்பது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறதே, அதற்கு அனுசரணையான முறையிலே எல்லா விதிகளும் திருத்தப்பட்டு விட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

*Bonded Labour in Nilgiris District.*

* 63 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether any study team of the State Government has reported about the existence of Bonded Labour in the Nilgiris District during 1969–70; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டெட் லேபர் என்று சொல்லப்படுகிற ஒப்பந்தக் கூலிகளின் நிலை மோசமாக இருக்கிறது. இவர்களை எப்பொழுது வேண்டுமானாலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம், எப்பொழுது வேண்டுமானாலும் திரும்பப் போகச் சொல்லி விடலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இதுவரையில் இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, நிலையைச் சீர்படுத்த ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்படிப்பட்ட ஒப்பந்தக் கூலி முறை இருக்கின்றதா என்று மத்திய அரசுக் குழு ஒன்று 1967-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் பூராவும் சுற்றிப் பார்த்து, நீலகிரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அதன்மீது மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்து நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதைப்பற்றி விவரம் ஆராய்ந்து அனுப்புமாறு கோரியது. அவரும் விசாரித்து, பனியன் சமுதாயத்தினரை செட்டியார்கள் தங்கள் பண்ணையில் வைத்து வேலை வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு சம்பளம் கொடுத்து, அவர்களது பண்ணையிலே வாழ்வதற்கும் அவர்களுக்கு

இடமளித்து அவர்களை உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். எந்தவிதமான முறையிலும் ஒப்பந்தம் செய்து கொண்டு யாரும் வேலைக்கு வைக்கப்படவில்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஒப்பந்தம் செய்து கொண்டு, பாண்டெட் லேபர் என்ற முறையில் எந்த மாவட்டத்திலும் யாரும் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** நீலகிரி மாவட்டத்தில் ஒப்பந்தக் கூலிகள் வைத்திருப்பதுபோல், தஞ்சை மாவட்டத்தில், பண்ணையாட்கள் என்ற முறையில் வைத்து இருந்தது போலவே, அவர்கள் வேலைக்கு வருவதற்கு முன்பே அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு, அங்கே குடியிருந்துகொண்டு அவர்கள் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும், அவர்கள் நிர்ணயிக்கிற கூலிகளை இவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற பாரம்பரியம் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இவ்வளவுதான் குறைந்தபட்சக்கூலி இருக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அவர்கள் வாழ்க்கையில் சௌகரியமாக இருக்கவேண்டுமென்று கருதி, அதற்கு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பண்ணையாட்கள் சட்டம் வருவாய்த் துறையில் இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பண்ணையாட்கள் சட்டம் வேறு, பாண்டெட் லேபர் ஒப்பந்த முறை வேறு. மனிதனை அடிமையாக எழுதிக் கொடுத்து விட்டு வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிற முறை இப்பொழுது எங்கும் இல்லை என்றுதான் கூறினேன். மற்றபடி தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலிகளாக இருந்து, போதுமான கூலி இல்லாமல் இவ்வளவு தான் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி வேலை வாங்குகின்ற முறை, அது வேறு.

### திருவண்ணாமலையில் நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம்.

* 64 வினா—**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுப்பதற்காக பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் ( Biological Control Centre ) ஒன்று வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் நெற்பயிர்களை அழிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** திருவண்ணாமலை வட்டத்தில் சாத்தூர் அணைப் பகுதியில் சுமார் 20,000 ஏக்கர் நஞ்சைப் பயிர் செய்யப்படுகிறது. அந்தப் பயிர்களை அதிகமாக பூச்சி சாப்பிடுகிறது என்ற காரணத்தினால், 4, 5 முறை மருந்து அடிக்கப்படுகிறது.



அந்தப் பயிரை மாடு சாப்பிட்டால் மாடு சாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைத்து மருந்தில் அதிக பாஷாணம் இல்லாமல் செய்வதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திருவண்ணாமலை வட்டத்தில் பயிர்களை அழிக்கின்ற பூச்சிகள் பொதுவாக தஞ்சைப் பகுதியிலும் இருக்கின்றன. அதற்காக கோவை மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையிலும் ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. இதேவிதப் பூச்சிகள் அங்கு இருப்பதினால் இந்தப் பூச்சிக் கொல்லி மருந்து தயார் செய்வது பற்றி ஏற்கனவே ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதே பூச்சிக்கொல்லி மருந்து பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி நிலையம் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஒரு மாத காலத்தில் பூச்சி இருக்கிறதோ, இல்லையோ, இந்தப் பூச்சி அரிக்கிறது என்ற பெயரில் கடலைப் பயிர், நெற்பயிர் எல்லாவற்றிற்கும் ஒரு மாத காலமாக ஆகாய விமானத்திலிருந்து பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது என்பது தெரியுமா ? அதற்குக் கட்டணம் ஏதாவது வசூலிக்கப் போகிறீர்களா, இல்லையா ? அல்லது இலவசமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தி ஆகாயவிமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்துக்கொண்டு வருகிறோம். வட ஆற்காடு மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கருக்கு எந்தப் பயிர்களுக்கு எப்பொழுது தெளிப்போம் என்ற வகையிலே தனிக் கேள்வி போட்டால், அதற்கு உரிய பதில் தரப்படும்.

THIRU B. VENKATASWAMY : Is there any proposal to control the generation of pests themselves instead of spraying medicines?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பூச்சிகளைக் கொல்வதற்காக பல வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. எனவே, அந்த வகையிலே ஆகாயவிமானம் மூலம் மருந்து தெளிப்பது, விசைக் கருவிகள் மூலம் மருந்து தெளிப்பது, கையால் மருந்து தூவுவது, மற்ற முறைகள் கையாளப்பட்டுவருகின்றன. இது தவிர வேறு முறைப்படி செய்வதற்கு இப்பொழுது எந்தவிதமான உத்தேசமும் இல்லை.

### கொடைக்கானலை சுற்றுலா மையமாக்கல்

* 65 வினா—**திரு. சு. துரைசாமி :**
**திரு. என். எஸ். வி. சித்தன் :** } மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலை உல்லாச யாத்திரை இடமாக மாற்றும் திட்டம் ஏதேனும் தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கொடைக் கானலில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட அரசு உத்தேசித்துள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா மாளிகைக்கு மொத்தச் செலவு எவ்வளவு ஆகிறது? எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாநில அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் இதற்காக ஒதுக்கியிருக்கிறது. அதற்காக இடம் வேண்டும் என்று "புருடன் காம்பௌண்டு" என்ற ஒரு இடத்தை ஏற்கனவே நில ஆர்ஜிதம் செய்ய அரசாங்கம் விரும்பியது. அந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள் வழக்குமன்றத்திற்குப் போய், வழக்கு மன்றத்தில் அவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆகவே, அரசாங்கம் சிவனடி, அம்மனடி போன்ற வேறு சில இடங்கள் கிடைக்குமா என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. பொதுப்பணித் துறையில் இருக்கிற மாளிகையை ஏதாவது எடுத்து சீர்படுத்தலாமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தகுந்த இடம் கிடைக்காத காரணத்தினால் ரூ. 5 லட்சம் செலவில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டாலும், இன்னும் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி கொடைக் கானலை சுற்றுலா மையமாக்குவது பற்றியது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, உல்லாச யாத்திரை சென்று தங்குவதற்குரிய இடம் கொடைக் கானல். அரசாங்க சுற்றுலா மாளிகை நிலையத்திற்கு ஒப்பந்த ஊர்தியில் மிகவும் குறைந்த வாடகையில் போவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிற காரணத்தினால், மத்தியதர வகுப்பினர், ஏழைகள் அதிகமாக வாடகை கொடுத்து அங்கே தங்குவதற்கு முடியாத காரணத்தினால், சுற்றுலா மாளிகையில் ஏழைகள் தங்குகின்ற வகையில் குறைந்த வாடகை நிர்ணயிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** குழந்தை பிறந்த பிறகு பெயர் வைப்பது பற்றி யோசிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Kodaikanal is a very fascinating and beautiful area and only rich people, who are having facilities, are going there in large numbers. Generally middle class people go there in the mornings and return in the evenings, because there are no facilities for them to stay there. I had an occasion to be there for a few days and I found that there was scope for research work in agriculture and archaeology and history. In the local Heart's College there, there is an archaeological museum and a very good library. If facilities for stay and study are provided there, middle class people will go in large



numbers and educated men will remain there and do research work. So, will the Hon. Minister for Education think of taking steps in Melt compaign

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கலையெல்லாம் மனதில் வைத்துத்தான் இப்படிப்பட்ட ஒரு மாளிகை தேவை என்று அரசு கருதுகிறது. இப்பொழுது இருக்கிற நகரியம், டவுன்ஷிப் விடுதியில் அதிகமான இடத்தை அமைத்துக் கட்டுவதற்கு ரூ. 1½ லட்சம் கொடைக்கானல் டவுன்ஷிப்பிற்கு மாநில அரசு கொடுத்திருக்கிறது. அது அன்னியில் ரூ. 5 லட்சம் செலவில் ஒரு மாளிகை கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. போதுமான இடம் இல்லாத காரணத்தினால் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது அனைத்தையும் அரசாங்கம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

*Pipes purchased by Satankulam Panchayat Union*

* 66 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state:

(a) whether the Governmnt are aware of the misappropriation of the pipes purchased by the Satankulam Panchayat Union Council for the use of Pudukulam Panchayat about 6 years ago;

(b) whether any Police enquiry was made regarding the same; and

(c) if so, the particulars thereof ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) புதுக்குளம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுவதற்காக சாத்தான் குளம் பஞ்சாயத்து யூனியனால் வாங்கப்பட்ட குடிநீர் குழாய்கள் கையாடல் செய்யப்பட்டதாக தகவல் ஏதும் தெரியவில்லை.

(இ) & (உ): எழவில்லை.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதுக்குளம் பஞ்சாயத்துக்காக வாங்கப்பட்ட குழாய்களை வேறு வேலைக்கு உபயோகப்படுத்தி, அதன் காரணமாக புதுக்குளம் பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்படாமல், அல்லது கட்டியும் மக்களுடைய உபயோகத்திற்கு வராமலும் இருப்பது போன்று, சம்பந்தப்பட்ட அடுத்த இரண்டு பஞ்சாயத்துக்களிலும் அந்த நிலை இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆமெனில் அதைப்பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி கையாடலா என்று கேட்டார்கள், மோசடியா என்று கேட்டார்கள். மோசடி இல்லை என்று நான் சொன்னேன். குழாய் வழங்குவதிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்குத் தகவல் தந்திருக்கிறார்கள். தவறுதலாக குழாய்கள் வழங்கியவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சங்கரன்குடியிருப்பு

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிவடைந்து விட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மோட்டார் விசையேற்றம் வாங்கப்பட்டு அவை பொருத்தப்பட வேண்டியிருக்கிறது. மேற்குறிப்பிட்ட குழாய்கள் எந்த அளவுக்கு குறைந்துள்ளன என்று முடிவு செய்த பின்னாலே இந்தப் பணிக்கு முடிவான தொகை செலுத்தப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. வேலை முடிந்து விட்டதா, இல்லையா என்பதுபற்றித் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப் படும்.

மு.ப. 9–30 **திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்தக் குழாய்கள் வாங்கப்பட்ட நேரத்தில் இந்த மூன்று பஞ்சாயத்துக்களுக்காக என்று வாங்கப்பட்டன. அவற்றில் சங்கரன்குடியிருப்பில் வேலை முடிவாகிவிட்டது. பாக்கி இரண்டு பஞ்சாயத்துக்களிலும் வேலை முடியாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இந்தப் பஞ்சாயத்துக்களில் மேல் நிலை நீர்த் தேக்கத்திற்காக குழாய் இல்லை என்று சொல்லாமல், வேலையை முடிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் தனிக் கேள்வி கொடுத்தால், மேலும் விவரம் சேகரித்துக் கொடுக்கிறேன்.

### ரெகுநாதபுரத்தில் வெட்டப்பட்ட கிணறு

* 67 வினா—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் ரெகுநாதபுரத்தில் ரூ. 50,000 செலவு செய்து 70 அடி ஆழம் வெட்டப்பட்ட கிணற்றின் நீளம், அகலம் எத்தனை அடி ?

(இ) இக்கிணற்றில் தினசரி எத்தனை கேலன் தண்ணீர் கிடைக்கின்றது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) நீளம் 33 அடி 6 அங்குலம், அகலம் 32 அடி.

(இ) ஒரு நாளைக்கு 10,500 கேலன் தண்ணீர் கிடைக்கிறது.

### *Buildings for Commercial Taxes Department at Ootacamund*

* 68 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(a) whether the construction of the Office Buildings of the Commercial Taxes Department has been taken up at Ootacamund; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) தொழில் நுட்ப ஒப்பளிப்புக்குப் பின்னரும், இதனை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தை முடிவு செய்த பின்னரும் பணி தற்போதுதான் தொடங்கியுள்ளது. உதகமண்டலத்தில் மழை நின்ற பின்னர், இப்பணி விரைந்து நிறைவேற்றப்படும்.





### *Salem Steel Plant*

* 69 Q.—DR. H. V. HANDE :
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a special cell in this State to co-ordinate the work of the Union Steel Ministry on the Salem Steel Plant;

(b) if so, the probable date by which the Cell would start functioning; and

(c) whether suitable sites have been suggested to the Union Ministry for the selection being made?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை. நெய்வேலி சேலம் உருக்காலைக்கான ஆயத்த வேலைகளை தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கார்ப்பரேஷன் கவனித்து வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆலோசனைப் பொறியாளர்களான தஸ்தூர் கம்பெனியினர் சிபாரிசு செய்த சேலத்திற்கு அருகே உள்ள காஞ்சமலை என்ற இடம் சேலம் உருக்காலை நிறுவுவதற்கு மிகவும் தகுந்தது என்று மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது.

* 70 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Salem Steel Site Selection Committee visited Salem about 26th June 1970; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) சேலம் உருக்காலைக்கு ஏற்ற இடத்தை தேர்ந்தெடுக்க, தேர்வுக்குழு உறுப்பினர்கள் ஜூன் மாதம் 26-ம் நாள் காஞ்சமலைக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் நேர் ஆய்வுக்காகச் சென்று பார்த்தனர்.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether our Government are being taken into confidence by the Central Government with regard to the various details of work connected with the Steel Plant and if so, what is the probable date on which the survey work has been started or is going to be started, as also the different stages of other work, the places where it is going to be started and the amount spent by the Central Government so far ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மாநில அரசின் மீது மத்திய சர்க்காருக்கு நிச்சயம் நம்பிக்கை இருக்கிறது என்றுதான் நம்புகிறோம். நம்பிக்கை வைத்து அவர்களுடைய செயல் திட்டங்களில் சேர்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். இந்த ஆலைக்குத் தேவையான இடத்தைத் தயாரிக்க, இந்த இடம் என்று

நம்முடைய சர்க்கார் நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க அவர்களுடைய குழுவும் அமைத்தார்கள். அந்தக் குழுவும் டெல்லியிலிருந்து அதிகாரிகளோடு இடத்தைப் பார்வையிட வந்து, என்னிடமும், நம்முடைய அரசு அலுவலர்களிடமும் பேசி, அதன் பிறகு அந்த இடத்தையும் பார்த்தார்கள். ஏற்கனவே தஸ்தூர் கம்பெனியார் குறிப்பிட்ட இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம். அந்தக் குழுவும் மத்திய சர்க்காரிடம் அதைச் சிபாரிசு செய்திருக்கிறது. இதற்குப் பின்னால், நம்முடைய பிரதமரும் தொடக்க விழா செய்திருக்கிறார்கள். இதற்கு அடுத்த கட்டமாக சேலம் உருக்காலையில் எப்படிப்பட்ட உருக்குப்பொருள்களை தயார் செய்வது, 'ப்ராடெக்ட் மிக்ஸ்' செய்வது, என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, தற்சமயம் சேலம் உருக்காலை எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சேலம் உருக்காலை உண்டு என்று பாராளுமன்றத்திலும் சொல்லிவிட்டார்கள்; தொடக்க விழாவும் பிரதமரால் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலை, பணத்தையும் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறது. தென் மாநிலங்களிலுள்ள உருக்காலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ஆலைகளில், சேலம் உருக்காலையை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம். அதற்காக ஒரு தனிக் கார்ப்பொரேஷனை நியமித்து, நம்முடைய மாநில அரசுக்கு அதில் பங்கு கொடுத்து—எத்தகைய பங்கு என்பது வேறு பிரச்சினை—பங்கு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்து, வேலையைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். மத்திய சர்க்கார் சேலம் உருக்காலையில் எந்தவிதமான 'ப்ராடெக்ட் மிக்ஸ்' செய்வது என்பதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்கிறார்கள். அதற்குக் காரணம் தஸ்தூர் கம்பெனி அறிக்கை கொடுத்து நீண்ட நாட்களாகிவிட்டன. அந்த அறிக்கையை 'அப்டுடேட்', இன்றைக்கு வரை செய்து, எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் புள்ளி விவரத்தோடு செய்யவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் விரைவில் ஒரு முடிவு கண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே தெரிவிக்கும் உணர்ச்சிகளுக்கு மதிப்புக்கொடுத்து, சேலம் உருக்காலையை நடத்துவதற்கு ஒரு தனிக் கார்ப்பொரேஷனை ஏற்படுத்தி, வேலைகள் துரிதமாக நடைபெறும் என்று கருதுகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அந்த நிர்வாகத்திலே, நம்முடைய மாநில அரசுக்கு தனி இடம் தருவதாக மத்திய சர்க்காரிடமிருந்து வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் விவரங்கள் என்ன என்று அறியலாமா?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது நம் நாட்டில் மத்திய சர்க்கார் எடுத்து நடத்தக்கூடிய உருக்காலைகளெல்லாம் ஹிந்துஸ்தான் ஸ்டீல் கம்பெனி என்கிற நிறுவனத்தின் கீழே நடத்துகிறார்கள். நாங்கள் எங்களுடைய கருத்தாகச் சொன்னது, தென்னாட்டில் அதே நிர்வாகத்தின் கீழே அல்லாமல், சேலத்திற்கு மட்டும் தனியாக ஒரு கம்பெனி அமைக்க வேண்டும் என்று மத்திய சர்க்காருக்குச் சொல்லி, அதில் மாநில அரசுக்கும் பங்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் அமைச்சர் கூட தன்னுடைய பதிலிலே சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகைத் தலைப்பில் பார்த்தால் ஒரு மாதிரியும், உள்ளே செய்தி வேறு மாதிரியும் இருக்கிறது. முதலில் மாநில சர்க்காரை பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற கருத்தும், பின்னாலே, மாநில அரசை எந்த வகையில் சேர்த்துக்கொள்ள சேலம் உருக்காலையில் வாய்ப்புக் கொடுக்கலாம் என்று பரிசீலிக்கிறோம் என்று இரண்டையும் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாநில அரசைப் பொருத்தவரையில், பங்கு எடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைவிட, தொழிற்சாலை நல்ல முறையில் நடைபெற, மாநில அரசுக்கும் நிர்வாகத்தில் ஓரளவுக்கு இடம் கொடுக்கப்பட்டால், துரிதமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும் என்று வலியுறுத்துகிறோம்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the amount allotted to the Salem Steel plant in the Fifth Five-Year Plan?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. மத்திய சர்க்கார் தன்னுடைய ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தமாக, தென் மாநிலங்களுக்கென்று, மைசூர், ஆந்திரா, நம்முடைய சேலம் இவற்றிற்குச் சேர்த்து என்று ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், பணமும் ஒதுக்கியாகி விட்டது. துவக்க விழாவும் நடத்தியாகிவிட்டது. குறிப்பிட்ட இடத்தை குழுவும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அப்படி இடத்தை வாங்குவதில் ஏதேதோ சிக்கல்கள் என்று சொல்கிறார்களே, அவை என்ன என்று அறிவிக்கலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் சொல்வது தான் சிக்கலாகத் தெரிகிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் நீண்ட நாளாக ஏராளமான ஏக்கர் நிலங்களை நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தொடக்க விழாவிற்காக உடனடியாக நிலம் வேண்டும் என்ற போது, விவசாயிகள் வெகு ஆர்வத்தோடு, சட்டம் பயன் பட்டாலும் பயன்படாவிட்டாலும், உடனடியாக வேண்டிய அளவிற்கு தாங்களாகவே முன்வந்து கொஞ்சம் நிலத்தைக் கொடுத்தார்கள். அதை முதலிலே எடுத்திருக்கிறது. சட்டப்படி மீதி நிலங்களை

எடுக்க வேண்டும் என்று நோடிபிகேஷன் கொடுத்திருக்கிறோம். மத்திய சர்க்கார் உடனடியாக ஆணை பிறப்பித்தால், மேற்கொண்டு வேலைகளைத் துவங்குவோம் என்று சொன்னால், அதன் மேல் வேலைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** சபாநாயகர் அவர்களே, இந்த சேலம் உருக்காலைக்கு வேண்டிய இடத்தை குழுவினர் தேர்ந்தெடுத்து விட்டதால், உடனடியாக வேலை நடைபெறுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் காட்டும் ஆர்வத்தையும் மத்திய சர்க்கார் உணரும் என்று நினைக்கிறேன். வேகமாக சேலம் உருக்காலை வந்தால், நாட்டிலும், அடுத்த மாநிலங்களிலுமுள்ள இரும்பு உருக்குப் பொருள்களின் பற்றுக்குறை தீர வாய்ப்பு ஏற்படும்; நம்முடைய காஞ்சமலை இரும்பு தாது, ஸ்பெஷல் ஸ்டீல் செய்ய உதவும் என்றும் அறிஞர்கள் சொல்லியிருப்பதால், அந்த தனிப்பட்ட ரகமான இரும்புப் பொருள்களை உயர்ந்த விலைக்கு விற்கலாம் என்றும் மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆலைக்கு முதலிடம் கொடுத்து ஆரம்பிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தையும், நம்முடைய அங்கத்தினர்களெல்லாம் சொன்னதையும், மத்திய சர்க்காரிடம் நாங்கள் அடிக்கடி சொல்லி வருகிறோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை நமது பிரதம மந்திரி அவர்களால் துவக்கப்படுவதற்கு முன்னால் என்னென்ன அபிவிருத்தி வேலைகள் நடந்திருக்கின்றன என்பதையும், இந்த உற்பத்தி சம்பந்தமான நுணுக்க ஆராய்ச்சிகள் செய்வதில் மிகவும் காலதாமதமாகிறது என்ற கருத்து சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலை என்ன என்பதையும், எப்படியிருந்தபோதிலும் இன்னும் ஓரிரு வருடங்களுக்குள் உருக்காலை தன் உற்பத்தியைத் தொடங்குமா என்பதை அரசாங்கத்தால் சொல்ல முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மற்ற மாநில அரசுகளைக் காட்டிலும் நம்முடைய மாநில அரசு அதிகாரிகள் சேலம் உருக்காலை சம்பந்தமான புள்ளி விவரங்களை, மிகுந்த அளவிற்குப் பாடுபட்டு, சேலம் இரும்புத்தாது மிகச் சிறந்தது என்பதாக யாரும் மறுக்க முடியாத அளவிற்குச் சேகரித்துத் தந்திருக்கிறார்கள். நம்முடைய புள்ளிவிவரங்களை எந்த நிபுணரும் மறுத்ததாகத் தெரியவில்லை. வெளிநாட்டு நிபுணர்களும் சேலம் உருக்காலைக்கு காஞ்சமலைப் பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாதுவை உபயோகப்படுத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். வெளிநாட்டு நிபுணர்களுடைய ஆதரவையும் இந்த விஷயத்தில் நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே, சேலம் உருக்காலையைப்பற்றி இனியும் சந்தேகம் இருக்கிறதென்று இந்த மன்றத்தில் சொல்வது சரியல்ல.



மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் இதைப்பற்றி விளக்கம் கொடுத்தோம். மத்திய அமைச்சர் திரு. பூனச்சா அவர்கள் 'பச்சைக் கொடி காட்டிவிட்டேன்' என்று சொன்னார்கள். பின்னர் அவர் வேறு கட்சிக்குச் சென்றுவிட்டார்கள். அவருக்குப் பின்னாலே வந்த அமைச்சர் அவர்களும் சேலம் உருக்காலை சம்பந்தமான விவரங்களைக் கேட்டார்கள். நாங்கள் மிக விளக்கமாக அவரிடத்திலே சொன்னோம். ஆகவே, சேலம் உருக்காலை தொடங்கப்படுவது குறித்த சந்தேகத்திற்கே இடம் இல்லை.

சேலம் உருக்காலை சம்பந்தமாக, வேகமாக அதைச் செய்வதற்கான வழிவகைகளைக் குறித்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறோம். அதற்காகத்தான் சேலம் உருக்காலை வேலையை தனியாக ஒரு கம்பெனியிடம் கொடுத்துவிட்டால் வேலைகள் விரைவில் முடிவுறும் என்று சொல்லியிருக்கிறோம். பிலாய், ரூர்கேலா, பொகாரோ போன்றவை அல்லாமல், சேலம் உருக்காலையை தனியாக ஒரு கம்பெனியிடம் தந்துவிடுங்கள் என்று சொல்லி, வாதாடி வருகிறோம். ஆந்திரத்திலும், மைசூரிலும் உள்ள இரும்பாலைகளோடு இதைச் சேர்க்காமல் தனியாக எடுத்துச் செய்ய வேண்டும் என்று கோரி வருகிறோம். அதற்காக இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதற்கு அங்கத்தினர்கள் எல்லோரும் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது :** தலைவர் அவர்களே, நம்மிடத்திலுள்ள காஞ்சமலைப் பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாது ரகம் விசேஷமானது என்று நிபுணர் கூறியிருக்கிறார்களே, அந்த நிபுணர்கள் உள்நாட்டு நிபுணர்களா, அல்லது வெளிநாட்டு நிபுணர்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுக்கு உள்நாட்டு நிபுணர்களிடத்திலும் நம்பிக்கை இருக்குமென்று நினைக்கிறேன். வெளிநாட்டு நிபுணர்களை இங்கே அழைத்துவந்து ஆராய இயலாத நிலையில், இரும்புத் தாதுவை வெளிநாட்டுக்கு அனுப்பி, வெளிநாட்டு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து, அந்த இரும்புத் தாது உருக்காலைக்கு ஏற்ற தாதுதான் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : As regards the actual working of this plant, is it going to be a purely Central Government affair? What about the much advertised propaganda of this Government that they are going to compel the Central Government to give them a share in the profit or a share in the actual management of the plant?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம், எப்போதுமே விளம்பரத்திலே நம்பிக்கையுள்ள அரசாங்கம் இல்லை. அப்படி விளம்பரம் செய்ததாக, பத்திரிகைகளில்

பார்த்ததாக கனம் அங்கத்தினர் கூறுகிறார். உருக்காலைத் திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்ற கட்டம் முடிந்து, திட்டம் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். உருக்காலைத் திட்ட நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கும் பங்கு கொடுத்து, மாநில அரசோடு இணைந்து நடக்க வேண்டும் என்று கூறுகிறோம். உருக்காலைத் திட்டத்திற்கான நிலங்களைக் கைப்பற்றுவது, உருக்காலையைச் சுற்றி புதிதாக உருவாகும் டவுன்ஷிப், அங்கு கல்விக்கூடங்கள், மற்ற வசதிகள் போன்றவற்றிற்கு இது தோதாக இருக்கும் என்பதற்காகத்தான் மத்திய அரசு மாநில அரசோடு இணைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். வேறு ஒரு மாநிலத்திலே காகிதத் தொழிற்சாலையை மத்திய அரசு மாநில அரசோடு இணைத்துக் கொண்டிருக்கிற முயற்சியை செய்திருக்கிறார்கள். இதையே நாங்கள் எடுத்துக் காட்டினோம். மத்திய அமைச்சர் திரு. பக்ருதீன் அலி அவர்கள் வந்து பார்த்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

மற்றும் திருச்சியில் உள்ள ஹெவி பாய்லர் ஸ்கீம் திட்டத்தில் இன்னொரு புதிய தொழிற்சாலையை மத்திய அரசு மாநில அரசோடு இணைந்து உருவாக்கலாம் என்றும் கோரியிருக்கிறோம். மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுவது பாபம் இல்லையென்று நாங்கள் கருதுகிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் பாபம் என்று கருதலாம். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை தொடங்குவதற்கு தனியாக ஒரு கம்பெனியை மத்திய அரசு உருவாக்கும் என்றும், அதில் மாநில அரசுக்கு இடம் அளிக்கும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, காவிரி வட்டாரத்தில் பெட்ரோல் கிடைக்குமென்று சொல்லி, அது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் செய்து பார்த்ததில், அதை எடுப்பதற்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும் என்றும், அப்படி செலவழித்து எடுக்கப்பட்ட எண்ணெய் வினியோகம் செய்யப்படும்போது, எண்ணெய் எடுப்பதற்கான செலவுக்கும், வினியோகம் செய்வதற்கான செலவுக்கும்தான் ஈடுகட்டமுடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அது லாபகரமானது அல்ல என்று மத்திய அரசு சொல்லியுள்ளதே அதுபோல, மத்திய சர்க்கார் உருக்காலை விஷயத்திலும் நம்மை ஏமாற்றப் பார்த்தால் நம்முடைய மாநில சர்க்கார் இந்த உருக்காலைத் திட்டத்தை ஏற்று நடத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் நம்பிக்கை இழந்து பேசுகிறார். மத்திய அரசாங்கமும், இப்போதைய தமிழ்நாட்டு சர்க்காரும் தமிழ்நாட்டு மக்களைக் கைவிட்டுவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி எண்ணெய் பற்றிச் சொன்னார்கள். புதிய ஆராய்ச்சி நடைபெறும்போது அங்கு என்னென்ன பொருள்கள் கிடைக்கின்றன என்பதையும் ஆராய வேண்டும். காவேரிப் பகுதியில்





எண்ணெய் கிடைக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி கிடைக்குமபடியான எண்ணெய், எடுப்பதற்கான செலவுக்கேற்ற வகையில் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு கிடைக்காது என்று ஆராய்ச்சிகளின் மூலம் முடிவு எடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

சேலம் உருக்காலை கண்முன் தெரிவது. காஞ்சமலைப் பகுதியில் இரும்புத் தாது பூமிக்கு அடியிலே மட்டுமல்ல, மேலேயே கிடைக்கிறது. காவிரிப் பகுதியில் எண்ணெய் எடுப்பதைப்போல பூமியின் ஆழத்தில் இல்லை. நம்முடைய கண்முன்னாலே இரும்புத் தாது தெரிகிறது. ஆகவே, சேலம் உருக்காலைக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சேலம் உருக்காலைக்கு காஞ்சமலைப் பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் போல வட ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் இரும்புத் தாதுகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் உள்ளன என்ற தகவல்களும் கிடைத்திருக்கின்றன. இதையும் நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தேவையான அளவுக்கு இரும்புத் தாது இருக்கிறது என்பதை மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை விரிவாக அமல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் மத்திய அரசுக்கு வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரிவாக அமல்படுத்த மத்திய அரசாங்கத்திற்கு எண்ணம் வர வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில தினங்களுக்கு முன்னால் மத்திய அரசை முற்போக்கான அரசு என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட முற்போக்கான அரசு கூடவா இந்தத் திட்டத்தைத் துரிதமாக செய்யக்கூடாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு முற்போக்கானது என்பதை நிரூபிப்பதுபோல, எந்த மாநிலத்திலும் தொடங்காத அளவிற்கு, இந்த மாநிலத்தில் லட்சக்கணக்கான மக்களுக்கு முன்னாலே நமது பிரதம மந்திரி அவர்கள் இங்கு வந்து சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களை பிற்போக்குவாதி என்று சொல்பவர்களும் நாட்டில் சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டு நாம் ஏமாற வேண்டாம்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற நிலத்தின் பரப்பளவு என்ன ? அந்த இடம் அரசுக்குச் சொந்தமானதா, அல்லது தனிப்பட்ட விவசாயிகளுக்குச் சொந்தமான இடமா ?

[1970 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எவ்வளவு ஏக்கர் என்று கணக்கு தற்போது என்னிடம் இல்லை. கிட்டத்தட்ட 18 ஆயிரம் ஏக்கர் வேண்டுமென்று முடிவு செய்து நோட்டிபை செய்திருக்கிறோம். இதில் பல பேர்களுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குத் தங்களுடைய நிலங்களைத் தருவதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். நமது பிரதம மந்திரி அவர்கள் சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தொடங்கி வைத்த காலையில் சிலர் தாங்களாகவே முன்வந்து, தங்களுடைய நிலங்களைக் கொடுக்க முன்வந்து தந்தார்கள். அதேபோல எல்லா மக்களும் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்கூறும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இரும்புக் கனிபடிவங்கள் இருப்பதாகச் சொன்னார். அது பூர்வாங்கமாக ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படியானால், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேறு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை கூறியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 'சேலம் உருக்காலை உங்களுடைய ஆட்சியில் வந்துவிட்டது. இன்னொரு ஆலையும் உங்களால்தான் கொண்டுவர முடியும்' என்கிறார் கனம் அங்கத்தினர் அவர்கள். அதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

### தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

* 71 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968, 1969-ம் ஆண்டுகளில் தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) தூத்துக்குடியில் பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் சாத்தியக் கூறுபற்றிய அறிக்கையினை தயார் செய்யும்படி டாடா கன்சல்டிங் எஞ்சினீயர்ஸ் என்னும் நிறுவனத்தை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தபின் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு முறைப்படி மனுச்செய்யும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** போவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் அந்தத் துறைமுகப் பணிகளுக்கு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையும் இன்றியமையாததாக இருப்பதனால் அதை விரைவில் துவக்க அரசு முயற்சி செய்யுமா?



1970 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக்க நம்பிக்கை கொண்டவர்கள் எல்லாம் சேர்ந்து 1967-ஆம் வருடம் தூத்துக்குடி துறைமுகப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு எழுச்சிநாள் கொண்டாடினார்கள். அதன் காரணமாக எழுச்சிமிக்க வரலாறு அங்கே உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்த எழுச்சிமிக்க வரலாற்றோடு பெட்ரோலியம் எண்ணெ சுத்திகரிப்பு ஆலையும் வந்துவிடும் என்று நம்புகிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** கப்பலுக்கு எரிபொருள் போடுகிற ஒரு துறைமுகமாக தூத்துக்குடி அமைக்கப்படுகிற உத்தேசம் இருக்கிறதா? அப்படியானால் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையும் அங்கே அமையவேண்டியது அத்தியாவசியம் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதை உணர்ந்த காரணத்தினால்தான் நம் அரசாங்கமே அதனுடைய தேவையை வலியுறுத்தி அது சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைச் சேகரித்தவுடன் மத்திய அரசிடம் எடுத்துக்கூறி அதனைப் பெற முயற்சி செய்யும்.

**திரு. கே. என். குமாரசுவாமி :** தூத்துக்குடிப் பகுதியில் உள்ள எழுச்சிமிக்கவர்கள் அங்கே பல தொழில்களைத் துவக்க முன்வந்திருக்கிறார்களே, அவர்களுக்கு எந்த எந்தத் துறையில் ஆதரவு அளிக்க இந்த அரசாங்கம் முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தூத்துக்குடியைச் சுற்றி சால்ட் பேஸ்டு ஆக இருக்கக்கூடிய ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பெருக்க முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. உரத் தொழிற்சாலையையொட்டியும் ஏராளமான தொழில்கள் வரவேண்டுமென்று முயற்சி செய்கிறோம். எந்தத் தொழிலை துவக்குவதற்கு யார் முன்வந்தாலும் அரசு ஆதரவு அளிக்கும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தூத்துக்குடி எண்ணெ சுத்திகரிப்புத் தொழிற்சாலை எவ்வளவு மூலதனத்தில் துவக்கப்படுவதாக இருக்கிறது? அது எந்தத் துறையில் ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதுதான் அந்த ஆலையை நிறுவும் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையினைத் தயார் செய்யும்படி டாடா கன்சல்டிங் எஞ்சினீயர்ஸ் என்னும் நிறுவனத்தை அரசாங்கம் கேட்டுக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. அவர்களுடைய ஃபீஸிபிலிடி ரிப்போர்ட் வந்த பிறகு எந்த வகையில் எவ்வளவு மூலதனத்தோடு, எந்தத் துறையில் துவங்கலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

### Paper Mill for Udangudi

* 72 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal pending now before the Government to establish a paper mill at Udangudi in Tiruchendur taluk in Tirunelveli district in the public sector; and

(b) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற முதல் அமைச்சர் அண்ணாதுரை அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அரசாங்கம் வரிவிதிப்புச் செய்யாமல் காகிதம் செய்தல் போன்ற சிறு தொழில்களை ஆரம்பித்து அரசாங்க வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று சொன்னார்களே, அந்த யோசனையின் அடிப்படையில் இந்த அரசு—திருநெல்வேலியில் திருச்செந்தூர் தாலுக்காவில் காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைப்பதால் அங்கே அரசாங்கமே பத்திரிகை காகித உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காலஞ்சென்றதற்குப் பிறகாவது அப்பேரறிஞர் குறிப்பிட்டவற்றில் பொருள் இருக்கிறது என்பதை உணர்ந்து சுட்டிக்காட்டுவதற்கு பெரும் மகிழ்ச்சி. அந்தப் பகுதியில் யார் அந்தத் தொழிலை நடத்த முன்வந்தாலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து ஏராளமான அகதிகள் அந்தத் திருச்செந்தூர் தாலுக்கா பகுதிக்கு வர இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய புனர் வாழ்வுக்காக அரசு தரப்பிலேயே அந்தப் பகுதியில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலையை அரசாங்கத் தரப்பில் ஆரம்பிப்பதாக இல்லை. இதுபோன்ற தொழில் இப்போதே பலவிடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் தனியார் துறையில் யார் ஆரம்பிக்க முன்வந்தாலும் அரசாங்கம் உதவி செய்யத் தயாராய் இருக்கிறது.

### லாரி சொந்தக்காரர்கள் வேலை நிறுத்தம்

* 73 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 7—7—1970 தேதி அன்று தமிழ்நாடு முழுவதும் லாரிகள் ஓடவில்லை யென்பது உண்மையா ?



(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

(உ) அதன் பேரில், சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) & (உ) : வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஓடவில்லை என்பது உண்மை. லாரிகள் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது அல்லவா ? எந்த லாரி சொந்த உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது ? எந்த அடிப்படையில் சரி செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஓடவில்லை என்பது உண்மையல்ல. வரிவிதிப்பில் வரி உயர்த்தப்பட்டது. அதை லாரி சொந்தக்காரர்கள் எதிர்த்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதில் ஒரு சுமுகமான நிலை ஏற்பட்ட காரணத்தினால் வேலை நிறுத்தம் தடுக்கப்பட்டது.

**திரு. கே. வினாயகம் :** வரி விதிக்கப்பட்டதன் காரணத்தினால் அதை எதிர்த்து அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னேயே வேலை நிறுத்தம் செய்யப் போவதாக நோட்டீஸ் கொடுத்து 7-ஆம் தேதி வேலை நிறுத்தமும் நடந்தது. அன்று தமிழகம் பூராவும் லாரிகள் ஓடவில்லை. இந்தத் தகவல் அரசாங்கத்திற்கு ஒருவேளை தெரியாது இருக்க சந்தர்ப்பம் உண்டா ? ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யப் பட்டதன் காரணத்தினால்தான் அரசாங்கம் பிறகு அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்துவைத் தார்கள் என்பது உண்மைதானா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் அதை முழுக்க முழுக்க மறுக்கிறேன். எந்த ஒரு இடத்திலும் ஓடாமல் இருக்கவில்லை. 6-ஆம் தேதி மாலையே அரசாங்கம் ஒரு பரிகாரம் கண்டுவிட்டது. கட்டண உயர்வு அதிகம் என்ற காரணத்தினால் முதலில் 10 ரூபாய் குறைத்தோம். அதையும் ஆட்சேபித்தார்கள். பிறகு மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவினை ஏற்படுத்திக் தந்த காரணத்தினால் 7-ஆம் தேதி வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

### செம்மினிப்பட்டியில் நீர்த்தேக்கம்

* 74 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில், செம்மினிப் பட்டி எனும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.

**திரு. பி. எஸ். மணியன் :** இது போன்ற நீர்த்தேக்கங்கள் ஆய்வு செய்யப்படுகிறபோது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு டன்னுக்கு மூவாயிரத்திற்குமேல் செலவானால் அது அன்எக்கனாமிகல் என்று கைவிடப்படுகிறது. இதைப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் திட்டத்தைப் பற்றி சிக்கல் எதுவும் இல்லை. டன்னுக்கு 1,440 ரூபாய் என்ற அடிப்படையில்தான் இது கணக்கிடப்பட்டிருக்கிறது.

### திருப்பூர் அணை

* 75 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3—12—69-ல் நிர்வாகப் பொறியாளர், கோவைக் கோட்டம், திருப்பூர் அணையைப் பார்வையிட்டாரா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் இந்த அணையின் உச்சமட்ட அளவிற்குத் தேங்கும் நீர் இதன் கீழுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதற்குப் போதுமானது என்று தெரிய வருகிறது. எனவே அணையின் உச்ச மட்டத்தை உயர்த்தத் தேவையில்லை.

### 'குட்டைத் திட்டம்'

* 76 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனப் பிரிவில் குட்டைத் திட்டம் (Pond Schemes) சில பகுதிகளில் மட்டும் அமுல் நடத்தப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாநிலம் முழுவதும் இத்திட்டத்தை விரிவு படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) கோவை, சேலம் மாவட்டங்களிலும் மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் மட்டும் செயல்பட்டு வந்த "குட்டைத் திட்டம்", தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி :** குட்டைத் திட்டம் என்பது வறட்சிப் பகுதிகளுக்கு மிகவும் உபயோகமான திட்டமாகும். வறட்சிப் பகுதிகள் என்று மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அறிவித்திருக்கிற பகுதிகளுக்கு எல்லாம் விஸ்தரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வறட்சிப் பகுதிகளில் இது நல்ல பலனைத் தருகிறது என்பதில் ஆட்சேபணை இல்லை. அந்த அடிப்படையில் தான் தஞ்சைமாவட்டம் நீங்கலாக மற்ற இடங்களில் விரிவாக்கப் பட்டிருக்கிறது. அதில் போதிய கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, செஞ்சி, திண்டிவனம் போன்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்ட இந்தத் திட்டம் மரக்காணம் போன்ற கடலோரப் பகுதிகளுக்கு மிகவும் தேவைப்படுகின்ற திட்டம் என்று ஏற்கனவே வலியுறுத்துகின்ற நிலைமையில், இதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

**Thiru K. S. KOTHANDARAMIAH :** Sir, the Pond Scheme is a very useful scheme. May I know from the Hon. Minister whether this is a special scheme or does it come under the general scheme? If it is a Special Scheme, what is the amount allotted for the scheme?

**The Hon. Thiru S. J. SADIQ PADSHA :** It comes under the general scheme. It forms part of the existing Special Minor Irrigation Programme.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, இப்போது நமது மாநிலத்தில் பின் தங்கிய மாவட்டங்களைச் சீரமைப்பதற்காக மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட பணத்தை செலவழிப்பதில் 'பிரையாரிடி' போட்டுக் கொடுப்பதைப் போல இந்த 'பாண்ட்ஸ்' ஸ்கீம்களையும் இதில் அப்படி எடுத்துக் கொள்ளுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும். அதிகாரிகளுக்கு இந்தக் கருத்துத் தெரிவிக்கப்படும்.

**திரு. இல. பலராமன் :** இந்தக் குட்டைத் திட்டத்தை இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டு மூலம் ஏற்பாடு செய்கிறார்களா? அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனிலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்ட திட்டங்களாக அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறதா என்று அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை யார் அமல் படுத்துகிறார்கள் என்ற விவரம் அரசாங்கக் குறிப்பில் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொதுப்பணித் துறையினர்தான் இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். எக்ஸிக்யூஷனும் அவர்கள்தான் செய்கிறார்கள். பெரிய திட்டங்களெல்லாம் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டு மூலமாக செய்யப்பட்டு மாநில அளவிலே பரிசீலிக்கப்படுகின்றன.

[1970 நவம்பர் 30

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்தக் குட்டைத் திட்டம் என்பது ஊற்றுக் குட்டையா அல்லது சாதாரணக் குட்டையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** குட்டையைக் குழப்பவேண்டாம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, இந்த நல்ல திட்டத்திலே தஞ்சை ஜில்லாவை ஒதுக்கிவிட்டிருக்கிறீர்கள். ஆனால் தஞ்சையில் கீழத் தஞ்சையில் சில பகுதிகளைச் சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. மேல் தஞ்சையில் ஒரத்தநாடு, பாப்பாநாடு, அறந்தாங்கி போன்ற பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கக்கூடிய மேற்கு தஞ்சைக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தஞ்சை மாவட்டம் நீங்கலாக' இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கீழத் தஞ்சையில் அப்படித் திட்டம் இருக்கிறது என்று சொன்னால் மேலைத் தஞ்சையில் அதைப் பற்றி விஸ்தரிக்க ஆட்சேபணை இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்த 'பான்ட்ஸ்' ஸ்கீம் வறட்சிப் பிரதேசங்களுக்கு மட்டும் அல்ல. மலைப் பிரதேசங்களுக்குக் கூட ஏற்ற திட்டம். வடாற்காடு மாவட்டம் வறட்சிப் பிரதேசம் மட்டும் அல்ல. மலைப் பிரதேசம் கூட; ஆனால் தஞ்சை மாவட்டத்திற்குச் சரி சமானமாக உணவு உற்பத்தியில் இருக்கிறது. அப்பேர்பட்ட மாவட்டத்திற்கு 'பான்ட்ஸ் ஸ்கீம்-ல் போதுமான அளவு பணம் ஒதுக்கப்படவில்லை என்பது உண்மையா? ஆகவே அந்த மாவட்டத்திற்குப் போதுமான அளவு பணம் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பணம் ஒதுக்கப்பட்டதற்கான புள்ளி விவரம் தற்போது இல்லை. பான்ட்ஸ் ஸ்கீமை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்பதுதான் கொள்கை. வறட்சிப் பகுதி மாத்திரம் அல்ல. மழைத் தண்ணீரை எங்கெங்கெல்லாம் தேக்க முடியுமோ அங்கெல்லாம் விவசாயிகளுக்கு பலன் தரத்தக்க திட்டம்தான் இது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பாக தகவல் தருவார்களானால் அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, கோவை ஜில்லாவிலே சிறு சிறு இடங்களிலே குட்டைகள் இருக்கின்றன. மதுக்கரை அணைக்கட்டு திட்டம் 6 லட்சத்து 30 ரூபாயில் போடப்பட்டு சாங்ஷன் ஆகி 1970-ம் ஆண்டிலே கான்சல் செய்து இருக்கிறார்கள். மறுபடியும் அந்த அணைக்கட்டை கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** எந்த அணைக்கட்டு என்று பெயரைச் சொன்னால் ஏற்பாடு செய்யலாம்?

**திரு. என். மருதாசலம்:** மதுக்கரை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. என். மருதாசலம்:** மதுக்கரை பிர்க்காவிலே, பாலத்துறை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதைப்பற்றிய விவரம் இல்லை. கோவை மாவட்டத்திலே சின்னவாளம்பட்டி என்ற இடத்திலே ஏற்கனவே பரிசீலனையில் இருந்த அணைக்கட்டு கைவிடப்பட்டு மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the number of Pond Schemes implemented so far in our State?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தற்போது விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்த 'பான்ட்ஸ் ஸ்கீம்' தஞ்சை மாவட்டத்தைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் அமல் படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் மழை இல்லாத நேரங்களில் இப்படிப் பட்ட திட்டம் நல்ல பயன் தரும். இந்தத் திட்டம் தாற்காலிகமாக இல்லாமல் நிரந்தரமாக ஆக்குவதற்கு சீப் இன்ஜினியர் (இர்ரிகேஷன்) என்று ஒருவர் இருப்பதைப் போல சீப் இன்ஜினியர் (மைனர் இர்ரிகேஷன்) என்று ஒருவரை நியமித்து தொடர்ந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தத் திட்டத்தைப் பொருத்தவரையிலும் இந்த சபையிலே பொதுவாக எல்லா உறுப்பினர்களும் வரவேற்று பாராட்டைத் தெரிவித்தார்கள். இதை முனைப்பாக செயல் படுத்தவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் விரைவாக பரிசீலிக்கப்பட்டு, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த 'பாண்ட்ஸ்' திட்டத்திலே 4 ஏக்கருக்கு குறைவாக நிலம் இருக்கின்ற இடங்களில் இந்தக் குட்டைத் திட்டம் ஏற்படாது என்பதை மாற்றி, 2 ஏக்கர் நிலம் உள்ள இடங்களில் இந்தத் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இடம் விஸ்தீரணத்தைப் பற்றிய பிரச்சினை இல்லை என்று கருதுகிறேன். இதன் மூலம் ஏற்கனவே தண்ணீர் பாய்ந்து வரும் ஆயக்கட்டுகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத அளவில் அவ்விதம் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த இடங்களில் சிக்கல் இருக்கிறது என்று சொல்வார்களேயானால் அதைச் சரி செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்தக் குட்டைத் திட்டம் தமிழகம் பூராவுக்கும் விரிவான முறையில் செயல்பட்டு வருகிறது. ஆனால், இந்தக் குட்டைகளை அமைக்கும் போது தேங்கி இருக்கின்ற தண்ணீர் நீராவியாக மாறி 'எவாப்பரேஷன் லாஸ்' ஆகக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நீராவியை எப்படித் தடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குட்டைத் திட்டம் வரவேற்கக் கூடிய திட்டமாக இருந்தாலும் சரியானபடி அமல்படுத்தப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? பின் தங்கிய பிரதேசங்களைப் பொறுத்த வரையில் இன்னும் தீவிரமாக இந்தத் திட்டத்தை அமல் செய்யவேண்டுமென்று ஏதாவது சிறப்புத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் நான் ஏற்கனவே கூறியது போல் நம்முடைய அதிகாரிகளிடம் சொல்லி அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

**திரு. பி. எஸ் தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய நோக்கமே உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான் என்று போட்டு இருப்பதாக தெரிகிறது. அப்படியானால் வறட்சியான காலங்களில் குட்டை, குளங்களில் தண்ணீரைத் தேக்கி வைத்து அதைப் பம்ப் செட்டுகள் மூலமாக இறைக்க ஏற்பாடு செய்யப்படுமா? இதைத் தஞ்சை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** குட்டை குளங்களில் தண்ணீரைத் தேக்கி அதைப் பம்ப் செய்வதற்கான திட்டமல்ல இது, தண்ணீரைத் தேக்கி வைப்பதன் காரணமே அந்தப் பக்கத்திலே உள்ள கிணறுகளில் தண்ணீர் மட்டம் உயரும். அதன் மூலம் விவசாயத்திற்குப் பயன் படுத்திக்கொள்வதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.





**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டத்திற்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நீர்ப்பாசன திட்டத்திற்கான நிதியிலிருந்தே இது ஏற்பாடு செய்யப்படுகிறதா? இதற்காக தனியாக நிதி ஒதுக்கி அதற்காக ஒரு 'டார்கெட்' வைப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது இருக்கிற நிலையில் தனியாக நிதி இல்லை. ஆனால் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் எஸ்.எம்.ஐ.பி-ன் மூலம் நிதி ஒதுக்கும் பிரச்சினை எழவில்லை. தனிப்பட்ட திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

### *Jain temple at Vijayamangalam*

• 77 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR; and THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Jain temple in Vijayamangalam in Erode Taluk has been taken over by the Department; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) & (இ) ஆம். ஈரோடு வட்டம் விஜயமங்கலத்தில் ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் கோயில் என வழங்கும் சமணக் கோயிலின் முறைகேடான நிர்வாகம் காரணமாக 1959-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளையும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளையும் அரசு அண்மையில் அந்தக் கோயிலுக்கு நீட்டித்துள்ளது.

**திரு. கே. விநாயகம் :** சார், இந்தச் சமணர்கள் வழிபடுகிற இந்த விஜயமங்கலத்தில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயத்தின் சிறப்புகள் யாவை? அந்த ஆலயத்திற்குத் தர்மகர்த்தாக்களை நியமித்து விட்டார்களா? அவர்களிலே யார் யார் எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அது சம்மந்தமான தகவல் என்னிடத்திலே இல்லை. அதற்கு சீனிவாச அய்யர் என்ற குருக்கள்தான் டிரஸ்டியாக இருந்திருக்கிறார். அதற்கு முன்னாலே எண்டோமெண்டிலே எடுக்கப்படாத காரணத்தினாலே டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டார்களா அல்லது இல்லையா என்று தெரியவில்லை. இப்போது அந்தச் சட்டத்தை நீட்டித்து இருக்கிற காரணத்தினால் டிரஸ்டு போர்டு அமைப்பதற்கான அவசியம் இனிமேல் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம் :** இந்த ஆலயத்திற்கு இப்போது என்ன வருமானம் ஆண்டுதோறும் வருகிறது? இனிமேல் டிரஸ்டி போடுவார்களா? போட்டால் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களைப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்தக் கோயிலே இப்போழுதுதான் எண்டோமெண்ட் கண்ட்ரோலிலே எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே ஏறத்தாழ 45 ஏக்கர் 98 செண்ட் சொத்து அங்கே இருந்ததாக இருக்கிறது. அந்தச் சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டுவிட்டன என்ற காரணத்தினாலே அந்தக் கோயிலை எண்டோமெண்ட் கண்ட்ரோலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இனிமேல்தான் வருமானத்தைப் பார்க்கவேண்டும். அந்தக் குருக்கள்தான் வருமானம் இல்லையென்றும் அதனால் பூசை செய்யமுடியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் தான் அதனுடைய நிலமைகளையெல்லாம் பார்க்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் போடப்படுமா என்று கேட்டார்கள். கட்சி வித்தியாசம் எல்லாம் பார்த்துக் கொண்டு போடுவதாகத் தெரியவில்லை. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்படி இருந்திருக்கலாம், ஆகவேதான் அப்படிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அப்படியில்லை. இருந்தபோதிலும் அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Administration of Trusts*

* 78 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to appoint a High Court Judge to enquire into the administration of Trusts; and

(b)) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : முன்பு ஒரு முறை கேள்வி நேரத்திலே இந்த டிரஸ்டிகள் விவகாரத்திலே நல்ல ஒரு குழுவையமைத்து எந்த எந்த டிரஸ்டுகள் எப்படி நடக்கின்றன இந்த நாட்டிலே, அது பற்றிக் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே அந்த வாக்குறுதிப்படியாயினும் தமிழ் மாநிலத்திலே எல்லா டிரஸ்டுகளும் நல்ல முறையிலே நடக்கின்றனவா அல்லது தவறான முறையிலே நடக்கின்றனவா என்று ஆராய்வதற்காக இனிமேலாவது ஒரு குழுவை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மரம் வளர்ப்புத் திட்டம்

* 79 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆறு, கால்வாய், ஏரிக்கரைகளில் மரம் வளர்ப்புத் திட்டத்தை அமுல் படுத்த 1970-71ம் ஆண்டில் தமிழ்நாடு அரசு எந்த வகையில் செயல்படுத்த உள்ளது?





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆறு, கால்வாய், ஏரிக்கரைகளில் மரம் வளர்க்கும் திட்டம் 1970-71ம் ஆண்டு மதுரை, கோயம்பத்தூர் வன வட்டங்களில் 450 ஹெக்டேர் பரப்பளவில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு, ஏரி, கால்வாய்ப் பகுதிகளில் வனத் துறையிலிருந்து பயிரிடப்படுகின்ற மரங்கள் தேசிய வருமானத்தை உயர்த்தக் கூடிய நிலையில் இருக்கின்றன. இரண்டொரு மாவட்டங்களில் மட்டும் அப்படிப்பட்ட திட்டங்களை அமல்படுத்தாமல் பரவலாகத் தமிழ்நாட்டிலே உள்ள ஆற்றுப் படுகைகள், குளக்கரைகள் இவற்றிலெல்லாம் வன இலாக்காவினர் மரங்களை வைத்து வளர்ப்பதற்கு ஏற்றவாறு நம்முடைய அரசு இந்தத் திட்டத்தை சிறப்புத் திட்டமாக எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4,000 ஹெக்டேர் பரப்பளவிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, ஏரிக்கரைகள், ஆற்றுக் கால்வாய்கள் இவற்றிலே மரங்கள் வைப்பதில் குறிப்பாகப் பனை மரங்கள் வைப்பதற்கு அரசு முதலிடம் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தேக்கு, மூங்கில், சவுக்கு இவற்றிற்குதான் முதலிடம் கொடுக்கப்படும்.

திரு. ஏ. அ. சுப்பாராஜூ : இம்மாதிரியான மரங்கள் வைத்து வளர்க்கப்படுகின்ற முறையிலே சில நேரங்களிலே மரங்களை சில பேர்களுக்கு ஒதுக்கி வளர்த்து அந்தப் பலனை அவர்கள் அனுபவித்துக்கொள்ளலாம் என்ற கன்டிஷனிலே விடப்படுகிறது. அந்த முறையிலே இந்தத் திட்டம் செய்யப்படுமா ? அல்லது சர்க்காரே செலவழித்துச் சர்க்காராலே செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சர்க்கார் வைக்கின்ற திட்டம்தான்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether there is any proposal to plant 'green manure leaf plant' like Glycidia to improve the potentiality of food production?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திட்டம் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, தேக்கு, சவுக்கு, மூங்கில் போன்ற மரங்களை நடுவதைவிட நிரந்தரமாகவும் நீண்டகாலமாகப் பலன் தரக்கூடிய புளியமரங்களை வைப்பதற்கு யோசனை உண்டா?

[1970 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கண்மாய்க் கரைகள், படுகை நிலங்களிலே புளிய மரம வராது என்ற காரணத்தினால் தான் இப்படிப்பட்ட மரங்கள் வைக்கப்படுகின்றன.

**திரு. சகாதேவக் கண்டர்:** மரங்கள் வைக்கும் திட்டத்தை அமுலாக்குகின்ற நேரத்திலே அந்த மரங்களைக் காப்பதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தினாலே ரோடுகளிலே வைக்கப்பட்ட மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விடுகின்றன. எனவே மரங்களை வைக்கும்பொழுதே அந்தத் திட்டத்தோடு அவற்றைக் காப்பாற்றுவதற்காக பணியாட்களையும் நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இப்பொழுதே அவற்றைக் காப்பதற்குப் போதுமான ஆட்கள் போடப்பட்டு இருக்கிறது. அது போதவில்லை என்றால் மேற்கொண்டு ஆட்கள் போடலாம்.

**திரு. கரு. இராம கரியமாணிக்கம் அம்பலம்:** பனை மரம் மிகவும் பிரயோஜனம் உள்ளது. அது உணவுப்பொருளைத் தரக்கூடியது. பனைமரங்கள் அழிக்கப்படுகின்ற காரணத்தினாலே எதிர் காலத்திலே சிறிய சிறிய வீடுகள் கட்டுகின்ற நிலைமைக்குக் கஷ்டம் வருமோ என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, பனை மரங்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** 4,000 ஹெக்டேர்களில் முக்கியமாகத் தேக்கு மரம்தான் பயிரிடப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பனை மரத்தைவிட தேக்கு மரம் விலை உயர்ந்தது. ஆகையால் வருமானம் அதிகமாகத் தரக்கூடிய காரணத்தால் அதையே வைக்கலாம். பனைமரம் பற்றியும் யோசிக்கலாம்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** ஏரிக்கரைகளிலே சில பகுதிகளிலே வைக்கப்பட்டிருக்கிற மரங்களைப் பாதுகாப்பதற்காக 8 அல்லது 10 பேர்கள் ஊர்க்காவல் வைத்திருக்கிறார்கள். ஒரு ஊரிலேகூடச் சரியாகப் பாதுகாப்பு இல்லை. இந்தத் திட்டத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்றால் நஷ்டமாகிவிடும். எனவே இந்த நல்ல திட்டத்தைப் பலன்பெறக் கூடியவகையில் பாதுகாப்பதற்கு ஆட்கள் போடவேண்டும், அதைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஏற்கனவே நல்லமுறையிலே காவல் போடப்பட்டிருக்கிறது. அது போதவில்லை என்றால் பரிசீலிக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பனை மரம் அதிகமாக வருமானத்தைத் தராது, தேக்கு மரம் வருமானம் அதிகமாகத் தரும் என்று சொல்கிறார்கள். தேக்கு மரம் பணக்காரர்களுக்கு, ஏழைகளுக்குப் பனைதான். எனவே பனைமரத்தை அதிகமாகப் பயிரிடச் செய்வதற்குச் சர்க்கார் முன்வருமா?



1970 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மரத்திலே ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை. ஆறு, ஏரி, கால்வாய்க் கரைகளில் வண்டல் படிந்திருக்கிற காரணத்தால் தேக்கு வைக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதனால்தான் அப்படிச் செய்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, ஏரி, ஆறு, கால்வாய்க் கரைகளிலே பனை மரங்கள் வைத்தால் ஏரியல் ஸ்ப்ரே செய்வதற்கு முடியவில்லை என்று விவசாயிகள் சொல்கிறார்கள். எனவே கால்வாய், ஏரிகள் இவற்றின் கரைகளில் உள்ள பனை மரங்களை வெட்டியெறிய அரசு உத்திரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஏரிக்கரைகளிலே மரங்கள் வைப்பதற்கு முக்கியமான காரணம் அவை தண்ணீர் அரிப்பைக் தடுப்பதற்காகத்தான். அவற்றை வெட்டியெறியத் திட்டம் இல்லை. ஏரிக்கரைகளுக்குள்ளே வைப்பதால் தூர் எடுப்பதற்கு முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதனால்தான் இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவரப் பரிசிலனை செய்கிறோம்.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த ஏரி, ஆற்றுக் கால்வாய்ப் படுகைகளில் இந்த மரங்களை வளர்க்கும்பொழுது, விவசாயிகளுக்குப் பயன்தரும் தழைச்சத்துக்களைத்தரும் மரங்களைப் பயிரிடும் முறைகளைப் பரிசீலிக்குமா? வடாற்காடு மாவட்ட அபிவிருத்திக்குழு பரிந்துரை செய்து, தழைச்சத்துக்களைத் தரும் மரங்களைச் சாகுபடி செய்ய வேண்டுமென்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இப்பொழுது அதற்கான திட்டமில்லை.

## மேலத்தானியத்தில் மின் கழக துணை அலுவலகம்

*** 80 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள மேலத்தானியத்தில் மின் கழகத் துணை அலுவலகம் (Sub-Station) ஒன்றை அமைத்துத் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, பொன்னமராவதி, புதுக்கோட்டை பகுதிகளில் மின் துறைக் கழகத் துணை அலுவலகங்கள் மிகுந்த தொலைவிலிருப்பதால், உரிய வகையில் விரைவாக காரியங்களைச் செய்ய முடியாம

[1970 நவம்பர் 30

விருப்பதால், மேலத்தானியத்தைச் சுற்றியிருக்கும் பகுதிகளுக்குப் பயன் ஏற்படும் வகையில் மேலத்தானியத்தில் மின்சாரத் துணை நிலையத்தை அமைப்பது பற்றி இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தற்பொழுது மேலத் தானியத்திற்கு அருகாமையில் விராலிமலை, துவரங்குறிச்சி, திருமயம் போன்ற இடங்களில் மின்சாரத் துணை அலுவலகம் இருப்பதால் இப்பொழுது அந்த உத்தேசமில்லை. மேற்கொண்ட காலத்தில் லோடு அதிகமாகத் தேவைப்பட்டால் தனியாக ஒரு நிர்வாகம் அமைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைக் கேள்வி

### கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமங்கலம் நில வள வங்கி பற்றி திரித்துக் கருத்து தெரிவித்ததாகக் கூறப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சித்தன் அவர்கள், கடந்த 27-11-1970 ஆம் நாளன்று தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவைப் பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டபோது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், திருமங்கலம் நிலவள வங்கி பற்றிக் கூறிய கருத்து மாறுபட்ட கருத்து, வேண்டுமென்றே திரித்துக் கூறப் பட்டது என்ற உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள், இதை நான் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

## 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### பெருமழையால் கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு ஏற்பட்ட சேதத்தால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள், அண்மையில் பெய்த மழையால் கூவம் அபிவிருத்தி திட்டத்தால் செய்த வேலைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு, லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளபடியால் இத் திட்டம் செயல்முறைபற்றி விவாதிக்க ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒற்றி வைத்து விவாதிக்கத் தக்க அளவிற்கு முக்கியத்துவம் உள்ள விஷயம் என்பதைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1970 நவம்பர் 30]

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, சமீபத்திலே பெய்த பெரு மழையின் காரணமாக கூவம் திட்டத்தில் செய்த வேலைகள் அத்தனையும் கெட்டுவிட்டது. அதிலே மழை பெய்வதற்கு முன்னால் செய்யப்பட்ட வேலைகள் மழை பெய்ததற்குப் பிறகு, கூவம் சீரமைப்புத் திட்டம் முன்பு எந்த நிலையில் இருந்ததோ அந்த அளவிற்குப் பெரும்பாலான இடங்களில் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் கூவம் திட்டம் பெரிய திட்டம்தான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் தயார் செய்யும்பொழுது சரியான முறையில் தயார் செய்யப்படவில்லை. மழை பெய்த உடனேயே ஸ்லாப்கள் அடித்துத் தள்ளப் பட்டன. செய்யப்பட்ட ஸ்லாப்கள் எல்லாம் மழை பெய்தவுடனேயே கரைந்து போய்விட்டன. ஆகவே, இப்படிப்பட்ட திட்டத்தினால், கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் செலவு செய்யக்கூடிய திட்டத்தினால் அரசுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்பட்டிருப்பதால், அது சரிவர நிறைவேற்றப்படாத காரணத்தினால் இந்த அவையை ஒற்றிவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, கூவம் சீரமைப்புத் திட்டம் என்பது ஒரு பெரிய, முக்கியமான திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். கூவம் சீரமைப்புத் திட்டத்தைப்பற்றி ஒரு ஹைபவர் கமிட்டி 1958-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை 1961-ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கையைக் கொண்டும், நம்முடைய அதிகாரிகளின் ஆலோசனையைக் கருத்திற் கொண்டும் கூவம் சீரமைப்புத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கு எஸ்டிமேட் 120 லட்சம் ரூபாய். 92 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 80 சத விகித வேலைகள் முடிந்திருக்கிறது. 1 லட்சத்து 55 ஆயிரம் சிமெண்ட் ஸ்லாப்கள், சுமார் 20,000 அடி நீளம் ஸ்லாப்கள். மழையில் மண் வேலை செய்யும்பொழுது அரிப்பு ஏற்படுவது இயற்கை. அது எல்லாத் திட்டங்களிலும் உள்ள நிலைமையாகும். 20,000 அடி நீள சிமெண்ட் ஸ்லாப்களில் சுமார் 50 சிமெண்ட் ஸ்லாப்கள்தான், கிட்டத்தட்ட 100 அடி அளவிற்குத்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, எந்தவிதமான பெரிய பாதிப்பும் ஏற்படவில்லை. இப்படியிருக்கும் பிரச்சினையில், மழை பெய்யும்பொழுது, டிரெய்னேஜ் மூலம் தண்ணீர் போவதற்கு இருக்கும் மதகுகள் அடைபடுவதால் முக்கியமான பிரச்னை ஏற்படுகிறது. மழை நீர் மட்டும் அல்ல, சாக்கடைத் தண்ணீரும் அதன் மூலம் வந்து கூவம் திட்டத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, இந்த மதகுகள் திறந்து விடப்பட்டு இப்பொழுது இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதிலே எந்த விதமான பாதகமும் உறுப்பினர் கருதுவதைப்போல் ஏற்படவில்லை. அப்படி ஏற்பட்டிருந்தாலும் மிகச் சொற்பமான அளவிற்கு, நூற்றுக்கணக்கான ரூபாய் அளவிற்குத்தான் ஏற்பட்டிருக்கும். இது இயற்கையாக ஏற்படக்கூடியது. மிகப் பெரிய

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 நவம்பர் 30

அளவிற்கு வெளியிலே ஏராளமான குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பெருமழையின் காரணமாக தமிழ் நாட்டில் சுமார் மூன்றரைக் கோடி ரூபாய் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்பார்த்த அளவிற்குப் பாதகம் ஏற்படவில்லை. எனவே, இதற்காக அவையை ஒற்றிவைத்து விவாதிக்க எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இதைப்பற்றி நம்முடைய அதிகாரிகள், உறுப்பினர் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் கவனத்தைச் செலுத்தி திட்டம் நடைபெறும் என்ற உறுதியைக் கூறி அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இதுபற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகின்ற காரணத்தினால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : In view of the enormous importance which this scheme enjoys in this metropolis.........

திரு. வி. எஸ். கோவிந்தராசன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

THIRU K. VINAYAKAM : I am still on my legs. You connot question me even before me saying what exactly my point is; just to unnerve me, a point of order is raised.

திரு. வி. எஸ். கோவிந்தராசன்: தலைவர் நிற்கும்பொழுது உறுப்பினர் நிற்கக்கூடாது.

திரு. கே. விநாயகம்: நீ சொல்லக்கூடாது தம்பி அதையெல்லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணன், தம்பி எல்லாம் வெளியிலே வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. விநாயகம்: நான் அண்ணன்தான், அவர் தம்பிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM : I am speaking in continuation of the old subject which is on hand.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு தனியாக இருக்கலாம். அமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருந்தாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சரவர்களே பேசிக்கொண்டிருந்தாலும்கூட, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Let us hear his point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு நீங்கள் ஜட்ஜ்மெண்ட் கொடுக்க வேண்டியதில்லை.



1970 நவம்பர் 30]

திரு. வி. எஸ். கோவிந்தராசன்: தலைவரவர்களே, ஒரு ஒற்றி வைப்புப் பிரச்சினையைக் குறித்து ஒரு உறுப்பினர் எழுப்பி, அதற்கான விளக்கத்தை அமைச்சரவர்கள் தந்ததற்குப் பிறகு, நீங்களும் உங்களுடைய தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகும், எந்தச் சட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுந்து பேசுகிறார் என்பதைத் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: That subject was in the possession of the House. You have just given the ruling. I wanted to make a request to you as to whether you cannot grant a half-hour debate on the same subject, because this subject is so important to the City of Madras. So, my getting up and talking is quite relevant and perfectly in order, and my Friend cannot question the propriety of my continuing the subject.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய திரு. விநாயகம் அவர்கள் எழுப்பிய பிரச்சினை நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணானதாகும். கேள்வி நேரத்திலே போதுமான துணைக் கேள்விகள் போட்டும் விளக்கம் தரவில்லை என்றால் அப்பொழுதுதான் அரை மணி நேர விவாதத்திற்கு உறுப்பினர் கேட்க உரிமையிருக்கிறதே தவிர, இப்படிப்பட்ட ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அமைச்சர்கள் கொடுத்த விளக்கங்களுக்குப் பிறகு அரை மணி நேர விவாதம் கேட்பதற்கு சட்டமன்ற விதிமுறைகளில் இடமில்லை. அரை மணி நேரம், ஒரு மணி நேர விவாதம் வேண்டுமென்றால் தனியாக எழுதிக் கொடுக்க வேண்டும். அது வேறு விஷயம். ஆகவே, திரு. விநாயகம் அவர்கள் கூறுவது முற்றிலும் முரணானது.

### 4. கவன ஈர்ப்பு.

#### பருத்தி நூல், நார் பட்டு இவைகளின் விலையேற்றமும், அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் திருவாளர்கள் சௌடி சுந்தரபாரதி, ஜயராமன் ஆகியோர் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

திரு. கி. ஜயராமன்: தலைவர் அவர்களே, அண்மையில் மு.ப 10-30
தமிழகத்தில் நெசவாளர்களுக்கு வேண்டிய பருத்திநூலும், நார் பட்டு நூலும் இதுகாறும் கிடைத்த விலையில் கிடைக்காமல் விலைகள் அதிகமாக உள்ளதால் இத்தொழிலை நம்பியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதிக்குள்ளாக வேண்டிய நிலையும், நூற்பாலைகளுக்கு வேண்டிய பருத்தி கிடைக்காமல் நூற்பாலைகள் மூடப்பட்டு விடுமோ என்ற சூழ்நிலையும் ஏற்பட்டு உள்ளதால், அரசு அவசர நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1970 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, பருத்தி நூல் உற்பத்தியில் தமிழ்நாடு உபரி மாநிலமாக உள்ளது. நமது ஆலைகளில் மாதம் ஒன்றுக்குச் சுமார் 75,000 பேல்கள் நூல் மொத்தம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதமொன்றுக்குப் பயன்படுத்தப்படும் மொத்த அளவு சுமார் 35,000 பேல்கள் மட்டுமே. இருந்தபோதிலும் 1970 மார்ச்சில் நூல் விலைகள் படிப்படியாக அதிகரித்து வருவதாக கைத்தறி தொழில் பிரதிநிதிகள் முறையிட்டனர். இதுகுறித்து 11–3–1970 நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அரசு இச்சிக்கல் பற்றி விவாதித்து, கைத்தறி நெசவாலைகள் இயக்குநரை தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்து தொழில்துறையில் 16-4-70-ல் நாளிட்ட 901-ஆம் எண்ணுள்ள அரசு ஆணையில் உத்தரவு பிறப்பித்தது. இக்குழு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவால் தென்னிந்திய நூற்பாலை அதிபர்கள் சங்கம் தங்கள் சங்கத்தில் உறுப்பினராயுள்ள ஆலைகளை நூல் விலைகள் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. மேலும் தென்னிந்திய நூல் வர்த்தக சம்மேளனம் தனது உறுப்பினர்கள் தங்களது இலாப அளவை 1 சதவீதத்திற்கே வரையறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. இந்நடவடிக்கைகளுக்குச் சிறிது பலன் ஏற்பட்டது. நூல் விலைகள் படிப்படியாகக் குறையத் தொடங்கின. ஆனால் உள்நாட்டுப் பஞ்சு விலைகள் ஒரேயடியாக ஏற்றம் கண்டதால், நமது நூற்பாலைகளை எதிர்நோக்கிய தடங்கல்களுக்கிடையே மேற்சொன்ன நடவடிக்கைகள் தொடர்ந்து பலனளிக்க இயலவில்லை. ஆகவே மீண்டும் கடந்த ஒரு மாத காலத்தில் விலைகள் திடீரென ஏற்றம் கண்டுள்ளன.

பஞ்சு வழங்கலில் கடும் பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் பஞ்சு விலைகள் எட்டமுடியாத அளவு உயர்ந்ததுதான் பருத்தி நூல் விலைகளில் கண்டுள்ள ஏற்றத்திற்கு முக்கிய காரணமாகும். நடப்பு பருத்தி விளைச்சல் ஆண்டில் நம் நாட்டில் 62 லட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, தற்போது 57 லட்சம் பேல்கள் அளவே உற்பத்தியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முந்திய ஆண்டுகளைவிட இவ்வாண்டு சந்தைக்கு வரும் பருத்தியினளவும் மிகவும் குறைவாக உள்ளதென்று ' தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகக் கிடைக்கின்ற பஞ்சைப் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல ஆலைகள் பஞ்சை விரைந்து கொள்முதல் செய்யத்தொடங்கியதால் இந்நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இந்த நிலைமைக்கு மற்றுமொரு காரணமும் உண்டு. புதிதாக அமைக்கப்பட்ட இந்தியப் பஞ்சு கழகத்திற்கும், பஞ்சு இறக்குமதியாளர்களுக்குமிடையே தரக் குறைவியவற்றின் அளவு குறித்து நீண்ட நாட்களாகத் தகராறு இருந்து வருவதன் விளைவாக வெளிநாட்டிலிருந்து பருத்தி இறக்குமதி செய்யப்படுவது பெரிதும் தாமதமடைந்துள்ளது. இருந்த போதிலும் சிக்கல் தீர்க்கப்பட்டு, வெளிநாட்டுப் பருத்தி நம் நாட்டுக்கு வரத் தொடங்கியுள்ளது.



1970 நவம்பர் 30] [திரு. செ. மாதவன்]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நமது கச்சாப் பருத்தியின் ஆண்டுத் தேவை சுமார் 10.5 லட்சம் பேல்களாகும். இதில் சுமார் 2.56 லட்சம் பேல்கள் பருத்தி மட்டுமே மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே நமது பருத்தித் தேவையின் பெருமளவை வடக்கிலுள்ள மாநிலங்களில் கொள்முதல் செய்தும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துமே சரிக்கட்ட வேண்டியுள்ளது. மேலும் ஏனைய மாநிலங்களைச் சார்ந்துள்ள தமிழ்நாட்டு ஆலைகள் அங்கிருந்து பெறும் பஞ்சிற்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. அதாவது பம்பாயிலும் அகமதாபாத்திலும் உள்ள ஆலைகள் கொடுக்கும் விலையைக் காட்டிலும் தமிழ்நாட்டு ஆலைகள் அதிக விலை கொடுக்கவேண்டியுள்ளது. தமிழ்நாட்டு ஆலைகள் அளிக்கும் அதிக விலை கண்டி ஒன்றுக்கு ரூ. 150 ஆகும்.

தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாவது கடந்த இரு மாதங்களில் பஞ்சு விலை எதிர்பாராத அளவிற்கு உயர்ந்துள்ள சூழ்நிலையில் பஞ்சு விலைகளுக்கும் நூல் விலைகளுக்கும் இடையில் உள்ள சமநிலையை உறுப்பினர் ஆலைகள் பேணிவர முடியவில்லை என்றும், சில ஆலைகள் தங்கள் நூல் விற்பனை விலையில் தற்போது பெற்றுள்ள அதிகரிப்பினால் கூட நூலுக்குரிய உற்பத்தி விலையைக்கூடப் பெறமுடியவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

பருத்தி விலைகள் படிப்படியாக உயர்ந்து செல்வதற்கு ஓர் உடனடித் தீர்வு காணும் வகையிலும், பருத்திப் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் வகையிலும், சட்டபூர்வமாக அனைத்திந்திய அடிப்படையில் எல்லா ஆலைகளையும் 2 வாரங்களுக்கில்லாவிடினும் ஒரு வாரத்துக்கு மட்டுமாவது நிலைமை சீர்படும் வரையில் ஒட்டு மொத்தமாக மூடிவிடுவதற்குரிய தேவை பற்றி நூற்பாலைத் தொழில் துறை கருதி வருகிறது இருந்தபோதிலும், வெளி வர்த்தக அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் இத்திங்கள் 26ம் நாளன்று ராஜ்ய சபையில் பின்வருமாறு உறுதியளித்துள்ளாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தி கிடைக்கவில்லை என்பதற்காக இந்நாட்டின் நூற்பாலைகள் மூடப்படமாட்டா, நூற்பாலைகளுக்குப் பருத்தி கிடைக்கச் செய்வதற்காக இயன்ற அளவு எல்லா முயற்சிகளும் செய்யப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். இவ்வாண்டில் நிலைமையை சரிக்கட்டுவதற்காக ஐந்து லட்சம் பேல் பருத்தியை இந்திய அரசு கூடுதலாக இறக்குமதி செய்யுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவதற்கு உடனடியான ஒரே வழி விரைந்து ஏராளமான அளவு பருத்தியை இறக்குமதி செய்வதே; கைத்தறிகள் நெசவாலைகள் இயக்குநர் குறுகிய இழை அமெரிக்கப் பருத்தி ஏராளமான அளவில் இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்து தருமாறு பம்பாயிலுள்ள நெசவாளர்கள் ஆணையாளரைக் கேட்டுள்ளார். அவர் மேலும் நாட்டின் பிறமாநிலங்களிலிருந்தும் பருத்தி கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்து அவற்றை நம் மாநிலத்திலுள்ள நூற்பாலைகளுக்கு

[திரு. செ. மாதவன்] [1970 நவம்பர் 30

நியாயமான குறைந்த விலைகளில் வழங்குமாறு இந்தியப் பஞ்சுக் கழகத்தையும் கேட்டுள்ளார். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளால் விற்கப்படும் நூலின் விலைகள் உயர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ளும் வண்ணம் நியாயமான அளவில் அவ்விலைகள் வரையறுக்கப்படுகின்றன. மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல்கள் முழுமையும் இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பயனுக்கென்றே ஒதுக்கிவைக்கப்படுகின்றன.

நீண்ட கால ஏற்பாடாக, நமது மாநிலத்தின் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு வேளாண்மைத்துறை, நெசவாலைத் தொழில் துறை, கைத்தறிகள் துறை, இவற்றின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தின் பருத்தி ஆலைத் தொழில் நலிவினை நீக்குவதற்கு இதுதான் இறுதியானத் தீர்வாக இருக்கமுடியும்.

நீண்ட இழை பருத்தி நூல் விலைகளின் அதிகரிப்பு, செயற்கைப் பட்டுநூல் விலைகள் அதிகரித்ததின் உடன் விளைவாகும். செயற்கைப்பட்டு நூல் விலைகள் இறங்கினால், அந்த அளவுக்கு நீண்ட இழை பருத்தி நூல் விலையும் இறங்கும். செயற்கைப் பட்டு நூல்களை உண்மையில் பயன்படுத்துவோருக்கு அவை நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை கைத்தறிகள், நெசவாலைகள் இயக்குநர் செய்து வருகின்றார். நமது ஆலைகளின் உடனடித் தேவைகளுக்காக 1.5 லட்சம் பேல் நீண்ட இழைப் பருத்தி இறக்குமதி செய்ய இந்திய அரசு இசைந்துள்ளது. மேலும், அதிக அளவு நீண்ட இழை பருத்தி இறக்குமதி செய்யுமாறு இந்திய அரசு வற்புறுத்தப்படுகின்றது.

மாநில அரசு நிலைமையை வெகு உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது. இச்சிக்கல் குறித்து இவ்வரசு இந்திய அரசுடன் தொடர்பு கொண்ட வண்ணம் உள்ளது. தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கடப்பதற்குத் தேவையான உடனடி ஏற்பாடுகளைச் செய்யுமாறு வற்புறுத்தியும் வருகின்றது. நிலைமையைச் சீராக்கவும், தமிழ் நாட்டு கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு உதவும் இவ்வரசு தனது அதிகாரத்திற்குட்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளும்.

### 5. அமைச்சர் அறிக்கை.

#### ஒரு துணை வினாவிற்கு முன்னாள் நிதியமைச்சர் அளித்த விடையைச் சரி செய்து வேளாண்மை அமைச்சர் அளித்த அறிக்கை.

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : Sir, while furnishing answer to a supplementary question to the Legislative Assembly Question No. 216 (Starred) on 3rd September 1970 it was stated by the previous Minister for Finance, Thiru K. A. Mathialagan that the Government of India were addressed for a



1970 நவம்பர் 30] [Dr. (Thirumathi) Satyavanimuthu]

housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for the repatriates from Burma at Vyasarpadi and that the matter is under the consideration of the Government of India.

I would like to correct the above statement as follows:—

The Government of India were addressed for a housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for housing the repatriates from Burma at Vyasarpadi and that the Government of India have raised a number of queries on the above proposal, and the matter is under examination here.

### 6. அரசினர் தீர்மானம்.

#### அவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 23 (1) வது விதியைத் தளர்த்தி தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பாக அரசினர் அலுவல்களை முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### 7. அரசினர் மசோதா.

#### தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### 8. தனியார் அலுவல்.

#### தீர்மானம்

#### தமிழ் மொழியையே பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுத்தல் குறித்து.

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 நவம்பர் 30

" தமிழகத்தில் தமிழ் மொழியே பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும், எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டு காலவரைக்குள் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நமது சட்டப் பேரவையில் 1968 ஜனவரி 23-ம் நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயல் முறைப் படுத்தும் வகையில் அரசாங்கம் தயங்காது விரைவிலேயே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும், மாணவர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி பயிற்சி மொழியை தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் வகை செய்வது நமது மாநிலத்தின் உயர்கல்வி முறையில் குழப்பம் விளைவதற்கு வழி வகுக்குமாதலால், நம் தாய்மொழியான தமிழையே தனியார், அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் படிப்படியாக பயிற்சி மொழி ஆக்குவதற்கு தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பேரவை பரிந்துரை செய்கிறது."

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தில் கீழ்க் கண்டவற்றைக் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

" இவ்வாறு ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும்போது தமிழக மாணவர்களின் எதிர்காலமும் வேலைவாய்ப்பும் பாதிக்கப் படாமலிருக்க தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்."

திரு. ஆர். கருப்பையா : மேற்கண்ட திருத்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I move the following amendment to the Resolution moved by the hon. Member, Thiru M. P. Sivagnanam :—

" Add at the end—

' but before taking these steps the Government must be cautious and take care to see that every step is taken to safeguard the future of the students and prevent their employment opportunities being adversely affected '. "

The amendment was duly seconded.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது 23–1–1968 அன்று இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பயிற்சி மொழி, ஆட்சி மொழி பற்றிய பகுதிகளை இந்த அவைக்கு நான் நினைப்பூட்ட விரும்புகிறேன்.



1970 நவம்பர் 30] [திரு. ம. பொ. சிவஞானம்]

" தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும், ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம் மன்றம் தீர்மானிக்கிறது." என்று 23–1–1968 அன்று மொழிப் பிரச்சினையின் மீதான விவாதத்தில் விவாதத்தின் முடிவில் திருத்தங்களை முன்மொழிந்து பேசியபோது அன்றைய முதல்வர் அமரர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களை நான் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 'ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தின் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது மட்டுமல்ல, அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ் பாட மொழி ஆகும் என்பதை இன்றைய தினம் அறிவிக்க விரும்புகிறேன்" என்று அன்று முதல் அமைச்சர் அமரர் அண்ணா அவர்கள் உறுதியாகச் சொன்னார்கள். அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் அதன்மீது முதல்வர் அண்ணா அவர்கள் கொடுத்த உறுதிமொழியையும் அவர்களுக்குப் பின் வந்துள்ள முதல்வர் கலைஞர் அவர்களும் அவர்களது அமைச்சரவையும் உறுதியாக நிறைவேற்றி வருகிறது என்பதை நான் நன்கு உணருகிறேன். ஆகவே இந்தத் தீர்மானத்தை நான் இங்கு கொடுத்திருப்பது இந்த அரசு அன்று சட்ட மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து பின்வாங்கிவிட்டது என்றோ அல்லது அந்தத் தீர்மானத்தை கை விட்டு விட்டது என்ற கருத்திலோ அல்ல என்பதை முதலாவதாக தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் மூன்றாண்டுகள் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளில் இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் அவகாசம் இருக்கிறது. ஆகவேதான் என் தீர்மானத்தில் காலம் குறுகியதாக இருப்பதால் நடவடிக்கைகளை துரிதப் படுத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறேன். தீர்மானத்தில் நான் 'படிப்படியாக' என்று குறிப்பிட்டிருப்பது ஐந்து ஆண்டு கால வரம்பிற்கு உட்பட்டுத்தான் என்பதை நினைப்பூட்டுகிறேன். இத் தீர்மானத்தை நான் கொண்டு வருவதற்கு இன்னொரு முக்கியமான காரணம் என்னவெனில், இப்போது ஆங்காங்கு பலர் ஏதோ மாணவர்களுடைய விருப்பத்திற்கு விட்டு விடவேண்டும் என்ற கருத்துக்களை கிளப்பி வருகிறார்கள். தமிழ் பயிற்சி மொழி ஆவதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சிக் கொள்கையைப்போல் எடுத்துக்கொண்டு இதை கட்சி அரசியலாக்க முயலுகிறார்கள். இது ஒரு கட்சிக் கொள்கை அல்ல.

தமிழ் மொழியை தமிழகத்தில் பயிற்சி மொழியாக்குவது என்பது ஒரு இயற்கையான நியதி என்பதை எடுத்துக் காட்டுவதற்கு அண்ணல் காந்தியடிகளின் கருத்தை இங்கு படித்துக் காட்ட

விரும்புகிறேன். "என்ன நேருவதாயினும் சரி; உடனடியாகப் பயிற்சி மொழி மாற்றப்படல் வேண்டும். மாநில மொழிகளுக்கு உரிய இடம் கொடுக்கப்படல் வேண்டும். இப்போது நாளுக்குநாள் நேர்ந்து வருகிற பயங்கரமான வீண்விரயத்தை விடக் கல்லூரி கல்வியில் சிறிது காலம் குழப்பம் ஏற்படுவது நல்லது." மேலும் சொல்கிறார். "கல்வியாளர்கள் பயிற்சி மொழி பற்றி முடிவு செய்ய வேண்டும் என்று நான் கருதவில்லை. ஒரு இடத்திலுள்ள சிறுவர் சிறுமியருக்கு எந்த மொழியில் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதைக் கல்வியாளர்கள் முடிவு செய்யக்கூடாது. அது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கின்றது." காந்தியடிகள் கூறியுள்ள இந்தக் கருத்துக்களை நான் மீண்டும் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் ஆங்கிலம் போதனமொழியாக வந்தது ஆங்கிலேய ஜாதியாருக்கு நாம் அடிமைப்பட்டுக் கிடந்ததன் விளைவாக என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆங்கிலம் அழகிய மொழி என்பதாலோ அல்லது விஞ்ஞானத்தைப் போதிக்க அதுதான் அருகதை உள்ள மொழி என்பதாலோ அல்லது தமிழுக்கு விஞ்ஞான அறிவைக் கொடுக்கும் தரமோ அல்லது திறமோ இல்லை என்பதால் தமிழ்நாட்டு மக்கள் விரும்பி வரவேற்று தீப தூபம் போட்டு ஆராதனையோடு ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டதாக சரித்திரம் கூறவில்லை. நாம் ஆங்கிலேய ஜாதியாருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தோம். ஆகவே அடிமைப் படுத்திக் கொண்டிருக்கும் ஜாதி அடிமைப்பட்டு கிடக்கும் ஜாதி மீது தன் மொழியை திணிக்கிற உலக வரலாற்றுப்படி ஆங்கிலேய ஜாதியார் தங்களது மொழியை இந்த நாட்டின் மீது போதன மொழியாகத் திணித்தார்கள். எப்படி ஃபிரெஞ்ச் ஆதிக்கத்தின் கீழ் புதுவையில் ஃபிரெஞ்ச் மொழி போதன மொழியாக்கப் பட்டதோ, எப்படி போர்ச்சுகீசிய ஆதிக்கத்தின் கீழ் கோவாவில் போர்ச்சுகீஸிய மொழி போதன மொழியாக்கப்பட்டதோ அதே போல் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நம் நாட்டில் ஆங்கிலம் போதனமொழியாக்கப்பட்டது. ஆங்கிலம் நம் நாட்டில் போதன மொழியாக இருப்பது சரித்திரத்தில் நமக்கு நேர்ந்து விட்ட விபத்து. நாம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் நம்மீது ஆதிக்கம் செலுத்திய ஜாதியார் செய்த கொடுமை அது. அந்த விபத்தும், அந்தக் கொடுமையும் நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சுதந்திர மக்களுக்கு நீதி வழங்க மறுக்கிற குற்றவாளிகள் என்பதை நாம் நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலேயன் காலத்தில் ஆங்கிலத்தை போதனமொழியாக்கி யதற்கு ஒரு நியாயம் கூட சொல்லமுடியும். அன்று ஆங்கிலேயன் காலத்தில் இந்தியா மூன்று மாகாணங்களாகத்தான் இருந்தது. கல்கத்தாவை தலைநகராகக் கொண்ட ஒரு மாகாணம். பம்பாயைத் தலைநகராகக் கொண்ட ஒரு மாகாணம். சென்னையைத் தலைநகராகக் கொண்ட ஒரு மாகாணம் என்று மூன்று மாகாணங்கள்தான்





இருந்தன. அப்படி கிழக்கு இந்தியக் கம்பனியின் கீழ் மூன்று மாகாணங்கள்தான் இருந்தன. அப்போது 1836-ம் ஆண்டு லார்ட் மெக்காலேயால் நம் நாட்டில் ஆங்கிலம் போதனமொழியாகத் திணிக்கப்பட்டது. அப்பொழுது மொழிவழி மாகாணங்கள் இல்லையாதலால் பிரதேச மொழிகளைப் பயிற்சி மொழிகளாகக் கொண்டு வருவதற்கு உள்ள சூழ்நிலை அன்று இல்லை. அப்படி பிரதேச மொழிகளைக் கொண்டு வர நினைத்திருந்தாலும் கூட அப்படிக் கொண்டுவருவதற்குரிய வாய்ப்பு வசதிகள் அன்றில்லை யாதலால் அதற்கான சூழ்நிலை அன்று இல்லை. ஆனால் அந்தச் சூழ்நிலை இன்று மாறிவிட்டது. ஆதிக்கம் செலுத்திய ஜாதி அகன்று விட்டது. இப்போது நாம் சுதந்திர நாட்டார், சுதந்திர ஜாதியார். மாநிலங்கள் மொழிவழியாக பிரித்து அமைக்கப் பட்டும் விட்டன. ஆகவே, பிரதேச மொழிகள் பயிற்சி மொழிகளாக வருவதற்கான நல்லதொரு சூழ்நிலை இன்று அமைந்துவிட்டது.

மொழி வழி மாநிலங்கள் அமைந்து விட்ட பின்னரும் கூட பிரதேச மொழிகள் பயிற்சி மொழிகளாக அமையக் கூடாது என்பது சரியான வாதம் அல்ல. அதை ஒரு பிடிவாதமான, எதேச்சாதிகாரமான வாதமாகத்தான் கருதப்பட வேண்டும். இன்னொரு வாதம். சர்க்கார் அதை மாணவர்களின் விருப்பத்திற்கு விட வேண்டும் என்பதாகும். இப்படிக் கேட்போர் முன்பு ஒரு வாதம் சொன்னதை நான் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னர் அவர்கள் சொன்னது. பல்கலைக் கழகங்களின் சுதந்திரம் பொறுத்த விஷயத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்பதாகும். பல்கலைக்கழகங்களின் சுதந்திரத்திற்கு விட வேண்டும் என்று சொன்னது, தமிழ் வேண்டாம் என்ற கருத்து அவர்களுக்கு இருந்ததால் அப்படிச் சொன்னார்கள் போலும். பல்கலைக்கழகங்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதுதான் அவர்கள் நோக்கமா? பல்கலைக்கழகங்களின் சுதந்திரத்தில் அரசு தலையிடக் கூடாது என்பது அவர்கள் கருத்தாக இருக்குமானால் இப்போது தமிழ் பயிற்சிமொழியாவதை பல்கலைக்கழகங்கள் ஒப்புகொண்டிருக்கின்றன.

இந்த மன்றத்தில் 23-1-1968-ம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இரண்டு மூன்று நாட்களில் தமிழ் நாட்டின் மூன்று பல்கலைக்கழக துணைவேந்தர்களும் நம் சட்டமன்றத் தீர்மானத்தை ஆய்ந்து அதை செயல்படுத்திக் கொள்ளுமாறு ஒருமனதாக முடிவு எடுத்து அரசுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். ஆகவே அரசு எடுத்த முடிவு, சட்டமன்றம் எடுத்த முடிவு, பல்கலைக்கழகங்கள் மீது திணிக்கப்பட்டதல்ல. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு ஜனநாயகத்திற்கு இசைந்து அரசாங்கக் கொள்கையோடு மூன்று பல்கலைக் கழக துணைவேந் தர்களும் எடுத்த முடிவாகும் என்பதை நான் நினைப்பூட்ட விரும்புகிறேன். ஆகவே இது ஒரு அரசியல் கட்சியின் கொள்கை என்பது மட்டுமல்ல.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 நவம்பர் 30

சுதந்திரப் போராட்டக் காலத்தில் காந்தியடிகள் கொடுத்த உறுதிமொழியாகும். சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்பு டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அமைத்த பல்கலைக் கழக கல்விக் கமிஷனும், பின்னர் கோத்தாரி அவர்கள் தலைமையில் அமைத்த உயர்தரக் கல்விக் கமிஷனும், இரண்டு கமிஷன்களும் ஒருமனதாகச் செய்த சிபார்சு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பிரதேச மொழிகளை உயர்தரக் கல்விக்கான போதனாமொழியாகக் கொண்டு வரவேண்டும் என்பதை அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். விஞ்ஞானம் உட்பட என்பதையும் நான் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்.

ஆகவே இந்த அரசு கொண்டு வந்துள்ள பயிற்சிமொழித் திட்டம் ஒரு கட்சியின் எதேச்சாதிகாரத்தின் முடிவு அல்ல. சுதந்திரப் போராட்டக் காலத்திற்குப் பின்னரும் இந்த நாடு கோரி வருகிற ஒரு கோரிக்கையை, நாட்டு மக்கள் விரும்புகிற ஒரு விருப்பத்தைத்தான் இங்கு நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதையும் நான் நினைப்பூட்ட விரும்புகிறேன். அதை நிறைவேற்றியும் வருகிறார்கள் என்பதில் நான் ஆறுதல் அடைகிறேன். ஆனால் இன்னும் துரிதமாகச் செய்யவேண்டும் என்பதைத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

சட்டக் கல்லூரியிலும் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட வேண்டும். ஏனெனில் நீதிமன்றங்களிலும் தமிழில்தான் நடத்தப் படவேண்டும் என்பதற்காக. முன்பு சுதந்திராக் கட்சி சார்பில் என் மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்று அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். அந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் ஒத்துழைப்ப தந்து அதற்கு உடன்பட்டு வாக்களித்தார்கள் என்பதை நான் நினைப்பூட்டுகிறேன். 23-1-1968 அன்று அத் தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது என்பதையும் நினைப்பூட்டுகிறேன். வேறு பல காரணங்களுக்காக இந்த மொழிப் பிரச்னையில் நடுநிலை வகித்திருந்தாலும் அவர்களின் முழு ஒத்துழைப்பும் அதற்கு இருந்தது என்பது இந்தப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். யாரும் தமிழ் பயிற்சி மொழியாவதை ஆட்சேபித்து ஒன்றும் சொல்லவில்லை. மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கட்சியின் நிலைமையை விளக்குகிற போது இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

"நம்முடைய மாநிலத்திற்குள்ளே எல்லா வகையிலும் தமிழ் மொழிதான் இருக்க வேண்டும்" இன்னொரு இடத்தில் சொல்கிற நேரத்தில், "நாங்கள் சுதந்திரா கட்சியினர், திட்டவட்டமாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் தமிழ்மொழிதான் இருக்க வேண்டுமென்று கூறுகிறோம்" என்ற அடிப்படையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாகத்தான் அன்று கருதப் பட்டது. சட்டமன்றத்தின் தீர்மானத்தை ஆளும் கட்சி அமுல்



1970 நவம்பர் 30] [திரு. ம. பொ. சிவஞானம்]

படுத்துகிறது என்றால், ஜனநாயகத்தில் இருக்கிற நம்பிக்கை, நாகரீகமான அரசியலைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகத்தான் அதை அவர்கள் நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

பல மாணவர்கள் குழு கல்வி அமைச்சரைக் கண்டதாக அறிகிறோம். அரசுக்கல்லூரியில் எல்லாம் தமிழ் போதனா மொழி இருப்பதால், தென் ஆற்காடு மாவட்டத்தில் தனியார் கல்லூரி இல்லாததால், அரசுக் கல்லூரியில் ஆங்கில போதனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள் என்றும், அதற்கு கல்வி அமைச்சரும் கவனிப்பதாக உறுதி மொழி அளித்ததாகவும், பத்திரிகை செய்தி பார்த்தேன். பத்திரிகை செய்தி எவ்வளவு உண்மை என்று தெரியாது. இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வருவதற்குக் காரணம், ஆண்டு இரண்டு இருக்கிறது. இனியும் தனியார் கல்லூரி வேறுபடுத்தப்பட்டு நடந்த விடக்கூடாது. பல்கலைக் கழகக் குழு, சட்டமன்ற தீர்மானங்களின்படி அரசுக் கல்லூரி போலவே, அனைத்துப் பட்டங்களுக்கும் தமிழே பயிற்சி மொழியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

பேட்டி கண்ட மாணவர்களுக்கு தனியார் கல்லூரி எதுவும், தென் ஆற்காடு மாவட்டத்தில் இல்லை, ஆகவே, அரசுக் கல்லூரியில் தமிழ் போதனா மொழி மாற்றப்பட்டு, ஆங்கில போதனைக்கு வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அந்த மாணவர்களுக்கு கல்வி அமைச்சர் சொன்ன உறுதி மொழி இருக்குமானால், தனியார் கல்லூரி இருக்கிறது, அரசுக் கல்லூரியில் மாறுதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பதை வற்புறுத்துகிறேன். மேலும், தனியார் கல்லூரிகளிலும், தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

காங்கிரஸ்கட்சியைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் குழப்பம் இருக்கிறது. எது உண்மையான காங்கிரஸ் கட்சி என்று தர்க்கம் இருக்கிறது. அந்த வாரிசு உரிமையைத் தீர்ப்பதற்கு எனக்கு உரிமை இல்லை. வாதத்திற்காக நம்முடைய எதிர்கட்சிதான் உண்மையான காங்கிரஸ் கட்சி என்று வைத்துக்கொள்வோம். காங்கிரஸ் சரித்திரத்தின் பிரதிநிதியாக அவர்கள் தான் இருக்க வேண்டும். விடுதலைப் போராட்ட காலத்திலும், ஆங்கிலக் கல்வித்துறையோடு மகாத்மா காந்தியடிகள் போர்க் குரல் எழுப்பி, இது பைசாஸ கல்வி, இந்தப் பைசாஸக் கல்வியை தம்முடைய மிச்ச சொச்ச வாழ்வுக்குள்ளே முடித்துவிட வேண்டுமென்பதற்காக அந்த அவமான முறையை அகற்ற வேண்டுமென்பதற்காக, ஒரு சொற்பொழிவை ஆற்றியதோடு மட்டுமல்லாமல், தேசியக் கல்வித் திட்டம் ஒன்றையும் வகுத்துத் தந்தார்கள்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 நவம்பர் 30

(பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அந்தத் தேசியக் கல்வித் திட்டத்தில், பிரதான அம்சம் தாய் மொழியில் போதனை இருக்கவேண்டுமென்பதுதான் தேசியக் கல்வித் திட்டத்தைச் சொல்லி நாட்டை ஒருமுகப்படுத்தினார்கள். இதை நினைப்பூட்டுகிறபோது, எதிர்க்கட்சித் தலைவருக்கோ, மற்றவர்களுக்கோ நான் கட்சிப் பிரச்னையாக இதை விவாதிக்கிறேன் என்ற எண்ணம் வேண்டாம். நாம் எல்லோரும் ஒரே அடிப்படையில் நடைபோட சமுதாயம் நிர்பந்திக்கிறது. வரலாறு நம்மை நிர்பந்திக்கிறது. தேசீயக் கல்வித் திட்டத்தை சுதந்திரப் போர் முறையாக பயன்படுத்தப்பட்டது. தேசீயக்கல்வித்திட்டத்தின் அடிப்படையில், ஆங்கிலத்தை போதனை மொழியாகக் கொண்டுள்ள தேசபக்தி உள்ள மாணவர்கள் அந்தக் கல்விக்கூடங்களிலிருந்து வெளியேறவேண்டுமென்று, காங்கிரஸ் கட்சி நாக்பூரில் ஒரு தீர்மானம் போட்டது. அந்தத் தீர்மானத்தின் காரணமாக, லட்சோப லட்சம் கல்லூரி மாணவர்கள் வெளியேறினார்கள். அப்படி வெளியேறிய மாணவர்களுக்கு, குஜராத் வித்யா பீடம், பீஹார் வித்யா பீடம் டெல்லிக்கு அருகிலே, ஜமியா—மில்லா, பனாரஸ் வித்யாபீடம் என்று சுதந்திரமாக தாய் மொழி போதனை மொழியாகக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையைப் பிரதானமாகக் கொண்டு நிறுவப்பட்டது. அரசாங்க மானியங்கள் பெறக்கூடாது என்றும் திட்டம் வகுத்து காங்கிரஸ் மகாசபை தீர்மானம் போட்டது. இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியிலே வந்தவர்கள் நம்மோடு ஒத்துழைக்கவேண்டும். ஒத்துழைக்க நியாயம் இருக்கிறது. ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்க எனக்கு உரிமை இருக்கிறது என்று உறுதிப்படுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இப்படி சுதந்திர போராட்ட காலத்தில் சொன்னோம் பின்னாலே மாற்றிக் கொண்டோம் என்று பலவற்றை சொல்லிக் கொள்ளலாம். அப்படியும் மாற்றவில்லை. 1937-39 வரையில் இடைக்காலத்தில் காங்கிரஸ் ஆட்சி தோன்றியபோது காங்கிரஸ் மாநிலங்களில் எல்லாம் பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. இந்த மாநிலத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய தலைவர் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1939-ல் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ் பயிற்சி மொழியாக வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது, மொழி வழி மாகாணங்கள் பிரியாத நிலை. பல்வேறு மொழிபேசுபவர்கள் இருந்த நிலையில், பள்ளிகளில் தமிழ்போதனைமொழி என்று கொண்டு வந்தார்கள். அப்போது டி.பி.ஐ. ஆக இருந்த ஸ்டாதம் என்பவர் இதை மறுத்துச் சொன்னார்கள். பல மொழி மாணவர்கள் படிக்கும்போது, இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வருவது நல்லதல்ல என்று சொன்னார்கள். அதற்கு ராஜாஜி அவர்கள் திட்டவட்டமாக சொன்னார்கள். இப்போது பள்ளிகளில் தமிழ் போதனைமொழியாகட்டும், பிறகு மேலே கல்லூரிகளிலும் தமிழ் போதிக்கக்கூடிய நிலை வரும் என்று சொன்னார்கள். மேலே போ,



1970 நவம்பர் 30] [திரு. ம. பொ. சிவஞானம்]

என்று ஆங்கிலத்தில் அழகாக ராஜாஜி அவர்கள் குறிப்பு எழுதி வைத்து இருக்கிறார்கள். அந்த நிலை அப்படியே எல்லா மாநிலத்திலும் அமுல் படுத்தப்பட்டது. 1939-ல் காங்கிரஸ் கட்சி வெளியேறிய பிறகு, 1946-ல் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் மீண்டும் கல்லூரிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுவந்தார். ரொம்பப் பள்ளிகளில் ஆங்கிலம் நீக்கப்பட்டது. இப்படி தொடர்ந்து காங்கிரஸ் தன்னுடைய போதனா மொழிக் கொள்கையைத் தெளிவுபடுத்தி இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாக ஆங்கில ஆதிக்கத்தை, ஆங்கிலத்தை அல்ல, வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்க விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 17-வது பிரிவின் கீழ் மொழி பற்றிய ஒரு ஷரத்து இருக்கிறது. பிரதேசங்களிலே, பிரதேச மொழியில் ஆட்சிசெலுத்த விரும்பினால், அந்தப் பிரதேச சட்டமன்றத்தின் மூலம் சட்டத்தை நிறைவேற்றி ஜனாதிபதி அனுமதி பெற்று செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. நீதி மன்றத்தின் மொழி பிரதேச மொழியாகக் கொண்டு வரப்படவேண்டுமென்றால், அதற்கு மாகாண அமைச்சரவை முடிவு எடுத்து, கவர்னர் மூலம் ஜனாதிபதியை அணுகினால் அங்கீகாரம் தரலாம். நீதிமன்றத்திலும் பிரதேச மொழியைக் கொண்டுவரலாம் என்பதை அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய காங்கிரஸ் செல்வாக்கில் இருந்த அரசியல் நிர்ணய சபையால் செய்ய முடிந்தது.

இந்தியா முழுமைக்கும், அன்னிய மொழி தேசீய மொழியாக இருப்பது நம்முடைய சுயமரியாதைக்கு இழுக்காகும். எத்தனையோ இடர்பாடுகள், சிக்கல்கள் இருந்தும்கூட, பெரும்பாலான மக்கள் பேசும் ஹிந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்று சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு 2 நாட்களுக்கு முன்பு திரு. வி. கே. ஆர். வி. ராவ், மத்திய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பிரதேச மொழிதான் கல்லூரிகளிலே பயிற்சி மொழியாக வேண்டும் என்ற கொள்கையில் மத்திய அரசு ஒரு நாளும் பின் வாங்காது என்று சொன்னார்கள்.

குஜராத்தில் கட்சி பிளந்து விட்டதால் சான்று கூறுகிறேன். குஜராத், சிண்டிகேட் காங்கிரஸ் ஆளும் மாநிலம். குஜராத்தி மொழிதான் ஆட்சிமொழியாக இருக்கும் என்று முன்னேற்றக் கருத்தோடு சட்டம் கொண்டு வந்து இருக்கிறது. தமிழ் மாநிலத்தைப்போல், அதுவும் தாய்மொழியைத்தான் போதனா மொழியாகக் கொள்ளவேண்டுமென்ற கருத்துடையது. இந்தச் சட்டத்தை எதிர்த்து சிலர் குஜராத்தில் உயர் நீதி மன்றத்திற்குப் போய் அந்தப் பயிற்சி மொழித் திட்டத்தை எதிர்த்து வழக்குப் போட்டார்கள். அது வென்றது. அப்போது குஜராத்தின் கல்வியமைச்சர் சொன்னார், நாங்கள் அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை, என்னுடைய சட்டத்தில்தான் குறை இருக்கிறது, சட்டத்தைத் திருத்தி, பிரதேச மொழியைப் பயிற்சி மொழி

யாக்குவோம் என்றார். இவ்வளவும் சொன்ன பிறகு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தனிக் கொள்கை என்று சிண்டிகேட்காரர்கள் சொல்வார்களானால், அது பிரிவினைப் போக்குக்கு அடித்தளம் போடும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் போக்கு இங்கே யாருக்கும் இருக்க முடியாது.

நீண்டகாலமாக ஆங்கிலம் வைத்துக்கொண்டு இருந்தோம் என்றாலும், நம்மோடு சேர்ந்து விடுதலை பெற்ற இலங்கை எல்லாத் துறையிலும் சிங்களத்தைக் கொண்டு வந்து விட்டது. தமிழர்களுக்கு அங்கே தமிழ்தான் பயிற்சி மொழி. அங்கே இருப்பவர்கள், ஒன்று சிங்களத்தை எடுத்துக்கொள்ள வேண்டும், அல்லது தமிழை எடுத்துக்கொள்ள வேண்டும். இவை இரண்டையும் எடுத்துக்கொள்ள மறுத்தால் வேறு மொழி கிடையாது என்று தெளிவுபடுத்தி விட்டார்கள். சட்டக் கல்லூரியில் சிங்களம். மூன்மொழி, சேய் மொழி எதுவும் இல்லாத சிங்கள மொழி பயிற்சி மொழியாக இருக்கக்கூடிய நிலை இலங்கையில் வந்து விட்டது.

பர்மாவில் பார்த்தால் பர்மிய மொழி. அங்கே எங்கும் எதற்கும் பர்மிய மொழி. பர்மிய மொழியே பாட மொழி, ஆட்சி மொழி, நீதிமன்ற மொழி என்று ஆகிவிட்டது.

நம்மோடு சேர்ந்து இருந்து பின்னர் பிரிவினை பெற்ற பாகிஸ்தானில், பன்மொழி மாநிலத்தில் என்ன நிலை என்று சொன்னால், பஞ்சாபி, சிந்து, புஷ்டு, வங்காளம் என்று நான்கு மொழி மாநிலமாகிய பாகிஸ்தானில் பிரதேச மொழி வரவேண்டும் என்ற அடிப்படையில் மொழிவாரி மாகாணத்திற்கு எதிராக அயூப் ஆட்சி கொண்ட கொள்கைக்கு தலை முழுக்குப் போட்டு யாகியாகான் ஆட்சி மொழிவாரிப் பிரதேசம் அமைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தேசத்தில் தேர்தல் என்று சொல்லியிருக்கிறது. பாகிஸ்தானில் கான்வெண்டு பள்ளி கலாசாரத்தை மாற்றுகிறார்கள். பிரதேச மொழிக்கு மதிப்பு அளிக்க மறுக்கிறார்கள் என்று சொல்லி கான்வெண்டு பள்ளிகளைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள். அடிமை நாடாக இருந்து விடுதலை பெற்ற நாடுகளை எடுத்துக் கொண்டால், இலங்கையில் சிங்களம், பர்மாவில் பர்மிய மொழி. ஆங்கிலத்தை மாற்றுவதற்கு பன்மொழி பேசும் பாகிஸ்தானில் வழி செய்திருக்கிறார்கள்.

உலக நாடுகளில் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் சரி, இதே நிலைதான். பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சு மொழிதான் எல்லா வகையிலும் பயன்படுத்தப்படுகிறது. சோவியத் நாட்டில் பேசுவது பன்மொழி. பிரதேசம் தோறும் பிரதேச மொழி தான் பயற்சி மொழி, அன்னிய மொழி பயிற்சி மொழியாக உலகில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சி மாறினால் எங்கும் பயிற்சி மொழியில் மாறுதல் வந்து விடுவதில்லை. குடியாட்சி இருக்கிற பிரிட்டனில் நாட்டு மொழிதான் பயிற்சி மொழி. புரட்சியில் பூத்த குடியரசு நாடு பிரான்சில், நாட்டு மொழிதான்



பயிற்சிமொழி. புரட்சியில் பூத்த சோஷலிஸ்டு குடியரசு நாடாகிய ரஷ்யாவில் நாட்டு மொழி தான் பயிற்சி மொழி. முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவில் நாட்டு மொழி தான் பயிற்சி மொழி.

இதிலிருந்து என்ன தெரிகிறது? அரசியல் தத்துவம் வேறுபட்டாலும், பொருளாதாரத் தத்துவம் வேறுபட்டாலும், தாய் மொழி தான் பயிற்சி மொழி என்ற தத்துவம் இயற்கையாகவே அமைந்து விட்டது. அது விவாதத்திற்குரியது அல்ல, விருப்பத்துக்கு விடுவதற்குரியது அல்ல. மாநாடுகள் கூட்டி, தீர்மானங்கள் போட்டு மாணவர்களைத் தூண்டிவிடக்கூடிய நிலை அல்ல என்பது தெளிவாகிவிட்டது. உலகத்தில் எது தர்மமாக இருக்கிறதோ, அதை அதர்மம் என்று சொல்லி, அதற்காக இயக்கம் நடத்துவது, கிளர்ச்சி, முயற்சி செய்வது தமிழ் நாட்டின் பாரம்பரியப் பெருமைக்கு நல்லது அல்ல, நாம் ஒன்றுபட்டுப் போவோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் திரு. மார்டின் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். மாணவர்களுடைய உத்தியோக நிலைக்குக் கேடு சமையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பிரதேச மொழியைப் பயிற்சி மொழியாக எடுக்கும் மாணவர்களுக்கு உத்தியோகத்தில் கேடு வரக்கூடாது என்பதற்காகத்தான் அரசு உத்தியோகத்தைப் பொறுத்த அளவில் உத்திரவாதம் கொடுத்திருக்கிறது. தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்பதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஏற்கனவே நடைமுறை ஒன்று இருக்கிறது. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னாலேயே இதைச் செய்யாமல் போனது ஒரு குறை என்று கூடச் சொன்னார்கள். ஒருகால் மதுரைத் தீர்மானத்திற்கு மார்டின் திருத்தம் மாறுபட்டதுதான் என்று அவர் உணர்ந்து, மதுரைத் தீர்மானத்திலிருந்து வேறுபடுகிறோம் என்று அவர் விளக்கம் கொடுத்துவிட்டால் அவர் திருத்தத்தில் பிரதானக்குறை ஒன்றுமில்லை. அதை அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆங்கிலத்திற்கு எதிர்ப்பு இல்லை. ஆங்கிலத்தை மொழியாகப் பயில்வதற்கு எதிர்ப்பு இல்லை. எதிர்க்கும் முறையில் கூறவில்லை. அதை வரவேற்கிறேன். விரும்புகிறேன். அதை உடன்பாட்டு முறையில் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் ஒன்றைத் திருப்பிக் கேட்கிறேன். இங்கே மாறுபட்டுப் பேசுகிற அங்கத்தினர்கள் ஒன்றிற்குப் பதில் சொல்லவேண்டும். ஒரு மொழியைப் பயில்வது மொழிப் பாடமாகப் பயிலவேண்டும். ரஷ்யாவில் ஆங்கில மொழியை மொழிப் பாடமாகத்தான் பயில்கிறார்கள். பிரான்ஸ் நாட்டில் ஆங்கில மொழியை மொழிப் பாடமாகத்தான் பயில்கிறார்கள். இத்தாலியில் ஜெர்மன் மொழியை மொழிப் பாடமாகப் பயில்கிறார்கள். உலக நாடுகள் அனைத்திலும் இன்றைய

மொழியை மொழியாகப் பயில்கின்றபொழுது, மொழிப் பாடமாக எடுத்துப் பயில்கின்றார்கள். அப்படி ஆங்கிலத்தைப் பயில்வதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை.

அண்ணா அவர்கள் பேசும்பொழுது உறுதி கொடுத்திருக்கிறார்கள். முதல் இரண்டு வகுப்பை விட்டுவிட்டு மூன்றாவது வகுப்பில் தொடங்கி மேல் பட்டப் படிப்பு வரை தினம் ஒரு பீரியட் ஆங்கில மொழிப் பாடமாக இருக்கிறது நம்முடைய மாநிலத்தில், கல்வி அமைச்சர் அவர்கள் நேற்று மேல்சபையில் சொல்லியிருப்பது போல் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு சலுகை ஆங்கிலத்திற்கு அளிக்கப்படவில்லை. இன்று இருக்கிற நிலையை ஒட்டி, சூழ்நிலைக்கேற்ப, வளைந்து கொடுத்து ஆங்கிலத்திற்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு வகுப்புகளைத் தவிர, குழந்தைகள் புறங்கையால் மூக்கைத் தொடுகின்ற இரண்டு வகுப்புகளைத் தவிர, தமிழுக்குரிய காலமெல்லாம், ஆங்கிலம் பாட மொழியாக இருக்கிறது. உலகத்தில் எந்த நாட்டிலும் இப்படி அன்னிய மொழியைப் படிப்பது கிடையாது. இப்படி ஆங்கிலம் படித்து வடக்கே வேலைக்குப் போகிறவர்கள் போகலாம் வெளிநாடு செல்பவர்கள் செல்லலாம். பெரியவர்கள் இதைவிட ஆங்கிலப் படிப்பு என்ன என்பதை விளக்கவேண்டும்.

இன்னொன்றும் சொல்கிறேன். ஆங்கிலத்தை 15 ஆண்டு காலம் படிக்கிறோம். மூன்றாம் வகுப்பிலிருந்து தொடங்கி ஆரம்பப் பள்ளியில் மூன்று ஆண்டுகள், நடுத்தர கல்வி நிலையில் 6 ஆண்டுகள், ஆக 9 ஆண்டுகள், புகுமுக வகுப்பில் ஒரு ஆண்டு, ஆக 10 ஆண்டுகள், பட்டப் படிப்பில் மூன்று ஆண்டுகள், ஆக 13 ஆண்டுகள். மேற்பட்டப் படிப்பில் இரண்டு ஆண்டுகள், ஆக 15 ஆண்டுகள் தினத்திற்கு ஒரு பீரியட் ஆங்கிலத்தை மொழிப் பாடமாக ஏற்றுப் படிக்கக்கூடிய நிலை இருக்கிறது. 15 ஆண்டு காலம் ஆங்கிலத்தை மொழிப் பாடமாகப் படிப்பது போதாது என்று சொல்வது உண்மையான வாதம் அல்ல. அது உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகின்ற நிலை தான். அதை ஒப்புக்கொள்ள முடியாது என்று உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றுக்கும் அவர்கள் பதில் அளித்தாகவேண்டும். அது என்ன? மொழியை மொழியாகப் படிக்கவேண்டும். விஞ்ஞானத்தைக் கருவியாகக் கொண்டு இன்னொரு மொழியைப் பயில்வது நல்லது அல்ல. விஞ்ஞான பாடத்திற்கு போதனா மொழி தமிழாக இருக்க வேண்டும். தமிழ் போதனா மொழியாக வரவேண்டும். விஞ்ஞானத்தைப் படிப்பதற்குக் கல்லூரி செல்லும் மாணவர்கள் தெரியாத விஞ்ஞானத்தை தெரியாத ஆங்கிலத்தில் படிப்பது என்ற நிலை கூடாது. கல்வி பயில வேண்டிய நோக்கில் எப்படி மொழி படிப்பது? இது தான் கல்வி முறையா? கல்வி முறை இப்படித்தான் பயில்வதா? மொழி மூலம் விஞ்ஞானத்தைக்



கற்றுக்கொள்ளவேண்டும். விஞ்ஞானத்தின் மூலம் மொழியைக் கற்றுக்கொள்ளக்கூடாது. புரியாத மொழி போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பதை உலகத்தில் எந்த அறிவாளியும் ஒப்புக்கொண்டதில்லை. புரிகின்ற தமிழ் மொழியில் விஞ்ஞானத்தைப் பயிலவேண்டும், புரியாத ஆங்கில மொழியில் அல்ல. இனிமேல் பிறக்கப்போகும் அறிவாளியும் இதை ஒப்புக்கொள்வான். தீர்மானமாகச் சொல்கிறேன். நான் எழுப்பிய இந்த இரண்டு கருத்துகளுக்கும் பதில் சொல்லவேண்டும்.

ஆங்கிலம் படிப்பதை தி.மு.க. அரசோ, அல்லது இந்தத் தீர்மானம் கொண்டுவந்த நானோ எதிர்க்கவில்லை. அது தொடர்பாக இன்னொன்றையும் சொல்கிறேன். ஆங்கிலம் ஒன்று மட்டும் இருப்பதால், வேறு அன்னிய மொழியைப் பயில முடியாத தடை இருக்கிறது. இருந்தாலும் கொஞ்ச காலத்திற்கு இது நீடிக்கட்டும் என்று விட்டு, 15 ஆண்டு காலம் ஆங்கிலம் படிப்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். 15 ஆண்டு காலத்திற்கு நம்முடைய பாட திட்டத்தில் ஆங்கிலம் இருக்கிறது. அதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவு படுத்துகிறேன்.

பின்னால் பேசுகிறவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்கிறேன். தமிழைப் பயிற்சி மொழியாக்குவது என்பது கட்சிக் கொள்கை அல்ல. சுதந்திரப் போராட்ட காலத்திருந்தே இந்த நிலை இருந்து வருகிறது. காந்தியடிகள் விழா, நேரு விழா, சுதந்திர தின விழா, குடியரசு தின விழா ஆகிய விழாக்களை தி.மு.க. அரசு தேச பக்தியோடு ஏற்றுக்கொண்டு கொண்டாடுகிறது. காந்தியடிகள் காட்டிய பாதையிலேதான் தி.மு.க. அரசு நடைபோடுகிறது. அந்தப் பாதையை விட்டு மீறி செல்லச் சொல்கிறார்களா? ஒரு மொழியை மொழிப்பாடமாகத்தான் பயிலவேண்டும். விஞ்ஞானத்தின் மூலம் ஆங்கிலத்தைப் பயில்வது என்பது ஒரு விபத்து. உலகத்திற்கு ஒரு நீதி, நமக்கு ஒரு நீதி என்று சொல்வதா? அது சாத்தியமில்லை. உலகத்திற்கு எது நியாயமோ, நீதியோ, அது தான் தமிழகத்திற்கும் என்று சொல்லி, இந்த மூன்று ஆண்டு காலமாக அமுல் நடத்தி வருகின்ற பயிற்சி மொழிக் கொள்கையை அடுத்துள்ள இரண்டு ஆண்டுகளுக்குள் அனைத்து தனியார் கல்லூரிகளிலும் அமுல் நடத்தி, ஐந்தாண்டு காலத்திற்குள் எல்லாப் பாடங்களுக்கும் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனா மொழி என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நாணயத்துடன் நிறைவேற்றித் தரவேண்டும். அந்த நாணயம் இந்தச் சட்டப் பேரவைக்கு இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய முன்னுரையை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** ஆன் எ பாயிண்ட் அஃப் கிளாரிபிகேஷன் சார், உயர்திரு. மா.பொ.சி. அவர்கள் பேசிய பேச்சை மிகுந்த கவனத்துடன் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதிலே

எழும்பிய சந்தேகத்தை விளக்கும்படியாக அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் மேற்கோள் காட்டிச் சொல்லும்பொழுது, காந்தியடிகள், அதாவது, காங்கிரஸ் தலைவராக இருந்தாரே அவரே இப்படி சொல்லியிருக்கிறார், ஆதலால் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும், இதை எதிர்க்கக் கூடாது என்று சொன்னார்கள். அந்தந்தப் பிரதேசத்தில் எந்த மொழி வழங்கப்படுகிறதோ, அந்த மொழியில்தான் பாட புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று காந்தியடிகள் சொல்கிறார்கள் ஆதலால் காங்கிரஸ் கட்சியினர் இதற்கு எதிர்ப்பு காட்டக்கூடாது என்று சொன்னார். காந்தியடிகள் சொன்னதையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா? எது அவருக்கு வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் ஒத்துக்கொள்கிறார். அகில இந்தியாவிற்கும் இந்தி மொழிதான் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று காந்தியடிகள் சொன்னார். அதைக் காற்றில் விட்டு விட்டீர்களே? அதை ஏற்றுக்கொண்டீர்களா? ஆகாததை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டு, வேண்டும் என்பதை மாத்திரம் எடுத்துக் கொள்வதா? அதைத்தான் ஆங்கிலத்தில் சொல்வார்கள் Devil quoting the scripture என்று. யார் டெவில், யார் ஏன்ஜல் என்று நான் இப்பொழுது சொல்ல வரவில்லை. தனக்குச் சாதகமாக இருப்பதை மட்டும் எடுத்துக்கொண்டு, தனக்குச் சாதகமில்லாத இந்திப் பிரச்சினையை வேண்டாம் என்று தள்ளிவிடுவது நியாயமா? (மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எழுந்திருந்தார்). ஐயா அவர்கள் விளக்கம் தந்த பிறகு, வேண்டுமென்றால் என் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாது?

**திரு. ம. பொ. சிவஞானம்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு விநாயகம் அவர்கள், என்னுடைய உரையைக் கூர்ந்தும் ஆழ்ந்தும் கவனித்தேன் என்றார்கள். ஆறுதல் அளிக்கிறது. ஏனென்றால், அவர் கூர்ந்தும் ஆழ்ந்தும் கவனிக்கக் கடமைப்பட்டவர். அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், காந்தியடிகள் சொன்னதையெல்லாம் பின்பற்றுகிறீர்களா என்று. காந்தியடிகள் சொன்னதை நான் எதையும் நிராகரிக்கவில்லை. 'கல்வி' என்று அவர்கள் ஒரு நூல் எழுதியிருக்கிறார்கள். அதில் காந்தியடிகளே, ஹிந்தி பொது மொழி என்று சொல்லும் அதே நேரத்தில், யார் மீதும் அதைத் திணிப்பதை விரும்பவில்லை என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அவையை ஏமாற்ற விரும்பவில்லை. வாய்ப்பு அளித்தால் அதைக் கொண்டுவந்து காட்டத் தயாராக இருக்கிறேன்.

இன்னொன்றும் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினை எப்பொழுது தீரும் என்று அவரே சொல்லியிருக்கிறார். 'வடக்கே உள்ளவர்கள் எப்பொழுது தமிழ் மொழியைப் படிக்கிறார்களோ அப்பொழுது தான் இது தீரும்' என்றும் அவர் சொல்லியிருக்கிறார். வடக்கே உள்ளவர்கள் தமிழ் மொழி கற்கிறார்களா என்பதை நண்பர் விநாயகம்தான் சொல்லவேண்டும். என்னைச் சேர்ந்திருந்தவர்



என்பதால் உரிமையோடு என்னைக் கேட்டிருக்கலாம்; நானும் அதே அளவில் கேட்கிறேன். காந்தியடிகளுடைய கொள்கைகளில் நீங்களேனும் உறுதியாக இருந்தீர்களா? அப்படியென்றால், இந்தி மொழித் தீர்மானம் வந்தபோது, ஒதுங்கியிருந்தது ஏன் என்று அறிவிக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை இன்றைய தீர்மானத்திற்கு அப்பாற்பட்டதாதலால் இதற்கு மேல் போக விரும்பவில்லை.

* **Dr. HABIBULLAH BAIG** : Mr. Deputy Speaker, Sir, the resolution moved by my friend Thiru Ma. Po. Sivagnanam and seconded by Thiru Peer Mohammed says that Tamil should be the medium of instruction in all schools and colleges. Thiru Ma. Po. Si. has given references and arguments stating that the medium must be the regional language and he has referred to various States and countries such as France, Russia, etc. (after his recent tour of Russia and Europe). He said that the medium of instruction there is their mother-tongue. I readily appreciate that he is advocating the mother-tongue as the medium of instruction. He has always been a staunch advocate of Tamil medium. But at the same time he must not forget that there is nearly 40 per cent of linguistic minorities in the State speaking Telugu, Urdu, Malayalam, Kannada and Gujarati (Number of Marwaris are there in the City and other parts of the State). Just as he has got his own emotions and feelings regarding his mother-tongue Tamil, similiarly those linguistic minorities also have their own sentiments and emotions and they also want their mother-tongue to be developed.

The University Commission has also recommended that regional language should be the medium of instruction in schools and colleges. At the same time, the University Commission has also conceded that minorities, interests should be protected and they should be given full opportunity of having their own mother-tongue as the medium of instruction. Take our neighbouring State of Andhra Pradesh. Even though they have included Telugu as medium of instruction, they have given opportunity for minorities to learn through their mother-tongue. For example, Urdu speaking people, Tamils and other minorities are having their own educational medium. Likewise our friend Mr. Ma. Po. Si. must also consider the fact that there are other minorities in the State of Tamil Nadu and they must have educational facilities in their own languages.

Apart from that, he is always a staunch critic of English because he is somehow from the beginning like that. Even when he was in the Congress he was doing a lot of agitation against English. But we cannot forget the important fact that English as such is a most important language. Of course he is a scholar in Tamil and he is a great advocate of Tamil. But at the same time he cannot forget that English is an international language and at the same time all the sciences,—abstract and concrete sciences

such as Mathematics, Physics, Chemistry, Biology and other sciences are all in English. Supposing our students are to study P.U.C. and B.Sc. in Tamil, they have then to enter the M.Sc. class which is a post-graduate course. If they want to study Chemistry, Physics, etc., they have to study these higher sciences which are in English. So, they must have the requisite background in English. After studying M.Sc., they have to do research. Supposing they take to research to get doctorate in Science. They cannot entirely depend upon Tamil medium. They have to study the latest researches and discoveries taking place in Science in the various countries and universities. They can do so only in English. So, when we want to develop Tamil, we cannot neglect English. In Andhra Pradesh, even though they have P.U.C. and B.Sc. in Telugu, for post-graduate courses like M.Sc., Ph.D etc., they have English medium only, so that the students who want to take to research can have the necessary facility of study of research taking place in various universities.

Unfortunately in our country there are so many languages and every State wants its language as medium of instruction. The controversy of link language has not been settled. Till such time as regional languages develop, English should be the medium of instruction. Then only our boys and girls could develop their research. It was said in the resolution that if the medium of instruction is left to the free will of boys, that will create confusion and therefore Government should take steps expeditiously to make Tamil alone the medium of instruction, in all our Government and private colleges. Of course 60 per cent of the students are Tamil-speaking no doubt. But at the same time the mover of the resolution should not forget that the rest, 40 per cent, are other language people. They must be given preference to study in their own mother-tongues. At the same time for higher courses medium of instruction should not be Tamil, but it should be English only. Otherwise it will hamper the students' progress in the scientific field. With these words I oppose the resolution.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, I have given an amendment to the resolution of my distinguished friend Mr. Ma. Po. Si., that if it is carried out there are grave risks involved to the students regarding their future, their employment potential, etc. I have explained in my amendment that proper steps should be taken to see that the students' future is not adversely affected. In fact I want to state clearly that I totally oppose the resolution brought forward by my friend, Mr. Ma. Po. Si. for the simple reason if the resolution is carried *in toto* then the future of the students would be affected adversely. Because of parliamentary practice that we cannot give an amendment opposing entirely the one moved, because of the rules of parliamentary practice, I have not moved my amendment. But I want to say very clearly that I oppose the resolution with all force. If it is passed, the students will have no future at all.



I will substantiate the point which I have made. The problem has been clearly understood by a vast section of the students. Some time ago a vast section of the students met the Vice-Chancellor. The students were told that the decision on this problem did not vest with him but vested with the Government. When the students met the Minister, the Minister said that the decision did not vest with him, but vested with the University. It is like the case of Spenlow and Jorkins. Spenlow said that it was not his responsibility and sent the persons to Jorkins and Jorkins said that it was not his responsibility and sent them on to Spenlow. Unfortunately this is what has happened here. (Interruption by Thiru K. Vinayakam.) Therefore I want the Government to take a clear stand and come forward with a categorical statement as to what exactly their educational policy is and what exactly are the steps they are going to take in future to see that the students are not disappointed.

Our Hon. distinguished Chief Minister said in one of his statements that all the students who had taken Tamil as the medium of instruction would get employment. How is it possible? According to the statement of the Hon. Minister for Education in the Legislative Council, 20,000 students at the P.U.C. level have taken Tamil as the medium of instruction. In other words, all these 20,000 students have to be provided with jobs. According to my calculation and the figures of Employment Exchange, 2,000 who have passed the P.U.C. will straightaway get jobs in Government Offices. In other words, the Government can provide jobs for 2,000 people. But the number of students who are going to pass is 20,000. In this context I would read a small extract from a news item published in one of the leading dailies of Madras with regard to difficulties or snags in the plan to reserve jobs for Tamil medium students :—

"Educationists and Government officials feel that the proposal to reserve Government jobs for Tamil medium graduates is beset with practical and legal difficulties.

The Tamil Nadu Government provides jobs for over 200 graduates every year by direct recruitment and the number of Tamil medium graduates—the first set of students completed their B.A. degree course in March 1970—is over 3,700."

In other words, 200 graduates are likely to be provided with jobs by Government, whereas 3,700 graduates in Tamil medium have come out. This shows they made a mistake which may bring them in a sort of net from which they cannot escape. We must be interested in the students and their interests.

"To the annual output of about 3,700 Arts graduates in the Tamil Medium now, another 2,000 science graduates will be added in 1972. The first batch of students studying Science subjects in the Tamil medium are now in the second year degree class and they will finish the three-year course in March 1972."

This only proves to what alarming proportions this problem may develop and snowball. I request the Government with all the persuasiveness at my command not to give a political angle or slant to this issue. Let us see what we do with our children. Let the legislators speak out their mind with regard to what they think about their children. I can give several instances, I can even quote the names. But it will become personal and I do not want to make this a personal issue. Most of the Ministers and legislators who are well versed in the state of things in this world prefer to send their children to English medium schools. Even the Headmasters say "We get such letters." What is sauce for the goose is also sauce for the gander. When we think of the improvement of our children, we should think of the improvement of the children of the others also. I request the Government not to hold out a deceptive attraction which will ultimately make a large number of students who have taken to Tamil medium disappointed and disillusioned.

I would like to establish another point for the benefit of the distinguished Member who has moved the resolution. Let us take the feeling of an ordinary mother.

"உன் பையன் என்ன படிக்கிறான்?" என்று யாராவது கேட்டால், "என் பையன் இங்கிலீஷ் மீடியம் படிக்கிறான்" என்று தாயார் பெருமையோடு சொல்கிறார்கள்.

The mother is proud that her child is reading through the English medium and feels that her boy will be able to deliver the goods both in English and Tamil. Why should the Government prevent people from taking to English medium? We have increasingly switched over to the regional language during the past few years.

We have yet to produce a man of Dr. C. V. Raman's calibre, or of the calibre J.C. Bose of West Bengal. That is why I say let us not mix politics with education. The argument that children studying through the medium of regional language would become scientists and technologists has been exploded by the fact that the Tamil medium has not produced even a single scientist. Scientists of distinction are all products of British days when the medium of English was compulsory and the standard of English was high. It is those people who are today delivering the goods in the United Nations, in the Parliament, in the High Courts and in the Supreme Court. Recently we have seen the arguments in the Supreme Court advanced by two distinguished lawyers, Palkhiwala and Kumaramangalam. The fact that they argued so ably shows that they have had a very good grounding in English. Suppose they have read law in Tamil. Would they be able to deliver the goods? Do we ever expect Tamil for argument in the Supreme Court? Tamil Nadu is only one of the several States and a part of the country. In the neighbouring States we have Telugu, Malayalam and Kanarese and in the other States we have Gujarati, etc. Will a Member of Parliament who has read through the medium of Tamil be able to deliver the goods



in Parliament? If a Member is able to speak in English, he is able to convince very well. Or because of Hindi domination, a member knowing Hindi will speak in Hindi. Therefore I request the Government to take a dispassionate view of the matter.

I am very sorry to note that the field of education is being tinkered with or meddled with by politicians of different brands as is the fashion nowadays. The Universities and the University Grants Commision depend on Government grants and seek the patronage of the Government. So long as the heads of the Universities and the University Grants Commission seek the patronage of the Government, they play second fiddle to the decisions of the Government.

Next, I would like to submit for the consideration of my Friend, the mover of the resolution, why we should become so passionate about language. It is our pleasure to learn different languages. I am able to speak Telugu, Kannada and English. Language is an instrument of expression like the blood pressure testing instrument or the cardiograph instrument. English is only an instrument of expression. The moment we master it, it becomes our own.

It is all right for Japan and Germany where there is no problem of multi-language-speaking people. So also, it is not மு.ப 11-30 necessary for Russians or the French people to speak in a different language and they can speak in their mother tongue. Here it is not possible because we are committed to have English at the Centre. Therefore, I say that the study of English is very necessary and the mastery of the English language can be achieved to a great extent by only using it as a medium of instruction.

It cannot be argued that it is a foreign language. We go to foreign countries. We use foreign cars and other foreign materials. If we do not have indigenous materials, we have to use foreign ones. No patient would say that he would not like to be X-Rayed or examined by a foreign stethoscope. So, we need not be emotionally involved in regard to this matter. Why should people fight shy of using the English language just because it is a foreign language? After all, language is only an instrument of expression. The moment we master it, it becomes our own. So we should not fight shy of it.

Now, I would refer to the controversy which arose before 1967 in Tamil Nadu. In 1965 when the Ruling Party was headed by a distinguished person, Thiru Bhaktavatsalam, students came and met the then Chief Minister and then a controversy arose. Finally, it ended in bloodshed and a number of students died. What did they want? They did not want Hindi domination and they fought against Hindi domination. How can we prevent Hindi domination? Students feel that they can fight Hindi domination with the tool of English and they do not want to get rid of English. They fought the domination of Hindi and fought for English at

the Centre. In other words, they wanted English in the Supreme Court, Central Government offices, Parliament and all other Central organisations. Now if this resolution is carried, what is the fate of these students ? The principle for which these students fought and sacrificed a few of their lives, is completely set at nought by this resolution. That is why we should oppose it and we should have English at the college level. The students are against Hindi but, at the same time, they are robbed of English.

Do you think that it is possible for a person without fluency in English to argue in places outside Tamil Nadu ? If a lawyer wants to go to the Andhra Pradesh or Kerala and argue a case in a court of law there, can he do so in a language other than English? What would be his fate ? So I would request my distinguished Friend, Thiru Sivagnanam to reconsider his resolution.

Another important thing I would like to point out is, how many of those students who have taken up Tamil as the medium of instruction can go in for technological studies. We have got Engineering. We have got Science. We have got Statistics. We have got Medicine, Physics, Chemistry, etc. Now, we are precluding or preventing the students from taking up these technological Studies. Students studying in P.U.C. can not take up courses like B.Sc., or M.Sc., or Ph.D.

Then, what about employment ? Of course, the Government have stated that they would give jobs to the students who took up Tamil as the medium of instruction. We have proved conclusively that it is impossible for the Government to give jobs for all those students. What is the fate of those students ? Can they get employment in commercial firms, banks including the Reserve Bank, Railways, Defence establishments and hundreds of other establishments where students who have studied in English would be preferred because they work on an All India basis. Also, I have to point out that the Central jobs are double the number of State jobs.

My distinguished Friend has brought in the name of Gandhiji in this discussion. It is a fact that revered Gandhiji wanted the regional language but he also wanted that Hindi should be the national language. He might have stated that it should not be made compulsory. That is the same song sung by other people in Delhi. But, what is the net result ? We fall into the trap of the Hindi zealots. I made this point at the meeting held in the Srinivasa Sastri Hall in 1963 which was presided over by Rajaji and also attended by the Hon. Minister for Education who was then the Leader of the Opposition. He appreciated my point. What do the Hindi zealots want? They want to rob us of English. If English is removed, it is easy for them to bring in Hindi through the back-door. So, we are all falling into the trap of the Hindi ... want to become the dominating ...



Whatever Dr. V.K.R.V. Rao or other Central Ministers might say now, their ultimate aim is to remove English and have Hindi in its place. So, I make an earnest request to the Hon. Minister for Education that he should not fall into their trap by getting rid of English by dangling the carrot of the regional language.

Lastly, I want to refer to another important point. A few months ago an absurd order was passed by the Hon. Minister for Education preventing those whose mother tongue was Tamil from getting admission into the English medium classes without the prior permission of the Director of Public Instruction. When the Assembly was not in session, a few months ago, I issued a statement opposing it. Thiru Krishnaswamy also issued a statement opposing it by convening a Press Conference. If this order was given effect to, it would have disastrous results. Only those who have influence—mark the word ' influence '—could get admission into the English medium even if their mother tongue is Tamil. Other students would be forced to seek admission in Tamil medium as it is not possible for all of them to get prior permission from the Director of Public Instruction. Only pressure and influence will play an important part in regard to this matter. Of course, it would have been unconstitutional if those having a language other than Tamil as the mother tongue were forced to take Tamil. The net result could be that an invidious distinction would have been made between Tamil and non-Tamil. A number of boys had voiced their concern. I am thankful to the Hon. Minister for having rescinded that order. I hope in the same manner he will withdraw the present one also, considering the problems I have mentioned.

I will now give one instance that had happened. There is the Government Arts College for Women. In all Government colleges 16 per cent of the seats are allotted for Harijans. Our Hon. Minister for Harijan Welfare must appreciate that. Some people, some Harijan, Harijans ' association men came to me. They would have gone to the Minister also. The Association people told me that out of 16 per cent seats, they were all given Tamil medium. They were not given English medium at all. Just because they are Harijans they should not be given Tamil medium. I asked them the plain question : " Do you want English medium? If so, say so." They said "We definitely want English medium. What doubt is there ? ". That goes to explain that public sympathy is not with us. To what extent people want English is now evident. They are interested in the future of their children. In the good old days that particular community might have suffered misfortunes. But now in independent India every one must have equal liberty and their children should not become victims of circumstances. They should be allowed to study in the English medium, if they want it. When the Harijans' Association people met me and told this, I supported their view. Just because they are Harijans, they should not be given (out of 16 per cent seats allotted to them) only Tamil medium.

Finally, two or three points remain for me. When our revered Anna was Chief Minister, we had a Convention in the Centenary Auditorium when a number of distinguished educationists were present. Even Rajaji was there. After a detailed discussion on the role of English in our educational system with special reference to science, engineering and technology, the Panel on Engineering and Technology adopted the following resolution :—

"1. Considering that English has been in use throughout India for over a century, and bearing in mind that English is the most important and widely used modern language in the world, especially in science, engineering and technology,

this Convention considers that for promoting rapidly the progress and well-being of our country, and in order that our countrymen may derive the fullest advantage of modern advances in science and technology and their applications, it is imperative that the use of English should be continued and fostered in education at all levels.

2. That to achieve the objective of Resolution I, this Convention recommends that the study of English be made compulsory from a very, early stage, so that the student at the high school leaving stage will be sufficiently proficient in the use of English to enable him to proceed to higher studies in science, engineering and technology, if he so desires."

With these words, I would request the Hon. Minister to reconsider the whole thing for the simple reason that we would like to give our children the facility they want. If for any reason any person wants Tamil medium, he may be given that medium. The point is, ultimately no compulsion should be there. But what is happening now? There is indirect compulsion to take to Tamil medium. I shall explain. There are 50,000 to 60,000 seats, say in P.U.C. and 35,000 seats are in English medium and 15,000 seats in Tamil medium, say. But the number of persons applying is several thousands more and out of about 70,000 students who apply for English medium, only about 35,000 get English medium and the rest don't get any admission at all. They are helpless. They want to continue the course. They can't get English medium. So, what is the goal left for the poor boy ? He has to go to the Tamil medium. The net result is that the poor boy has to take to Tamil, not of his choice, but because of helplessness. He is compelled thus indirectly to take to Tamil. That is the fate of the bulk of students, who apply for P.U.C.

The Hon. Minister says that for 1,000 seats in the Medical Colleges, 8,000 apply. That anology is not correct. Here the fundamental right of the student to have a medium of his choice is involved. What I say is forget politics and passions. Look at the problem objectively; look at the probem from the point of view of students, from their becomming prominent citizens of this country. Don't give way to self-interest and passion. Don't





issue the whip. If it is not there, I am sure many on the other side of the House, will agree with what I say. They are not now able to say what they want to say because of their political affiliations.

Let us see that the future of our boys and girls is not spoiled. Let them be allowed to have the medium of their choice. I am glad that the mover of the resolution has come round now and said that he is not against English. Let him consider what all I have said and let him not come in the way of students, their future and employment potential. If only this question is studied dispassionately, I am sure all will say that I had done well for the students and spoken what many in this House are afraid to speak. I have spoken of what the students sincerely feel. Let us not come in the way of their prosperity and future. Let our distinguished Member Mr. Ma. Po. Si. not come in the way of our students. With these words I oppose the resolution. Thank you.

* **திரு. டி. மார்டின் :** பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சபையிலே கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தில் என்னுடைய தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

கல்வியை, கல்விக்காகக் கற்றுக்கொண்டிருக்கிறவர்கள், கல்வியைத் தங்களுடைய வேலை வாய்ப்புக்காகக் கற்றுக்கொண்டிருக்கிறவர்கள் ஆக இந்த இரண்டையும் அவைகளின் அடிப்படைத் தத்துவத்தையும் நல்ல முறையில் இந்த மன்றமும், தீர்மானம் கொண்டு வந்திருக்கிற திரு. எம். பி. சிவஞானம் அவர்களும் உணர்வார்கள் என்று கருதுகிறேன். இந்த அவை அதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். குறிப்பாக, கல்வி கற்கக்கூடியவர்களிலே ஆய்வுக் கூடங்களில் இருந்து, அல்லது தனியார் நிறுவனங்களிலே இருந்து அல்லது தாங்களே தனி நிறுவனங்களை ஆரம்பித்து நடத்திக்கொள்ளத் தகுதி பெற்றோர் எத்தனை பேர்? கல்வியை வேலை வாய்ப்புக்காக வேலை தேடும் ஒரு வெஹிகிளாக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கும் மாணவர்கள் எத்தனை பேர்? நான் அறிந்த வரையில் வேலைக்காக கல்வியைப் படிக்கின்ற மாணவர்கள்தான் தமிழகத்திலே அதிகம் இருக்க முடியும். காரணம், சமுதாயத்தின் அடித்தளத்திலே இருந்து படிக்கக்கூடிய மாணவர்கள்தான் தமிழகத்திலே ஏராளமாக இருக்கிறார்கள். மேல் தளத்தில் இருக்கக்கூடியவர்கள் ஒரு சிலர் தமிழகத்திலே இருக்கமுடியும்.

இந்த பிரத்தியட்சமான நிலையை அடிப்படையாக வைத்துப் பார்ப்போமானால் இன்று கல்லூரிகளில் தமிழகத்தில் தமிழைப் பயிற்சி மொழியாக படிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு எந்த முறையில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அரசாங்கம் யோசிக்கவேண்டும்.

[திரு. டி. மார்டின்]

இலங்கையில் சிங்களம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது வார்த்தைக்கு நன்றாக இருக்குமே தவிர வேறொன்றும் இல்லை. இலங்கையின் நிலை என்ன? தமிழகத்தின் நிலை என்ன? சுதந்திர நாட்டில் இருக்கக்கூடியவர்கள் இலங்கையில் உள்ளார்கள். அவர்கள் இஷ்டப்படி சட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால் நம்முடைய தமிழகம் சுதந்திர தமிழகம் அல்ல. பல மாநிலங்கள் சேர்ந்துள்ள ஒரு கூட்டு அமைப்பில் அங்கம் வகிக்கிறது என்பதை இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்த திரு. சிவஞானம் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

குறிப்பாக, தமிழை அரசாங்கக் கல்லூரிகளில் அதிகமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். படிக்கிறவர்கள் யார்? தமிழைப் பயிற்சி மொழியாகப் படிக்கிறவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடியவர்கள். தனியார் கல்லூரிகளில் "இன்புளுயன்ஸ்" உபயோகப்படுத்திக்கொள்ள முடியாதவர்களுடைய பிள்ளைகள் தான் இன்றைய தினம் தமிழில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்று படிக்கிறவர்கள் இரண்டு ஜாதி—ஒன்று தமிழைப் போதனமொழியாக, பயிற்சி மொழியாகக் கொண்டு உள்ளவர்கள் ஒரு பிரிவு—ஒரு ஜாதி, மற்றொன்று ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டு உள்ளவர்கள் மற்றொரு ஜாதி—ஆக மாணவர்களில் இரண்டு ஜாதிகள் இருக்கின்றன.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள்- ஏழைகள்தான்—தமிழில் பட்டப் படிப்பு பெறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மாணவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும். அரசினர் கல்லூரியில் 100 இடங்களுக்கு ஆங்கிலம் என்றும் அதே அளவில் அந்தக் கல்லூரியில் 100 இடங்களுக்குத் தமிழ் என்றும் உண்டாக்கினால்தான் மாணவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய மொழியினை தேர்ந்தெடுக்க வசதியாக இருக்கும். அப்படியானால் தமிழிலே படிக்கின்ற அத்தனை மாணவர்களுக்கும் வேலை வாய்ப்பை கொடுக்க இந்த அரசால் முடியுமா என்பதை இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களும், அதை ஆதரித்துப் பேசியவர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வருடா வருடம் தமிழிலே பட்டப் படிப்பு படித்து விட்டு வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு எங்கே இருக்கிறது? 1970 மார்ச் முடிய 3,700 பட்டதாரிகள் தமிழிலே பி.ஏ. பட்டம் பெற்றவர்கள் வந்திருக்கிறார்கள், அவர்களில் 200 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது என்றால் மீதம் உள்ள 3,500 பேர்களுக்கு வேலை எங்கே? தமிழில் படித்த பட்டதாரிகளை எங்கே அனுப்பப் போகிறீர்கள் என்பதை இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த திரு. எம். பி. சிவஞானம் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வருடா வருடம் இரண்டாயிரத்திற்கும்





மேலாக தமிழிலே பி.ஏ. படித்து வர இருக்கிறார்களே அவர்களுக்கு அரசுத் தரப்பிலேயே வேலை கொடுத்துவிட முடியுமா என்பதையும் இந்தத் தீர்மானம் கொடுத்த திரு. சிவஞானம் அவர்கள் விளக்கினால் நல்லது.

நான்காம் நிலை ஊழியம், அதாவது கடைநிலை ஊழியம், கீழ்நிலை எழுத்தர், தட்டர் இவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தான் குறைந்த அடிப்படை குவாலிபிகேஷனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே 1966-ம் ஆண்டிலே சுமார் 1,500 பேர்கள் அரசிடம் வேலை கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். 1969-ம் ஆண்டிலே 30,000 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்ட மாணவர்களின் தாய்தந்தையர்கள் 1970-ம் ஆண்டிலே குறைந்தது 45,000 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் வேலை தாருங்கள், வேலை தாருங்கள் என்று சர்க்காருடைய கதவுகளைத் தட்டிக்கொண்டே நிற்கிறார்கள். வேலை தேடி வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. முடித்து விட்ட மாணவர்களின் தாய்தந்தையர்கள் பட்டப்படிப்பு படிக்க வைகக முடியாத நிலைமை அங்கே தொக்கிக் கொண்டு நிற்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். சுமார் 80,000 வேலை தேடும் மாணவர்கள் வந்தால் ஆண்டுக்கு 2,000 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும் என்றால் 6,000 பேர்களுக்குத்தானே வேலை கிடைக்கும், மீதம் உள்ள 74 ஆயிரம் பேர்கள் எங்கே அனுப்பப்படுவார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு யார் கொடுப்பது? எனக்கு முன்னால் பேசியவர் குறிப்பிட்டதைப் போன்று தனியார் நிறுவனங்களிலே தமிழிலே எஸ்.எஸ்.எல்.சி. தமிழிலே பி.ஏ. படித்தவர்களுக்கு வேலை கொடுப்பார்கள், அவர்களை வேலைக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? சுதந்திரத் தமிழ்நாடாக நம்முடைய மாநிலம் இருந்தால் தனியார் நிறுவனங்களிலே தமிழில் படித்தவர்களைத்தான் வேலைக்கு வைக்கவேண்டும், ஆங்கிலத்தில் படித்தவர்களை வைக்கமுடியாது என்ற ஒரு சட்டம் போடலாம். ஆனால் சுதந்திரத் தமிழ்நாடு இல்லையே, கூட்டமைப்பில் நாம் இருக்கிறோம் என்பதை மனதிலே வைத்து இந்தத் தீர்மானம் கொண்டுவந்த திரு. சிவஞானம் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

மூன்றாம் நிலைக்கு அடிப்படைத் தகுதியாக பி.யு.சி. வைத்து இருக்கிறார்கள். இந்த ஆண்டில் சுமார் 4,000-க்கும் அதிகமானவர்கள் வேலை வாய்ப்புக் கோரியிருக்கிறார்கள். ஆனால் 72 பேர்களுக்குத்தான் வேலை கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால் 4,000 எங்கே, 72 எங்கே என்பதை திரு. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டுப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாம் நிலைக்குப் பட்டதாரிகள் மட்டும்தான் மனுப் போட முடியும். அப்படிப்பட்ட வேலை கோரி 4,200 பேர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிலே வேலை கிடைத்தவர்கள் 212 பேர்கள் தான் என்றால் மீதமுள்ளவர்களை எங்கே போடுவார்கள்?

[திரு. டி. மார்டின்] [1970 நவம்பர் 30

முதல் நிலை உத்தியோகங்களை எடுத்துக்கொண்டால் பட்டப் படிப்புப் படித்தவர்களும் பட்ட மேல் படிப்புப் படித்தவர்களும் மனுப் போடலாம் என்ற நிலைமையை அடிப்படைக் குவாலிபிகேஷனாக வைத்திருக்கிறார்கள். 1970-ம் ஆண்டிலே மனுச் செய்தவர்கள் 900 பேர்கள். அவர்களில் வேலை கிடைத்திருப்பது 12 பேருக்குத் தான். இந்த நிலையிலே தமிழையே முழுமையும் பயிற்சி மொழியாக எடுத்துப் படித்தால் அவர்கள் எல்லாம் எப்படி வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்? ஐ.ஏ.எஸ். எழுதுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை சுருக்கமாகத்தான் இருக்கிறது. பட்டதாரிகள் எல்லாம் ஐ.ஏ.எஸ்-க்குப் போவது இல்லை. ஆனால் ஐ.ஏ.எஸ்-க்கு நம்முடைய மாநிலத்திலிருந்து சிலர் செல்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. ஐ.ஏ.எஸ். பரிட்சையைத் தமிழிலேயே எழுத அனுமதிக்கப்படுகிறார்களா? மற்ற மாநிலங்களிலே இருந்து வருகின்றவர்கள் அவர்களுடைய மொழிகளிலேயே ஐ.ஏ.எஸ். எழுதலாம் என்ற நிலைமை வந்து பிறகுதானே நம்முடைய மொழியில் நாமும் எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்படிப்பட்ட நிலைமை எங்கே வந்திருக்கிறது?

தமிழை விரும்புகிறவர்கள் தமிழைப் பயிற்சிமொழியாகவும், ஆங்கிலத்தைப் பயிற்சிமொழியாகவும் படிப்பதற்கு எந்தவிதமான தடையும் செய்யக்கூடாது. அப்படித் தடை செய்தால்தான் அது குழப்ப நிலையை உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சிவஞானம் அவர்கள் நான் கொடுத்த திருத்த தீர்மானத்தை ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களுடைய முன்னுரையிலே குறிப்பிட்டார்கள். நான் கூறுவதெல்லாம் தமிழைப் பயிற்சிமொழியாக எடுத்துப் படித்துவிட்டால் வேறு மாநிலங்களுக்குச் சென்று வேலைசெய்யக்கூடிய வாய்ப்புக் குறைந்துவிடும். ஏழை மாணவர்கள் படித்துவிட்டு வேறு மாநிலங்களிலே வேலைசெய்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர் பம்பாயிலே வேலை செய்கிறார். கேரளத்திலே எப்படிக் கொஞ்சம் படித்துவிட்ட மாணவர்கள் இங்கே வருகிறார்களோ அதேபோன்று நம் மாநிலத்திலிருந்தும் வேலை தேடிப் பிற மாநிலங்களுக்குச் செல்கிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இலங்கையில் இருந்து இங்கே ஏராளமானவர்கள் வரவிருக்கிறார்கள் இந்த அளவிலே நம்முடைய மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய அளவிலே நிலைமை இல்லாத காரணத்தினாலே எதிர்காலம் அவர்களுக்கு இல்லாத காரணத்தினாலே ஐவரி டவர் என்று சொல்கிறோமே அங்கே இருந்துகொண்டு பிரத்தியட்ச நிலைமைக்கு வராமல் மொழி, மொழி என்று ஒரே அடிப்படையை வைத்துக்கொண்டு மாணவர்களுடைய எதிர்காலத்தையே பாழாக்கக்கூடிய நிலைமை இருப்பதால் நான் என்னுடைய திருத்தத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மாணவர்களின் எதிர்காலம் பாழாக்கப்படவிடக்கூடாது.



1970 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படியானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் பயிற்சி மொழி தேவையில்லை என்று சொல்கிறார்களா படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காது என்று அவர்கள் சொல்கிற காரணத்தினாலே தமிழைப் பயிற்சிமொழியாக வைப்பது தவறு என்று கருது கருதுகிறார்களா? எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதால் அங்கேயும் முழுக்க முழுக்க ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்களா? ஆங்கிலம் பயிற்சிமொழியாகப் படித்தவர்களுக்கு, எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை உண்டாகும் என்று கருதுகிறார்கள் என்றால் தமிழிலே படித்தவர்களுக்கு மட்டும் அந்தக் குறைபாடு ஏற்படுகிறது என்று கருதுகிறார்களா?

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே புள்ளிவிவரம் இந்த அவையிலே கொடுத்திருக்கிறேன். எந்த அளவிற்கு தமிழிலே பயிற்சிமொழியாகப் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது, எந்த அளவுக்கு ஆங்கிலம் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களுக்கு இருக்கிறது என்று கூறியிருக்கிறேன். ஆனால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்கின்ற கேள்வி ஒன்றே ஒன்றுதான். ஆங்கிலம் பயிற்சிமொழியாகக் கொண்டவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு இருக்கிறதா அல்லது தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆகவே, தமிழ் பயிற்சிமொழி தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறார்களா?

**திரு. டி. மார்டின் :** நான் தமிழ் பயிற்சிமொழி வேண்டாம் என்று கூறவில்லை. ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். தமிழைப் பயிற்சிமொழியாக வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலை இவற்றில் ஆங்கிலம் பயிற்சிமொழியாகக் கொண்டவர்களுக்கு வாய்ப்பு அதிகம். வேலை வாய்ப்பு முறையிலே மாணவர்களுக்குப் பெரிய துரோகம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் கூறினேனே தவிர தமிழ் பயிற்சிமொழியாக வேண்டாமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** படிப்பவர்களெல்லாம் வேலை வாய்ப்பிற்காகப் படிக்கக்கூடாது. அவர்கள் வேறு தொழில் நண்பகல் 12-00
களிலே ஈடுபட வேண்டுமென்று முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பேசியதாக 'சிவகாமியின் செல்வன்' என்ற புத்தகத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்ன சொல்லுகிறார்கள்.

[1970 நவம்பர் 30

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிட்டது என்று சொன்னார்கள். ஆங்கிலமும வேண்டும், தமிழும் வேண்டுமென்ற நிலையிலேதான் தவிர, மொழி, மொழி என்று உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, தமிழ்த் துரோகிகள் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. படித்தவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்ல முடியாது ஆனால் ஒரு சாராருக்கு மட்டும் என்று சொல்லக்கூடாது. ஆகவே ஆங்கிலம் படிக்கும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. காமராஜர் அவர்கள் என்ன சொன்னார்கள்? மக்களாட்சி என்ற பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட புத்தகத்தில் திரு. காமராஜர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போட்டிருக்கிறார்கள். அதில், 'நாம் தமிழில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக தமிழைப் பயிற்சி மொழியாக்கிக் கொண்டு நம்முடைய குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்க முயற்சியெடுத்துக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து உள்ளவர்கள், படித்தவர்கள், பணக்காரர்கள் இதற்கு முன்வரமாட்டார்கள்'. இது திரு. காமராஜ் அவர்கள் எடுத்துச்சொன்னதாகும். அதுமட்டுமல்ல, 'தமிழ்மொழியாகிய தாய்மொழியை பயிற்சிமொழியாக்கி நம்முடைய மாணவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது சிலர் அதற்கு ஆட்சேபணையை-- எதிர்ப்பு அல்ல, எதிர்ப்பாக இருக்க முடியாது—சத்தம்போட்டு சொல்கிறார்கள்' இதுவும் திரு. காமராஜர் சொன்னது. அதையும் எதிர்க்கட்சித் தலைவருக்குச்சமர்ப்பிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவரவர்களே, இவர் புரிந்து கொண்டாரா இல்லையா என்பதே சந்தேகமாகயிருக்கிறது. ஆங்கிலம் மட்டும் என்று வைத்தால் சில பணக்காரர்கள்தான் படிக்க முடியும் என்பதை, தமிழ் தமிழ் என்று சொல்லி சப்தம் போடுவதால் மறுக்க முடியாது. இரண்டும் தான் வேண்டும், ஏழை பணக்காரர்களுக்கு சம வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் அதன் பொருள்.

A Rich devil uttered sermon about poverty People

* **திரு. இராம. அரங்கண்ணல்:** மன்றத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், தமிழும் வேண்டும், ஆங்கிலமும் வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு மகிழ்ச்சி. என்னவென்றால் தமிழும் வேண்டும், ஆங்கிலமும் வேண்டும். இந்தியும் வேண்டுமென்று ஒரு காலம் இருந்தது. அது மாறி, தமிழும் வேண்டும், ஆங்கிலமும் வேண்டுமென்று அவருடைய கட்சி ஒத்துக் கொண்டதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இதே கொள்கையை, 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி நம்முடைய மன்றத்திலே தீர்மானம் மூலமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. 'தமிழகத்தின்



1970 நவம்பர் 30] [திரு. இராம. அரங்கண்ணல்]

எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை அறவே நீக்கிட இம்மன்றம் தீர்மானிக்கிறது' என்பது அப்பொழுது நிறைவேற்றப்பட்ட தீர்மானம். நான் இந்தத் தீர்மானத்தைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன என்பது நீண்ட பல காலமாகச் சொல்லி வரப்படும் கொள்கையாகும். தமிழ் வளர வேண்டும், அது தான் எங்கள் மூச்சான மொழி. அதே நேரத்தில் உலகத்தோடு பழகவும், வெளி மாநிலங்களோடு பழகவும், வெளி மாநிலங்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும் ஆங்கிலம் வேண்டுமென்பது இன்றைய கொள்கையல்ல, நீண்ட நெடுங்காலமாக, எங்கள் கட்சி ஆரம்பமான காலத்திலிருந்து நாங்கள் சொல்லிவரும் கொள்கை.

இன்று டாக்டர் ஹாண்டே அவர்கள், அரசியல்வாதிகள் குழப்புகிறார்கள் என்று பேசினார்கள். மிக மிக அதிகமாகக் குழப்புகிறார்கள், மாணவர்கள் மத்தியில் சென்று பலவிதமாகக் குழப்புகிறார்கள். முன்னேற்றக் கழகம் ஆங்கிலத்தை அப்படியே தூக்கியெறிந்துவிட்டது, ஆங்கிலத்திற்கு இடமில்லை என்று சொல்லிவிட்டது, ஆங்கிலம் இல்லை என்றால் எப்படி. ஆகும், விஞ்ஞானத்தைக் கற்க முடியுமா, கணக்கை கற்க முடியுமா. எப்படி முடியும். ஆங்கிலத்தின் எதிரிகளாக முன்னேற்றக் கழகத்தினர் ஆகிவிட்டார்கள் என்று இன்று மேடைகளிலேயும், மாணவர்கள் மத்தியிலேயும் உணர்ச்சியைத் தூண்டுகிறார்கள்.

இன்றையதினம் தீர்மானத்தை முன்மொழிந்த தலைவர் ம. பொ. சி. அவர்களும், அவர்கள் முன்பு இருந்த காங்கிரஸ் கட்சியும், டாக்டர் ஹாண்டேயைச் சார்ந்த கட்சியும், மற்ற கட்சிகளும் சொல்லிவந்த கொள்கை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்கள் அத்தனைபேரும் ஒரு காலத்தில் இந்தி வேண்டும், இந்திதான் பொதுமொழியாக இருக்க வேண்டுமென்று சொன்ன நேரத்திலே, தமிழ்நாட்டில் தமிழும், உலகத்தோடு உறவு கொள்ள ஆங்கிலமும் வேண்டுமென்று கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக அந்தக் கொள்கையை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

இன்னொரு கருத்து சொல்லப்படுகிறது. தமிழால் முடியுமா? தமிழால் விஞ்ஞானத்தைப்படிக்க முடியுமா? புதிய புதிய கண்டுபிடிப்புகளை ஆராய முடியுமா என்றெல்லாம் கேட்கிறார்கள். நியாயமான கேள்வி. ஆனால் ஜப்பான் நாட்டிற்குச்சென்று பார்த்தால் அங்கே ஆங்கிலம் கிடையாது, ஆங்கிலம் பாடமொழி இல்லை, பயிற்சி மொழியில்லை. விஞ்ஞான நூல்களைக் கற்பது ஜப்பானிய மொழியில். அதனால் ஜப்பான் வளர்வதற்குத் தயங்கி விட்டதா என்று பார்த்தால், இன்று அமெரிக்காவைவிட பிரிட்டனைவிட, ஜெர்மனியைவிட, பிரான்ஸைவிட, இந்தியாவை விட, எல்லா உலக நாடுகளையும்விட விஞ்ஞானத்திலும் சரி, புதிய கண்டுபிடிப்புகளிலும் சரி ஜப்பான் முன்னேறியிருப்பதைப்பார்க்கிறோம்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1970 நவம்பர் 30

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அரசியல் பேசும் வேதாந்திகள் இப்படிப்பட்டவர்களை எதிர்காலம் அனுமதிக்கப் போவதில்லை. இவர்கள் மட்டுமே இங்கிலீஷ் வரும் என்று கருதுகிறார்கள். இவர்கள் மட்டுமே ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். தி.மு.க. இதை ஏற்காது, எதிர்காலம் என்று எளியவர்கள், பாட்டாளி மக்கள், உழைக்கின்றவர்கள், உழைப்பினால் நாட்டுக்குப் பெருமை தேடுகின்றவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் எதிர்காலம் நம்பிக் கொண்டிருக்கிறது. 'முடியுமா? முன்னேற்றக் கழகம் குட்டிச் சுவராகப் போய்க் கொண்டிருக்கிறது' என்று அனுதாபப்படுவது போல் பேசுவது பற்றியோ, இப்படிப்பட்ட ஆருடக்காரர்களைப் பற்றியோ கவலைப்படவில்லை. நாங்கள் தெளிவாக இருக்கிறோமா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தத்துவம் என்ன என்பதுதான் பிரச்சினை. இதிலே நாங்கள் மிக, மிகத் தெளிவாக இருக்கிறோம்.

தமிழைப் பயிற்சி மொழியாக்குவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்று நண்பர் மார்டின் அவர்களும், பெரியவர் கருத்திருமன் அவர்களும் இங்கே சொன்னார்கள். அதுவரை நன்றி. எங்கே வருகிறது ஆட்சேபணை? நம்முடைய ஆங்கிலப் புலவர் விநாயகம் அவர்கள் எதிரிலே இருப்பவர்களுக்கு டென்னிசன் தெரியாது, டிக்கன்ஸ் தெரியாது என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய நண்பர் விநாயகம் அவர்களுக்கு நான் தமிழ் வாத்தியாராகலாமா என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் எந்த வாத்தியாரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் வரமாட்டார்கள். அவருக்கு வாத்தியாரானாலும் ஆபத்து இருக்கிறது. ஆங்கிலமே கூடாது என்று சொன்னவர்கள் யார்? ஆங்கிலம் படிக்கக்கூடாது என்று திராவிடமுன்னேற்றக் கழக அரசு தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறதா?

காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்தில் ஐந்தாவது வகுப்பில் இருந்து தான் ஆங்கிலம் படிக்க வேண்டுமென்று உத்தரவு இருந்தது. மறுக்கிறாரா விநாயகம்? இப்போதுள்ள உத்தரவு என்ன? மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைப் படிக்கலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவு எடுத்து இன்றையதினம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது ஆங்கிலம் வேண்டாமென்று எறிந்தா விட்டோம்? மூன்றாவது வகுப்பில் இருந்து பத்தாவது வகுப்பு வரை ஆங்கிலம் இருக்கிறது. பி.யு.சி.-இல் ஆங்கிலம் இருக்கிறது; பி.ஏ. வகுப்பில், எம்.ஏ வகுப்பில் ஆங்கிலம் படிக்கலாம். ஆங்கிலம் Literature படிப்பது அப்படியே இருக்கிறது. மறுப்பாரா ஹாண்டே? நண்பர் மார்டின் அவர்கள் சொன்னது போல் பம்பாயில் போய் வியாபாரம் செய்கிறவர்களுக்கு ஆங்கிலம் தேவை; கல்கத்தாவிற்குப் போகிறவர்களுக்கு ஆங்கிலம் தேவை. அப்படிப்பட்டவர்களுக்காக ஆங்கிலத்தை வைத்திருக்கிறோம்.



1970 நவம்பர் 30] [திரு. இராம. அரங்கண்ணல்]

நான்கூட திருவாரூர் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்பு வரைப் படிக்கும்போது ஆங்கிலத்திலா சொல்லிக் கொடுத்தார்கள்? எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும்போது ஆப்ஷனல் சப்ஜக்ட், பிசிக்ஸ் வகுப்பெல்லாம் தமிழில்தான் இருந்தது. இருபத்திஐந்து ஆண்டுகளுக்கு முன்பே பௌதிகம் தமிழில் சொல்லிக் கொடுக்கப்பட்டது. இன்டர்மீடியட்டுக்குச் சென்றதும் எல்லாம் ஆங்கிலத்திலிருந்தது. அதுவரையில் எல்லாம் தமிழில் படித்த நான் திடீரென்று ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுக்கப்பட்டதும், சங்கடப்பட்டேன். ஏன் இதுவும் தமிழிலிருக்கக்கூடாது என்று 25 ஆண்டுகளுக்கு முன்பே என்னைப் போன்றோர் கருதினோம். வெள்ளையன் காலத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட முறை இது! இப்போது எனக்கு என்ன ஆங்கில அறிவு இல்லாமலா போய்விட்டது? விநாயகம் அவர்கள் குழப்புகின்ற அளவுக்கு ஆங்கில அறிவு இல்லாவிட்டாலும் படிக்கின்ற அளவுக்கு, பேசுவதைக் கேட்கின்ற அளவுக்கு, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வருகிற அளவுக்கு ஆங்கில அறிவு இருக்கத்தான் செய்கிறது. இப்போது ஆங்கிலத்தை ஒவ்வொரு வகுப்பிலும் வைத்திருக்கத்தான் செய்கிறோம். இல்லையென்று மறுக்க முடியுமா? எங்கே எதிர்ப்பைக் கிளப்புகிறார்கள்?

திரு. கே. விநாயகம்: ஆங்கிலம் படிக்கக் கூடாது என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியவில்லை. எதை எதிர்க்கிறோம் என்று கேட்டார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் தமிழ் மாத்திரந்தான் வைப்போம், தனியார் கல்லூரிகளில் வேண்டுமென்றால் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளட்டும், தடையில்லை என்று சொல்லுகிறீர்கள். தனியார் கல்லூரிகளும் நாட்டு மக்களுக்குச் சொந்தமானவைதான், அரசாங்கத்தால் நடத்தப்படும் கல்லூரிகளும் நாட்டு மக்களுக்குச் சொந்தமானவைதான். அரசாங்கக் கல்லூரிகளில் ஆங்கிலம் படிக்க முடியாது, தமிழில் தான் படிக்க வேண்டுமென்ற நிபந்தனை வைத்திருக்கிறீர்களே அதைத்தான் மாணவர்கள் மீது தமிழ் படிக்க வேண்டுமென்று மறைமுகமாகத் திணிக்கிறீர்கள் என்று கூறுகிறேன். இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்லி எதிர்த்தீர்கள். அதே வார்த்தைதான் இப்போது உங்களுக்குப் பொருந்தும். (குறுக்கீடு) தமிழ் தாய்மொழி என்பதில் சந்தேகம் இல்லை.

you are not approaching the subject properly.

தமிழோடு சேர்ந்து ஆங்கில அறிவும் இருந்தால் முழு மனிதனாக ஆக முடியும். இங்கு வேலை வாய்ப்பு இல்லாவிட்டாலும் வெளியே போய் வேலை வாய்ப்பு தேடிக் கொள்ள

முடியும். தமிழ் மாத்திரம் படித்து ஆங்கில அறிவு அறவே இல்லாமல் இருந்தால் உங்களுக்கு மனுப்போட்டு பில் கலெக்டர் வேலை பார்க்க முடியும். வெளியே இருக்கும் தொழில் ஸ்தாபனங்களாகட்டும், மாகாணத்தில் இருக்கும் தொழில் ஸ்தாபனங்களாகட்டும், ஆங்கிலம் தெரியாதவர்களை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். சிம்சன் கம்பெனியாகட்டும், டி.வி.எஸ். கம்பெனியாகட்டும், எந்த பிரைவேட் கம்பெனியாகட்டும்— அவர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு புறநானூறு தெரியும், அகநானூறு தெரியும், வேலை கொடுங்கள் என்று கேட்டால் வேலை கொடுப்பார்களா ?

Freedom of choice of instruction should be left to the students and parents concerned, and you should not thrust Tamil language down through unwilling throats like mine.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தமிழ் பயிற்சி மொழி என்று சொல்லும்போது, அது புறநானூறு படிக்க, அகநானூறு படிக்க, குறுந்தொகை படிக்க, நெடுநல்வாடை படிக்க என்று மாத்திரம் திரு. வினாயகம் அவர்கள் நம்பிக் கொண்டிருப்பதற்காக உள்ளபடியே வருத்தப்படுகிறேன். தமிழைப் பயிற்சி மொழியாக்கும் திட்டத்தின்படி அதிலே புறநானூறு வராது, திருக்குறள் வராது. அப்படி இலக்கியங்கள் அளவுக்கு நின்று விடக்கூடாது, விஞ்ஞான ரீதியிலே புதுமைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் திட்டம் தீவிரப்படுத்தப் படுகிறது.

'திணிப்பது' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்தீர்களே, இப்போது தமிழைத் திணிக்கலாமா என்று கேட்டார்கள். இந்தியையும், தமிழையும் திரு. வினாயகம் அவர்கள் ஒன்றாகக் கருதுகிறார்கள். அது அவருடைய உரிமை. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் அப்படிக் கருத முடியாது. தமிழைத் திணிப்பதாகச் சொன்னார்கள். தமிழை மாணவர்கள் படித்திட வேண்டுமென்பதற்கான முயற்சிகளை திணிப்பது என்று சொல்லுவார்களேயானால் இன்னும் பல ஆண்டு காலத்திற்குப் பிறகு தமிழைப் படித்தவர்களுக்குத்தான் தமிழ் நாட்டில் வேலை என்ற நிலை வரும் என்பதையும் அவர் மறந்துவிடக் கூடாது. அப்போது தனியார்த் துறை நிறுவனங்களில்கூட தமிழில் படித்தவர்களைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற ஒரு சட்டமும், பத்தாண்டு, பதினைந்தாண்டு காலத்திற்குப் பிறகு வந்தாலும் வரலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** பல இரண்டுங்கெட்டான்களை தமிழ்நாட்டில் பார்க்கிறோம். தமிழை ஒழுங்காகப் படிப்பதில்லை ஆங்கிலத்தை எப்போதுமே படித்துக் கொண்டிருந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட இரண்டுங்கெட்டான்



என்று உறுப்பினர் வினாயகம் அவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. நம்முடைய அரசைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட இரண்டுங்கெட்டான்களாக இல்லாமல் எல்லோரும் எல்லா அறிவையும் பெற்றிருக்க வேண்டுமென்பதுதான் கருத்து.

ஆங்கிலம் எங்கே இருக்கிறது என்பவர்களை நான் கேட்க ஆசைப்படுகிறேன், இன்று பி.யு.சி. வகுப்பில் ஆங்கிலம் இல்லையா ? என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் இந்த ஆண்டு பி.யு.சி. வகுப்பில் ஷேக்ஸ்பியர் இருக்கிறது. மற்ற ஆங்கிலப் பாட நூல்கள் இருக்கின்றன. பி.ஏ. வகுப்பில், எம்.ஏ. வகுப்பில் இருக்கிறது. பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பில் ஆங்கிலத்தில் லிட்ரேச்சர் படிக்க வசதி இருக்கிறது. ஆங்கிலம் வகுப்பில் ஒரு மொழியாகியுள்ளது. ஆங்கிலம் படிக்க 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வசதிகள் காங்கிரசார் காலத்தில் குறைக்கப்பட்டு மறுபடியும் இப்போது முன்பைவிட 3-ம் வகுப்பிலிருந்தே படிக்க வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பயிற்சி மொழியாக எப்படி ஆங்கிலம் ஆக முடியும், தாய்மொழியைத் தவிர, தமிழைத் தவிர.

இந்த நிலையில் தமிழைத் திணிக்கிறீர்களே என்று கேட்கிறார்கள். அந்த வார்த்தை அவருடைய வாயிலிருந்து வருகிறது. தமிழைத் திணிக்கும் அவசியம் இல்லை. தமிழை யாராவது குறை கூறிப் பேசினால் அவன் வங்காளக் குடாக்கடலில் தூக்கி எறியப் படுவான் என்பது இன்று தமிழ் மக்களுடைய உணர்வாகும். அந்த மொழியுணர்வை சட்டசபைக் கம்பர் கருத்திருமன் அவர்களும் ஏற்றுக்கொள்ளுவார்கள். அவர்களும் 'ஆமாம்' என்று கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழை வளர்க்க வேண்டுமென்கிறது நம்முடைய அரசு, தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டுமென்கிறது நம்முடைய அரசு. மேட்டுக் குடியினர், வசதி படைத்தவர்கள் ஆங்கிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் அவர்களுக்கு மட்டும் சொந்தமல்ல. ஏழை எளியவர்கள், விவசாய மக்கள் ஆகியோருக்கும் சொந்தமாக வேண்டுமென்ற நோக்கத்தோடு மூன்றாவது வகுப்பில் இருந்தே நாங்கள் ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுக்கிறோம். அதில் தேர்ந்தவர்கள் நல்ல உத்தியோகம் பெற்று அல்லது வெளி நாடுகளுக்குச் சென்று விஞ்ஞான அறிவு பெற வசதி செய்து தருகிறோம். இன்றைக்குள்ள எதிர்ப்பெல்லாம், வசதி படைத்தவர்கள், மேட்டுக் குடியினர், சமதர்ம சித்தாந்தத்தை கேலி செய்கிறவர்கள், நமக்காகத்தான் ஆங்கிலம் இருக்கிறது, நம் குழந்தைகள்தான் கான்வென்ட்களுக்குச் செல்வதால் அவர்கள்தான் ஆங்கிலம் படிக்கவேண்டும், ஏழைக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பித்துத் தரக் கூடாது என்று கருதுகிறவர்கள்தான் இன்று தமிழைத் திணிக்கிறோம் என்ற கோஷத்தைக் கிளப்புகிறார்கள். அவர்கள்தான் ஆங்கிலத்திற்கு விரோதமாக முன்னேற்றக் கழகம்

இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் அப்படிச் சொல்லவில்லை. ஆங்கிலம் படிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம்.

திரு. மார்டின் அவர்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள், வேலைவாய்ப்பு கிடைக்குமா? என்று. வேலைவாய்ப்பு பெருவதற்காகத்தான் ஆங்கிலம் என்று இப்போது மக்களிடம் ஒரு மன மயக்கம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆங்கிலம் படித்தால் தான் பெரியமனிதன் என்று நினைக்கிறார்கள். காரணம் பெரிய மனிதர்களாக இருப்பவர்கள், பெரிய பணக்காரர்களாக இருப்பவர்கள், சமுதாயத்தில் மேதைகளாக மதிக்கப்படுவார்கள் இன்றைய தினம் ஆங்கிலம் படித்தவர்களாகயிருக்கிறார்கள். ஆகவேதான் ஆங்கிலத்தின் மீது ஒரு மனமயக்கம் இருக்கிறது. ஆகவேதான் நம் பிள்ளைகளும் கொஞ்சமாவது ஆங்கிலம் படிக்க வேண்டுமென்கிற மனமயக்கம் இருக்கிறது. இந்த மனமயக்கத்தை ஒன்றிரண்டு நாட்களில் போக்கி விட முடியாது. அந்த மனமயக்கம் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் போகவேண்டும். அதற்கு ஒரு பத்தாண்டுகளாவது ஆகும். அந்தப் பத்தாண்டுகளுக்குள் நாம் என்ன செய்யலாம் என்றால், தமிழில் படிக்கிறவர்களுக்கு எந்தவிதமான கேடும் வந்துவிடாது என்ற உத்தரவாதம் தரப்படவேண்டும்.

அந்த வரையில் மார்டின் அவர்கள் சொன்ன கருத்தை ஒப்புக் கொள்கிறேன். தமிழ் படித்தவர்களுக்கு, தமிழில் படித்தவர்களுக்கு எந்தவிதமான கேடும் வாராது என்ற உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். தமிழில் படித்து வருகிறவர்களுக்கு வேலை அளிக்கப்படும் என்ற ஒரு உறுதியை திராவிட முன்னேற்றக் கழக அரசு அளித்திருக்கிறது.

அப்படி அளிக்கப்படக் கூடாதா? தனியார் அலுவலகங்களில் புறநானூறு பற்றியும், பதினெண்கீழ் கணக்கு பற்றியுமா கேட்பார்கள் என்று விநாயகம் அவர்கள் கேட்டார்கள். அப்படி கேட்கக்கூடிய காலம் வந்து சேரும். விநாயகம் போன்றவர்கள், வசதி படைத்தவர்கள் மட்டும்தான் புறநானூறு படிக்கலாமா? ஏழை குப்பனின் குழந்தையும், கந்தனின் குழந்தையும் புறநானூறு படிக்கக் கூடாதா? அதைத் தொடக் கூடாதா? அது மேட்டுக் குடி மக்களுக்கு மட்டும்தான் சொந்தமா? டவுன்களில் மட்டும் இருப்போர்தான் ஆங்கிலம் படிக்க வேண்டும், கிராமப்புறங்களில் உள்ளோர் ஆங்கிலம் படிக்கக் கூடாதா? ஷெல்லி, மில்டன், கீட்ஸ் போன்றவற்றை பணக்காரர்கள் குழந்தைகள் மட்டும்தான், மேட்டுக் குடியைச் சார்ந்த குழந்தைகள் மட்டும்தான் படிக்கலாமா? அவற்றை ஏழைக் குழந்தைகள்கூட படிக்கலாம், படிக்கவேண்டும் என்பதுதான் முன்னேற்றக் கழக அரசின் கொள்கை. ஏழை எளிய மக்களின் பிள்ளைகளும், கலப்பை பிடிப்போரின் குழந்தைகளும் ஆங்கிலம் பயில வேண்டும், அவர்களும் ஆங்கில அறிவு பெற வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. அப்படி ஏழை





எளிய மக்களின் பிள்ளைகள் அந்த வசதிகளைப்பெறுவதை மறுக்கிறவர்கள்தான் இந்தப் பிரச்னையை திசை திருப்பி விடுகிறார்கள், ஆங்கிலத்தை முன்னேற்றக் கழக அரசு எதிர்க்கிறது, ஆங்கிலத்தை தூக்கி எறிகிறது என்று. எங்களைப் பார்த்தா சொல்கிறார்கள் நாங்கள் ஆங்கிலத்தை விரும்பவில்லை என்று? இந்திக்காக நீங்கள் எல்லாம் வாதாடிக் கொண்டிருந்த நேரத்தில், இந்திதான் வேண்டும், இந்திதான் பாட மொழியாக வேண்டும், இந்திதான் அரசு மொழியாக வேண்டும், இந்திதான் கோர்ட் மொழியாக வரும், இந்திதான் பயிற்சிமொழியாக வரும் என்று நீங்கள் எல்லாம் சொன்ன நேரத்தில் எங்களுக்கு இந்தி தேவை இல்லை, அந்த இடத்தில் ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வற்புறுத்தி வாதாடிக் கொண்டிருந்த எங்களைப் பார்த்தா ஆங்கில விரோதிகள் என்று சொல்லுகிறார்கள்? எங்களைப் பார்த்தா ஆங்கிலத்தை தூக்கி எறிகிறார்கள், ஆங்கிலத்தை துச்சமாக மதிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்? இதை அரசியல் பித்தலாட்டம் என்று சொன்னால் பெரிய மனிதர்களுக்கு கோபம் வரும். ஆகவே இதை அரசியல் விந்தை என்று கருதுகிறேன் என்று சொல்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தளவில் நான் தெளிவாகச் சொல்கிறேன், ஆங்கில அறிவு உலகத்தை உணர்வதற்காகவும், உறவை வளர்த்துக்கொள்வதற்காகவும், மேதாவிலாசத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்காகவும் அவசியம். அந்த அறிவு வசதி படைத்தவர்களுக்கு மட்டும்தான் தேவை, சாய்வு நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களுக்கு மட்டும் தான் தேவை என்ற எண்ணம் தூள் தூளாக்கப்பட்டு அந்த அறிவு நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. அதே நேரத்தில் பயிற்சி மொழியைப் பொறுத்தளவில், பாட மொழியைப் பொறுத்தளவில் இந்த நூலைப் படித்தால்தான் அறிவு வளரும் என்ற கருத்து நீக்கப்பட்டு தமிழிலேயே எல்லா அறிவுகளையும் பெறமுடியும், வீட்டிலே வேலையில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் தாய்மார்கள் கூட தமிழில் வந்துள்ள விஞ்ஞானப் புத்தகத்தை படித்தால் தெரிந்து கொள்கிற அளவிற்கு தமிழ் வளர வேண்டும், தமிழ் எல்லாத் துறைகளிலும் பயிற்சி மொழியாக்கப் படவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று சொல்லி நான் அமர்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம், அனைத்துக் கல்லூரிகளிலும், அவை தனியார் கல்லூரிகளாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கக் கல்லூரிகளாக இருந்தாலும் சரி எல்லாக் கல்லூரிகளிலும் பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் தமிழ் அவசரமாகக் கொண்டுவரப்படவேண்டும் என்பதாகும். அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் யாரும் மறுக்கவில்லை. தமிழ் நல்ல உயர்ந்த தரத்திற்கு,

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 நவம்பர் 30

உலகத்திலுள்ள முக்கியமான மொழிகளான ரஷ்ய நாட்டு மொழி, பிரான்ஸ் நாட்டு மொழி, ஜப்பான் நாட்டு மொழி, போன்ற இம் மாதிரி மொழிகளுக்கு ஒத்தவாறு தமிழ் வளர்ந்து உயரவேண்டும் என்பதில் நாம் எல்லோரும் ஆர்வமாக இருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவிற்கு நாம் உயரவேண்டுமென்றால் நாமும் அந்த மொழிகளைக் கற்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

அதைப் பொறுத்தமட்டில் இந்தத் தீர்மானத்தில் இருக்கக் கூடிய வாசகத்தை நாம் பார்ப்போமானால் எல்லாக் கல்லூரிகளிலும் என்று சொன்னால், தனியார் கல்லூரிகளாக இருந்தாலும் சரி அங்கும் பாட மொழியாக, பயிற்சி மொழியாக தமிழ் ஆக்கப்பட வேண்டும் என்று கூறி இருப்பதைப் பார்க்கும்போது சில இடர்பாடுகள் விளைகின்றன. நம் மொழி உயர்வதற்கு அது தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் என் கருத்து. அதை விளக்க வேண்டுமென்று சொன்னால் சொல்கிறேன். ரேடியோவைக் கண்டு பிடித்தவர் ஒரு அயல் நாட்டுக்காரன் என்பதால் ஆங்கிலத்தில் படித்து முன்னேறியவன் என்ற காரணத்திற்காக ரேடியோவே வேண்டாம் என்று உதறித் தள்ளுவதா ? என்று கேட்கிறேன். பண்டைக் காலத்தில் நாம் மா அரைப்பதற்காக கை வைத்து ஆட்டி மா அரைத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு மா அரைக்கும் மெஷின் வந்துவிட்டது. அதைக் கண்டு பிடித்தவன் ஒரு அயல்நாட்டுக்காரன் என்பதால் அந்த மெஷினை நமக்கு வேண்டாம். நாம் முன்புபோல் பண்டைக் காலத்தில் செய்து கொண்டிருந்ததைப்போல் அதே முறையைத்தான் கையாள்வோம் என்று சொல்வது சரியா ?

இன்று விஞ்ஞான அறிவின் உச்ச கட்டத்தை அடைந்திருக்கும் ரஷ்ய நாட்டை எடுத்துக்கொண்டாலோ அல்லது அமெரிக்கா நாட்டை எடுத்துக் கொண்டாலோ எந்த மொழியின் மூலம் அந்த அறிவைப் பெற முடிகிறதோ அதைப் பயின்று அந்த அறிவை வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். இன்று ஸயன்டிஃபிக் டேர்ம்ஸ், ஸயன்டிஃபிக் இன்வென்ஷன்ஸ் இவைகள் எந்த மொழியில் இருக்கின்றனவோ அந்த மொழியைக் கற்காமல் அந்த அளவிற்கு அதில் உயர முடியாது. அதை மொழி பெயர்ப்பதற்குக் கூட அந்த மொழி தெரிந்திருக்கவேண்டும். ஆங்கிலத்திற்கு மட்டுமல்ல இந்தப் பிரச்னை. ஆங்கிலமாக இருந்தாலும் சரி அல்லது ரஷ்ய நாட்டு மொழியாக இருந்தாலும் சரி அல்லது ஜெர்மன் மொழியாக இருந்தாலும் சரி அல்லது ஜப்பான் மொழியாக இருந்தாலும் சரி அவைகளைக் கற்பதற்காக தமிழர்களாகிய நாம் தயாராக இருந்தால்தான் அந்த மொழிகளின் அளவிற்கு தமிழ் மொழியை நாம் உயர்த்த முடியும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்த நிலைக்கு வர வேண்டுமென்று சொன்னால் அந்த மொழிகளைக் கற்பதற்கு கல்லூரிகளில் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.



1970 நவம்பர் 30] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

இங்கு பேசிய அத்தனை பேர்களும் ஆங்கிலம் தமிழ், ஆங்கிலம் தமிழ் என்றுதான் கூறி வந்தார்கள். ஆங்கிலம் மட்டுமல்ல, ரஷ்ய மொழி, ஜெர்மன் மொழி, ஜப்பான் மொழி, ஃபெரெஞ்ச் மொழி ஆகிய மொழிகளுக்கு ஒத்ததாக தமிழ் மொழி வரவேண்டுமென்றால் அந்த மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

ஆகவே, இந்தத் தீர்மானத்திலுள்ள சில சின்ன வார்த்தைகளைப் பார்க்கும்போது எனக்கு கொஞ்சம் ஐயம் ஏற்படுகிறது. தனியார், அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் படிப்படியாக—படிப்படியாக என்ற வார்த்தை கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது. திரு.ம.பொ.சி. அவர்களே நினைக்கிறார்கள் போலும். உடனடியாகக் கொண்டுவர முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டுவர முடியும் என்று. ஆகவே படிப்படியாக உயர்த்த வேண்டும் என்பது சற்று ஆறுதலாக இருப்பினும் கூட, தனியார் கல்லூரிகளில் நாம் அதிக அக்கறை காட்டி அங்கும் தமிழ்தான் பாட மொழியாக, பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதை நாம் எடுத்து விட்டால் கொஞ்சம் நன்றாகயிருக்கும் என்பது என் கருத்து. ஏனெனில் இன்றையதினமுள்ள விஞ்ஞான அறிவு முன்னேற்றத்தில் விஞ்ஞானம் அல்லது மற்ற துறைகளிலுள்ளவற்றை, அவை ஆங்கிலத்தில் இருந்தாலும் சரி, ரஷ்ய மொழியில் இருந்தாலும் சரி, ஜப்பான் மொழியில் இருந்தாலும் சரி, அவைகளை மொழி பெயர்க்க வேண்டுமென்று சொன்னாலும் அந்த மொழிகளை நாம் கற்றுணர்ந்திருக்கவேண்டும். ஆக, அந்த மொழியும் தெரிந்திருக்கவேண்டும், தமிழும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். அதே நேரத்தில் ஜப்பான் அல்லது ரஷ்ய அல்லது ஜெர்மன் மொழியை நுண்ணிய முறையில் கற்கவேண்டுமென்று சொன்னால் ஏதோ ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அதைக் கற்று விடுவது என்பது முடியாது.

தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொள்வோம். இந்தப் பிரிவுகளை வைத்தால், அவர்கள் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை கொண்டு வருவார்களேயானால் சர்க்கார் ஒருவேளை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய கிராண்டை நிறுத்தலாம். நிறுத்தி விட்டால் அவர்கள், யார் படிக்க வருகிறார்களோ அந்த மாணவர்களிடமிருந்து வசூல் செய்ய பி.ப. 12-
வேண்டிய நிலை, நிர்ப்பந்தம் ஏற்படுமானால் பெரும் நஷ்டத்தோடு பெரிய அறிவையும் பெற முடியாத சூழ்நிலை ஏற்படும். எளிய மக்கள் பணமே செலவழிக்காமல் படிக்கக்கூடிய நிலைமை போய் அங்கே ஓரளவுக்கு பணம் கொடுப்பதற்கான வசதி உள்ளவர்கள் தான் கற்க முடியும் என்ற நிலை ஏற்படலாம்.

இது ஒரு புறம் இருக்க, தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்ற நிலை இருக்குமானால் சில காலத்தில் தனியார் கல்லூரிகள் ஆரம்பிப்பதையும் குறைக்கும் சூழ்நிலை ஏற்படும். தமிழ் தேசிய மொழியாக வேண்டுமென்றால், அந்த தமிழ் மொழி வளர்ச்சி பெறு

வதற்கான வழி வகை செய்யவேண்டும். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் அந்த அளவுக்கு உயர்த்த முடியாது என்பதுதான் நம்முடைய உண்மைக் கருத்தாகும்.

இலங்கையில் சிங்களத்தை போதனா மொழியாகக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சிங்களத்தை உதாரணம் காட்டிப் பேசுவதைக் கண்டு எனக்கு வருத்தமாக இருக்கிறது. சிங்கள நாட்டில் தமிழர்கள் அறவே வேண்டாம் என்று சர்க்கார் சொல்லி இருக்கிறது. அந்த நேரத்தில் இப்படிப் பேசுவது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்கள் தமிழர்களை வெளியே அகற்றும் நிலையில் "செகுலர் ஸ்டேட்" என்று இல்லாத நிலையில் இருக்கிறார்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** ஒரு விளக்கம் சொல்லி விட்டால், மாண்புமிகு அங்கத்தினர் மேலே பேச துணையாக இருக்கும் என்று நினைக்கிறேன். இலங்கையில் தமிழர் இருக்கக்கூடாது என்பது இந்திய-தமிழர்கள் பிரச்னை. நாம் பயப்படுகிறபடி, அவ்வளவு பேர் வெளியேற்றப்பட்டு விட்டாலும் கூட 15—16 லட்சம் பூர்வ குடி தமிழர்கள் அங்கே இருப்பார்கள். அப்படி அங்கே தமிழர்கள் இருக்கிறபோது, தமிழ் பயிற்சி மொழியாக நீடிக்கும். அது ஒன்றும் எடுபடாது. இலங்கையில் உள்ள குடியேற்றப் பிரச்னைக்கும் பயிற்சி மொழிப் பிரச்னைக்கும் சம்பந்தம் இல்லை என்று அன்பருக்குச் சொல்கிறேன். தமிழ் மொழி அங்கே உள்ள பூர்வ குடி தமிழர்களின் பயிற்சி மொழியாக இருக்கும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவரவர்களே, அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒப்புக்கொண்டார்கள், நன்றி.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இங்கே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே, தனிப்பட்ட கல்லூரிகள் உருவாகும் காலத்தில் அயல் நாட்டு மொழிகளில் அவர்களுடைய உற்சாகத்தை நல்ல விதத்தில் பயன்படுத்துவதிலும், மொழிப் பயிற்சி ஏற்படுத்துவதற்கும் நம்முடைய மாநிலத்தில் ஊக்கத்தைக் குறைக்கும் சூழ்நிலை ஏற்படுமானால் முழுமையான அளவு முன்னேற முடியாது. சில கல்லூரிகளில் எந்தெந்த மொழிகளில் பாடம் கற்பிக்க வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்களோ, அந்தக் கல்லூரிகள் தனித்து இயங்க அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இங்கே பயிற்சி மொழி சம்பந்தமாக மதிப்பிற்குரிய ம. பொ. சி. அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். இங்கே பேசிய பேச்சுக்களைப் பார்த்தால், இதில் சரியாக ஆழமாகப் பார்க்காமல், மேலெழுந்தவாரியாகப் பார்த்துப் பேசக் கூடிய கருத்துக்களாக இருக்கின்றன என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இப்போது நாம் பேசுவது பயிற்று மொழி, அதாவது, போதனா மொழி சம்பந்தப்பட்டதே தவிர வேறு எந்த மொழியைப்படிப்பது, படிப்பதல்ல என்பதைப் பற்றிய பிரச்னை இந்தத் தீர்மானத்தில் இல்லை. மொழி என்பது அறிவை வளர்ப்பதற்கும், அனுபவம் பெறுவதற்கும் பயன்படக்கூடிய ஒரு கருவி. அந்த அறிவைப் பெறுவதற்கு, அனுபவத்தைப் பெறுவதற்கு எந்த மொழியால் முடியும் என்பதை நாம் கவனிக்கிறபோது, உலக நாடுகளிலே உள்ள எல்லா இனத்தவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிறபோது எந்த மனிதனும் தன்னுடைய அறிவை பெருக்கிக்கொள்வதற்கு சுலபமான வழி, தாய் மொழி மூலமாக கற்றுக்கொள்வதுதான் என்பதை மறுக்க முடியாது. தாய் மொழி மூலம் அறிவைப் பெருக்கிக்கொள்வது தான் சுலபமான முறை, வேறு முறைகள் எல்லாம் சிரமமான முறை தான். ஆகவே, பெரும்பகுதியினர் தங்களுடைய அறிவை விஞ்ஞானம், கணிதம், பொறியியல் போன்றவற்றில் உயர் அறிவைப் பெறுவதற்கு தாய் மொழி மூலம் கற்றுக்கொள்வது சுலபமாக இருக்குமே தவிர மற்ற மொழி மூலம் சுலபமாக கற்க முடியாது, இதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

கடந்த 300 ஆண்டுகளாக ஆங்கிலத்திற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்திருந்தாலும், ஆங்கில அறிவைப் பெற்று பெரும் மேதைகளாக வந்தவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தான். ஆங்கிலத்தில் படித்து பட்டம் பெற்றதால் பெரும் அறிவாளிகளாக ஆகிவிட்டார்கள் என்பது இல்லை. எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் சிலர் சேர்ந்தார்போல் 4 வார்த்தை பேசுவதற்கோ எழுதுவதற்கோ முடியாமல் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆகையால் ஆங்கிலம் மூலமாக படித்தால் தான் அறிவு வளரும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. அது தவறான கருத்தாகும். ஆகவே, தமிழ் மொழி மூலமாக அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடிய விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றை கற்றுக் கொள்ளச் செய்வது தான் சிறந்தது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ் மொழி, வளர்ச்சி பெற்ற மொழி தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்று தமிழர்களைக் கூறுவார்கள். தமிழ் மொழி வெகு நீண்ட காலத்திற்கு முன்னாலே ஏற்பட்ட மொழி. வளர்ச்சி அடைந்து வந்த மொழி. இடைக்காலத்திலே ஆங்கில ஆதிக்கத்தில் ஓரளவு வளர்ச்சி தடைப்பட்டது உண்மை. தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வதன் மூலம், தமிழ் மொழி மூலம் அறிவு வளரும் என்பதை யாரும் எதிர்த்துப் பேச முடியாது என்று கருதுகிறேன். பாரதியார் சொன்னார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்". அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பதல்ல. பல மொழிகளிலும் புலமைப் பெற்றவர். அந்த பாரதி தான் அப்படிக் கூறினார்.

ஆகவே, தமிழ் மொழி மூலம் அறிவு பெற முடியாது என்று கூறுவது தவறான கருத்து. தாய் மொழி மூலம் படிப்பது என்பது எப்படி தவறானதாக இருக்க முடியுமென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பிற மொழியை புரிந்து கொண்டு அதன் மூலம் விஞ்ஞானம், கணிதம், பொறியியல் ஆகியவற்றில் அறிவு பெறுவது கஷ்டமா அல்லது தாய் மொழியின் மூலம் அறிவுபெறுவது கஷ்டமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். தாய் மொழி என்பது பிறக்கும்போதே ஆரம்பித்து, தாய் கூட இருந்து மழலை பேசுவது தமிழ்மொழி தான். தமிழை பொதுவாக யாரும் கற்றுக்கொள்வது இல்லை. அது எழுத்து வடிவம், வரி வடிவம், படித்துப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அப்படி எழுத்து வடிவத்தில் ஆங்கிலம் போன்றவற்றைக் கற்பது அப்படி அல்ல. ஆகவே, ஆங்கிலம் மூலம் தான் அறிவு வளரும் என்று கருதுவது தவறு என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முன்னாலே பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். இதைப் பொறுத்தவரையில் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் உலக நாடுகளிலே எந்த நாட்டிலும் மாற்று மொழியை, அன்னிய மொழியை பயிற்சி மொழியாக வைத்து இருக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மை. எந்த நாட்டிலும், அதாவது, தாய் மொழி மூலம் கற்றுக் கொண்டவர்கள் பின்தங்கி விட்டார்கள் என்று, சரித்திரத்தில் சான்றுகள் கிடையாது. இன்றைக்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இஸ்ரேல் நாட்டில் மிகக் குறுகிய காலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு என்று ஒரு தனி மொழி கிடையாது. அவர்கள் ஹிப்புரு என்று ஒரு மொழியை, எழுத்தில்லாத ஒரு மொழியைப் பேசிக் கொண்டிருந்தார்கள். கடந்த சுமார் 7 ஆண்டுகளில் எழுத்து வடிவம் கொடுத்து, பயிற்று மொழியாக்கி, விஞ்ஞானத்தில் அவர்களுக்கு நிகர் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, பல வல்லரசு நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு வளர்ந்து உள்ளார்கள். ஒரு மொழியை உருவாக்கி, அதைப் பயிற்று மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். இஸ்ரேல் வளர்ச்சிபெற்ற அளவுக்கு, ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட நாடுகள் வளர்ச்சி பெற்று இருக்கின்றனவா என்றால், இல்லை. தாய்மொழி மூலம் வளர்ச்சி அடைவது என்பது எந்த வகையிலும் பிற்போக்கு ஆகி விடாது.

ஆங்கிலத்தில் படித்தவர்கள் வளர்ச்சியுற்றிருக்கிறார்களா? 300 ஆண்டு காலமாக எத்தனை சதவிகிதத்தினர் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்? இரண்டு சதவிகிதத்தினர் கூட இல்லை. இன்னும் எத்தனை ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு வளர்ச்சி பெற முடியும் என்று கூறுவதற்கில்லை. ஆங்கிலத்தில் பயில வேண்டும் என்று சொல்பவர்கள் என்ன வாதம் செய்கி



றார்கள்?' தமிழிலே போதிய நூல்கள் இல்லை, நான் எப்படி தமிழிலே படிப்பது? வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழிலே படிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது'.

அடுத்து, தரம் கெட்டுவிடும் என்று சொல்கிறார்கள். இதைத் தீவிரமாக அமுல் நடத்தக்கூடாது என்றும் வாதாடுகிறார்கள். ஆக, இந்த நான்கு வாதங்களை அவர்கள் எடுத்து வைக்கிறார்கள். அவைகளை ஒன்று ஒன்றாக எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், அவைகளில் பொருள் இல்லை என்பது தெரியவரும்.

முதலாவதாக, தமிழில் போதிய நூல்கள் இல்லை என்பது இந்த நேரத்தில் சரியான வாதமல்ல. தமிழிலே பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. கணிதம், விஞ்ஞானம் போன்ற நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு 250 நூல்கள் பாடத்திற்கு லாயக்கான நூல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, தமிழிலே நூல்கள் இல்லை என்ற வாதம் பொருந்தாது. தமிழிலே நாம் பல நூல்களை இயற்ற முடியும், அறிவு இயல் நூல்களை தமிழிலே மொழி பெயர்க்க முடியும், அப்படி மொழி பெயர்க்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், மொழி பெயர்த்துக் கொடுப்பதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது, சிரமும் கிடையாது. ஆகவே, நூல்கள் இல்லை என்று சொல்வது சரியல்ல. தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கு போதிய நூல்கள் இருக்கின்றன.

அடுத்து, வெளி நாடுகளில் வேலை வாய்ப்பு கிடைக்க இயலாது என்று ஒரு வாதம் எழுப்பப்படுகிறது. வெளிநாடுகளில் மட்டுமல்ல தமிழகத்திலும் வேலை வாய்ப்பு கிடையாது என்ற வாதத்தை மதிப்பிற்குரிய திரு. மார்டின் அவர்கள் ரொம்ப அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திப் பேசினார்கள். ஆங்கிலத்தில் படித்து வந்த அத்தனை பேர்களுக்கும் வேலை கிடைத்துவிட்டதா, கிடைத்திருக்கிறதா? அப்படி கிடைப்பதற்கு உத்தரவாதம் எங்கேயாவது, யாராவது கொடுத்திருக்கிறார்களா? வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று உத்திரவாதம் கிடைத்திருக்கிறதா? கிடையாது. தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும், ஆங்கிலத்தில் படித்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? தமிழிலே படித்தவர்கள் என்ற காரணத்தினால் அரசாங்க உத்தியோகங்களுக்கு அது இடையூறாக இருக்காது, அவர்களும், ஆங்கிலத்தில் படித்தவர்களும் சமமான நிலையில் வைக்கப்பட்டு எண்ணப்படுவார்கள் என்ற வாக்குறுதியை அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். ஆங்கிலத்தில் படித்தாலும் சரி, தமிழில் படித்தாலும் சரி, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்துவிடும் என்று யாரும் சொல்வதற்கில்லை. ஆங்கிலத்தை மட்டும் பயிற்சி மொழியாக வைத்துவிட்டால். வேலை வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்துவிடுமா? எப்படி கொடுக்க முடியும்? ஏதாவது அப்படி உறுதி இருக்கிறதா என்று நான்

கேட்கிறேன். கிடையாது. அன்னிய மாநிலங்களுக்குச் சென்றால் ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழி பயிற்சி மொழி ஆகிக்கொண்டு வருகிறது. அந்தந்த மாநில அரசாங்கத்தில் ஆங்காங்கு இருக்கிற தாய் மொழியில் படித்தவர்களுக்கு அந்தந்த அரசாங்க அலுவலகங்களில் வேலை வாய்ப்பு கொடுக்க முன்வருவார்களேயன்றி, தாய் மொழியில்லாமல் ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கு பிற மாநிலங்களில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது எப்படி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆங்கிலம் எங்கே அந்த அளவுக்குப் பயன்படப் போகிறது? இந்தி மொழியை கற்றுக்கொள்வது நல்லது, பாட மொழியாக கற்றுக்கொள்வது நல்லது, கற்றுக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன். ஆகவே, ஆங்கிலத்தில் படிப்பது எந்த அளவுக்கும் பெரிய செதியைக் கொடுத்துவிடும் என்ற கருத்து சரியல்ல.

**திரு. ம. பொ. சிவஞானம் :** இந்தியை ஒரு மொழியாகப் படிக்க வேண்டும், பாட மொழியாக, பயிற்சி மொழியாக அல்ல என்று சொல்கிறாரா? நான் அதை ஏற்காவிட்டாலும் அவர்களுடைய கொள்கை என்ன என்பதை விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்தி என்று சொல்கிறபொழுது, அதை ஒரு பாட மொழியாகத் தான் படிக்கவேண்டுமென்று சொல்கிறேனே தவிர, இந்தி பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற கருத்தை எந்த நிலையிலும் சொன்னது கிடையாது. அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தி பயிற்சி மொழியாக வரவேண்டும் என்று கூறப்பட்டால், அதை எதிர்ப்பவர்களோடு சேர்ந்து நானும் எதிர்க்கத் தயாராக இருக்கிறேன். அதில் எதுவும் தயக்கம் கிடையாது. இந்தியைப் பாட மொழியாக கற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறேனே தவிர, அது தமிழகத்தில் பயிற்று மொழியாக நிச்சயம் இருக்கக்கூடாது, இருக்கவேண்டும் என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நானும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தரம் கெட்டுவிடும் தமிழில் படித்தால் என்று சொல்கிறார்கள். எப்படி தரம் கெட்டுவிடும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆங்கிலத்தில் படித்தால் மட்டும் எப்படி தரம் உயர்ந்துவிட முடியும் என்று நினைக்கிறார்கள்? ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிவிட்டால், அது தரம் உயர்ந்ததா? தமிழிலே சரளமாகப் பேசிவிட்டால் தரம் தாழ்ந்ததா? யார் அதை ஏற்றுக் கொள்ள முடியும்? கருத்து என்ன, எந்த அளவுக்குப் பொது அறிவு பெற்று இருக்கிறார்கள், எந்த அளவுக்கு வளர்ச்சி உற்றிருக்கிறார்கள், எந்த அளவுக்கு அறிவு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை வைத்துத் தான் தரத்தை கணிக்கவேண்டுமே தவிர எந்த மொழியில் தாராளமாக, சரளமாக பேசுகிறார்கள் என்பதை



வைத்து, நாம் தரத்தை கணித்துவிட முடியாது. ஆகவே, தரம் எந்த வகையிலும் கெட்டுவிடாது தமிழில் படித்தால். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியாதவர்கள் அறிவிலே குறைந்தவர்கள் என்ற கருத்து அந்த நாள் முதற்கொண்டு ஒரு சிலரிடம் இருக்கக் கூடிய கருத்து. அந்தக் கருத்தை தயவுசெய்து அவர்கள் விட்டுவிட வேண்டும். ரஷ்யாவில் ஆங்கிலத்தில் படிக்கவில்லை. அமெரிக்காவில் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள். அமெரிக்கர்கள் நிலவு உலகில் ஆளைக் கொண்டு போய் இறக்கினார்கள் என்றால், ருஷ்யர்கள் ஒரு ஜீப்பையே இறக்கியிருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலத்தில் படித்தால் தான் அறிவு வளரும் என்பதல்ல. ரஷ்ய மொழியிலே பயின்ற ருஷ்யர்கள் விஞ்ஞானத்திலே வளர்ச்சியுற்றிருக்கிறார்கள். உலக நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்கும் பொழுது விஞ்ஞான வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி ஆங்கிலத்தின் அடிப்படையிலே வளர்ந்திருக்கிறது என்ற பேச்சு உண்மைக்கு புறம்பானது என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமக்கு என்று ஒரு மொழி இருக்கிறது. அது தமிழ் மொழி. தமிழ் மூலம் அறிவைப் பெற முடியாது என்று யாராவது நினைத்தால், நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளும் நிலை தான் அது. அந்த நிலை தமிழகத்தில் இல்லை. நாம் அறிவைப் பெற முடியும் தமிழில். நாம் வளர்ந்திருக்கிறோம். தமிழும் வளர்ந்திருக்கிறது. ஆகவே, தமிழைப் பயிற்சி மொழியாக அனைத்துக் கல்லூரிகளிலும் கொண்டு வரவேண்டும். அரசாங்கக் கல்லூரிகளில் மட்டும் என்பது அல்ல, தனியார் கல்லூரிகளில் மட்டும் என்பது அல்ல, எல்லா வகையான கல்லூரிகளிலும், இன்னும் சொல்லப்போனால் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற இடங்களிலும் தமிழ் மொழியிலேயே பயிற்றுவைக்க ஏற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சுதந்திர நாட்டில் வேற்று மொழியை பயிற்சி மொழியாக வைத்துக்கொள்வதை விட கீழ்த்தரமானது வேறு எதுவுமில்லை. ஆகவே, தாய் மொழியாகிய தமிழையே பயிற்சி மொழியாக்குவதற்கு உடனே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்பதை முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இந்தத் தீர்மானத்திற்கு டாக்டர் ஹாண்டே அவர்களும் திரு. மார்டின் அவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது. சம்பிரதாயத்திற்காக ஒரு திருத்தம் கொடுத்திருப்பதாகவும், தீர்மானத்தை எதிர்க்கவேண்டும் என்பது இல்லாவிட்டாலும், அப்படித்

[திரு. என். சங்கரய்யா] [1970 நவம்பர் 30

திருத்தம் கொடுக்காவிட்டால் அம்மாதிரி எதிர்த்துப் பேசுவதற்கு சட்டசபையில் அருகதையில்லை என்பதற்காகத் தான் திருத்தம் வந்திருக்கிறது என்று சொன்னார். அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதையும், நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய விவாதத்தில், நம்மிடையே உள்ள பிரச்னை என்னவென்றால், ஆங்கிலத்தை தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒரு பாடமாக, ஒரு மொழிப் பாடமாக வைத்திருக்கிறார்கள். உண்மையிலே சொல்லப் போனால் மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளவேண்டிய அளவுக்கு அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது தான் என்னுடைய கட்சியின் நிலை. ஏற்கனவே பல நண்பர்கள் குறிப்பிட்டது போல இண்டர் நேஷனல் லாங்குவேஜ், சர்வதேச மொழி ஆங்கிலம் என்பது சரி யான நிலை அல்ல. எனக்கு முன்னால் பேசிய நண்பர் அரங்கண்ணல் அவர்கள் இத்தாலியிலும், பிரான்சிலும் ஆங்கிலம் பேசுபவர்களை தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார். அவரவர்கள் அந்தந்த நாட்டு மொழியில் கற்றுக்கொண்டிருக்கிறார் கள். கிழக்கு ஐரோப்பா நாடுகளிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் ஆங்கிலத்தின் உபயோகம் மிகக் குறைவு. ஆகவே, உலகத்திலுள்ள அதிகப்படியான மக்களால் பேசப்படுகின்ற பல மொழிகளில் ஆங்கிலமும் ஒன்று என்று சொல்லக்கூடிய நிலையில் அதை ஒரு பாட மொழியாக கற்றுக்கொள்ளலாம். உண்மையைச் சொல்லப் போனால் இன்றைய காலைப் பத்திரிகையில் இந்தியன் எக்ஸ்பிரசில் பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள் கொடுப்பது சார்பாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் திரு. கோத்தாரி அவர்கள் ஆங்கில மொழி ரஷ்ய மொழி ஆகிய இரண்டு மொழிகளும் லைப்ரரி லாங்குவேஜ் என்ற காரணத்தினால், இரண்டு மொழிகளையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது. ஆங்கிலம் ஒரு மொழியை மட்டும் கல்லூரிகளில் விசேஷமாகப் படிப்பது பயன் படாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஆங்கில படையெடுப்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் துரதிருஷ்டவசமாக நம்முடைய பிரம் மாண்டமான சரித்திரத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு களங்கம் அது. ஒரு சில நூற்றாண்டு காலத்தில் இந்திய நாட்டில் பல்வேறு மாநிலங் களில் நாம் அன்னிய ஆட்சிக்கு அடிமைகளாக இருந்த காலத்தில், ஆங்கிலம் இந்த நாட்டு மக்களிடையே திணிக்கப்பட்டது. எதாவது திணிக்கப்பட்டது என்று சொன்னால், எதாவது திணிப்பது நடந் தது என்று சொன்னால், வரலாற்றுக்குரிய கலாசாரம் நிறைந்த பல் வேறு மொழிகளைக் கொண்ட இந்திய நாட்டில் ஆப்பாக்கி முனையில் நாட்டு மக்களிடையே திணிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி ஆங்கிலம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.



[1970 நவம்பர் 30] [திரு. என். சங்கரய்யா]

சொல்லப்பட்டது, இன்று உலகத்திற்கு இந்த 1, 2, 3 என்ற இலக் கங்களைக் கொடுத்தது அரேபியாதான் என்று. இந்த பூஜ்யம் என்கிற கருத்தோட்டத்தையே இந்திய நாடுதான் உலகத்திற்குக் கொடுத்தது. இதை யெல்லாம் ஆங்கிலத்தில் படித்துத்தான் இந்தி யாவும், மற்ற மற்ற நாடுகளும் தெரிந்துக் கொண்டனவா? ஆங்கி லத்தில் படித்தவர்களா தஞ்சை பெரிய கோபுரத்தையும், அதே போல் திருச்சியில் கல்லணையையும், மதுரையில் கோபுரங்களையும் கட்டினார்கள்? அதையெல்லாம் விட சமீபத்தில் குமரி முனையில் விவேகானந்தருக்கு சின்னம் எழுப்பினார்களே அதை நிர்மாணித்த வர் தேவகோட்டையைச் சேர்ந்த, கல்விபயிலாத, ஆங்கிலம் படிக்காத, தமிழிலேயே படித்து தன் அனுபவத்தைக் கொண்டு பிரமாண்டமான கட்டடத்தை நிர்மாணித்திருக்கிறார்கள். ஆகவே ஆங்கிலம் படித்தால்தான் முடியும் என்கிற வாதம் சரியானதல்ல.

நண்பர் மாரிமுத்து சொன்னார்கள். ரஷ்யாவிலே இருக்கிறவர் களில் ஆங்கிலம் படித்தவர்கள் மிகக் குறைவானவர்கள்தான். பெரும்பான்மையோர் தங்கள் தாய் மொழியிலேயே படித்தவர்கள் தான். அவர்கள்தான் இன்றைக்கு விண்வெளியில் இயந்திரத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஜெர்மனியிலே, ஜப்பானிலே மற்ற மற்ற நாடுகளிலே தங்கள் தங்கள் மொழியிலேயேதான் படிக்கிறார்கள். இந்தியாவிலேயே பிற மாநிலங்களில் என்ன நடக்கிறது? இன் றைக்கு ஆயுர்வேதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய சித்த வைத்தியத்தையும், சித்தர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். சித்த வைத்தியத்தை தமிழிலேதானே சொன்னார்கள் நம் சித்தர் கள். சித்த வைத்தியத்தை அலோபதியோடு ஒப்பிட்டுப்பார்த்தால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் நாட்டில், தமிழ் மொழியில், ஆங்கில மொழி அறிவு இல்லாமலேயே, உடல் கூறு அமைப்புக்களைப் பற்றி எவ்வளவு தெளிவாக விரிவாகச் சொன்னார்கள்? ஆகவே, ஆங்கில மொழியிருந்தால்தான் கணி தத்தையும், விஞ்ஞானத்தையும் படிக்க முடியும் என்பது சரியானது ஆகாது.

அடுத்த பிரச்சினை, இதில் அரசியல் கண்ணோட்டம் காட்டுவது. மதுரையில் தமிழ் வளர்ச்சி மாணவர் கூட்டத்தில் தீர்மானித்தது பயிற்று மொழி என்ன என்று தீர்மானிப்பது மாணவர்களுக்கே விட்டுவிடவேண்டும் என்பது. கடந்த 22 ஆண்டு காலமாக ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சி உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்தான் போதனா மொழி என்று ஏற்படுத்திய பிறகு, அதன் காரணமாக பல லட்சக்கணக்கான மாணவர்கள், மாணவிகள் தமிழ் மொழியிலே எல்லாப்பாடங்களையும் பயின்றுவிட்டு, உயர்ந்த மார்க்குகளை வாங்கி இருக்கும் இந்த நிலையில், கல்லூரிகளில் தமிழ் மொழி போதனா மொழியாக வேண்டும் என்பது அதன் விஸ்தரிப்பேஅல்லாமல் வேறு அல்ல. இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் களும், சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர்களும் சிந்தித்துப்பார்த் தால் தெரியும். பல ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கிலத்திற்கு மரண

[திரு. என். சங்கரய்யா] [1970 நவம்பர் 30

அடி கொடுத்தாகிவிட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் போதனை மொழி தமிழ் என்று ஏற்பட்டதுமே, அதனுடைய விஸ்தரிப்பாக கல்லூரிகளில் போதனை மொழியாக தமிழ் வரவேண்டும் என்பதுதான் இயல்பு. இருக்கும் சிக்கல் என்னவென்றால், துணிச்சலாக கல்லூரிகளிலும், தமிழையே போதனைமொழியாக ஆக்கிவிட்டால் தெளிவாகிவிடும். உயர்நிலைப் பள்ளிகளில் போதனை மொழி தமிழாக ஆனபிறகு, மாணவர்களுடைய குறை என்ன ? பள்ளியில் தமிழ் போதனை மொழியாக இருந்து, திடீரென்று கல்லூரியில் ஆங்கிலம் இருப்பது சங்கடமாக இருக்கிறது என்பது.

வேலை வாய்ப்பு பற்றிச் சொல்லப்பட்டது. ஆங்கிலத்தில் பாட மொழிகளைப் பயின்று விட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்துவிடுமா ? இந்தி போதனை மொழியாக ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்து விடுமா ? இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடியைப் பற்றியது. மொழியால் இல்லை. ஆகவே, நண்பர் மார்ட்டினும், டாக்டர் ஹாண்டேயும் கூறுவது சரியானது அல்ல. இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் லட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலேயே ஆங்கிலத்தில் படித்தவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, வேலையில்லாத பிரச்சினைக்கும் மொழிக்கும் சம்மந்தமே இல்லை. தைரியமாக அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் தமிழைப் போதனை மொழியாக ஆக்கினால், அப்படிப் பட்ட உறுதியான முடிவை எடுத்தால்தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

வெளிமாநிலங்களில் வேலை வாய்ப்புப் பற்றிச் சொல்லப் பட்டது. வெளி மாநிலங்களில் என்ன நடக்கிறது ? பீகாரில் உயர் நீதி மன்றத்தில் இந்தி மொழியே நீதிமன்ற மொழியாக ஆக்கப் பட்டிருக்கிறது. ஏன், சுப்ரீம் கோர்ட்டிலேயே நீதிமன்ற மொழி இந்தி மொழியாக்க வேண்டும் என்று சிலர் வற்புறுத்தினார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் உயர்நீதி மன்ற மொழியாகவும் பாட மொழியாகவும், அரசாங்க அலுவல் மொழியாகவும் அந்த, அந்த பிராந்திய மொழிகள் வரும்போது, ஆங்கிலத்திற்கு ஏது இடம் ? இன்னும் பத்து ஆண்டு காலங்கழித்து பம்பாயில் வேலை வேண்டும் என்றால், மகாராஷ்ட்ரம் படித்திருக்கவேண்டும். பத்து ஆண்டு காலங்கழித்து வங்காளத்தில் வேலை வேண்டும் என்றால், வங்காளி படித்திருக்க வேண்டும். பத்து ஆண்டு காலங்கழித்து தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பு வேண்டுமானால் தமிழ் பயின்று இருக்க வேண்டும். ஆகவே, ஆங்கிலம் கற்பதனால் இனிமேல் நடக்காது எந்தக்காரியமும்.

தமிழ் நாட்டில் சொல்ல வேண்டுமானால், நீதி மன்றத்திலும், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலும், உயர் நீதி மன்றத்திலும், மொழி தமிழ் மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று செய்தால்தான்



1970 நவம்பர் 30] [திரு. என். சங்கரய்யா]

இதர மொழிகளுடைய ஆதிக்கம் இங்கே ஏற்படாமல் பார்த்துக் கொள்ளமுடியும். இன்றைக்கு பொதுமொழி ஆங்கிலம் என்று ஏற்றுக் கொண்டால், அந்த அளவுக்கு இந்தி ஆதிக்கத்திற்கு இடம் ஏற்படும். அதற்குப் பதிலாக பிரதேச கல்லூரிகளில் பிரதேச மொழிதான் போதனை மொழி, பாடமொழி என்று ஏற்பட்டால்தான், பிராந்திய மொழி, நீதிமன்ற மொழியாக ஏற்பட்டால்தான், அரசாங்க அலுவல் மொழியாக ஏற்பட்டால்தான் மக்களுக்கு நலன் ஏற்படும். நண்பர் மாரிமுத்து சொன்னது போல், ஆங்கிலம் படித்தவர்கள் எத்தனை சதவிகிதம் ? இரண்டு சதவிகிதம். தமிழகத்தில் பாதிக்கு மேற்பட்டவர்கள் தமிழே இன்னும் படிக்கவில்லை. மற்ற மாநிலங்களிலும் அதிகம் படித்தவர்கள் இல்லை. இந்த நிலையில் ஆங்கிலத்தைப் பேசுவதானால், நமக்கும் ஜனநாயகத்துக்கும் ரொம்ப தூரம் இருக்கிறது என்று அர்த்தம்.

முன்காலத்தில் நம்முடைய அரசர்கள் நீதி மன்றங்களை நடத்தவில்லையா ? தூரதேசங்களுக்குச் சென்று வியாபாரக் கப்பல்களைக் கொண்டு வாணிபம் செய்யவில்லையா ? மக்கள் மொழியில்லாததை நாம் வற்புறுத்தினால், அது ஜனநாயகத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகாது.

இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். நாளைக்கு நண்பர் விநயகம் தேர்தல் பிரசாரத்தில் ஆங்கிலத்தில் பிரசாரம் செய்வார்களா ? (சிரிப்பு) அதற்கு மட்டும், அப்பொழுது மட்டும் தமிழிலே நன்றாகப் பேசக்கூடியவர்கள் யார் யார் என்று வேட்டையாடுவார்களே ? ஏன் ? ஆகவே, இப்பொழுது கூறப்படுவது அவர்களுடைய செயற்கைப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, யதார்த்த ரீதியில் பேசுவது அல்ல.

இன்றைக்கு தமிழ் நாட்டு அரசாங்கம் தமிழ் நாட்டு சட்ட மன்றத்தில் மசோதாக்களை ஆங்கிலத்தில் கொடுக்கிறார்கள். அதை எத்தனையோ அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவேதான் மசோதாக்கள் மேல் அதிகப்படியான நேரிடையான விவாதத்தில் பங்குகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இந்தச் சட்ட வரைவுகள், இன்னும் திருத்தங்கள் தமிழில் கொடுத்து, ஏற்கப்பட்டால், தமிழகத்து சட்ட மன்றத்தில் விவாதங்கள் பிரம்மாண்டமான அளவில் முன்னேறும்.

இன்றைக்கு இருப்பது நடுத் தண்ணீரில் நிற்கும் நிலை. உயர்நிலைப் பள்ளிகளில் போதனைமொழி தமிழ். கல்லூரிகளில் பூராவாக இல்லை; அரசாங்கத்தின் இலாகாக்களில் பூராவாக இல்லை. நீதி மன்றங்களில் இல்லை. இந்த நிலை மாறினால் தான், ஜனநாயக ரீதியில் இருக்கும். ஆகவே, இந்தக் காரணங்களைக்கொண்டு, எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா அரசாங்க அலுவலகங்களிலும்,

நீதிமன்றங்களிலும் தமிழையே மொழியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, திரு. ம. பொ. சிவஞானம் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் தைரியமாக, உறுதியாகச் செயல் பட வேண்டும். ஆங்கிலம் கற்ற சில பெரும் பணக்காரர்களுக்காக, ஐ.ஸி.எஸ். காரர்கள், கடந்த கால மோகத்தில் இருந்த ஒரு சிலருடைய சௌகரியத்திற்காக தயக்கம் காட்டாமல், உறுதியாக தமிழ் போதனா மொழி என்று எல்லாக் கல்லூரிகளிலும் விரைவாகக் கொண்டு வரவும், நம்முடைய சட்ட மன்றத்தில் தமிழிலேயே நடவடிக்கைகள் நடைபெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன்.

பி.ப. 1-00 **திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை என்னுடைய கட்சி சார்பிலே வரவேற்று, சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றப்பட்டு, தற்போது முழுக்க முழுக்க தமிழர்களுடைய ஆட்சியாக நடைபெற்று வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே ஆங்கில மொழிதான் பாட மொழியாக, போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு சாரார் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கில மொழியை ஆதரிக்கக்கூடியவர்கள் தொன்றுதொட்டு காலமாக ஆங்கில ஆட்சியையே ஆதரித்தவர்கள். இந்த நாடு ஆங்கிலேயர்களால் அடிமைப் பட்டிருந்த காலத்தில்தான் ஆங்கில மொழி, அடிமை மொழி புகுத்தப் பட்டது. "ஆங்கில மொழி மிக அடிமையான மொழி" என்பதை மகாத்மா காந்திஜி அவர்களே கூறியிருக்கிறார்கள்.

ஆங்கில மொழிதான் பாட மொழியாக, போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று ஒரு சாரார் சொல்லுகின்ற இந்த நேரத்தில், தமிழகத்தில் இருக்கின்ற மக்கள் நூற்றுக்கு நூறு பேர் தமிழைப் படித்துவிட்டார்களா என்று பார்த்தால், தமிழையே படிக்காதவர்கள் வெகு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, தமிழர்கள் சகல விஷயங்களையும் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், தங்களுடைய தாய்மொழியான தமிழ் மொழி மூலமாகத்தான் புரிந்துகொள்ள முடியும். அதற்காகத்தான் தமிழைப் பாட மொழியாக, போதனா மொழியாக ஆக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு அரசாங்கம் முயற்சி செய்து அரசாங்கக் கல்லூரிகளில் தமிழைப் போதனா மொழியாக வைத்து இருக்கிறது.



ஆனால், தற்போது தனியார் கல்லூரிகளில் ஆங்கிலத்தைப் போதனா மொழியாக வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக நம்முடைய மாணவர்கள், 'ஆங்கிலம் படிக்க வில்லையென்றால் எதிர் காலத்தில் நமக்கு வேலைவாய்ப்பு கிடைக்காதோ' என்ற ஐயப்பாட்டுடன், ஆங்கிலம் போதனா மொழியாக உள்ள கல்லூரிகளை நாடிச் செல்லுகிறார்கள். ஆங்கிலம் படித்தால்தான் வெளி இடங்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகள் போன்ற இடங்களுக்குச் சென்றாலும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணம் மாணவர்களின் மத்தியில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஐயப்பாட்டை முதலில் நீக்கவேண்டும்.

இன்றைக்கு தமிழிலே படிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை அரசாங்கம் ஏற்படுத்தித் தருவதன் மூலமாகத்தான், மாணவர்கள் தமிழ் மொழியை தாய் மொழியை விரும்பிப் படிக்கின்ற நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் தமிழ் படிப்பவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இதைத் தமிழர்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள். இவ்வாறாக படிப்படியாக எல்லாவற்றையும் தமிழிலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டிலே இன்னும் ஆங்கில அடிவருடிகள் இருக்கிறார்கள். இன்னும் சில அடிமைகள் இருக்கிறார்கள், இன்னும் சில பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள், இன்னும் சில பணக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தான் ஆங்கிலம் போதனாமொழியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பணக்காரர்களுடைய ஆதரவு தங்களுடைய கட்சிக்கு வேண்டுமென்பதற்காக சில அரசியல் கட்சிகள் ஆங்கிலத்திற்காக வாதாடி வருகிறார்கள். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழக அரசு தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஆட்சிமொழியாக எல்லா நிர்வாகங்களிலும் தமிழை ஏற்படுத்த வேண்டும். தற்போது சில நிர்வாகங்களில்தான் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டு வருகிறது. எல்லா நிர்வாகங்களிலும் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும்.

கிராமப்புறங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் ஆங்கிலம் படித்தவர்கள் அல்ல. தமிழ்தான் அவர்கள் படித்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது பஞ்சாயத்து தலைவர்களாக இருக்கிறார்கள், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளாக இருக்கிறார்கள், பல்வேறு நிர்வாகங்களில் பங்கேற்று இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திலிருந்து வரும் உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தமிழில் இருந்தால் அதை அவர்கள் படித்துத் தெரிந்துகொண்டு மேலும் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கும். அரசாங்க உத்தரவுகள் ஆங்கிலத்தில் இருப்பதால், அவர்கள் ஆங்கிலம் படித்தவர்களைத் தேடி அலைய வேண்டிய துரதிருஷ்டமான நிலைமை தமிழகத்தில் இருந்துகொண்டிருக்

கின்றது. ஆகவே, தமிழகத்தில், தமிழில்தான் எல்லா உத்தரவுகளும் அனுப்பப்பட வேண்டும், எல்லா நிர்வாகங்களிலும் தமிழ்தான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழைப் போதனை மொழியாக எல்லா கல்லூரிகளிலும் கொண்டு வரவேண்டும். தனியார் கல்லூரிகளில், தமிழை போதனை மொழியாகக் கொண்டு வராமல் பிடிவாதமாக ஆங்கிலத்தையே போதனை மொழியாகக் கொண்டு வந்தால், அப்படிப்பட்ட நேரத்தில், ஒரு அவசரச் சட்டத்தையாவது கொண்டு வந்து 'தமிழ்தான் கல்லூரிகளில் போதனை மொழியாக இருக்க வேண்டும்' என்று உத்தரவிட வேண்டும். அந்த உத்தரவிற்கு தனியார் கல்லூரிகள் கட்டுப்படவில்லை யென்றால், அரசாங்கம் அப்படிப்பட்ட கல்லூரிகளை ஏற்று நடத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழிலே நடத்தப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ் இருக்க வேண்டும். அவ்வாறு தமிழ் நீதிமன்ற மொழியாக இருப்பதன் காரணமாக, சாதாரண ஏழைகள், தமிழ் படித்தவர்கள் நீதிமன்றங்களில் வழக்குகள் எப்படி நடத்தப்படுகின்றன, எப்படி தீர்ப்பு அளிக்கப்படுகிறது, தங்களுடைய வழக்கறிஞர்கள் தங்களுக்காக எப்படி வாதாடுகிறார்கள் என்பதைப் பார்த்து புரிந்துகொள்ள முடியும். ஆகவே, நீதிமன்றங்களில் எல்லா நிலைகளிலும் தமிழைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சகல கல்லூரிகளிலும் தமிழ்தான் போதனைமொழியாக இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். தமிழ் எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் இருக்க வேண்டும். நண்பர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானம் அந்த வகையில் அமைந்திருப்பதால், இந்தத் தீர்மானத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவை முன் வைத்திருக்கும் தீர்மானத்தையொட்டி கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மொழிப் பிரச்சினையை எதிர்க்கட்சிக்காரர்கள்—அதிலும் சிண்டிகேட்— சுதந்திரா கட்சிக்காரர்கள்—இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி லாபம் தேடலாம் என்று எண்ணிக்கொண்டு நாட்டிலே கடந்த ஆறுமாத காலமாக பேசி வருகின்ற பேச்சுக்கள் ஒரு குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இதிலே லாபம் இல்லை. எங்களுடைய கருத்தைச் சொல்ல எங்களுக்கு



உரிமை இல்லையா ? 'தங்களுடைய லாபத்தைப் பெறுவதற்காகத் தான் அவர்கள் முன்பு தமிழ் தமிழ் என்று பேசி வந்தார்கள்' என்று நாங்கள் சொல்லலாம் அல்லவா ?

**திரு. நா. வீராசாமி :** நாட்டுப் பற்று அற்றவர்கள், மொழிப் பற்று அற்றவர்கள் இங்கே அமைதியாக ஆட்சி நடக்கிறதே என்று கொஞ்சம் வயிற்றெரிச்சலோடு பேசுகிறார்கள். தமிழகத்தில் நிம்மதியான ஆட்சி நடக்கிறதே, மொழிப் பிரச்சினையை வைத்து கலவரத்தை உண்டாக்கி, இந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, மொழிப் பிரச்சினையை வைத்து கலவரம் உண்டாக்கியது நீங்கள்தான். நாங்கள் அல்ல.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இறுதியிலே தங்களுடைய கருத்தைச் சொல்ல இருக்கிறார்கள். அப்போது தங்களுடைய கருத்தைத் தாராளமாகச் சொல்லட்டும்.

பொதுவாக, எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், விஞ்ஞானத்திலும், வேறு பல துறைகளிலும் தங்களுடைய தாய்மொழியின் மூலமாகத்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஜெர்மனியிலும் அப்படித்தான், ரஷ்யாவிலும் அப்படித்தான் விஞ்ஞானத்தில் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டிலே, 'தமிழ்' என்று சொன்னவுடனே 'அலர்ஜி' ஏற்பட்டுவிடுகிறது. இந்தத் தமிழ் மொழியைக் காப்பாற்ற, தமிழ் மொழியைப் பாதுகாக்க, தமிழ் மொழியைப் பாட மொழியாக ஆக்க, ஆட்சியில் இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு பெரிய வரலாற்றைப் படைத்தவர்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்திருக்கக் கூடும். 1939-லிருந்து, தமிழ் இந்த நாட்டிலே அரியாசனம் ஏற வேண்டுமென்பதற்காக தியாகம் செய்தவர்கள், உயிர்நீத்தவர்கள் மிகப் பலர். பலபேர்கள் சிறை சென்றனர். 1965-ல் எப்படியும் இந்தி இந்த நாட்டில் வந்துவிடுமோ, தமிழுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்பதற்காக எத்தனையோ தோழர்கள் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். கோடம்பாக்கத்திலே அரங்கநாதன், திருச்சியிலே சின்னச்சாமி போன்றவர்கள் தங்களுடைய உடலிலே பெட்ரோலை ஊற்றிக்கொண்டு தீ வைத்துக்கொண்டு, 'இந்தி ஒழிக', 'தமிழ் வாழ்க' என்று கூறிக்கொண்டே தங்கள் உயிரை மொழிக்காக கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்துவிட்டாரோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை.

இன்றையதினம் தமிழைப் பாட மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் சிலர் பிரச்சினையை உருவாக்கியிருக்கிறார்கள். ஏதோ இந்த நாட்டில் தமிழில் மட்டும் பாடம் சொல்லிக்கொடுப்பது போலவும், ஆங்கிலத்தை இந்த நாட்டிலிருந்து விரட்டிவிட்டது போலவும் வேடம் போடுகிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எங்கே ஆங்கிலம் இல்லை? பி.யு.சி.யில் 70 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால் 20 ஆயிரம் மாணவர்கள் தான் தமிழைப் பாடமொழியாகக் கொண்டவர்கள். ஐம்பது ஆயிரம் மாணவர்கள் ஆங்கில மொழியில்தான் படிக்கிறார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்கிறேன். உங்கள் ஆட்சியில்தான் ஆங்கிலத்தை ஒழித்தீர்கள். இப்போது என்னமோ புதிதாக ஆங்கிலத்தில் காதல் கொண்டிருக்கிறீர்கள். 1948-ஆம் ஆண்டு அவிநாசிலிங்கம் செட்டியார் காலத்தில் என்ன சொன்னீர்கள்? 6-வது வகுப்புக்குக் கூட ஆங்கிலம் கிடையாது. ஏழாவது வகுப்பில்தான் ஏ,பி,ஸி,டி,-யே படிக்கவேண்டும் என்று செய்தீர்கள். அப்படி இருக்க இப்போது என்னமோ ஆங்கிலம் போய்விட்டது என்று உள்ளபடியே வேதனைப்படுவது போல வருணிப்பது, அதைத் தொடர்ந்து சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் காமராஜர் ஒரு புதிய குரலைக் கொடுத்துக்கொண்டும் இருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழைத் தவிர வேறு மொழிகள் எல்லாவற்றையுமே எடுத்துவிட்டது போலவும் ‘ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டும்’ என்பதாக புதிதாக ஆங்கிலத்தில் காதல் கொண்டு காமராசர் இன்று மாணவர்களை அங்கங்கே கூட்டி கூட்டிப் பேசுகிறார்கள். நமது கல்வி அமைச்சர் அதுபற்றி தெளிவாக மாணவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறார். துணைவேந்தரும் எடுத்துச்சொல்லியிருக்கிறார். பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. ஆயினும் காமராசர் போகின்ற இடத்தில் எல்லாம் மாணவர்களைத் தூண்டிவிடுகிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: காமராஜர் தூண்டிவிடுகிறார் என்று எதற்காகச் சொல்லவேண்டும்? யார் மகாநாடு போட்டாலும் நாங்கள் பேசத் தயாராய் இருக்கிறோம். மகாநாடுகளில் பேசுவதற்கு உரிமையிருக்கிறது. தூண்டிவிடவேண்டியது ஒன்றும் இல்லை. தூண்டிவிட்டவர்கள் எல்லாம் நீங்கள்தான். தூண்டிவிடுகிற வேலை உங்களுடையது. நாங்கள் மாணவர்களை மதிக்கிறோம். அவர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கிறோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாணவர்கள் மதுரையில் கூடி எந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்களோ அதைத்தானா நீங்கள் இங்கே பிரதிபலிக்கிறீர்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்கள் கூடினார்கள். தீர்மானம் போட்டார்கள். அது அவர்களுடையது. நாங்கள் எங்கள் கருத்துக்களை எடுத்து இங்கே சொல்லக் கூடாதா? அவரவர்கள்





போடுகிற தீர்மானத்தின் நல்லது கெட்டதைப் பார்த்து நாங்கள் தீர்மானிக்க உரிமை இல்லையா? நீங்கள் மாணவர்கள் மகாநாட்டைக் கூட்டினீர்களே, 150 பேர்கள் வந்தார்கள். இங்கே இருபத்தையாயிரம் பேர்கள் வந்தார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாது திசை திருப்பாதீர்கள். மாணவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தைத் தான் நீங்கள் இங்கே பிரதிபலிக்கிறீர்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன்: திசை திருப்பிவிடுவது எங்கள் பழக்கம் அல்ல. லஞ்சம் வாங்குகிறார்களே என்றால் நீங்கள் வாங்கவில்லையா என்று திசைதிருப்பிவிடுவது உங்கள் பழக்கம் தான். அவன் வாங்கவில்லையா, இவன் வாங்கவில்லையா என்பது. நாங்கள் கூட்டிய மகாநாட்டுக்கு இருபத்தையாயிரம் பேர்கள் வந்திருந்தார்களே, நீங்கள் கூட்டிய மகாநாடுக்கு 150 பேர்கள் தானே வந்திருந்தார்கள், இதற்கு நேரிடையாகப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தி.மு.க மாணவர் சென்னையில் போட்ட மகாநாடு ‘செயல்வீரர்களை’ மட்டும் அழைத்துக் கூட்டியதாகும். நீங்கள் கூட்டியது மாணவர்கள் மகாநாடு என்ற பெயரால் சிண்டிகேட் காங்கிரஸ்காரர்களின் மகாநாடு ஆகும். அந்த விஷயம் எங்களுக்குத் தெரியாதது அல்ல. கூட்டம் கூட்டுகிற முறைகளையே நீங்கள் தான் எங்களிடம் இருந்து கற்றுக்கொண்டிருக்கிறீர்களே தவிர, நாங்கள் உங்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. நீங்கள், மாணவர்கள் போட்ட தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்பதுதான் என் கேள்வி.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்கள் போட்டிருக்கக் கூடிய தீர்மானம் இன்னது என்று தெரியாது எப்படிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது மதுரையில் மாணவர்கள் கூடி போட்டிருக்கக்கூடிய தீர்மானம் பயிற்சி மொழி இன்னது என்று தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய உரிமை மாணவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும், மாணவர்கள் அவர்கள் இஷ்டத்திற்கு பயிற்சி மொழியை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும் என்பதாகும். இதே தேசீய மாணவர் வளர்ச்சிக் குழுதான் 1968-ஆம் ஆண்டு சிவகங்கையில் கூடி, உடனடியாகத் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கவேண்டுமென்று சொன்னார்கள். நீங்கள் எதை ஆதரித்துப் பேசுகிறீர்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்களுடைய பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அவர்களுக்குத்தான் உரிமை உண்டு. மாணவர்கள் அவர்கள் இஷ்டம்போல் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு நாம் என்ன சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ரொம்ப நன்றி. 1968-இல் தீர்மானம் போட்டவர்கள் அவர்கள்தான் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்போதிருந்த சூழ்நிலையில் அப்படிப் போட்டார்கள். இப்போதுள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு இப்போது மாற்றிக் கொள்ள உரிமையில்லையா ? அப்போது நீங்கள் என்ன என்னவோ பேசினீர்கள். பேசினபடியே நடந்துவிட்டீர்களா ? ஒரு ஊருக்கு ஒரு வழியில் போகிறோம். அது தப்பான வழி என்றால் திரும்பி வரக்கூடாதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போது 1968-இல் அவர்கள் போட்ட தீர்மானம் தவறு, அதைத் திருத்திக்கொண்டு இப்போது தீர்மானம் போட்டிருக்கிறார்கள், இதைத்தான் ஏற்கிறோம் என்கிறீர்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 1968 தீர்மானமும் அப்படியே இருக்கிறது, 1970 தீர்மானமும் அப்படியே இருக்கிறது. நீங்கள் சொன்னதை எல்லாம் செய்து விட்டீர்களா ? கடல் பாசி அல்வா செய்வோம் என்றீர்களே, செய்துவிட்டீர்களா ? தேங்காய்நாரினால் ரப்பர் செய்வோம் என்றீர்களே, செய்துவிட்டீர்களா ? மான்செஸ்டர் கார்டியனுக்கு படி அரிசித் திட்டம் கொண்டுவருவதே எங்கள் நோக்கம் என்று பேட்டி கொடுத்தீர்களே, செய்துவிட்டீர்களா ? மேலும் கூடச் சொல்வீர்கள். அன்றைக்கு ராஜாஜி உங்கள் பக்கத்தில் இருந்தார். இன்றைக்கு எங்கள் பக்கம் வந்திருக்கிறாரே. ஏன் ? நீங்கள் செய்வது தவறு என்றால் திருத்திக்கொள்ள உரிமையில்லையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** படி அரிசிக்கும், மொழிப் பிரச்சினைக்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லை. இங்கே பேசப்படுகிற விஷயம் மொழிப்பிரச்சினை. கடல்பாசி அல்வாவும், தேங்காய்நார் ரப்பரும், மான்செஸ்டர் கார்டியனும் இங்கே பேசப்பட வேண்டியதில்லை. ஆயினும் நீங்கள் என்ன பேசினாலும் அவற்றை எடிட் பண்ணி போடுவதற்கு பத்திரிகைகளை வைத்திருக்கிறீர்கள். "கருத்திருமன் காரசாரமாகப் பேசினார்" என்றுபோட சிலபேர்கள் உங்களுக்கு இருக்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு மாணவர்கள் போட்ட தீர்மானம் என்ன ? மதுரையில் இப்போது போட்டிருக்கிற தீர்மானம் என்ன ? இரண்டுக்கும் முரண்பாடு இருக்கிறதே, நீங்கள் எதை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று கேட்கிறேன். நேரிடையாகச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பத்திரிகைகள் எல்லாம் உங்கள் பேச்சைத்தான் போட வேண்டுமா ? எங்கள் பேச்சைப் போடக் கூடாதா ? உங்கள் பேச்சை உங்கள் பத்திரிகைகளில் எல்லாம் எப்படிப் போடுகிறார்கள் என்று தெரியும். பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு மிரட்டுகிறீர்கள். பத்திரிகையில் வரவேண்டும்



என்பதற்காக நான் பேசவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன் நீங்கள் போட்ட தீர்மானங்கள் என்ன ஆயிற்று ? படி அரிசித் திட்டம் என்றால் அது உணவுப் பிரச்சினை. மெய்ப்பிரச்சினை. (ஒரே சிரிப்பு) சும்மா சத்தம் போடாதீர்கள். கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. கல் விழுந்ததே என்றால் அது சட்டம் அமைதி குலைந்திருக்கிற பிரச்சினை. யாரோ இரண்டுபேர்கள் அடித்துக் கொண்டார்கள் என்பதாக திசை திருப்பிவிடுவது நாங்கள் அல்ல. அன்றைக்கிருந்த நிலைமையில் அப்படித் தீர்மானம் போட்டார்கள். இன்றைக்குள்ள நிலைமையில் இப்படித் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அது தப்பு, இது தப்பு என்று சொல்வதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது ? அந்த உரிமை உங்களுக்கும் கிடையாது. இந்தி வேண்டாம் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். உத்தரப் பிரதேசத்தில் வேலை இருக்கிறது, அங்கே போங்கள் என்றும் நீங்கள் தானே சொல்கிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுரையில் கூடிய மாணவர்களுடைய தீர்மானம் அவரவர்கள் இஷ்டப்படி பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள மாணவர்களுக்கு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். இங்கே சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், தாம் கொடுத்திருக்கிற தீர்மானத்தில், அது கூடாது என்கிறார். அதனுடைய வாசகத்தில்

"மாணவர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் வகைசெய்வது நமது மாநிலத்தின் உயர் கல்வி முறையில் குழப்பம் விளைவதற்கு வழிவகுக்குமாதலால், நம் தாய் மொழியான தமிழையே தனியார், அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் படிப்படியாக பயிற்சி மொழி ஆக்குவதற்கு தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டும்".

என்பதாகச் சொல்லி தீர்மானத்தை திரு. ம. பொ. சிவஞானம் அவைமுன் வைத்திருக்கிறார்.

இப்போது சிண்டிகேட் காங்கிரஸ் தரப்பில் இருந்து இதற்குக் கொடுத்திருக்கிற திருத்தம் என்ன ? அந்தத் தீர்மானத்தின் கடைசியில் இவ்வாறு ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் போது "தமிழக மாணவர்களின் எதிர்காலமும் வேலைவாய்ப்பும் பாதிக்கப்படாமலிருக்க தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்" என்பதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் ஆகும்.

ஆக, திரு. ம. பொ. சிவஞானம் "மாணவர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிப்பது நமது மாநிலத்தில் உயர் கல்வி முறையில் குழப்பம் விளைவதற்கு வழிவகுக்குமாதலால்" என்று குறிப்பிட்டுச் சொல்கிற தீர்மானத்தை

"இவ்வாறு ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் போது" என்பதாகத் திருத்தம் கொடுத்திருப்பதில் இருந்தே திரு. ம. பொ. சிவஞானத்தின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டவர்களாகிறார்கள். அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறபோது, "தமிழக மாணவர்களின் எதிர்காலமும், வேலைவாய்ப்பும் பாதிக்கப் படாமலிருக்க தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாணவர்களுடைய கருத்துக்களை நாங்கள் பிரதிபலிக்கிறோம் என்றால் எங்கே பிரதிபலிப்பதாக ஆகிறது? மதுரையில் மாணவர்களைக் கூட்டி போட்ட தீர்மானத்தை மதுரை தமுக்கம் மைதானத்திலேயே நீங்கள் போட்டு விட்டீர்கள். மதுரை தெப்ப குளத்திலேயே அது மிதக்கிறது. அது இங்கே இல்லை உங்கள் திருத்தத்தில்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : 1960-லேயே நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே காங்கிரஸ் கட்சியினர் அதைச் செய்து விட்டுப் போனார்கள். அந்தப் பெருமைகூட எங்களுக்குத் தான். உங்களுக்கு இல்லை. ஆங்கிலம் படிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். வேலை வாய்ப்பு இருக்கிறதா? மக்களிடத்திலே தமிழை எதிர்க்கிறார் என்றெல்லாம் சொன்னால் அது பலிக்காது. தமிழும் வேண்டும், ஆங்கிலம் வேண்டாம், இந்தியும் வேண்டாம் என்று சொன்னால் நடுரோட்டிலே நிற்கிறதா? நாங்கள் பொறுப்போடு சொல்கிறோம். ஆங்கிலமும் தேவை. கட்டாயப் படுத்தக்கூடாது. தமிழும் தேவை. மாணவர்கள் அவர்களுடைய இஷ்டப்படி படிக்கின்ற சம சந்தர்ப்பம் இருக்க வேண்டும். நாங்கள் தமுக்கத்தில் விடவில்லை. தமுக்கம் அடிக்கவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியானால் நீங்கள் ஏன் சிலம்புச் செல்வர் கொடுத்த தீர்மானத்தை வழிமொழிந்து திருத்தம் கொடுத்திருக்கிறீர்கள்?

திரு. பி. ஜி. கருத்திருமன் : விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் நான் என்ன பண்ணுவது? கருத்து என்ன, உங்களுக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம். என்னுடைய தாய் பாஷை கன்னடம் ஐயா. நான் கம்பராமாயணம் எழுதினேன். ஆனால் என்னுடைய பையன் தமிழில் பாஸ் பண்ணவில்லை. பெயில் ஆகிறான். ஆங்கிலத்தில் பாஸ் பண்ணிவிட்டான். நான் என்ன பண்ணுவேன்?

அமைச்சர் பையன்கள் எல்லாம் ஆங்கிலம் படிக்கிறார்கள். காரணம் கேட்டால் இடம் இல்லை, ஆகவேதான் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எம்.பி., எம்.எல்.ஏ, அமைச்சர்கள் இவர்கள் பிள்ளைகள் எல்லாம் தமிழில் படிக்காமல், இங்கிலீஷ் மீடியம் படிக்கிறார்கள். இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். 17 பேர்கள் இந்தக் கிளாசில் இருந்ததால் அந்த கிளாஸ் நடைபெறவில்லை ஆகவே ஆங்கிலத்தில் சேர்த்தோம் என்று சொல்கிறார்கள். உங்கள் மாணவர்களை, உங்கள் பிள்ளைகளை ஏன் தமிழில் படிக்க வேண்டுமென்று சொல்லவில்லை? (குறுக்கீடு) அதெல்லாம் ஏமாற்ற வேண்டுமென்று. உங்கள் குழந்தைகளை ஏன் தமிழில் படிக்க வேண்டுமென்று சொல்லவில்லை? 'ஊருக்குத்தாண்டி உபதேசம் உனக்கில்லையடி கண்ணே' என்று சொல்வது போல் இருக்கிறது.



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இன்றைக்கு எதிர் கட்சித் தலைவர் விவேகானந்தா கல்லூரிக்குச் செல்லப்போகிறார். அங்கே என் மகன் ஸ்டாலின் தமிழ் மீடியம் படிக்கிறான் என்பதை அறிந்து கொள்வார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ரொம்ப நன்றி. என்னுடைய பையனுக்கு வரவில்லை. தமிழில் பெயில் ஆகிவிட்டான். ஆனால் ஆங்கிலத்தில் பாஸ் ஆகிவிட்டான். உங்களுடைய பையன் கெட்டிக்காரன். பாஸ் பண்ணிவிட்டான். அவரவர்களுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடவேண்டும். பெற்றோர்கள் இஷ்டத்திற்கு விட்டுவிடவேண்டும். மாணவர்கள் இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவரவர்களுடைய இஷ்டத்திற்கு, பெற்றோர்கள் இஷ்டத்திற்கு, மாணவர்களுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடவேண்டுமென்று எதிர் கட்சித் தலைவர் சொல்லுகிறார். ஆனால் மார்டின் அவருடைய திருத்தத்தை சிலம்புச் செல்வர் கொடுத்த தீர்மானத்தோடு இணைத்தால் என்ன ஆகும் என்று பார்க்க வேண்டும். இரண்டையும் இணைத்துப் படிக்கிறேன்.

"தமிழகத்தில் தமிழ் மொழியே பயிற்சி மொழியாகவும் பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டு கால வரைக்குள் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நமது சட்டப் பேரவையில் 1968 ஜனவரி 23-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டத் தீர்மானத்தை செயல் முறைப் படுத்தும் வகையில் அரசாங்கம் தயங்காது விரைவிலேயே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமெனவும், மாணவர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி பயிற்சிமொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் வகை செய்வது நமது மாநிலத்தின் உயர் கல்வி முறையில் குழப்பம் விளைவதற்கு வழி வகுக்குமாதலால், நம் தாய்மொழியான தமிழையே தனியார், அரசுக் கல்லூரிகளில் அனைத்திலும் படிப்படியாக பயிற்சி மொழி ஆக்குவதற்கு தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ளவும், இவ்வாறு ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும் போது தமிழக மாணவர்களின் எதிர்காலமும் வேலைவாய்ப்பும் பாதிக்கப்படாமலிருக்க தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த சபை தீர்மானித்திருக்கிறது."

இது மதுரையில் நீங்கள் மாணவர்கள் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு எதிராக உள்ளது. அங்கே மாணவர்களை ஏமாற்றி வேடம்போடுவது, இங்கே இப்படிப் பேசுவது, வேண்டாம் இந்த இரட்டை வேடம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இரட்டை வேடம் எல்லாம் நீங்கள் தான். எனக்குத் தெரியாது. ம. பொ. சி. தீர்மானத்தை நன்றாகப் பார்த்துப் பாருங்கள். நீங்கள் குழப்பத்தில் இருந்தால் நான் என்ன பண்ணுவது ? பாம்பும் சாகவேண்டும், தடியும் முறியக் கூடாது. வேலை வாய்ப்பும் இருக்கவேண்டும். தமிழும் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆங்கிலம் இருக்கக்கூடாது என்று சொன்னால் எப்படி முடியும்? குழப்பம் எங்களுக்கில்லை. உங்களுக்குத்தான். எங்களுக்கு ஒரே வேடம் தான். இரட்டைவேடம் கிடையாது. மக்களுடைய நன்மைக்காகத்தான், மாணவர்களுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறோம்.

திரு. ம. பொ. சிவஞானம் : என்னுடைய தீர்மானத்தில் குழப்பம் இருப்பதாக சொல்லுகிறார்கள். எந்தப் பகுதியை நீக்கவேண்டும் என்றோ அல்லது எந்தப் பகுதியைத் திருத்த வேண்டும் என்றோ சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் பொதுவாகச் சொல்வது சரியில்லை. ஒன்று திருத்தத் தீர்மானம் கொடுக்கத் தெரியாததால் வந்த தவறா? அல்லது திருத்தத் தீர்மானம் கொடுக்கத் துணிவு இல்லாததால் வந்த தவறா ?

திரு. பி. ஜி. கருத்திருமன் : யாருக்குத் தெரியாது என்பது தெரியும். அவர்களைப் போல மாறி, மாறி இருக்கிற புத்தி எனக்குக் கிடையாது. ஒரே நிலையாகத்தான் நான் இருக்கிறேன். எனக்கு ஒன்றும் குழப்பம் கிடையாது. என்னுடைய பதிலிலே நான் பேசும்போது எங்களுடைய திட்டம், எங்களுடைய கொள்கைகளை சொல்வதற்கு தயாராக இருக்கிறேன்.

வேலை வாய்ப்புக் குறையக் கூடாது என்றால், எப்படி இருக்க முடியும் ? நீங்கள் உங்கள் டிபார்ட்மெண்டிலே தமிழைக் கொண்டு வந்துவிட்டீர்களா, எல்லாம் தமிழாக ஆக்கிவிட்டீர்களா ? நீதிஸ்தலத்தை எல்லாம் தமிழாக ஆக்கிவிட்டீர்களா ? யாருடைய வேடம் நல்ல வேடம் யாருடைய வேடம் போலி வேடம் என்று மக்கள், மாணவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். இதை நாம் அரசியல் பண்ணவேண்டாம். யாருக்குக் குழப்பம் ? வேலை வாய்ப்பைப் பற்றித்தான் குழப்பம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குழப்பம் இல்லை என்றால் தேசியத்தமிழ் மாணவர் குழு என்பதை "மாணவர் காங்கிரஸ்" என்று மாற்றச் சொல்லி, காமராசர் கட்டளையிட்டாரே ஏன் ?





திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்களெல்லாம் மாற்றவில்லையா ? எதை எதை மாற்றினீர்கள். அப்பா, அம்மா வைத்த பெயர்களைக் கூட மாற்றிவிட்டீர்களே நாங்கள் மாற்றினால் தப்பு. நீங்கள் என்னென்ன மாற்றியிருக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாங்கள் வேறு சொற்களில் இருப்பதை தமிழில் மாற்றுகிறோம். ஆனால் நீங்கள் தமிழில் இருப்பதை வேறு சொற்களுக்கு மாற்றுகிறீர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது நாங்கள் பரந்த உள்ளம், சிறந்த லட்சியம் கொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. நீங்கள்தான் கிணற்றுத் தவளையாக இருக்கிறீர்கள். நாங்கள் பரந்து விரிந்து உலகமெல்லாம் இருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, காமராசர்தான் இரண்டு விதமான குரலில் பேசுகிறார் என்றால், எதிர்கட்சித் தலைவர் கூட. . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபையில் இல்லாத காமராசரைப் பற்றி ஏன் பேசுகிறார் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நீங்கள் கூட சபையில் இல்லாத ராஜாஜியைப் பற்றி எத்தனையோ முறை பேசியிருக்கிறீர்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்துப் பத்திரிகை இப்போதெல்லாம் எங்களை ஆதரிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியும்.

Kamaraj challtnged the D.M.K...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : படிக்காதீர்கள். அதன் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி : இந்திய அரசியல் சட்டத்தில் இந்திக்கு இருக்கிற இடத்தை, தி.மு.க. மத்திய அரசாங்கத்தை பயன்படுத்தி இந்திக்கு உள்ள சட்டத்தை திருத்துவதற்கு முயற்சிக்குமா ? என்று மாணவர்களிடையே பேசி இருக்கிறார். அடுத்த நாள் முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். "இந்தி ஒழிப்புச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஆதரிக்கும். தி. மு. க. காரர்கள் ஆகிய நாங்கள் அதைக் கொண்டு வருகிற நேரத்திலே சிண்டிகேட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை ஆதரிப்பார்களா ?" என்று கேட்டார்கள். இது வரையில் பார்த்தேன் பதிலே கிடையாது. தெளிவில்லாமல் காங்கிரஸ்காரர்கள், வெளியிலே ஒன்று பேசிக்கொண்டும் சட்டமன்றத்திலே ஒன்று சொல்லிக் கொண்டும் இருப்பது நாட்டுக்கும் நல்லதல்ல. மக்களுக்கும் நல்லதல்ல.

திரு. மார்டின் அவர்கள் பேசும்போது ஏதோ வேலைவாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேறு, நாட்டின் பயிற்சி மொழி என்பது வேறு. இரண்டையும் ஒன்றாக இணைப்பதற்கு மார்ட்டின் எங்கே படித்தார்கள் என்று தெரியவில்லை. அவர் ஒரு புள்ளிவிவரம் படித்தார்கள் என்னிடம் கூட புள்ளி விவரங்கள் இருக்கின்றன. எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்கள் 6 லட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதேபோல் பி.எஸ்சி., பி.ஏ., பி காம் படித்தவர்கள் 80 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். என்சினியர்கள், டிப்ளமோ ஹோல்டர்ஸ், பட்டதாரிகள் இவர்கள் 15 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) இவர்கள் எல்லாம் படிக்கும்போது அந்தப் பாடங்களை ஆங்கிலத்தில் தான் படித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தொடர்ந்து அடுத்த தனியார் அலுவல்கள் நாளன்று பேசுவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் 2—12—1970 அன்று காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பி.ப. 1-30 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 9. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. Statutory Rules and Orders.

121. Notification issued with G.O. Ms. No. 2415, Agriculture, dated the 22nd August 1970, in regard to establishment of Chingleput Market Committee for regulation of trade in respect of groundnut and appointment of members of the Committee. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Market Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

122. Notification issued with G.O. Ms. No. 1545, Home, dated the 2nd July 1970, in regard to amendment to Home Department Notification, relating to Rent Controllers and Appellate Authorities under the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act 1960 (Tamil Nadu Act 18 of 1960). [Laid on the Table of the House under section 34(4) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960).]

123. Notification issued with G.O. Ms. No. 2172, Agriculture, dated the 24th July 1970, in regard to amendment to rule 96 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



124. Notification issued with G.O. Rt. No. 1757, Revenue, dated the 7th October 1970 in regard to exemption from liability to entertainments tax, the Cinematograph film show on 29th October 1970 at Shanthi Theatre, Madras in aid of Air Men's Welfare Fund. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

125. Notification issued with G.O. Ms. No. 2303, Agriculture, dated the 6th August 1970, in regard to establishment of regulated market at Tirunelveli to provide facilities for the purchase and sale of paddy. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets, Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

126. Notification issued with G.O. Ms. No. 641, Agriculture, dated the 4th March 1969, in regard to market and notified market area at Kalliakkavillai in the Kanyakumari district. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

127. Notification issued with G.O. Ms. No. 2288, Agriculture, dated the 6th August 1970, in regard to establishment of regulated markets in North Arcot district to provide facilities for the purchase and sale of gingelly, sugarcane and jaggery in all forms. [Laid on the Table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

128. Notification issued with G.O. Ms. No. 1526, Rural Development and Local Administration, dated the 10th August 1970, in regard to certain amendments to the Tamil Nadu Public Buildings (Licensing) Rules, 1966. [Laid on the Table of the House under section 25(4) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act, 1965 (Tamil Nadu Act 13 of 1965).]

#### B. Reports, Notifications and Other Papers.

@ 26. The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) with annexure.

@ 27. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1970 (L.A. Bill No. 40 of 1970).

---

@ Despatched to Members on 27th November 1970.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### புதன்கிழமை, 1970 டிசம்பர் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### I. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 81, 82, 83 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Period of approval for school text books*

* 84 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Tamil Nadu Government had decided to limit to one year only the period of approval for school text books submitted to the Text Book Committee in 1970?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

*Report of Committee on untouchability*

* 85 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to place a copy of the Elayaperumal Committee's report on untouchability sent to State Government by the Central Government on or about 1969–70?

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU: The report contains 431 pages and it is a priced publication. Only fifty copies of the report are available. Two copies of the report have been placed in the Assembly Library. It is not, therefore, proposed to place the report on the table of the House.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இளையபெருமாள் கமிட்டி அறிக்கையை அவைமுன் வைக்க முடியாத நிலை இருந்தாலுங் கூட, சட்டசபை உறுப்பினர்களாவது ஓரளவு தெரிந்துகொள்வதற்கு கொஞ்சம் அருள்கூர்ந்து இனிமேலாவது அவர்களுக்கு அந்த அறிக்கையைக் கொடுக்க அரசுக்கு யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அசெம்பிளி லைப்ரரியில் அந்தப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. தேவையான மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு போய் அதுபற்றித் தெரிந்து கொள்ளலாம்.

[1970 டிசம்பர் 2

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இளைய பெருமாள் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற முக்கியமான அம்சங்கள் என்ன என்று அமைச்சரவர்கள் கூற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 186 பரிந்துரைகள் அனுப்பியிருக்கிறார்கள். பொருளாதாரம், கல்வி இவற்றில் முன்னேற்றம் அடையச் செய்வது; தீண்டாமையை ஒழிப்பது ஆகியவற்றைப்பற்றியெல்லாம் வரையறுத்து சில திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தீண்டாமை ஒழிப்பைப்பற்றி அவர்கள் முக்கியமாகப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி நமது மாநில அரிசன நலத் துறை அமைச்சர், சட்ட இலாக்கா அமைச்சர் ஆகியோர் கலந்து பேசி, அவற்றில் எவை எவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி ஆலோசனை கூறுமாறு அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் அரசு ஏதாவது முடிவுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்களை அறிவிக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அறிக்கை முழுவதையும் படித்து, தேவையானவைகளை எடுத்து எந்த வகையில் அவற்றைச் செயல்படுத்துவது என்பதை நிர்ணயிப்பதற்காக அரிசன நலத் துறை அமைச்சர், சட்ட இலாக்கா அமைச்சர் ஆகியோரை நமது மாநில அமைச்சரவை ஏற்பாடு செய்திருக்கிறது. இன்னும் நாங்கள் அதுபற்றிப் பரிந்துரை செய்யவில்லை.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, இளையபெருமாள் குழுவினர் நாடெங்கிலும் சென்று நல்ல முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளைக் கண்டு விளக்கமான அறிக்கையினை வெளியிட்டதாக அறிகிறோம். இவ்வறிக்கையின் நகல் ஒவ்வொரு சட்டப்பேரவை உறுப்பினருக்கும் கிடைக்கச் செய்து, அதனை அடிப்படையாக வைத்து ஒரு நாள் சட்டப் பேரவையில் விவாதிக்க அரசினர் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதற்காகத் தனியாக ஒரு நாள் ஒதுக்கி வைத்து அன்று விவாதம் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அசெம்பிளி லைப்ரரியில் இந்தப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொருளில் அக்கறை கொண்டிருப்பவர்கள் அதைப்பற்றிப் படித்து, அதிலேயிருக்கும் கருத்துக்களை எடுத்துக் கேள்விகள் மூலமாகவும், அமைச்சர்களைக் கேட்டும் தெரிந்துகொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அரிசன நலத்துறை மானியங்கள் வரும்போதுகூட அதுபற்றிப் பேசலாம். எல்லாவிதமான வாய்ப்புக்களும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்றன. ஆகவே, தனியாக இதற்கென்று நாள் ஒதுக்கி அன்று இதை எடுத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.



1970 டிசம்பர் 2]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், என்னதான் நேரில் கண்டு பேசி விவரமான அறிக்கை தயார் செய்தாலும் சரி, அல்லது சட்டத்தையே கொண்டுவந்தாலும் சரி, தீண்டாமை ஒழிப்பு என்பது வெற்றிகரமான முறையில் நடைபெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறாரா? ஆகவே, தீண்டாமை ஒழிப்பு வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானால், நாங்கள் எங்கே போகிறோம், என்ன பேசுகிறோம் என்பதைக் கண்டுபிடிக்க ஸ்பெஷல் பிராஞ்ச் ஏற்பாடு பண்ணியிருக்கிறீர்களே அதைப்போல.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் போட வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதற்கும் ஒரு ஸ்பெஷல் பிராஞ்ச் ஏற்பாடு செய்து, தீண்டாமை ஒழிப்பை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சந்தேகத்திற்கு உரியவர்களைக் குறித்துத்தான் இப்படிப்பட்ட ஸ்பெஷல் பிராஞ்ச் போடுவதாக நான் தெரிந்திருக்கிறேன். தீண்டாமை அனுஷ்டிப்பவர்கள் அப்படி சந்தேகத்திற்கு உரியவர்களாக இருக்க மாட்டார்கள். தொன்றுதொட்டு வந்த பழக்கத்தின் காரணமாக இப்படிப்பட்ட முறைகளெல்லாம் கையாளப்பட்டு வருகின்றன. சட்டத்தால்கூட இதையெல்லாம் மாற்றிவிட முடியாது. மன மாற்றம்தான் ஏற்படவேண்டும். மனமாற்றம் ஏற்பட பிரசாரம் செய்வதிலும், மற்ற காரியங்களைச் செய்வதிலும் அரசாங்கமும் நல்ல முற்போக்கான சிந்தனையாளர்களும் ஈடுபட முடியும். அதைத் தான் இன்று அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. இளைய பெருமாள் கமிட்டி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளைக் குறித்து நாங்கள் இன்னும் முடிவு எடுக்கவில்லை. தீண்டாமை ஒழிப்பு குறித்து அவர்கள் முக்கியமாகப் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிய காரணத்தினாலே உடனே மேம்பாடு அடைந்துவிடுவதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்டவர்கள்பற்றி இளையபெருமாள் கமிட்டி அறிக்கையில் ஏதாவது குறிப்பிட்டு இருக்கிறார்களா? மதம் மாறினாலும் அவர்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்டிருந்த சலுகைகள் தொடர்ந்து பெற்றுக்கொண்டு வருவதற்காக ஏதாவது அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்களா? அப்படி ஏதாவது கூறியிருந்தால் அதைப்பற்றி தமிழக அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இளைய பெருமாள் கமிட்டி அறிக்கையில் மதம் மாறியவர்களைப்பற்றி எதுவும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. நான் இன்னும் பூரணமாக அதைப் படிக்காத காரணத்தினால் அதைப்பற்றி உறுதி சொல்ல முடியாது. மதம் மாறியவர்கள் கிறித்துவ மதத்திற்கோ அல்லது சீக்கிய மதத்திற்கோ அல்லது வேறு மதத்திற்கோ மாறியிருந்தால்

ஒரு தலைமுறைக்குத்தான்—அவர்கள் என்ன என்ன சலுகைகள் முன்பு பெற்றுவந்தார்களோ—அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்குப் பிறகு அரிசன இந்துக்களுக்கு தரப்படுகிற சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இளையபெருமாள் குழுவின் அறிக்கையில் தீண்டாமை ஒழிப்புப்பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் நம்முடைய அரசில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிகமாக வீட்டு மனைகள் ஒதுக்கப்படுகின்றன. அரிசனர் அல்லாதவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு அருகிலே வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டால் அவர்கள் ஆட்சேபணை செய்கிறார்கள், தடுக்கிறார்கள். அதிலும் நம்முடைய அரசாங்கம் கவனம் செலுத்தி வந்தாலும் அரிசனங்கள் அல்லாதவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு அருகிலே தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருப்பதற்குத் தடை இல்லாத வகையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் அப்படித் தடுக்கக்கூடாது என்று சட்டமோ அரசாங்கமோ நடவடிக்கை எடுக்கலாம். அப்படித் தடுக்கின்றவர்கள் மீது நாம் எந்த விதமான முறையிலும் கடுமையாக நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், அரிசன மக்களே அப்படிப்பட்ட இடங்களில் போய் வாழப் பயப்படுகிறார்கள், அஞ்சுகிறார்கள். அரசாங்கமோ, சட்டமோ தினம் தினம் இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அப்படி மோதல்கள் வந்தால் பார்த்துக்கொள்ளலாம், பல இடங்களிலே அப்படிப்பட்ட நிலைமைகள், மோதல்கள் வரும் என்று எண்ணி அங்கே போய் வாழ அஞ்சுகிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் அவர்களுக்குப் போதுமான வீட்டு மனைகள் வழங்கிக் கொண்டுதான் வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாத் துறைகளிலும் பங்குகொள்ள நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத் தான் தீண்டாமை ஒழிக்கப்பட முடியும் என்று சொல்லப்படுகிறது. தர்ம பரிபாலன போர்டுகள் வைத்திருக்கிறார்கள் என்றால் அந்த நிர்வாகங்களிலே அரிசனங்கள் பங்குகொள்ளக்கூடிய முறையில் 16 சதவிகிதம் நிர்வாகத்திலே அவர்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக வரலாம் என்ற முடிவுக்கு இந்த அரசாங்கம் வந்திருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள். எனவே அங்கும் அந்தத் துறையிலும் நல்ல வாய்ப்புகள் அவர்களுக்குத் தரவேண்டுமென்று தான் இந்த அரசு கருதுகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, தீண்டாமை சமுதாயத்திலே தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கின்ற காரணத்தினாலே தீண்டாமை சட்டத்தினாலோ வேறு நடவடிக்கை





களினாலே நிறுத்த முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுடைய பொருளாதார வாழ்க்கையிலே கல்வி உயர்விலே முன்னேற்றம் ஏற்படுத்தினால்தான் தீண்டாமை ஒழிக்கப்படும் என்று அந்தக் குழுவின் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதா? அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கல்வியின் மூலமாகவும், பொருளாதார ஏற்றத்தினாலும்தான் தீண்டாமையை ஒழிக்க முடியும் என்பதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும் சமுதாயத்தில் இருக்கின்ற பழைய பழக்கவழக்கங்கள், சீர்கேடுகள் இவை மக்கள் மனதிலே ஆழப்பதிந்திருக்கின்றன. இளையபெருமாள் குழுவின் அறிக்கையிலே இவற்றைப்பற்றியெல்லாம் நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் நல்ல சலுகைகள் கொடுப்பதாலே தீண்டாமை ஒழியும். அதோடு இதிலே தனி அக்கறை காட்டி அரசும் மக்களும் முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இவற்றைப்பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து: சமீபத்திலே ஏற்பட்ட பேய் மழை காரணமாக ஏராளமான அரிசனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த இளையபெருமாள் கமிட்டி அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்களா? இதுபோன்ற நாசங்கள், தீங்குகள் ஏற்படுகின்ற நேரத்தில் அவர்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இளைய பெருமாள் கமிட்டி 1969-லே நிறுவப்பட்டது. 1970-ஆம் ஆண்டிலே தான் இப்படி மழை பெய்திருக்கிறது. மழையினாலும் வெள்ளத்தினாலும் எல்லோரும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பெரும்பாலனவர்கள் அவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஏழைகளாக இருக்கின்ற காரணத்தினாலும் போதுமான வாழ்க்கை வசதிகள் இல்லாத காரணத்தினாலும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். பொதுவாக, அரிசனங்கள் முன்னேற்றத்தைப்பற்றித்தான் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே மதம் மாறியவர்களுக்குச் சலுகைகள் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். மாவட்ட வெல்பேர் ஆபீஸர்களிடமிருந்து இப்படிப் பட்ட சலுகைகள் காட்டப்படாமல் கருவிகள் வாங்குவதற்கோ மாடுகள் வாங்குவதற்கோ சலுகைகள் இல்லை என்று குறிப்பிட்டே அனுப்புகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைத் திருத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் ஆரம்பத்திலே சொன்னேன். மதம் மாறியவர்களுக்கு ஒரு தலை முறைக்கு—அதாவது தகப்பன் இந்துவாக இருந்து மகன் கிறிஸ்துவ

மதத்திலோ அல்லது வேறு மதமோ சேர்ந்திருந்தால் ஒரு தலைமுறைக்குத்தான் சலுகைகள் கொடுக்கலாம்—இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்னதாக மாறியிருந்தால் முன்னால் பெற்றுவந்த சலுகைகளைப் பெறமுடியாது. மாநில அரசாங்கத்தின் சலுகைகள் தரப்படுவதில்லை. ரிசர்வேஷன் தரப்படுவதில்லை. ரிசர்வேஷனைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரால் சிபாரிசு செய்யப்படுகிறது. ஒரு தலைமுறைக்குத்தான் அவற்றையெல்லாம் தருகின்றார்கள். ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பாகவே மாறியிருந்தால் அவர்களுக்குத் தரப்படுவதில்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இளையபெருமாள் கமிட்டி அறிக்கையிலே தாழ்த்தப்பட்டவர்களை அதிகப்படியாக டிரஸ்டு போர்டுகளில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறி இருக்கிறார்கள். ஆனால், கோவையிலே டிரஸ்டு போர்டுகளிலே ஒருவருக்கும் இடம் கொடுக்கப்படவில்லையே, என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையில் ஏற்பட்ட டிரஸ்டுகள் நியமனம் குறித்து என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

திரு. என். ராஜாங்கம்: தலைவர் அவர்களே, இளையபெருமாள் கமிட்டி அறிக்கையிலே அரிசனங்களுக்கு 16 சதவிகிதம் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், நம்முடைய மாநில அரசு 24 சதவிகிதம் அளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளது. 24 சதவிகிதம் இப்பொழுது கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நாம் கோரிக்கை விடுத்து இருக்கிறோம். தீர்மானமாக முடிவு வரவில்லை. நிச்சயமாக வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலமாக தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. எனவே, எந்த ரீதியிலே அரசாங்கம் அதைப் போக்குவதற்கு முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதுதான் பிரச்சாரத்தின் மூலம், துண்டு அறிக்கைகள் மூலம், விளம்பரங்கள் மூலம் எல்லாம் செய்துகொண்டு வருகிறோம். அதிலே அக்கறை உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்களாகப் பேசுகின்றவர்கள் எல்லாம் செயல்படவில்லை என்பது அனுபவ ரீதியாக உள்ள உண்மையாகும். பிரச்சாரம் செய்கிறோம். மக்கள் மத்தியிலே ஆக்கப்பணியிலே ஈடுபட்டால் அதற்கு நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மதம் மாறியவர்களுக்கு ஒரு தலைமுறைக்குத்தான் சலுகைகள் அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. மதம் மாறினாலும்கூட சகல வசதியும் வந்து விடுவதில்லை. அவர்கள் பின்தங்கிய நிலையிலேதான் இருக்கிறார்கள்.





எனவே அவர்களுக்கு சலுகைகள் தொடர்ந்து கிடைக்கச்செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா? மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பில் இருந்தால் அப்படி சிபாரிசு செய்ய நம்முடைய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்துக்கள் மத்தியிலேதான் தீண்டாமை, பாகுபாடுகள், வேற்றுமைகள் இருக்கின்றன. கிறித்துவ மதத்தில் வேறு மதத்தில் இல்லை. கிறித்துவ மதத்திற்கோ வேறு மதத்திற்கோ மாறிவிட்டால் அந்தப் பட்டியலிலே இருந்து நீக்கி விடுகிறோம். ஒரு முறைக்குத்தான் சலுகைகள் தரப்படுகின்றன. ஆண்டியாக இருந்து ஆண்ட்ரூஸ்-ஆக அந்தோணியாக மாறிவிட்டால் அப்படிப்பட்ட வேற்றுமைகள் இல்லை, கிறித்துவராக ஆகிவிடுகிறார். எனவேதான் ஒரு தலைமுறைக்கு மட்டும் அந்தச் சலுகைகள் தரப்படுகின்றன. இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் மாறியிருந்தால் அது கிறித்துவக் குடும்பம் என்று அனைவரின் மத்தியிலே பழக்கத்தில் வந்துவிடுகிறது. கிறித்துவர்களிடையே அந்த வேறுபாடு கிடையாது என்ற காரணத்தினாலே இரண்டு, மூன்று தலைமுறைகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதுதான் மத்திய அரசாங்கத்தின் சிபாரிசு ஆகும். அதைத்தான் மாநில அரசும் கடைப்பிடித்துக்கொண்டுவருகிறது.

திரு. ஆ. கருப்பையா: தலைவரவர்களே, அரிஜனங்கள் இந்துக்கள் மத்தியிலேயிருந்தால் முன்னேற முடியாது என்ற காரணத்தினால் முஸ்லீம் மதத்திற்கு மாறிவருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியென்றால் அரசாங்கம் இதற்கு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதிலே அவரவர்கள் விருப்பப்படி மதம் மாறுவார்கள். அதில் அரசாங்கம் தலையிட்டு, தனிப்பட்டவர்களின் உரிமைகளில் தலையிட முன்வராது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்புச் சட்டம் அமலில் இருந்தும்கூட பல கிராமங்களில் தேநீர் நிலையங்களில் அரிசனங்கள் சமமாக அமர்ந்து குடிப்பதற்கு இயல வில்லை என்று புகார்கள் வந்துள்ளனவா? அப்படியென்றால், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப் பட்ட புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்காக, தனியாக தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, தண்டிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. என். ராஜாங்கம்: தலைவரவர்களே, இளையபெருமாள் கமிட்டியின் சிபாரிசுகளை அல்லது அக்குழு வகுத்தத் திட்டங்களை மாநில அரசாங்கம் நிறைவேற்றிவிட்டதா? அல்லது நிறைவேற்றப் படாமல் பாக்கியிருக்கிறதா? அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்புக் கமிட்டியின் மூலம் பிரசாரம் செய்ய வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கருதுகிறார்கள். அந்தத் தீண்டாமை ஒழிப்புக்

கமிட்டியில், அரிசனங்கள் அல்லாத மற்ற எல்லோரையும், அரிசனங்கள் இருக்கக்கூடாது என்ற முறையில், அரிசனங்கள் இல்லாதவர்களைக்கொண்டு தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி அமைக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இளைய பெருமாள் கமிட்டி கொடுத்திருக்கின்ற சிபாரிசுகளைப்பற்றி நான் ஆரம்பத்தில் கூறினேன். சட்ட அமைச்சரவர்களும், நானும் பரிசீலனை செய்து முடிவு செய்யவிருக்கிறோம். பொதுவாக இப்படிப்பட்ட பிரசாரம் செய்ய மாநில அரசாங்கம் ஒரு தனிக் கமிட்டி நியமிக்க உத்தேசித்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அப்படிப்பட்ட கமிட்டி நிறுவப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இளையபெருமாள் கமிட்டி செய்த சிபாரிசை ஏற்றுக்கொண்டு தீண்டாமை ஒழிப்புக் கமிட்டி நிறுவ அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## குடுமியாமலை விவசாயப் பண்ணை

*86. வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடுமியாமலை விவசாயப் பண்ணையை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

(உ) அப்பண்ணை லாபத்தில் அல்லது நட்டத்தில் இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) அப்பண்ணையை மேலும் 1,000 ஏக்கர் பரப்பிற்கு விரிவுபடுத்த வாய்ப்பு இருக்கிறது. பொருத்தமான நிலையில் அது நிறைவேற்றப் படும்.

(உ) அப்பண்ணை ஆதாயத்தில் இயங்கி வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த குடுமியாமலை விவசாயப் பண்ணையையொட்டி, அங்கு ஒரு வேளாண்மை கல்லூரி நிறுவ அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தப் பகுதியில், திருச்சி மாவட்டத்தில் ஒரு கல்லூரி நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முன்னோடித் திட்டமாக குடுமியா மலைப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.



திரு. ஆ. கு. சுப்பையா: ஐயா, இந்த குடுமியாமலை விவசாயப் பண்ணை ஆதாயத்தில் நடந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இம்மாதிரிப் பண்ணைகளைத் தமிழகத்தில் வேறு எங்கேயாவது ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இன்றைக்கு கிட்டத்தட்ட 64 பண்ணைகள் இருக்கின்றன. இதில் மிகப்பெரிய பண்ணை இந்தக் குடுமியாமலைப் பண்ணை. எனவே, ஏற்கெனவே பண்ணைகள் இருக்கின்றன.

## *Indian Tobacco Development Council*

*87 Q. THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Indian Tobacco Development Council had met in the first week of April 1970;

(b) whether the State Government was represented at the meeting; and

(c) if not, the steps taken to secure representation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம். இந்திய புகையிலை அபிவிருத்திக் குழுவின் கூட்டம் சென்னையில் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் 3, 4 தேதிகளில் நடை பெற்றது.

(இ) மேற்படி கூட்டத்தில், சென்னை அரசின் பிரதிநிதியாக கூட்டு விவசாய நெறியாளர் கலந்து கொண்டார். மேலும், புகையிலை அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப் பேற்றுள்ள கிருஷ்ணகிரி தனி மாவட்ட வேளாண்மை அதிகாரியும் (எப். சி.வி. புகையிலை) மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(உ) ஏற்கனவே, இந்திய புகையிலை அபிவிருத்திக் குழுவில் கூட்டு விவசாய நெறியாளர் (வணிகப்பயிர்) தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக இருக்கிறார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, இந்தப் புகையிலை அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன? அந்த அபிவிருத்திக் குழுவில் செய்யப்பட்ட பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டவை என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த அபிவிருத்திக் குழுவில், அதிகப்படியாக தீவிரமான முறையில் புகையிலை சாகுபடி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சிகரெட்டிற்கான எப்.சி.வி. புகையிலை இப்பொழுது ஹோசூரில் பயிர் செய்யப்படுகிறது. இன்னும் அதிகப்படியான நிலப்பரப்பிலே செய்யவேண்டுமென்று இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. பரண்

ஒன்றுக்கு 4,000 ரூபாய் வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டப்பட்ட ஒவ்வொரு பரனுக்கும் 20 சதவிகிதம் அல்லது உயர்ந்த பட்சம் ரூ. 1,000 மானியம் வழங்கப்படுகிறது. மேலும் கிணறுகள் வெட்டவும் 3,750 ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் புகையிலை அதிகமாகப் பயிர் செய்யப் படுகிறது. புகையிலை அபிவிருத்திக்காக அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹோசூர் கிருஷ்ணகிரியில்தான் அதிகப்படியாக புகையிலை சாகுபடி செய்திருக் கிறது. தீவிர சாகுபடி செய்ய, "பாக்கேஜ் ஸ்கீம்" வைத்து தனி அதிகாரியை நியமித்து, குறிப்பாக எப்.சி.வி. புகையிலையை அதிகமாகச் செய்ய அக்கறை எடுத்து வருகிறோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, ஹோசூர், கிருஷ்ணகிரியைப்போன்று, தம்பம்பட்டியில் புகையிலை அதிகமாகச் சாகுபடி செய்யலாம். இந்த புகையிலை பயிரிடுவதை, தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ், பல்வேறு மாவட்டங்களில் நடத்தி, ஆங்காங்கே விவசாயிகள் இதைப் பயிர் செய்வதற்கு அரசாங்கம் ஊக்குவிக்குமா? அதற்கென்று சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் தீட்டுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ; அதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a number of areas like Hosur and Dankanikottah taluks in the Dharmapuri district where excellent Virginia tobacco grows and the acreage can be increased, if more facilities are granted to cultivators. Our Hon. Minister for Industries sometime back stated that there was a proposal before Government to start a cigarette factory in our State. May I know from the Hon. Minister for Agriculture whether she has taken up this matter with the Central Tobacco Council to give more funds or whether she is going to take it up hereafter ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிகரெட் தொழிற்சாலைபற்றி தொழிலமைச்சரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அதிகப்படியாக புகையிலை உற்பத்திக்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கம் கருதி, விசேஷ அதிகாரியை நியமித்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப் போன்று பிற மாவட்டங்களில் எங்கெங்கு சாத்தியக்கூறு இருக்கிறதோ அதையெல்லாம் பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுத்து இன்றைக்கும் முனைந்திருக்கிறது.





THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister it is stated that there is a package scheme in Hosur taluk. But actually only 500 or 600 acres have been cultivated there. There is great potentiality to increase the acreage under tobacco, a crop which gets us dollars.

So will this Government think of extending the acreage to 2000 or 3000 acres?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹோசூரில் மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செயல்பட்டு வருகிறது. அங்கே கிட்டத்தட்ட 501 ஏக்கர் அளவில் புகையிலைப் பயிரிடப் படுகிறது. எனவே, மாநில அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு பரிந்துரை செய்து ஒப்புக்கொண்ட பிறகு மேலும் பல ஏக்கர்களுக்கு நீட்டிக்க அக்கறை எடுத்துக்கொள்ள முடியும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் சப்-தாலூக்காவில் அதிகப்படியாக புகையிலை பயிரிடப் படுகிறது. எனவே, அங்கே பாக்கேஜ் ஸ்கீமை விஸ்தரிக்க இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற் பொழுது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கோவை மாவட்டம், வடார்க்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பல இடங் களிலே ஏராளமாக புகையிலை விவசாயம் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது மிகவும் குறைந்துள்ளதற்குக் காரணம், மத்திய சர்க்கார் அந்த விவசாயிகளுக்கு, வரி போட்டு பலவிதத்திலேயும் தொல்லை கொடுப்பதனால்தான் விவசாயிகள் ஊக்கத்தோடு விவசாயம் செய்வதற்கு அஞ்சுகிறார்கள் என்பது கனம் அமைச்சரவர் களுக்குத் தெரியுமா ? இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதிகப்படியான முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் புகையிலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அப்படிப்பட்ட குறைகளைச் சொன்னதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதாவது குறிப்பிட்ட குறைகளை எடுத்துச் சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

## கோவை மாவட்டத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரம்

* 88 வினா.—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் கிராமத்தையும், கோபி வட்டத்தில் உள்ள கடம்பூர், குதியாலத்தூர், குன்றி ஆகிய கிராமங்களையும் இணைத்து ஒரு Tribal Block அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஈ. எம். நடராசன் : பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் கிராமமும், கோபி வட்டத்தில் உள்ள கடம்பூர், குதியாலத்தூர், குன்றி ஆகிய கிராமங்களும் மலைப்பகுதியில் இருக்கின்றன. பழங்குடி மக்கள் அதிகமாக வாழுகின்ற அந்தப் பகுதியில் இதுவரை அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அரசு தனிக் கவனம் செலுத்தி அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி பழங்குடி வட்டார வளர்ச்சித் திட்டத்தை அமலாக்குவது பற்றி. அதற்கு இல்லையென்று பதில் சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனை பரிசீலிக்கப்படும்.

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு தனி நிர்வாக அமைப்பு

* 89 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களை மாவட்ட அளவிலும், கோட்ட அளவிலும் தனி நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஊராட்சி ஒன்றியங்களை மாவட்ட அளவில், கோட்ட அளவில் தனி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று முருகேச முதலியார் பரிந்துரையில் கூறப்பட்டி ருந்தது பற்றி அரசு பரிசீலித்து எப்போது முடிவு எடுக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசின் பரிசீலனையில் இருக் கிறது. விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : யோசித்துக் கொண்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில ரீதியில் இருந்து கீழே பஞ்சாயத்து வரையில் தனி டிபார்ட்மெண்டாகச் செயல் படுத்தும் முறையில் ரெவின்யூ இலாகா குறுக்கீடு இல்லாமல் அமைக்க நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் குறிப்பிட்ட யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப் படும்.



## தஞ்சாவூர் மாவட்டத்தில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட எழுத்தர்கள்

* 90 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் எழுத்தர் களாக பணியாற்றியவர்களில் எத்தனை பேர்கள் தற்போது பஞ்சா யத்து நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்காணும் வகுப்பில் ( Categories )உள்ளவர்கள் நிர்வாக அதிகாரி கிரேடு 1 ஆக, 1966, 1967-ஆம் வருடங்களில் நியமிக்கப் பட்டுள்ளார்கள்—

| பிரிவுகளின் பெயர். | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| நகர பஞ்சாயத்து எழுத்தர்கள் ... ... | 5 |
| நகர பஞ்சாயத்து தலைமை எழுத்தர் ... | 1 |
| பஞ்சாயத்து ஒன்றிய எழுத்தர்கள் ... | 3 |
| பஞ்சாயத்து ஒன்றிய தலைமை எழுத்தர் ... | 1 |
| நகராட்சி எழுத்தர்கள் ... ... ... | 2 |
| நிர்வாக அதிகாரிகள் கிரேடு 2 ... ... | 3 |
| மொத்தம் ... | 15 |

திரு. ஆ. கு. சுப்பையா : இவ்வாறு எழுத்தர்களாக இருப்பவர்கள் எந்தத் தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? கிராம சேவக்குகளையும் இந்த நியமனங்களில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைமை எழுத்தர்கள் அவர் களுடைய தகுதியையும், அனுபவத்தையும் வைத்து நியமிக்கப்படு கிறார்கள். அங்கத்தினர் சொன்ன யோசனையும் பரிசீலிக்கப்படும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I know from the Hon. Minister whether an executive officer should not be retained in a particular panchayat for more than three years?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனியாக அப்படி ஒன்றும் விதி இல்லை. அவசியம் ஏற்பட்டால் இடையில் மாறுதல் செய்யலாம்.

### கொற்கை அருகில் ஐயாவையனுர் ஆற்றின் குறுக்கே பாலம்

* 91 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்காவில் கொற்கை பகுதிக்குப் போய் சேர வசதியாக ஐயாவையனுர் எனும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மேற்கண்ட கொற்கை என்னும் ஊருக்குப் போகும் வழியில் ஐயாவையனுர் எனும் ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாத காரணத்தால் 15 மைலுக்கு மேலாகச் சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலைமை இருக்கிறது. அரசாங்கம் இனிமேலாவது அங்கு ஒரு பாலம் அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னேன். அங்கத்தினர் யோசனையைத் தனியாகச் சொன்னுல் பரிசீலிக்கப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மழை பெய்தாலே தீவு போல இருக்கும். அங்கு விரைவில் ஒரு பாலம் அமைக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப் பற்றிப் பரிசீலிக்க லாம் என்று சொல்லியிருக்கிறேன்.

### தமிழ்நாட்டில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலை

* 92 வினு.—திரு. வை. சுவாமிநாதன்
திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

### *Cement produced in Tamil Nadu*

*93 Q.—Dr. H. V. Hande : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any surplus in the quantity of cement produced in Tamil Nadu ;



(b) if so, the steps taken to market the surplus quantities;

(c) whether any market has been established in any foreign countries ; and

(d) if so, the names of such countries ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் உபரியாக கிடைக்கக்கூடிய சிமெண்ட் தென் பகுதியில் உள்ள பிற மாநிலங்களுக்கும், வடஇந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றது. சிமெண்ட் வாணிப நிறுவனம் பெருமளவில் சிமெண்ட் உபயோகிப்போருடனும் ரயில்வே நிர்வாகத்தினருடனும் இது சம்பந்தமாக பேச்சு வார்த் தைகள் நடத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(உ) ஆம்.

(ஏ) சிறிய அளவில் இலங்கைக்கு சிமெண்ட் ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, will the Hon. Minister be pleased to state whether it is not a fact that large stocks of cement that is found surplus to requirements are lying idle in this State? In spite of this, another factory has been started in the public sector and that is going to produce some cement. How do the Government propose to distribute the surplus cement, when already large stocks are lying idle in different godowns ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில சர்க்காரின் சார்பில் தொடங்கப்பட்டிருக்கும் சிமெண்ட் தொழிற்சாலை இப்போது ஆரம் பிக்கப்பட்டது அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னுல் தொடங்கப் பட்ட முயற்சியாகும். இப்போது அது முடிவுற்று இருக்கிறது. இதுபோன்று தென் மாநிலங்களில் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்ட்டுக்கு வட மாநிலங்களில் விலை கிடைக்க வேண்டுமென்ற பிரச்சினை எழுப்பப்பட்டபோது அந்த விலையை இணைக்கக்கூடிய முறை அகற்றப்பட்டு விடுமானுல் மாநிலத்திற்கு மாநிலம் விலை வேறு பட்டு நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய அதிக சிமெண்ட் வடக்கே சென்று விற்கக்கூடிய நிலைமை அற்றுப் போகும் என்று நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களும் இப்போதைக்கு ஒத்துக் கொண்டிருக்கிருர்கள். 'பூல் பிரைஸ்' என்று இந்திய நாடு முழுவதும் ஒரே விலை என்று நிர்ண யித்து அந்த நிலை தொடருமானுல் தென் மாநிலங்களில் சிமெண்ட் உற்பத்தியைக் கவலைப்படாமல் மேற்கொள்ளலாம். இந்த நிலை தொடருமானுல் நமக்கு ஆபத்து இல்லை.

Thiru T. MARTIN : Mr. Speaker, Sir, in view of the unsatisfactory working of the Alangulam Cement Factory, may I request the Hon. Minister to state whether there is any proposal pending with the Government to transfer this Alangulam Cement Factory to private sector and, if so, whether any decision has been taken in this regard ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதும் சரி, எப்போதும் சரி, ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை சரியாக நடக்கவில்லை என்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. கற்பனையில் கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியாது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : அரசுத் துறையில் நடத்தப்படுகின்ற ஆலங்குளம் அரசு பாக்டரிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசாங்கக் கட்டடங்கள், பாலங்கள் கட்டுவதற்காக ஒப்பந்தம் செய்யப்படுகின்ற கான்ட்டிராக்டர்கள் 50 சதவிகிதம் அரசு சிமெண்ட்டை வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிமெண்ட் விநியோகத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் முடிவு செய்கிறது. அவர்கள், யார் யாருக்கு. எங்கெங்கு எப்படி எப்படி விற்க வேண்டுமென்பதற்கு விதிமுறைகளை வகுக்கிறார்கள். அதை நாம் பின்பற்றுகிறோம். நம்முடைய அரசு சிமென்டைப் பொருத்தவரை, நம்முடைய நாட்டு மக்கள் அதற்குத் தான் முதலிடம் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தனி யார் துறையில் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய சிமெண்டும் விலைபோக வேண்டுமென்ற கவலையை ஏற்றுக் கொள்ளு வதும் நியாயந்தான்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : ஆலங்குளம் அரசு சிமெண்ட் பாக்டரியில் உற்பத்தி செய்யக்கூடிய சிமெண்டாக இருந்தாலும் கூட அதிகமாகத் தேக்கம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். அதைத் தவிர்க்க அரசு என்ன வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசு சிமெண்ட் பாக்டரிக்குப் பக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அது முதல் தரமான சிமெண்ட் என்று சர்டிபிகேட் கொடுத்தது பற்றி மகிழ்ச்சி. புரியாத சில பேர் புரிந்து கொள்ளும் வாய்ப்பாக இருக்கிறது. அவர்கள் சொன்னது போல் சர்ப்ளஸ் இந்தத் தொழிற்சாலைக்கு மட்டுமல்ல, தனியார் தொழிற்சாலைக்கும் ஏற்பட்டிருக்கிறது. அது ஏற்பட்ட சூழ்நிலையைப் பற்றி முன்னால் சொன்னேன். கண்ட்ரோல் என்பது ஒன்று. ‘பூல் பிரைஸ்’ என்பது இரண்டு. கண்ட்ரோலை எடுத்து விட்டார்கள். ஆட்சேபிக்கவில்லை. பூல் பிரைசை எடுக்க வேண்டு மென்றபோது அது கூடாது என்று சொன்னோம். பூல் பிரைஸ் என்று சொல்லும்போது இந்தியா முழுவதும் ஒரே விலை இருக்கும் என்ற நிலையில் தென் மாநிலங்களும் அதன் பயனைப் பெற்று வந்தோம். அதை எடுத்துவிட வேண்டுமென்று வட மாநிலங்களில் உள்ள தொழில் அதிபர்கள் முயற்சித்தார்கள். அந்த முயற்சியை இடைக்காலத்தில் இந்த அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது. ‘பூல் பிரைஸ்’ இருக்குமானால் நம்மிடத்தில் இருக்கும் சிமெண்ட் சர்ப்ளஸ் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நம் நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலை களுக்கு பாதுகாப்பு அளிக்கிற வகையில் அந்தப் ‘பூல் ப்ரைஸ் ஸிஸ்டம்’ தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை வற் புறுத்தி நம் மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?





மாண்புமிகு திரு. செ. மாதவன்: பலமுறை இதுபற்றி நாம் மத்திய அரசை வற்புறுத்தி கடிதங்கள் எழுதியிருக்கிறோம். நானும் நம் முதல் அமைச்சர் அவர்களும் நேரடியாக பிரதம மந்திரி அவர் களிடத்திலும், அங்குள்ள தொழில் அமைச்சர் அவர்களிடத்திலும் இதைப்பற்றி வாதித்தோம். அவர்களும் எங்கள் கருத்தை ஏற்றார் கள். நம் மாநிலத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்ற மாநிலங்களிலிருந்து நம்மை ஆதரிக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப் பினர்களும் சேர்ந்து பிரதம மந்திரி அவர்களிடமும், மத்திய அரசினிடத்திலும் இதைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதையும் அவர்கள் ஏற்று இடைக்காலத்தில் இதை கைவிடுவது இல்லை என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா: டால்மியா சிமெண்ட் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள நம் அரசினர் பைலட் சிமெண்ட் பாக்டரியில் உற்பத்தியாகும் சிமெண்ட் நல்லமுறையில் இல்லை என்று சொல்லப் படுவது உண்மையா? சில மாதங்களாக அந்த பைலட் சிமெண்ட் பாக்டரியில் வேலை நடைபெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இனிமேலாவது அந்த சிமெண்ட் பாக்டரியில் நல்லமுறையில் கலவையைச் சேர்த்து நல்லமுறையில் சிமெண்ட் தயாரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உறுப்பினர் அவர்கள் அவர்களது கேள்வியைக் கேட்டார்கள். இது சிமெண்ட் உற்பத்தி பற்றிய கேள்வி. அது பைலட் ப்ராஜெக்ட். ஒரு முறையை எடுத்துச் சொல்வதற்காக உருவாகிய ஒரு தொழிற்சாலை. அந்த முறையை ஏற்றுக்கொள்பவர்கள் வேறு நாட்டில் இருக்கிறார்களா என்பதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். அது இப்போது ஆரம்பிக்கப்பட்ட தல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த பைலட் ப்ராஜெக்ட் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ப்ராஜெக்ட் தேவைதானா என்ற கேள்வி யும் எழுப்பப்பட்டிருக்கிறது. அரசு அதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த பைலட் ப்ராஜக்டை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் இனிமேலும் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி விரைவில் முடிவு செய்யும்.

## நாமக்கல்லில் தொழிற்பேட்டை

* 94 வினா:—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் எப்போது தொழிற்பேட்டை துவக்கப் படும்?

(இ) அதன் உற்பத்தி பொருள்கள் எப்போது வெளிவரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) நாமக்கல்லில் ஆறு தொழிற்சாலை பிரிவுகளுடன் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் திட்டத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. அதற்காக தொடராச் செலவாக ரூ. 6,08,000 தொகையும் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கான வேலைகள் நடந்தேறி வருகின்றன.

[1970 டிசம்பர் 2

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : பொதுவாக, இந்தத் தொழிற் பேட்டைகளில் தனியார்கள் தொழில்கள் துவங்க வராமல் ஏராள மான இடங்கள் காலியாக இருப்பதாக அறிகிறேன். ஆனால் திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் எஸ்டிமேட்ஸ் கமிட்டி வந்திருந்த நேரத்தில் இன்னும் அதிகமாக எங்களுக்கு இடங்கள் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கின்றனர். அதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முன்னாலே, தொழிற்பேட்டைகளை சிலயிடங்களில் தொடங்கி அங்குதான் தொழில்களை தொடங்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதன் விளைவாக சில இடங்களில் தொழிற்பேட்டைகளுக்கு கிராக்கி இல்லாமல் இருந்தது. ஆனால் பலயிடங்களில் அதிகக் கிராக்கி இருந்தது. ஆகவே, இப் போது நம் அரசாங்கம் எடுத்திருக்கக்கூடிய புதிய முடிவு, எங்கெங்கு தொழில் அதிபர்கள் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வருகிறார் களோ அவர்களுக்கு ஹயர் பர்சஸ் திட்டம் என்ற முறையில் எந்த இடமாக இருந்தாலும் அங்கு தொழிற்பேட்டைகள் அமைத்துக் கொடுக்க ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

## மணியாச்சி ரயில் நிலையம்

* 95 வினா:—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி இரயில்வே ஸ்டேஷனின் பெயரை மாற்றி வாஞ்சிநாதன் இரயில்வே ஸ்டேஷன் என்று பெயர் வைக்கும்படியாக மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள் உட்பட எல்லாக் கட்சியினருமே இந்தப் பெயர் மாற்றம் வரவேண்டுமென்று கேட்டும் அவர்கள் கவனிக்காத இந்த வேலையை அரசியல் தியாகிகள் விஷயத்தில் பரிவு காட்டி வரக்கூடிய இந்த ஆட்சியாவது இந்த நாட்டின் விடுதலைக் காக வேண்டி தன் இன்னுயிரை தியாகம் செய்த பகத் சிங் பரம்பரையைச் சார்ந்த இந்த வாஞ்சிநாதன் பெயரை வைப்பதற்கு இனிமேலாவது முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி ஏற்கனவே இரண்டு தனிப்பட்ட நபர்கள், ஒருவர் வாஞ்சிநாதபுரம் என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், இன்னொருவர் வீரவாஞ்சி என்று பெயர் வைக்க வேண்டுமென்றுள்ள கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அதன் பேரில் அறிக்கை கேட்கப்பட்டது, போர்ட் ஆஃப் ரெவின்யூ மூலம் அறிக்கை கேட்கப்பட்டது. தற்போது இப்படி எந்த நட-



1970 டிசம்பர் 2]

வடிக்கையும் தேவை இல்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் உறுப்பினர் அவர்களின் கருத்திற்கேற்ப இதுபற்றி மறுபடியும் பரிசீலனை செய்யப்படும்.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, ஸ்டேஷன் பெயரை மாற்றுவது என்ற பிரச்னை இல்லாவிட்டாலும் இனிமேலாவது அது பற்றி பரிசீலனைக்கு எடுக்கப்படுகிற நேரத்தில், சமீபத்தில் மணியாச்சி ரெயில்வே நிலையத்திற்கு அருகில் ஒரு பெரிய ரெயில் கொள்ளை ஏற் பட்டு அதன் தொடர்பாக பெரிய போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் இப்போது அந்தப் பாதுகாப்பு இல்லாத முறையில் போக்குவரத்து சரிவர..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீர் முஹம்மது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தலைவர் அவர்களே, ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற வீர வாலிபன் வாஞ்சிநாதன் பெயரை விரைவில் அந்த ஸ்டேனுக்கு வைப்பதற்கு அரசு முயற்சிக்கிற நேரத்தில் அவர் ஞாபகார்த்தமாக அவர் பெயர் பொறித்த ஒரு பெயர் பலகையாவது அங்கு இடம் பெறச் செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஸ்டேஷன் பெயரை மாற்றி வைப்பது பற்றிய கேள்வி. பெயர் பொறித்து வைக்கும் பிரச்னை அல்ல.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து ஆஷ் துரையை அந்த இடத்தில் வாஞ்சிநாத ஐயர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் வாஞ்சி நாதனின் நினைவுச் சின்னம் தூத்துக்குடி நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. இப்போது மணியாச்சி ரெயில்வே ஸ்டேஷனில் விரை வாக அவருக்கு ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்துவதற்கு அர சாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பிரச்னையாக இருப்பதால் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மணியாச்சி ஜங்ஷனுக்கு வாஞ்சி நாதன் அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று இருவர் எழுதி யிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரு நபர்கள் யார்? அவர்களது பெயர்களைக் கூற முடியுமா? போர்ட் அதற்கு மறுப்பு அளித்துவிட்டது என்றும் சொன்னார்கள். அப்படி மறுப்பதற்கான காரணங்கள் என்ன? பெயர் மாற்றும் இந்த முயற்சியில் அரசாங்கம் விரைவில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒருவர் பெயர் கருப்ப பிள்ளை. இன்னொருவர் பெயர் பொன்னம்பலம்.

The Board had stated that there was no reason to act on a solitary representation in the matter. So, the Board has not favoured the proposal.

[1970 டிசம்பர் 2

## மாயூரம் பகுதியில் பழவாற்றுக்குக் கரை அமைத்தல்

* 96 வினா:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் பகுதியில் ஓடிக்கொண்டு இருக்கும் பழவாற்றுக்கு கரை அமைக்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இடையனூர் பொறி மதகிலிருந்து மண்ணிய-சங்கமம் வரை பழவாற்றின் இருமருங்கிலும் வெள்ளத்தடுப்புக் கரைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்புச் சிறு பாசனத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பணி ஏறக் குறைய முடிந்துவிட்டது.

திரு. என். கிட்டப்பா : அண்மையில் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக, மாயூரம், சீர்காழி தாலூகாக்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் இந்தப் பழவாற்றுக்குக் கரைகள் இல்லாததால் என்பதை அங்கு நேரில் வந்து பார்வையிட்ட அமைச்சர் அம்மையார் அவர்கள் நேரில் அறிந்து கொண்டிருக்கிறார்கள், நீண்டகாலமாகவே அந்தப் பகுதியினர் பழவாற்றுக்கு இருமருங்கிலும் பலமுள்ள கரைகள் அமைக்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள். ஆகவே, பழவாற்றுக்கு இரு மருங்கிலும் கரைகள் அமைப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளச் சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. என் தகவலின்படி வேலைகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன என்பதாகும். இருந்தாலும் இப்போது வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : இந்தப் பழவாற்றுக்குக் கரை அமைக்க வேண்டும் என்று அப்பகுதியில் உள்ளவர்கள் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டு வருவதற்கிணங்க, இரண்டு மைல்கள் தூரத்திற்கு ஒரு பக்கம் மட்டும் போடப்பட்டு அது முடிவடைந்திருக்கிறது. பழவாற்றுக்கு இருமருங்கிலும் கரைகள் அமைக்கவேண்டுமென்று அப்பகுதி மக்கள் நீண்டநெடுங்காலமாகக் கோரி வருகின்றனர். ஆகவே, இனிமேலாவது அப்படி பழவாற்றுக்கு இருமருங்கிலும் பலத்த கரைகள் அமைப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா ? இந்த ஆண்டிலாவது இரு மருங்கிலும் கரைகளைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேற்சொன்ன பகுதிகளில் உள்ள கரைகள் பின்னர் வெள்ளத்தினால் அரிக்கப்படும் போதெல்லாம் வலுப்படுத்தப்பட்டு நல்ல தரத்திற்குக் கொண்டு வரப்படும். வடிகால் நேரடியாக விழுகின்ற சிலயிடங்களில் வடிகால் வேலையை முறைப்படுத்துவதற்கான மதகுகளை அமைப்பது அவசியமாக உள்ளது. இது குறித்த செயற்குறிப்புகள் ஏற்கனவே



1970 டிசம்பர் 2]

அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அன்னியாறு சங்கமத்திற்குக் கீழிருந்து உப்பாண்டம் வரை பழவாற்றில் வெள்ளத் தடுப்புக் கரைகள் அமைப்பதும் அவசியமாக வுள்ளது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக கீழ்த் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றுக் கரைகள் பூராவும் உடைந்து போயிருப்பதனால் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி, வருகிற கோடை காலத்திலாவது கரைகளைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சீர்ப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து : தற்போது பெய்த மழை காரணமாகப் பழவாற்றுக்கு இருமருங்கிலுமுள்ள பயிர்கள் அநேக ஆயிரம் ஏக்கர்கள் நாசமாகியிருப்பதை அமைச்சர் அம்மையார் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளும், தனி நபர்களும் அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டது பழவாற்றுக்குக் கரையே இல்லை என்பதை அரசு உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆக்க வேலையில் ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பதில் கூறிவிட்டேன். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கரைகள் அமைக்கும் பணிக்கு திரு. கிட்டப்பா அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன் —அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## திருவண்ணாமலை—தானிப்பாடி சாலை வேலை

* 97 வினா.—திரு. கே. சகாதேவக் கண்டர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தானிப்பாடி போகும் நெடுஞ்சாலையில் ராதாபுரம் கிராமத்தில் இருந்து சுமார் ஒரு மைல் நீளத்திற்கு கருங்கல் பேபி ஜல்லிகள் ரோடின் ஓரமாக திப்பைகள் கட்டி வைக்கப்பட்டு சுமார் மூன்று ஆண்டுகளாக ரோடு போடாமல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருவண்ணாமலை—தானிப்பாடி சாலையில் (அரசு சாலை) ராதாபுரம் கிராமம் அருகில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்றும், சாலையோரங்களில் சாலை போடும் பொருட்கள் எவையும் கொட்டிவைக்கப்படவில்லை என்றும் தலைமைப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணிகள்) அறிவித்து உள்ளார்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலைப் பணித்துறையால் காண்டிராக்ட் கோரப்பட்டு, அதற்கான டேவணித் தொகை கட்டி, ஜல்லிகளைப் போட்டு ரோடு ஒரு மைல் நீளம் போட்ட பிறகு, ஆளும் கட்சிக்கு எதிராக வேலை செய்தார் என்று அந்த வேலையை ஒப்படைக்காமல் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? கட்டப் பட்ட டேவணித்தொகை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி திருப்பித் தரப்படவில்லையென்றால், அதைத் திருப்பித்தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்தில் உள்ள விவரப்படி, திருவண்ணாமலை தானிப்பாடி சாலையில் ராதாபுரம் கிராமம் அருகில் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். போதிய விவரம் எழுதிக்கொடுத்தால், தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

## *Entry of non-Hindus in Temples*

* 98 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any rules have been framed by this Government to be observed when followers of other religions visit Hindu temples in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) சட்ட மன்றப் பேரவையில் முதலமைச்சர் தெரிவித்த அறிக்கையை யொட்டி, இந்து சமய அறக்கட்டளைத் துறை ஆணையாளர், தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதி விதிகளுக்கு வரைவுத் திருத்தங்களைப் பணிந்தனுப்பினார். அவை பரிசீலனையில் உள்ளன. திருத்தத்தின் நகல் ஒன்று நாளடைவில் பேரவைமுன் வைக்கப்படும்.

* * * * * *

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister whether any steps have been taken by this Ministry to see that religious sentiments of worshippers of temples are not wounded or hurt in any manner ? Whenever persons of other religions come inside Hindu temples they should respect the religious sentiments of worshippers. What steps have been taken by this Government to see that the religious sentiments are not hurt? May I know whether concrete steps in that direction have been taken recently during the last one or two months ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவரவர்களே, 5—1—1970 அன்று எச். ஆர். ஆக்ட் 3ஐ நீக்கிவிட்டபடியால், அது சம்பந்தமாக 8—4—1970 அன்று முதலமைச்சர் சட்டமன்றத்தில்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





பேசினார்கள். வெளிமதத்தினர் கோவிலுக்குள் வந்தால் என்னென்ன விதிமுறைகள் கடைப் பிடிக்க வேண்டுமென்பதைப் பற்றி எல்லாம் ஒரு "டைரக்ஷன்" கொடுத்து இருக்கிறோம், அது சம்பந்தமாகக் கூட

Under sub-rules for Rule 4, the following shall be inserted :

4 (A) Persons who are not Hindus shall be admitted into the temple provided.

(1) They are admitted only during the time when puja is not performed?

(2) They are permitted to enter upto ' Mahamandapam ' and not to the " Ardamandapam ".

(3) They inform the temple authorities of the object of their visit and enter into the temples with temple guide or if there is no guide. with a servant of the temple.

(4) They abide by the custom and usage prevailing in the temple.

(5) They shall safeguard the general and special sanctity and honour of the temple.

(6) They do not take photographs of any part of the temple without the permission of the proper authority.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தப் புதிய விதிகள் என்றிலிருந்து அமுலாக்கப்பட்டிருக்கின்றன? இதுபற்றிய ரூல்ஸ் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 21—5—1970 இது சம்பந்தமான அமென்ட்மென்ட் செய்யப்பட்டிருக்கிறது. எப்படி விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று விதிமுறைகள் கோவில் களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 8—4—1970 அன்று முதலமைச்சர் சட்டமன்றத்தில் கொடுத்த அறிக்கையை ஒட்டி இந்த விதிமுறைகள் அனுப்பப்பட்டு, அவை பின்பற்றப்பட்டு வருகிறது.

* * * *

## மீன் பிடித் தொழில் நவீனப்படுத்தப்படுதல்

*99. வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மீன் பிடித்தொழிலை நவீனமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சட்டப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.
@ 534-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த நவீனமய மாக்கப்பட்ட மீன்பிடி முறைகளை தமிழகத்தினுடைய கடலோரப் பகுதிகளில் முக்கிய இடங்களில் எல்லாம் விஸ்தரிக்க அரசு ஆவன செய்துள்ளதா? அப்படிச் செய்யவில்லையெனில் இனிமேலாகிலும் எல்லா இடங்களுக்கும் அதைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விசைப்படகுகளைப் பயன் படுத்தி மீன் பிடிப்பதற்கு ஆங்காங்கு மீன்பிடித் துறைமுகங்கள் தேவை. அவைகளை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்காருடைய அனுமதியும் தேவை. ஆகவே, பல்வேறு இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் வேண்டும் என்று சொல்லி மத்திய சர்க்காருக்கு அனுப்புவதற்கு நகல் தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலூகாவில் உள்ள கடலோரக் கிராமங்களில் எறு என்ற நல்ல வகை மீன் கிடைக்கிறது. கேரளாவிலிருந்து காரில் வந்து வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். இங்கே உள்ள மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய "கார்ட்ச்"களை அவர்கள் பாது காத்து வைக்கக்கூடிய அளவில் ஐஸ் பிளாண்டுகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை மனதில் வைத்து திருச்செந்தூர் தாலூகாவில் பெரியதாளையில் ஐஸ் பிளாண்டு சிறிய முறையிலாவது அமைப்ப தற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுதே பல இடங்களில் ஐஸ் பிளாண்டு வைத்து தனியார் கேட்கிறவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாகக் கட்டுவதற் கான சூழ்நிலையும் இருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, நார்வே, ஜப்பான் நாடுகளிலிருந்து பாக்டரி ஷிப் தூத்துக்குடி, கன்யாகுமரி வந்து ட்யூனா ஃபிஷ் பிடித்து பாக் பண்ணி வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகிறது. நம்முடைய மாநில அரசும் அப்படிப்பட்ட பாக்டரி ஷிப்களை வைத்து நவீன முறையில் மீன்பிடித் தொழில் இயங்கச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நாம் இதுவரையில் மீன்பிடித் தொழிலை ஒரு சமுதாய அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் திட்ட மாகவே வைத்திருக்கிறோம். இந்தத் தொழிலை விஸ்தரிக்கவேண்டு மென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. 1955-ம் ஆண்டிலிருந்துதான் இந்த விசைப் படகுகளைப் பயன்படுத்துகின்ற முறையை நாம் கையாண்டு கொண்டு வருகிறோம். அதற்கு வேண்டிய விசைப் படகுகளைக் கட்டுவதற்கு ஓரளவுக்கு சமாளித்துக்கொள்கிற சூழ்நிலை இருந்தாலும், இயந்திரங்கள் வாங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக, நல்ல இயந்திரங்களை வெளி நாடுகளி லிருந்து தருவிப்பதற்குக் கொஞ்சம் தடை இருக்கிறது. இதன் காரணமாக இந்தத் தொழிலை விஸ்தரிக்க நினைத்தாலும், விஸ்தரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மீன்பிடிக்கான இரு துறை முகங்கள் குளச்சல், லீபுரம் கன்யாகுமரி ஜில்லாவில் இருக்கின்றன. அண்மையில் மத்திய அரசு நிபுணர்கள் வந்து அவைகளைப் பார்வை யிட்டார்கள். அது சம்பந்தமாக மீன்பிடித் துறைமுகத்தை விரிவு படுத்துவதற்குக் குளச்சல், லீபுரத்தில் ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாடு அரசு சார்பாக 8 இடங்களில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கவேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது. முதல் நிலையாக அதற்கு வேண்டிய அதிகாரிகள் இப்பொழுதுதான் சாங்ஷன் செய்யப்பட இருக்கிறது. கூடிய விரைவில் செய்யப்படும். 8 துறைமுகங்கள் தமிழ் நாட்டில் ஏற்படுத்துகின்ற முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே அதிகமாக இராமநாதபுரம் பகுதியிலே மீன் பிடிக்கப்படுகிறது. அந்தப் பகுதியிலே படகுத் துறை இல்லாத காரணத்தினால் விசைப் படகுகளை உபயோகித்து முறையாக மீன் பிடிப்பதற்கு மீனவர்கள் மிகுந்த கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. மூக்கையூர், மண்டபம் பகுதிகளில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆண்டு ஒன்றுக்கு சென்ற ஆண்டு கிட்டத்தட்ட 195 படகுகள் கட்ட முடிந்தது. ஆனால், 2,500 படகுகள் தேவைப்படுகின்றன. மீனவர் சங்கங்களும், தனியார்களும் கேட்கிறார்கள். நம் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்குப் படகுகள் கட்டிக் கொடுக்க முடியவில்லை. நான் ஏற்கனவே சொன்னபடி, அதற்கு வேண்டிய நல்ல இயந்திரங்கள் கிடைக்கவில்லை. கிடைக்கும்பொழுது எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : 1967-ம் ஆண்டில் இந்தப் பேரவை யின் மதிப்பீட்டுக் குழு இந்த மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக அண்டை மாநிலமாகிய கேரளாவில் எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டு, கிட்டத்தட்ட மீன்பிடித் தொழிலினால் அந்த மாநிலத்திற்கு 20 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி வருகிறது என்று அறிந்து, கீழக் கடற்கரை ஓரத்தில் முழுவதும் நல்ல வகை மீன் கொண்ட கடலோரம் மிக்க தமிழகத்தில் எந்த வகையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யலாம் என்று பரிந்துரை செய்து, அதற்கான விரிவான அறிக்கை அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதன் மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்த அறிக்கையைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. பொதுவாக மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதுதான் நோக்கம். இருந்தாலும் 25, 30, 32, 36, 43 அடிக்கு மேலே உள்ள படகுகள் தமிழ் நாட்டில்

இல்லை. கேரளாவில் 55, 60 அடிக்கு மேலே உள்ள படகுகள் அதிகமாக இருக்கின்றன. அதனால் அங்கே மீன்பிடித் தொழில் அதிகமாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் புதிதாக நாம் அப்படிப்பட்ட படகுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகக் கல்கத்தாவிலுள்ள ஒரு நிறுவனத்தில் 57 அடி படகுகள் நான்கு புதியதாகக் கட்டச் சொல்லியிருக்கிறோம். ஒரு படகு விலை கிட்டத் தட்ட ரூ. 9 லட்சம் ஆகிறது. அவைகளில் நவீன கருவிகளெல்லாம் பொருத்தப்பட்டிருக்கும். அவைகள் வந்த பிறபாடு இந்தத் தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய டிரைனிங் சென்டர்ஸ் ஏற்படுத்தப்பட்டு இந்தத் தொழில் அபிவிருத்தி செய்யப்படும்.

ஹாஜி ம. மு. பீர். முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கு 8 இடங்களைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவைகள் எவை எவை? அவைகளில் தென்பாண்டி மண்டலத்திலுள்ள காயல்பட்டிணம், குலசேகரப் பட்டிணம் ஆகிய இடங்கள் சேர்ந்திருக்கின்றனவா? அப்படி அவைகளுக்கு இடம் தரப்படவில்லையென்றால், 8 இடங்களோடு அரசு இந்த இரண்டு இடங்களையும் சேர்த்து, 10 இடங்களாக மாற்றி, இந்த இடங்களையும் மீன்பிடித் துறைமுகங்களில் இடம் பெறச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : குறைந்தது 8, எனவே அது 10 இடங்களாகக்கூட ஆகலாம், 12 கூட ஆகலாம். 8 இடங்களை வைத்துப் பரிசீலனை செய்து பிளான் முதலில் தயார் செய்யவேண்டிய காரணத்தினால், 8 இடங்கள் என்று சொன்னேன். குறைந்தது 8 இடங்கள். கடற்கரை நீளத்திற்கு 10, 15 கிலோ மீட்டருக்கு இடையே ஒரு துறைமுகம் இருப்பது நல்லது என்று சொல்கிறார்கள். 8-தான் என்பது இல்லை. கூடவும் ஆகலாம், குறையவும் ஆகலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தூத்துக்குடியில் வசிக்கிற மீனவர்களுக்கு இப்படிப்பட்ட விசைப் படகுகள் அதிகமாகத் தரப் படவில்லை. தூத்துக்குடி கடல் பகுதியில் கேரளாவிலிருந்து அதிகமாக விசைப் படகுகளில் மீன் பிடிக்கிறார்கள். அதனால் இரண்டு சாரார்களுக்கும் தகராறு இருந்ததே? அதைத் தீர்த்து வைக்கின்ற முறையில் தூத்துக்குடி பகுதியில் இருக்கும் மீனவர்களுக்கு விசைப் படகுகள் தரப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கிற படகுகளில் எவ்வளவு ஒதுக்கலாம் என்ற விதிமுறை இருக்கிறது. படகுகள் கோரி எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ அவற்றை வைத்து குலுக்கு முறையில் தேர்ந்தெடுத்து படகுகள் வழங்கப் படுகின்றன. கிடைக்கின்ற படகுகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் படகுகள் ஒதுக்கப்படுகின்றன.





*Recruitment work in State Electricity Board*

* 100 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be placed to state—

(a) whether sanction of extra staff for attending to the recruitment work for the State Electricity Board was made during the year 1969 ; and

(b) if so, the details thereof and whether such sanction of staff was based on the Service Commission Regulations?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஒப்பளிப்பு பெற்ற கூடுதல் பணியாளர் விவரம் பின்வருமாறு :—

ரூபாய் 375—20—475 சம்பள வீதத்தில் நேர்முக உதவியாளர்—ஒருவர்.

ரூபாய் 240—10—330 சம்பள வீதத்தில் முதுநிலைக் கண் காணிப்பாளர்—ஒருவர்.

ரூபாய் 190—7½—250 சம்பள வீதத்தில் மூன்று இளநிலைக் கண்காணிப்பாளர்கள்—மூவர்.

ரூபாய் 125—6—185 சம்பள வீதத்தில் உதவியாளர்கள்—பதினாறு பேர்.

ரூபாய் 90—5—140 சம்பள வீதத்தில் இளநிலை உதவி யாளர்கள்—20, தட்டச்சர்கள்—6.

ரூபாய் 50—1½—70 சம்பள வீதத்தில் கடைநிலைப் பணியாளர்கள்—இருவர்.

தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தின் விதிமுறைகளின் அடிப்படையில் மேற்கண்ட பணியாளர்க்கான ஒப்புதல் அளிக்கப் படவில்லை. ஆனால் வாரியத்தின் அனுபவத்தைக் கொண்டும் இதற்கு முன்னர் பணியாளர் எவ்வாறு பணியில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனரோ அதன் அடிப்படையிலும் இந்தப் பணியாளர் நியமிக்கப்பட்டனர்.

Dr. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister the exact recommendations of the Chief Engineer for Electricity and whether those recommendations given by the Chief Engineer for Electricity were accepted by this Government and whether there is any difference between the recommendations of the Board and those finally accepted by this Government? Also, may I know whether it is not a fact that originally a large number of applications were received because the qualifications were not clearly prescribed but later on the Board came forward with some qualifications with regard to the qualifications? As a result of this, a large number of persons had to spend Rs. 7 each, unnecessarily for their applications. What is the action taken by the Government to regularise these anomalies ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கேட்ட கேள்விக்கு விவரம் கொடுத்தேன். சர்வீஸ் கமிஷன் முறைப்படி செய்கிறது என்றாலும், அவர்கள் ஒரு யார்ட்-ஸ்டிக் வைத்திருக்கிறார்கள். ஒரு லட்சம்

[1970 டிசம்பர் 2

விண்ணப்பங்கள் விற்கப்பட்டாலும், 90,000-தான் பூர்த்தி செய்யப் பட்டவை. சர்வீஸ் கமிஷன் முறைப்படி செய்தால் அதிகம் ஸ்டாப் போட்டிருக்கவேண்டும். வாரியத்தில் குறைந்த அளவில் ஸ்டாப் நியமிக்கப்பட்டனர். சீப் எஞ்ஜினியர் பரிந்துரைபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is not a fact that originally some qualifications were prescribed for the applications but later on when a large number of applications started pouring in, the Chief Engineer or the Chairman of the Board prescribed higher qualifications? As a result of it, about 20,000 applicants had unnecessarily to spend Rs. 7 each. My original question is that the extra staff recruited by the Government has not been sufficient and there is an extra load on the employees because of the reduction of staff. May I know whether any complaint has been received from the employees about the extra load and why the Board has not sitpulate the qualifications in the beginning itself?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. தனிக் கேள்வி போட்டால், முழு விவரமும் கொடுக்கலாம்.

திரு. நா. வீரராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் நிறைய பேர்களைப் போட்டால் வேலைக் குறைவு இருக்கும் என்றார்கள். அமைச்சர் அவர்களும் சர்வீஸ் கமிஷனின் யார்ட் ஸ்டிக் படி போட்டிருந்தால் அதிகம் நியமிக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். மின்சார வாரியம் அதிகாரிகளை பார்ட்-டைம் ஆக மாலை நேரங்களில்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. நா. வீரராசாமி : கிளார்க், அஸிஸ்டெண்ட் இவர்களை யெல்லாம் பார்ட்-டைமாகப் போட்டு வேலை வாங்கியதால்தான் குறைவானவர்கள் போதுமானதாக இருந்து அதிகமானவர்களுக்கு அவசியம் ஏற்படவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. முதல் மூன்று கேள்விகளும் பிறிதொரு நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1970 டிசம்பர் 2]

## 2. அவையுரிமைக் கேள்வி

### கூட்டுறவுத் துறை அமைச்சர் மீது எழுப்பப்பட்ட அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மீது உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருக்கிறார்கள். அது வருமாறு :—

"கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் அவர்கள் மீது கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுக்கின்றேன் :—

கடந்த 27—11—1970-ஆம் நாளன்று தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவைப் பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது, திருத்தத் தீர்மானத்தின்போது பேசிய என்னுடைய பேச்சுக்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசினார்கள் :—

"மதுரை மாவட்டத்தில் மொத்தம் 11 நிலவள வங்கிகள் இருக்கின்றன. அதில் எந்த நிலவள வங்கி சரியான அளவுக்கு வசூல் செய்யவில்லையோ, வராக் கடன் அதிகமாக இருக்கிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கொடைக்கானல் நிலவள வங்கியில் வராக்கடன் வசூல் செய்யாமல் இருப்பது 9 சத வீதம்; நடவடிக்கை எடுக்கவில்லை; போடியில் 0; உசிலம்பட்டியில் 0; வரவேண்டிய பாக்கியெல்லாம் வசூல் செய்து விட்டார்கள். பழனியில் 0; மேலூரில் 15 சதவிகிதம்; உத்தம பாளையத்தில் 0; சோழவந்தானில் 4 சதவீதம் நிலுவை. மதுரையில் 0. இதிலே நல்ல முறையிலே நடக்கும் நிலவள வங்கி என்று பார்க்கும்போது எவை எவை வசூல் பண்ணமல் இருக்கின்றன என்று பார்க்கும்போது மற்றவைகளெல்லாம் குறைவாக இருக்கும்போது திருமங்கலத்தில் மட்டும் வராக் கடன் நிலுவையாக இருப்பது 32 சதவீதம். நான் குறிப்பிட்டது 30—6—1970-ல் உள்ள நிலைமை.

மதுரை மாவட்டத்தில் கட்சிக் கண்ணோட்டத்தோடு செயல் பட்டிருந்தால் நடவடிக்கை எடுத்திருக்கலாமே, 'சூபர்சீட்' செய்திருக்கலாமே. அப்படிச் செய்யவில்லை. 32 சதவீதம் வராக் கடன் வசூல் செய்யாமல் இருக்கும்போது கூட எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே. இது என்ன கட்சிக் கண்ணோட்டமா ? இது ஜூன் மாதத்தில் இருந்த நிலை. இன்றைக்கு இருக்கும் நிலை செப்டம்பர் முடிய உள்ள நிலை என்ன? இன்றைக்கு 85 சதவீதம் கொடுத்த கடனில் வசூல் ஆகவில்லை திருமங்கலத்தில்.

மாண்புமிகு திரு. சித்தன் தலைமையில் இயங்கும் நிலவள வங்கியிலேயே இப்படி இருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே. அதைப்பற்றி பாராட்டிச் சொல்லக்கூடாதா? கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் செயல்படுகிறோம் என்பதைக் காட்டத்தான் இதைச் சொல்கிறேன் என்று பேசினார்கள்.

அதற்கு உடனே நான் "On a point of personal explanation, Sir என்று ஆரம்பித்து "நான் தலைவராக இருக்கின்ற திருமங்கலம்

நிலவள வங்கியைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இந்த மன்றத்திற்குக் கொடுத்த தகவல் சரியான தகவல் அல்ல என்பதை இன்னும் 2 நாளில் நிரூபிக்கிறேன்" என்று சொன்னேன்.

திருமங்கலம் நிலவள வங்கியில் 30—6—1970-ஆம் தேதியோடு முடிந்த ஆண்டுக்கு வசூல் செய்யப்படவேண்டிய கடன் தொகை Demand ரூ. 4,11,057.09 வசூல் செய்யப்பட்ட தொகை collection ரூ. 3,71, 285.92. எனவே வசூல் செய்யப்படாமல் அதாவது வராக்கடனாக இருந்த தொகை overdue ரூ. 39,772.03. ஆக வராக்கடனின் சதவீதம் 9.68 ஆகும்.

இவை திருமங்கலம் நிலவள வங்கியின் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட சரியான புள்ளி விவரங்களாகும். இந்த விவரங்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுடைய கவனத்திலிருந்து நிச்சயமாகத் தப்பியிருக்க முடியாது. ஏனெனில் நான் கூறியுள்ள இந்த விவரங்கள் அனைத்தும் மதுரையில் உள்ள நிலவள வங்கி களுக்கான மாவட்டத் துணைப் பதிவாளர் Deputy Registrar for Land Development Bank அவர்களுக்கு 1969-70-ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் மதுரையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளின் உதவிக் காரியதரிசியிடம் மாநில நிலவள வங்கியின் நிர்வாகம் குறித்து இப்பேரவையில் கூறிய விவரங்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் வங்கியைப்பற்றி இந்தப் பேரவை தவறான முடிவை ஏற்பதற்கு வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட தவறான தகவல்களாகும்.

மேலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி இந்த ஆண்டு "செப்டம்பர் மாதம் முடிய 85 சதவீதம் கொடுத்த கடனில் வசூலாகவில்லை திருமங்கலத்தில்" என்று சொல்லுவதும் இந்தப் பேரவையின் கவனத்தை தவறான திசைக்குத் திருப்புவதாகும். ஏனெனில், ஜூன் மாதம் முடிய உள்ள தவணைக் கடந்த பாக்கித் தொகையான ரூ. 39,772.03-லிருந்து மேலும் ரூ. 2,628.52 வசூல் செய்து செப்டம்பர் முடிய உள்ள வராக்கடன் தொகை ரூ. 37,143.51. அதாவது 9.03 சதவீதம். எனவே, செப்டம்பர் முடிய 85 சதவீதம் வசூல் ஆகவில்லை என்று சொல்வதும் வேண்டுமென்றே கூறப்பட்ட தவறான தகவலாகும்.

எனவே முதல் தோற்றத்திலேயே (Prima Facie) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு 27—11—1970-ஆம் நாளன்று அளித்த விவரங்கள் தவறானவை என்றும், அதன் காரணமாக இந்தப் பேரவையின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆகவே, இப்பிரச்சினையை உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று 30—11—1970 அன்று



கடிதம் கொடுத்திருக்கிறார்கள் திரு. சித்தன் அவர்கள், திருமங்கலம் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியைப்பற்றி ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதாவது

| | | |
|---|---|---|
| 30th June 1970 Demand .. .. | RS. 4,11,057 | 95 |
| 30th June 1970 Overdues .. .. | RS. 39,772 | 03 |

Percentage of Overdues as on 30th June 1970.. 9·68 %.

என்று, for Secretary என்பதற்குப் பதிலாக Superintendent கையெழுத்திட்டு சான்று கொடுத்திருக்கிறார்கள்.

இன்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

On 27th November 1970 the Hon. Member, Thiru N. S. V. Chithan gave the following undertaking to the Assembly :—

"நான் தலைவராக இருக்கின்ற திருமங்கலம் நிலவள வங்கியைப் பற்றி (கூட்டுறவுத் துறை) அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இந்த மன்றத்தில் கொடுத்த தகவல் சரியான தகவல் அல்ல என்பதை 2 நாளில் நிரூபிக்கிறேன்."

I enclose herewith the confirmation letter from the Co-operative State Land Development Bank that overdues of Tirumangalam Land Development Bank as on 30th June 1970 (end of the Co-operative Year) is 32.04 per cent exactly as stated by me in the House.

What is more, this overdue position is within the knowledge of the Hon. Member, as he attended the meeting of the Board of the State Land Development Bank on 30th August 1970 in which the above figure was placed and recorded.

For the Current Co-operative Year also, the figure given by me in the House related to the position as on 30th September 1970 as supplied by the State Land Development Bank (of which the Hon. Member is a Director) and received by the Registrar of Co-operative Societies. The Hon. Member in his letter has not dealt with any figures relating to the current Co-operative Year.

Therefore, the Hon. Speaker may kindly take suitable action against the Hon. Member Thiru Chithan for—

(1) Failing to keep the undertaking given by him to the House on 27th November 1970.

(2) Failing to give a correct statement of his assets to the House, as he is the President of the Land Development Bank, Tirumangalam, and owns shares in the Bank.

A copy of his statement to the House is attached.

Yours faithfully,
(Sd.) Si. Pa. Aditanar

என்று எழுதிவிட்டு, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியினுடைய தலைவர் அவர்கள் கொடுத்த கடிதத்தையும் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கடிதம் பின் வருமாறு :—

To

The Gazetted Personal Assistant to the Hon. Minister for Co-operation, Madras.

Sir,

With reference to your letter, dated 1st December 1970 we *confirm* the following figures relating to the Tirumangalam Primary Co-operative Land Development Bank in respect of the Demand, Collection and Balance as on 30th June 1970 :—

| Name of the Primary Bank. (1) | Demand for the year 1969–70. (2) RS. | Recoveries against Demand 1969–70 (3) RS. | Overdues as on 30–6–1970. (4) RS. | Percentage of over-dues. (5) |
|---|---|---|---|---|
| **Madurai district 59, Tirumangalam.** | 4,11,058 | 2,78,339 | 1,32,719 | 32·04 /. |

2. We also confirm that the Demand-Collection-Balance statement containing the above figures was also placed before the Board of Directors of the State Land Development Bank, at the meeting on 30th August 1970 and that it was resolved to record the statement.

3. Thiru N. S. V. Chithan, B.A., M.L.A., was among the Directors present at the above meeting.

4. A copy of the minutes of the above meeting and the Demand-Collection-Balance Statement placed before the Board are enclosed.

Yoursfaithfully,
(Sd.) ———,
*Chairman.*

என்று கொடுத்துவிட்டு காபியையும் கொடுத்திருக்கிறார்கள். 30—8—1970-ம் தேதி அன்று மாலை 3 மணிக்கு சென்னையில் நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தின் நடவடிக்கைகளில் ஆஜரானவர்களில் திரு. என். எஸ். வி. சித்தன், பி.ஏ., எம்.எல்.ஏ. அவர்களுடைய பெயர் 35-வது எண் வரிசையில் இருக்கிறதென்றும், பொருள், மாநில நிலவள வங்கிகள் 30—6—1970 முடிய மெம்பர்களின் தவணைப் பாக்கித் தொகை விபரம் என்றும், தீர்மானம் 14 என்றும் பதிவு செய்யப்பட்டது என்றும் இருக்கிறது. அதிலே 59-வது வரிசை எண் உள்ள திருமங்கலம் பிரைமரி வங்கியின் 1969-70-க்கான டிமாண்ட் தொகை ரூ. 4,11,058 என்றும், ரெகவரியான தொகை ரூ. 2,78,339 என்றும், ஓவர் ட்யூ தொகை ரூ. 1,32,719 என்றும், 32.04 சதவிகிதம் என்றும் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.





ஆக, இருவரும் கொடுத்திருக்கிற ஆதாரங்களைப் பார்த்து, இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி முடிவு கூற, பிறிதொரு நாளைக்கு நான் இதை எடுத்துக்கொள்கிறேன்.

## 3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (அ) நெல்லை–குமரி மாவட்டங்களுக்கிடையே பயணம் செய்ய மாணவர்களுக்கு அளித்துவந்த கட்டணச் சலுகை நிறுத்தப்பட்டதும், அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, திரு. நா. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்—

"The unrest among the students due to cancellation of the concession ticket for the travel from Tirunelveli district to Kanyakumari district by the Joint Director of Transport, Kanyakumari branch."

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைப்பதற்கு உரியது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி, திரு. நா. சௌந்தரபாண்டியன் அவர்களை அழைக்கிறேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த மாவட்டங்களில் 1967-ம் வருடத்திலிருந்து ட்ரான்ஸ்போர்ட் பஸ் வழித்தடங்கள் ஏற்பட்ட நேரத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எல்லா மாணவர்களுக்கும் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் இப்படிப்பட்ட கட்டணச் சலுகையை நிறுத்தியிருக்கிறார்கள். இதனால் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏழை எளிய மாணவர்கள் தங்களுடைய படிப்பை நிறுத்திவிடக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. ஏழை, எளிய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தொடர்ந்து படிக்க வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கவலையை உண்டாக்கி வருகிறது. இதன் காரணமாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி கிளர்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக கல்லூரி மாணவர்களுக்கும் உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தொடர்ந்து கட்டணச் சலுகை

வழங்குவதுதான் நியாயம் என்று தெரிகிறது. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்து மாணவர்களுக்கு இந்தக் கட்டணச் சலுகை மறுக்கப்படுவது வருந்தத்தக்கதாகும். திருநெல்வேலி மாவட்ட எல்லையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்துப் பதினைந்து மைல் தூரத்திற்குள் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்தில் 50 மைல் தூரத்தில்தான் கல்லூரி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் அகஸ்தீஸ்வரம், நாகர்கோயிலில் உள்ள கல்லூரிகளில் படிப்பதன் காரணமாகக் கட்டணச் சலுகை தொடர்ந்து அளிப்பது நியாயம். மாணவர்களுக்கு இந்தக் கட்டணச் சலுகையை அளிக்க வேண்டும். இதற்காக அங்குள்ள மாணவர்கள் ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தத் திட்டமிட்டிருப்பதால், அது குறித்து விவாதிக்க இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் நிர்வாகத்தில் இருந்தபோது மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. நமது அரசு போக்குவரத்துத் துறையை ஏற்றுக்கொண்டபோது, அந்தக் கட்டணச் சலுகை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தின் மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கட்டணச் சலுகையால் நமக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் இழப்பு ஏற்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்த மதிப்பு 12 லட்சம் ரூபாய் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே இந்தச் சலுகை திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. 1967-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசுடமைக் கொள்கையை விரிவுபடுத்தப்பட்டபோது, அந்த மாவட்டத்தில் இந்த வழித்தடங்களிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டணச் சலுகை சரியல்ல என்று ஆடிட் அப்ஜெக்ஷன் கூறியிருக்கிற காரணத்தால் இந்தச் சலுகை நிறுத்தப்பட்டது. ஆடிட் அப்ஜெக்ஷன் செய்திருக்கிறார்கள். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கிளர்ச்சி என்று பயமுறுத்துகிறார்கள். இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 280 மாணவர்களுக்கும் கொடுத்த சலுகையை ஆடிட் அப்ஜெக்ஷன் செய்திருக்கிறது. கனம் உறுப்பினர்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும்.

எனவேதான் அதனைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் அதிகாரிகள் இருக்கிறார்கள். பரிசீலித்த பிறகுதான் இதுபற்றி முடிவு செய்யப்படும் என்று தெரிவித்து இதுபற்றிய ஒத்திவைப்புக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.



(ஆ) நாகூர் பேருந்து நிலையத்தில் காத்திருந்த மாணவர்கள் தாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நாகூர் பேருந்து நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருந்த காரைக்கால் அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதன் காரணமாக அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க என்று ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் திரு. ஞானசம்பந்தம் அவர்கள் கொடுத்துள்ளார்கள். இது அரசின் அன்றாட அலுவல்களுக்குட்பட்ட ஒன்றாதலின் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

(இ) தூத்துக்குடியில் திரு. பரமசிவம் கொலை செய்யப்பட்டதும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் கோமதி சங்கர தீட்சதர், டி. மார்டின், என். எஸ். வி. சித்தன், க. ராமமூர்த்தி ஆகியோர் கடந்த அக்டோபர் மாதம் தூத்துக்குடியில் திரு. பரமசிவம் கொலை செய்யப்பட்டதும், அதனால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கில்லாத காரணத்தினால் அவற்றை எடுத்துக்கொள்ள முடியாமையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா (ச. பே. ம. எண் 45/1970).

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண். 45/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

*30—11—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. கே. வி. சுப்பையா] [1970 டிசம்பர் 2

பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாயத்தில் பாரம்பரிய அர்ச்சகர் பதவி ஒழிக்கப்பட வேண்டுமென்றும், உரிய கல்வித் தகுதிகளை உடையவர்கள் ஏற்புடைத்த நிறுவனங்களில் அர்ச்சகர் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் அடங்கிய சமய அமைப்பு ஒன்று இந்தப் பாரம்பரிய அர்ச்சகர் தொழில் முறைக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், சாதி, சமய அல்லது வகுப்பு வேறுபாடின்றி எல்லோருக்கும் இந்தத் துறையில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார கல்வி மேம்பாடு பற்றிய குழுவினர் தமது அறிக்கையில் 1969-ல் தமது கருத்தைத் தெரிவித்தனர். தமிழ்நாட்டில் அர்ச்சகர்கள், குருக்கள், பூசாரிகள் யாவரும் இந்து கோயில்களில் உள்துறை ஊழியர்களாவர். உள்துறை ஊழியர்களின் கடமைகள், முக்கியமாகத் தெய்வ வழிபாட்டுக்குரிய பூசைகள், சடங்குகள், வழிபாடுகள் நடத்துவது, மந்திரங்கள், வேதங்கள், பிரபந்தங்கள், தேவாரம், பாராயணம் செய்தல், அத்தகைய பூசை பாராயணங்களில் சம்பந்தப்பட்ட இதைப் போன்ற தெய்வ வழிபாடுகள் தெய்வ நற்பணிகள் புரிவது பற்றிய தாகும். தீண்டாமையை அறவே ஒழித்து சமுதாயச் சீர்திருத்தம் செய்வதற்காக, சாதி வேறுபாடின்றி எல்லா இந்துக்களுக்கும் இந்து ஆலயங்கள் ஏற்கனவே திறந்துவிடப்பட்டன. மேலும், காஜுல தசரதராம ராவுக்கும் ஆந்திரப் பிரதேச மாநிலத்துக்குமிடையே நடைபெற்ற வழக்கில் தலைமை நீதி மன்றம் பின்வருமாறு தீர்ப் பளித்தது. “கிராம அதிகாரிகள் நியமன விஷயத்தில் பாரம்பரிய உரிமைக் கொள்கையை உள்ளடக்கிய தமிழ்நாடு 1895-ஆம் ஆண்டு பாரம்பரிய கிராமப் பதவிகள் சட்டத்தின் 6 (1) பிரிவு சந்ததி உரிமை என்ற ஒரே காரணத்தினால் ஒருதலைப் பட்சமாக அமைந் துள்ளது. எனவே, இப்பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (2) பிரிவுக்கு முரணானதும் செல்திறனற்றதும் ஆகும்”. இத் தீர்ப்பையொட்டி, மேற்சொன்ன பாரம்பரிய கிராமப் பதவிகள் சட்டத்தை முன்னரே நாம் ரத்து செய்து விட்டோம்.

இதையொட்டி மேற்சொன்ன குழுவினரின் பரிந்துரைகளுக் கிணங்கவும், மேலே குறிப்பிட்டுள்ள தலைமை நீதிமன்றத் தீர்ப்பை யொட்டியும், சமூகச் சீர்திருத்தத்தில் மேலும் எடுக்கப்படுகிற ஒரு நடவடிக்கையாகவும், இந்து கோயில்களில் எல்லாப் பகுதிகளின் நிய மனத்திலும் பாரம்பரியக் கொள்கையை நீக்குவதென்று அரசு முடி வெடுத்தது.

மேற்சொன்ன முடிவுக்கு செல்திறனளிக்கும்பொருட்டு, 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய, அறக்கட்டளைகள் சட்டத்தின் 55, 56-ஆவது பிரிவுகளில் திருத்தம் தேவைப்படுகிறது. மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதே தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) (சட்டமன்றப் பேரவை மசோதா எண். 45/1970) மசோதாவின் நோக்கமாகும். இதன் தொடர்பாக அவசியமான திருத்தங்களையும் இம்மசோதா செய்கிறது.

இப்போது அச்சட்டத்தின் நோக்கங்களைச் சுருக்கமாகக் குறிப் பிட்டுள்ளேன். பேரவை இப்பிரேரணையை ஏற்குமாறு வேண்டு கிறேன்.



1970 டிசம்பர் 2]

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் இது இன்றைக்கு இருக்கிற சமுதாயச் சூழ்நிலையில் சில மாற்றங்களை அடிப்படையாகத் தோற்று விக்கிற மசோதா என்றாலும்கூட, சில நடைமுறைகளை மாற்றுகிற நேரத்தில் அதனால் உருவாகக்கூடிய புதிய நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று வலியுறுத்த இதுபற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம் ஆலயங்களில் குருக்கள், பூசாரிகள் பரம்பரை முறையில் இருந்து வருவதை மாற்றுவதற்கு இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் புதிய நிலைமையைத் தமிழகத்தில் காண்கிறோம். சிலருடைய மத உணர்வுகளைப் புண் படுத்தக் கூடாது. குறிப்பாக, இந்து மதத்தில் நம்பிக்கையுள்ளவர் களின் மனத்தைப் புண்படுத்தும் வகையில் இது அமைகிறது. இன்றைய தினம் இந்தத் துறையை ஏற்று இருக்கிற அமைச்சரவர்கள் எப்படியோ தெரியாது. ஆனால் முன்பு இருந்தவர்கள், “எனக்குத் தனிப்பட்ட முறையில் தெய்வ வழிபாட்டில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, இந்த அரசு அதில் நம்பிக்கையுள்ளவர்களுடைய மனத்தைப் புண்படுத்தாது” என்று தெளிவாக்கியிருக்கிறார்கள்.

இன்றைய தினம் அர்ச்சனை செய்கிற முறை, அந்த சாத்திரங்கள் தெரிந்தவர்கள் யாராக இருந்தாலும் நியமிக்கலாம் என்பது சரி யானதாக ஆகாது. அது இந்து சமயத்திற்கு நாம் செய்கிற நன்மை யாகவும் ஆகாது. தெய்வ வழிபாட்டில் பரம்பரை பரம்பரையாக ஊறி வந்தவர்கள் அந்தப் பணியை ஏற்கிறபோதுதான் அந்தப் பணி சிறப்புடையதாக இருக்கும். பரம்பரை அர்ச்சகர் முறையை எடுத்து விடலாம் என்பதாகச் சொல்லிக்கொண்டு ஆலய வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர்களை எல்லாம்கூட அங்கே போட்டுவிட முடியும், அர்ச்சனை செய்கிற முறைகளைக் கற்றவர்கள் என்ற காரணத் தினால், இது ஆலயத்தினுடைய புனிதத் தன்மையையே பாதிக்கும். அரசைப் பொறுத்தவரையிலும் அத்தகைய ஒரு சூழ்நிலையை ஏற்படுத் தாது என்கிற உறுதி அளிக்கப்படும் என்று நினைக்கிறேன்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அர்ச்சனை முறைகளை முறையாகப் பயின்றவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்றால் பிற மதத்தினர்களும் வர முடியும். இதற்கு உடனடியாக யார் வருவார்கள். இதில் என்ன லாபம் இருக்கிறது என்று சொல்லலாம். இந்துக்களுடைய மத உணர்ச்சியைப் புண்படுத்த வேண்டுமென்று நினைக்கக்கூடியவர்களும் இல்லாமலில்லை. அதைப் பயன்படுத்திக் கொண்டு ஏன் வரமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை. இந்தச் சூழ்நிலையில் இந்த மசோதா கொண்டுவரப்படுவதானால் இரண்டு வகையான உறுதியைத் தருவார்கள் என்று எதிர்பார்க் கிறேன். இல்லாவிடில் இந்து சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ள வர்களைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காகவே கொண்டுவரப் பட்ட செயலாக இந்தத் திருத்தம் அமையும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 8 மசோதாக்கள் இருக்கின்றன. 8-ஐயும் முடிக்கவேண்டும். அவற்றை இன்றே முடிக்க வேண்டுமென்றால் நான் மற்றவர்களுக்கு நேரம் ஒதுக்கவேண்டும். அப்படி இல்லை என்றால் இன்று முடியும்வரை எடுத்துக் கொண்டு மற்றவற்றை இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளலாமா? எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லட்டும்.

THIRU R. PONNAPPA NADAR: We may not take much time. We can dispose of all the Bills.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள், எல்லோரும் பேச வேண்டும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, கொண்டு வரப்பட்ட மசோதாவினுடைய நோக்கம் பரவலாக நல்ல ஒரு மசோதாவாக இருந்தும்கூட இதிலே கொடுத்திருக்கின்ற திருத்தம் சந்தேகத்திற்கு இடம் அளிக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இதிலே பாரம்பரியத்தை ஒழித்து இந்து மதத்தினரிடையே இருக்கக்கூடிய ஜாதி வேறுபாடுகளை எடுத்து அத்தனை ஜாதியினரும் ஒரே அமைப்பு என்று இருந்தால் அதை முழுமையாக வரவேற்கிறேன். இதிலே மத வழிபாடுகளைப் பொறுத்தமட்டில் அத்தனை மக்களும் தங்களுடைய உணர்ச்சி வயப்பட்டு தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ளுவதற்கு ஆங்காங்கே மதங்கள் ஏற்பட்டன என்பதையெல்லாம் நாம் அறியலாம். சட்டங்கள் ஆயிரம் போட்டாலும் சட்டங்களை மீறக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். அந்தச் சட்டத்தை மீறி வழக்காடி, வழக்காடி வழக்கு மன்றங்களிலே சாட்சியங்கள் இல்லாத நிலைமையிலே உண்மைகூட நிரூபிக்கப்பட முடியாத நிலைமையில் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், அந்த மதங்கள் ஏன் ஏற்பட்டன என்றால் சட்டங்களே ஏற்படாத காலத்தில் தன்னைத்தானே பணிவோடு கட்டுப்படுத்திக் கொள்வதற்கான நிலைமைகளை ஏற்றுக்கொண்டு அதற்கான சக்தியைப் பெறுவதற்கு கடவுள் என்று வைத்துக் கொண்டு பலவிதமான மதங்களை ஏற்படுத்தி அந்தந்த தேசங்களில் உள்ள சூழ்நிலைகளுக்கேற்ப ஏற்பட்டதுதான் என்பதையும், அதற்காகத்தான் கீதாபோதேசம் இன்னும் புராணங்களில் வகுத்து இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அப்படி ஏற்படுத்தப்பட்ட மதங்கள் இருந்தும் சில பேர்கள் வழிபடாத நிலைமை இருக்கலாம். சில பேர்கள் அதிகமாக வணங்கக்கூடிய நிலை இருக்கலாம். ஆகவே, எல்லோரும் உணர்ச்சி வயப்படக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். கொண்டு வரப்பட்ட இந்த மசோதாவிலே பாரம்பரியத்தை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நியமிக்கப்படுகிற நபர்களைப் பார்க்கவேண்டும். அர்ச்சகர்களாக யாரும் இருக்கலாம் என்றால் இன்னின்ன முறையிலே இருக்கவேண்டும். இன்னின்ன கற்றிருக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்.



கல்விப்பாடங்களிலே எஸ்.எஸ்.எல்.சி. பாடங்களுக்கு என்று சில புத்தகங்களை வரையறுத்து விடுகிறார்கள். அந்தப் பாடங்களைப் படித்தாலே எல்லாம் தெரிந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. அதே போல இந்து மதத்தில் உள்ள அத்தனை நூல்களையும் படித்துக் கரை கண்டவர்கள் கிடையாது. அப்படி இல்லாமல் அரசாங்கத்திலே ஒரு சட்டத்தைப் போட்டு இன்னின்ன வேதங்களையும் புராணங்களையும் பயில வேண்டும் என்று சொன்னால் அவற்றைப் படித்தால் மட்டும் போதும் என்ற அளவிலே சட்டத்தைப் போட்டால், அவர்களுடைய குணாதிசயங்கள் என்ன என்பது தெரிந்து கொள்ள முடியாது. பரீட்சை நடத்தி இருக்கலாம். வேதங்கள் படித்திருக்கலாம். பாஸ் பண்ணி இருக்கலாம். ஆனால் தகுதி உடையவன்தானா என்ற நிலைமை வந்தால் பெரும் தவறான, உணர்ச்சிக்குப் பெரும் பாதகம் இந்து சமயத்திற்கு ஏற்படும் என்பதை மறுக்க முடியாது.

ஒருவன் தனிப்பட்ட முறையில் இருக்கும்போது குணத்தில் மிக மட்டமாக இருக்கலாம். பல தவறுகள் செய்தவனாக இருக்கலாம். ஆனால் ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்குப் போகும்போது அவனைப் பற்றிய குணாதிசயங்கள் என்ன. அவன் உண்மையாகவே மத உணர்ச்சி உடையவனா, இந்து மதத்தின் மீது அவனுக்கு பற்றுதல் இருக்கிறதா என்பதை யார் அறிய முடியும்? இந்துமதத்திற்குப் புறம்பான குணத்தை உடையவனாக இருந்து ஆனால் பற்று உடையவனாக வெளிக்காட்டுபவனாக இருந்து, பிழைப்புக்காக அவற்றை எல்லாம் படித்து நியமனம் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அதைவிடப் பெரிய துரதிருஷ்டமும் ஒரு பெரிய கஷ்டமுமான நிலைமை இருக்க முடியாது. அதைப்படிக்கின்ற காலத்திலேயே என்ன யோசிக்க வேண்டுமென்றால் அவனுடைய குணம், தனிப்பட்ட முறையிலே அவன் எப்படிப்பட்டவன் என்பதை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெறும் படித்தவனை மட்டும் போடக்கூடாது. அதற்கு இந்தத் திருத்தத்தில் இடம் ஒன்றும் இல்லை. பெசிபிக்காக சொல்ல வேண்டும். மொட்டையாகச் சொல்லக்கூடாது. அப்படி இருக்குமானால் தெளிவாக மதத்தைப் பிரதிபலிக்கக்கூடிய மிகுந்த ஒரு மோசமான இக்கட்டான நிலையில் கொண்டு போய் விடும். இந்த மாற்றத்தைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஆட்சியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தோடு அரசியல் ரீதியாக நான் தொடர்பும், தோழமையும் கொண்டவன். ஆனால் சமயத் துறையில் பழக்கவழக்கங்களிலே, பாரம்பரியத்திலே கொண்டிருக்கின்ற கொள்கைகளில் எனக்கும் அவர்களுக்குங்கூட வேற்றுமை இருக்கிறது. இருப்பது இயற்கை. அதை நான் மறவாமல் இந்த மசோதா கொண்டு வந்திருக்கிற நேரம், கொண்டு வந்தவர்களுடைய மனப்பான்மை, மசோதாவின் திருத்தம் இவைகளை நினைக்கின்றபோது மன நிறைவோடு ஆதரிக்கிறேன் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 டிசம்பர் 2

ஆளும் கட்சியினுடைய மதக்கொள்கை பழக்க வழக்கங்கள் எதுவாக இருந்தாலும், ஆட்சிக்குக் கடமை என்று ஒன்று இருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சியினுடைய கடமை ஒன்று இருக்கிறது. அந்தக் கடமையை ஒட்டித்தான் இத்தகைய திருத்தத்தை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திற்கு கொண்டு வரக்கூடிய கடமையை உணர்ந்து, இந்தக் கடமையை திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்கிறது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் பலமுறை திருத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தில் ஒன்றுதான் ஆலயப் பிரவேசம் என்று அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். மதாச்சாரியார், இராமானுஜாச்சாரியார், புத்தர், மகாத்மா காந்தி போன்றவர்கள் சொன்னதை வலியுறுத்துகின்ற முறையிலே இந்த மசோதா திருத்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்வேன். மதாச்சாரியார்களிடத்தும், மடாதிபதிகளிடத்தும் பற்றுக் கொண்டிருந்த திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் இந்த அறநிலையப் பாதுகாப்பு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தார்கள். இந்தப் பாரம்பரியத்தை ஒட்டித்தான் இப்போது இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்வோம். அர்ச்சகர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளப்படுவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நண்பர் இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப் போல எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொல்லவில்லை. பின்னாலே வருகின்றவர்கள் நம்முடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்தான். அவர்களும் நம்மைப்போன்றுதான் இருப்பார்கள். ஆகவே இதைப்போன்ற சந்தேகம் எழ வேண்டிய அவசியம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது ஜாதி, சமய வேறுபாடில்லாமல் என்று சொன்னார்கள். அவர்கள் சமயம் என்பது மதம் என்றுதான் நான் கருதுகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : சில சந்தர்ப்பங்களில் தமிழில் ஏற்படுகிற சங்கடம் இது ஒரு வார்த்தை சொல்லும்போது தொடர்ந்து சில வார்த்தைகள் வந்துவிடும். அந்த வகையிலே சமயம் என்று வந்திருக்கலாம். நான் அதைக் கவனிக்கவில்லை: மசோதாவைப் பொறுத்தவரையில் ஜாதி வேறுபாடுகள் இல்லாமல் என்றுதான் போட்டிருக்கிறார்கள். இது ஜாதி வேறுபாடு அற்ற தன்மையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இது இந்து மதத்திற்கு வலுவூட்டக்கூடியது. ஆதி தொடங்கி இதுதான் செய்யப்படுகிறது. இந்து மதத்தில் அழுத்தமான நம்பிக்கை உடையவன் நான். மதங்களே கிடையாது என்று சொன்ன இராமலிங்க சுவாமிகளிடம் பக்தி உடையவன் என்றாலும் கூட அனுபவ சாத்தியமாக மதங்களிலே ஏற்றத்தாழ்வு இல்லாமல் மதங்களிடையே பரஸ்பர பூசல் இல்லாமல் மதங்கள் இருக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டும், எம்மதமும் சம்மதம் என்று இராமலிங்கரின் கோஷத்தோடு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இந்துமதத்தின் அடிப்படையிலே ஜாதி வேறுபாடு உணர்ச்சி கிடையாது.



1970 டிசம்பர் 2] [திரு. ம. பொ. சிவஞானம்]

தொழிலையொட்டித்தான் வேறுபாடு ஏற்பட்டது. சங்க இலக்கியங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். ஜாதிகள் கிடையவே கிடையாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். இந்து மதத்திலே நல்ல பயிற்சி பெற்றவர்கள்கூட இதிலே அபிப்ராய பேதப் படுகிறார்கள். மதாச்சாரியர்களிடத்திலேகூட வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் அவர்கள் தீண்டாமை சாஸ்திர ரீதியாக இருந்தது இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் பூரி சங்கராச்சாரியார் அவர்கள் சாஸ்திர ரீதியானதுதான் தீண்டாமை, அது நீடிக்கவேண்டும் என்று பேசுகின்றார்கள். இந்தப் பிரச்னை மதத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையே உள்ள பிரச்னை அல்ல; அர்ச்சகர்களுக்கும் அர்ச்சகர் இல்லாதவர்களுக்கும் இடையே உள்ள பிரச்னையல்ல.

இந்த நேரத்திலே ஒன்றைமட்டும் நாம் தெளிவாகப் பார்க்க வேண்டும். இந்த மசோதா இல்லாவிட்டால் என்ன நிலைமை ஆகும் என்பதைப் பார்க்கவேண்டும். அர்ச்சகர்கள் பாரம்பரியம் என்று ஒரு குறிப்பிட்ட வகுப்பார் அல்லது குறிப்பிட்ட வருணம் உள்ளவர்கள்தான் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்ற நிலைமை தொடர்ந்தால் அர்ச்சகர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தில்லை மூவாயிரவர் என்று படிக்கிறோம். ஆனால், இப்பொழுது மூவாயிரவரும் இல்லை, முந்நூறுவரும் இல்லை: தில்லை மூவாயிரவர் பரம்பரை பரம்பரையாகப் பெண் கொடுக்கல் வாங்கல் அவர்களுக்குள்ளேயே இருந்த முயற்சி பாதுகாக்கப்படவேண்டுமென்ற எண்ணம் இன்றைக்குத் தோற்றுவிட்டது.

ஆலயத்தைப் பாதுகாப்பதா ? அர்ச்சகரைப் பாதுகாப்பதா ? அர்ச்சகரைப் பாதுகாக்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதைவிட ஆலயத்தை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். அர்ச்சகர்களுடைய வாரிசுகள் இன்றைக்கு எஞ்சினியரிங் படிக்கிறார்கள், மருத்துவம் படிக்கிறார்கள், மற்ற மற்றக் கலைகளைப் படிக்கிறார்கள். ஆங்கிலத்திலே, மீடியமாக அதையேற்றுக்கொண்டு படிப்பதிலே ஆர்வம் காட்டுகிறார்கள். நாளுக்கு நாள் இந்த நிலைமை காரணமாக . அர்ச்சகர்களுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டால் ஆலயங்கள் என்ன ஆகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அர்ச்சகர்கள் குறைகிறார்கள் என்றால் முழுவதுமாகக் குறைகின்ற வரைக்கும் நாம் காலம் வரட்டும் என்று காத்து இருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. எனவே, நாம் சில முயற்சிகளை இப்பொழுதே எடுத்தாகவேண்டும். அந்த முயற்சியிலேதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட வருணத்திற்கு எதிராக அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு எதிராக இது கொண்டுவரப்படவில்லை என்று நம்பி நான் இதை வரவேற்கிறேன். அப்படிக் கொண்டுவரப்படவேண்டும் என்று நான் விரும்புவது இல்லை.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 டிசம்பர் 2

ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைச் சேர்ந்தவர்கள்தான் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள் அந்தணர்கள்தான் இருக்கிறார்கள் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. ஆகமப்படி அமைந்த பெரிய பெரிய கோயில்களில் அர்ச்சகர்களாக வேளாளர்கள் இருக்கிறார்கள். வேளாளர்கள்தான் அர்ச்சகர்களாக இருக்கவேண்டுமென்ற ஒரு நியதி ஒரு பராம்பரியம் இருக்கிறது. அதுவும் அடிப்பட்டுப் போகிறது இந்த மசோதாவினாலே. குறிப்பிட்ட வருணம் உடையவர்களும் குறிப்பிட்ட வகுப்பாரும் தான் வரமுடியும் என்ற நிலைமை இருந்தாலும்—சாமிகளிலே கூட ஜாதி உண்டு—மாரியம்மன் கோயில்களிலே—அவை எண்டோமெண்ட் போர்டின் கீழே இருந்தாலும்—உயர்ந்தவர்களை அழைத்தாலும் அவர்கள் அர்ச்சகர்களாக இருக்க வர மாட்டார்கள். அங்கு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு ஜாதியார் தான் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள் என்ற தவறான மாயை தவறான எண்ணத்திற்குக் கொண்டுபோய் விட்டுவிடும். அவர்களிலும் அவர்களே தான் பரம்பரையாக அர்ச்சகர்களாக இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது.

இரண்டு காரணங்களுக்காக நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். அர்ச்சகர்களுக்குள் சமய மரபுகளுக்குள்ளே இந்த மசோதா கைவைக்கவில்லை. முன்னாலே ஏற்படுத்தப்பட்ட பயிற்சிக் கூடங்களை வைத்துக்கொண்டு அந்தப் பயிற்சிக் கூடங்களிலேயே சேர்ந்து பயிற்சிபெறத் தகுதியுடையவர்கள் அதிலே படித்துத் தேர்வு பெற்றவர்களைத்தான் நியமிக்கவேண்டுமென்று இதிலே இருக்கிறது. திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். பயிற்சி மட்டும் போதாது இந்து சமயத்திலே நம்பிக்கையும் வேண்டுமென்று சொன்னார்கள். எந்த கஜக்கோல் கொண்டு அதை அளப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. ரொம்ப நாட்களாக மடாதிபதிகளாக இருக்கிறவர்களிலேயே உண்மையாக யார் யார் மடாதிபதிகளாக இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியாது. எனவே அந்த அபாயகரமான கட்டத்திலே நாம் புகக்கூடாது. நம்பிக்கை பெற்றவர்தான் பயிற்சி பெறுவதற்கு வருவார். அர்ச்சகர்கள் பயிற்சி பெறுவதற்கு நூற்றுக்கு நூறு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம், ஆனால் பெருமளவுக்கு நம்பிக்கை உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் வருவார்கள். எனவே நல்ல முறையிலே அமைந்திருக்கிறது அந்த மசோதா.

இன்னொன்றும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சொன்னால் அவர்களுக்குச் சங்கடமாகப் போய்விடுமோ என்னவோ தெரியாது. இருந்தாலும் சொல்லிவிடுகிறேன். இதே மாதிரி மடாதிபதிகளும் ஜாதி அடிப்படையில் இல்லாமல் இருக்கவேண்டும். லட்சோப லட்சம் ரூபாய், கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வைத்துக்கொண்டு மடங்களை வைத்துக்கொண்டு அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மடங்களிலே வேளாளர்கள்தான் மடாதிபதிகளாக இருக்கலாம் என்ற விதி இருக்கிறது. அதிலும் குறிப்பாக இன்ன வேளாளர்தான் வரவேண்டும் என்று இருக்கிறது. மடாதிபதிகள் சீர்திருத்தம் பேசுகின்றவர்களாக இருக்கலாம்.



1970 டிசம்பர் 2] [திரு. ம. பொ. சிவஞானம்]

ஜாதியை வெறுக்கக்கூடியவராக இருக்கலாம், ஆனால் அவர்கூட ஜாதியின் பெயரால்தான் வந்திருக்கிறார் என்ற நிலைமையைத் தான் பார்க்கிறோம். அவரும் ஜாதியைத் தூக்கியெறியத் தயாராக இல்லை என்பதை நினைப்பூட்ட விரும்புகிறேன். ஆட்சி உடனே அதைத் திருத்தமாகக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லவில்லை.

எனவே, நல்ல மாறுதலை அமைதியான சூழ்நிலையில் வகுப்புத் துவேஷமின்றி வகுப்புப் பூசல்கள் இல்லாதவாறு சமரசமான முறையிலே ஜாதி ஒழிப்பு என்ற நல்ல நோக்கத்தோடு இந்து மதத்திற்குட்பட்ட சீர்திருத்தமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆலயத்திற்குள் பிற சமயத்தினர் செல்வதற்கு ஒரு எல்லை வரையறுத்து இருக்கிறார்கள். ஆனால் அர்ச்சகர்கள் அப்படி இல்லை. ஆலயத்தினுள் எங்குவேண்டுமானாலும் போகலாம். பிற மதத்தினர் ஒரு எல்லைக்குட்பட்டுச் செல்லவேண்டுமென்று—முன்பு நாம் விளக்கம் கேட்டபொழுது—தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். வழிபடுவதற்காக நாகூர் ஆண்டவர் கோயிலுக்கு இந்துக்கள் போகிறோம். ஆனால் யாரும் பூசாரியாக வந்துவிடமுடியாது. சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள மசூதிக்கு நாம் போகிறோம் ஆனால் யாரும் அங்கே பூசாரியாக வந்துவிடமுடியாது.

ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அக்கறையாகத் துணைத் தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களிலே நாம் அவற்றை ஒதுக்கிவிடுவதற்கு இல்லை. (மணியடிக்கப்பட்டது) ரொம்ப முக்கியமான விஷயம். இரண்டொரு கருத்துக்கள் சொல்லி முடித்துவிடுகிறேன். இதிலே ரொம்பப் பேச மாட்டார்கள். பயப்படவேண்டாம். இந்து ஆலயங்களைப் பொறுத்தவரையில்தான் கைவைக்கப்படுகிறது என்ற வாதமும் இருக்கிறது. முன்பு காங்கிரஸ்காரர்கள் இருந்த காலத்திலும் இந்துகளிடத்திலேதான் வருகிறார்கள் என்ற வாதம் எழுப்பப்பட்டது. இப்பொழுதும் அதே வாதம் எழுப்பப்படுகிறது. ஆனால் இஸ்லாமியர்களைப் பொறுத்தவரையில் அதிர்ஷ்டவசமாக மாறுதல்களை அவ்வப்போது கட்டுக்கோப்பாக நல்ல தலைமையின்கீழ் ஏற்றுக்கொள்கின்ற நிலைமையில் இயங்குகிறார்கள். அதைவிட நல்ல தலைமையோடு. கட்டுக்கோப்போடு கிறிஸ்துவர்கள் இயங்குகிறார்கள். தமிழ்நாட்டு ஆலயங்களிலே தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்று எப்படிக் கொண்டுவருவது என்பது இன்னும் முடியவில்லை. ஆனால் கிறிஸ்துவ ஆலயங்களை எடுத்துக்கொண்டால், ரோமிலிருக்கும், போப்பாண்டவர் அவர்கள் வாடிகன் நகரத்திலிருந்து உத்தரவு போட்டு, எந்தெந்த நாடுகளிலே சர்ச்சுகளிருக்கின்றனவோ, அங்கங்கே அந்தந்த நாட்டு மொழிகளிலே வழிபாடு நடத்த வேண்டுமென்ற சீர்திருத்தத்தை உலக நாடுகளுக்கு உத்தரவு போட்டு அமல் நடத்தினார். அப்படி தமிழ் நாட்டிலே தமிழ் வழிபாட்டு மொழியாக இருக்கிறது.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அப்படி நம்முடைய கோயில்களுக்கு எந்த மடாதிபதியாவது வழிகாட்டிவிட முடியுமா? தெய்வீகப் பேரவை என்று இருக்கிறதே அதன் மூலம் வழிகாட்டி நடத்திச் செல்ல முடிகிறதா? ஆகவே,

அந்தப் பொறுப்பை ஆட்சி ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, இந்த மசோதாவின் திருத்தத்தை நான் மன நிறைவோடு வரவேற்கிறேன் என்று சொல்லி முடிக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மசோதாவைப்பற்றி இருக்கின்ற ஒருசில கருத்துக்களைப்பற்றி என்னுடைய கருத்துக்களையும் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமனம் செய்ய இந்தத் திருத்தமானது பெருமளவில் உதவி செய்கிறது. அண்டை மாநிலமாகிய கேரள மாநிலத்திலும், இந்த அர்ச்சகர்கள் நியமனம் செய்வது பற்றி சமீபத்திலே ஒரு சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. எல்லா இந்துக்களும் அர்ச்சகர்களாக உரிமையிருக்கிறது என்று எடுத்துக்காட்டும் வகையிலே, அந்த மாநிலத்திலே, எல்லோரையும், ஜாதி இந்துக்கள் மட்டுமல்லாமல், ஏனைய தாழ்த்தப்பட்டவர்களையும் அந்தத் தொழிலில் ஈடுபடுத்த அரசாங்கம் வேண்டிய ஆணைகள் பிறப்பித்து, நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள். ஆனால் அங்கு துரதிருஷ்டவசமான நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஒருசில ஆலயங்களிலே பூசாரிகளாகயிருந்தவர்கள் அந்த ஆலயத்தைப் பூட்டிவிட்டு வெளியேறும் தன்மையைப் பார்க்கிறோம். சனாதன தர்மத்திலே அதிக நம்பிக்கையுள்ளவர்கள் இம்மாதிரி வெளியேறும் நிலைமையை அந்த மாநிலத்தில் செய்திருக்கிறார்கள். அந்தமாதிரியான துரதிருஷ்டவசமான நிகழ்ச்சிகள் எதுவும் தமிழகத்தில் நிகழாமல் இருக்க வேண்டிய பாதுகாப்பையும், அதற்கான விதிமுறைகளையும் உருவாக்க நமது அமைச்சரவை முனையும் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொரு சந்தேகமிருக்கிறது. இதற்கு அமைச்சரவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'Statement of objects and reasons'. .

என்று சொல்லும்பொழுது, ஒரு பகுதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'The system can be replaced by an ecclesiastical organisation of men possessing the requisite educational qualifications who may be trained in recognised institutions in priesthood and that the line should be open to all candidates irrespective of caste, creed or race'.

என்று எழுதியிருக்கிறது. இதிலே "கிரீட் ஆர் ரேஸ்" என்று சொல்லியிருப்பது வேறு மதத்தினரையும் உட்கொள்ளுமா ? அதேபோல் "ரேஸ்" என்று சொல்லும்பொழுது ஆங்கிலோ இந்தியரையும் உட்கொள்ளுமா என்ற விளக்கத்தைத் தயவு செய்து அமைச்சரவர்கள் எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கனம் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்துச் சமயத்துறையிலே அதிக நம்பிக்கையுள்ளவர்களின் இதயங்கள் புண்படக் கூடாது என்ற வகையிலே இந்த இலாகா அமைத்துக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். எனவே இந்த "கிரீட் ஆர் ரேஸ்" என்பது எல்லோரையும் உட்கொள்ளக்கூடிய தன்மையிலேருப்பதால் பிற மதத்தினரையும் இது உட்கொள்ளுமா, இதிலே ஆங்கிலோ இந்தியர்களையோ அல்லது முஸ்லீம் போன்றவர்களையோ இது உட்கொள்ளுமா என்பதற்கு அருள்கூர்ந்து விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இம்மாதிரி சீர்திருத்தம் வரவேற்கத் தக்க ஒரு சீர்திருத்தம். ஏனென்றால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாட்டை அகற்றுவதற்கு இதுவொரு சிறந்த சட்டமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆனால், நடைமுறையிலே இம்மாதிரியான இலாக்காவிலே செயல்படுபவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகிறேன்.

தமிழிலே அர்ச்சனை நடத்த வேண்டுமென்ற கருத்து பொதுவாக ஆதரிக்கக்கூடிய கருத்து. ஆனால் ஒன்றைக் கூற விரும்புகிறேன். ங்கள் கன்னியாகுமரி ஜில்லாவிலே ஆலயங்களிலே வழிபடும் முறை வேற்றுமையாக இருக்கிறது. திருவாங்கூர் மன்னரின் பரம்பரையில் இருந்த காரணத்தினால் அங்கு வழிபடும் தன்மை வேறுபட்ட முறையிலே இருக்கிறது. அங்கு ஆலயங்களில் பூசாரியாக அல்லது ாந்தி செய்யும் அந்தணராகயிருந்தால் என்னென்ன முறையிலே வழிபாடு நடத்த வேண்டும் என்றிருக்கிறது. ஒரு மாதம் கோயில் பூசை செய்தால் வீட்டிற்குப் போகக்கூடாது, குடும்பத்தோடு வாழக்கூடாது என்று பலமுறைகளில் கட்டுப்பாடுகள் சுசீந்திரம் போன்ற ஆலயங்களில் ஏற்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைகள் ாதிக்காத அளவிற்கு இந்தச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, பெரிய ஆலயங்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கின்றன. அங்கிருப்பவர்கள் மத உணர்ச்சியைப் புண்படுத்தாமல் இருக்க, இம்மாதிரி பூசாரிகளாக வருபவர்களுக்கு விதிமுறைகளைக் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டுமென்று நான் கட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மசோதாவை வரவேற்று இந்த விளக்கங்களைத் யவு செய்து அமைச்சரவர்கள் தர வேண்டுமென்று கேட்டுக் காண்டு நான் அமர்கிறேன்.

திரு. என். ராஜாங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த றநிலையப் பாதுகாப்பு திருத்த மசோதாவை நான் ஆதரிப்பதோடு ட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட பல கோடி மக்களின் சார்பாக ந்த மசோதாவைக் கொண்டுவந்த இந்த அரசுக்கு நன்றியைத் தரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். ராஜாங்கம்] [1970 டிசம்பர் 2

மற்ற சமயங்களைக் காட்டிலும் இந்து சமயத்தில் அடிக்கடி திருத்தங்கள் வருவதற்குக் காரணம், இந்து மதத்தில் 4 வேதங்கள், 4 ஜாதிகள் இருக்கின்றன என்றும், அதற்கு மேல் இருப்பவர்கள் இந்து மதம் ஏற்றுக்கொள்ளமுடியாமலிருப்பதையும் நன்கு உணர்கிறோம். 4 வேதங்களைச் சார்ந்தவர்கள் 4 மதங்களைச் சார்ந்தவர்கள் கோயிலுக்குப் போக உரிமை உண்டு. இதை நீக்க வேண்டுமென்று மகாத்மா காந்தியடிகள், வாதத்திற்காக எங்களை அழைத்தார்கள். நீங்கள் கடவுளின் குழந்தைகள், வாருங்கள் என்று கூறினார்கள். நாங்கள் வருவதற்குத் தேசம் அனுமதிக்கவில்லையே என்று நாங்கள் கேட்டதற்கு, கோயில்களில் 4 மதங்கள் வேதங்கள் என்று எழுதி விட்டதெல்லாம் ஏமாற்று வேலை, மனிதனை ஏமாற்றுவதற்காக, மனிதனை மடமையாக்குவதற்காக, மனிதனை அடிமைகளாக்குவதற்காக எழுதப்பட்ட வேதங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு வேதம் இருக்கிறது, அதுதான் மனிதனை மனிதன் மதிக்கும் வேதம் என்று சொன்னார்கள். கடவுளின் ஆலயம் என்று சொல்லிவிட்டு, கடவுளால் உண்டாக்கப்பட்ட மனிதர்களில் ஒரு சிலரை ஒதுக்கி விடுவது அநியாயம், இந்த நாட்டிலே செய்யும் துரோகம் என்று போதித்தார்கள். அதற்கு இந்த நாட்டிலே பலவித எதிர்ப்புகள் வந்தன.

அப்பொழுது மகாத்மா காந்தியடிகள் எங்களுக்கு ஒன்றைச் சொன்னார்கள். வேதங்கள் நான்காக இருந்தாலும், மதங்கள் நான்காக இருந்தாலும், நீங்களும் ஒரு வேதத்திற்கு உரியவர்கள். இந்து மதத்திலே இரண்டு கடவுள்கள், அரி, சிவன் என்று இரண்டு கடவுள்கள் இருக்கிறார்கள். சிவனை அடிப்படையாக வைத்து 4 வேதங்கள், 4 ஜாதிகள் இருந்தால், அரியை அடிப்படையாக வைத்து, அரி என்ற கடவுளுக்கு நீங்கள்தான் உரிமையுடையவர்கள், ஆகவே, அரியின் பிள்ளைகள் அரிசனங்கள், ஆகவே கோயிலுக்கு நீங்கள் செல்ல உரிமையிருக்கிறது என்று எங்களுக்கும் சொன்னார்கள். மற்றவர்களுக்கும் சொன்னார்கள். அப்பொழுதுதான் காந்தியடிகள் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு, எங்களை அனுமதித்தார்கள். அப்படியிருந்தாலும்கூட எங்களுக்குச் சரிசமமாக உரிமை இருக்கிறது என்று சொல்லவில்லை. அந்த உரிமையைப்பெற இந்த டிசம்பர் 2-ம் நாள் தமிழக அரசால் கொண்டுவந்த இந்த அறநிலைய திருத்த மசோதாவின்மூலம் பூரணமாக இடம் பெற்றிருக்கிறோம்.

கோயில்களுக்குள்ளே ஒரு குறிப்பிட்ட இடம்வரைதான் செல்ல வேண்டுமென்றிருந்த இந்த நாட்டில், இப்பொழுது கோயிலுக்குள்ளேயே நுழைந்து அர்ச்சனை செய்வதற்கு மற்றவர்கள் அளவிற்கு பரிசுத்தம் கொடுக்கக்கூடிய அளவிற்குத் தகுதி ஏற்படுத்திவிட்ட இந்த திருத்த மசோதாவிற்கு எங்கள் சமூகம், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகம், எங்கிருந்தாலும் சரி, தமிழ்நாடு அரசை வாழ்த்தும் வரவேற்கும் என்று கூறி இந்த மசோதாவை வரவேற்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : எட்டு மசோதாக்கள் அவைமுன் இருப்பதால் சுருக்கமாய் பேசினால் வசதியாக இருக்கும்.



1970 டிசம்பர் 2]

திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட மசோதாவை ஆதரிப்பதோடு, இந்த மசோதாவைப்பார்த்து சந்தோஷப்படும் ஒரு நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பல மசோதாக்களும், பல திருத்தங்களும் அடிப்படையாக வருவதற்குக் காரணம், வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்கள், ஒதுக்கப்பட்டிருப்பவர்கள், மற்றவர்களுக்குச் சரிசமமாக வர வேண்டுமென்று எண்ணி அந்தக் கருத்துடன் ஒவ்வொரு அமைச்சரவையும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது. அப்படி வரும்பொழுது, இந்த மசோதாவிலே, ஜாதி மத வேறுபாடு என்று சொல்லும்பொழுது, எந்த ஜாதியாகவும் இருக்கலாம் என்று வரும்பொழுது, ஜாதி இல்லை என்ற நமக்கு ஜாதி என்று ஒன்று இருக்கிறது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. மனித ஜாதியிலே யாராகயிருந்தாலும் அவர்கள் நிச்சயமாக அங்கே அர்ச்சகர் பரீட்சையிலே தேர்ந்து வரலாம்.

அதிலே பிராமணர்கள்தான், முதலியார்கள்தான், பிள்ளைகள்தான் இருக்கவேண்டுமென்ற பரம்பரையை ஒழிக்க இது வழிவகை செய்கிறது. ம. பொ. சி. அவர்கள் பேசும்போது வெகு அழகாகச் சொன்னார்கள். அர்ச்சகர்கள் வேலை சாதாரணமான வேலை, இதிலே யாரும் லட்சாதிபதிகளானதாகச் சரித்திரத்தில் இல்லை. ஆனால் மடாதிபதிகள் என்று எடுத்துக் கொண்டால் ஆயிரக் கணக்கான வேலி நிலங்களை வைத்துக் கொண்டு சிலர் பரம்பரையாக் அனுபவித்து வருகிறார்கள். ஒரு வேலிக்கு $6\frac{1}{4}$ ஏக்கர். அதிலே டிரஸ்டிகளும் அந்தக் குறிப்பிட்ட மைனாரிடி சமூகத்தினர்தான், மடாதிபதிகளும் அவர்கள்தான். மடாதிபதிகளாக வருவதற்குத் தகுதி என்று ஒன்றும் இல்லை. காவி வாங்க வேண்டியது. அங்கு இருக்க வேண்டியது அவ்வளவுதான். இந்த மடாதிபதிகளையும் இதிலே சேர்த்துக் கொண்டால் உள்ளபடியே மிக உயர்வாக இருக்கும். இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பேசிய காரியங்களை நிறைவேற்றியதாக இருக்கும்.

இதற்கு முன்னால் இருந்த ஆட்சியும், கடந்த நான்கு ஆண்டுகளாக இருக்கும் எந்த ஆட்சியும் கோயில் நிர்வாகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்று சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு இடத்தில் அவ்வாறு பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? டி.டி.சி. கூட்டத்திலேயே இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். திருவெண்காட்டில் ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தக் கோயிலின் பரம்பரை டிரஸ்டி பண்ணையார் கோயிலுக்கு வருவதே இல்லை. இது கூடாது என்று கடந்த ஆறு ஆண்டு காலமாக நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்தும் அங்கிருப்பவர்கள் தள்ளிவிடுகிறார்கள். என்போன்றவர்கள் அங்கு வரக்கூடாது என்று தடுக்கிறார்கள்.

வெறும் சட்டம் இயற்றுவதால் மட்டும் பயன் இல்லை. உண்மையிலேயே தகுதியுள்ளவர்களை ஒன்று அரசாங்கமே நியமிக்க வேண்டும் அல்லது அந்தக் குழுவுக்கு, இன்னின்ன தகுதியுள்ளவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற உத்தரவிட வேண்டும்.

வேறு ஜாதிக்காரர்கள் வந்தால் கடவுளின் சக்தி போய்விடும் என்று சொல்லுகிறார்கள். கடவுள்களே தாழ்த்தப்பட்ட ஜாதியில் இருந்து வந்தவர்கள்தானே. தந்தை பெரியார் அவர்கள் பழைய குடியரசுப் பத்திரிகைகளைப் புரட்டினால் தெரியும். தில்லை நடராஜன் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து வந்த கடவுள்தான். மதுரை மீனாட்சி பறையன் வகுப்பில் இருந்து வந்த கடவுள்தான். முக்காலே மூன்று வீசம் கடவுள்கள் தாழ்த்தப்பட்ட மக்களிலிருந்து வந்த கடவுள்கள்தான். மதுரை மீனாட்சி சக்கிலிச்சிதானே, தில்லை நடராஜன் ஆதித் திராவிடன்தானே, காசி விஸ்வநாதர் ஆதித் திராவிடன்தானே. எல்லா ஜாதிக் காரர்களும் கடைசியில் சங்கரா சங்கரா என்று போகிறார்களே. விளம்பரப் பிரிவில் இருந்து இதைப் பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்து விளக்க வழி செய்ய வேண்டும்.

இதிலே, சட்டம் இயற்றினால் மட்டும் போதாது. பர்சன்டேஜ் வீதம் எங்களுக்கு ஒதுக்க வேண்டும். தமிழ் நாட்டில் ஆயிரம் அர்ச்சகர்கள் இருக்கிறார்கள் என்றால் 16 சத விகிதத்தை எங்களுக்குக் கொடுக்க இடம் வேண்டும். அப்போதுதான் எங்களுக்குப் பயன் ஏற்படும் என்று கூறி இந்த மசோதாவை மனமார வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் பேசிய உறுப்பினர்கள் விளக்கமாகப் பேசினார்கள். குறிப்பாக, மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள் நான் விளக்க வேண்டிய அவசியம் கூட இல்லாத அளவுக்கு நல்ல முறையில் இந்த மசோதாவைப் பற்றி விளக்கமாகப் பேசினார்கள். இந்த மசோதா கான்ஸ்டிடியூஷனுக்கு எந்த விதமான மாறுபாடும் இல்லாத அளவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவைப் பற்றிச் சிலபேர் கொஞ்சம் சந்தேகப் பட்டார்கள். வேறு வேறு வகையான மதத்தார்கள் நுழைந்து விடுவார்களோ, மதத்தின் கோட்பாடுகளுக்கும் சம்பிரதாயங் களுக்கும் விரோதமாகக் கூடப் போய்விடுமோ என்றெல்லாம் சந் தேகப்பட்டார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்கள் தேவையில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். " தி எஸென்ஸ் ஆப் தி ஹிண்டு ரிலிஜியன் " என்பதிலே எந்தவித மாற்றமும் இருக்காது. ஆளைப் பற்றி மாற்றமே தவிர, கோட்பாடுகளிலோ, கொள்கை களிலோ மதத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலே எந்த வித மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. மாறாகச் சொல்லப் போனால் இந்த மசோதாவினால் இந்து மதம் மேலும் மேலும் வளருவதற்கு அதிகமான வசதிகள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு ஐயம், அச்சம் தேவையில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பொருத்து இளையபெருமாள் கமிட்டி சொல்லியிருப்பதை ஏற்கனவே நான் சொன்னேன். அதிலே

'The hereditary priesthood in the Hindu Society should be abolished. It can be achieved even without legislation. The system can be replaced by an ecclesiastical organisation of men possessing



the requisite educational qualifications after giving training in recognised institutions in priesthood. Such lines in priesthood should be open to all qualified candidates irrespective of caste, creed or race. Prof. G. S. Ghurey, the 'well-known authority on caste system, made similar suggestions years back. A further clue in this regard may also be obtained from the recent recommendations of the Commission on Religious Endowments and Trusts.' என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இன்று இருக்கிற நிலைமையில் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டியது மிக மிக அவசியம் என்று அரசு கருது கிறது. சமுதாய முன்னேற்றத்திற்காகவும், மதத்தின் முன்னேற்றத் திற்காகவும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டியிருக் கிறது. மாண்புமிகு சிலம்புச் செல்வர் குறிப்பிட்டது போல் நீண்ட நெடுங்காலமாக இந்து மதத்தில் இருக்கும் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ராமமூர்த்தி அவர்கள், இதிலே வேறுயாருமே நுழைந்துவிடக் கூடாது அதே நேரத்தில் மதத்தினுடைய எஸென்ஸ்—கோட்பாடுகளும் குறைந்து விடக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள்.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன். முன்பு சதி என்று ஒன்று இருந்தது. அது மதத்தின் பேரால் ஏற்பட்டதுதான். அதாவது உடன்கட்டை ஏறுதல். இது மதத்தின் அடிப்படையில்தான் இருந் தது. அதை மாற்றியமைத்திருக்கிறோம். அதேபோல் தேவதாசி முறை இருந்தது. அதையும் மாற்றியமைத்திருக்கிறோம். அதே போல் விதவா மறுமணம். அதையும் மாற்றியமைத்திருக்கிறோம். இரு தார மணம் இருந்தது. அதையும் மாற்றியமைத்திருக்கிறோம். கோவில்களில் ஆடு, கோழிகள் இவற்றை பலியிடும் முறை இருந்தது, அதையும் மாற்றியமைத்திருக்கிறோம். இவைகள் எல்லாம் மதத்தின் அடிப்படையில் ஏற்பட்டவைதான். ஆக, எஸன்ஸ் ஆஃப் தி ரிலிஜியன் மாற்றப்படாமல் இருக்கவேண்டுமே தவிர சாதாரண விஷயங்களை மாற்றுவதில் தவறு எதுவும் இல்லை . அதுதான் இந்த மசோதாவின் நோக்கம். எனக்கு ஒரு பாடல் நினைவிற்கு வருகிறது. " ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந் தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே."

நந்தனார் கூட நாயன்மாராக மாறியிருக்கிறார். திருப்பாணாழ் வார் கூட ஆழ்வாராக மாறியிருக்கிறார். கண்ணப்பர் நாயனாராக மாறியிருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட மாற்றங்கள் இருந்திருக்கின்றன. ஆக, நிலைமை மாறியிருக்கிற இந்த நேரத்தில் நாம் நிச்சயமாக மாறித்தான் ஆகவேண்டும். நான் இதைச் சொல்வதால், இந்த மசோதாவிற்கு யாரும் ஆட்சேபணை சொல்லியிருப்பதாக நினைக்க வேண்டாம். யாரும் இந்த மசோதாவிற்கு ஆட்சேபணை செய்ய வில்லை.

[திரு. கே. வி. சுப்பையா] [1970டிசம்பர் 2

அடுத்தபடியாக, திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், புனிதத்தன்மை கெடாத முறையில் இதில் வருகிறவர்கள் அர்ச்சகர்களாக வரவேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமானதொரு கோரிக்கை கூட. அர்ச்சகர்களாக வரக்கூடியவர்களுக்கு அவர்களைப் பள்ளியில் சேர்த்து என்னென்ன பாடங்களைப் போதிப்பது, எவ்வளவு ஆண்டுகள் போதிப்பது, என்னென்ன விதத்தில் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும், எந்த அளவிற்கு அவர்களுக்குச் சொல்லித் தரப்படவேண்டும், எந்த அளவிற்கு சொல்லித் தரப்பட்டால் அவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்பதைப் பற்றியெல்லாம் எக்ஸ்பர்ட் கமிட்டி என்று சொல்லக் கூடிய, ஆகமப்படி சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களையும், விஷ்ணு மதத்தைச் சேர்ந்தவர்களையும், இருசாராரையும் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்களின் யோசனைப்படி ஸிலபஸ் தயார் செய்து அதன் மூலம் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு அர்ச்சகர்களாக நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படும்.

அர்ச்சகர்களாக வருபவர்கள் மட்டுமல்ல. கோவில்களில் வேலை பார்க்கக் கூடிய உள்துறை சிப்பந்திகள் அத்தனை பேர்களும் இந்துவாகத்தான் இருக்கவேண்டும் என்று சட்டமிருக்கிறது. அதை மாற்றவில்லை. அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. ஜாதி சமய வேறுபாடு இன்றி என்று சொன்னதாக ஒருவர் சொன்னார்கள் ஜாதி வேறுபாடு இன்றி என்று சொல்லியிருக்கிறேன். சமய வேறுபாடு இன்றி என்று சொல்லவில்லை. இந்து மதத்தில் மாறிய பிறகு அவர்களும் சேர்ந்து கொள்ளலாம். ம. பொ. சி. அவர்கள் ஞாபகப் படுத்தினார்கள்.

சைவ, வைஷ்ணவ ஆகிய இரு சாராரையும் சேர்க்கிறோம். இரண்டுக்கும் எக்ஸ்பர்ட்ஸ் சொல்லித் தருகிறார்கள். இரண்டு வருடங்களா அல்லது மூன்று வருடங்களா என்பதுபற்றி அவர்களை வைத்து முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில் அவர்கள்தான் அத்தாரிட்டி. வருகிறவர்கள் விபூதி அல்லது நாமம் போட்டுக்கொண்டுதான் ஆகவேண்டும். மாறுபட்ட கருத்து உடையவர்கள் வரமுடியாது. அப்படி வந்தாலும் நாலைந்தாண்டுகளுக்குள் அவர்கள் அதில் ஐக்கியமாகி விடுவார்கள். மத நம்பிக்கை உடையவர்களைத்தான் போடவேண்டும் என்று திரு. சுப்பராஜா அவர்கள் சொன்னார்கள்.

Those who profess Hindu religion must be appointed as 'Archakas'.

என்றுதான் இருக்கிறதே தவிர இந்து மதத்தில் நம்பிக்கையற்றவர்களைப் போடலாம் என்று சொல்லவில்லை.

திரு. ம. பொ. சி. அவர்கள் எனக்குப் பதிலாக பல விளக்கங்களைச் சொன்னார்கள். திரு. இராமமூர்த்தி அவர்களுக்குப் பதிலாகக் கூட அந்தப்பேச்சு அமைந்திருக்கிறது. அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.



1970 டிசம்பர் 2] [திரு. கே. வி. சுப்பையா]

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், கேரளாவில் கூட இப்படிப்பட்ட மசோதாக்கள் வந்திருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். காஸ்ட். க்ரீட், ரேஸ் என்றிருக்கிறதே அவை என்ன, அவற்றிற்கு விளக்கம் தேவை என்று கேட்டார்கள். காஸ்ட் என்றால் ஜாதி. இந்துக்கள் என்பதில் பல ஜாதிகள் இருக்கின்றன. ஜாதியற்ற சமுதாயமாக ஆகவேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் நோக்கம். க்ரீட் என்றால் பல இனங்கள் இருக்கின்றன. தமிழர்கள், ஆந்திரர்கள், மஹாராஷ்ட்டிரர், குஜராத்திகள் என்றெல்லாம் இருக்கின்றனர். அவை தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் நோக்கம். ரேஸ் என்றால்—திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் சொல்வதைக் கவனித்தால் நன்றாகயிருக்கும்—ஆரியர்கள், திராவிடர்கள், மங்கோலியர் என்றெல்லாம் இந்து மதத்தில் இருக்கிறார்கள். அந்த ரேஸ் தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் நோக்கம். பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்றெல்லாம் ரேஸ்கள் இருக்கின்றன. அந்த ரேஸ்கள் இந்த மசோதாவிற்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதுதான் இதன் நோக்கமாகும்.

இன்னும் அர்ச்சகர்களைப்போடுவதில் ஒரு ஜாதியார்தான் இருக்கவேண்டும். மற்ற ஜாதிக்காரர்கள் இருக்கக்கூடாது. என்றிருப்பதாக நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அது கூடத் தவறு என்பதுதான் எனக்கு வந்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் பல கோவில்களில் பலவித ஜாதிக்காரர்கள் அர்ச்சகர்களாக இருந்து வருகிறார்கள். நமது மாண்புமிகு லா மினிஸ்ட்டர் அவர்களின் ஊரில் சிங்கம் புணரியில் ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு பூசாரி குருக்களாக இருந்தார். மதுரையில் ஆண்டிப்பட்டியில் ஒரு முருகன் கோவில் இருக்கிறது. அங்கு ஏற்கனவே அந்தக் காட்டில் வசிக்கக் கூடிய காட்டுவாசிகள் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குடும்பர்கள் என்று நினைக்கிறேன். அங்கு கட்டடம் கட்டிய பிறகு பண்டாரம் பூஜை செய்து வருகிறார். அதுமாதிரி சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், கந்தசாமி கோவில், கள்ளிப் பட்டி, சுப்பிரமணியசுவாமி கோவில், சேலம், கோவையை எடுத்துக் கொண்டால், பன்னாரி மாரியம்மன் கோவில், வாழத்தோட்டத்து அய்யன் கோவில், திரு. கொண்டத்து காளியம்மன் கோவில், பாரியூர், திரு. மாரியம்மன் கோவில், பொள்ளாச்சி, திருச்சியை எடுத்துக்கொண்டால், மதுரகாளியம்மன் கோவில், பெரம்பலூர் வட்டம், காமாட்சியம்மன் கோவில், ஓமந்தூர், திரு. மதுரகாளியம்மன் கோவில், தொட்டியம், திருநல்லாண்டார் கோவில், மணப்பாறை. சென்னையில், திரு. முண்டக்கண்ணியம்மன் கோவில், ஆனையம்மன் கோவில், அங்காளம்மன் கோவில், மேல்மலையனூர், திண்டிவனம். திருச்சியில், திரு. கலியுகவரதராஜ பெருமாள் கோவில் இருக்கிறது. இன்னும் பல கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் எல்லாம் பிராமணர்கள் அல்லாத ஜாதிக்காரர்கள் அர்ச்சகர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, இந்த மசோதா பல கட்சிக்காரர்களாலும், பல சட்ட மன்ற உறுப்பினர்களாலும்

[திரு. கே. வி. சுப்பையா] [1970 டிசம்பர் 2

பாராட்டப்பட்டதற்கும், வரவேற்கப்பட்டதற்கும், நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மசோதாவை சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 45/1970) " ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

## பிரிவு–2

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 இம்மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. A. SUBBARAJA : Sir, I move the amendment standing in my name :

In the proposed section 55 (1) (i) of the principal Act after the words ' in all cases ' add the words provided these appointments shall not injure the sentimental feelings of the Hindu people.

THIRU S. ALAGARSAMY : I second it.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திலே பல நல்ல நோக்கங்கள் இருந்தாலும் கூட, சில கோவில்களில் இதுவரையில் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ள " சென்டிமென்ட்ஸ் " பாதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள் கிறேன். சில கோவில்களில் சைவ சமயம், அசைவ சமயம் என்று இரண்டு வகைப்பட்டு இருக்கிறது. மாரியம்மன், ஐய்யனர் கோவில் களைப்பொறுத்தவரையில் அசைவ சமயத்தினரைக் கூட அர்ச்சக ராகப்போடலாம். ஆனல் சைவ வழிபாட்டுக் கோவில்களில் அசைவ சமயத்தினரை அர்ச்சகராகப் போடக்கூடாது. அப்போது தான், உணர்ச்சி பூர்வமான வழிபாட்டு முறை கடைபிடிக்க முடியும். இப்படிப்பட்ட உணர்ச்சிபூர்வமான வழிபாட்டுக்கு அதிகமான இடம் கொடுக்கவேண்டுமானல், இந்த சட்டத்தில் என்ன ரூல்ஸ், ரெகுலேஷன் என்று தெளிவாகக் கொடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை. அதற்காகத்தான் இந்த அமெண்ட்மெண்ட் கொடுத்து இருக்கிறேன். அப்படிப்பட்ட வித்தியாசங்கள், எந் தெந்த கோவில்களில் எந்தமாதிரி வழிபாடு நடைபெறுகிறது எந்த மாதிரி அர்ச்சகர்கள் அமைய வேண்டுமென்று தெளிவாகச் சட்டம் இல்லை. இதை நல்லவிதத்தில் ஒரு கமிட்டியைப் போட்டு ஆராய் வது நல்லது. இந்தத் திருத்தம் நான் கொடுத்திருக்கும் நோக்கம்



1970 டிசம்பர் 2] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

இதுதான். அந்தந்தக் கோவில்களில் வழிபடுவோர்களின் உணர்ச்சி களைப் புண்படுத்தாத வகையில், அவர்களுடைய உணர்ச்சிகளை பாது காக்கிற வகையில் அர்ச்சகர்கள் போடும் ரூல்ஸ் கொண்டு வர வேண்டும். அமைச்சர் அவர்கள் அவர்களுடைய அபிப்பிராயத் தைச் சொன்னல் நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திருத்த மசோதா மீது பேசிய அங்கத்தினர்கள், இதை ஆதரித்துப் பேசிய அதே நேரத் தில், சில சந்தேகங்களைக் கிளப்பி இருக்கிருர்கள். மக்களிடத்தில் ஒரு பரபரப்பை இது உண்டாக்கி விடப்போகிறதே என்ற காரணத் தால், நான் சில விளக்கங்களைக் கூறுகிறேன்.

இந்த மசோதாவை மட்டும் படித்து விட்டு, இப்படிச் சந்தேகங் களைக் கிளப்பி இருக்கிருர்கள் என்று கருதுகிறேன். இந்த மசோ தாவையும், சட்டத்தையும் இணைத்துப் படித்தால், அதிலே எல்லாம் தெளிவாக்கப்பட்டு இருக்கிறது தெரியும். ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே பத்தாவது பிரிவிலே "நம்முடைய மதக் கோட்பாடு களை மீறியவர்கள், விரும்பாதவர்கள், கோட்பாட்டிற்கு மாறு பட்டவர்கள், இது போன்ற உத்யோகத்தில் இருக்க முடியாது" என்று சட்டத்திலே திட்டவட்டமாகக் கூறப்பட்டு இருக்கிறது. அதே போல் அந்தச் சட்டத்தின்கீழே உருவாக்கப்பட்ட விதிகளிலே மூன்று இடத்திலே அதையே திருப்பிச் சொல்லி இருக்கிருேம். சட்டத்திலும், விதியிலும், நம்முடைய மதத்திற்கு, கோட்பாட்டிற்கு மாறுபட்டவர்கள் வேலைக்கு அமர்த்தப்படமாட்டார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னர்கள்.

இப்போது நாம் கொண்டு வந்து இருக்கும் மசோதாவில் " ஹெரிடிடரி சிஸ்டம் " என்பதை மாற்றி அமைத்து இருக்கிருேம். இதை மாற்றி விட்டதாலேயே, ஏற்றுக்கொண்ட கொள்கையைக் கைவிட்டு விட்டோம் என்பதல்ல. இதற்குக் கீழே விதி அமைக்கும் போது, நிச்சயம் அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்றுச் செயல்படுவோம். எந்தெந்தப் பாரம்பர்யம் எந்தெந்தக் கோவில் களில் பின்பற்றப்பட்டு வருகிறதோ, அது அந்த விதத்தில் எந்த விதத்திலும் மாறுபட்டு இல்லாத அளவிற்கு விதிகள் உருவாக்கப் படும் என்று கூற ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதா ஏற்கெனவே உள்ள சட்டத்திற்கு முரண்பட்டு இருக்காது என்ற காரணத்தால், கனம் அங்கத்தினர் கொண்டு வந்துள்ள சந்தேகம் இருக்காது என்று பணிவாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் எந்த நோக்கத் தோடு அந்தத் திருத்தத்தை கொடுத்து இருக்கிருர்களோ அந்த நோக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. வேறு மாதிரி சட்டங்கள் ஏதேனும் பிறப்பிக்கப்படுமானல், அவை இந்தச் சட்டத் திற்கு முரண்பட்டதாக இருக்கும். அப்படிப்பட்ட சட்டங்கள் பிறப்பிக்க முடியாது.

காஸ்ட், கிரிட், ரேஸ் என்று வைத்துக்கொண்டு இருப்பதைக் காரணம் காட்டி வேறு மதத்தினர் கொண்டுவந்து விடுவோமோ என்ற அச்சம் இங்கே தெரிவித்துள்ளார்கள். அது வெளியே

பிரச்சாரம் செய்யப்படும் என்ற காரணத்தால் ஒரு விளக்கத்தைக் கொடுக்க ஆசைப்படுகிறேன். இங்கே குறிப்பிட்டு இருப்பது ஒரு குழு கொடுத்த அறிக்கையை அப்படியே கொடுத்து இருக்கிறோம். இந்து மதத்தினர் அல்லாதவர்களைக் கொண்டு வரவேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை அல்ல. அரசாங்கம் இதற்குப் போதுமான பாதுகாப்புத் தரும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களது திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 3 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 45/1970)" சட்டமாக ஆக்கப்பட வேண்டும் என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 43/1970)

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill *, 1970 (L.A. Bill No. 43 of 1970) be taken into consideration."

Under section 1 (3) of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961, that Act would remain in force for a period of nine years from he date of its commencement, i.e., up to 29th November 1970.

The Act gives protection from eviction for persons occupying Kudiyiruppu. Pending enactment of a comprehensive tenancy legislation, it is considered that the life of the Act should be extended for a further period of three years. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Ordinance, 1970 was promulgated by the Governor for extending the life of the Act for a further period of three years from 29th November 1970.

The present Bill seeks to replace the said Ordinance.

Sir, I request the House to accept the motion.

* Pubished in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th November 1970



திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்தக் குடியிருப்பு அனுபோகதாரர்கள் வெளியேற்றப்படாமல் பாதுகாப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மசோதாவின் மீது ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே, பல "காம்பிரஹென்ஸிவ் லெஜிஸ் லேஷன்" என்று சொல்கிற அளவிலே எல்லாவற்றையும் உள் அடக்கி ஒரு நிலச்சீர்திருத்தச் சட்டம் வர இருக்கிறது, ஆகவே, இந்தக் குடியிருப்பு அனுபோகதாரர்களுக்குத் தேவை என்ற அளவிலே இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நிலச்சீர்திருத்தங்களைச் செய்கிற நேரத்தில், சில மசோதாக்களை நிறைவேற்றி அதற்கு உடனடியாக உயிர் தரவேண்டுமென்ற நிலையிலே அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இன்றையதினம் ஒரு மசோதாவை நிறைவேற்றி விட்டு அந்த மசோதாவை நிறைவேற்று வதற்குக் காலவரை நீடித்துக் கொண்டு போய்விட்டால் பயன் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக.

The comprehensive tenancy legislation is still under consideration of the Government. The Inam Abolition Acts are under implementation. The Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970 (Tamil Nadu Act 17 of 1970), reducing the ceiling limit to fifteen standard acres, has yet to be implemented.

என்ற நிலைமையைப் பார்க்கிறோம். சில சட்டங்களை நிறைவேற்றி வைத்துக்கொண்டு அவற்றை அமுல்படுத்தாமல் இருப்பது ஒரு புதிய சந்தேகத்தை உணர்த்துகிறது. வருகிற தேர்தலுக்கான இடைவெளி குறுகி விட்ட காரணத்தால் சில சீர்திருத்த மசோதாக்களை நிறை வேற்றுவதிலே நாம் உண்மையான அளவுக்கு வேகத்தையும் விறு விறுப்பையும் காட்டாமல் இருக்கிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதிலே இன்னொரு அச்சத்தையும் என்னால் சொல்லிக்கொள்ளா மல் இருக்க முடியாது. நிலச் சீர்திருத்தச் சட்டங்களை உருவாக்கு வதன் மூலம் நாம் மிகுந்த அளவிலே விவசாயிகளுக்கு நன்மை செய்ய இருக்கிறோம், நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதிலே மிகுந்த ஆழ்ந்த பிடிப்புக் கொண்டவர்களாக இருக்கிறோம் என்ற எண்ணத்தை உண்டாக்கிவிட்டு, அதே நேரத்தில், பெரிய நிலச் சொந்தக்காரர்களைத் திருப்தி செய்யும் வகையில் நிறைவேற்றிய சட்டங்களை உடனடியாக அமல் படுத்தாமல் இருப்பதன் மூலம், "சட்டத்தை நிறைவேற்றினாலும், அதை உடனே அமல்படுத்த மாட்டார்கள், நமக்கு அந்தப் பாதுகாப்பு இருக்கும்" என்ற அடிப் படையில் பெரிய நிலச்சுவான்தார்கள் எண்ணக்கூடிய நிலைமையை உருவாக்குகின்றார்களோ என்ற அச்சம் தான் ஏற்படுகிறது. ஏனென்றால் தேர்தல் இடைவெளிக்காலம் நெருங்குகிறது. அந்தச் சீர்திருத்தங்கள் தேவை இல்லை, அல்லது அவை தங்களைப் பாதிக் கின்றன என்று கருதக்கூடிய பகுதியினரையும், அதாவது பெரிய நிலச் சுவான்தார்களையும், சீர்திருத்தச் சட்டங்கள் தேவை என்று கருதுகிற

முன்னேற்றக் கருத்து படைத்தவர்களையும், இரண்டு சாரார்களையும் அரவணைத்துச் செல்லுகின்ற அளவுக்கு, உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சிலவற்றைத் தவிர்ப்பதற்கு இது போன்ற திருத்த மசோதாவைக் கொண்டு வருகிறார்களோ என்ற ஐயப் பாட்டை என்னால் இந்த மன்றத்தில் தெரிவிக்காமல் இருக்க முடிய வில்லை.

இந்தக் காலக் கெடுவை நீடிப்பதை எங்கள் தரப்பிலிருந்து வேறு வகையின்றி ஒப்புக்கொண்டாலும், ஏற்றுக்கொண்ட சட்டங்களை மாமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டங்களை உடனடியாக அமல்படுத் துவதற்கு இந்த அரசு செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதில் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் யாருக்கும் பயப் படாமல் என்ற உறுதியை இந்த அரசாங்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் 1961-ம் ஆண்டில் யார் யார் குடியிருப்புகளில் இருந்தார்களோ அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கக்கூடிய ஒரு மசோதாவாக இருக்கிறது. அதனுடைய காலவரையை நாம் மேலும் நீடிக்கிறோம். இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் விவசாய நிலங்களில் குத்தகைக்குச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் குடியிருப்பில் வாழக்கூடிய விவசாயி களுக்கு ஒரு நிரந்தரமான உரிமையை அளிப்பதற்காக விரிவான டெனன்ஸி சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்ற வாக்குறுதிக் கிணங்க ஒரு சட்டம் வரும் என்று எதிர்பார்த்திருந்தோம். இரண்டு, மூன்று தடவையாக இந்தச் சட்டத்தினுடைய ஆயுட் காலத்தை நீடித்துக்கொண்டு தான் வருகிறோம். குத்தகைவார விவசாயிகள் இருக்கக்கூடிய குடியிருப்புகளில் இருக்கக்கூடியவர் களுக்கு நிரந்தரமாக உரிமை வழங்கக்கூடிய ஒரு சட்டத்தை, விரிவான குத்தகை விவசாயிகளுடைய சட்டத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டும். அதைக் கொண்டுவர தாமதமானால், குடியிருப்புகளில் வாழக்கூடிய விவசாயிகளுக்கு நிரந் தரமாக உரிமையை அளிக்கக்கூடிய ஒரு தனி மசோதாவைக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் 1961-ம் ஆண்டிலிருந்து யார் யார் குடியிருப்புகளில் இருந்துகொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு மட்டும்தான் இந்த மசோதா பாது காப்பு அளிக்கிறது.

இன்றைய நிலைமை என்னவென்று சொன்னால், தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும், இன்றுவரையில் குடியிருப்புகளில் வாழக்கூடிய மக்கள் அத்தனை பேர்களும் பாதுகாப்பு இல்லாத நிலையில் இருக்கிறார்கள். 1961-ம் ஆண்டில் இந்த மசோதா சட்ட மானதற்குப் பிற்பாடு, இந்த சட்டம் ஏற்பட்டதற்குப் பிறகு இன்று



வரையில் இருக்கக் கூடிய குடியிருப்புக்காரர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கக் கூடாது. இன்று வரையில் தமிழ் நாடு முழுவதிலும் எல்லா மாவட்டங்களிலும் குடியிருப்பில் இருக்கக் கூடியவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளித்து, நிரந்தரமான உரிமையை அவர்களுக்கு வழங்கக் கூடிய முறையில், அவர்கள் குடியிருக்கக் கூடிய மனைக்கட்டுகளிலிருந்து நிரந்தரமாக வெளி யேற்றாமல் தடுப்பதற்கு வேண்டிய வகையில் ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டு வர வேண்டும்.

இன்றைக்கு கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதா ஒரு சிறிய பகுதியினருக்குத்தான் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இருக்கிறது. தமிழ் நாட்டில் முழுவதிலும் இன்றுவரையில் குடியிருப்புகளில் வாழக் கூடியவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் ஒரு தனி மசோதா கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, குடியிருப்புதார் களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய மசோதாவைக் கொண்டு வந்திருக்கக் கூடியதன் நோக்கம் விவசாயத் தொழிலாளர்கள் கிராமப்புறங்களில் தங்களுடைய உரிமைகளை கேட்பதற்கு ஆரம்பித்த பிறகு, இந்த மனைகளுக்குச் சொந்தமான நிலச் சொந்தக் காரர்கள் அவர்கள் நினைத்தபடியெல்லாம் வெளியேற்றிக் கொண்டிருக்கக் கூடிய ஆபத்தை உணர்ந்து, அரசாங்கம் குடியிருப்பு தார்களை நினைத்தபோதெல்லாம் வெளியேற்றக் கூடாது என்ற நோக்கத்தில் குடியிருப்பு பாதுகாப்புச் சட்டம் 1961-ல் கொண்டு வரப்பட்டது. இதை வருஷா வருஷம் நீடித்துக் கொண்டே போவதைவிட, குடியிருப்புதார்களுக்கே இந்த இடத்தை சொந்த மாக்கக் கூடிய முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வருவது தான் மிகவும் உதவிகாரமாக இருக்க முடியும்.

பரம்பரையாக பிறருடைய மனைகளில் குடியிருக்கக் கூடியவர் களுக்கு குடியிருப்பதற்குரிய தஸ்தாவேஜுகள் இருந்தால் அவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. நிலச்சொந்தக்காரர்கள் அவர் களுக்கு எந்தவிதமான தஸ்தாவேஜுகளையும் கொடுப்பதில்லை. வாய் நம்பிக்கை மூலம் தான் குடியிருந்து வருகிறார்கள். அம்மாதிரி இருப் பவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் என்று சொல்லப் பட்டு கோர்ட்டுக்குச் சென்று வெளியேற்றப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் கூட நிலச்சுவான் தாரர்களுக்கு உதவியாக அந்த இடங்களிலிருந்து குடியிருப்புதாரர் களை வெளியேற்றுவதற்கு துணைபுரிகிறார்கள். இம்மாதிரியான பெரிய ஆபத்து இருந்து கொண்டு வருகிறது.

மேலும், சர்க்காருக்குச் சொந்தமான இடங்களில் இம்மாதிரி பாரம்பரியமாக குடியிருந்து வரக் கூடியவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. சட்டப் பிரகாரம் அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். சர்க்காருக்குச் சொந்தம் என்று சொல்கிற காலத்தில்,

ரெவின்யூ புறம்போக்கு மாத்திரம் இல்லாமல் பல்வேறு இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் பரம்பரையாக குடியிருந்தவர்களையும் அந்த இடத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்ற அடிப்படையில் நம்முடைய அரசாங்கம் சட்டம் கொண்டுவருவது உதவிகரமாக இருக்க முடியும்.

இந்த மாதிரி இந்தச் சட்டத்தை வருடா வருடம் நீடித்துக் கொண்டே போவதைவிட நிரந்தரமாக இன்று வரையில் குடியிருப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் அத்தனை பேர்களையும் அந்தக் குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றக் கூடாது என்ற அடிப்படையில் ஒரு மசோதா கொண்டு வந்து அதை சட்டமாக நிறைவேற்றுவதன் மூலம், தமிழகத்தில் குடியிருக்கக் கூடிய சொந்த நிலம் இல்லாதவர்களுக்கு அந்த இடத்தை அவர்களுக்கே சொந்தப் படுத்த மிக உதவியாக இருக்கும், அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை வேண்டிக்கொண்டு, இந்த மசோதாவை ஆதரித்து, முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

ஆயிரக்கணக்கான கிராமங்களில் பாரம்பரியமாக எழுத்து மூலம் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இப்படிப்பட்ட குடியிருப்புகளில் விவசாயிகள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். லாண்டு சீலிங் சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது கூட, இந்தக் குடியிருப்பு சம்பந்தமாக கேட்கும்பொழுது, பாரம்பரியமாக குடியிருக்கக் கூடிய கிராமங்களில் எழுத்து மூலமாக ஆதாரம் இருந்தாலும், இல்லையென்றாலும், குடியிருப்புதாரர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்து கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்று சொன்னார்கள். பாரம்பரியமாக இருப்பவர்களுக்கு ஒப்புதல் செய்து கொடுப்பதோடு அல்லாமல் அவர்களை அந்த இடங்களிலிருந்து வெளியேற்றக் கூடாது; அந்த இடங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வகைசெய்து கொடுக்க வேண்டும். அவர்கள் எழுத்து மூலம் எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பழைய காலத்தில் மிராசுதாரர்கள் அவர்களுக்கு பட்டா இல்லாமல் இருந்தும், அனுபவ பாத்தியதை என்று சொல்லி, மிராசுதாரர்கள் குடியிருப்புதாரர்களிடமிருந்து மிராசுதாரர்களுக்குச் சொந்தம் என்று எழுதி வாங்கி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதி வாங்கி வைத்திருப்பதனால், மிராசுதாரர்களுக்குச் சொந்தம், காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லாமல், நிபந்தனையற்ற வகையில் பரம்பரையாக குடியிருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் அந்த இடங்களை பட்டா செய்து கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை மாண்புமிகு அங்கத்தினர்களெல்லாம் ஆதரித்து வரவேற்றதில் மிக்க மகிழ்ச்சி. திரு. இராமமூர்த்தி அவர்கள் ஆதரித்தாரா அல்லது எதிர்த்தாரா என்று அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனாலும் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். எதிர்க்கட்சி என்றால் தாக்கத்தான் வேண்டும் என்று நினைத்து விட்டார்கள் போலும். அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. மற்ற அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல குடியிருப்புக்கு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும் என்று முயற்சி எடுக்க வேண்டும் என்கிற கருத்து பரிசீலிக்கப்பட வேண்டும். அந்தக் கருத்தைப் பரிசீலித்து முடிவுக்கு வர வேண்டும். இடையிலே ஏழை மக்களை வெளியேற்றக் கூடாது, அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று 1961-லிருந்து தொடர்ந்து இந்தச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுதும் அதை நீடிக்க மன்றத்தினுடைய அனுமதியைக் கோருகிறோம்.

நிலச் சீர்திருத்தச் சட்டங்களைப் பொறுத்தவரையில், நம் மாநிலத்தில் மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அரசியல் கட்சிகளின் எல்லாத் தலைவர்களையும் அழைத்து, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அதிகமாக நல்ல முறையில் எப்படி எப்படி அமல் நடத்த முடியும், ஓட்டை உடைசல்களை அடைக்க முடியுமா அல்லது புதிய சட்டமே தேவையா என்பதையெல்லாம் பரிசீலிக்கவும் தக்க முயற்சி எடுக்கவும் செயல் பட்டிருக்கிறார்கள். நேற்று கூட ஒரு கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா இதே கருத்தை, குடியிருப்புப் பற்றி வலியுறுத்தி, அதைப் பற்றியும் அந்தக் குழு பரிசீலிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அது போன்ற கருத்துக்களையும் அரசாங்கம் விரைவில் செயல் படுத்தும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸில், புதிதாக கொண்டுவந்திருக்கக் கூடிய உச்சவரம்புச் சட்டம் Yet to be implemented என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமலாக்கவேயில்லை என்று எப்படி அங்கத்தினர் ஊகித்துக் கொண்டார் என்பது தெரியவில்லை. சொல்லியிருப்பதன் பொருள், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் முழுமையாக அமல் நடத்தப்படும் வரையில், வெளியேற்றங்கள் தடுக்கப்பட வேண்டும் என்கிற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சட்டம் நீடிக்கப்படுகிறது என்பதுதான். அந்த நோக்கத்தைச் சுட்டிக் காட்டவே அந்த வார்த்தைகள் போடப்பட்டிருக்கின்றன. அதற்குப் புதிய விளக்கங்கள் கொடுப்பது நிச்சயமாக தவறுதலான கருத்துக்கள் ஏற்பட வேண்டும் என்று சொல்லப்படுபவைதான். திரு. இராமமூர்த்தி அவர்கள் வாயால் உச்ச வரம்புச் சட்டங்கள் விரைவாக அமல் படுத்தப்பட வேண்டும் என்று சொல்வது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இவைகளை யெல்லாம் பத்திரிகைக்காரார்கள், காங்கிரஸ் கட்சி

[திரு. செ. மாதவன்] [1970 டிசம்பர் 2

அங்கத்தினர்கள் நிச்சயம் முற்போக்கு எண்ணத்தில் இருக்கிறார்கள், நிலச் சீர்திருத்தச் சட்டம் விரைவாக அமல் நடத்தப்பட வேண்டும். நில ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று எடுத்துச் சொல்வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். இப்படிப் பட்ட கருத்துக்கள்தான் தமிழ் நாட்டில் மக்கள் மத்தியில் பெரும் பான்மையாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக ஒரு குழுவை அமைத்தது நம்முடைய ஆட்சிதான். இப்படி தமிழ் நாட்டு ஆட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு அடுத்த முறையாவது பாராட்டிப் பேச வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை மன்றம் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி) :— பேரவை முன் உள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 43/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1970-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளி யேற்றப்படாமல் பாதுகாப்பு) திருத்த மசோதா (சட்டப் பேரவை எண் 43/1970) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஈ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 39/1970)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker Sir, I beg to move—

"That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) * be taken into consideration."

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th November 1970.



1970 டிசம்பர் 2] [திரு. செ. மாதவன்]

In moving the Bill I wish to say that the Bill seeks to provide for the grant of licence to the manufacture of potable liquor for human consumption. We have got grapes in sufficient quantity in our State to manufacture wine and, as it is an easily perishable crop, it is not possible to export all of them. Almost all the States of the Indian Union are wet. So, there is very good scope to manufacture wine in this State for export purpose, thus enabling one more industry to come into the State giving opportunity for more employment. As a matter of fact, from 1957 onwards a number of applications have already been received for manufacture of potable liquor. Hence, it has been decided to amend the Tamil Nadu Prohibition Act, 1937, to provide for issue of licence to manufacture potable liquor.

The Bill seeks to give effect to the above decision. Sir, I request the House to accept the motion.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, எனக்கு மிகுந்த ஆசை, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வருகிற மசோதாக் களில் ஏதாவது ஒன்றையாவது ஆதரிக்கக்கூடிய நிலை ஏற்படாதா என்பது. ஆனால், தவிர்க்கவே முடியாமல் இந்த மசோதாவையும் நான் எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஆளுங்கட்சியினர் மாறுபட்ட சூழ்நிலையில் தேவையென்று கருதினாலும், எங்களைப் பொறுத்தவரையில் இந்த மசோதா தேவையற்றது என்று கருது கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையில் இந்த அரசுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் நம் பிக்கை இருக்கும் வரையில், அந்தக் கொள்கையை வலியுறுத்திக் கொண்டு இருக்கும் வரையில், அந்தக் கொள்கையை மாற்றுகின்ற வரையில், கொள்கைக்கு முரணான எது ஒன்றையும் செய்வது சரி யில்லை. அதைச் செய்யாமல் இருக்க நாம் தார்மிக அடிப்படையில் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற பிற மாநிலங்களில் உள்ள நிலைமைகளைச் சுட்டிக் காட்டி, நம்முடைய செய்கைக்கு விளக்கம் கொடுப்பது சரியாகாது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசும் கழகமும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் சாப்பிடக் கூடாது; மனிதர்கள் சாப்பிடக் கூடாது என்கிறோம். நாம் சாப்பிடாமல் இருக்கும்போது, வெளியே ஏற்றுமதி செய்து, அதற்காக தயாரிப்பது என்பது நம்முடைய கொள்கையில் நாம் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையை இழந்து வருகிறோம் என்பதைத்தான் காட்டும். நம்முடைய நம்பிக்கை என்று சொல்லும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தையும் இணைத்துத்தான் சொல்லுகிறேன். அவர்களுக்கு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லும் வரையில், எங்களோடு இணைத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. மதுவிலக்குத் தேவையில்லை என்பதனால், அது வேறு; இன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்குக்

கொள்கையை மனமார ஆதரிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, அதே நேரத்தில் கொள்கைக்குப் புறம்பான முறையில் மசோதா கொண்டு வந்திருப்பது சரியில்லை என்று கருதுகிறேன்.

இன்னொரு எச்சரிக்கையையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் ஸ்பிரிட் பர்மிட் வாங்குகிறார்கள். வாங்கும்போது, பல தொழில்களுக்காக, இன்னின்ன காரணத்திற்காக வாங்குகிறோம் என்று சொல்லி ஆயிரக் கணக்கான ஸ்பிரிட் பர்மிட்டுக்களை வாங்கிக் கொண்டு இருக் கிறார்கள். நான் சவால் விட்டுச் சொல்ல முடியும். அப்படி வாங்கி தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது என்று. மதுவிலக்குக் கொள்கைக்கு முரணான அளவில் தவறானவகையில் விற்கப்படுகிறது. இந்த நிலையில் இன்றையதினம் ஒயின் தயாரிக்க தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதனால், இந்தச் சட்டத்தின் மூலம் மதுவிலக்குச் சட்டத்திற்கு, அந்தக் கொள்கைக்கு முரணாக, அதைத் தகர்த்தெறியக் கூடிய சூழ்நிலையை உருவாக்குகிறோம் என்பதை கவனிக்க வேண்டும். நான் திருத்தம் கொடுத்திருப்பதன் நோக்கம், ஒயின் தயாரிப்பதனால் அரசே செய்ய வேண்டும், என்று சொல்வதனால், அந்தக் கொள்கை யின் அடிப்படையில் ஒயின் தயாரிப்பதை ஒப்புக் கொள்கிறேன் என்று பொருள் இல்லை. எங்களைப் பொறுத்தவரையில், தெளிவாக சொல்லுகிறோம், அப்படித் தயாரிப்பதே தவறு, கூடாது என்று. அது சமுதாயத்தைப் பாழாக்கும். அப்படியும், திராவிட முன் னேற்றக் கழக அரசு அந்தக் கொள்கையை முழுவதும் ஏற்றுக் கொள்ளாமல், எப்படியும் ஒயின் தயாரிப்பதை அனுமதிக்க வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தால், அப்படித் தயாரிக்கின்ற ஒயினை அரசுதான் செய்ய வேண்டும் என்கிற நிலை இருக்கவேண்டும். எல்லோரும் தயாரிக்கலாம் என்கிற நிலையை உண்டாக்கி, எல்லோரும் பர்மிட் வாங்கி தவறான முறையில் செயல்பட விட்டு விடக்கூடாது என்கிற எச்சரிக்கையைச் சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தமாகச் செய்துள்ள இந்த மசோதாவை நான் உற்சாகத்தோடு வரவேற்க முடியாத தற்காக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னுடைய வருத் தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கை என்பது ஒரு மனச்சாட்சியைப் பொறுத்த விஷயமாக இருப்பது மட்டுமல்ல, எங்களுடைய குலத்தை, எங்க ளுடைய குடும்பத்தை, சுக வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டு வந்த தீமைகளை அகற்றி, நாட்டின் நன்மை ஒன்றிற்காக இருந்து வருவதை இனியும் உறுதியாக ஆதரித்து வருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கையில்லாத அரசு இதைக் கொண்டு வருவது வேறு விஷயம். இந்த அரசு மதுவிலக்கு கொள்கையை அடிப்படையாக ஏற்றுக் கொண்டுவிட்டு, மதுவை உற்பத்தி செய்து, பிறநாடுகளில் விற்பதற்கு ஏற்பாடுகள் செய்கிற தென்றால், மதுவிலக்குக் கொள்கை தோல்வியுற்றது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. நமது சட்ட அமைச்சர் அவர்கள் சட்டம் தெரிந்தவர்கள், சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள். நான் ஒன்றை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்குச் சட்டம் என்பதற்கு பரிபூரண மதுவிலக்கு என்றுதான் பொருள். ஆகவே, சட்டத்தின் தார்மீக ஜீவநாடியை இந்தத் திருத்தத்தின் பிறகு எப்படி காப்பாற்ற முடியும் என்பதை அறிய விரும்புகிறேன். மது விலக்கை விட்டுவிட்டோம் என்று சொல்வது வேறு விஷயம். மதுவிலக்குக் கொள்கையை நாம் நம்முடைய ராஜ்யத்திற்குள் அமல்படுத்துகிறோம். இந்தக் கொள்கை மனித சமுதாயம் முழு வதற்கும்தான் இருக்க வேண்டும். நம்முடைய மாநிலத்திலுள்ள மனித சமுதாயத்திற்கு மட்டும் இந்தக் கொள்கையை அனுசரித்து, மற்ற மாநிலங்களிலுள்ள மனித சமுதாயத்திற்கு இது பொருந்தாது என்று சொல்வது என்ன தார்மீகமாகும்? மதுவை இங்கே தயாரித்து, அதை தமிழ்நாட்டிற்கு வெளியே விற்போமானால், அந்த மாநிலத்து மக்கள், நம்முடைய மாநிலத்தைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மது உற்பத்தி செய்ய தனியாருக்கு லைசென்ஸ் வழங்குகிறபோது, ஏற்கெனவே மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்படுகின்ற கேடுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு அடிப்படையான காரணங்கள் இருக்கின்றன. ஸ்பிரிட் ஆல்கஹால் இவற்றை தனி நபர் விற்பதற்குரிய உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை எடுத்துவிட்டால் மதுவிலக்குக் கொள்கையை இன்னும் திறமையாக நடத்த முடியும். அதையே இன்னும் விஸ்தரித்து ஒயின் தயாரிப் பதற்கும் தனியாருக்கும் உரிமை தருவார்களானால் மதுவிலக்குக் கொள்கை தோல்வியாகத்தான் போகும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ராமமூர்த்தி அவர்கள், மது விலக்குக் கொள்கையை ஆதரித்துப் பேசினார். பின்னர், ஒயின் தயாரிக்க வேண்டுமென முடிவாக அரசாங்கம் தீர்மானித்தால், அதை தனியார் கையில் விட்டுவிட வேண்டாமென்றும், அரசே அதைச் செய்ய வேண்டும் என்றும் கூறினார். அதாவது, மதுவை தேசிய மயமாக்க வேண்டும் என்கிறார் நண்பர் ராமமூர்த்தி அவர்கள். இது மதுவிலக்குக் கொள்கையின் அடிப்படையான தார்மீகத்தையே கொன்றுவிடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குள்ள சங்கடம் என்னவென்றால், மதுவிலக்குக் கொள்கைக்காக லட்சோப லட்சம் தொண்டர்களை சிறைக்கனுப்பியும், நூற்றுக்கணக்கான தொண்டர்கள் உயிரிழந்தும் இருக்கின்ற நிலையில், ஸ்பிரிட் போன்ற வற்றை விற்பதற்கு தரக் குறைவானவர்களுக்குச் சந்தர்ப்பம்

[திரு. ம. பொ. சிவஞானம் [1970 டிசம்பர் 2

கொடுத்துவிட்டுச் சென்ற காங்கிரஸ் ஆட்சி, தங்களுடைய மாநிலங்களிலே மதுவிலக்குக் கொள்கையை தளர்த்தியும், எடுத்தும் வருகின்ற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு ஒரு சஞ்சலத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

திரு. ராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, மதுவிலக்குக் கொள்கையில் திராவிட முன்னேற்றக் கழகமும், "நாங்களும்" ஒரு கருத்துடன் இருக்கிறோம் என்றார். அவர் "நாங்கள்" என்று சொன்னது அவருடைய கட்சியைத்தான் குறிக்கிறது. அவருடைய கட்சி அகில இந்தியக் கட்சியாக இருக்கிறது என்று நினைத்துத்தான் அவர் சொல்லியிருப்பார். ஆகவே, இதை அகில இந்தியக் கொள்கையாக உருவாக்க வேண்டும். மதுவிலக்கை அமல்படுத்தும் பொறுப்பை மத்திய அரசுதான் ஏற்க வேண்டும். இது மாநில ஆட்சிக் கொள்கைக்கு இது பொருந்தாது. சமுதாய சீர்திருத் தங்கள் நாடு முழுவதற்கும் செய்யப்பட வேண்டும். ஆகவே, இது குறித்து மத்திய ஆட்சியோடு கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர ஆட்சியாளர்கள் முன்வந்தால் நல்லது. இதிலுள்ள குறைபாடுகளை ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I am in a very painful state of having to oppose this Bill with all the force at my command. Sir, clause 2 of the Bill (Section 17-B) says—

'The State Government or subject to their control, the Collector may issue licence to any person or any institution whether under the management of Government or not, for the manufacture of liquor for human consumption for purposes of export only and for the export of such liquor.'

In other words, there is contemplation, according to this Bill, to start a wine factory or any other beverage factory. In this connection, I wish to point out that during the Question Hour to-day, the Hon. Minister while answering Question No. 92 put by Thiru V. Swaminathan and Thiru N. S. V. Chithan—

'(a) whether the Government of Tamil Nadu propose to set up a wine factory in Tamil Nadu; and

(b) whether the place of its location has been selected?'

The Hon. Minister has stated—

'(a) No.

(b) Does not arise.'

That has been the categorical answer given by the Hon. Minister. Of course, it is likely that they have not selected the site of the factory or they do not have full details about it. After that answer, I was wondering whether they would withdraw the Bill but the Hon. Minister has now brought forward this Bill.



1970 டிசம்பர் 2] [Dr. H. V. Hande]

In this connection, I want to stress that this is very intimately connected with the prohibition policy and most of the hon. Members are quite sure that our distniguished late lamented Anna was very clear in regard to this matter. In fact, Rajaji and Anna were always strongly united on this issue. At the Seminar held in the Centenary Hall, apart from them Thiru Kamaraj also spoke on the same platform strongly opposing the relaxation of prohibition or removal of prohibition. When the Government frequently claim that they are going on the path laid down by the late revered Anna, we find now that there is a change in the policy in regard to this matter.

There is a feeling creeping in the minds of the public that the prohibition policy is being tampered with, or changed or softened or attenuated. In the Statement of Objects and Reasons appended to the Bill, it is stated that the liquor can be exported outside the State or country. It would not be a surprise that after sometime the requirements of Tamil Nadu itself would be so large because of the frequent granting of licences for the opening of wine or whisky or brandy shops. In fact, one doctor-friend from Tiruchirappalli has written to me that prohibition is observed more in its breach than in observance. I fully endorse the views expressed by my hon. Friend Thiru Ma.Po.Si. on this Bill.

Sir, there is a feeling among the public that there is a sort of malpractice going on in several of the wine shops—I do not make any charge against the Government—and I have received a number of complaints. I have also got certain details with which I can prove the malpractice. So, the method by which licences are granted to these shops must be investigated by a High Power Commission and whether the party affiliation connected with the members belonging to the Treasury Benches is taken into consideration in the grant of licences. A number of shops have sprung up and on the 9th of last month a shop has sprung up. I have great faith and confidence in the Hon. Minister and I only request him to appoint a High Power Commission to find out the manner in which licences were granted, whether any influence has been used and if so, at what point. These details are important. Now in many of the liquor shops whoever wants liquor can have it without a permit at the blackmarket price. It is very dangerous.

I have got statistics of the shops which have been given licences and I know what is going on. My doctor-friend from Tiruchirappalli had placed all the details. He even 'trunk-called' me and said "Dr. Hande, please raise the question in the Assembly". I do not propose to go into all the details. I request the Hon. Minister to give a categorical assurance to members of this House and also to persons outside that everything that is done in these shops is above board and nothing is at fault so far as the manner in which licences are granted, the persons to whom licences are granted, the manner in which liquor is sold. I request the Hon. Minister to give us a categorical assurance. With

these words I hope and trust that our distinguished Minister will come forward and follow the path of Anna and say 'let us now give up this piece of legislation, let us withdraw this Bill' because of the sentiments expressed from all sides against it.

Even my distinguished friend Mr. Ma.Po.Si. who always supports the ruling party, has now come forward to oppose this Bill. since he has strong feeling that this Bill is not all right. All these $3\frac{1}{2}$ years he had been supporting the ruling party. But because he feels strongly, he is opposing this measure. It is said that Dr. Hande is always critical of Government. But even Mr. Ma.Po.Si. is critical of this Bill. Taking into consideration the sentiments expressed on the floor of the House against the Bill, I hope the Hon. Minister will reconsider the Bill that has been brought forward.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் மீது கருத்துத் தெரிவித்து என் நண்பர் ஹாண்டே அவர்கள் இரண்டு பிரச்சினைகளைச் சொன்னார்கள். மதுவிலக்கு தீவிரமாக நடத்தப்பட வேண்டுமென்பது ராஜாஜியின் கொள்கை என்று முதலில் வலியுறுத்தினார்கள். பிறகு முடிக்கின்ற நேரத்தில் இப்படி திருத்த மசோதாவின் மூலமாக ஒயின் தயாரிக்க லைசென்சு வழங்கப்படும்போது யார் யாருக்கு வழங்கப்பட வேண்டுமென்பதை தெளிவு படுத்த வேண்டுமென்பதை வற்புறுத்தினார்கள். அதில் இருந்து மதுவிலக்கு தீவிரமாக அமல்படுத்தப்பட வேண்டிய கொள்கையாக இருந்தாலும் இந்தத் திருத்தத்தின் மூலமாக தொழில் வளர ஒரு வாய்ப்பு உண்டாக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நிம்மதியாக ஆராய்ந்தால் வேகத்தோடு ஆரம்பிக்கிற வார்த்தைகள் எல்லாம் விவேகத்தோடு முடியும் என்பது என் கருத்தாகும்.

அண்ணா அவர்களின் பெயரை இழுத்த காரணத்தினால் சொல்ல வேண்டியிருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே இப்படி ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். திரு. ஹாண்டே அவர்களிடம் "சொல்லவில்லை" என்றால் எல்லாவற்றையும், எல்லோரிடத்திலும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. (டாக்டர் ஹாண்டே சொந்த முறையில் சொல்லவில்லை. வெளிப்படையாக) சொந்த முறையில் அல்ல. நம்மைச் சுற்றியிருக்கிற மாநிலத்தில் உள்ளவர்கள் எல்லாம் இந்தத் தொழிலை நடத்தி வருகிறார்கள். நாம் ஏன் ஆரம்பிக்கக் கூடாது? நமக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் இந்த மாநிலத்தில் இருக்கின்றன. அதுவும் குறிப்பாக மலைப்பாங்கான பிரதேசங்களில் திராட்சை ஏராளமாக விளைகிறது. அதைக் கொண்டு இங்கேயே அப்படி ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்து அப்போதே இருந்தது. இப்போதும் இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த எண்ணத்தின்பேரில் இந்தத் திருத்த மசோதா வருகிறது.



NADU

மதுவிலக்குச் சட்டத்தையே ரத்து செய்து விட்டோம் என்று சொன்னால் அது வேறு பிரச்சினை. இப்போது ரத்து செய்வது அல்ல. இந்த மாநிலத்தில் ஒரு தொழில் என்ற முறையில் வளர்வதற்கு இப்போது சட்டத்தில் வசதியில்லை. அதை ஏற்படுத்தித் தருவதே இந்த மசோதாவின் நோக்கம்.

தொழிலை ஆரம்பிக்கிறோம் என்று சொல்கிறபோதே ஒயின் மற்றவர்கள் வீடுகளுக்கு எல்லாம் வந்துவிடும் என்று எண்ண வேண்டியதில்லை. தொழிலில் உற்பத்திச் செய்யப்படும் எல்லாவற்றையும் எல்லா மக்களும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்தத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. வெளிநாட்டுச் செலாவணியையும் தேடித் தந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்க தமிழகத்திலும் அந்தத் தொழிலை ஏற்படுத்த ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் ஆப்பிள் காயின் என்பதாக ஆப்பிள் பழ ரசம் உத்தரப் பிரதேசத்தில் தயாரிக்கப்படுகிறது. அதன்மூலம் மற்ற மாநிலங்களில் இருந்து எத்தனை வருவாய் அவர்களுக்குப் போய்வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அதைப்போல இந்தத் தொழிலை நம் மாநிலத்தில் ஏற்படுத்தினால் வெளியிடங்களில் இருந்து ஏராளமாகச் சம்பாதிக்க வழியேற்படும்.

எனது மரியாதைக்குரிய ம. பொ. சி. அவர்கள் ஒரு ஆட்சேபனை சொன்னார்கள். அவர்களுக்கு அந்தப் பயம் இருக்க முடியும். உண்மையான காந்தியவாதி அவர்கள். அந்தத் தொழிலிலேயே ஈடுபட்டிருந்த அவர் குடும்பம் இந்தக் கொள்கையை ஏற்றதனால் எத்தனை தொல்லைகளுக்கு ஆளானார்கள். அவர்களுடைய உறவினர்கள், சொந்தக்காரர்கள் ஆகியவர்களை எதிர்த்து எந்த அளவுக்கு சங்கடங்களை அனுபவித்தார்கள், அவர்களது கொடுமைக்குப் பலியானார்கள் என்பது எல்லாம் எனக்குத் தெரியும்.

அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தின் அடியாகவே மீண்டும் மது வந்து விடுமோ என்று பயப்படுவதில் நியாயம் இருக்கிறது. அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த பயம் இந்தத் திருத்த மசோதாவைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஏற்பட வேண்டியதில்லை. இந்தத் திருத்த மசோதாவில் மையக் கருத்தெல்லாம் ஒயின் தயாரிக்கும் தொழில் இந்த மாநிலத்தில் ஏற்பட வேண்டும் என்பதுதான். நாளைக்கோ, மறுநாளோ ஏற்பட்டுவிடப் போகிறதா? சர்க்கார் செய்யப் போகிறார்களா? தனியார் செய்யப்போகிறார்களா என்பது எல்லாம் வேறு பிரச்சினை. செய்ய வேண்டும் என்றாலும் செய்வதற்குரிய சூழ்நிலை இப்போது இல்லை. இந்தத் திருத்த மசோதாவின் மூலமாக அதற்கு வழி செய்யப்படுகிறது, அவ்வளவுதான்.

திரு. ஹாண்டே அவர்கள் ஏராளமான பேர்களுக்கு லைசென்சு விற்பதற்குக் கடை வழங்கப்பட்டிருக்கிறது என்றார்கள். டாக்டர்கள் இப்போது சர்டிபிகேட் கொடுத்தால் குடிப்பதற்கு இப்போதே நாம் பர்மிட் கொடுக்கிறோம். அவர்கள் எல்லோரும் ஒரே ஒரு கடையில் அல்லது மற்றொரு கடையில்தான் வாங்க வேண்டுமென்ற

சூழ்நிலை முன்பு இருந்தது. அப்படி இரண்டு மூன்று கடைகளில் தான் வாங்க வேண்டுமென்று அவர்களை ஏகபோக முதலாளிகளாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அர்த்தமென்ன இருக்கிறது? டாக்டர்கள் அனுமதி அளித்தால் பர்மிட் கொடுக்கிறோம். பர்மிட் உள்ளவர்களுக்கு மது விற்க முன்பு 3 கடைகள் இருந்தது என்றால், இப்போது முப்பது கடைகள் இருக்கின்றன என்பதனால் ஜனநாயக முறையில் இத்துறையில் உள்ள ஏகபோகத்துவம் மாற்றப்பட்டு இருக்கிறது. இதில் என்ன தவறு வந்து விடுகிறது? ஆகவே, இந்த திருத்த மசோதாவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இது நம் மாநிலத்தில் அந்தத் தொழில் வளர்வதற்கு ஆக்கம் அளிக்கத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி முடித்துக் கொள் கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதற்கு ஒரு விளக்கம். இப்போது குடிப்பதற்கு பர்மிட்—விதி விலக்கு பர்மிட் என்று வழங்கப்படுகிறது. இது நிறைவேறினால் விலக்கு விதியாகிவிடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திருத்த மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்கான சான்றுகள் ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன். நமது அரசியல் சட்டத்திலேயே ப்ரொகிபிஷன் பாலிஸி பரிபூரணமாக நடத்தப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு வேளை காங்கிரஸ் அதிகாரத்தில் இருக்கிற மாநிலங்களில் பரிபூரணமாக மதுவிலக்கு இல்லையே என்ற ஆட்சேபனையை எடுத்துத் தெரிவித்தாலும் அரசியல் சட்டத்தில் உள்ள ஒரு கருத்தாகையால் அதற்கு அபாரமான நம்பிக்கையும், மதிப்பும், மரியாதையும் இருக்க வேண்டுமென்ற காரணத்தினால் இந்தத் திருத்த மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

குறிப்பாக, ஒயின் தயாரிக்க இந்தத் திருத்த மசோதா மூலமாக லைசென்சு வழங்க அதிகாரம் பெறப்படுகிறது. மதுவிலக்குச் சட்டத்தில் அதற்கு உரிமையில்லை. அந்தச் சட்டத்திற்கு விலக்கு என்ற முறையில் இந்தத் திருத்தம் புகுத்தப்படுகிறது. நாம் மது விலக்குக் கொள்கையை பூரணமாக ஒப்புக்கொண்டு இத்தகைய திருத்தத்தைக் கொண்டுவந்தால் அது தோற்றுவிட்டதாகவே ஆகும்.

முன்பெல்லாம் மதுவிலக்கு கேள்விக் குறியாகவே இருந்தது. மத்திய அரசு 20 கோடி ரூபாய் கொடுத்துதவ வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆனாலும் அந்த உதவி கிடைக்காத நிலையிலும் மதுவிலக்குக் கொள்கையை பரிபூரணமாக செயல்படுத்துவதாக பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். அதைச் செயல்படுத்த தக்க வழி வகைகளைக் காணாது இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வருவது சரியல்ல. இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பிறகு தான் இந்தப் "பெர்மிட்" வழங்குகின்ற தன்மை அதிகமாகி இருக்கிறது



இந்த மசோதாவைப் பார்க்கும்போது இந்த மதுவிலக்கிலே நம்பிக்கை இல்லாமல், அதைக் கைவிடவேண்டுமென்ற முறையில் தான் இது இருக்கிறது. மதுவிலக்கு இருக்க வேண்டும். அதை எந்த வகையிலும் அமல் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். இன்று "மெடிசினல் டாய்லெட் பிரபரேஷன்" செய்வதற்கு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அதிகாரம் வழங்கியதால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். பல தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் வந்து பல வைத்தியசாலைகளை வைத்திருக்கிறார்கள். கஷாயம் அரிஷ்டம் அதிகமாகத் தயாரிக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். அதை மக்கள் குடிக்கின்றதைப் பார்க்கின்றோம். இது மாதிரி சட்டம் நாம் பாசாக்கிக் கொண்டிருந்தால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒரு சட்டத்தை நிறைவேற்றினால் அதைச் சரியான முறையில் அமலாக்க வேண்டும். இல்லையேல் இந்தச் சட்டமும் சரியாக அமல் நடத்தப்படாமல் போய்விடும். ஆகவே இந்தத் திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது சட்டமானால் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறக் கூடும். ஆனால் சமுதாயத்திற்கு இதனால் எந்த விதமான நன்மையும் இல்லை என்று கூறி இந்தத் திருத்தம் மதுவிலக்குக் கொள்கைக்கு எதிராக இருக்கிற காரணத்தால் இதை வாபஸ் பெற வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கக் கூடிய மசோதாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மதுவிலக்கு சட்டத்திலே தொழில் துறைக்காகவோ அல்லது மருத்துவக் காரியங்களுக்காகவோ, அல்லது விஞ்ஞான ஆராய்ச்சிக் காரணங்களுக்காகவோ தான் மது உபயோகப்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் இருக்கிற மக்கள் மதுவைப் பயன்படுத்துவதற்காக நாம் மதுவைத் தயாரிக்க அனுமதி கோரப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே உள்ள மக்கள் குடிப்பதற்காக நாம் மதுவைத் தயார் செய்யக் கூடாது, என்று நாமாக திருத்த தடையை நீக்கக் கூடிய அளவில் அமைந்திருக்கிறது. மற்றவர்களைப் பொறுத்தவரையில் குடித்தால் பரவாயில்லை. அதற்கு நாம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்யும் என்று நண்பர்கள் கூறினார்கள்.

ஏற்கனவே நாம் என்ன செய்திருக்கிறோம்? மதுவிலக்குக்கும் இதற்கும் தொடர்பும் இல்லை. இந்த மாநிலத்திலே உள்ள மக்கள் அருந்தினால் தவறு. மற்ற மாநிலங்களில் உள்ள மக்கள் அருந்துவதற்கு தார்மீக ரீதியாக வசதி இருக்கிறது. மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே கூறியதைப் போல இந்தியாவில் மட்டும் அல்ல, உலகத்தில் எங்கிலும் மதுவிலக்கை அமல்படுத்த முடியாது என்பதைப் பார்க்கிறோம். காங்கிரஸ் ஆட்சி நடக்கின்ற மாநிலங்களிலே பூரணமாக, வெற்றிகரமாக மதுவிலக்கு நடைபெற வில்லை. அரசாங்க மருத்துவர்கள் அனுமதி பெற்றுத்தான் மது அருந்தலாம் என்றிருந்தது. ஆனால் இப்போது எந்த டாக்டர் "சர்டிபிகேட்" கொடுத்தாலும் அனுமதி அளிக்கப்படும் என்று வந்திருக்கிறது.

இன்றைக்கு பிரச்சினை என்னவென்றால் சாதாரண உழைப்பாளிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் கள்ளச் சாராயத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மது விலக்குச் சட்டத்தின் கீழ் பிடிக்கப்படுகிறார்கள். நம்முடைய நாட்டிலே மரங்களிலே மொந்தைகளை, கலயங்களை வைத்திருப் பதைப் பார்க்கிறோம். அவற்றைத் தடுப்பதற்கு எந்தச் சட்டத்திலும் வழியில்லை. வசதி படைத்தவர்கள் அனுமதி பெற்று பயன்படுத்து கிறார்கள். சட்ட விரோதமாக கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடியவர்கள் சாதாரண மக்கள் அவர்கள் கைது செய்யப்படு கிறார்கள். தண்டிக்கப்படுகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலும், வேறு பல மாவட்டங்களிலும் பானைகளைக் கட்டியிருப்பதைப் பார்க்கிறோம். அரசாங்கம் அதைப்பற்றி யோசனை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதிலே சிக்கல் என்ன வென்றால், ஏன் வெற்றி பெறமுடியாத ஒரு திட்டத்தை இந்த மாநிலத்தில் அமல் நடத்திப் பல்லாயிரக் கணக்கான வழக்குகளைப் போட வேண்டும். அதற்குப் பதிலாக மது விலக்கை ரத்து செய்ய வேண்டும். ரத்து செய்யப்பட்ட மாநிலத் திலே கூடுதலாக அருந்தப்படுகிறது. தமிழ்நாட்டில் குறைவாக அருந்தப்படுகிறது என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை: இந்த மசோதாவினால் தொழில் ஒன்று வரும் என்றும் அதற்காக இது அவசியம் என்று சொல்லப்படுகிறது. அதை ஏன் இழக்க வேண்டு மென்பதால் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது.

நமது மாநிலத்தில் இப்போது மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது. சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். தண்டிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஒழிய வேண்டு மானால் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு மற்ற மாநிலங்களில் உள்ளதைப் போல மது "கன்டன்ட்" ஆக உள்ளபடிக்கு "பர்சன்டேஜ் ஆப் லிக்கர்" குறைத்து நல்ல முறையில் செய்ய வேண்டும். அரசாங்கம் தார்மீக ரீதியிலே ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு செல்லுகின்ற நிலைமையைப் பார்த்தால் மதுவிலக்கு சரியாக நடத்த முடியாது என்று எண்ணுகிறார்கள் போல் தோன்றுகிறது. இதைக் கைவிடுவதுதான் சரியாக இருக்கும். வெற்றி பெற முடியாத ஒன்றை, தோல்வி அடைந்த ஒன்றை திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது)



திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த சபையிலே கொண்டு வந்திருக்கின்ற மதுவிலக்குச் சட்டத் திருத்தத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டம் நமது ராஜ்யத்திலே அமல் இருக்கின்ற போது மதுவை உண்டாக்குவதற்கான ஒரு தொழிலை ஆரம்பிப்பது என்பது, நல்ல வழியை விட்டுப் பின்னால் உள்ள வழியை ஊக்கு விப்பது போன்றதாக இருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தாலும் கூட சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை என்பது உண்மை. சில நாளைக்கு முன்னால் ஒரு போலீஸ் இன்ஸ் பெக்டரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள் கூறினார்கள். தென்னந்தோப்பு முழுவதும் கள்ளு கட்டி இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு என்னிடத்தில் ஆட்கள் இல்லை. நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் தண்டனைக் குறைவாக இருப்பதாலே மீண்டும், மீண்டும் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு உதாரணத்திற்கு சொன்னேன்.

இப்படி இருக்கின்ற இந்த நேரத்திலே நாம் தொழில் ஆரம் பித்தாலும் உற்பத்திப் பெருகும் என்பது உண்மை. ஆனால் எம் மாதிரியான தொழிற்சாலையை ஆரம்பிப்பது? உண்ணப்படுகின்ற பொருள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் என்பதைக் கணக்கில் எடுத் துக்கொண்டு, பொருளாதாரம் வேலைவாய்ப்பு என்பதை மட்டும் பார்க்காமல் இப்படி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பது தார்மீக ரீதியிலே சரி அல்ல. அந்தத் தொழிற்சாலை மதுவை உற்பத்தி செய்து வேறு மாநிலங்களிலே குடிக்கலாம் என்று சொல்வது தார்மீக ரீதியாக சரியல்ல.

மதுவிலக்கை முதன்மையாக நம்முடைய ராஜ்யம்தான் கொண்டு வந்தது. அப்படிக் கொண்டுவந்த ராஜ்யம் மற்ற மாநிலங்களில் உள்ளவர்களை நீங்கள் குடியுங்கள், நீங்கள் குடியுங்கள் என்ற முறையிலே ஆர்வம் காட்டுவது நாம் முதலிலே செய்ததற்கு நேர் எதிரான பலனைத்தான் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு நீக்கப்பட வேண்டும், ஏனென்றால் மது விலக்கு வெற்றி பெறவில்லை, வெற்றி பெறவேண்டுமென்று நாம் சட்டத்தின் மூலமாகச் செய்ததெல்லாம் ஏழைகளை, திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப்போன்று சட்டத்திற்கு ஆளாக்கி தண்டிக் கின்ற முறையிலேதான் சென்று கொண்டிருக்கிறது. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் மாமூல் இவ்வளவு ரூபாய் என்று தந்து திருட்டுச் சாராயம் காய்ச்சுவதாக எல்லா இடங்களிலிருந்தும் புகார் கள் வருகின்றன. சட்டத்தைப் போட்டும் நிறைவேற்ற முடியாத நிலையில் சட்ட விரோதமாகச் செய்வதற்குத் தூண்டுகின்ற அளவுக்கு சட்ட விரோதமான செயலை வளர்ப்பதற்கும் மிக மிக மோசமான காரியங்களிலே ஈடுபடுவதற்கும்தான் இந்தச் சட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இம்மாதிரியான தொழிற்சாலைகளை ஆரம்பிப் பதற்கான அரசாங்கத்தினுடைய கருத்தைக் கைவிடுவதுதான் நல்லது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* ஹாஜி ம. மூ. பீர்முகம்மது: தலைவர் அவர்களே, மது உள்ளே போனால் மதி வெளியேறி விடுகிறது என்ற மகத்துவமான தத்துவத்தை அடிப்படையாக வைத்து நம்முடைய நாட்டிலே மதுவிலக்குக் கொள்கை அமல் நடத்தப்படுகிறது. அந்தக் கொள்கை அமல் நடத்தப்படுவதால் ஏறக்குறைய 25 கோடி ரூபாய் அளவுக்கு அரசு இழப்பாக ஏற்றுக் கொள்கின்ற நிலையிலே சிறிய அளவுக்கு அயல்நாட்டுச் செலாவாணியோ அல்லது பொருளாதாரமோ கிடைக்கிறது என்ற காரணத்தினாலே அந்த மகத்துவமான மதுவிலக்குக் கொள்கைக்குப் புறம்பாக திராட்சை மது தயாரிக்க வகை செய்யும் இத் திருத்தத்தைக் கொண்டுவருவது சரியல்லவென்று கருதுகின்றேன்.

ஒரு யானையை இலவசமாகக் கொடுத்துவிட்டு, அதை அடக்குவதற்குப் பயன்படுகின்ற அங்குசத்தை விலைக்கு விற்பது என்பது எவ்வளவு வேடிக்கையான கதையாக இருக்குமோ அதைப்போன்று மதுவிலக்குக் கொள்கையினால் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பை அரசு ஏற்றுக் கொண்டு சிறிய அளவுக்கு வருமானத்தை திராட்சை மது ஒயின், தயாரிப்பதன்மூலம் எதிர் பார்க்கின்ற நிலைமை இருக்கின்றது. கெட்டவனைவிட கெடுப்பவன் தான் பெரிய குற்றவாளியாவான் என்பது இறைவனுடைய வேத வாக்காகும். நம்முடைய மாநிலத்திலே மதுக் கடைகள் கூடாது என்று சொல்லுகின்ற நேரத்தில் வெளி மாநிலங்களிலே உள்ளவர்கள் நம்முடைய நாட்டிலே உற்பத்திசெய்கிற மதுவால் மக்கள் குடித்துக் கெட்டுவிடக்கூடாது என்ற தத்துவத்தினையொட்டியும், அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் கௌரவப் பிரச்சினையாகக் கொள்ளாமல் தயவுசெய்து இத்திருத்தத்தை வாபஸ் பெற்று மதுவிலக்குக் கொள்கையை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

திரு. க. ர. நல்லசிவன்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பேசும்பொழுது வருத்தத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காந்திஜியைப்பற்றி நாம் அநேகமாக நினைப்பதே கிடையாது. ஏனென்றால் அவர் செத்து 20 ஆண்டுகள் போய்விட்டது. அவர்களுடைய கொள்கைகளை நாம் கொன்றுவிட்டோம். மதுவைத் தயாரிப்பதற்கு அனுமதி கேட்டு இருக்கிறார்கள். கிராமங்களிலே அனுமதியே இல்லாமல் கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் இருக்கின்றன. ஒன்று உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு அந்தரங்கசுத்தியாக மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று இருந்தால் அமல்படுத்த வேண்டும். இல்லையென்றால் நானே கூட குடித்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால்தான் எனக்கு மதிப்பு அந்தஸ்து என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். குடித்தால்தான் அந்தஸ்து என்ற நிலைமை பக்கத்திலே வந்துவிட்டது. ஒன்று மனப்பூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அதிலே நம்பிக்கை இருந்தால் அமல்படுத்த வேண்டும். ஒவ்வொரு போலீஸ் 'ஸ்டேஷனிலும் 5,000, 10,000 என்று சகிக்க முடியவில்லை



அல்லது இந்த தப்புந் தண்டாவை விட்டுத் தொலைத்து விட்டு உங்கள் காலத்திலே இதை ரத்து செய்ய வேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்பொழுது மன்றத்தின் முன் இருக்கக்கூடிய மசோதாவைப்பற்றி அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட மனித உணர்ச்சிக் கருத்துக்கள் நிறையச் சொல்லப்பட்டன. எந்த அரசியல் கட்சியும் அந்தக் கட்சியின் கொள்கையின் பக்கம் நிற்காமல் எது தேவை என்று கருதுகிறதோ அதைப்பற்றிச் சொன்னார்கள். மதுவிலக்குத் தேவையா இல்லையா என்பது பெரிய பிரச்சினை என்பதையும் இந்த மசோதா விவாதிக்கப்பட்டவுடன் உடனடியாக முடிவு செய்யக் கூடியதல்ல என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். மதுவிலக்கு சம்பந்தமாக இப்போதைய கொள்கையைப் பொறுத்த அளவிலே அதைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்பதிலே சந்தேகம் கிடையாது. அதைப்பற்றி இந்த மசோதாவிலே எந்தவிதமான கருத்தையும் நாங்கள் கொண்டு வரவில்லையென்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. நல்லசிவன் அவர்கள் வருத்தத்தோடு சொல்வதாகச் சொல்லி, தானே குடிக்கப்போவதாகச் சொன்னார்கள். தயவு செய்து அவர்கள் அப்படிச் செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயம் அவர்கள் வருத்தத்தோடு சொன்னதை உணர்ந்து மதுவிலக்கை மீறுகின்ற முயற்சிகளைத் தடுக்கின்றவற்றை எடுக்கலாம். காந்தீயக் கொள்கையிலே நம்பிக்கையுள்ளவர்கள் என்று சொல்லி கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. ம. பொ. சி. அவர்கள் இதுபோன்ற கொள்கை மதுவிலக்குக் கொள்கைக்கு ஊறுவிளைத்து விடக்கூடாது என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் இணைத்துச் சொன்னார்கள். எந்த எந்தக் கட்சி அகில இந்தியக் கட்சி என்று எல்லாம் சொன்னார்கள். ஒரு கட்சிக்குச் சொல்வதாக நினைக்க வேண்டாம். பொதுவாக அகில இந்தியப் பிரச்சினையாக—மற்ற மாநிலங்கள் இந்தக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லக்கூடிய நிலைமையிலே—இந்தக் கொள்கையை அகில இந்தியச் சார்பிலே அமல்படுத்துவதற்கு முடிவு எடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் அகில இந்திய ரீதியிலே அகில இந்தியத் தலைவர்கள் சொன்னதுபோல் இதைப்பற்றிப் பரிசீலித்து மதுவிலக்கை ஏற்றுக்கொண்டு இருக்கின்ற மாநிலங்களுக்குச் சங்கடம் இல்லாத சூழ்நிலையை உண்டாக்குவார்களென்ற நம்பிக்கையிருக்கிறது.

மாநில அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திடம் இதைப்பற்றி வற்புறுத்தி வருகிறோம். மதுவிலக்கு வேண்டும் என்பதை அகில இந்தியக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு அதே சமயத்திலே அந்தந்த மாநிலங்களினுடைய பொறுப்புக்கு விட்டு விடுகிறோம் என்று சொல்கிறபோதுதான் கொள்கைக் குழப்பம் ஏற்படுகிறது. ஒரு கட்சி மதுவிலக்கு வேண்டுமென்று சொல்லி

விட்டு, இன்னொரு இடத்திலே அதை ரத்து செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அகில இந்தியா முழுவதும் மதுவிலக்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்ற முறையிலே மத்திய அரசாங்கம் இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு அகில இந்தியா முழுவதும் அமல்படுத்த முன்வர வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கை பற்றி இந்த அரசாங்கத்திற்கு எந்த விதமான சந்தேகமும் இருக்கவில்லை என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு தொழிற்சாலை வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற நிலைமை தெரிவிக்கப்பட்டது. ஏன் பாதிக் கிணறு தாண்ட வேண்டும் என்ற முறையிலே கேட்டார்கள். உடனே ரத்துச் செய்துவிடுங்கள் என்றார்கள். இல்லை, இல்லை, மதுவைப் புகுத்திவிட்டால் மதி போய்விடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மதுவைக் குடித்து விட்டால் மதி போய்விடுகிறது என்றால் பிற நாடுகளிலே மிகச் சிறந்த அறிவைப் பெற்றிருக்கிறார்களே என்று யாரும் சொல்லக்கூடும். நான் சொல்லவில்லை. அறிவு வளர்ச்சிக்குக் குந்தகம் அதனால் வரும் என்று சொல்வார்களானால் அதற்கு எதிரான அப்படிப்பட்ட கருத்தும் இருக்க முடியும் என்பதை—நான் சொல்லவில்லை—வேறு யாரும் எடுத்து வைப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நான் அப்படிப்பட்ட எதிர்வாதத்தை வைக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையிலே நிச்சயமாக மதுவிலக்கு சட்டம் சிறந்த முறையிலே அமல்படுத்தப்பட வேண்டுமென்ற நம்பிக்கையோடு இந்த அரசு செயல்படுகிறது. பல இடங்களில் பல தவறுகள் நடைபெறுகின்றன வென்றெல்லாம் இங்கே சுட்டிக் காட்டப்பட்டது. அது புதிதல்ல. அந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு, சுதந்திரம் அடைந்து 23 ஆண்டுகளாகியும், இதே மன்றத்திலே தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் குற்றச்சாட்டு. இந்தச் சட்டத்தை மீறுபவர்கள், ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், பொய் வழக்குகள் போடப்படுகின்றன என்றெல்லாம் கூறும் இப்படிப்பட்ட பிரச்சினைகளெல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், நிச்சயமாக இந்த அரசு இந்தக் கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு அப்படிப் பட்ட தவறுகள் ஏற்படாத சூழ்நிலையை உருவாக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய அரசு இந்தச் சட்டத்தை உருவாக்க, இதில் சில விதிவிலக்குகளை, Liberalisation of rules என்று குறிப்பிட்டு, சில விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மதுவை விற்பதற்குக் கொடுக்கப்படும் அனுமதியைப் பற்றியும் இங்கே கருத்துக்களை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி விரிவாகப் பேச இந்த மசோதாவிலே இடமில்லாவிட்டாலும், சட்டத்திற்கு உட்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு, யார் வேண்டுமானாலும் இந்த அனுமதியைப் பெற்று விடலாம். இது கட்சிக்கு அப்பாற்பட்டது. இந்தக் கட்சிதான் இதைச் செய்ய வேண்டும், அந்தக் கட்சி இந்த அனுமதியைப் பெறக் கூடாது என்று எந்தவிதமான விதியும் இல்லை. ஆகவே, அரசியலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. சட்ட விதிகளுக்கு உட்பட்டு, மது விற்பனை செய்யப்படும் அனுமதி தரப்படுகிறது. மதுவிலக்கு



கொள்கையை ஊடே கொண்டு வந்து தொழிற்சாலை உருவாக்கும் கொள்கையைத் தவிர்த்து விடலாம் என்ற முயற்சியை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்க வேண்டாமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களும், இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வருவதை தங்கள் கட்சி பலமாக எதிர்க்கும் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், நாமெல்லாம் சேர்ந்து ஆதரிக்கக்கூடாது இந்தக் கொள்கையை என்று சொன்னார்கள். இப்பொழுதாவது இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, எங்களையும் அவர்கள் சேர்த்துக்கொண்டு, நாமெல்லாம் என்று சேர்த்துக்கொண்டதற்கு மகிழ்ச்சி, ஒரு அற்ப மகிழ்ச்சி. ஆனால் நிச்சயமாக அவர்கள் கருதுகிறார்களா என்றால் அது சந்தேகம்தான். ஆனால், அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்றால், இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கும் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட கொள்கை அல்ல, கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல. இது ஏற்கெனவே இருந்த காங்கிரஸ் கட்சி அரசால், நம்முடைய திரு. இராமமூர்த்தி அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களும் யாரைப் போற்றுகிறார்களோ, யாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அந்தத் தலைவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட அந்தக் கொள்கையை சட்டபூர்வமாக இன்றைய தினம் நிறைவேற்ற வந்திருக்கிறோம், அவ்வளவுதான். டாக்டர் ஹாண்டே அவர்கள், இதைச் சொன்ன பிறகு அவர்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அது அவர்கள் விருப்பம்.

உண்மையைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமும் அல்ல. ஏற்கெனவேயிருந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்ட கொள்கையைச் சட்டமாக ஆக்கும்பொழுது பின்னால் வந்த அரசாங்கம் அதை இயற்கையாக வழிமுறைப்படுத்தவேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம், அவ்வளவுதான். காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கையை, இன்று அந்தக் கட்சி அங்கத்தினர்கள் எதிர்க்கட்சிக்குச் சென்றுவிட்டோம் என்ற காரணத்தினால் எதிர்க்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படி எதிர்ப்பார்களானால் இன்று அவர்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் கோபித்துக்கொள்வார்கள். நானே அந்தச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, கொண்டு வாருங்கள் என்று நானே ஆணை பிறப்பித்து, நான் ஆணை பிறப்பித்ததை முன்னேற்றக் கழக அரசு ஏற்று செயல்படுத்தும்பொழுது, என்னைப் பின்பற்றும் நீங்கள் எதிர்த்துப் பேசலாமா என்று அவர்கள் மீது கோபித்துக்கொண்டாலும் கோபித்துக்கொள்வார்கள். ஆகவே, அதற்காகவாவது இந்த மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1970 டிசம்பர் 2

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், மதுவிலக்கு கொள்கையிலே முழுக்க முழுக்க நம்பிக்கை வைத்திருக்கிறோம். மதுவிலக்கு சட்டம் சிறந்த முறையிலே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் மதுவிலக்குச் சட்டத்திற்குட்பட்டு இன்றைக்கும் மதுவை அருந்துவதற்கு அனுமதி கொடுக்கிறோம். இன்றைக்கும் தமிழ்நாட்டு எல்லைக்குள் மது அருந்துபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், மது நடமாடிக்கொண்டு இருக்கிறது இதைக் குடிப்பவர்கள் வேறு காரணங்களுக்காக, மருத்துவத்துறை பயன்படுத்த, அதற்கும் சட்டத்திலே ஏற்கெனவே விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கும் தமிழ்நாட்டிலே மது இருப்பது என்பதும், மது நடமாடிக்கொண்டிருக்கிறது என்பதும், சட்டத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மை. அவர்களுக்காக, அந்த மது தயாரிக்கப்படும் ஒரு வாய்ப்பைக் கோருகிறோம். மதுவை தயாரிப்பதால், தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கும் சட்டத்திலே அனுமதிக்கப்பட்ட தேவையான அளவிற்கு நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும், வெளிநாட்டுச் சரக்கை இங்கே கொண்டுவர வேண்டாமென்ற நல்லெண்ணத்தினாலே கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தத் திருத்த மசோதாவிலே இன்னொரு திருத்தமும் Medicinal purpose-க்கு வேண்டுமென்ற திருத்தத்தையும் நான் கொண்டு வர இருக்கிறேன். ஆகவே, இந்த மசோதா நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இது ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. புதிதாக எந்த தத்துவமும் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மதுவிலக்கை ரத்து செய்யப்போவது இல்லை என்ற உறுதியை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன். கருத்து தெரிவித்தவர்களெல்லாம் தங்கள் உள்ளத்திலேயிருக்கும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இதைக் கட்சி அடிப்படையிலே எதிர்க்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவர்களெல்லாம் சேர்ந்து ஏகோபித்து இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆனால் அதே சமயத்தில் மதுவிலக்கு சட்டத்தை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்ற ஆலோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதை அறிவித்து இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 39/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

THIRU R. PONNAPPA NADAR : I demand a poll, Sir.



1970 டிசம்பர் 2]

(எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு எடுப்பதற்காக மணியடிக்கப் பட்டது.)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த மசோதாவை எதிர்த்து ஓட்டுக்கு விட வேண்டுமென்று நம்முடைய எதிர்க்கட்சி துணைத்தலைவரவர்கள் விரும்புகிறார்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை. நல்ல உள்ளம் படைத்தவர்களெல்லாம் எங்கள் பக்கம் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. கொள்கை விளக்கத்திற்காக . . .

THIRU R. PONNAPPA NADAR : At this stage the Minister is not entitled to make any speech, the rules do not permit it.

THIRU K. RAMAMOORTHY : At this stage there cannot be any speech.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓட்டுக்கு விடவேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் விளக்கம் தருவார்களானால், எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும் பரிசீலிக்க.

THIRU K. RAMAMOORTHY : There cannot be any speech at this stage.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப் பற்றி ஒரு விளக்கம் சொல்லுவார்களேயானால்

(திரு. இராமமூர்த்தி, திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருக்கிறது. பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 39/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்":

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர் :—

ஏற்போர்

1. திரு. ஜி. ஆர். எட்மண்ட்
2. திரு. மு. அலங்காரம்
3. திரு. மு. ஆனந்தன்
4. திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
5. திரு. எஸ். கணேசன்
6. திரு. எஸ். ஆறுமுகம்

7. திரு. கே. ஆண்டி என்ற குருசாமி
8. திரு. எம். சி. பாலன்
9. திரு. சோ. கருணைநாதன்
10. திரு. சி. கே. சின்னராஜி
11. திரு. ந. தருமலிங்கம்
12. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து
13. திரு. து. ப. அழகமுத்து
14. திரு. இராம. அரங்கண்ணல்
15. திரு. கா. வேழவேந்தன்
16. திரு. எஸ். முருகையன்
17. திரு. ஆ. கோவிந்தராசன்
18. திரு. டி. இராசரத்தினம்
19. திரு. ஏ. கே. மூர்த்தி
20. திரு. எம். ஆர். கண்ணன்
21. திரு. ஆ. கருப்பையா
22. திரு. க. மு. கதிரவன்
23. திரு. கொளத்தூர் கோதண்டம்
24. திரு. கு. கிருஷ்ணமூர்த்தி
25. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி
26. திரு. மு. கிருஷ்ணமூர்த்தி
27. திரு. அ. கிருஷ்ணன்
28. திரு. நா. கிருட்டிணன்
29. திரு. ம. சொ. கோவிந்தராசன்
30. திரு. சி. வீரமணி
31. திரு. பி. துரைராஜ்
32. திரு. மூ. மாரிமுத்து
33. திரு. எல். கணேசன்
34. மாண்புமிகு திரு. செ. மாதவன்
35. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
36. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்
37. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா
38. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்
39. திரு. கே. ஏ. மதியழகன்
40. திரு. என். ராஜாங்கம்
41. திரு. மு. சு. சிவசாமி
42. திரு. எஸ். இராமச்சந்திரன்
43. திருமதி ஏ. சுவாரஸ்



44. திரு. எஸ். முத்துலிங்கம்
45. திரு. பு. செ. முத்துச்செல்வன்
46. திரு. பா. நாகலிங்கம்
47. திரு. ஆர். நாகசுந்தரம்
48. திருமதி சு. குப்பம்மாள்
49. திரு. ஜி. நடராஜன்
50. திரு. ஏ. சி. நரசிம்மன்
51. திரு. எம். கோபால்
52. திரு. பெ. பெரியசாமி
53. திரு. தி. பொன்னுமலை
54. திரு. ஏ. எம். இராஜா
55. திரு. டி. ஏ. ராஜவேலு
56. திரு. க. ந. இராமச்சந்திரன்
57 திரு. மு. ராமன்
58. திரு. எஸ். ஆர். சென்னியப்பன்
59. திரு. வ. க. இராமராசன்
60. திரு. இ. ராமசாமி
61. திரு. ஜே. எஸ். இராசு
62. திரு. மு. இரத்தினசபாபதி
63. திரு. பி. எஸ். சந்தானம்
64. திரு. ஆ. கு. சுப்பையா
65. திரு. சோ. அழகர்சாமி
66. திரு. என். மருதாசலம்
67. திரு. மா. பா. சாரதி
68. திரு. ந. சோமசுந்தரம்
69. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
70. திரு. நா. வீராசாமி
71. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்
72. திரு. என். சங்கரய்யா
73. திரு. பி. எஸ். தனுஷ்கோடி
74. திருமதி கே. பி. ஜானகியம்மாள்

**மறுப்போர்**

1. திரு. கோ. பூவராகன்
2. ஹாஜி மா. மு. பீர்முகம்மது
3. திரு. க. ர. நல்லசிவன்
4. திரு. ம. பொ. சிவஞானம்

5. திரு. எம். சுரேந்திரன்
6. திரு. ந. தீர்த்தகிரி
7. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
8. திரு. டாக்டர் எச். வி. ஹாண்டே

(இந்த பிளாக்கில் அமர்ந்திருந்த திரு. பி. எஸ். எல்லப்பன் அவர்களை டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் எழுந்திருக்குமாறு சைகை செய்தார். உடனே திரு. எல்லப்பன் அவர்கள் எழுந்து நின்றார்).

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எல்லப்பன் அவர்கள் முதலில் எழுந்திருக்கவில்லை............

(பேரவைத் தலைவர் வாக்கியத்தை முடிப்பதற்கு முன்னதாக திரு. எல்லப்பன் அவர்கள் தம் இருக்கையில் அமர்ந்தார்.)

மறுப்போர்—தொடர்ச்சி

9. திரு. க. இராமமூர்த்தி
10. திரு. கே. சகாதேவக் கண்டர்
11. திரு. கே. எஸ். கோதண்டராமையா
12. திரு. மு. முத்தையா
13. திரு. பி. வெங்கடசாமி
14 திரு. ஆர். சீனிவாசகநாயகர்
15. திரு. பி. எம். முனுசாமி கவுண்டர்
16. திரு. என். எஸ். வி. சித்தன்
17. திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்
18. திரு. ஜே. ஜேம்ஸ்
19. திரு. வ. ஜார்ஜ்
20. திரு. மு. கந்தசாமி படையாச்சி
21. திரு. அ. மாரிமுத்து
22. திரு. டி. மார்டின்
23. திரு. இ. எம். சுப்பிரமணியம்
24. திரு. க. முருகேசன்
25. திரு. சி. நஞ்சன்

நடுநிலை வகிப்போர்—ஒருவருமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை ஏற்போர் 74 பேரும், தீர்மானத்தை மறுப்போர் 25 பேரும் இருக்கிறார்கள். நடுநிலை வகிப்போர் ஒருவருமில்லை. ஆகவே, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று அறிவிக்கிறேன்.

பின்னர், மசோதா, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 2, இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'In clause 2 of the Bill, in new section 17-B, *omit the words* "only and" and add the words "and for the purposes permitted under this Act" at the end.'

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 39 of 1970) as amended be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

5. அறிவிப்பு

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கு-வடிகால் வாரிய மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர் வழங்கு-வடிகால் வாரிய மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கல்—வடிகால் வாரிய மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 47/1970).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர்வழங்கல்—வடிகால் வாரிய மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண். 47/1970) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன் மொழிகிறேன்.

* 23—11—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1970 டிசம்பர் 2

நகர்ப்புறப் பகுதிகளுக்கும் கிராமப் புறப்பகுதிகளுக்கும், இயன்ற வரையில் குறைந்த காலத்தில் தூநீர் வழங்கு வசதிகளையும், போதிய வடிகால் வசதிகளையும் செய்து தருவதன் முக்கியத்துவத்தைக் குறித்துத் தற்போது சிலகாலமாகவே அரசின் நாட்டத்தைக் கவர்ந்து வந்துள்ளது. நீர்வழங்கு-வடிகால் திட்டங்கள் தொடர்பான பொருள்கள் பல துறைகளால் கவனிக்கப்பட்டு வந்தன என்பது தெரிய வந்தது. எனவே குடிநீர்வழங்கு-வடிகால் திட்டங்களைச் செவ்விய முறையில் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்காக, இவற்றை ஒரே அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவது அவசியமென்று அரசு கருதியது. அப்போதுதான் அவற்றை நன்கு ஆய்வு செய்து நிறைவேற்ற இயலும் என்பதும் அரசின் கருத்தாகும். அதற்கிணங்க, தமிழ்நாடு நீர்வழங்கு-வடிகால் வாரியத்தை 1969 செப்டம்பரில் அரசு அமைத்தது. இந்த வாரியம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். எடுத்துக்காட்டாக, கல்கத்தா அல்லது பங்களூரைச் சேர்ந்த மாநகர் நீர்வழங்கு கழிவு நீர் அகற்று வசதி வாரியங்கள் நீர்வழங்கு வடிகால் திட்டங்களை மட்டுமே கவனித்துக் கொள்கின்றன. அதுவும் அந்தந்த நகரங்களில் அத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தே அந்த வாரியங்கள் நாட்டம் செலுத்துகின்றன. ஆனால், தமிழ்நாடு நீர்வழங்கு-வடிகால் வாரியம் தமிழ்நாடு முழுவதற்குமான நீர்வழங்கு-வடிகால் திட்டங்கள் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கென நிர்வாக ஆணை ஒன்றினால் நிறுவப்பட்டது.

இந்த வாரியம் சட்டமுறை அடிப்படையில் அமைந்த தன்னாட்சி உரிமையுடைய குழுவாக நிறுவப்படுமானால், தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் முக்கிய ஊராட்சிகளுக்கும் குடிநீர் வசதியையும், வடிகால் வசதிகளையும் 1972-ம் ஆண்டுக்குள் செய்து தரும் நோக்கத்துடன் விரைவாக திட்டமிடுவதும் திட்டங்களை விரைவாக ஆய்வு செய்து நிறைவேற்றுவதும் இயலும் என்று அரசு கருதுகிறது. அத்துடன், நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்தும் வெளிச்சந்தையிலிருந்தும் அது கணிசமான அளவிற்கு நிதி வாயில்களைத் திரட்டுவதும் இயலும். எனவே, தன்னாட்சி உரிமையுடைய தமிழ்நாடு நீர்வழங்கு-வடிகால் வாரியத்தை நிறுவ இந்த மசோதா வகை செய்கிறது. உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக அவர்களது இசைவுடனும், தீவிர ஒத்துழைப்புடனும், நீர்வழங்கு-வடிகால் திட்டங்களை ஆய்வு செய்து தயாரித்து நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களையும் அலுவல்களையும் அந்த வாரியம் கொண்டிருக்கும்.

இந்த வாரியம் சுயேச்சையான, சட்ட பூர்வமான குழுவாக அமைக்கப்பட்ட பிறகு, நீர்வழங்கு-வடிகால் திட்டங்களை திட்டமிட்டு ஆய்வு செய்து நிறைவேற்றும் பணி அதற்கு நேரிடையாக ஒப்படைக்கப்படும். ஏனைய வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அவர்களது பிற பொறுப்புகளுக்கேற்ப அரசு உதவியும் வாரியத்திற்குக் கிடைக்கும். எனினும் நிதி உதவும் நிறுவனங்கள் மூலமாகவும், பொதுக்கடன்கள் மூலமாகவும் தனக்குத் தேவையான நிதிகளை திரட்டிக் கொள்வது வாரியத்தின் பொறுப்பாகும். இந்த நிதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, பெருமளவு நகர்ப்புறப்



1970 டிசம்பர் 2] [திரு. செ. மாதவன்]

பகுதிகளுக்கும், கிராமப்புறப் பகுதிகளுக்கும் 1972-ம் ஆண்டுக்குள் நீர்வழங்கு-வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்கும் மாபெரும் திட்டமொன்றை வாரியம் ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது.

சென்னை மாநகரில் தொழில்களுக்கும், வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கும் நீர்த்தேவைகள் சொல்லொணா அளவிற்கு அதிகரித்து வந்துள்ளன. சென்னை மாநகரின் இத்தகைய நீர்வழங்கு பிரச்னைக்கு நீண்டகால நோக்கில் தீர்வுகாணும் நோக்கத்துடன், சென்னை மாநகருக்கு நீர்வழங்கு வசதியைப் பெருக்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு நீர்வழங்கு-வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட பெருந்திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். முதற்கண், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் இறைத்துச் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் கூடுதலாக வழங்குவதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்ட உறுதியான இந்த நடவடிக்கைகளின் விளைவாகவும், தமிழ்நாடு நீர்வழங்கு-வடிகால் வாரியம் தன்னாட்சி உரிமை பெற்றக் குழுவாக அமைக்கப்பட்டதன் விளைவாகவும், இம்மாநிலத்தின் ஒவ்வொரு நகரமும் கிராமமும் நீர் வழங்கு வசதி, வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைவில் பெறும் என்று நான் நம்புகிறேன்.

இவைகூறி, இம்மசோதாவை இப்பேரவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நான் பரிந்துரைக்கிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendment :—

'That the Tamil Nadu Water-Supply and Drainage Board Bill, 1970 be referred to a Select Committee consisting of . . . . members of the House.'

The amendment was duly seconded.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மசோதா வைப் பொறுத்தவரையிலும் நல்ல பயனை விளைவிக்கக்கூடியதொரு மசோதா என்றளவில் நான் இம்மசோதாவை கொள்கையளவில் வரவேற்றாலும் கூட 73 அங்கங்களைக் கொண்ட இந்த மசோதா பல புதிய நிலைகளை உருவாக்க இருக்கிறது. தமிழ்நாடு நீர் வழங்கு—வடிகால் வாரியம் என்றதொரு புதிய அமைப்பை உருவாக்குவதோடு அந்த வாரியம் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து அந்தத் துறைகள் இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒருமுகப் படுத்துகிற ஒரு சூழ்நிலையைக் காண்கிறோம். அப்படி அமைக்கப் படுகிற ஒரு வாரியம் நல்லமுறையில் செயல்படவேண்டுமென்றால் அதற்கான கொள்கைகளை, அதற்கான தேவைகளை இந்த 73 பிரிவுகளில் இங்கு தந்திருக்கிறார்கள். இதை கொள்கையளவில் நான் முழுக்க முழுக்க வரவேற்றாலும்கூட இந்த 73 பிரிவுகளையும் மிக விரிவாகப் பரிசீலிக்கிற வாய்ப்பு உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்

[திரு. க. இராமமூர்த்தி] [1970 டிசம்பர் 2

படுகிறேன். இன்று நான்காவது மசோதாவாக இதை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். இன்னும் பல இருக்கின்றன. ஆகவே இதை நன்கு விரிவாகப் பரிசீலனை செய்துவிட்டு பின்னர் இங்கு இதுபற்றிய விவாதத்தில் கலந்து கொள்கிற வாய்ப்பு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். அந்த அளவில் இந்த மசோதாவைப் பொறுத்த அளவில் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய தேவை இல்லை என்றாலும்—எனது திருத்தம் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று இருந்தாலும் ஒருவேளை அரசினர் இதை துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று கருதுவார்களானால் இதைத் தள்ளி வைத்து அடுத்த தொடர் கூட்டத்தில் இந்த மசோதாவை எடுத்துக்கொள்ளலாம். உறுப்பினர்கள் இதை விரிவாகப் பரிசீலனை செய்வதற்கு ஒரு வாய்ப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, கொண்டுவரப்பட்டுள்ள இந்த மசோதாவின் நோக்கம், இதற்கு முன்னால் இம் மாதிரியான திட்டங்கள் செயல்படுகிற காலம் அதிகமாவதாலும், பலதரப்பட்ட இலாகாக்கள் மூலம் வேலைகளை சீரிய முறையில் வேகமாக நிறைவேற்ற முடிவதில்லை. ஆகவே, அதன் முக்கியத்துவத்தை அனுசரித்து இப்போது வெகுவிரைவாக அவற்றினைச் செயல்படுத்துவது என்ற நோக்கத்தில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் சில சந்தேகங்களும், சில இடர்பாடுகளும் அதில் இருப்பதை நான் சொல்லவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்களிடமிருந்து சில விளக்கங்களைப் பெறவேண்டிய நிலை இருக்கிறது. முன்பெல்லாம் அரசாங்கம், அடுத்தபடியாக பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட், பின்னர் லோக்கல் அதாரிட்டீஸ்—முனிசிபாலிட்டி அல்லது பஞ்சாயத்து வருகின்றன. அவை அத்தனையும் ஒன்று சேர்த்து ஒரு போர்ட் இடத்தில் கொடுக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள்.

இன்றைக்கு இந்த போர்டில் இவை எல்லாவற்றையும் வைப்பதால் ஏற்படும் இடற்பாட்டைப்பற்றி எடுத்துச் சொல்கிறேன். இப்போதும் 3 பிரிவாக இருக்கிறது. பஞ்சாயத்துகள், இன்வஸ்டிகேஷன் ஸ்கீம்ஸ் எல்லாவற்றையும் செய்வதற்கு முன் இந்த போர்டுக்கு தீர்மானம் போட்டு அனுப்பி, அதன் பிறகு அரசாங்கத்தினிடமிருந்து அனுமதி பெற்று செய்யவேண்டுமென்று இருக்கிறது. இது எந்த வகையில் இப்போது இருக்கும் முறையைக் காட்டிலும் சிறந்தது என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திலே அனுமதி கொடுப்பது என்றால் அந்த பஞ்சாயத்துகள், அல்லது நகராட்சிகளின் "ஈகனமிக் வயபிலிடி"யைப் பார்த்துத்தான். ஆகவே மறுபடியும் அரசாங்கம் அந்த ஸ்கீம்களை பரிசீலனை செய்யவேண்டி வருகிறது. முன்பு இருந்தபோதோ திட்டங்களை சரிவர நிறைவேற்றப்படவில்லை.

அடுத்து, பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங், முனிசிபல் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் ஆகியவற்றிலுள்ள அசெட்ஸ் அண்டு லையபிலிடிஸ்ஸை இந்த போர்டுக்கு மாற்றுவது என்று இந்த மசோதாவில்



1970 டிசம்பர் 2] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த முனிசிபல் டிபார்ட்மென்டில் உள்ளவற்றை இந்த போர்டுக்கு மாற்றினால், எப்படி முனிசிபாலிடிகளுக்கு என்று தனியாக இருக்கும் இந்தத் துறைகள் செயல்பட முடியும்? அவைகள் இந்த போர்டின் அதிகாரத்திற்கு உட்பட்டதா? ஒன்றியங்களில் உள்ளவற்றையும் இப்படி டிரான்ஸ்பர் பண்ண வேண்டுமென்று இருக்கிறது. அவையும் இந்த போர்டின் கீழ் வருமா? நேரடியாக இந்த இலாகா எல்லாம் சேர்ந்து போர்டின் நிர்வாகத்தில் வருமா என்று ஒன்றும் தெளிவாக இந்த மசோதாவில் கூறப்படவில்லை.

இப்போது அரசாங்கத்திலிருந்து லோகல் பாடீஸ்க்கு கடன் கொடுக்கப்படுகிறது. வட்டி சதவிகிதம் குறைவாக இருக்கிறது. நேரடியாகக்கொடுக்கிற காலத்தில் குறைந்த வட்டியின் கீழ் லோன் கொடுப்பதால் நகரசபைகள் நல்ல முறையில் இயங்க முடிகின்றன. இப்போது இந்த போர்டு வங்கிகளிலிருந்தும், எல்.ஐ.சி. போன்றவற்றிடமிருந்து கடன் பெற்று வந்தால், நகரசபைகள் மிகவும் கஷ்டப்படும் நிலைமை ஏற்படும். அரசாங்கமே கடன் கொடுத்த காலத்தில் வட்டி குறைவாகவும், கண்டிஷன் அதிகம் இல்லாத சூழ்நிலையும் இருந்தது. ஆனால் சமீபகாலத்தில் எல்.ஐ.சி. போன்றவற்றில் கடன் வாங்கும்போது என்ன வட்டி விகிதம் போடப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இந்த மசோதாவில், எந்த அடிப்படையில் லோகல் அதாரிடீஸ்க்கு கடன் கொடுப்பது என்பதை திட்டவட்டமாக சொல்லாமல் விட்டிருக்கிறது.

டேப் ரேட் இவ்வளவு கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அது கூட அங்கே இருக்கும் ஜனங்களின் பொருளாதாரம், நகரத்தின் சூழ்நிலையைப் பொறுத்து இருக்கவேண்டும். இவ்வளவு என்று திட்டவட்டமாக வைத்துவிட்டால், அங்கே இருக்கிற மக்களால் கொடுக்கமுடியாமல் போய்விடும். 12–13 ரூபாய் என்று வைத்துவிட்டால் மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். மக்கள் பணம் கட்ட முடியாமல் அல்லல் படும் நிலையை நாம் காண்கிறோம். அதோடு அந்த போர்டு, எஸ்டாபிலிஷ்மென்ட் சார்ஜஸ், இன்வஸ்டிகேஷன் சார்ஜஸ் போட்டு வாங்கும். இதனால் அதிக சார்ஜ் வசூலிக்கவேண்டிய நிலை வரும்.

இந்த மசோதாவிலே ஒன்று சொல்லப்பட்டு இருக்கிறது. 2–3 லோகல் பாடீஸ் ஒன்றாக சேர்ந்து ஒரு ஸ்கீம் போட்டால் அவைகள் அந்த செலவை பிரித்துக்கொள்ளவேண்டுமென்று போட்டு இருக்கிறது. ஆனால் அது எந்த அடிப்படையில் பிரிக்கப்படவேண்டுமென்று தெளிவாகச் சொல்லவில்லை. ஒரு ஊரில் அதிக ஜனத்தொகை இருக்கலாம். அங்கு அதிக டேப் போட வேண்டி இருக்கும். ஆனால் அதே நேரத்தில் மற்றொரு ஊரில் குறைவாக போடவேண்டி இருக்கும். சில ஊரில் தண்ணீர் அதிகமாக வேண்டியிருக்கும். அதனால் இன்வஸ்டிகேஷன் அதிகமான அளவில் செய்ய வேண்டியிருக்கும். பொதுவாக வருகிற வரைக்கும், செலவு சமமாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் பஞ்சாயத்து சேர்ந்து இருக்கிற காலத்தில், இப்படி சமமாக பங்கிட்டுக்கொள்வது

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 டிசம்பர் 2

முடியாது. ஆகவே, இதை எப்படி பிரிப்பது என்பதை பிரின்சிபல் பில்லில் கொண்டு வந்து இருக்கலாம். "ஆஸ் மே பி பிரஸ்கிரை-பிடு" என்று போட்டு இருப்பதால் இப்படிப்பட்ட அபாயம் ஏற்படலாம்.

செக்ஷன் 61-ஐ பார்த்தால்—

"Provided that nothing in this Act shall be deemed to prevent the local authority from discharging its duties in regard to the making, altering, repairing or renewing any water course or other work in respect of any area within the jurisdiction of that local authority under any law for the time being in force. . . ."

என்று போடப்பட்டு இருக்கிறது.

போர்டு அமைக்கப்பட்ட பிறகு என்னென்ன ஸ்கீம் எந்த நிலையில் இருக்கிறதோ அதை அந்த லோகல் அதாரிடீஸ் அவர்களுக்கு உட்பட்ட நிலையில் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. அதிலே சில வேலைகள் போர்டால் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கலாம். அல்லது எடுக்கப்படாமல் இருக்கலாம். அது போர்டு நிர்வாகத்தில் எப்படி அமைக்கப்படவேண்டுமென்று தெளிவாக இல்லை. பழைய ஸ்கீமை எடுத்துக்கொண்டால் அதை எப்படி நிறைவேற்றவேண்டும் என்று இல்லை. முதலிலே, "டீயல் ஸ்கீம்" என்று கொடுத்து இருக்கிறோம். டீயல் ஸ்கீம் முனிசிபல் நிர்வாகத்தின் கீழ் இப்போது வருகிறது. எக்ஸ்பான்ஷன் ஸ்கீம் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்-மெண்டில் இருக்கிறது. இப்போது இந்த மசோதாவில் கண்டுள்ள படி பப்ளிக் ஹெல்த் இன்ஜினீரிங் டிபார்ட்மெண்ட் போர்டுகைக்கு மாறுமானல் ஸ்கீம்கள் ஒன்றுக்கொன்று கிளாஷ் ஆகாதா? இது எந்த முறையில் எந்த நிர்வாகத்தின் கீழ் வரும்?

அதுமட்டுமல்லாமல், இதற்கு முன்னலேயே நகரசபையைப் பொறுத்தவரையில் மிக அல்லல் பட்டுக்கொண்டு இருக்கும் நிலையைப் பார்க்கிறோம். என்ன என்று சொன்னல் பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் ஒரு வேலை எடுத்து முடிக்க வேண்டுமென்று முனிசிபாலிடியில் ஒரு தீர்மானத்தைப் போட்டுவிடுகிறோம். அதற்கு கடன் வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கிறோம். பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து அதைச் செய்து முடித்து விடுகிறார்கள். அதோடு அவர்கள் முன் கூட்டியே இத்தனை நாளைக்குள் இந்தப் பணத்தை திருப்பித்தந்துவிட வேண்டுமென்று இருப்பினும், அரசாங்கத்திலிருந்து பணத்தைப் பெற்றுத்தந்து விடுங்கள் என்று சொல்கிறார்கள். பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டின் கீழ் உள்ள பணத்தை செலவழித்து விட்டு, அரசாங்கத்திலிருந்து கேட்கப்பட்ட பணம் வருகிற வரையில் எங்களுடைய பணத்தை செலவழித்ததற்கு வட்டியைக் கட்டுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த வட்டியை கட்ட நகரசபை, லோகல் பாடீஸ், ஸ்தல ஸ்தாபனங்களால் முடியவில்லை. காலாகாலத்தில் அரசாங்கம் இந்தக் கடனைக் கொடுத்திருந்தால் வட்டி நஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. வரக்கூடிய வட்டியை வசூலித்து, மறைமுகமாக பணத்தைச் சேர்த்து அரசாங்கம் வியாபாரம் செய்வது போலவே தோன்றுகிறது, நல்லபடியாக செய்யக்கூடிய நிலையில்



1970 டிசம்பர் 2] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

இல்லை. அப்பேர்ப்பட்ட இடற்பாடுகளை எடுக்கின்ற நேரத்தில் எந்த நிலையில் இந்த போர்டின் கீழ் நிர்வாகம் எப்படி இயங்கும், மறுபடியும் அரசாங்கத்திற்குச் செல்லாமல் நேரடியாகக் கொடுக்க முடியுமா, வட்டி விகிதம் சம்பந்தமாக எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதைத் தெளிவு படுத்தினல் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, "பவர் டு ரைட் ஆஃப்" என்று போடப்பட்டிருக்கிறது. ரைட் ஆஃப் பண்ணுகிற நேரத்தில் 48-வது செக்ஷனில்

"The Board may write off any amount whatsoever due to it, whether under a contract or otherwise or any sum payable in connection therewith, if, in its opinion, such amount or sum is irrecoverable :

Provided that the Board, shall, before writing off any such amount or sum exceeding twenty-five thousand rupees, obtain the sanction of the Government."

என்று தான் இருக்கிறது. ரைட் ஆஃப் சமாசாரம் நமக்கு நன்றாகத் தெரியும். போர்டுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்தால், அதிகமான அளவுக்கு நடத்தக்கூடாதது நடக்கும் என்று சொல்லவில்லை. இருந்தாலும், வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவோம் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏதாவது தவறுகள் நடக்கிற காலத்தில், லட்சக்கணக்கான ரூபாயை ரைட் ஆஃப் பண்ணவேண்டும் என்ற நிலையில் மக்களுடைய பணத்திற்கு பொறுப்பாக இருக்கக்கூடிய இரண்டு சபைகளையும் அவர்கள் ஓரளவுக்கு மதிக்கவில்லை என்ற நிலை ஏற்படும்.

அது மட்டுமல்லாமல், அமைச்சர் அவர்கள் கூட இதனுடைய விவரங்களை எடுத்து அவையின் முன் வைத்து ஒரு தீர்ப்பைக் காண்பதை விட்டுவிட்டு, தானகவே ஒரு முடிவை எடுத்து, குற்றத்தை மறைமுகமாக தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே, குற்றச்சாட்டு சாட்டக்கூடிய நிலையிலே நிலைமைகள் ஏற்படும். அதிகமான அதிகாரத்தை அந்தப் ப்ரொவிஷனில் கொடுத்திருப்பது அவ்வளவு நல்லதாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இம்மாதிரியான முறைகளிலே சிக்கல்கள் அதிகமாக ஏற்படும் நிலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. எந்த முறையை ஏற்படுத்தவேண்டும் என்று நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்..

Transfer of assets and liabilities of the Public Health and Municipal Works Department to the Board.

இப்பொழுது இந்த ஸ்கீமின் கீழ் நடந்துகொண்டிருப்பவைகளெல்லாம், அந்த டிபார்ட்மெண்டுகள் அந்த போர்டின்கீழ் வருகிறதா அல்லது என்ன முறையில் செய்யப்படுகிறது என்பதையும் யோசிக்கவேண்டும்.

*Transfer of property to the Board*. The Government may transfer to the Board any building, any land or other property

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 டிசம்பர் 2

movable or immovable for the use of, and management by, the Board on such conditions and subject to such limitations as may be imposed by the Government.

என்று போட்டிருக்கிறார்கள். தெளிவாகப் போட்டால் நல்லது.

காம்பென்சேஷன் கொடுக்கக்கூடிய காலத்தில் எத்தனையோ இடற்பாடுகள் ஏற்படுகின்றன. முக்கியமாக காம்பென்சேஷன் கொடுக்கும்படி வருகிற காலத்தில் ஓரளவுக்கு விருப்பு வெறுப்பு ஏற்படக்கூடிய நிலை வந்துவிடுகிறது. ஆகவே, மெயின் பில்லிலேயே ரொம்ப ஸ்பெஸிபிக்காக இன்னென்ன முறையில் காம்பென்சேஷன் கொடுக்கவேண்டும், மார்கெட் வால்யூ அல்லது வேறு அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று போட்டுவிடவேண்டும். பின்னால் அதுபற்றி ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸில் போட்டுக்கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்டால், மக்கள் அதனால் கஷ்டப்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இதைத் தீர ஆலோசித்து, கொஞ்சம் தள்ளிவைத்து, மற்ற நகராட்சிகளையும், நகரமன்றத் தலைவர்கள் அவையையும் கலந்து ஆலோசித்து பிறகு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் கொஞ்சம் காலமாகலாம். வேண்டுமென்றால் ஒரு காலவரையை ஏற்படுத்தி, ஒரு மாதம், இரண்டு மாதத்திற்குள்ளாக இதைப்பற்றி ஆலோசித்து இந்த மசோதாவை பிறகு கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கம் வரவேற்கப்படவேண்டியதாக இருந்தாலும், அதை நிறைவேற்ற வேண்டிய முறையைப் பற்றி வன்மையாக எதிர்க்க வேண்டிய நிலை இருக்கிறது.

அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்து ஸ்தல ஸ்தாபனங்களுக்குள்ள அதிகாரங்களைக் குறைக்கும் ஒரு நிலையைக் காண்கிறோம். ஒரு இடத்திற்கு நீர் வழங்கும் திட்டம் வேண்டுமென்றால், ஸ்டேட் போர்டு சம்மதத்தைப் பெறவேண்டிய நிலையை இந்த மசோதா உண்டாக்குகிறது. இதற்கு முன்பு கூட இந்த அரசாங்கம் ரெவின்யூ போர்டை ஒழித்து விடுவோம், கலைத்து விடுவோம் என்று சொன்னது. அதற்குப் பதிலாக இப்பொழுது குடி தண்ணீர் வழங்குவதற்கு ஒரு போர்டு, டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங்குக்காக ஒரு போர்டு என்று இப்படி பல போர்டுகளை உருவாக்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலையைத் தான் பார்க்கிறோம். இந்த நிலையிலே ஸ்தல ஸ்தாபனங்களுக்கு என்ன உரிமை வழங்கப்படுகிறது? இந்த போர்டுகளை அமைத்துவிட்டதால் ஸ்தலஸ்தாபனங்களுடைய வேலை என்ன? ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மக்களிடமிருந்து வரிப் பணத்தை வேண்டிய அளவுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டிய வேலை தான், வேறு எந்த விதமான வேலையும் இல்லை. ஸ்தலஸ்தாபனங்களுடைய சுதந்திரம், அவை ஸ்தல மக்களுக்குச் செய்யவேண்டிய பணி இவற்றையெல்லாம் மாநில அளவில் ஏற்படுத்தப்போகிற ஒரு வாரியம் ஏற்றுக்கொள்ளப்போகிறது.



197υ டிசம்பர் 2] [திரு. வ. ஜார்ஜ்]

ஆகவே, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மக்களிடமிருந்து வரிப் பணத்தை வாங்கிக்கொடுக்க வேண்டிய வேலையைத் தவிர வேறு எந்தவிதமான பணியும் அவற்றிடத்தில் ஒப்படைக்கப்படாத ஒரு நிலை உண்டாக்கப்பட இருக்கிறது. டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் மசோதாவில் இந்த மசோதாவின் அம்சங்களும், அதாவது குடி நீர் வழங்கும் திட்டங்களும் அதற்கு உட்பட்டு வரக்கூடிய அம்சங்கள் தான். இந்த மசோதாவிற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது எல். ஐ. ஸி. போன்ற ஸ்தாபனங்களிடமிருந்து பணம் கடனாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, எனவே, உடனடியாக திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிட்டார்கள். டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் போர்டு அமைக்கப்பட்டாலே பணம் கடனாகப் பெற முடியும். இந்தச் செயல் திட்டங்களை டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் வாரியத்தோடு சேர்த்து, செயல் முறைக்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் போர்டு சம்பந்தமான பில்லை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிற நிலையிலே இந்த மசோதாவையும் சேர்த்து செலக்ட் கமிட்டி பரிசீலித்து, இரண்டையும் இணைத்து ஒரே மசோதாவாகக் கொண்டு வந்து நாம் நாட்டிற்குச் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாதா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

மேலும், இந்த மசோதா இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற நிலைமையிலே மாநில அளவிலே டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் போர்டு என்று வைத்து, அதே மாதிரி அளவிலே குடிநீர் வழங்கும் வாரியம் என்றும் வைத்தால், குடி நீர் வழங்கும் வாரியத்தில் டவுன் பிளானிங் வாரியத்தின் பிரதிநிதிகள் நிச்சயம் அங்கம் பெறவேண்டும், அதே மாதிரி குடி நீர் வழங்கும் வாரியத்தின் பிரதிநிதிகள் டவுன் பிளானிங் வாரியத்தில் அங்கம் பெறவேண்டும். அப்பொழுதுதான் கோ-ஆர்டினேஷன் இருக்க முடியும். அதற்கு இந்த பில்லில் வழியில்லை.

மேலும் இந்த பில்லில் இருக்கக்கூடிய சில செக்ஷன்களில் வார்த்தைகள் அமைப்பு கூட ஒழுங்காக நல்ல முறையில் அமையவில்லை. ஸ்தலஸ்தாபனங்கள் எந்த ஸ்தாபனமாக இருந்தாலும் சரி, ரூ. 50,000-க்குக் கீழ்ப்பட்ட வேலைகளாக இருந்தால் தான், அந்த வேலைகளை எடுத்து செயல்படுத்த முடியும். அதற்கு மேற்பட்ட வேலைகளை மாநில வாரியத்தினிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. சென்னை கர்ப்பரேஷன் அல்லது செலக்ஷன் கிரேடு ஸ்தல ஸ்தாபனங்கள், மதுரை, கோவை போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் ரூ. 50,000-க்குக் கீழே உள்ள திட்டங்களைத்தான் நிறைவேற்ற முடியும் என்ற நிலை இருக்கிறது. இதனால் உண்மையிலேயே பெரிய ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிய மதிப்பையும் மரியாதையையும் நாம் கொடுக்கவில்லை என்று தான் பொருள்படும். ஆகவே, இதிலே பலவிதமாக அம்சங்கள் பரிசீலனை செய்யவேண்டிய நிலை இருப்பதால், இந்த மசோதாவை டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் பில்லோடு இணைத்து, பொறுக்குக்

கமிட்டியின் பரிசீலனைக்குவிட்டு, அதை ஆராய்ந்து, ஒரே மசோதாவாகக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் அரை மணி நேரம் எடுத்துக்கொண்டு அவையின் அலுவலை முடித்துவிடலாம் என கருதுகிறேன். இரண்டு மணி வரையில் உட்காரலாம்.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கொண்டுவந்திருக்கும் மசோதாவை முழு மனதுடன் வரவேற்கிறேன். ஏனென்றால் இன்றைய தினம் கிராமங்களும், நகரங்களும், பெரு நகரங்களும் மிக விரைவிலே வேகமாக வளர்ந்து வருகிறபோது, மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற குடிதண்ணீர் வழங்கியும், கழிவுநீரை வெளிப்படுத்தி நகரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் முயற்சியிலே தனிமையாக இதற்கென்று ஒரு போர்டு நியமிப்பதற்கு இந்த அவையிலே அனுமதி பெற வந்திருக்கிறது. இதைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. கொள்கை அளவிலே இதற்கென்று போர்டு அவசியமா, இதனால் நன்மை இருக்கிறதா, என்பதை ஆராய்ந்து பார்த்தால், கொள்கையளவில் இதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நடைமுறையில் வருகின்ற சிக்கல்களை எல்லாம் நாம் அவ்வப்போது திருத்திக் கொள்ளலாம்.

முதலாவதாக, இது உடனடியாகச் செய்யப்பட வேண்டும். இப்போது டிசம்பர் மாதம் வந்திருக்கிறது. மார்ச் மாதத்திற்குள்ளே அஸெட்ஸ்—லையபிலிட்டிஸ் எல்லாம் இந்தக் குழுவுக்கு வந்து, வருகின்ற பட்ஜெட்டிலே 1971–72-லே இந்தக் காரியங்கள் எல்லாம் செயல்படுவதற்கு வகையாக இருக்கும் என்று கருதுகிறேன். திறமையாகவும், செம்மையாகவும் செயல்படக்கூடிய அளவிலே இந்த போர்டு இருக்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்திலே மின்சார போர்டு இருக்கிறது. அது எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, எவ்வளவு செலவு இனங்கள் அதிகரித்திருக்கிறது, என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இந்த விஷயத்தில் லாபநஷ்டக் கணக்கை நாம் பார்க்க முடியாது. பொருள்கள் கருவிகள் வாங்குகிறபோதும், அவற்றைப் பயன்படுத்தும்போதும், இந்த ஆண்டில் எவ்வளவு வாங்க வேண்டுமோ, எவ்வளவு செலவாகுமோ அவற்றை மட்டும் வாங்கி சரிவர உபயோகப்படுத்த வேண்டும். கருவிகள் வாங்கும்போது தேவைப்பட்டவைகளை மட்டும் வாங்கவேண்டும். சில காரியங்களில் நாம் கண்காணிப்பாக இருக்க வேண்டும். இதில் பல இலாகாக்களை ஒன்றாக இணைக்கும்போது, இப்படி ஒன்றாக இணைத்ததால்தான் காரியங்கள் சரியாக நடைபெறவில்லையென்று சொல்லக்கூடாது. இந்த வாரியத்தின்மீது எல்லா பளுவையும் சுமத்தக்கூடாது. வாரியம் நன்றாகச் செயல்படுவதற்கு வேண்டிய கருவிகள் தேவை. பலருக்கு இதில் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். தனிப்பட்ட

1970 டிசம்பர் 2] [திரு. கோ. பூவராகன்]

ஒருவருக்கு மட்டும் இந்த அதிகாரத்தை வழங்கக்கூடாது. எந்தப் பொருள்கள் வாங்கப்பட்டாலும், அதை கூட்டுப் பொறுப்பில்தான் வாங்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1972-க்குள் எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்க முடியும் என்கிறார்கள். நீண்டநெடுங்காலமாக நிறைவேற்றப்படாத திட்டத்தை இப்போது ஏற்று நடத்த இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு பணம் மட்டும் முக்கியம் அல்ல, தேவையான கருவிகள், நல்ல யோசனைகளைச் சொல்லக்கூடிய நிபுணர்கள் வேண்டும். பல கிராமங்களிலே பரிசீலனை நடத்தப்பட்டு விட்டது. ஆகவே, வாரியம் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும்போது, நிதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போது, அறுபது சதவிகிதம் கிராமப்புறப் பகுதிகளுக்குச் செலவிட வேண்டும். கிராமங்களை நாம் கவனிப்பது கிடையாது. நாம் நிதியை கிராமங்களிலிருந்துதான் பெறுகிறோம். ஆனால் அதற்குத் தகுந்த அளவில் நாம் கிராமப்புற மக்களுக்குச் செலவிடுவதில்லை. நகர்ப்புறங்களில்தான் நாம் எல்லா வேலைகளையும் மேற்கொள்ளுகிறோம். நகர்ப்புற மக்களுக்குத்தான் எல்லா வசதிகளையும் செய்து வருகிறோம்.

இந்த வாரியத்தில் எல்லா காரியதரிசிகளையும் போட்டிருக்கிறார்கள். நிதி இலாகா காரியதரிசி மட்டும் இதில் இருந்தால் போதும். அவருக்குத் தெரியாமல் எந்த வேலையும், எந்த இலாகாவிலும் நடைபெறுது, நான்கு காரியதரிசிகளை இந்த வாரியத்தில் போட்டிருக்கிறார்கள். இந்த நான்குபேர்களும் அவசியமாக இருக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் பரிசிலக்க வேண்டும். நிதிக் காரியதரிசியை மட்டும் போட்டு, மற்றபடி நல்ல ஆலோசனைகள் சொல்வதற்காக சீப் என்ஜீனியர் போன்றவர்களை இதில் போடுவது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மேலும், கிராமப் பகுதிகளை எடுத்துக்கொண்டால், கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எக்ஸ்-அபிஷியோ சேர்மன்களாக இதில் இருக்கலாம். கிராமப் பகுதிகளில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளாமல் இதுவரை இருந்திருக்கிறார்கள். நாம் இதை ஆரம்பத்தில் இருந்து செய்ய வேண்டும். நல்ல முறையில் செய்யவேண்டும். சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த யோசனையைச் சொல்கிறேன்.

இந்த வாரியத்திற்கு மத்திய அரசிலேயிருந்து பணம் குடிதண்ணீருக்காக கொடுக்கிறார்கள். எல். ஐ. சி.யிலிருந்து பணம் தருகிறார்கள். பணம் செலவு செய்கிறபோது வசதிகள் இல்லாதவர்களுக்குச் செய்யாமல், மேலும், மேலும் நகரங்களுக்கே செய்கிறார்கள். ஆனால் நகரங்களுக்கு வசதிகள் செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நகரங்களுக்குச் செய்வதில் ஒரு பங்கையாவது கிராமங்களுக்குச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கிராமப் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கஷ்டத்தை உடனடியாகப் போக்க வேண்டும்.

[திரு. கோ. பூவராகன்] [1970 டிசம்பர் 2

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி 1972-க்குள்ளே பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர் திட்டம் நிறைவேறிவிட்டது என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். அதிக செலவினங்களைச் செய்து அதற்கு ஈடாக வரிகளை போடக்கூடாது. தண்ணீர் தீர்வை முறை இருக்கக்கூடாது. சிறப்பாக இந்த வாரியம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதைப் பார்த்து, மற்ற மாநிலங்களும் நம்முடைய மாநிலத்தைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாரியத்திற்கு சேர்மனாக யாரைப் போட வேண்டும், யாரைப் போடக்கூடாது என்று சொல்ல விரும்பவில்லை. சேர்மனாக இருப்பவர் எல்லோருக்கும் பொதுவானவராக இருக்க வேண்டும். இப்போது எல்லா இலாகாக்களையும் ஒன்றாக இணைந்திருக்கிறோம். வருகின்றவர்களுக்கு ஏற்கனவே அவர்கள் இலாகாவில் வாங்கிய சம்பளம் போன்றவற்றில் சிக்கல்கள் எல்லாம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சேர்மனாக வருகிறவர் எந்த இலாகாவிலிருந்து வந்தாலும் ஏற்கனவே இருந்த இலாகாவிற்கு பழுது இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். புதியவர்களை நியமிக்கும்போதும் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் இதை நல்ல நோக்கத்தோடு முதலாவதாகக் கொண்டு வருவதாலே, இதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டியதில்லை. இந்த வாரியம் நாளையதினமே வந்தாலும் பரவாயில்லை.

தண்ணீர் இல்லாமல் எந்த இடங்களும் இருக்க முடியாது. இது வேண்டாம் என்று சொல்ல தமிழ்நாட்டில் யாரும் இருக்க முடியாது. இதை விரைவில் செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே பலரும் வற்புறுத்துவார்கள். 1972-க்கு முன்னமேயே நிறைவேற்றினாலும்கூட நல்லது. அதற்கு தாராளமாக நிதி ஒதுக்கப்படவேண்டும். குறிப்பாக, இதில் பல சிக்கல்கள் ஏற்பட வழியிருக்கிறது என்றாலும் அவற்றை எல்லாம் அவ்வப்போது நல்லமுறையில் நீக்கி இதைச் செயல்படுத்த முன்வரவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நல்ல நோக்கங்களை எல்லாம் எல்லாத் தரப்பில் இருந்தும் பேசியவர்கள் வரவேற்று நல்லமுறையில் செயல்பட வாய்ப்பளிக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். கடைசியாக திரு. பூவராகன் சொன்னதைப்போல மசோதா உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய அவசியத்தை உத்தேசித்து அரசாங்கம் இப்போது இதை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது. ஆகவே இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டியதில்லை என்ற அரசாங்கத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை ஏற்கவேண்டும்.

இந்த மசோதாவின் நோக்கம் எல்லாம் ஏற்கனவே நம்முடைய இலாகாக்களின் மூலம் செயல்பட்டு வருகிற திட்டங்களை எல்லாம் வாரியத்தின் மூலம் ஒருங்கிணைந்து செயல்பட வழிசெய்யப்படுவது



1970 டிசம்பர் 2] [திரு. செ. மாதவன்]

தான். இப்போதே கோடிக்கணக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை இன்னும் சரியான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும், விரிவாக நிறைவேற்றப்பட வேண்டும், இவற்றுக்கு அதிகமான பணம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் பெரிய கொள்கைப் பிரச்னையோ, விவரமாகப் பரிசீலித்தாகவேண்டுமென்ற நிலையோ இல்லை என்ற காரணத்தினால்தான் முன்பே பொறுக்குக் குழுவுக்கு அனுப்பவேண்டியதில்லை என்று முடிவு செய்தோம். பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிற அங்கத்தினர்கள் என்ன என்ன கருத்துக்களை வற்புறுத்துகிறார்களோ அவற்றைப் பரிசீலிக்கத் தயார். நடைமுறையில் ஒன்றிரண்டு சிக்கல்கள் ஏற்பட்டாலும் அவற்றை அவ்வப்போது நல்லமுறையில் தீர்க்க அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்றும் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, கிராமங்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும், கிராமங்கள், நகரங்கள் ஆகிய இரண்டுமே நல்லமுறையில் குடிதண்ணீர் பெற இந்த வாரியம் செயல்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். முழுக்க முழுக்க நானும் அதை ஆதரித்து வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, நகராட்சிகள், உள்ளாட்சிகள் இவற்றின் அதிகாரங்கள் எடுக்கப்படுகின்றன பறிக்கப்படுகின்றன என்ற எண்ணம் ஏற்பட வேண்டியதே இல்லை. இப்போதுள்ள முறையிலே நகர மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் குடிதண்ணீர் திட்டங்களை அரசாங்க இலாகாக்களே நிறைவேற்றியும் அளித்தும் வருகின்றன. அப்படிச் செய்கிற காரியங்கள் எல்லாம் இனி ஒருங்கிணைந்து வாரியத்தின் கீழ் இருக்கும். ஆகவே, இந்த வாரியம் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்த்துவைக்க ஏற்படுத்தப்படுவதாகையால் இனி நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவை இவற்றோடு கலந்து அங்கங்கே பல திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். அவர்களுடைய கருத்துக்களுக்கு போதுமான மதிப்பளிக்கும் இந்த வாரியம் என்பதில் யாரும் கவலைப்பட வேண்டாம். அவர்களுடைய கருத்துக்களை மதித்து வாரியம் பொறுப்புணர்ச்சியோடு செயல்படும். அதன் காரணத்தினால்தான் நகரமன்றத் தலைவர்களின் தலைவரை இந்த வாரியத்தில் உறுப்பினராகப் போட்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்களுக்குத் தலைவரை இந்த வாரிய உறுப்பினராகப் போட்டிருக்கிறோம்.

இதில் செயலாளர்களையே உறுப்பினர்களாகப் போட்டிருக்கிறீர்களே, அந்த அந்தத் துறை நிபுணர்களைப் போடக்கூடாதா என்ற சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் கிளப்பினார்கள். உண்மைதான். அதைப்பற்றி அரசாங்கம் ஆழ்ந்து பரிசீலித்தது. அந்தந்தத் துறை நிபுணர்கள் இருந்தாலும் அந்த அந்தந்தத்துறை ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்ஸ் தான் இறுதியாக முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த வாரியத்தில் இலாகா

காரியதரிசிகளையே போட்டுவிட்டால் அவரவர்கள் அந்த அந்தத் துறை நிபுணர்களைக் கலந்துக்கொண்டு முடிவு எடுக்க வசதியாக இருக்கும் என்பதனால் இப்படி போடப்பட்டது. இதைப்பற்றியும் மிகுந்த அளவு ஆட்சேபணை இருக்கவேண்டியதில்லை. நிர்வாக சௌகர்யத்தை உத்தேசித்துத்தான் இப்படி போடப்பட்டிருக்கிறது. எந்தத் திட்டமாக இருந்தாலும் அந்த அந்தத் துறை நிபுணர்களைக் கலந்துகொண்டே அந்த அந்தத் துறை காரியதரிசிகள் முடிவு செய்வார்கள்.

இதற்கு இயக்குனர் "மானேஜிங் டைரக்டர்" போடும்போது நிபுணத்துவம் வாய்ந்த நல்ல ஆற்றல் உள்ளவரைப் போடவேண்டும் என்ற கருத்தை வரவேற்கிறேன். அப்படிப் போடும் முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

இந்த வாரியத்திற்கு அவ்வப்போது நல்ல நிபுணர் ஒருவரை டைரக்டராகப் போடவும், அவரது சிறந்த அறிவு நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

மற்ற நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிய பிரச்சினைகளுக்கு நான் விரிவாகப் பதில் சொல்ல விரும்பாவிட்டாலும் அவை தக்க முறையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு வாரியம் நல்லமுறையில் செயல்பட எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் கூறிய விரிவான கருத்துக்களை எல்லாம் மதித்து இந்த அரசாங்கம் நடக்கும் என்கிற உறுதியையும் தந்து இந்த மசோதாவை எல்லோரும் ஆதரித்து நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நீர் வழங்கு—வடிகால் வாரிய மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 47/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 4

திரு. ஏ. அ. சுப்பராஜா: அமைச்சர் அவர்கள் இதுபற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் கவனிப்பதாகச் சொன்ன காரணத்தினால் நான் என் திருத்தத்தை முன்மொழியவில்லை. பிரிவு 18-க்கு மட்டும் என் திருத்தத்தை முன்மொழிய இருக்கிறேன்.

பிரிவுகள் 4 முதல் 17 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



பிரிவு 18.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 18 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU A. A. SUBBARAJA: I move—

In Clause 18, for the words "as may be determined by the Board", substitute the words "as the quantity of water drawn by the respective local authorities".

The amendment was duly seconded.

திரு. ஏ. அ. சுப்பராஜா: இதைப்பொறுத்தமட்டில் முன்பு பேசிய திரு. பூவராகன் அவர்கள் தண்ணீர் பிரச்னையைத் தள்ளி வைக்கக் கூடாது என்று சொன்னார்கள். இருப்பினும் கூட உள்ள சிக்கல் என்னவென்றால் இந்த அதிகாரம் போர்டின் கையில் கொடுக்கப்பட்ட பிறகு அவர்கள் இஷ்டப்படி வரியை உயர்த்திக் கொண்டுபோகிற நிலை ஏற்படக்கூடாது என்பதுதான் எங்கள் பயம் எல்லாம். இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. மறுபடியும் இந்த வாரியம் வந்த பிற்பாடு மக்களிடத்தில் சென்று வரியை உயர்த்து வது என்பது கூடாது.

The Government may direct the local authority to raise the tax. It affects the people.

இதைக் கவனத்தில் வைக்கவேண்டும். இப்போதுள்ள நிலையில் அவர்களால் கட்ட முடியாது என்றால் அரசாங்கமே தள்ளிவிடுகிறது. அப்படிப்பட்ட நிலையின்றி வரியை உயர்த்திக்கொண்டு போகிற நிலை கூடாது. அவரவர்கள் உபயோகப்படுத்துகிற தண்ணீரின் அளவு என்ன என்பதைக்கொண்டு லோகல் அத்தாரிடிகளுடைய கருத்துக்கு ட்யூ கன்சிட்ரேஷன் கொடுத்தே இந்தத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த 18-வது பிரிவைப் பொறுத்த அளவிற்கு இந்தத் திட்டத்தை மேற்கொள்ளும்படி அதைப் பற்றி பரிசீலிக்கும்படி "இன்வெஸ்டிகேஷன்" அதற்கு ஆகக்கூடிய செலவை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதைப் பற்றித் தான் குறிப்பிட்டார்கள். இது கூட புதிது என்று நினைக்கவில்லை. இப்போது சில திட்டங்களை ஊராட்சி மன்றங்களும், நகராட்சி மன்றங்களும் நிறைவேற்றவேண்டுமென்று முன் வருமானால் அவர்கள் இது போன்ற "இன்வெஸ்டிகேஷன்" செலவுத் தொகையை ஏற்கவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆகவே, இதிலே பாதகம் ஒன்றும் இல்லை. லோகல் அத்தாரிட்டிகளும் இதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பெரிய ஆட்சேபணை இருக்காது என்று கருதுகிறேன். நகராட்சியிலே உள்ளவர்கள் நல்லெண்ணம் உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். இந்தச் செலவை ஏற்றுக்கொள்வதால் பெரிய பாதகம்

[திரு. செ. மாதவன்] [1970 டிசம்பர் 2

ஏற்பட்டுவிடாது என்று நம்புகிறேன். இதற்கு ஒரு திருத்தம் கொடுக்கவேண்டாம் என்று நான் கருதுகிறேன். இந்தத் திருத்தம் வேண்டும் என்றால் பின்னாலே நடைமுறைச் சிக்கல்களை பார்த்து உணர்ந்து—அந்தந்த நகராட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள், அவர்களோடு நகராட்சியின் சார்பில் வாரியத்திலே இந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறி அதற்கான நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திருத்தத்தை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 18 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 19 முதல் 47 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 48

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 48 இம் மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. A. SUBBARAJA : Sir, I move—

"In clause 48, after the word 'irrecoverable', add the following words at the end 'after getting the approval of both Houses of State Legislature'."

The amendment was duly seconded.

திரு. ஏ. அ. சுப்பராஜா : இதிலே இந்த ரைட் ஆப் பண்ணுகின்ற காலத்தில் போர்டுக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. அந்த அதிகாரம் "வேக்" ஆக இருக்கிறது. அதிலே கொஞ்சம் கண்காணிப்பு இருக்க வேண்டியது மிக அவசியம். போர்டுக்கே விடுவதால் தவறுகள் நடப்பதற்கு சாத்தியம் இருக்கிறது. ஆகவே, மேலே இருக்கிற "சுப்ரீம் பாடி" களான இந்த இரண்டு ஹவுஸ்களுக்கும் அது வர வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதாவது, after getting the approval of both Houses என்று கொஞ்சம் அரசு கண்காணித்தால் நன்றாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த 48-வது பிரிவிலே பின்னாலே இருக்கிற "புரொவிசோ"-வைப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 25 ஆயிரத்துக்கு மேலே இருக்குமானால் அரசாங்கத்தினுடைய அனுமதி வேண்டும். ஆகவே 25 ஆயிரத்திற்கு மேலே போனால் அனுமதி பெற்றுத்தான் ஆகவேண்டும். அந்த வாரியம் சுதந்திரமாக விரைவாக செயல் படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தவறுகள் ஏற்படலாம். இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். கண்காணிக்க அரசு தயாராக இருக்கிறது. ஆடிட்டர்கள் இருக்கிறார்கள் தன்னாட்சி வேண்டுமென்று சொல்லிவிட்டு ஒவ்வொன்றுக்கும் இந்த மன்றத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால் அது ஒத்து வராது என்று கருதுகிறேன்.



1970 டிசம்பர் 2] [திரு. செ. மாதவன்]

ஆகவே, சிறு சிறு தொகைகளுக்கெல்லாம் இந்த அரசாங்கத்திற்கு வராமல் அவர்களே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். எதுவாக இருந்தாலும் இந்த அரசாங்கத்தின் நிதி இலாகாவிற்குத் தெரியாமல் நடைபெறாது. நிதித் துறைச் செயலாளர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கும் தவறுகள் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. 25 ஆயிரத்திற்கு மேல் அரசு பரிசீலிக்கலாம் என்று இருப்பது பெரிய தவறு ஆகாது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஏற்றுக்கொண்டு திருத்தத்தை வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 48 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 49 முதல் 73 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Water Supply and Drainage Board Bill, 1970 be passed."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 6. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

That item IV in the Agenda—Government Motion—be taken up after item II—4 in the Agenda under "Government Bills".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நில உச்ச வரம்புச் சட்டத்தில் கண்டுள்ள விலக்குகளை மாற்றியமைப்பது குறித்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட குழுவிற்கு, பதவி விலகல் செய்த திரு. கே. ஏ. மதியழகன் அவர்களுடைய இடத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரை உறுப்பினர்—தலைவராக நியமனம் செய்வது குறித்து

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Hon. Minister in charge of Revenue be nominated as Member-Chairman of the Committee constituted by the Legislature on 9th April 1970 to advise the Minister in examining the nature and scope of deletion or modification of exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, in place of Thiru K. A. Mathialagan, M.L.A. who has resigned his membership as well as chairmanship of the above Committee ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவடைந்தன. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் பேரவையை ஒற்றி வைக்கிறேன்.

பின்னர் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒற்றி வைக்கப்பட்டது.

## 7. பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

129. Notification issued with G.O. No. 2943, Revenue, dated the 19th September 1970, in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

130. Notification issued with G.O. Rt. No. 1662, Revenue, dated the 19th September 1970, in regard to exemption from liability to entertainments tax, the Cinematograph film show in aid of free night school, conducted by National Welfare Association, Royapuram, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

131. Notification issue dwith G.O. Rt. No. 1626, Revenue, dated the 16th September 1970 in regard to exemption from liability to entertainments tax, the benefit Cinematograph film show conducted in aid of Rajasthani Association, Madras on 27th September 1970 to raise funds for the award of educational scholarships by the Association. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].





132. Notification issued with G.O. Rt. No. 1843, Revenue, dated the 23rd October 1970, in regard to exemption from liability to entertainments Tax, the Cinematograph film show conducted at Srinivasa Talkies, Coimbatore to raise funds in aid of Priya Kunj Trust, Coimbatore. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

133. The Annual Report and the Tamil Nadu Governments Review on the working of the Banana and Fruit Development Corporation Limited for the year ended 31st March 1969 [Laid on the Table of the House under section 619-A of the Indian Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 28. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1920 (L.A. Bill No. 43 of 1920).

@ 29. The Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 44 of 1970).

* 30. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council during the period from 24th August to 9th September 1920.

* 31. Annexure to the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970).

* 32. Annexure to the Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 44 of 1970).

* 33. Erratta to the draft Tamil Nadu Municipal Services Rules, 1920. (Despatched to Members of the Assembly on 27th November 1970.)

---

@ Despatched to Members on 29th November 1970.
* Despatched to Members on 30th November 1970.

இணைப்பு.

[...457....ம் பக்கத்திலுள்ள 99-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

தமிழ்நாட்டு கடற்கரையிலிருந்து உள் நாட்டுப் படகுகளையும் மீன்பிடிக் கருவிகளையும் கொண்டே தொலைகடலுக்குச் சென்று முன்பெல்லாம் மீன்பிடிக்கப்பட்டுவந்தது. 1955 முதல், விசைப் படகுகள் கட்டப்பட்டு அவற்றை மீனவர் தொகுதியினருக்கு வழங்குவதன் மூலம் மீன்பிடி படகுகளை இயந்திர மயமாக்குதல் குறித்து தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விசை மீன்பிடிப்படகுகளுடன் பல்வேறு மீன்பிடி முறைகளுக்குப் பொருத்தமான பல்வேறு தரமுள்ள செயற்கை முறுக்குநூலும் மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்படுகின்றன. பருத்தி நூலினாலான வலைகளைக் காட்டிலும் செயற்கை முறுக்கிழைகளால் நெய்யப்பட்ட வலைகள் அதிக அளவு மீன் பிடிப்பதற்கு உதவியாக இருப்பதாலேயே இந்த வலைகள் விசைப்படகுகளுடன் மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்படுகின்றன. துறை அமைத்துள்ள பயிற்சி நிலையங்களில் மீனவர்களுக்கு மீன்பிடிப்பதில் தற்கால முறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிடித்த மீன்களை பதனப்படுத்துவதற்கென பல்வேறு இடங்களில் பனிக்கட்டி, குளிர்பதன நிலையங்கள், பனி உறை நிலையங்கள், பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலைகள் முதலியவையும் நிறுவப்பட்டுள்ளன. எந்த இடங்களிலிருந்து விசைப்படகுகள் இயக்கப்படுகின்றனவோ அந்த இடங்களில் துறைமுகங்கள், தோணித் துறைகள் ஆகியவற்றைக் கட்டுவதன்மூலம் படகுகளைக் கரை சேர்ப்பதற்கும் அவற்றை விட்டு வைப்பதற்குமான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

The fishing off Tamil Nadu Coast was previously confined to indigenous crafts and tackle. Since 1955 continuous efforts have been taken to introduce mechanisation of the fishing crafts by constructing and distributing mechanised boats to fishermen groups. Along with mechanised fishing boats, synthetic twine of different construction suitable for different types of fishing, is also distributed to fishermen groups, as nets fabricated with synthetic twine bring in a better catch when compared to nets made of cotton. Training in modern methods of fishing is given to fishermen in the training centres established by the Department. Ice and Cold Storages, freezing plants and canning factories have also been established at various centres for processing the catches. Landing and berthing facilities by constructing harbours and jetties are provided at various centres for the mechanised boats operating from those centres.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading Bill(s).

Various bodies like Committes, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | ... ... | Announcement. |
| B.O.H. | .. ... | Business of the House. |
| C.A. | ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | ... ... | Calling Attention Statement. |
| Consid. | ... ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee. |

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of Clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. ... ... | Discussion for Short Duration on an Urgent Matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. ... ... ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

NINTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

25TH TO 28TH AND 30TH NOVEMBER AND 2ND DECEMBER 1970.

VOLUME XXXV (Nos. 1 to 6).

PAGES.

## A


ADITANAR, THIRU SI. PA.—

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 180–182, 183, 191, 192, 206, 211, 212, 213, 216–218, 224, 229–230, 231, 233

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 281–283, 293, 294, 303–308, 313, 314, 315, 316

Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... ... .. ... 83, 318, 323–325

AGRICULTURE—

Agricultural Farm, Kudimiamalai ... ... ... 442–443

ALAGARSWAMY, THIRU S.—

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 204, 226, 227

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 294–295

Fertilisers, grants to farmers for purchase ... ... 148–150

Geological Survey, Kovilpatty taluk ... ... 253–255

Handloom weavers, relief ... ... ... ... 46–50

PAGES.

A—*cont.*

ANIMAL HUSBANDRY—
Cattle Farm in Hosur area, opening ... ... 261–262

ANSWER(S)—
Correction (St.) ... ... ... ... ... 368

ARANGANNAL, THIRU RAMA—
Prohibition (Amendment) Bill, 1970 ... ... 500–502
Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 396–401, 402–405

ARCHAKAS—
Minimum salary ... ... ... ... ... 262

B

BALASUBRAMANIAM, THIRU A.—
Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 6

BANK(S)—
Co-operative Land Development Banks, assistance to self-employment seekers ... ... ... ... 154

BHUPATHY, THIRU M.—
Eucalyptus Oil extraction plants, Ootacamund ... 60–61
Well at Raghunathapuram, availability of water ... 340

BHUVARAHAN, THIRU G.—
Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 292–293, 294
Obituary reference, Thiru Ere Elamvazhuthi, (R)... 6–7
Water Supply and Drainage Board Bill, 1970 ... 524–526

BILL(S)—
Buildings (Lease and Rent Control) Validation of Proceedings Bill, 1970 (Int.) ... ... ... 82
City Civil Court (Amendment) Bill, 1970 (Int.) ... 469
Co-operative Societies (Amendment) Bill, 1970—
Consid. ... ... ... ... ... ... ... 176–224
Consid. Cl. ... ... ... ... ... ... 224–233
Motion to pass ... ... ... ... ... 233
Passed ... ... ... ... ... ... 233–234



PAGES.

B—*cont.*

BILL(S)—*cont.*
Co-operative Societies (Second Amendment) Bill, 1970—
Message from Governor ... ... ... ... 280
Consid. ... ... ... ... ... ... 281–308
Consid. Cl. ... ... ... ... ... 308–317
Passed ... ... ... ... ... ... 317

Co-operative Societies (Third Amendment) Bill, 1970—
Message from Governor ... ... ... ... 82
Int. ... ... ... ... ... ... 83
Consid. Cl. ... ... ... ... ... 318–325
Passed ... ... ... ... ... ... 325

Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1970—
Message from Governor ... ... ... ... 280
Int. ... ... ... ... ... ... ... 280

District Municipalities (Amendment) Bill, 1970—
Consid. ... ... ... ... ... ... 111–134
Consid. Cl. and Passed ... ... ... ... 134–137

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970—
Int. ... ... ... ... ... ... ... 369
Consid. ... ... ... ... ... ... 469–486
Consid. Cl. ... ... ... ... ... ... 486–488
Passed ... ... ... ... ... ... 488

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970—
Int. ... ... ... ... ... ... ... 279–280
Consid., Cl. and Passed ... ... ... ... 488–494

Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970—
Consid. ... ... ... ... ... 108–111
Consid. Cl. and Passed ... ... ... ... 111

PAGES.

B—*cont.*

BILL(S)—*cont.*

Prohibition (Amendment) Bill, 1970—

Int. ... ... ... ... ... ... ... 82

Consid. ... ... ... ... ... ... 494–514

Consid. Cl. and Passed ... ... ... ... 514–515

Town and Country Planning Bill, 1970—

Message from Governor ... ... ... ... 83

Consid. ... ... ... ... ... ... 83–107

Water Supply and Drainage Board Bill, 1970—

Message from Governor ... ... ... ... 515

Consid. ... ... ... ... ... ... 515–528

Consid. Cl. and Passed ... ... ... ... 528–531

BOOKS AND PUBLICATIONS—

Tamil Nadu Development Supplement, release ... 247

BRIDGE(S)—

Across Ayyavaiyanar near Korkai ... ... ... 448

Across Pambar on Irumbanadu road ... ... 151

Across Pambar, on Rayavaram–Kothamangalam road ... ... ... ... ... ... 151

BROTHEL(S)—

Cases in Madras City, withdrawal ... ... ... 56

Crimes in Madras City, investigation by Special Officer ... ... ... ... ... ... 56–60

C

CALLING ATTENTION—

Cauvery River waters, sharing between Tamil Nadu and Mysore ... ... ... ... ... 164–167

Government Press, Madras, alleged misappropriation of a few lakhs of rupees ... ... ... 277–279

Increase in price of cotton and fibre silk thread and consequences thereof ... ... ... ... 365–368

CANAL(S)—

Construction at Puthantharuvai ... ... ... 152

CEMENT—

Surplus production, marketing ... ... ... 448–451



PAGES.

C—*cont.*

CHAIR—

RULINGS AND OBSERVATIONS—

*Adjournment Motions*—

On 27th November 1970 the Chair announced that a large number of members had given notice of adjournment motions but he had held over all of them as the Minister proposed to make a comprehensive statement on the subject raised in the adjournment motions ... ... ... ... ... 163–164

On 28th November 1970 as a number of members belonging to various parties had given notice of an adjournment motion on the same subject, the Chair allowed a member from each party to state the reason as to why the motion should be admitted ... ... ... ... ... 264

*Arrest of handloom weavers in Madurai.*—Consent was withheld on the ground that the matter came under the day-to-day administration of the Government ... ... ... 162

*Attack on students of Karaikal Arignar Anna Government Arts College at Nagoor bus-stand.*—Consent was withheld on the ground that the matter related to the day-to-day administration of the Government ... ... 469

*Cancellation of concession ticket from Tirunelveli to Kanyakumari and consequent unrest among the students.*—Consent was withheld in the light of the explanatory statement by the Minister ... ... ... ... ... 468

*Cauvery water dispute between Mysore, Kerala and Tamil Nadu and its impact on Tamil Nadu.*—Consent was withheld on the ground that the concerned Minister proposed to make a statement on the matter ... ... 164

*Closure of the Annamalai University and the consequent hardships caused to the students.*—Consent was withheld in the light of the statement made by the Minister on the matter ... ... ... ... ... ... 162

PAGES.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Adjournment Motions*—cont.

*Closure of the Pudukottai Textiles, Namanasamudram and the plight of the jobless workers.*—Consent was withheld following the previous rulings that the business of House need not be adjourned to discuss lock-outs, etc. ... ... ... ... 277

*Closure of Somasundara Mills, Coimbatore and the plight of the workers.*—Consent was withheld following the practice not to adjourn the proceedings of the House to discuss closure of Mills, strikes, etc. ... ... 80

*Damage to Cooum Development Scheme Works due to heavy rains and consequent loss to Government.*—Consent was withheld, as there was no need for the adjournment of the business of the House to discuss the matter after the explanatory statement made by the Minister ... ... ... ... ... 364

*Failure of Government to maintain law and order and consequent injury to Thiru Mathi Gowder by pelting of stones in Singanallur and the stone throwing incident on Thiru Kamaraj's car and the need to provide protection to National leaders.*—Consent was withheld in the light of the explanatory statement given by the Chief Minister and the fact that the Leader of the Opposition had his full say in the matter ... ... 69

*Fall in prices of foodgrains and the consequent hardships of farmers.*—Consent was withheld on the ground that rise and fall in prices was a day-to-day occurrence ... ... 163

*Havoc caused by heavy rain and cyclone.*—Consent was withheld in the light of the explanatory statement made by the Chief Minister ... ... ... ... ... 264–277

*Murder of Paramasivam at Tuticorin and the consequent unrest among the public.*—Due to the absence of the Hon. Chief Minister, the Chair regretted its inability to take up the motion on that day ... ... ... ... 469



PAGES.



CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Adjournment Motions*—cont.

*Proposed strike of Village Officers.*—Consent was withheld on the ground that a strike which was proposed to take place could not form the basis for an adjournment motion and also in the light of earlier rulings that adjournment motions could not be allowed to discuss strikes ... ... ... ... 162–163

*Removal of Sri Vinayakar idol*—Consent was withheld in the light of the explanatory statement given by the Chief Minister ... 80

*Amendments*—

Amendment to refer a Bill to a Select Committee could be moved only after the Minister had moved that the Bill be taken into consideration and had made his speech thereon ... 83

If two amendments are identical, only one amendment can be moved ... ... ... 183

Rising on a point of order, an Opposition Member pointed out that a Member who moved an amendment that the Bill be circulated for the purpose of eliciting public opinion thereon had voted with the Government without first withdrawing his own amendment.

The Chair observed that the Member who had given notice of the amendment did not move his amendment, as an identical amendment had been moved by another Member and so the question of withdrawal of his amendment did not arise. Further the Member had every right to change his opinion and no Member had any right to question it. Hence, there was no point of order ... ... ... 223, 224

*Identical Amendments.*—When amendments given notice of by more than one Member were identical only one of them could be moved ... ... ... ... ... 87

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Bills*—

*Objection for the re-introduction of a Bill.*—On 27th November 1970 just before the Co-operative Societies (Amendment) Bill was taken up, a Member said that an Ordinance was issued on 14th October 1970 to enforce the provisions of the Bill already introduced in the last session on 1st September 1970, but that, after the prorogation of the House, as the same Bill was proposed to be taken up for consideration in the current session, it was not in oder and that the Government sought to misuse their power and hence he requested the Chair to refuse consent for taking up the consideration of the Bill.

The Minister for Food explained that since the 'No-Confidence Motion' was discussed at the last session and there was no time to discuss the Bill, the Ordinance was issued in the first instance and then the Bill was re-introduced in the current session and was proposed to be taken up for consideration.

The Chair observed that in accordance with a ruling given in the Lok Sabha an Ordinance could be issued to enforce the provisions of a Bill pending before a House and also according to Article 213 of the Constitution the Governor had the right to issue an Ordinance. Hence he ruled that there was nothing wrong in taking up the Bill for consideration ... 176-180

*Debate*—

Minister's interruptions.—A Member who took exception to frequent interruptions by a Minister asked whether there was a different set of rules for Ministers in that regard and remarked that the Chair was ' sympathetic ' to Ministers. The Deputv Speaker made the following observation—"It is for the Chair to decide whether an interruption was in order or not. Though there was rules governing interruptions





C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Debate*—cont.

which were applicable to all, the right to interrupt had been granted to Ministers and also to the Leader of the Opposition. It is not proper for the Member to accuse the Chair of being ' sympathetic ' to the ruling Party " ... ... ... ... 213-216

When a Member stated that he would produce evidence in two days to prove that the information given by the Minister was incorrect, the Chair observed that if he was prepared to prove immediately, he might do so. But it was not in order to rise up and state that he would prove later ... ... 231

*Applause.*—Just as Members had the right to put a question, they had the right to express their approbation to a Minister's reply by applause. But it was not in order for a Member to accost those who did it, "Is it over?" ... ... 58

*Extension of time.*—On 2nd December 1970 the Chair announced that the time of adjournment of the House would be extended by half-an-hour to complete the discussion on a matter that was under consideration ... ... 524

*Interruptions.*—When a Member gave an incorrect information or was under a wrong impression, the Minister had a right to intervene and correct him ... ... ... 193

*Minister's presence.*—It was not necessary that all the Ministers should be present in the House. It would suffice if the concerned Minister was present in the House ... ... 193

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Debate*—cont.

*Relevancy.*—Members should confine their remarks to the subject under discussion ... 184, 185, 207

*Speeches to be brief.*—Members should be brief giving time for others ... ... ... 472, 480

*Time-limit*—Even in respect of Bills, restriction of time is necessary ... ... ... ... 286

It was not the concern of the Chair to decide whether a particular measure was necessary or not. It was the responsibility of the Chair to see that the discussion on the items in the Agenda was over within the time allotted. So, the Members would do well to finish their speeches within the time allotted to them ... 188

Decorum—

Members need not give any judgment on any point raised in the House ... ... ... 364

Members should address the Chair, and should not address each other directly ... 193

*Expressions used in the House*—

" தம்பி " in the sentence " you should not tell all these things, Brother ".—Remark addressed by a Member against another—Deprecated ... ... ... ... ... 364

*Half-Hour Debate*—

While a Member could ask for a half-hour debate after the question hour was over and if full information was not given despite sufficient number of supplementaries he could not ask for such debate after a Minister's explanatory statement on an adjournment motion as there was no provision in the rules to ask for it. If a Member wanted to have a discussion for short duration on any matter he would have to make a request in writing in that regard ... 365



C—*cont.*

PAGES.

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Members Seats*—

When a Member drew the attention of the Chair that another Member was interrupting his speech from a seat other than the one allotted to him, the Deputy Speaker observed that he did not allow him to do so and that he deprecated the practice of members talking from seats not allotted to them ... ... 193, 194

*Personal Explanation*—

A Member could make personal explanation only after a Minister had concluded his speech and should not interrupt him in the middle of his speech ... ... ... ... ... 213, 214

*Point of order*—

A Point of order should have precedence, when raised, even during Minister's or Chief Ministers' speech ... ... ... ... 364

*Absence of three Ministers in the Treasury Benches.*—Rising on a point of order, a Member wanted to know the circumstances under which three Ministers were not found in the Treasury Benches. He wanted the Chief Minister or the three ex-Ministers to make a statement as to why they were not in the Ministry.

The Chair held that it was not a point of order and observed that a point of order could be raised only when there was breach of observance of the Rules of Procedure in the House or when there was breach of observance of conventions in the House. The House was not concerned with what had happened in the Ministry. Ministers who had resigned could, if they liked, make a statement to the House and they could not be compelled to do so. Similarly, the Chief Minister, if he desired, could make a statement about the resignation of Ministers and about the

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Point of order*—cont.

reconstitution of his Ministry, but he too could not be compelled to do so ... ... 33-34

*Privilege Matters*—

*Alleged misrepresentation of facts by Minister for Co-operation (Thiru Si. Pa. Aditanar).*—On 30th November 1970 the Chair announced that the matter would be taken up on some other day ... ... ... ... ... 362

With reference to the matter of privilege given notice of by Thiru N. S. V. Chithan that the Minister for Co-operation had misrepresented facts about the over-dues in respect of a Land Development Bank, the Chair announced on 2nd December 1971 that both the Member and the Minister had furnished detailed information about their respective statements and after going through them the matter would be taken up on a later date ... ... ... ... ... ... 463-467

*Procedure*—

*Precedents.*—When the Speaker quoted a precedent followed in the Lok Sabha for a particular procedure, the Leader of the Opposition asked whether there was any such precedent in the Tamil Nadu Legislative Assembly. Thereupon the Chair observed that there was nothing wrong in adopting the precedent followed in the Lok Sabha. Moreover, they could not except a precedent for everything in Tamil Nadu Legislative Asembly itself. Precedents after all were created according to circumstances. As a matter of fact what they did just then might itself serve as a precedent for the future ... 179-180



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

*Questions and Answers*—

*Supplementary Questions.*—Only questions without any preambles should be put ... 437, 462

*Imputations.*—Supplementaries should not contain imputations ... ... ... ... 334

*Relevancy.*—Supplementaries should relate to the main question ... ... ... ... 53

*Quotation*—

Members should not read press statements, but could bring out the ideas contained therein ... 429

*Ruling*—

After the ruling of the Chair in a matter members should not speak on the merits of the matter ... ... ... ... ... 164

CHEEMAICHAMY, THIRU K.—

Damage to Cooum Development Scheme work due to heavy rains and consequent loss to Government (A.M.) ... ... ... ... ... ... 363

CHITHAN, THIRU N. S. V.—

Beedi wokers in Madras, strike ... ... ... 41-44

Chingleput Municipal Council, upgrading ... 45-46

Commercial Taxes Department, Ootacamund, construction of office buildings ... ... ... 340

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 183, 226, 227-228, 230

Government High School building, Bhavani, construction ... ... ... ... ... 244

Government Hospitals training in Radiology ... 329-330

Indian Tobacco Development Council, meeting ... 443-445

Kodaikanal, development as Tourist Centre ... 337-339

C—*cont.*


| | PAGES. |
|---|---|
| CHITHAN, THIRU N. S. V.—*cont.* | |
| Mahabalipuram Sea-shore temple, breakwater wall. | 143-145 |
| Mylapore Hindu Permanent Fund, labour troubles ... ... ... ... ... ... | 250 |
| Port Police Station, Cuddalore, attack ... ... | 34-36 |
| Thirumangalam Town Panchayat, upgrading ... | 250 |
| Trusts' administration, enquiry by High Court Judge | 358 |
| T.V.S. Group Companies' employees, extra wages. | 150 |
| Wine factory, setting up ... ... ... ... | 448 |
| COMMITTEE(S)— | |
| Business Advisory Committee, nomination to (Ann.) ... ... ... ... ... ... | 80 |
| Elayaperumal Committee on untouchability, Report. | 435-442 |
| Expert Committee of Indian Wild Life Board, visit to Mudumalai Sanctuary ... ... ... ... | 156 |
| Public Accounts, Report on Excesses over Voted Grants and Charged Appropriations for 1967-68 presentation ... ... ... ... ... | 81 |
| Public Accounts, Report on Housing Board's Accounts for 1963-64, presentation ... ... | 168 |
| CO-OPERATIVE SOCIETIES— | |
| Paid staff, treatment as Government servants ... | 53-55 |
| COTTON— | |
| Thread, increase in price (C.A.). ... ... ... | 365-368 |
| COUNCIL(S)— | |
| Indian Tobacco Development Council, meeting ... | 443-445 |
| COURT(S)— | |
| Magistrate's Court, Tuticorin, shifting ... ... | 151 |
| Mobile Courts, extension to districts ... ... | 151-152 |
| **D** | |
| DIVISION— | |
| Co-operative Societies (Amendment) Bill, 1970, amendment to its consideration ... ... .. | 219-223 |
| Prohibition (Amendment) Bill, 1970, amendment to its consideration ... ... ... ... ... | 511-514 |




D—*cont.*


| | PAGES. |
|---|---|
| DRAINAGE— | |
| Scheme, Thenparai village ... ... ... ... | 50-51 |
| DURAISAMY, THIRU S.— | |
| Atomic Power Station, Kalpakkam, completion ... | 61-62 |
| Cauvery River Modernization Scheme, financial help from World Bank ... ... ... ... ... | 255 |
| Industrial Estate, Namakkal ... ... ... | 451-452 |
| Kodaikanal, development as Tourist Centre ... | 337-339 |
| Minor Irrigation Scheme, preparation ... ... | 259-261 |
| Oil Refinery, establishment at Tuticorin ... ... | 348-349 |
| Palani, development as Tourist Centre ... ... | 147-148 |
| Powerlooms, assistance to weavers for purchase ... | 46 |
| Railway line between Tirunelveli and Trivandrum via Nagercoil, formation ... ... ... ... | 256 |
| Tiruppur Dam, inspection by Executive Engineer. | 352 |
| **E** | |
| ELECTRICITY— | |
| Atomic Power Station at Kalpakkam, completion ... | 61-62 |
| Board, special staff for recruitment work ... ... | 461-462 |
| Power Sub-station, establishment at Melathanium. | 361-362 |
| EUCALYPTUS— | |
| Oil extraction plants, Ootacamund ... ... | 60-61 |
| **F** | |
| FERTILISERS— | |
| Grants to farmers for purchase ... ... ... | 148-150 |
| FIBRE— | |
| Silk, increase in price (C.A.) ... ... ... | 365-368 |
| FISHERIES— | |
| Fishing industry, modernisation ... ... ... | 457-460 |
| FUND(S)— | |
| Mylapore Hindu Permanent Fund, labour troubles. | 250 |

PAGES.

## G.

GEOLOGICAL SURVEY—

Kovilpatti taluk ... ... ... ... ... 253–255

GEORGE, THIRU V.—

Water Supply and Drainage Board Bill, 1970 ... 522–524

GNANASAMBANDAN, THIRU K. R.—

Havoc caused by heavy rain and cyclone (A.M.). ... 267–268

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—

Articulated buses in Madras City, operation ... 51–53

Bonded labour, existence in Nilgiris district ... 335–336

Cauvery River Modernisation Scheme, financial help from World Bank ... ... ... ... 255

Co-operative Land Development Banks, assistance to self—Employment seekers ... ... ... 154

Elayaperumal Committee on Untouchability, Report 435–442

Jain Temple, Vijayamangalam ... ... ... 357–358

Mudumalai Wild Life Sanctuary, visit of Expert Committee of Indian Wild Life Board ... ... 156

Rifle Clubs in Madras, number ... ... ... 249–250

Salem Steel Site Selection Committee, visit to Salem ... ... ... ... ... ... 341–348

Sharing of Cauvery waters between Tamil Nadu and Mysore (C.A.) ... ... ... ... 164

Tamil Nadu Development Supplement, release ... 247

GOVERNMENT PRESS—

Alleged misappropriation in Madras (C.A.) ... 277–279

GOVINDARAJAN, THIRU C.—

Closure of Annamalai University and consequent hardships caused to students (A.M.) ... ... 158–159

Tamizhar Padai, Nellikuppam, procession ... ... 36–37

## H.

HABIBULLAH BAIG, Dr. THIRU—

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 383–384



PAGES

H—*cont.*

HANDE, DR. (THIRU) H. V.—

Avadi, Ambathur, Kathivakkam and Madhavaram Townships, constitution (R) ... ... ... 172–173

Boiled rice, non-supply to Kanagam, Tharamani and other neighbouring villages ... ... ... 44–45

Cement, marketing of surplus production ... ... 448–451

Co-operative Societes (Amendment) Bill, 1970 ... 191, 192, 193, 194, 195, 196, 218, 219

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 290–292

Co-operative Societies, treatment of paid staff as Government servants ... ... ... ... 53–55

Cuddalore Port, development as Major Port ... 257–259

District Municipalities (Amendment) Bill, 1970. 121–122

Electricity Board, Special staff for recruitment work ... ... ... ... ... ... 461–462

Furniture manufacturers' Association, supply of steel. 251–253

Harijans of Sundivakkam, alleged atrocities by Caste Hindus ... ... ... ... ... 39

Havoc caused by heavy rain and cyclone (A.M.) ... 266, 267, 277

Madurai District Co-operative and Development Banks, service conditions of employees ... ... 154

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ...

Parambikulam–Aliyar Project, Reclamation of ayacut lands ... ... ... ... ... ... ... 245–246

Prohibition (Amendment) Bill, 1970 ... ... ... 498–500

Salem Steel Plant, special cell for co-ordination ... 341–348

Southern Structurals, re-opening ... ... ... 242–244

Standard Motors, Vandalur, re-opening ... ... 237–242

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 384–391

PAGES.

H—*cont.*

HANDE, DR. (THIRU) H. V.—*cont.*

Temples, entry of non-Hindus ... ... ... 456–457

Town and Country Planning Bill, 1970 ... .. 95–99

HANDLOOM—

Weavers, relief ... ... ... ... ... 46–50

HARIJANS—

Sundivakkam, alleged atrocities by Caste Hindus ... 39

HOSPITALS AND DISPENSARIES—

Radiology, training ... ... ... ... 329–330

I.

INDUSTRIAL ESTATE(S)—

Namakkal, establishment ... ... ... ... 451–452

INSURANCE—

Crop Insurance Scheme, introduction ... ... 39–41

IRAJARATHINAM, THIRU D.—

Avadi, Ambattur, Kathiwakkam and Madhavaram Townships, constitution (R) ... ... ... 174

IRRIGATION—

Cauvery River Modernisation Scheme, financial help from World Bank ... ... ... ... .. 255

Manniyar River, silting up of mouth ... ... 152

Minor Irrigation Scheme, preparation ... ... 259–261

Pazhavar in Mayuram region, embankment ... 454–455

Pond Scheme, implementation ... ... ... 352–357

Reservoir, construction in Chemminaipatti ... ... 351–352

Tiruppur Dam, inspection by Executive Engineer ... 352

J.

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—

District Municipalities (Amendment) Bill, 1970 ... 126–128



PAGES.

J—*cont.*

JAYARAMAN, THIRU K.—

Increase in price of cotton and fibre silk thread and consequences thereof (C.A.) ... ... ... 365

K.

KANAKASABAI, THIRU R.—

Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 321–322

KARUNANIDHI, THIRU M.—

Failure of Government to maintain law and order and consequent injury to Thiru Mathi Gowder by pelting of stones in Singanallur and the stone-throwing incident on Thiru Kamaraj's car and the need to provide protection to National leaders (A.M.) ... ... ... ... ... 64–68, 69

Havoc caused by heavy rain and cyclone (A.M.) ... 272–277

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 12–14

Prohibition (Amendment) Bill, 1970 ... ... ... 82

Removal of Sri Vinayakar idol (A.M.) ... ... 73–79

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 395, 396, 402, 422, 423, 424, 425, 426, 427, 428, 429

KARUPPIAH, THIRU R.—

Closure of Annamalai University and consequent hardships caused to students (A.M.) ... ... 157–158

KARUTHIRUMAN, THIRU P. G.—

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 176 178–179, 205–206, 207, 208, 209, 210, 211, 212, 213, 214, 215

PAGES.

K—*cont.*

KARUTHIRUMAN, THIRU P. G.—*cont.*

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 298–303

District Municipalities (Amendment) Bill, 1970 ... 124, 128–129, 130–131, 132

Failure of Government to maintain law and order and consequent injury to Thiru Mathi Gowder by pelting of stones in Singanallur and the stone-throwing incident on Thiru Kamaraj's car and the need to provide protection to National leaders (A.M.) ... ... ... ... ... 62, 63–64, 66, 67, 68–69

Havoc caused by heavy rain and cyclone (A.M.) ... 276

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 4–5

Public Accounts Committee, Report on Excess over Voted Grants and Charged Appropriations for 1967–68—Presentation ... ... ... ... 81

Public Accounts Committee, report on Housing Board's Accounts for 1963–64—Presentation ... 168

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 396, 421, 422, 423, 424, 425, 426, 427, 428, 429

Town and Country Planning Bill, 1970 ... ... 100–103

KASIRAMAN, THIRU N.—

Motor Transport Workers, implementation of Central Wage Board's recommendations ... 152–154

Registering Officer, personal attendance fee ... 155

Sundaraperumalkoil Railway Station, acquisition of lands ... ... ... ... ... ... 255–256



PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—

Agricultural Farm, Kudimiamalai ... ... ... 442–443

Bridge across Ayyavaiyanar near Korkai ... ... 448

Crop Insurance Scheme, introduction ... ... 39–41

Fishing industry, modernisation ... ... ... 457–460

Grand Anicut—Cauverypoompattinam Road (Mappadugai area), take-over by Highways Department ... ... ... ... ... 50

Kodaikanal Hills, raising of rubber plantations ... 156–157

Manniyar River, silting up of mouth ... ... ... 152

Pazhavar in Mayuram region, embankment ... 454–455

Ration shops, cancellation of licences ... ... 250–251

Salem Steel Plant, special cell for co-ordination ... 341–348

Sandalwood trees in Kajah Hills, regeneration ... 263

Tree Planting Scheme, execution ... ... ... 358–361

KOTHANDARAMAN, THIRU V. K.—

Government Press, Madras, alleged misappropriation of a few lakhs of rupees (C.A.) ... ... ... 277

Lorries, strike on 7th July 1970 ... ... ... 350–351

Maniachi Railway Station, change of name ... 452–453

Sharing of Cauvery waters between Tamil Nadu and Mysore (C.A.) (L) ... ... ... ... 164, 167

L.

LABOUR—

Beedi workers in Madras, strike ... ... ... 41–44

Bonded, existence in the Nilgiris district ... ... 335–336

Madurai District Co-operative Land Development Banks, service conditions of employees ... ... 154

Motor Transport Workers, implementation of Central Wage Board, recommendations ... ... 152–154

LANDS—

Acquisition, Sundaraperumalkoil Railway Station. 255–256

Padugai, Tiruchirappalli district ... ... ... 263–264

Parambikulam-Aliyar Project, reclamation of ayacut lands ... ... ... ... ... 245–246

PAGES.

L—*cont.*

LOCAL BODIES—

Ambattur Township, constitution (R) ... ... 168–176
Avadi Township, constitution (R) ... ... ... 168–176
Chingleput Municipal Council, upgrading ... ... 45–46
Kathiwakkam Township, constitution (R) ... ... 168–176
Madavaram Township, constitution (R) ... ... 168–176

LORRIES—

Strike on 7th July 1970 ... ... ... ... 350–351

M.

MADHAVAN, THIRU S.—

B.O.H., change in order (M) ... ... ... ... 531
City Civil Court (Amendment) Bill, 1970 ... ... 469
Court-fees and Suits Valuation (Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 280
District Municipalities (Amendment) Bill, 1970 ... 124–125
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 487–488
Increase in price of cotton and fibre silk thread and consequences thereof (C.A. St.) ... ... ... 366–368
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961—Nomination of Member-Chairman of Advisory Committee on Exemptions in place of Thiru K. A. Mathialagan ... ... ... ... 532
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... 279–280, 488, 493–494
Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 ... ... ... ... ... ... 108, 109–110, 111
Prohibition (Amendment) Bill, 1970 ... ... 494–495, 507–510, 511, 515



PAGES.

M—*cont.*

MADHAVAN, THIRU S.—*cont.*

Water Supply and Drainage Board Bill, 1970 ... 515–517, 526–528 529–530, 530–531

MANI, THIRU K. B. S.—

Havoc caused by heavy rain and cyclone (A.M.) ... 270–272
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 481–482
Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 10–11
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... 492

MANIAN, THIRU P. S.—

Pond Scheme, implementation ... ... ... 352–357
Recreation Clubs at Sholavandan, number ... 247–248
Reservoir, construction in Chemminipatti ... ... 351–352
Tailoring, instruction to High School boys ... ... 37

MARIMUTHU, THIRU A. R.—

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 200–202
Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 287–289
Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 408–413

MARTIN, THIRU T.—

Brothel cases in Madras City, withdrawal, etc. ... 56
Crimes (Brothel) in Madras City, investigation by Special Officer ... ... ... ... ... 56–60
Magistrate's Court, Tuticorin, shifting ... ... 151
Paper Mill, establishment at Udangudi ... ... 350
Raffle Agent in Tirunelveli, complaint ... ... 248–249
Sathankulam Panchayat Union, misappropriation of pipes ... ... ... ... ... ... 339–340
Seepage Canal at Puthantharuvai, construction ... 152
Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 391–394, 395

PAGES.

MOTION(S)—

Ad. Motions :

Arrest of Handloom Weavers, Madurai ... ... 162

Attack on students of Karaikal Arignar Anna Government Arts College at Nagoor bus stand. 469

Cancellation of concession tickets from Tirunelveli district to Kanyakumari district and consequent unrest among students ... ... ... ... 467–468

Cauvery water dispute between Mysore, Kerala and Tamil Nadu and its impact on Tamil Nadu. 163–164

Closure of Annamalai University and consequent hardships caused to students ... ... ... 157–162

Closure of Pudukottai Textiles, Namanasamudram and the plight of jobless workers ... ... ... 277

Closure of Somasundara Mills, Coimbatore and the plight of workers ... ... ... ... 80

Damage to Cooum Development Scheme works due to heavy rains and consequent loss to Government ... ... ... ... ... 362–365

Failure of Government to maintain law and order and consequent injury to Thiru Mathi Gowder by pelting of stones in Singanallur and the stone-throwing incident on Thiru Kamaraj's car and the need to provide protection to National leaders ... ... ... ... ... ... 62–69

Fall in prices of foodgrains and consequent hardships of farmers ... ... ... ... ... ... 163

Havoc caused by heavy rain and cyclone ... 264–277

Murder of Paramasivam at Tuticorin and the consequent unrest among the public ... ... 469

Proposed strike of village officers ... ... ... 162–163

Removal of Sri Vinayakar idol ... ... ... 70–80

B.O.H., change in order ... ... ... ... 369, 531







PAGES.

MOTION(S)—*cont.*

Land Reforms (Fixation of Ceiling on Land) Act 1961, nomination of Revenue Minister as Minister-Chairman of Advisory Committee on exemptions in place of Thiru K. A. Mathialagan . 532

Suspension of Rule 23 (1) ... ... ... ... 81–82

MUNU ADHI, THIRU—

Standard Motors Limited, Vandalur, re-opening ... 237–242

N

NALLASIVAM, THIRU K. R.—

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 295–296

**Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ...** 8–9

Prohibition (Amendment) Bill, 1970 ... ... ... 506–507

NATARAJAN, THIRU E. M.—

Tribal block, Coimbatore district ... ... ... 445–446

NATARAJAN, THIRU N. V.—

Government Press, Madras, alleged misappropriation of a few lakhs of rupees (C.A. St.) ... ... 277–279

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—

B. O. H., change in order ... ... ... ... 369

Closure of Annamalai University and consequent hardships caused to students (A.M.) ... ... 159–161, 162

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 179, 208, 210, 214–215

District Municipalities (Amendment) Bill, 1970 ... 126

**Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ...** 2–4

Suspension of Rule 23 (1), (M) ... ... ... 81

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 395

Town and Country Planning Bill, 1970 ... ... 83–87, 103–107

PAGES.

## O

OBITUARY REFERENCES—
- De Gaulle, General ... ... ... ... ... 1-2
- Elamvazhuthi Thiru Ere. (R) ... ... ... 2-14
- Nasser, Thiru Gamal Abdul ... ... ... 1-2
- Raman, Dr. Thiru C. V. ... ... ... ... 1-2
- Yusof Bin Ishak, Thiru ... ... ... ... 1-2

OFFICES—
- Commercial Taxes Department, Ootacamund, construction of office buildings ... ... ... 340

OIL(S)—
- Refinery, establishment at Tuticorin ... ... 348-349

## P

PALANIAMMAL, THIRUMATHI V. P.—
- English Language Teaching campaign for teachers, revival ... ... ... ... ... ... 331-335

PANCHAYATS—
- Executive officers, appointment of clerks ... ... 447
- Sathankulam Panchayat Union Council, misappropriation of pipes ... ... ... ... ... 339-340
- Thirumangalam Town Panchayat, upgrading ... 250

PANCHAYAT UNIONS—
- Administrative set-up (Independent) ... ... 446

PANEL OF CHAIRMEN—
- Announcement ... ... ... ... ... 81

PAPER—
- Mill, establishment at Udangudi ... ... ... 350

PAPERS LAID ON THE TABLE—
- Agricultural Income-Tax Act, 1955, notification ... 22
- Agricultural Produce Markets Act, 1959, notifications ... ... ... ... ... ... 16, 18, 19, 21, 22, 24, 326, 327, 430, 431



PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
- Buildings (Lease and Rent Control) Act, 1960, notifications ... ... ... ... ... ... 28, 326, 430
- Buildings (Lease and Rent Control) Validation of Proceeding Bill, 1970 ... ... ... ... 431
- Central Sales Tax (Madras) Rules, 1957, notification ... ... ... ... ... ... 29
- City Municipal Corporation Act, 1919 notification ... ... ... ... ... ... 16
- Collection of Statistics Act, 1953, notification ... 234
- Committee on Public Accounts, report on Excesses over Voted Grants and Charged Appropriations for 1967-68 ... ... ... ... ... ... 138
- Co-operative Societies (Amendment) Ordinance, 1970 ... ... ... ... ... ... 30
- Co-operative Societies (Second Amendment) Ordinance, 1970 ... ... ... ... ... 30
- Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 327
- Court Fees and Suit Valuation (Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 533
  - Annexure ... ... ... ... ... ... 533
- District Municipalities Act, 1920, notifications ... 20, 22, 23, 325, 326, 327
- District Municipalities (Amendment) Bill, 1970 with annexure ... ... ... ... ... 327
- District Municipalities (Amendment) Ordinance, 1970 ... ... ... ... ... ... 30
- Dramatic Performances Act, 1954, notification ... 23
- Entertainments Tax Act, 1939, notifications ... 17, 20, 21, 22, 24, 25, 138, 431, 532-533

PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Entertainments Tax Act, 1939, order ... ... 137-138

Exemption from liability to pay Central Sales Tax by the Swedish Red Cross Rehabilitation Industries, Katpadi, notification ... ... ... ... 31

Exemption from payment of Stamp duty—Pasumpon Muthuramalinga Thevar College Board, Usilampatti, notification ... ... ... ... ... 30

Forest Act, 1882, notifications ... ... ... 25, 29

General Sales Tax Act, 1959, notifications ... ... 17, 18, 20, 24, 27, 28, 234, 327, 532

Home Guard Act, 1963, notification ... ... 27

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 29

Indian Companies Act, 1956, notification ... ... 533

Indian Stamp Act, 1899, notifications ... ... 30, 31

Industrial Disputes Act, 1947, notification ... ... 20

Kodaikanal Hills Fishing Rules, 1969, notification ... 31

Legislative Assembly, resume of work transacted ... 31

Legislative Council, resume of work from 24th August to 9th September 1970 ... ... ... 533

Motor Vehicles Act, 1939, notifications ... ... 22, 26, 27

Motor Vehicles Taxation Act, 1931, notifications ... 15, 16, 17, 22, 25, 26, 27, 28, 138, 234, 235, 325

Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952, notification ... ... ... ... 19

Municipal Services Rules, 1920, erratta ... ... 533



PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Nilgiris Fishing Rules, 1966, notification ... ... 30, 31

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... 533

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970, Annexure ... ... 533

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Ordinance, 1970 ... ... ... 327

Panchayats Act, 1958, notifications ... ... 15, 16, 124

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, notifications ... ... 26, 27, 28

Payment of Salaries Act, 1951, notifications ... 15, 20, 21, 22, 23

Plantation Labour Rules, 1955, notification ... 31

Prohibition Act, 1937, notifications ... ... 17, 18, 23

Prohibition (Amendment) Bill, 1970 with annexure . 431

Public Buildings (Licensing) Act, 1965, notification ... ... ... ... ... ... 431

Public Service Commission, Annual report for 1968–69 ... ... ... ... ... ... 138

Public Service Commission, notification ... ... 21

Public Service Commission Regulations, 1954, notifications ... ... ... ... ... 19, 23, 26, 138, 326

Report of Committee on Public Accounts, 1970–71 on State Housing Board ... ... ... ... 327

Revenue Department, notification ... ... ... 30

Shops and Establishments Rules, 1948, notification 30

Survey and Boundaries Act, 1923, notifications ... 28, 29

Urban Land Tax Act, 1966, notifications ... ... 19, 25

Ware-houses Act, 1951, notifications ... ... 20, 25

Water Supply and Drainage Board Bill, 1970 ... 327

Weights and Measures (Enforcement) Act, 1958, notification ... ... ... ... ... 29

PAGES.

P—*cont.*

PEER MOHAMMED, HAJEE M. M.—
Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 7–8
Prohibition (Amendment) Bill, 1970 ... ... 506

PERUMAL, THIRU A. R.—
Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 10

PESTS—
Biological Centre, establishment at Thiruvannamalai ... ... ... ... ... ... 336–337

PLANTATION—
Rubber, Kodaikanal Hills ... ... ... ... 156–157

POINT OF ORDER—
Absence of three Ministers in Treasury Benches ... 33–34

POLICE—
Port Station, Cuddalore, attack ... ... ... 34–36

PONNAMBALAM, PULAVAR P.—
Bridge across Pambar on Irumbanadu road ... 151
Bridge across Pambar on Rayavaram-Kothamangalam road ... ... ... ... 151
Panchayat Unions, independent administrative set-up ... ... ... ... ... ... 446
Power Sub-station, establishment at Melathandum 361–362

PONNAPPA NADAR, THIRU R.—
Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 296–298
District Municipalities (Amendment) Bill, 1970 ... 123–124, 125–126
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 478–479
Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 ... ... ... ... ... ... 110
Prohibition (Amendment) Bill, 1970 ... ... 502–503, 510



PAGES.

P—*cont.*

PORT—
Cuddalore ... ... ... ... ... ... 257–259

POWERLOOMS—
Purchase, assistance to weavers ... ... ... 46

PRIVILEGE MATTER—
Alleged misrepresentation of facts by the Minister for Co-operation (Thiru Si. Pa. Aditanar) ... 463–467

QUESTION—
Correction of an answer given by the former Finance Minister (St.) ... ... ... ... 80–81, 368–369

R

RAFFLE—
Agent in Tirunelveli, complaint against ... ... 248–249

RAILWAYS—
Maniachi Railway Station, change of name ... 452–453
Railway line between Tirunelveli and Trivandrum (via) Nagercoil, formation ... ... ... 256

RAJANGAM, THIRU N.—
Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 479–480

RAMAMOORTHY, THIRU K.—
Cauvery water dispute between Mysore, Kerala and Tamil Nadu and its impact on Tamil Nadu (A.M.) 163
Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 176, 177, 178, 182, 183, 184–185, 186–187, 188, 212, 213, 218, 225, 232, 233
Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 284–287, 307, 309–314, 315, 316, 317

R—*cont.*


RAMAMOORTHY, THIRU K.—*cont.*—

Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 318–320

District Municipalities (Amendment) Bill, 1970 113–115, 134–135, 137

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 471

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... 489–490

Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970 ... ... ... ... ... ... 108–109

Prohibition (Amendment) Bill, 1970 ... ... 495–496

Town and Country Planning Bill, 1970 ... ... 87, 88–92, 107

Water Supply and Drainage Board Bill, 1970 ... 517–518

RATIONING—

Ration shops, cancellation of licences ... ... 250–251

RECREATION—

Clubs, Sholavandan ... ... ... ... ... 247–248

REGISTRATION—

Officers, personal attendance fee ... ... ... 155

RESOLUTION(S)—

Ambattur Township, constitution ... ... ... 168–176

Avadi Township, constitution ... ... ... 168–176

Kathiwakkam Township, constitution ... ... 168–176

Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, nomination of Revenue Minister as Member-Chairman of Advisory Committee on exemptions in place of Thiru K. A. Mathialagan ... 532

Madhavaram Township, constitution ... ... 168–176

Tamil, sole medium of instruction and language of administration ... ... ... ... ... 369–430






R—*cont.*


RICE—

Boiled, non-supply to Kanagam, Tharamani and other neighbouring villages ... ... ... 44–45

RIFLE—

Clubs in Madras, number ... ... ... ... 249–250

ROAD(S)—

Grand Anicut—Cauverypoompattinam road (Mappadugai area), taken over by Highways Department ... ... ... ... ... 50

Thiruvannamalai–Thanipadi road, repair ... ... 455–456


S.


SADIQ PASHA, THIRU S. J.—

Cancellation of concession ticket from Tirunelveli district to Kanyakumari district and consequent unrest among students (A.M.) ... ... ... 468

Damages to Cooum Development Scheme works due to heavy rains and consequent loss to Government (A.M.) ... ... ... ... ... ... 362–364

Failure of talks on sharing of Cauvery waters between Tamil Nadu and Mysore (C.A.St.) ... 164–167

SAHADEVA KANDER, THIRU K.—

Archakas, minimum salary ... ... ... 262

Articulated buses in Madras City, operation ... 51–53

Biological Centre, establishment at Thiruvannamalai ... ... ... ... ... ... 336–337

Mobile Courts, extension to districts ... ... ... 151–152

Social Welfare Board, programmes in Madras City ... ... ... ... ... ... 246–247

Temples in Tiruppur, ticket system for archanas ... 155

Thiruvannamalai–Thanipadi road, repair ... ... 455–456

SANDALWOOD—

Trees in Kajah Hills, regeneration ... ... ... 263

SANKARAIAH, THIRU N.—

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 202–204

PAGES.

S—*cont.*

SANKARAIAH, THIRU N.—*cont.*

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 289–290

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... 490–491

Prohibition (Amendment) Bill, 1970 ... ... 503–504

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 413–418

Town and Country Planning Bill, 1970 ... ... 99–100

SATYAVANIMUTHU, DR. (THIRUMATHI)—

Answers, corrections (St.) ... ... ... ... 80, 81, 368–369

SCHOOL(S)—

Government High School Buildings, Bhavani, construction ... ... ... ... ... 244

Municipal High Schools in Madurai, amenities ... 244–245

S.S.L.C. Public examination, raising of total maximum marks ... ... ... ... ... 145–147

SHANMUGAM, THIRU P. U.—

Ambattur Township, constitution (R) ... ... 168–171, 172, 174, 175

Avadi Township, constitution (R) ... ... ... 168–171, 172, 174, 175

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 176–177, 178, 208, 209, 210

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 284, 299, 300, 301

District Municipalities (Amendment) Bill, 1970 ... 111–113, 129, 130, 131–134, 136–137

Kathiwakkam Township, constitution (R) ... ... 168–171, 172, 174, 175

Madhavaram Township, constitution (R) ... ... 168–171, 172, 174, 175



PAGES

S—*cont.*

SIVAGNANAM, THIRU M. P.—

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ... ... 473–478

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 9–10

Prohibition (Amendment) Bill, 1970 ... ... 496–498

Tamil, sole medium of instruction and language of administrataion (R) ... ... ... ... 369–383, 408, 412, 425, 428

SOCIAL WELFARE—

Board's, programmes in Madras City ... ... 246–247

SOUNDARAPANDIAN, THIRU N.—

Cancellation of concession ticket from Tirunelveli district to Kanyakumari district and consequent unrest among students (A.M.) ... ... 467–468

SOUTHERN STRUCTURALS—

Re-opening ... ... ... ... ... ... 242–244

STANDARD MOTORS LIMITED—

Re-opening ... ... ... ... ... 237–242

STEEL—

Plant at Salem, special cell for co-ordinataion ... 341–348

Silk Selection Committee, visit to Salem ... ... 341–348

Supply to Furniture Manufacturers' Association ... 251–253

SUBBARAJA, THIRU A. A.—

Avadi, Ambattur, Kathiwakkam and Madhavaram Townships, constitution (R) ... ... ... 173–174

Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 188–189, 190–191, 225, 226–227

Co-operative Societies (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 283–284, 309, 314

Co-operative Societies (Third Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 320–321

S—*cont.*

SUBBARAJA, THIRU A. A.—*cont.*—

District Municipalities (Amendment) Bill, 1970 ... 115–119, 134, 135–136

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 ... ... ..., ... 472–473, 486–487

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 12

Sharing of Cauvery waters between Tamil Nadu and Mysore (C.A.) ... ... ... ... ... 164, 167

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... 405–408

Town and Country Planning Bill, 1970 ... ... 92–95

Water Supply and Drainage Board Bill, 1970 ... 518–522, 528, 529, 530

SUBBIAH, THIRU A. K.—

Drainage Scheme, Thenparai village ... ... 50–51

Havoc caused by heavy rain and cyclone (A.M.) ... 268–270, 276

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 7

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 ... ... ... ... 491–492

Panchayat Executive Officers, appointment of clerks ... ... ... ... ... ... 447

Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 418–420

SUBBIAH, THIRU K. V.—

Buildings (Lease and Rent Control) Validation of (Amendment) Bill, 1970 ... ... ... ... 369, 469–

Hindu Religious and Charitable Endowments Proceedings Bill, 1970 ... ... ... ... 82
470, 482–486, 488





S—*cont.*

SUBRAMANIAM, THIRU A. L.—

District Municipalities (Amendment) Bill, 1970 ... 119–121

SUNDARABHARATHI, THIRU SOWDI S.—

Increase in price of cotton and fibre silk thread and consequences thereof (C.A.) ... ... ... 365

SUPER MARKETS—

Mobile, Tiruchirappalli district, starting ... ... 55

SURENDRAN, THIRU M.—

Obituary reference, Thiru Ere. Elamvazhuthi (R) ... 11

Prohibition (Amendment) Bill, 1970 ... ... 505

SWAMINATHAN, THIRU V.—

Cattle farm in Hosur area, opening ... ... ... 261–262

Mobile Courts, extension to districts ... ... 151–152

Mobile Super Markets, Tiruchirappalli district, starting ... ... ... ... ... ... 55

Padugai lands in Tiruchirappalli district, extent ... 263–264

Railway line between Tirunelveli and Trivandrum (via) Nagercoil, formation ... ... ... ... 256

S.S.L.C. Public examination, raising of total maximum marks ... ... ... ... ... 145–147

University Centre, Tiruchirappalli, opening ... ... 37–38

Wine factory, setting up ... ... ... ... 448

T.

TAILORING—

Instruction to High School boys ... ... ... 37

TAMIL—

Sole medium of instruction and language of administration (R) ... ... ... ... ... ... ... 369–430

TAMIZHAR PADAI—

Procession at Nellikuppam ... ... ... 36–37

PAGES.

T—*cont.*

TEACHERS—
English Language Teaching Campaign, revival ... 331–335

TEMPLES—
Entry of non-Hindus ... ... ... ... ... 456–457
Jain, Vijayamangalam ... ... ... 357–358
Mahabalipuram sea-shore temple, breakwater wall. ... 143–145
Tiruppur, ticket system for archanas ... ... 155

TEXT-BOOKS—
School Text-books, period of approval ... ... 435

THEERTHAGIRI GOUNDER, THIRU T.—
Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 204–205

TOURISM—
Kodaikanal, development as Tourist Centre ... 337–339
Palani, development as Tourist Centre ... ... 147–148

TRANSPORT—
Articulated buses in Madras City, operation ... 51–53
State Transport, cancellation of concession tickets to Students from Tirunelveli district to Kanyakumari district (A.M.) ... ... ... ... ... 467–468
Workers, implementation of Central Wage Board's recommendations ... ... ... ... 152–154

TREE(S)—
Planting Scheme, execution ... ... ... ... 358–361

TRIBAL WELFARE—
Tribal Block, Coimbatore district ... ... ... 445–446

TRUSTS—
Administration, enquiry by High Court Judge ... 358

T.V.S.—
Companies employees, extra wages ... ... ... 150



PAGES.

U.

UNIVERSITY—
Annamalai, closure and consequent hardship caused to students ... ... ... ... 157–162
Centre, Tiruchirappalli ... ... ... 37–38

UNTOUCHABILITY—
*See* Committees ... ... ... ... 2

V.

VEERASAMY, THIRU N.—
Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 196, 197–200
Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 420–422, 429–430

VINAYAKAM, THIRU K.—
Absence of three Ministers in Treasury Benches (Point of Order) ... ... ... ... ... 33, 34
Avadi, Ambattur, Kathiwakkam and Madhavaram Townships, constitution (R) ... ... ... 171–172, 174
Closure of Annamalai University and consequent hardships caused to students (A.M.) ... ... 161–162
Co-operative Societies (Amendment) Bill, 1970 ... 215, 216
District Municipalities (Amendment) Bill, 1970 ... 126
Havoc caused by heavy rain [illegible] cyclone (A.M.) ... [illegible]264, 265 [illegible]6, 272, [illegible]5, 276
Jain temple, Vijayamangal[illegible]m ... ... ... 3[illegible]7–358
Municipal High Schools, M[illegible]urai, amenities ... [illegible]–245
Removal of Sri Vinayakar i[illegible]ol (A.M.) ... ... [illegible]0–73, [illegible]7, 79–80
School Text-books, period of appro[illegible] ... 435
Tamil, sole medium of instruction and language of administration (R) ... ... ... ... 381, 382, 401, 402
Town and Country Planning Bill, 1970 ... ... 83

61497

## W


| | PAGES. |
|---|---|
| WELL(S)— | |
| Raghunathapuram, availability of water, etc. ... | 340 |
| WILD LIFE— | |
| Mudumalai Sanctuary, visit of Expert Committee of Indian Wild Life Board ... ... ... ... | 156 |
| WINE— | |
| Factory, setting up ... ... ... ... | 448 |